835

DIGITIZED

Q6:234
N14
119965

# COMMENTARY ON THE EPISTLES

OF

ST. JOHN

OFFICE OF THE REGISTRAR O[illegible]
3 - MAR 1915
MADRAS.

BY

Rev. H. PAKENHAM-WALSH

835
1·15

*Translated into Tamil*

BY

G. S. DURAISAWMY PILLAI

Madras:

PRINTED AT THE S.P.C.K. PRESS

1914

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த யோவான் எழுதின நிருபங்களின்பேரில்

இந்தியா தேசத்தாருக்குப் பிரயோசனமாக

எழுதப்பட்ட

# வியாக்கியானக் குறிப்புகள்

இங்கிலாந்து

எஸ். பி. ஜி. மிஷனெச்சேர்ந்த

எச். பேக்கன்ஹாம் வால்ஷ் ஐயரவர்களால்

ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு

கிறிஸ்துமார்க்க கல்வி அபிவிர்த்தி சங்கத்தாரின்

வேண்டுகோளின்படி

பாளையங்கோட்டை

சி. எம். எஸ். ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஞா. சா. துரைசாமி பிள்ளையால்

மொழிபெயர்க்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF ... 3 - MAR 1915 MADRAS.

சென்னபட்டணம்:

கி. க. அ. சங்கத்தாரது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

11965
இ6:234
814

OFFICE OF THE REGISTRAR OF ...
3 - MAR 1915
MADRAS

லாகூர் அத்தியக்ஷரவர்கள் எழுதிய

## பொதுவான முகவுரை.

புதிய ஏற்பாட்டின் ஆகமங்களுக்கு இத்தகைய வியர்க்கியானங்கள் வரையுமாறெழுந்த நோக்கத்தைச் சிறிது விடுப்பாம். 900-௵ இந்திய இலாக்கா அத்தியக்ஷர்மார் பலரும் ஒருங்குகூடிய சபையில் இதுபோன்ற வியாக்கியானங்கள் எழுதவேண்டுமெனவும், அவற்றை நாமும் ரங்கூன் அத்தியக்ஷரவர்களும் மேற்பார்த்துக்கொள்ளவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் சிரேஷ்டாத்தியக்ஷரவர்களு அநுமதியின்படி கேம்பிரிட்ஜ் சகோதர ஐக்யக் கூட்டத்தைச்சேர்ந்த கனம்: சி. எப். அந்திரேயா ஐயரவர்கள் இவற்றைப் பிரசுரிப்பவராக நியமனம் பெற்றனர். வியாக்கியான நூல்களைத் திருத்தி அச்சிடவேண்டியது இவர் கடமையேயெனினும் மற்றும் அத்தியக்ஷர்களும் அவற்றைச் சரிபார்த்துக்கொள்வார்.

இவ்வியாக்கியானங்கள் புதிய ஏற்பாட்டின் வியாக்கியான கர்த்தர்களின் கருத்துக்களையே தழுவி வெளியிடப்படுவன. எனினும் இந்தியாவிலும் கிறிஸ்தவர்க்கும், ஏனையோர்க்கும் பயன்படுமாறு இத்தேச மத அநுஷ்டானங்களையும் எடுத்துக்காட்டி விளக்கியிருக்கும் பாகங்களுஞ் பல. இவ்வியாக்கியானங்கள் முதல் முதல் ஆங்கிலத்தில் வெளியாயின. பொருளிருப்பின் இந்தியதேச பாஷைகளில் இவற்றை மொழிதிருப்பலாமெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டாகமங்களை வியாக்கியானம் பண்ணுமிடத்து வியாக்கியானிகளின் கருத்துகள் எங்கும் ஒன்றுபோலிருப்பனவல்ல. ஆயினும் இப்பேதங்களை நீக்கி அச்சியற்றுவது

எமது கருத்தன்று. வியாக்கியான வாக்கியோன் கருத்துக்கிசையவே இவை வெளியிடப்படுவன. அவர் கருத்துக்களுக்கு யாம் உத்தரவாதியாகோம்.

சர்வகலாசாலைகட்கும் மற்றும் கல்விச்சாலைகட்கும் உபயோகமாமாறு கேம்பிரிட்ஜ் வேதவியாக்கியானங்கள் எழுதியுள்ளவர் தங்கள் வியாக்கியானங்களினின்றும் வேண்டுமளவும் நாம் எடுத்து வழங்கலாமென உபகரித்தனர். அன்றியும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை அச்சியந்திரசாலைக்காரரும் ஆக்ஸ்போர்ட்டு அச்சியந்திரசாலைப் பிரதிநிதிகளும் தாங்கள் வெளியிட்டிருக்கும் புதுத்திருத்தல் வேதாகமத்தினின்றும் நாம் எடுத்து வழங்கவும் உபகரித்தனர். இப்பெருங்கொடையாளர்க்கு எமது வந்தனம் உரிமையாகின்றது.

பிஷப்ஸ்போர்ன்
லாகூர்.

G. A. LAHORE.

## ஆங்கில வியாக்கியான கர்த்தாவின்

# முகவுரை.

இவ்வியாக்கியானம் முற்றுப்பெறுமுன் அதற்கென உழைத்த வருடங்கள் பல. இப்பொழுது முற்றுப்பெற்றது. எனினும் அதனிடையே காணப்படும் குற்றங் குறைகள் பல. ஒன்பது வருடங்களுக்குமுன் நான் இந்த வியாக்கியானத்தை ஹாசரிபாக்கிலிருக்கும் டப்ளின் சர்வகலாசாலையைச் சார்ந்த உயர்தரக் கல்லூரித் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் பிரிதாம்சிங்கவர்களின் உதவியைக்கொண்டு ஆரம்பித்தேன். நான் முதலாவதெழுதிய வியாக்கியானத்தில் ஒவ்வோர் பகுதியிலும் அவர் எனக்குச் செய்த உதவி அதிகம். பின்னர் தற்கால அவசியத்திற்கேற்ப அவ்வியாக்கியானத்தைத் திரும்ப எழுதும்போது அதனை முழுவதுமே மாற்றுமாறு நேர்ந்துவிட்டது. பின்னர் லாகூர் அத்தியக்ஷரவர்களும், கேம்பிரிட்ஜ் டில்லி மிசியோனைச் சேர்ந்த கனம்: சி. எப். அந்திரேயா ஐயரவர்களும், என் முயற்சியில் எனக்கு உதவிபுரிந்து தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டதுமன்றி, இதிற்கண்ட பல பிழைகளையும் களைந்தனர். அன்னார் அபிப்பிராயங்கள் அனைத்தும் இங்கு கூட்டப்பட்டது. மேலும் இதன் இறுதிக்கண் வரைந்திருக்கும் அநுபந்தங்களும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டன.

பிரசுரிப்போரின் அநுமதியின்பேரில் இந்நூல் தொடர்பான பிரகரணமுறையில் எழுதப்பட்டும், முழுமையும் இடையிடையே புதிது புதிதாகக் காணப்படும் கருத்துக்களுக்கியைய அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுமிருக்கிறது.

பரி. யோவான் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் பக்திவளர்ச்சிக்கேற்றவை. இந்தியதேச பாஷைகளில் அத்தகைய நூல்கள் காண்பரிது. எனவே அதற்கியைய இவ்வியாக்கியானம் வரையப்பட்டுள்ளது. இதுகாரணம்பற்றியே சில சிலவிடங்களில் வியாக்கியானம் வெகு விரிவாய் விளக்கப்பட்டுமிருக்கிறது. பரி. அப்போஸ்தலனுடைய நிருபத்தால் பயனடைதற்கு ஆழ்ந்த கருத்தும் ஊக்கமான ஜெபமும் அவசியம். வியாக்கியானத்தில் இடையிடையே வேதவாக்கியங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதை வாசிப்போர் தங்கள் வேதாகமங்களைக் கையிற்கொண்டவராய் உடன்றானே அவ்வாக்கி

யங்களைத் திருப்பி வாசித்து, அவற்றுக்கும் வியாக்கியானத்தில் அவை கூறப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்குமுள்ள ஒற்றுமையை உற்றுநோக்குவாராக. அப்போஸ்தலனுடைய கருத்துக்கள் அழகும் ஆழமுமுடையன. அவை ஆழ்ந்த கருத்தும் அமர்ந்த சிந்தையும் உடையோர்க்கன்றிப் பிறர்க்குப் புலப்படா.

* * * * * *

கிறிஸ்தவரல்லாத பிறரும் இவ்வியாக்கியானத்தை வாசித்துப் பயனடையுமாறு எழுதப்பட்டதாதலின், எல்லவர்க்கும் விளங்கக்கூடிய பதங்களையே பிரயோகித்திருக்கிறது. வியாக்கியானம் இடையிடையே அதிக விரிவாய் எழுதப்பட்டிருப்பதாய்த் தோன்றின் அதற்கும் இதனையே காரணமாகக் கொள்க. ஆனால் இந்நிருபம் கிறிஸ்தவர்க்கே எழுதப்பட்டதாதலின், அதிற் காணப்படும் பல விஷயங்கள் அவர்களையே நோக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கிறிஸ்தவரல்லாதவர்க்கும் பொருந்துமாறு பொருள்கொள்வது எளிதன்று.

இவ்வியாக்கியானம் முழுதும் இனிது முடிதற்கு எனக்கு உதவிய நூல்களும் வியாக்கியானங்களும் அநேகம். அவற்றுள்ளும் வெஸ்றகாட், ஹாப்ட், மாரிஸ், ஸ்லேற்றர், காண்ட்லிஷ், பிளம்மர், காக்ஸ் (2-ம், 3-ம் நிருபங்கள்) இன்னோர் நூல்கள் பெரிதும் பயன்பட்டன. அவர்க்கு என் கடப்பாடும் பெரிதே. இதன் சிறப்புப்பாயிரத்தில் இந்நிருபத்தைப் பிரித்துக் காட்டியிருக்கும் ஒழுங்கானது சர்வகலாசாலைகளுக்கும் கலாசாலைகளுக்கும் உபயோகமாக எழுதப்பட்டிருக்கும் கேம்பிரிட்ஜ் வேதாகமத்தில் பிளம்மருடைய வியாக்கியானத்தில் காணப்படுவதனை ஒருவாறு ஒக்கும்.

இந்தியருக்குப் பெரிதும் பயன்படுமாறு எழுதப்படும் வியாக்கியானம் இந்தியராலேயே எழுதப்படவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். சுதேச அறிவும், ஞானமும், பரிசுத்த வேதத்தின் கருத்துக்களையும் விசேஷமாய்ப் பரி. யோவான் அப்போஸ்தலனுடைய கருத்துக்களையும் இந்தியர்கட்குத் தெள்ளிதின் விளக்குதற் கேதுவாம். அவ்வாறு எழுதக்கூடிய ஒருவனையும் கர்த்தர் இந்தியருக்குள் தெரிந்துகொள்வர். அதுகாறும் இவ்வியாக்கியானம் ஒருவாறு உபயோகப்படுமென நம்புகிறேன்.

பெங்களூர்:
செப்டெம்பர் 1910. } H. PACKENHAM WALSH.

முதல் நிருபத்தைப்பற்றிய

# சிறப்புப்பாயிரம்.

## I. இந்நூல் கேட்போரும் நூல்வழங்கும் எல்லையும்.

(அதாவது இந்நூல் யாருக்கு எழுதப்பட்டதென்பது.)

பரி. யோவான் அப்போஸ்தலன் தனது விருத்தாப்பிய காலத்தில் எபேசு பட்டணத்தில் வசித்துவந்தனர்போலும். இந்நிருபம் கத்தோலிக் அல்லது பொதுவான நிருபம் என அழைக்கப்பட்டபோதிலும், அது விசேஷமாக அவரால் பிள்ளைகள் என அழைக்கப்பெறும் கிறிஸ்தவருக்கு அதாவது எபேசு பட்டணத்திலும் அதற்கு அருகிலுமிருந்த புதுக்கிறிஸ்தவருக்கே எழுதப்பட்டது.

இந்நிருபம் ஒருவாறு விசேஷித்தது. எனெனில் இதை எழுதிய பரி. அப்போஸ்தலன் எல்லா அப்போஸ்தலரும் மரித்த பின்னும் மீந்திருந்தவராவர். காலக்கிரமத்தின்படி பார்த்தபோதிலும் வேதாகமத்திலடங்கிய ஆகமங்களுள் கடைசியாக எழுதப்பட்டதும் இதுவே. அன்றியும் அப்போஸ்தலரால் கிறிஸ்து சபைக்கு எழுதப்பட்ட கடைசி நிருபமும் இதுவே.

கிறிஸ்துமார்க்க சத்தியங்களை ஸ்தாபிக்குமாறு கடைசியாக எழுதப்பட்ட நிருபமாகும். அக்காலத்திலிருந்த ஆதிச்சபைக்கு விரோதமாகப் போதிக்கப்பட்ட பல தவறுடைக் கொள்கைகளைக் கண்டனம் செய்யுமாறு எழுதப்பட்டது. அநுபந்தத்தில் கூறப்பட்டிருக்கிற நோஸ்திகர் (Gnostics) (பரமஞானம் பெற்றோமெனப் பிதற்றுபவர்) கோட்பாட்டில் பரி. அப்போஸ்தலன் ஆக்ஷேபிக்கும் கோட்பாடுகள் அடங்கியிருக்கின்றன. பரி. அப்போஸ்தலனால் 'பிள்ளைகள்' என அழைக்கப்பட்டிருப்போர் மாட்டு இக்கொள்கைகள் பெருந்தீங்கை விளைக்கக்கூடியனவாயிருந்தன. இதுபற்றியே பரி. அப்போஸ்தலன் தமது தள்ளாதவயதில் தமது பிள்ளைகளாகிய அக்கிறிஸ்தவர் தேவகுமாரனாகிய அவதார புருஷனில் ஆழ்ந்த பக்தியுடையவராய் நிலைத்திருக்கவேண்டுமென அதி அன்புடன் எழுதுகிறார்.

## II. ஆக்கியோன் பெயர்.

வாசகநடையிலும், கருத்து விளக்கத்திலும், காரிய ஒற்றுமையிலும் யோவான் சுவிசேஷமும் இம்முதல் நிருபமும் ஒத்திருக்கின்றன. இவ்விரண்டையும் உற்று நோக்குவார்க்கு இத்தன்மை வெளிப்படை. அன்றியும் பரி. யோவான் அப்போஸ்தலனே இந்நிருபத்தை எழுதினர் என்பதற்குப் பல புறச்சான்றுகளும் உள. இச்சான்றுகளோ பரி. அப்போஸ்தலனை நேரிலறிந்தவராலும் பிறராலும் எழுதப்பட்டுள்ளன. இவை பரி. யோவான் அப்போஸ்தலனே இந்நிருபத்தை எழுதினர் என்பதனைப் பூரணமாகவும் பலமாகவும் ஸ்தாபிப்பனவாம்.

**போலிக்கார்ப்பு.** *(Polycarp)* இவர் தாம் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் பரி. யோவான் அப்போஸ்தலன் 1 யோ. 4. 2, 3-ல் கூறியிருப்பதொப்பவே, மாமிசத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எவனும் அந்திக்கிறிஸ்துவாயிருக்கிறான். சிலுவையின் சாக்ஷியை அறிக்கைபண்ணாத எவனும் பிசாசினால் பிறந்திருக்கிறான் எனக் கூறுகிறார். முதல் நிருபத்தில் முக்கியமாகக் கூறப்படும் நான்கு விஷயங்களாகிய அந்திக்கிறிஸ்து, அறிக்கை, சாக்ஷி, பிசாசு என்பவைகள் இங்கு விசேஷித்துக் கூறப்படுகின்றன. ஆனால் போலிக்கார்ப்பு பரி. யோவான் அப்போஸ்தலனுடைய சிஷன். எனவே இக்கருத்தை இவர் பரி. யோவான் அப்போஸ்தலனிடமிருந்தும் பெற்றிருக்கவேண்டும். இக்கருத்தோ இம்முதல் நிருபத்தில் காணப்படுதலின் அதனைப் போலிக்கார்ப்பின் குருவாகிய பரி. யோவான் அப்போஸ்தலனே எழுதியிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

**பாப்பியாஸ்** *(Papias)*. (கி. பி. 140.) இவர் பரி. யோவான் அப்போஸ்தலனுடைய மற்றொரு சிஷன். போலிக்கார்ப்பின் தோழர். இவர் 'யோவான் முதல் நிருபத்திலிருந்து பல ஆதாரங்களை எடுத்துபயோகித்தார்' என யூசேபியு (Eusebius) வென்பவர் (H. E. III. xxix. 16.) கூறுகிறார்.



ஐரேனியு (Irenaeus). (கி. பி. 140–202.) இவர் போலிக்கார்ப்பின் சிஷன். இவர் 'யோவான் எழுதின முதல் நிருபத்தைக் குறித்திருப்பதுமன்றி அதிலிருந்து பல பல ஆதாரங்களை எடுத்தாண்டிருக்கிறார்' என மேற்கூறிய யூசேபியுவென்பவரே கூறுகிறார். மேலும் ஐரேனியு வென்னும் இவர் அக்காலத்திருந்த வேதப்புரட்டுகளைக் கண்டனம்பண்ணி யெழுதியுள்ள நூல் இப்பொழுதும் நிலைபெற்றிருக்கின்றது. அந்நூலில் (III. 16. 5.) 1 யோ. 2. 18–22 வசனங்களை ஆதாரமாகக் காட்டி அவை பரி. யோவான் அப்போஸ்தலன் எழுதிய முதல் நிருபத்தில் அடங்கியிருக்கிறதாகவும் கூறுகிறார், அன்றியும் III. 16. 8–ல் 2 யோ. 7, ௮–ம் வசனங்களை ஆதாரமாகக் காட்டி, இவையும் 'முற்கூறிய நிருபத்தில்' அடங்கியிருக்கிறதெனச் சொல்லுகிறார். இது இரண்டாம் நிருபமாக விருப்பவும் முற்கூறிய நிருபமெனக் கூறியது ஞாபகப்பிழையேபோலும். பின்னரும் 1 யோ. 4. 1-3-ம் வாக்கியங்களை ஆதாரமாகக் கொள்ளுகிறார். இவற்றினின்றும் யூசேபிய இங்கு ஐரேனியுவைப் பற்றிக் கூறுவ துண்மைதானென்பது தெற்றென விளங்கும்.

அலக்சந்திரியா பட்டணத்திலிருந்த கிளமந்து *(Clement of Alexandria)*. (கி. பி. 185–210.) பற்பல விடங்களில் இந்நிருபத்திலிருந்து பல பாகங்களை எடுத்தோதி அவை பரி. யோவான் அபபோஸ்தலனால் எழுதப்பட்டவை யெனவும் சொல்லுகிறார்.

**தேர்த்துல்லியன்** *(Tertullian)*. (கி. பி. 195–215.) 'நாற்பது, ஐம்பதுதடவை இந்நிருபத்திலிருந்து வசனங்களை எடுத்துக்கூறி இவ்வாறு தாம் எடுத்துக்கூறும் வசனங்கள் பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டவையெனக் கூறுகிறார்.'

**'மியூராட்டோரியன் கைப்பிரதியின் துண்டுகள்'** *(Muratorian Fragment)*. இவை பெரும்பாலும் கி. பி. 170-க்கும் கி. பி. 215–க்கும் இடையே எழுதப்பட்டன. அதிபூர்வ காலத்தே யறியப்பட்ட புதிய ஏற்பாட்டு ஆகமங்களின் பெயர் அட்டவணையின் ஓர் பாகம் இவற்றில் காணப்படுகிறது. அதில் 'யூதா நிருபமும் முன்னர் கூறப்பட்ட யோவான் எழுதிய இரு நிருபங்களும் கத்தோலிக் திருச்சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன' அல்லது 'கத்தோலிக் நிருபங்களாகக் கருதப்படுகின்றன' எனக் கூறப்பட்டிருக்கிறது. ஈண்டு குறிக்கப்பட்ட இரு நிரு

பங்கள் பரி. அப்போஸ்தலனுடைய இரண்டாம் மூன்றும் நிருபங்களைப்போலும். ஆனால் அவ்விரு நிருபங்களும் அங்கீகரிக்கப்பட்டதானால், முதல் நிருபமும் அங்கீகரிக்கப்பட்டதென நாம் நம்பலாம். அதுவும் புதிய ஏற்பாட்டாகமங்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்த மியூரட்டோரியன் கைப்பிரதிப் பங்கில் நாலாம் சுவிசேஷத்தைப்பற்றிக் கூறுமிடத்து அதற்கு மேற்கோளாக இம்முதல் நிருபத்தின் முதற்பாகம் எடுத்தாளப்படுகிறது.

கி. பி. 220—க்குப் பின் இந்நிருபத்திற்கான அத்தாக்ஷிகள் ஏராளம். கிரேக்க லத்தீன் சபைப்பிதாக்கள் பலரும் இந்நிருபம் பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டதெனவே ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.

அலோஜி, மார்சியான் முதலிய சில வேதப்புரட்டர் இந்நிருபத்தையும் யோவான் சுவிசேஷத்தையும் ஒப்புக்கொள்ளவில்லை என்பது உண்மையே. அவர்கள் ஒப்புக்கொள்ளாமைக்குக் காரணம் இந்நிருபம் பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டதென நம்பாமையன்று. ஆனால் அவர்கள் அந்நிருபத்திலடங்கிய கொள்கைகட்கு உடன்படாமைக் காரணமாகவே அந்நிருபத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

## III. களனும் காலமும்.

இந்நிருபம் பரி. யோவான் அப்போஸ்தலன் தமது வயோதிககாலத்தில் வசித்திருந்த எபேசுபட்டணத்திலேயே எழுதப்பட்டிருக்கலாம். ஐரேனியு (Irenaeus), ஜெரோம் (Jerome) என்பவர்கள் நாலாவது சுவிசேஷம் அவ்விடத்தில் வைத்துத்தான் எழுதப்பட்டதெனக் கூறுகின்றார்கள். இந்நிருபமும் ஏறக்குறைய அதேகாலத்தில்தான் எழுதப்பட்டமையால், இதுவும் அவ்விடத்திற்றானே எழுதப்பட்டிருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கலாம்.

இந்நிருபம் எழுதப்பட்ட காலம் இன்னதுதான் என அறிவதற்குப் போந்த புறச்சான்றுகளில்லை. அகச்சான்றுகளைக் கொண்டே ஆராயுமிடத்து இது பரி. அப்போஸ்தலனின் தீர்



இயகாலத்தில் கி. பி. 83-ம், 95-ம் வருடங்களுக்கிடையில் எழுதப்பட்டதென அனுமானிக்கலாம். இந்நிருபத்தின் நடையே வயோதிகர் ஒருவர் தம்மின் இளையரானோர்க்கு எழுதுவதொப்பியது. கிறிஸ்துமதக் கோட்பாடுகளுக்கு விரோதமாய்க் கூறப்பட்ட நோஸ்திகரு (Gnostics) டைய கோட்பாடுகள் அக்காலத்தில் மிகவும் பலமாயிருந்தன. இந்நிருபத்தின் நடை யோவான் சுவிசேஷத்தை யொத்திருக்கின்றது. வெளிப்படுத்தலின் நடைக்கும் இதற்கும் பேதம் அதிகம். வெளிப்படுத்தல் இதற்குமுன் கி. பி. 68—ம் வருஷத்தில் எழுதப்பட்டதென்பது பலருடைய அபிப்பிராயம்.

## IV. நூலின் யாப்பும் நுதலிய பொருளும்.

இம்முதல் நிருபம் பரி. யோவான் சுவிசேஷத்திற்கு ஆதாரமாக அதனோடு ஒட்டி எழுதப்பட்டதெனக் கூறலாம். ஏனெனில் இதன் வாசக நடையும் கருத்தின் போக்கும் அதனோடு ஒத்திருக்கின்றது.

'சுவிசேஷம் இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதைச் சாதித்தற்கு ஏதுவாய் அவருடைய செயல்களையும் போதனைகளையும் எடுத்தியம்புவது. நிருபமோ இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து எனும் பெரிய உண்மையை நம்பும் மெய்யடியாருக்கிருக்கவேண்டிய ஒழுக்கமாக அவர்களது வாக்கு, கிரியை முதலியவற்றை வரையறுப்பது' என்று பிளம்மர் ஐயர் சொல்லுகிறார். சுவிசேஷம் கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கவேண்டிய விசுவாசத்தைக் கூறும். நிருபமோ கிறிஸ்தவரின் ஒழுக்கக் கிரமத்தை விரிக்கும்.

நிருபத்தின் குணாகுணங்களையும், வாசக நடைப்போக்கையும் விவரிப்பது அவ்வளவு அதிக அவசியமில்லை. இதிலடங்கிய கருத்துக்களின் பெருமையும், அவை எவர்க்கும் பொருள்படுமாறு தெளிவாய் வரையப்பட்டிருப்பதும், அவை எவ்வளவு அதிகமாய் உண்மையை யறிந்து கூறப்படுவனவென்பதும், அவ்வுண்மைகள் எவ்வளவு உறுதியாகவும், அதிகாரத்துடனும் கூறப்படுகின்றனவென்பதும் இந்நிருபத்தை யுற்று வாசிப்போர் பலர்க்கும் எளிதின் வெளியாகும். கேட்க மனமியை

யாதவனையும் வலிந்து கவரு மியல்புடையது. கேட்போர் மனதைப் பிரமிக்கச்செய்யும் தன்மையுடையது. அதைக் கேட்டமாத்திரத்தில் எளிய சாதாரண பதங்களாற் கூறப்பட்ட அதிசாதாரண கருத்துக்கள்போற் காணப்படுமேனும், சற்று உற்றுராயுமிடத்து அவை இவ்வுலகத்திற் கடுத்தவைகளா யில்லாமல் அந்தமில் பேரின்பத் தழிவில் வீடாம் பரலோகத்துக் கடுத்த சத்தியங்களைச் சாற்றுகிறவைகளெனத் தெரியவரும் என்று பிளம்மர் ஐயர் சொல்லுகிறார்.

இவ்வுண்மைகள் விளக்கப்படும் விதமும் ஆச்சரியமானதே. ஒவ்வோர் தன்மையையும் அதற்கு மாறுபட்ட தன்மையைக் கூறி விளக்குகிறார். என்ன? 'ஒளியும் இருளும், சத்தியமும் பொய்யும், அன்பும் பகையும், ஜீவனும் மரணமும் மாறிமாறி வற்புறுத்தப்படுகின்றன.' ஒன்றைக் கூறி அதன் மாறுபட்ட தன்மையை விளக்குமிடத்தும் புதிதான கருத்துக்களைக் கூட்டிப் புதிய போதனைகளைக் கற்பிக்கும் திறன் வியக்கத்தக்கதே. 2. 10. 11, இதற்குப் பொருந்த திருஷ்டாந்தமாம்:—'தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்.'

இனி இவ்வியாக்கியானம் வரையப்பட்டிருக்கும் விதத்தை விரிப்பாம். இந்நிருபத்தைப் பங்கு பங்காகப் பிரித்துக் கூறுதல் பெரிதும் சாத்தியமன்று. ஏனெனில், பரி. யோவான் அப்போஸ்தலனின் ஞானம் அவர் இயற்கையிற் பெற்றதோர் அறிவாம். இவர் பரி. பவுல் அப்போஸ்தலனைப்போல நியாயதோரணையுடனாவது, பரி. பேதுரு அப்போஸ்தலனை யொப்ப ஜனங்களை வலியுறுத்தியாவது கூறுவாரல்லர். ஆனால் தாம் எடுத்துக் கொண்ட பொருளின் கருத்துத் தமக்கே நன்கு புலப்படும்வரை விரிப்பார். அவருடைய கருத்துக்களை ஸ்தாபித்தற்கு அடுக்கடுக்காய்ப் பல நியாயங்களைக் கூறியும் ஸ்தாபியார். ஆனால் அவை நீலவானில் நின்றிலங்கும் நக்ஷத்திரங்கள் போல்பவை! (ஸ்டாக்கர்) ஆதலின் இந்நிருபத்தைப் பங்கு பங்காகப் பிரித்துக்காட்டல் எளிதன்று. எனினும் அவ்வாறு பிரித்தால் வாசிப்போர்க்குப் பொருள் வெளிப்படுதல் எளிதாதல் நோக்கி ஒருவாறு பிரித்துக் காட்டுவோம்:—



முகவுரை. 1. 1–4.

A. தேவன் ஒளியாயிருக்கிறார். 1. 5–2. 28.

(i) ஒளியில் நடத்தலாவதென்ன: ஒளியில் நடப்பவரின் நிலைமையும் அவரது ஒழுக்கமும். (1. 5–2. 11.)

1. தேவனோடும் சகோதரரோடும் ஐக்கியம். (வா. 5–7.)
2. பாவ உணர்வும் பாவ அறிக்கையும். (1. 8–2. 2.)
3. கிறிஸ்துவைப் பின்பற்றித் தேவனுக்குக் கீழ்ப்படிதல். (2. 3–6.)
4. சகோதர சிநேகம். (2. 7–11.)

(ii) ஒளியில் நடப்போர் தவிர்க்க வேண்டியன. (2. 12-28.)

1. உலகமும் உலகத்திலுள்ளவைகளும். (வா. 12-17.)
2. அந்திக்கிறிஸ்து. (வா. 18–28.)

B. தேவன் அன்பாயிருக்கிறார். 2. 29–4. 21.

(i) தேவன் நம்மீது அன்புகூர்ந்ததின் பயன். குமாரத்துவம். தேவனுடைய பிள்ளைகளானோரின் லக்ஷணங்களும் ஆகாதவர்களின் லக்ஷணங்களும்: (2. 29–3. 12.)

(ii) தேவன் நம்மில் அன்புகூர்ந்ததின் பயன். (3. 13-24.)

1. உலகின் பகையும், சகோதரரின் ஐக்கியமும். (3. 13-18.).
2. கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டிய உறுதி. 3. 19–24.

(iii) இடைக்கூற்று. சத்திய ஆவியும் வஞ்சக ஆவியும். (4. 1–6.)

(iv) முக்கிய பொருள் தொடர்ச்சி. தேவனும், அன்பும். (4. 7–21.)

C. விசுவாசம். 5. 1–21.

(i) விசுவாசத்தின் ஜெயம். (5. 1–5.)

(ii) விசுவாசத்தின் சாக்ஷி. (5. 6–12.)

(iii) கிறிஸ்தவனின் நம்பிக்கை. (5. 13–21.)

# இரண்டாம் மூன்றாம் நிருபங்கள்.

இவ்விரு நிருபங்களும் ஒருவராலேயே வரையப்பட்டன வென்றும் அவ்வாறு வரைந்தவரும் பரி. யோவான் அப்போஸ்தலனே யென்றும் பூர்வீகத்திலிருந்த பலர் சாற்றுகின்றார். இவ்விரு நிருபங்களும் அதிக சுருக்கமாயிருப்பவும், அவற்றுக்கிருக்கும் ஆதாரங்களோ மிகப் பல. ஐரேனியு (Irenaeus) 7-ம், 11-ம் வசனங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டி, அவை ஆண்டவருடைய சீஷராகிய பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டன' வென்கிறார்.

அலக்சந்திரியாவிலிருந்த கிளமந்து (Clement of Alexandria) என்பவர் முதல் நிருபத்திலிருந்து மேற்கோள் காட்டி, அது பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்ட நீண்ட நிருபமென்றும், மற்றுமோர் இடத்தில் கன்னிகைகளுக்கு எழுதப்பட்ட பரி. யோவான் அப்போஸ்தலனுடைய இரண்டாம் நிருபம் அதி எளிதானதென்றும், அது பாபிலோனியாவிலிருந்த எல்க்டா என்னும் அம்மாளுக்கு எழுதப்பட்டதெனவும், ஆனால் அது பரிசுத்த சபை தெரிந்துகொள்ளப்படுதலைக் குறிக்கிறதெனவும் எழுதுகிறார். அலக்சந்திரியாவிலிருந்த தியோனுசியூ (Dionysius) வென்பவன் பரி. யோவான் தரித்துக்கொண்ட 'மூப்பன்' எனும் பட்டத்தைப்பற்றி எழுதுகிறார்.

சைபரியன் (Cyprian) எனப்பட்டவர் கி. பி. 256-ல் கார்தேஜில் கூடிய சங்கத்தில் சுல்லபியின் அத்தியக்ஷராகிய ஆரிலியு 2 யோ. 10, 11-ம் வசனங்களை மேற்கோள் காட்டி 'அப்போஸ்தலனாகிய யோவான் இப்படிச் சொன்னார்' எனக் கூறியதாகச் சொல்லுகிறார்.

மியூராட்டோரியன் கைப்பிரதியின் துண்டுகள் (Muratorian Fragment) இந்நிருபங்களை அங்கீகரிக்கிறதை முன்னரே பார்த்தோம். ஒரிகேன் (Origen) யூசேபியூ (Euscbius) என்பவர்கள் இவ்விரு நிருபங்களையும் ஆக்ஷேபிக்கப்பட்ட நிருபங்களாகக் கூறுகின்றனர்.



அந்தியோகியா கல்விக்கழகத்தார் இந்நிருபங்களையும், யூதா நிருபம், பரி. பேதுருவின் இரண்டாம் நிருபங்களோடு சேர்த்துத் தள்ளிவிட்டதாகத் தெரிகிறது.

ஜெரோம் (Jerome) என்பவர் இந்நிருபங்கள் பரி. யோவான் அப்போஸ்தலனாலல்ல, யோவான் எனும் மூப்பனால் வரையப்பட்டனவாகக் கருதப்படுவதாகக் கூறுகிறார். எபேசு பட்டணத்திலேயே அப்போஸ்தலனுடைய கல்லறையும் அந்த மூப்பனுடைய கல்லறையும் இருந்ததாகக் கூறுகிறார்.

இவற்றால் அறியக்கிடந்ததென்ன? பரி. யோவான் அப்போஸ்தலன் உயிருடனிருந்த காலத்திற்குச் சமீபத்திலிருந்தவர் பலரும் புறச்சான்றாக இந்நிருபங்கள் பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டனவெனக் கூறுகின்றார். அக்காலத்தவர்க்கு வேறு அபிப்பிராயங்கள் இருந்தில. முதல் முதல் சந்தேகத்தை வெளியிட்டவர் ஒரிகேன் என்பவர். எனினும் இச்சந்தேகம் எற்படுதற்கு மூலகாரணர் இந்த ஒரிகேன் அல்ல. அப்போஸ்தலன் தவிர 'மூப்பன்' என்றழைக்கப்பட்ட மற்றுமோர் யோவான் எபேசுவிலிருந்ததாக ஜனங்கள் நம்பினமையின், மூப்பனாகிய நான் எனக் கூறும் ஒருவரால் எழுதப்பட்ட இந்நிருபங்கள் அப்போஸ்தலனாகிய பரி. யோவானால் எழுதப்பட்டதன்றெனக் கருதினர்போலும். **எனினும் சுவிசேஷப் பிரசங்கியும் அப்போஸ்தலனுமாகிய பரி. யோவானைத்தவிர வேறொரு 'மூப்பனாகிய யோவான்' எக்காலத்திலும் இருந்திருப்பரோ வென்பதும் சந்தேகமே.** ஆனால் சுருக்கமான இவ்விரு நிருபங்களும் 'மூப்பனாகிய யோவானால்' எழுதப்பட்டதெனும் அபிப்பிராயமுடையவராயிருந்த பலரும் அறிந்தோ அறியாமலோ அவை பரி. யோவான் அப்போஸ்தலனாலேயே எழுதப்பட்டதெனக் கூறுகிறார் (பிளம்மர்).

அன்றியும் வாசக நடையிலும் கருத்திலும் இந்நிருபங்களும் முதல் நிருபம் எழுதியவராலேயே எழுதப்பட்டனவெனக் காணப்படுகின்றன.

# யோவான் எழுதின

## பொதுவான முதலாம் நிருபம்.

### முதல் பிரிவு.

#### 1—4 முகவுரை. நிருபத்திலடங்கிய பொருளும் நிருபமெழுதிய நோக்கமும்.

இந்த நிருபத்தை நாம் திறந்தவுடன் முதலாவதாகக் கவனிக்கக்கூடிய காரியம் ஒன்றிருக்கிறது. அதாவது இந்த நிருபம் யாரால் எழுதப்பட்டதென்றாவது எந்த ஜனத்துக்கு எழுதப்பட்டதென்றாவது அங்கே கூறப்படவில்லை. கடைசி வரையிலும் வாசித்துப் பார்த்தபோதிலும், இவ்விஷயத்தை அங்கே காணமுடியாது. பார்த்தமாத்திரத்தில் அது ஒரு நிருப மாகத்தானும் காணப்படுகிறதில்லை. எனினும் இடையிடையே 'என் சிறுபிள்ளைகளே' என வருதலால் இது ஒரு நிருபந்தா னெனவும், அந்நிருபமும் ஒரு வயோதிகரால் தம்மைச்சார்ந்தவ ருக்கு எழுதப்பட்டதெனவும் தெள்ளிதின் விளங்குகிறது. இந் நிருபத்தை எழுதியவர் அப்போஸ்தலனாகிய பரிசுத்த யோவான் என்பவர். இது எக்காலத்திலுமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்க் கும் உரியதெனினும் (இது காரணம்பற்றியே இதனைக் கத் தோலிக் அல்லது பொதுவான நிருபம் என்றழைப்பர்.) விசேஷ மாக விசுவாசத்தில் தமது 'சிறு பிள்ளைகளும்' ரோம ராஜ்ய மாம் ஆசியா மாகாணத்திலுள்ளவருமாகிய கிறிஸ்தவருக்கே எழுதப்பட்டது.

பரி. யோவான் நிருபத்தின் துவக்கத்திலேயே முகவுரை வாழ்த்து முதலிய யாவும் எழுதாதபடிக்குத் தாம் எழுத விரும்பிய

விஷயத்தை யாரம்பித்துவிடுகிறார். முகவுரையாக நாம் எடுத்துக்கொண்ட இந்தப் பாகத்திலேயே இந்நிருபத்திற் காணப்படும் ஆழ்ந்த கருத்துகள் வெளிப்பட்டுவிடுகின்றன. இந்நிருபத்தில் ஜீவவார்த்தை அதாவது தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் தேவகுமாரனாகிய நித்தியஜீவனைப்பற்றியும் அந்த நித்தியஜீவன் நம்முடையதாகும் விதத்தைப்பற்றியும் எழுதப்போகிறார். இந்தக் காரியங்களை நாம் எடுத்துக்கொண்ட இந்த முகவுரையிலேயே கூறிவிடுகிறார். இவருடைய சுவிசேஷத்திற்போலவே நிருபத்திலும் 'தேவனுடைய வார்த்தை'யைப்பற்றிப் பேசுகிறார். ஆனாலும் சுவிசேஷத்தில் தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்து பூலோகத்திலிருந்தகாலத்தில் பேசிய பேச்சையும் உபதேசங்களையும் செய்த செயல்களையும்பற்றி எழுதினார். நிருபத்திலோ கிறிஸ்துவுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும் அவருடைய ஜனங்கள் அவருடன் ஐக்கியமானபின் ஐக்கியமான காரணத்தினால் அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் எழுதுகிறார். கிறிஸ்துவின் சம்பந்தமும் அவருடன் ஐக்கியமும் அவர் பூமியில் சுற்றித் திரிந்தகாலத்தில் எப்படியிருந்தார் என்பதனையே சார்ந்திருக்கிறது. இவ்வுண்மையை பரி. யோவான் அப்போஸ்தலனும் கிறிஸ்தவானவருடைய மற்றச் சிஷர்களும் நன்குணர்ந்திருந்தனர். தங்கள் சொந்தக் கண்களாலும் காதுகளாலும் கைகளாலும் கண்டும் கேட்டும் தொட்டும் அறிந்திருந்தனர். அவருடைய மரணத்தின் முன்னரேயன்றி அவர் மகிமையோடு உயிர்த்தெழுந்த பின்னும் இவ்வாறு அறிந்துணர்ந்தார். இவ்வாறு அவர்கள் அறிந்துணர்ந்த உண்மையென்ன? அவர் பிதாவோடு ஒன்றாய் ஐக்கியப்பட்டவரும் நித்தியஜீவனுமா யிருக்கிறார் என்கிற அந்த உண்மையே.

இந்த ஜீவன் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் தேவகுமாரனிடமிருந்து நித்தியஜீவனைப் பெற்றிருந்ததுமன்றி அவரோடும் பிதாவோடும் ஐக்கியப்பட்டிருந்தனர்.



இவ்வாறு தாங்கள் அடைந்ததைத் தாங்கள்மாத்திரம் அனுபவித்துத் தாங்களே திருப்தியடைந்திருப்பார்களோ? இரார். அப்போஸ்தலராகத் தங்கள் கடமையை அவர்கள் நிறைவேற்றவேண்டும். அக்கடமை யென்ன? தாங்கள் அடைந்த நித்திய ஜீவனையும் ஐக்யத்தையும் பிறருமறியுமாறு எல்லோருக்கும் கூறியறிவிப்பதேயாம். எனவே பரி. யோவான் அப்போஸ்தலனும் தம்முடைய 'சிறு பிள்ளைகளும்' அப்போஸ்தலரோடும் பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியப்பட்டு அந்த ஐக்யத்தின் பயனாய் விளையும் பூரண சந்தோஷத்தையும் கைக்கொள்ள வேண்டுமென விரும்புகிறார்.

**(1) ஆதிமுதல் இருந்ததும்; நாங்கள் கேட்டதும்; எங்கள் கண்களினாலே கண்டதும்; நாங்கள் நோக்கிப் பார்த்ததும்; எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து;** *(உங்களுக்கு அறிவிக்கிறோம்.)* **(2) (அந்த ஜீவன் வெளிப்படுத்தப்பட்டது பிதாவினிடத்திலிருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த ஜீவனை, அந்த நித்தியஜீவனை நாங்கள் கண்டு சாட்சி கொடுத்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.) (3) நீங்களும் எங்களோடு ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டுமிருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். ஆம், எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. (4) நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை எழுதுகிறோம்.**

இந்த நிருபத்திற்கு எழுதப்பட்டிருக்கும் முகவுரையை நாம் வாசிக்கும்போதே இதோடு சம்பந்தமுள்ளதாயிருக்கிற யோவான் சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற முகவுரை (யோ. 1. 1–18.) ஞாபகத்திற்கு வருகிறது. இரண்டும் ஏறக்குறைய ஒன்றுபோலவே ஆரம்பிக்கின்றன. வார்த்தை, ஜீவன், ஒளி, இருள் எனும் நான்கு முக்கியமான பதங்களும் ஈரிடங்களிலும் வருகின்றன.

இந்நிருபத்தின் முதல் வாக்கியம் நீண்டதாகவும் பார்த்தமாத்திரத்தில் சற்று விளங்காததாகவும் காணப்படுகிறது. ஆனால் இரண்டாம் வசனத்தை விட்டு விட்டு முதல் வசனத்தில் ஒவ்வொன்றோடும் 'ஜீவவார்த்தையைக் குறித்து' என்பதை முதலில் ஒட்டி, ஒவ்வொன்றை யடுத்தும் மூன்றாம் வசனத்திலுள்ள 'உங்களுக்கு அறிவிக்கிறோம்' என்பதைச் சேர்த்து வாசிக்க வாக்கியம் விளங்கும். அதாவது 'ஜீவ வார்த்தையைக் குறித்து ஆதிமுதல் இருந்ததை உங்களுக்கு அறிவிக்கிறோம்;' 'ஜீவ வார்த்தையைக் குறித்து நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம்;' இவைபோல் பிறவற்றையும் வாசித்துப் பொருள் கொள்க.

இன்னமும் இவ்வாக்கியத்தைக் கவனிப்போம். பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவைப்பற்றியே அவர்களுக்கு அறிவிக்கப்போகிறார்; ஆனால் அவர் தமது சுவிசேஷத்தில் கூறியிருக்கிறபடி இயேசுவினுடைய ஜீவியத்தைப்பற்றியாவது அவருடைய மனுஷீக தெய்வீகத் தன்மைகளைப்பற்றியாவது கூறப்போகவில்லை. அவர் கூற விரும்புவது என்னெனின், நாம் முன்னரே பார்த்தபடி இயேசுநாதர் விண் துறந்து இம்மண் புகுந்து மானிடருக்குப் போதிக்கவந்த சத்தியங்களையும், தெய்வம் எப்படிப்பட்டவர், கிறிஸ்து எப்படிப்பட்டவர், மனுஷன் எப்படிப்பட்டவன் என்று வெளியாக்கப்பட்டவற்றையும் பற்றியே. இது விஷயங்களைப்பற்றி இவரும் மற்ற அப்போஸ்தலர்களும் கர்த்தராகிய இயேசு கூறியவற்றைக் கேட்டும், அவரது ஒழுக்கத்தைக் கவனித்தும் உணர்ந்திருந்தார். இயேசு மனிதனாகப் பேசுவதைக் கேட்டிருந்தார்கள். அப்படிக் கேட்கும்போது பேசுகிற மனுஷ சத்தத்தையல்ல தங்களுக்குள் பேசும் தேவனுடைய சத்தத்தையே அதிகமாகக் கேட்டார்கள். இயேசுவினுடைய கிரியைகளைக் கண்டிருந்தார்கள். அக்கிரியைகள் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய்க் காணப்பட்டன. ஏனெனில் தேவனுடைய கரமே அவற்றை நடப்பித்ததாகக் கண்டார்கள்.



அவருடைய வார்த்தைகளாலும் செயல்களாலும் அவரே தேவனுடைய வார்த்தை என்பதனை ஐயந்திரிபறக் கண்டனர். அவர் பாடுபட்டு இழிவான மரணமடைந்தது கண்டு சிறிது அவநம்பிக்கை கொண்டனரெனினும் திரும்ப அவரைக் கண்டுகொண்டார்கள். ஆவலோடும் அவரை உற்று நோக்கினார். உயிர்த்தெழுந்த பின்னும் அவருடைய சரீரத்தைத் தம் கையால் தொட்டுப்பார்க்கும் சிலாக்கியம் பெற்றார். அவரைக் கண்டு கேட்டுத் தொட்டுணர்ந்தார். இவற்றின் மூலமாய் அவரே பிதாவினிடத்திலுள்ள சாட்சாத் நித்தியஜீவன் என்றறிந்தார். நமது சரீரத்தைப்போன்ற சாதாரண சரீரத்தோடு உலகத்துலாவிய மனுஷனாகிய இயேசு, நித்தியஜீவனுக்கு ஆண்டவராகிய தேவனுடைய குமாரனென்பதைக் கண்டார். கல்லறையை நீத்து, மரணத்தை ஜெயித் துயிர்த்தெழுந்த மகிமைபொருந்திய தெய்வீகமுள்ள தங்கள் ஆண்டவரும் கர்த்தருமாகிய அவரே இன்னும் மனுஷசாயலுடையவராய் இருக்கிறார் எனக் கண்டுகளித்தார்கள். இவ்விதமாக ஜீவ வார்த்தையைக் குறித்துத் தாங்கள் அறிந்த இந்த விஷயங்களைப் பிறர் அறியக் கூறுமாறு விரும்பினர்.

நாம் முன் பார்த்தபடி ஜீவ வார்த்தையைக் குறித்து என்கிற வார்த்தைகளை 'ஆதிமுதலிருந்ததும் நாங்கள் கண்டதும்' முதலியவற்றோடு ஒட்டியே பொருள்கொள்ள வேண்டுமாதலின் முதலாவது **'ஜீவ வார்த்தையைக் குறித்து'** என்பதன் பொருளை யாராய்வோம்.

யோவான் சுவிசேஷத்தில் (1. 1.) தேவனுடைய குமாரன் 'வார்த்தை' யென்றழைக்கப்படுகிறார். வார்த்தையெனப் பொருள்படுகிற கிரேக்க பதமானது அந்த வார்த்தைக்குக் காரணமாக மனதிலெழும் எண்ணத்தையும் குறிக்கும். எனவே அது புத்தியையும் குறிப்பதாம். நம் மனதிலெழும் நினைவைப் பிறர்க்கு அறிவிக்க விரும்பின் நமது நினைவை வார்த்தைகளின் மூலமாய் அறிவிக்கிறோம். நமது மனதினிடையே பிறரால் கேட்பதற்கும் காண்பதற்கும் இயலாது மறைந்துகிடக்கும்

நினைவானது, வார்த்தையாகப் பிறரால் கேட்கக் கூடியதாய்த் தொனியோடும் வெளிப்பட்டுக் கேட்பவர்க்குப் பொருள்படுகிறது. பிதாவானவர் தம்மை, எல்லாவற்றினும் மேலாகத் தம் மனதிடை வதிந்த தம் பேரன்பை, மானிடர்க்கு அறிவிக்க விரும்பியபோது, அநாதியாய்த் தம்மோடு வேறுபடாது இரண்டற ஒன்றாய் ஐக்யப்பட்டிருந்த தமது குமாரனை யனுப்பி அவர் மனுவுருவெடுக்கவும், மனுவுருவெடுத்த அவரை மனிதர் பார்க்கவும் கேட்கவும் செய்தார். எனவே குமாரன் தேவனுடைய வார்த்தையென் றழைக்கப்படுகிறார். குமாரனுடைய ஒவ்வோர் வார்த்தையும் செயலும் அவருடைய மனுஷசாயலில் தேவனுடைய பூரணஜீவனை ஒருவாறு விளக்கிக் காட்டிற்று. குமாரனே தேவவசனத்தைக் கூறும் தீர்க்கதரிசியினும் அதிகமாக விளங்கினார். குமாரன் மானிட வடிவெடுத்த தேவனுடைய வார்த்தையாகவே இருந்தார். ஜீவவார்த்தையென்பது ஜீவனையும் ஜீவனைக் கொடுக்கிறதாயுமிருக்கிற வார்த்தையெனப் பொருள்படும். ஆகவின் நமக்கு வேண்டிய முழு ஜீவனும் அவரிடமிருந்து நமக்கு வருகிறது (யோ. 5. 26.). இனி இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிற ஐந்து வாக்கியங்களையும் பார்ப்போம்.

"ஆதிமுதலிருந்ததும்." இந்துக்கள் நமது மார்க்கத்தைப் பற்றிப் பேசும்போது இது சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னர்தான் உண்டாயதெனவும், பூர்வகாலத்திலேயே எழுதப்பட்டுள்ள அவர்கள் வேதங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குமளவில் நமது மார்க்கம் சமீபகாலத்தில்தான் உண்டாயதெனவும் கூறுவர். கண்பூசிய (Confucian'sm) மார்க்கத்தவரும் அக்கினி வணக்கக்காரராகிய சோராஸ்டிற (Zoroastrianism) மதத்தினரும் நம் கிறிஸ்து சமயத்தைப்பற்றி ஒருவாறு அப்படியே கூறலாம். எனினும் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர் கூறுவதை மறுத்துரைக்கின்றார். என்ன? 'நாங்கள் ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்குச் சொல்லுகிறது யாதெனின், அது ஆதிமுதலேயிருந்தது.' தெய்வமோ ஆதியந்தமில்



லாராய் நித்திய நித்திய காலமாயிருக்கிறார். அண்டசராசரங்களும் மனிதன் வசிக்கும் இப்பூமியும் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட காரணம்பற்றி இவற்றுக்கு ஆதியென்று ஒன்றுண்டு. 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார்' (ஆதி. 1. 1.). அக்காலத்திலேயே தேவனுடைய குமாரன் ஜீவவார்த்தையாக இருந்தார் (யோவா. 1. 1.). பெத்லகேமிலே இயேசுவாகப் பிறந்தவர் பிதாவோடு பிதாவிருந்த காலமெல்லாமிருந்தவர். எனவே அவர் உலகமுண்டாவதற்கு முன்னமிருந்தவராவர். குமாரன் உலகிடை வசித்தகாலத்தும் இவ்வுண்மையைத் தாமே தம் அருமைத் திருவாக்கால் விளம்பினார். 'ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நானிருக்கிறேன்' (யோவா. 8. 58.). 'உலகம் உண்டாவதற்கு முன்னமே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை' (யோவா. 17. 5.) எனப் பன்முறையும் கூறியிருக்கிறார். ஆதலால் பரி. யோவான் ஜீவவார்த்தையைக் குறித்து இப்பொழுது நமக்குச் சொல்லவிருக்கிற காரியங்கள் ஒருவாறு உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன் நித்திய நித்தியகாலமா யிருந்தவையேயாகும்.

தேவன் ஒளியும், ஜீவனும், அன்புமாயிருக்கிறார் எனக் காலக்கிரமத்தில் கிறிஸ்துவின் மூலமாய்த் தெளிவாக்கப்பட்டதெல்லாம் நித்தியகாலமாக தேவனுடைய குமாரனாகிய வார்த்தையிலேயே அடங்கியிருந்தது.

உலகத்தைச் சிருஷ்டிக்கும்படியான சித்தம் தேவனிடத்தில் எப்படி நித்தியமாயிருந்ததோ, சுவிசேஷமும் அப்படியே நித்தியமாயிருந்தது. அந்த சித்தத்திலேயே உலகம் குமாரனின் மூலமாய் உண்டுபட வேண்டுமென்றும், அவராலேயே பரிபாலிக்கப்பட வேண்டுமென்று மிருந்தது. மனுஷனானவன், மனுஷஜாதிக்குத் தலைபாய் விளங்கும் தேவகுமாரனுடன் ஐக்யப்பட்டு, அதே குமாரனின் மூலமாய்த் தெய்வ ஒளியிலும் ஜீவனிலும் அன்பிலும் பங்கு பெறுமாறும் தெய்வசித்தமாயிருந்தது (கொலோ. 1. 16, 17.). இவ்விதமாய் 'சகலமும்' அவ

ருக்குள் ஒன்றாய்க் கூட்டப்படவேண்டுமென்று தேவ தீர்மானமாயிற்று. (எபே. 1. 9, 10.)

மனுஷன் பாவஞ்செய்து கெட்டுப்போவான் என்பதையும் தேவன் அறிந்திருந்தார். இவ்வாறு மனிதன் பாவத்திலகப்பட்டால், தெய்வசித்தம் நிறைவேறுவதற்கு ஒரே வழிமாத்திரமுண்டு. அவ்வழியைக் கையாடுதற்கும் தேவன் ஒரு சிறிதும் தாமதிக்கவில்லை. அவ்வழியென்ன? தேவகுமாரன் 'தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து' உலகில் மனுஷனாய் (பிலி. 2. 7. யோவா. 1. 14.), துன்பம், துக்கம், சோதனை முதலிய நிறைந்த ஜீவியத்துக்குட்பட்டுப் பாவநிவாரணபலியாகத் தம்மையே சொல்லரிய பாடுள்ள சிலுவை மரணத்திற்கு ஒப்படைத்தார். இவ்விதமாகக் கிறிஸ்துவின் மானிடாவதாரம், பாடுகளின் மூலமாய், பாவம் காரணமாகத் தேவனினின்றும் பிரிந்திருந்த 'சகலமும்' (அதாவது மனிதனும் மற்றும் சர்வ சிருஷ்டிகளும்) தேவனோடு 'ஒப்புரவாக்கப்பட்டன' (கொலோ. 1. 20, 21.). ஆதலின் சிலுவையில் சமர்ப்பிக்கப்பட்ட பலியானது உலகை மீட்குமாறெழுந்த தெய்வசித்தத்தை யொப்ப நித்தியமாயுள்ளதேயாகும். (வெளி. 13. 8. எபே. 1. 4.)

சித்தம் கொள்ளுதலும் சித்தத்தை நிறைவேற்றுதலுமாகிய இரண்டும் தெய்வத்திற்கு ஒன்றேயாகும். அவை நித்தியமானவை; காலவரையறையுள் அடங்கியனவல்ல. ஆனால் அது குறிக்கப்பட்ட காலத்தில் மனுஷனுக்கு வெளியாக்கப்படும். ஆகையினால் காலம் 'நிறைவேறியபோது' (அதாவது வெளியாக்கப்பட்டதை எற்றுக்கொள்ள மனுஷன் பக்குவப்பட்டிருக்கிறான் எனத் தேவன் கண்டபோது) 'தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார்' (கலா. 4. 5.). 'வார்த்தை மாமிசமானது.' (யோவா. 1. 14.)

ஆகையினால் இந்து சமயமாயினும் வேறெந்த சமயமாயினும் கிறிஸ்து சமயத்திற்கு முந்தியதெனக் கூறல் தவறென்பதை பரி. யோவானுடைய உபதேசம் நிலைநிறுத்துகின்றது. உண்மை



யெல்லாம் நித்தியமாயிருப்பன. கிறிஸ்தவராகிய நாம் கூறியறிவிக்கிற சத்தியமும் தேவன் எப்படி நித்தியரோ அப்படியே நித்தியமாயிருக்கிறது.

**“நாங்கள் கேட்டதும் நாங்கள் கண்களினாலே கண்டதும் நாங்கள் நோக்கிப் பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதும்.”**

இங்கே 'நாங்கள்' என்பது அப்போஸ்தலரைக் குறிக்கும். அதாவது தம்மோடிருந்து (மாற். 3. 14.), தம்முடைய வார்த்தைகளைக் கேட்கவும், செயல்களை நோக்கவுமாக விசேஷித்தபிரகாரம் கிறிஸ்துவால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறிக்கும். அவர்கள் அவருடன் மூன்றுவருஷகாலமிருந்தனர். அவர் அவர்களுக்குத் தம்மை மற்றச் சீஷர்களுக்கில்லாப் பிரகாரம் அதிகப் பூரணமாய் வெளிப்படுத்தினார். வேறெம்மனிதனும் பேசக்கூடாதபிரகாரம் அவர் பேசியதையும் (யோவா. 7. 46.), வேறு எவரும் செயற்கரிய செயல்களை அவர் செய்ததையும் (யோவா. 15. 24.), அக்காலங்களில் அவர்கள் கண்டு கேட்டபோது அவர்கள் நம்பிக்கை வரவர பலப்பட்டு அவரே 'ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' (மத். 16. 16.) என்று நம்பினார்கள்.

ஆண்டவர் சிலுவையிலறையுண்டு உயிர்விட்டதைக் காண அவர்கள் விசுவாசமும் நம்பிக்கையும் நிலைகுலைந்தது. ஆனால் மூன்றாம்நாளில் அவர் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த பின்பும் இவர்கள் அவரைப் பன்முறையும் கண்டார்கள். அவர்கள் அவரை யுற்றுநோக்கி காலம் இடம் முதலியவற்றிற் கடங்காதபடி அவர் இப்பொழுது மகிமையடைந்திருப்பினும் அவர் தாங்கள் முன் கண்டிருந்த அதே இயேசுதானென அறிந்துகொண்டனர்.

கண்ணினாற் கண்டவற்றைச் சந்தேகிக்க நேரும்போது காண்ப துண்மைதானோவென அறியக் கையினால் தொட்டுப் பார்த்து உண்மையை அறிகிறோம். அப்போஸ்தலரில் சிலர் முதலில் சந்தேகப்பட்டார்கள். விசேஷமாய் ஒருவன் தான்

கண்டதை நம்பாதபடி சந்தேகித்தபோது அவன் தொட்டுப் பார்த்துத் தன் சந்தேகத்தை நிவிர்த்தித்துக்கொள்ளுமாறு கிறிஸ்து சொன்னார். 'என் விலாவிலே கைபோடு' (யோவா. 20. 27.), 'தொட்டுப்பாருங்கள்' (லூக். 24. 39.) என்றும் சொன்னார்.

இவ்விஷயங்களையெல்லாம் சர்வ ஜனத்திற்கும் கூறியறிவிக்கும்படி விசேஷித்தவிதமாய் ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த அவ்வப்போஸ்தலர் பதினொருவருள் பரி. யோவான் அப்போஸ்தலனைத்தவிர மற்றவர் இறந்துவிட்டனர் போலும். எனவே இவர் எல்லாருக்கும் பதிலாகத் தாமே எல்லோரும் கூறுவதுபோல் கூறுகின்றார்.

**'நாங்கள் கண்டு கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம்'**

பரி. யோவான் அப்போஸ்தலன் இந்நிருபத்தை* எழுதிய காலத்தில் இருவிதமான கள்ளப்போதகர் அங்கிருந்தனர். கிறிஸ்தவர்கள், விசேஷமாய் எபேசிலுள்ள கிறிஸ்தவர்கள், வழிதப்பிப் போவதற்கு இவர்கள் ஏதுவாயிருந்தனர். இக்கள்ளப்போதகருள் ஒரு சாரார், இயேசு உண்மையாகவே தேவன் என்றும், அவருடைய சரீரம் உண்மையான சரீரமல்லவென்றும், சரீரம்போற் காணப்பட்ட மாயாதோற்றத்தை ஜனங்கள் சரீரமெனப் பாவித்துக்கொண்டனரென்றும் சாதித்தார்கள். மற்றொரு சாராரோ, இயேசு உண்மையான மனிதனென்றும், கிறிஸ்துதான் தெய்வமென்றும், அந்தக் கிறிஸ்து இயேசு ஞானஸ்நானம் பெற்ற காலத்தில் அவருடன் ஐக்கியப்பட்டு, அவர் மரணமடையப்போகும்வரை அவருடனிருந்து, அவர் மரணமடையு முன்னரே அவரினின்றும் பிரிந்துபோய்விட்டாரென்றும் போதித்தார். பரி. யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தை மிகுந்த பயபக்தியோடும் வற்புறுத்தினார். தாமும் மற்ற அப்போஸ்தலரும் கொண்ட கொள்கை தப்பிதமானதல்லவென்பது அவருடைய முழு நம்பிக்கையான கோட்பாடு. 'நாங்கள் அவர் பேசியதைக் கேட்டோம். அவரைக் கவனமாய் நோக்கினோம். அவரைத் தொட்டுணர்ந்தோம். கண்டு கேட்டுணர்ந்ததன் பயனாய், அவர் நமக்கு



விளங்காதபடி மகிமையோடு உயிர்த்தெழுந்தபோதிலும், அவர் சரீரம் உண்மையில் நமது சரீரத்தைப்போலவே இருக்கக் கண்டோம். அவர்தான் ஜீவவார்த்தையென உண்மையாக அறிகிறோம்' என்கிறார்.

இப்பெரிய உண்மையைத் தம் ஆத்துமாவில் தாம் உணர்ந்ததனால் உண்டான பொறுப்பும், அதைப் பிறரும் தம்மைப்போல் அறிந்துகொள்ளவேண்டுமென்றெழுந்த அவிக்கமுடியாத ஆசையனலும், இவ்வுண்மையைக் கூறியறிவிக்கத் தெரிந்துகொள்ளப்பட்டவரில் தாம்மாத்திரம் மீந்திருந்ததான ஸ்திதியும், இவ்வரிய செய்தியை அவர் தாமதமின்றி பகிரங்கப்படுத்தவேண்டுமென அவரை ஏவுகிறது. அவ்வாத்திரம் காரணமாகவே போலும்,* தாம் எழுதிக்கொண்டிருக்கும் வாக்கியத்தினிடையிலும் இரண்டாம் வாக்கியத்தில் அதை வெளியிட்டு, முதல் வாக்கியத்திற்கண்ட கருத்தை மூன்றாம் வாக்கியத்தில் தொடர்ந்தெழுதினார்.

**வாக். 2. அந்த ஜீவன் வெளிப்படுத்தப்பட்டது, பிதாவினிடத்திலிருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான (அந்த ஜீவனை) அந்த நித்தியஜீவனை நாங்கள் கண்டு சாட்சி கொடுத்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.**

ஜீவன் வெளிப்படுத்தப்படாத ஓர் காலமிருந்தது. அக்காலத்தில் பூலோகம் முழுமையும் ஆவியின்பிரகாரமாய் மானந்தகாரத்தில் மூழ்கியிருந்தது. தங்களுக்கு ஜீவனைக் கொடுப்பதற்கு மனமுள்ளவரும் கொடுக்கக்கூடியவருமாகிய தேவனைத் தேடி, மனிதர் அவ்விருளினிடையே தம் கரங்களை நீட்டித் தடவி நின்றனர். தெய்வலோகத்திலோ எல்லாம் தெளிவாயும் பிரகாசமாயுமிருந்தது. ஜீவன் அங்கேயே யிருந்தது. வார்த்தையானவர் பிதாவோடிருந்தார். அந்த வார்த்தையை யனுப்பி உலகினோர்க்கு ஜீவனளிக்கவேண்டுமெனப் பிதாவானவர் தாம் கொண்டிருந்த சித்தத்தை மறவாமலு மிருந்தனர். எனினும் அந்த ஜீவன் இன்னும் மனிதனுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இடையிடையே தேவனுடைய ஆவியானவர் தாம் ஆயத்தப்

படுத்திய ஓர் விசேஷித்த ஜாதியாருக்குள் பரிசுத்தமுள்ள பல தீர்க்கதரிசிகளை யெழுப்பி, மரணாந்தகாரம் மூடிக் கவிழ்ந்திருந்த உலகத்திற்கு வெகுகாலத்தின்பின் வரவிருந்த ஜீவ ஒளியின் கதிர்களைக் காணச்செய்தார். கடைசியாக உன்னதத்திலிருந்து வந்த அருணோதயம் நம்மைச் சந்தித்தது. 'தேவன் தமது குமாரனை யனுப்பினார்.' ஜீவனும் வெளிப்படுத்தப்பட்டது. மனுஷனில் தேவனுடைய ஜீவன் எப்படி விளங்கக்கூடும் என்பதை மனிதர் இயேசுவிற் கண்டனர். இயேசுவுக்குள் தேவனுடைய ஜீவனைத் தாங்களும் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பதை யுணர்ந்தனர். (1 யோவா. 5. 11–12. கொலோ. 3. 4. ரோ. 5, 10; 6. 23. 2 கொ. 4. 10. 2 தீமோ. 1. 1.)

நாங்கள் 'கண்டோம், சாட்சி கொடுக்கிறோம், அறிவிக்கிறோம்' எனும் மூன்று பதங்களையும் தலைமாற்றி நாங்கள் 'அறிவிக்கிறோம், சாட்சி கொடுக்கிறோம், கண்டோம்' என ஒழுங்குபடுத்திப் பொருள்கொள்ளின் அப்பாகம் நன்றாய் விளங்கும். என்ன? அப்போஸ்தலராகிய நாங்கள் **அறிவிக்கிறோம்**. அதாவது தேவனிடத்திலிருந்து எங்களுக்குத் தெரிந்த செய்தியை உங்களுக்குக் கொண்டுவருகிறோம். அது உண்மையான செய்தி. அதைப்பற்றி நாங்கள் **சாட்சி கொடுக்கிறோம்**. சாட்சிகளாக முழு உண்மையையும் அறிவிக்கிறோம். உண்மையையன்றிப் பொய்யை யுரையோம். நீங்கள் எங்கள் சாட்சியைக் கொள்ளினும் தள்ளினும் சரி, விரும்பினும் வெறுப்பினும் சரி, நாங்கள் உண்மையை யறிவிக்கவேண்டியது எங்கள் கடமை. எல்லா சாட்சிகளையும்போலவே, நாங்களும் நேரிற் கண்டதைமாத்திரம் சொல்லுகிறோம். கனவிற் கண்டதைக் கற்பித்துக் கூறவில்லை. பிறர் கூறக் கேட்டதை நீங்கள் அறியச் சொல்வதில்லை. வாசித்த மாத்திரத்தைக் கூசாமல் உரைக்கவில்லை. கண்டதையே உரைக்கிறோம்.

கிரேக்கு பாஷையில் சாக்ஷி, இரத்தச்சாக்ஷியென இரு பதங்களும் ஒரே வார்த்தையிலிருந்துதான் உண்டாயிருக்கின்றன. ஏனெனில், கிறிஸ்துவுக்காகச் சாக்ஷி பகர்பவர் பலர்



பொல்லாத உலக மக்களால் சித்திரவதைக்குள்ளாய் உயிர் துறந்தனர். இவர்கள் தாங்கள் சாதிக்கும் உண்மையை நிலைநிறுத்தும்பொருட்டுத் தம் உயிரையும் பொருட்படுத்தாதிருந்தமையின் அவர் கூறிய தெவ்வளவு உண்மையென்பது தெள்ளிதின் வெளியாம்.

பரி. யோவான் அப்போஸ்தலன் 'நித்தியஜீவன்' என்று மாத்திரம் சொல்லிவிடாதபடிக்கு, ஜீவன் அதாவது நித்திய ஜீவன், என்று கூறுகிறார். ஏனெனில் நாம் அவற்றை வெவ்வேறாகச் சிந்திக்கவேண்டுமென்பது அவர் கருத்துப்போலும்.

ஜீவன் யாதெனவறிந்தோம். இனி யதனுடன் சேர்ந்திருக்கும் நித்தியமெனும் அடையின் பொருளென்ன? யோவான் 17. 3–ல் நித்தியஜீவனை லட்சணித்திருப்பதினின்றும் இதை யறியலாம். 'ஒரே மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்' நித்தியஜீவன் என்பது எக்காலத்திலும் இருப்பதாகிய ஜீவன், (1) அதை நாம் மறு உலகில்தான் அடையக்கூடுமென்பதன்று. இப்பொழுதே கிறிஸ்துவை விசுவாசிப்பதால் அதைப் பெற்றுக் கொள்ளலாம் (யோவா. 3. 36; 5. 24; 6. 47.). (2) அது காலத்தினால் அளவிடப்படக்கூடியதுமன்று. உலகிலுள்ள காலமே அளவுக்கடங்கியது. மறு உலகில் அத்தன்மை கிடையாது. கிரேக்கு வார்த்தையின்படி நித்தியஜீவன் என்பதே பூரண தெய்வஜீவனைக் குறிக்கிறது. குற்றமும் குறையுமின்றி அந்தமும் அழிவுமில்லாததாய் விளங்கும் ஜீவன். அதுவே தேவனுடைய ஜீவன். உண்மையில் ஜீவன் என அழைக்கப்பெறுவதும் அந்த ஜீவனே.

பூரணமும் உண்மையும் குறைவற்றதுமான இந்த நித்திய ஜீவனை தவிர வேறேவிதமான ஜீவன் பிதாவோடு இருக்க முடியாது. வேறுவிதமான ஜீவன் வெளிப்படுத்தப்பட்டாலும் நாம் அதால் திருப்தியடையோம். பிதாவினிடத்திலிருந்த வென்பதன் பொருள் இதுவேயாகும். பிதாவோடிருக்கும் நெருடையையும் சிலாக்கியத்தையும் வேறெவ்வகைத்தாம் ஜீவ

னும் பெறுதல் இயலுமோ? இயலாது. பிதாவோடு என்பதில் ஒடு என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்கபாஷை இடைச்சொல் ஒரு விசேஷித்த பொருளில் வழங்குகிறது. அது 'நேராக' அல்லது 'முன்பாக' வெனப் பொருள்படும். அதைப் பரி. யோவான் தமது சுவிசேஷத்தில் (1. 1.) 'அந்த வார்த்தை தேவனோடு (தேவனுக்கு நேராக) இருந்தது' எனு மிடத்திலும் சொல்லுகிறார். அந்தக் கருத்தையே சற்று விரித்து (யோவா. 1. 18.), 'பிதாவின் மடியிலிருக்கிற (மடிக்கு முன்பாக விருக்கிற) ஒரேபேறான குமாரன்' எனவும் சொல்லுகிறார். இதைப் பார்க்கும்போது அதி ஆழமுடைத்தாய் நமது சிற்றறி வுக்குப் புலப்படாத தெய்வத்தன்மையின் திரித்துவ ஏகத்து வத்தை மறைத்திருக்கும் திரை சிறிது நீக்கப்பட்டு, உடன் தானே மூடிவிடப்பட்டதுபோலும் தோன்றுகிறது. பிதா அன்பாகவே இருக்கிறார். குமாரன் அவ்வன்புக்கு உரிமைபூண்ட நித்திய வஸ்துவானவர். ஆகலின் குமாரன் தமது குமாரத்துவத்துக் குரிய பூரண அன்பில் எப்பொழுதும் பிதாவிற்கு 'நேராக' அல்லது 'முன்பாக' இருக்கிறார். இதுபற்றியே 'பிதாவெனும் கருத்து தெய்வம் என்பதிலடங்கியும் தெய்வம் என்பதினால் பூரணப்பட்டும் இருக்கிறது' என வெஸ்றகாட் அத்தியக்ஷர் கூறுகிறார். இந்தக் கருத்தை யுத்தேசித்தே பரி. யோவான் அப்போஸ்தலன் குமாரனுடைய ஜீவன் பிதாவுக்கு 'நேராக' விருப்பதாகச் சொல்லுகிறார். குமாரனுடைய ஜீவன் பிதாவி னுடைய விருப்பத்தைச் சார்ந்தும் தமது எல்லாக் கிரியைகளி லும் பிதாவினுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதாகவு மிருக் கிறது. பிதாவின்றிக் குமாரனுக்கு ஜீவனில்லை (யோவா. 5. 26; 8. 30.). எனவே, அது வெளிப்படுத்தப்படா முன்னரே நித்தியகாலமாக அது அப்படியே யிருந்தது. நமக்கு வெளிப் படுத்தப்படும்போதும் பூமியில் அது அப்படியே யிருந்தது. பிதாவின் சித்தத்தோடுள்ள இந்தப் பூரண அன்பின் தொடர்ச் சியே அவதாரமான வார்த்தையின் ஜீவனுடைய முக்கிய கருத்து. அதுபற்றியே அவ்வார்த்தையாகிய குமாரன் தம்மைப்பற்றி



'நான் பிதாவினால் பிழைத்திருக்கிறேன்' அதாவது நான் பிதா வுக்காகவும், பிதாவையே என்னுடைய ஜீவியத்தின் முக்கிய நோக்கமாகவும் கொண்டிருக்கிறேன் என்கிறார். (யோவா. 6. 57.)

**வாக். 3. நீங்களும் எங்களோடு ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டுமிருக்கிறதை உங்களுக்கு அறிவிக் கிறோம்.**

திருபம் எழுதிய நோக்கம் இங்கு காட்டப்படுகிறது. அப் போஸ்தலர் ஒருவிதமான விசேஷித்த சிலாக்கியம் பெற்றவர். அவர்கள் கண்டும் கேட்டுமிருந்தனர். அவர்கள் இயேசுவுக் குள் நித்தியஜீவனைக் கண்டிருந்தார்கள். அவர்கள் அவருக் குள் பிதாவோடு ஐக்கியப்பட்டிருந்தனர். ஜீவ ஊற்றில் மற் றெல்லாரிலு மதிகமாய்ப் பானம்பண்ணியவருமவரே. அவர் களுக்கு ஜீவனாயிருந்த இந்த அறிவில் மற்றவரும் அவர்களோடு ஐக்கியப்பட்டு, அவர்கள் அடைந்திருந்த சிலாக்கியங்கள், ஆசீர் வாதம், வல்லமை முதலியவற்றில் பிறரும் பங்கடையும்படியாக, அவர்கள் கண்டு கேட்டதை அவர்கள் பிறருக்கு அறிவிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாம். இயேசுவைப் பாராதபடிக்கு அவரை விசுவாசிக்கிற நமக்கு, அவரே தோமா வுக்குக் கூறியபடி (யோவா. 20. 26.). அவரைப் பார்த்து விசு வாசிப்பவரிலும் அதிகமான ஆசீர்வாதமுண்டு. இந்தவிதமான ஐக்கியமானது, ஒரே கடவுளை வழிபடுகிறவர்களாகிய அடியார் களுக்குள்ளும் ஒரே நம்பிக்கையும் ஒரே விசுவாசமுமுள்ளவர் களுக்குள்ளும் உண்டாகிற பரஸ்பர அன்பும் அனுதாபமு மாத்திரமல்ல அது கடவுளோடும் உண்டாகிற ஐக்கியமாம்.

**ஆம், எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.** இதை கிரேக்கு பாஷையிலிருக்கிறபடி விரிப்பின், கவனித்துக்கொள் ளுங்கள், நாங்கள் இப்பொழுது உங்களை அழைக்கிற இந்த ஐக்கியமாகிய எங்களுடைய உண்மையான இந்தக் கிறிஸ்தவ ஐக்கியம், பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது எனவாகும். பிதாவுக்கும் குமார

னுக்கும் எவ்வளவு பூரண ஐக்யம் இருக்கிறதென்று நாங்கள் கண்டிருக்கிறோம். அந்த ஐக்யத்தில் இரண்டும் ஒன்றாய் முழுதுமாய்ப் பொருந்தி ஒன்றித்துவிடக் கூடியதாய் அவ்வளவு பூரணமாயிருக்கிறது. நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவா. 10. 30.). அப்படியாயின் நாம் ஒருவரோடு ஐக்யப்பட்டால் இருவரோடும் ஐக்யப்பட்டவராவோமெனத் தெளிவாய்விடுகிறது. இந்த நிருபம் அந்த ஐக்யம் என்னவென்பதைக் காட்டும். பிதாவோடும் குமாரனோடும் ஜீவனில் ஐக்யமாதல் 'திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்' (2 பே. 1. 4.). விருப்பத்தில் ஐக்யம், வேலையில் ஐக்யம். இவ்வளவு மேலான ஐக்யத்தை நாம் சற்றுத் தாமதித்து யோசித்து அதிசயிக்கவேண்டும். இந்த ஐக்யம் நம்முடைய நினைவினாலும் கஷ்டமான சுயபிரயாசையாலும் கிட்டாது. தேவனுடைய குமாரனிடத்திலுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் பற்றுதலினால் விளையும். இந்த ஐக்யத்தை நாம் இந்த ஜீவியத்தில் பலவீனராயிருக்கும்போது ஆரம்பிக்கிறோம். அது மறுமையில் பலனடைந்து பூரணப்படும். இந்த ஐக்யம் அதிகம் அதிகமாக வளர்ந்துகொண்டே போகிறது. வளர வளர நமது ஆத்துமாவைத் தேவசாயலுக்கொப்பாக மாற்றிவிடுகிறது. ஒருவன் தேவனோடு ஐக்யப்பட்டிருக்கிறான் எனக் கூறுவதுதான் ஒருவனைப்பற்றி கூறக்கூடிய உயர்வான காரியம். இதனினும் அதிக உயர்வாய் ஒருவனைப்பற்றிக் கூறமுடியாது. ஏனெனில் தேவன் அவன் பிதாவாகிவிட்டனர். தேவனோடு ஐக்யப்பட்டிருப்பதைக்காட்டிலும் மேலானது ஒரு மனுஷனுக்கு வேறொன்றுமில்லை. தேவன் அவன் பிதாவாயிருக்கிறார். பிதாவுக்கும் பிள்ளைகளுக்கும் ஐக்யம் ஏற்பட்டிருக்கிறது என ஷ்லேற்றர் ஐயர் கூறுகிறார்.

அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னும் நாமமே ஓர் சுருக்கமான விசுவாசப் பிரமாணம்.

(1) குமாரன் என்னும் பதம் தேவனுடைய நித்திய குமாரனாகிய கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தைக் காட்டுகிறது.



(2) இயேசுவெனும் பதம் அவருடைய மனுஷீகத்தையும் அவருடைய இரக்ஷிப்பின் தொழிலையும் காட்டுகிறது (இயேசு=யேகோவாவே இரக்ஷிப்பு.)

(3) கிறிஸ்து எனும் பதம் அவருடைய பதவிக்குரிய பட்டமேயன்றி ஆளுக்குரிய பேரன்று. இது அவர் தீர்க்கதரிசி, ஆசாரியன், இராஜாவெனக் காட்டுகிறது. (கிறிஸ்து=மேசியா=அபிஷேகம் பண்ணப்பட்டவர்.)

வா. 4. **நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை எழுதுகிறோம்.** கிரேக்கு பாஷையிலிருக்கிறபடி நமது சந்தோஷம் நிறைவாகும்படிக்கும் பின்னர் அது நிறைவாகவே எக்காலும் நிலைபெறும்படிக்கும் இவைகளை யெழுதுகிறோம் எனவாகும்.

இவைகளை என்பது முழு நிருபத்தையும் குறிக்கும். இது எழுதுவதற்கு அதிகாரமுடையவரால் எழுதப்பட்டது. (பரி. யோவான் அப்போஸ்தலன், தனிமையாயிருந்தே இதை யெழுதியபோதிலும் இம்மையில் நீங்கி மறுமைக்குட்பட்ட மற்றும் அப்போஸ்தலரோடும் தம்மைச் சேர்த்துக்கொண்டு எல்லோரும் சேர்ந்து சொல்வதுபோலவே எழுதுகிறார்.) இது பத்திரமாய்க் காக்கப்பட்டுக் கிறிஸ்து சபையில் அப்படியே வழங்கி வரும்படியாக எழுதப்பட்டது.

பரி. யோவான் அப்போஸ்தலன் 3-ம் வாக்கியத்தில் **நீங்களும் எங்களோடு ஐக்யமாகும்படி** என்று இந்த நிருபத்தை எழுதியதற்கு ஓர் காரணம் கற்பித்திருக்கிறார். இங்கே மற்றொரு காரணமும் காட்டுகிறார். அதென்னவெனில் நம்முடைய சந்தோஷம் அதாவது உங்களுடையவும் என்னுடையவும் **சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி** என்பதே. இக்காரணம் முதற்காரணத்தோடு சம்பந்தப்பட்டதேயாகும். பூரண சந்தோஷம் பூரண ஐக்யத்தாலேயே விளையும். கேவலம் உலக சந்தோஷத்திற்குங்கூட பூரண ஐக்யம் இன்றியமையாததொன்றன்றோ? நாம் உலகில் அதிக சந்தோஷமாயிருக்கும் காலம் நம் அதிகமாய் நேசிப்பவரோடு மனமொத்துக் கலந்துறவாடும்

காலமேயன்றோ? உலக நண்பரோடேயே இவ்வளவென்னில் பூரண நன்மையும் அன்பும் ஞானமுமுள்ள கடவுளோடும் நன்மையும், அன்பும், தூய்மையும் நிறைந்த அவருடைய பிள்ளைகளோடும் இவ்வாறு ஐக்யப்படும்போது நமக்குள் எழும் பூரண சந்தோஷத்திற்கு அளவுமுண்டோ? 'கடவுளின் விருப்பத்திற்குக் கீழடங்கி நடவாமையால் விளைவன யாவும் சஞ்சலமே. நமது சித்தம் அவரது சித்தத்திற்கு மாறுபடின் விளைவது துயரமே. அவரைப்போல் நினைத்து அவரைப்போலுமுணர்ந்து அவர் விரும்புவனவற்றை நாமும் விரும்பினால் நமது சஞ்சலம் நீங்கிப் பூரண மகிழ்ச்சி பிறக்கும்' என்று காண்ட்லிஸ் ஐயர் சொல்லுகிறார். நம்முடைய விஷயத்திலும் இப்படியேயிருக்க வேண்டும் என்பது இயேசுவானவரது வேண்டுகோளும் (யோவா. 15. 11; 17. 13.), பரி. யோவான் அப்போஸ்தலனுடைய நோக்கமுமாயிருக்கிறது.

இந்த சந்தோஷம் மாறிப்போகும் தன்மையுடைய விளங்காததான ஒருவித மனவெழுச்சியன்று. அதனை நாம் தினந்தோறும் அனுபவிக்கலாம். அவ்வாறு அனுபவிக்கவேண்டியதும் நமது கடமையேயாகும். இந்த சந்தோஷம் விளைவதற்கு நான்கு ஏதுக்கள் உள. அவையாவன:— (1) கீழ்ப்படிதல் (யோவா 15. 10, 11.), (2) ஜெபம் (யோவா. 16. 24.), (3) தெய்வசுபாவ ஆராய்ச்சி (யோவா. 17. 13.), (4) கிறிஸ்தவ ஐக்யம் அல்லது கூட்டுறவு. (2 யோவா. 12. வா.)

## இரண்டாம் பிரிவு.

முகவுரை முடிந்தது. மீதமாகவுள்ள இந்நிருபத்தை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

1. 1. 5–2. 28. தேவன் ஒளியாயிருக்கிறார்.
2. 2. 29–4. 21. தேவன் அன்பாயிருக்கிறார்.
3. 5. 1–12. விசுவாசம்.

முதல் பாகத்தை இருபிரிவாக வகுக்கலாம்.

(1) ஒளியில் நடப்பவர்களுக்கு ஏற்ற ஜீவியம்.

1. 5. 2–11. ஒளியில் நடப்பவர் கையாடவேண்டியன.

விசுவாசியின் நிலைமையும் ஒழுக்கமும்.

(2) ஒளியில் நடப்பவர்களுக்கு ஏற்காத ஜீவியம்.

2. 12. 2–28. ஒளியில் நடப்போர் தவிர்க்கவேண்டியன.

விலக்கவேண்டிய மனுஷரும் விஷயங்களும்.

ஒளியில் நடப்பவர் கையாடவேண்டியன. 1. 5. முதல் 2–11. வரை.

பரி. யோவான் அப்போஸ்தலன்காலத்தில் கள்ளப்போதகரு மிருந்தனர். இந்தக் கள்ளப்போதகர் கிறிஸ்தவர்கள் தங்கள் சபையைவிட்டு நீங்கி வேதப்புரட்டான அவர்கள் வழியைச் சேரவேண்டுமென முயற்சித்துவந்தனர். அவர்கள் போதித்த தவறான கொள்கைகளில் பரமஞானத்தினால் தம் அஞ்ஞானாந்தகாரத்தை நீக்கியுள்ளவர்கள் தங்கள் ஒழுக்கத்தைப் பற்றி யொரு சிறிதும் கவனிக்கவேண்டியதில்லை யென்றும், அத்தகையர் தங்கள் இஷ்டபூர்த்தி செய்யுமாறு எத்துணைப் பாவத்தையும் அஞ்சாதியற்றலாம் என்றும் கூறுவதொன்று. இவ்வாறாய கொள்கை கிறிஸ்துசமயக் கோட்பாடுகளுக்கு முற்றும் விரோதமானதெனவும், இதன்வழி யொழுகினால் பரி

சுத்தமும் உண்மையும் பறந்துவிடுமெனவும் பரி. யோவான் அப்போஸ்தலன் அறிந்தார். எனவே தமது நிருபத்தில் நாம் கவனிக்கப்போகிற இப்பாகத்தில் கள்ளப் போதகருடைய அக் கொள்கையை யாக்ஷேபித்து ஒவ்வொருவர்மாட்டும் காணப்படும் ஒழுக்கத்தின் நன்மையும் இன்மையுமே அவர் பரம ஞானமுடையரோ அல்லரோ வென்பதனைக் காட்டுமென வெகு தெளிவாய் எடுத்தோதுகிறார். ஒளியில் நடப்பவரின் நிலைமையும் ஒழுக்கமும் அடியில் வருமாறு.—

(a) தேவனோடும் சகோதரரோடும் ஐக்கியம். (5–7.)
(b) பாவ உணர்வும் பாவ அறிக்கையும். (8–2. 2.)
(c) கிறிஸ்துவைப் பின்பற்றித் தேவனுக்குக் கீழ்ப்படிதல். (2. 3–6.)
(d) சகோதர சிநேகம். (2. 7–11.)

(a) தேவனோடும் சகோதரரோடும் ஐக்கியம். (1. 5–7.)

**(5) தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. இது நாங்கள் அவரிடத்திலிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாய் (செய்தியாய்) இருக்கிறது. (6) நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நட(க்கிறவர்களாயிரு)ந்தால் சத்தியத்(தை)தின்படி நடவா (செய்யா)மல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். (7) அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு(கிறிஸ்து)வின் இரத்தம் சகல பாவங்க(ளிலுமிருந்து)ளையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.**

நாம் முகவுரையாகப் பார்த்த பாகத்தில் பரி. யோவான் அப்போஸ்தலன் தாம் கர்த்தராகிய இயேசுவினிடத்திலிருந்து கேட்டும் கண்டுமிருந்த பல பெரிய சத்தியங்களைக் கூறப்போவதாய்ச் சொன்னார். இப்பொழுது அந்தப் பெரிய சத்தியங்களுள் ஒன்றாகத் தேவன் ஒளியாயிருக்கிறார் என்பதைச் சொல்லுகிறார். அதைச் சொல்லிப் பின் விசுவாசிகளின் நடத்தை



யில் அதைப்பற்றிய போதகத்தைக் கற்பிக்கிறார். அவர்களும் தேவனோடு ஐக்கியப்படவேண்டுமென்னும் நோக்கத்தோடு இந் நிருபத்தை யெழுதுவதாகச் சொன்னார் (வாக். 3.). இப்பொழுது (1) தேவன் எப்படிப்பட்டவர் என்றும் (2) அவரோடு ஐக்கியப்பட அவர்கள் நடந்துகொள்ளவேண்டுவது எவ்வாறு எனவும் சொல்லப்போகிறார். முதலாவது தேவனைப்பற்றித் தாம் இப்படிச் சொல்வதற்குத் தமக்கு என்ன அதிகாரமுண்டென்பதைக் கூறுகிறார்.

**வாக். 5. இது நாங்கள் அவரிடத்திலிருந்து கேட்ட செய்தி.**

இதையவர் கிறிஸ்துவினிடமிருந்தும் அறிந்திருந்தார். கிறிஸ்துவானவரது செயல்களையும் உபதேசங்களையும் பார்த்தும் கேட்டும் அறிந்திருந்தார். மனுஷன் தேவனைப்பற்றி அறிவதெல்லாம் கிறிஸ்துவின் மூலமாகத்தான் அறிகிறான். கிறிஸ்து வருவதற்குமுன் கிறிஸ்துவின் ஆவியானவர் தேவனைப்பற்றி மனிதருக்குப் போதித்தார் (1 பேது. 1. 11.). கிறிஸ்து பரத்துக்கேறிய பின்னும் அவருடைய ஆவியானவரே (முன்னினும் அதிகமாய்) அதை மனிதருக்குப் போதித்தார் (2. 27.). தேவன் ஒளியாயிருக்கிறார் எனும் இந்த உண்மை பரி. யோவானாவது வேறெம்மனிதனாவது தானாகவே கண்டுபிடித்துக்கொண்ட ஓர் உண்மையன்று. அது ஒரு செய்தி. அறிவிக்கப்பட்ட செய்தி. 'தேவன் தம்மைப்பற்றிய சங்கதிகளை யறிவிக்கிறார் அதின் மூலமாகமட்டும் மனிதன் அவரைப்பற்றி யறியக்கூடும்' என்பர் வெஸ்ற்காட் அத்தியக்ஷர்.

புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களிலெல்லாம் பரி. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டவையே தேவன் என்ன செய்கிறார் என்பதையும், தேவன் என்ன சுபாவமுடையவராயிருக்கிறார் என்பதையும் பற்றி மாத்திரமன்றி தேவன் என்றால் என்ன அல்லது தேவன் எப்படியிருக்கிறார் எனும் லக்ஷணிப்பையும் கூறுகின்றன. தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்பதைப்பற்றி பரி. யோவானால் எழுதப்பட்டவற்றில் காணப்படுகிற மூன்று விஷயங்கள் இவை:—

தேவன் ஆவியாயிருக்கிறார். (யோவா. 4. 24.)
தேவன் ஒளியாயிருக்கிறார். (1 யோவா. 1. 5.)
தேவன் அன்பாயிருக்கிறார். (1 யோவா. 4. 8.)

தேவனுடைய இயல்பே ஆவி, ஒளி, அன்பு எனும் இவ்மூன்றால் ஆகியது. இவை இரக்கம், நீதி என்பனபோல் அவருடைய லட்சணங்கள் அல்ல. இவைதான் அவர். இவற்றை யறிந்தால் தேவனை யறியலாம். இவற்றைப்பற்றி எவ்வளவுதூரம் சிந்தனை செய்கிறோமோ அவ்வளவுதூரம் நமக்குத் திருப்தியுண்டாம். சிறு குழந்தைகளும் இவற்றை யறிந்துகொள்ளக்கூடும். எனினும் அதிக ஞானமுள்ளவரும் அவற்றின் பொருளை இவ்வளவுதானென்ன விவரித்து முடிக்க அசக்தராவார்.

'தேவன் ஒளியாயிருக்கிறார்' என்பதன் பொருளை ஒருவாறு அறியப் பிரயாசப்படுவோம். இது ஓர் உருவகம். இவ்வுருவகத்தாற் கூறப்படுவன.—

(1) தேவன் தம்மில் எப்படியிருக்கிறார்.
(2) நம்மோடு எப்படி சம்பந்தப்படுகிறார்.
(3) நமக்காக என்ன செய்கிறார் என்பனவாம்.

(1) தேவன் தம்மில் எப்படியிருக்கிறார். 'தேவன் ஒளியாயிருக்கிறார்' என்பதனாற் போந்த பொருள் அவரே பூரண உண்மைக்கும், அறிவுக்கும், பரிசுத்தத்திற்கும், சந்தோஷத்திற்கும் ஊற்றாயிருக்கிறார் எனப்படும்.

ஒளியைப்போலவே அவர் (அவரைத் தள்ளிவிடும் இடங்கள் தவிர) எங்கும் நிறைந்து, யாவற்றையும் பிரகாசிப்பித்து, எங்கும் உயிர் கொடுக்கிறார். ஒளியைப்போலவே வரையறையின்றித் தம்மை யெங்கும் வியாபிக்கச் செய்கிறார். எனினும் ஒளியை நமது கண்ணினால் பார்க்க முடியாததுபோல் அவரும் நமது கண்ணுக்கு மறைந்திருக்கிறார்.

(2) நம்மோடு எப்படிச் சம்பந்தப்படுகிறார். ஒளி வானின்று உலகில் வீசி எல்லாவற்றையும் பிரகாசிப்பதுபோல, தேவனும் தம்மை மனுஷனுக்கு வெளிப்படுத்தி மனுஷனைத் தம்முடைய பிரகாசத்துக்கொப்ப மறுரூபப்படுத்துகிறார். சூரிய ஒளி கண்



ணினுள் பிரகாசிப்பதினால் நாம் எல்லாவற்றையும் பார்க்கிறோம். அப்படியே தேவனும் தம்முடைய பரம ஒளியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆத்மீக 'இருதயக் கண்களை' நமக்குக் கொடுத்திருக்கிறார். (எபே. 1. 18. மத். 6. 22, 23.)

(3) அவர் நமக்காக என்னசெய்கிறார். கண்வழியே யுட்செல்லும் ஒளி தேகத்தை ஒளியுள்ளதாக்குவதுபோல், தேவன் நமது ஆத்துமாவுக்குள் புகுந்து பாவம், பழி, துக்கம் முதலியவற்றாலாய ஆன்மவிருளை நீக்கி நன்மை, ஞானம், பரிசுத்தம், பாக்கியமுடையவர்களாக்குகிறார்.

ஜீவனுக்கும், வளர்ச்சிக்கும், நிறத்திற்கும், அழகுக்கும், நடமாடித் திரிதற்கும் ஒளி எத்துணை யவசியமோ, அப்படியே தேவன் ஒருவரே மனுஷனுடைய ஆவியின் ஜீவியத்துக்கும், தேர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும், அழகுக்கும், உற்சாகத்துக்கும் அவசியம். ஒளிபெற்ற வஸ்து தன்னுடைய ஒளியை வீசித் தன் மகிமையைக் காட்டுவதுபோல, மனிதனும் தான் பெற்ற தேவனுடைய ஒளியை மற்றைய ஆத்துமாக்களும் காணுமாறு வீசி இந்தவிதமாய்த் தேவனை மகிமைப்படுத்துகிறான் (மத். 5. 14. பிலி. 2. 15.). ஒளியிலிருக்கும் ஒருவன் தான் பிறரைப் பார்ப்பதேயன்றித் தன்னையும் பிறர் பார்க்க ஏதுவாயிருத்தல் போல், தேவனுடைய ஒளியைப்பெற்ற ஆத்துமாக்களும் ஒன்றையொன்று கண்டு களிக்கின்றன.

'தேவன் ஒளியாயிருக்கிறார்' என்று சொல்லும்போது, பிதாவாகிய தேவன்மாத்திரம் ஒளியாயிருக்கிறார் என அபிப்பிராயப்பட்டுவிடக் கூடாது. தேவனாகிய குமாரனும் ஒளியாயிருக்கிறார். தேவனாகிய பரிசுத்த ஆவியும் ஒளியாயிருக்கிறார். எனவே இந்தச் சிறு வாக்கியத்தில் நம்மால் அளவிடற்கரிய ஆழ்ந்த கருத்துகள் அடங்கியிருப்பதாக உணர்கிறோம். நாம் தேவனுடைய ஒளியின் இயல்பு, அளவின்மை, சர்வவியாபகம், தூய்மை, பரிசுத்தம், ஞானம், சத்துவம், அழகு, சுயமாய் வெளிப்படுத்தல் முதலியவற்றைச் சிந்திக்கப்போகையில், இந்த மகா 'ஒளிப்பெருக்கு' நமது இருதயத்தினுடையவும், ஆவியி

னுடையவும் அந்தக்கரணங்களைத் தாக்கி அவற்றையெல்லாம் குருடாக்கிவிடுகிறது. 'சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர்' (1 தீமோ. 6. 16.) ஆகிய தேவனே ஒளியாயிருக்கிறார். எனினும் அந்த ஒளியினுடைய காக்ஷியே நமக்கு ஜீவன், 'தேவனுடைய காக்ஷியே மனித ஜீவன்.' இந்தக் காக்ஷி நமது இருளை நமக்குக் காட்டிப் புழுதியின்மட்டாக நம்மைத் தாழ்த்துகிறது (ஏசா. 6. 5. யோபு. 42. 5, 6.). பின் நாம் 'ஒளியின் பிள்ளைகளாக' அழைக்கப்பட்டிருக்கிறோமென்று நாம் உணரும்போதோ, அதுவே நம்மை வானபரியந்தம் உயர்த்துகிறது. ஆம், ஒருகாலத்தில் அந்தகாரமாக இருந்த நாம் இப்பொழுது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறோம். (எபே. 5. 8.)

அந்தகாரமும், அந்தகாரமென்ற மாத்திரத்தில் நாம் அர்த்தப்படுத்திக்கொள்ளுகிற பொய்யும், தீதும், துக்கமும், மரணமும் எங்கிருந்து வருகின்றன? எல்லாம் தேவனிடத்திலிருந்து உற்பத்தியாகியும் தேவனே எல்லாவற்றையும் படைத்துமிருந்தால் அவரே நன்மைக்கும் தீமைக்கும் கர்த்தாவாயிருக்கவேண்டும் என்றும், அவரே ஒளியும் இருளுமாய் இருத்தல்வேண்டும் என்றும் சொல்வோமோ? இந்தியாவிலுள்ள முக்யமான இருமதங்களாம் இந்து சமயமும் மகமதிய சமயமும் இவ்வாறே திட்டமாகப் போதிக்கின்றன. பரி. யோவான் அப்போஸ்தலன் அதிக பலமாய் இதை ஆட்சேபித்து, **'தேவனிடத்தில் எவ்வளவும் இருளில்லை'** எனச் சாதித்து வற்புறுத்துகிறார்.

தேவன் தேவதூதரையும் மனிதரையும் சுயாதீன சித்தமுடையவராகப் படைத்தார். அப்படிப் படைக்கப்பட்ட சிருஷ்டி தேவனுடைய ஒளி தனக்கு வேண்டாமெனத் தள்ளிவிட்டால், அந்தச் சிருஷ்டி அந்தகாரத்தின் ஆளுகைக் குட்படாதோ? தேவனிடத்திலோ அந்தகாரமேயில்லை (யோவா. 3. 19, 20.). சாத்தான் 'அந்தகாரத்தில்' இருக்கிறதாகவும் 'அந்தகாரத்தின் அதிபதி' எனவும் அழைக்கப்பட்டபோதிலும், சாத்தானே அந்தகாரமென எங்கும் கூறப்படுவதில்லை. இது கவனிக்கத்தக்கது.



தேவனே எல்லா ஒளியும் ஒளியின் சத்துவமுமாயிருக்கிறது போல அந்தகாரவிஷயத்தில் சாத்தானிருக்கிறதில்லை.

சமீபகாலத்திற் கண்டுபிடிக்கப்பட்ட விசேஷித்த ஒளிக் கண்ணாடியின் உபமானத்தினின்றும் ஒளியின் அடையாளமே ஒரு சிறிதும் காணப்படாததும், பாவ அந்தகாரம் கவிந்ததுமான இடங்களிலும் தேவனுடைய ஒளி எப்படிச் செல்லக்கூடும் என்று அறியலாம். இதுகாறும் ஒளி ஊடுருவிச் செல்லக் கூடாதனவென்ன நாம் எண்ணியிருந்த வஸ்துக்களில் இப்பொழுது இந்த நூதனக் கண்ணாடியின் ஒளி ஊடுருவிச் செல்கின்றது. எனவே உலகில் ஒளி ஊடுருவிச் செல்லக்கூடாத எந்த வஸ்துவுமே யிலதுபோலும். இதிலிருந்து, அக்காலத்தில் தேவகட்டளையின்படி சென்ற ஒளி ஆழத்தின்மேலிருந்த இருளை (ஆதி. 1. 2.) அகற்றியோட்டியதுபோல இக்காலத்திலும் பாவத்தில் ஆழ்ந்து, அந்தகாரமே குடிகொண்டிருக்கும் இருதயங்களிலும் தேவனுடைய பேரொளி சென்று அங்குள்ள அந்தகாரத்தை யகற்றியோட்டிப் பேரொளி பெருக்கிப் பிரகாசிக்கச் செய்யும் என நாம் எதிர்பார்க்கலாகாதோ? (1 கொரி. 15. 24–28. அப். 3. 21.) 'எல்லாம் நிறைவேறித் தீரும்காலம்;' பிலி. 3. 21. 'எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தி;' கொலோ. 1. 20. யாவையும் ஒப்புரவாக்கிக்கொள்ள' எபே. 1. 9. 'சகலமும் ......கூட்டப்படவேண்டும்.'

**'தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை'** என்னும் இந்தப் பெரிய உண்மையைச் சொன்ன பிற்பாடு, இவ்வுண்மையினின்றும் நாம் அறிந்துகொள்ளக் கூடிய அநேக சங்கதிகளில் ஒன்றைப் பரி. யோவான் அப்போஸ்தலன் கூறப்போகிறார்.

நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக அவர் கூறுகிற முதல் சங்கதி என்னவெனில், இருளில் நடக்கிறவர்கள் தேவனுடைய ஐக்யத்தினின்றும் நீங்கிவிடுகிறார்கள்; ஒளியில் நடப்பவர் தேவனோடும் ஒருவரோடொருவரும் ஐக்யப்பட்டிருக்கிறார்கள் என்பதே. இந்த உண்மையை நாம் மறுக்க முடியாது. ஒளியா

யிருக்கிற தேவனை ஏற்றுக்கொள்ளாதவிடம் தவிர மற்றெவ்விடத்திலும் இருளின் ஆளுகை கிடையாதெனப் பார்த்தோம். அந்தகாரத்தில் நடக்கும் மனிதன் தன்னுடைய ஜீவியத்திலிருந்து தேவனை யகற்றிவிட்டவனே யாவன். இவன் இருக்கும் நிலைமையே தேவனுடைய இயற்கைக்கு விரோதமான நிலைமை. இவன் தேவனை அகற்றிவிட்டான். இப்படிப்பட்ட மனிதன் எவ்விதமாகத் தேவனோடு ஐக்யப்பட்டிருத்தல் கூடும்? இருளில் நடப்பதெனில் என்ன, தேவனோடு ஐக்யப்பட்டிருத்தலாவு தென்னவென நாம் யோசிக்குமளவில் இத்திறன் நன்கு புலப்படும்.

காரிருள் கவிந்த இரவினிடையே வெளிச்சென்று அலைந்திருக்கும் எம்மனிதனுக்கும் இருளில் நடப்பதெனில் என்னவென்பது நன்கு தெரியும். எத்தனை நிர்மூடனேயாயினும் பாவத்தின் பாதையில் நேரிடும் மோசம், இடறல், விழுகை முதலியவற்றை இதிலிருந்தும் திட்டமாக அறிந்துகொள்ளக் கூடும். அத்தகைய அந்தகாரத்தை ஒருவன் தானே வருவித்துக்கொள்ளாமலிருக்கவும், அவனுக்கு அந்நிலைமை தானாகவே வந்து நே[illegible]திருக்குமேயாகில், அல்லது உண்மையான தெய்வத்தையும் அவருடைய பரிசுத்த சித்தத்தையும் அறியக்கூடாத விடத்தில் ஒருவன் பிறந்து வளர்ந்திருப்பானேயாகில், நாம் அவனுக்காகப் பரிதாபப்பட்டு தேவனே அவனுக்குத் தம் ஒளியைக் கொடுக்கும்படி அவரைப் பிரார்த்திப்போம் (ஏசா. 60. 2, 3. லூக். 1. 78, 79.). ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் இவ்விடத்தில் நமக்குத் தெரிகிறபடி தேவனைப்பற்றி அறிந்தவர்களைக் குறித்துப் பேசுகிறார். அவர்கள் தங்களுக்குத் தேவனுடன் ஐக்யமிருப்பதாகவும் சொல்லுகின்றார்கள். அவர்கள் மத்தியில் ஒளி பிரகாசிக்கிறது. அந்த ஒளியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆத்துமக் கண்களும் அவர்களுக்குண்டு எனினும் அவர்கள் அறிந்திருந்தும் இருளைத் தெரிந்துகொண்டனர். ஏனெனில் அந்தகாரத்தின் மீதாசையுற்று ஒளியை வெறுத்தனர். அவர்கள் செயல் தீமை. தீமையோ இருள்.



தேவனோடு ஐக்யப்படுதல் என்பது நாம் பார்த்தபடி தேவனை நேசிப்பதும் அவருடன் சம்பாஷிப்பதில் நாம் சந்தோஷிப்பதுமேயாம். இதை மாற்றிக்கூறின் ஒளியை நேசிப்பதும், ஒளியில் நடப்பதினால் நமது மகிழ்ச்சியைப் பெறுதலும் எனவாம். ஆதலின் ஒளியைப்பார்க்கினும் இருளை விரும்பி, அந்தகாரத்தில் நடப்பதையே தெரிந்துகொள்ளும் ஒருவன் தேவனோடு ஐக்யப்படுதல் கூடாதகாரியமென்பது மிகத் தெளிவாய் விளங்குகின்றது. இதைச் சொல்லத்தானும் வேண்டாம். அவ்வளவு தெளிவாயிருக்கிறது. எனினும் இதையும் சொல்லவேண்டும். ஏனெனில் பலர் 'அறப்படித்த மூஞ்சூறு (அறவடித்த முன்சோறு) கூடிப்பானையில் விழுந்தாற்போல்' முழுதும் அறிந்தும் ஒன்றையும் அறியார்போல் கெட்டுப்போய் மோசத்துக்காளாய் விடுகின்றனர். இவ்வகை மோசம் சாதாரணமாய் நேரிடக் கூடியவொன்றே. நாமும் ஒருக்கால் அம்மோசத்தில் அகப்பட்டுக்கொள்ளவும் கூடும். இதைக் கருதியேபோலும் அப்போஸ்தலன் ஆறும் வாக்கியத்தை 'ஒருவன்' என ஆரம்பியாது 'நாம்' என ஆரம்பித்தார்.

**வாக். 6. நாம் அவரோடே ஐக்யப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நட(க்கிறவர்களாயிரு)ந்தால் சத்தியத்(தை)தின்படி நடவா(செய்யா)மல் போய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.** பரி. யோவான் அப்போஸ்தலன் இவ்வளவு கண்டிப்பாய்ப் பேசுதற்கு அவருக்குப் போந்த காரணங்களிருந்தன. கள்ளப்போதகர் ஆகிய வேதப்புரட்டர், நாம் முன்னரே பார்த்தபடி தேவனைப்பற்றிய அறிவடைந்தவர் தாங்கள் விரும்பிய எவ்வகைப் பாவங்களையும் செய்யலாம் எனப் போதித்து வந்தனர். அன்றியும் ஒருவன் தேவனோடு ஐக்யப்பட்டிருந்தும் அதே காலத்திற்றானே அந்தகாரத்திலும் நடக்கலாம் எனப் போதிக்கும் பல புஸ்தகங்களையும் எழுதிவந்தார். அப்போஸ்தலனாகிய பரி. யோவான் அவர்கள் கூறுவதை நிராகரித்து அது பொய்யெனக் கூறுகிறார்.

மேற்கூறிய வேதப்புரட்டான்றியும் வேறுவிதமான தப்பறைகளைப் போதிப்பவரும் பலரிருந்தனர். அவர்கள் ஒருவன் 'தேவ அறிவின்' அதியுன்னத ஸ்தானத்தை யுணர்தற்கு அவன் அருவருக்கப்படத்தக்க சகலவிதமான ஆகாமியங்களிலும் பாவமான செய்கைகளிலும் கைதேறி யிருக்கவேண்டுமெனவும், அவ்வாறு தேறியிருந்தால்மட்டும் அவன் பூரண அறிவடைதல் கூடுமெனவும் போதித்தார். பரி. யோவான் அப்போஸ்தலனே இதனையும் மறுத்துப் பொய்யென்கிறார்.

மற்றும் சிலர் ஒருவன் கிறிஸ்துசபையில் சேர்ந்திருப்பதே அவன் இரக்ஷிப்புக்குப் போதுமானதெனவும், அவன் மறுபடியும் பிறந்திருப்பதால் அவன் ஒழுக்கம் எப்படியிருப்பினும் அவனுக்கு அவன் ஒழுக்கத்தால் யாதும் தீங்கு நேரிடாதெனவும் கூறினர். இக்கொள்கையையுடைய கிறிஸ்தவர் எக்காலத்திலும் இருந்ததுண்டு. பரி. யோவான் அப்போஸ்தலன் இவர் கூற்றையும் ஆக்ஷேபித்து மறுக்கின்றார்.

அன்றியும் தற்காலத்திலிருப்பதுபோலவே அக்காலத்திலும் 'பேர்க்கிறிஸ்தவர்'களும் இருந்தனர். அவர்கள் வாயினால் மேற்கூறிய தப்பறைகளை மறுத்தபோதிலும் செய்கையில் அவற்றுக் குடன்பட்டே நடந்துவந்தனர். அப்படிப்பட்டவர் தேவனைத் தங்கள் பிதாவென அழைக்க விரும்புகின்றனர். மற்றவரோடு ஆலயஞ்சென்று தேவனைத் தொழுதுகொள்ளப் போவார். கிறிஸ்துவைப்பற்றியும் அவர் போதகத்தைப்பற்றியும் நன்றாய் அறிவார். தேவனோடு தங்களுக்கு ஐக்யமுண்டெனவும் சொல்லிக்கொள்ளுவார். இவ்வாறெல்லா மிருப்பினும் அவர்கள் ஜீவியமோ அவர்கள் சொல்வதற்கும் நடிப்பதற்கும் முற்றும் மாறாயிருக்கிறது. இத்தகையார் ஆறுநாளும் அசங்கியமான ஆபாசங்களை நடப்பித்து, ஏழாம் நாளிலோ பக்தி வேடம்பூண்டு ஓய்வுநாட் கொண்டாடுவார். அப்போஸ்தலனே இவர் நடிப்பும் தவறென இடித்துரைக்கிறார்.

நாமும் இவர்களைப்போற் செய்வதாயிருந்தால், **நாம் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.** பொய்யென்றறிந்திருந்தும்



'சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி'னால் (ரோ. 1. 18.) **நாம் சத்தியத்தின்படி நடவாதவராயிருப்போம்.** நாம் சத்தியத்தை அறியலாம். அதைக்குறித்துப் பேசலாம். ஒருவிதமாக அதை ருசித்துப் பார்க்கலாம். எனினும் அதன்பிரகாரம் செய்கிறதில்லை (யோவா. 3. 21; வெளி. 22. 15. 'பொய்யின்படி செய்கிறவர்;') சத்தியத்தையே நாம் நம்முடைய ஜீவியத்தின் நோக்கமாகக் கொள்ளவேண்டும். அதைச் செய்வதற்கும் அதைப் பின்பற்றுதற்குமே தேவன் அதை நமக்குக் கொடுத்தார். நாம் அதைப் பார்த்து அதிசயிப்பதற்கும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டுமாத்திரம் இருப்பதற்குமன்று.

பேர்க்கிறிஸ்தவராயிருப்பவர் பொய்யின்மேற் பொய்யைக் கூட்டிக்கொள்கின்றனர். பொய்யென்றறிந்திருந்தும் பொய்யானவற்றைச் செய்கின்றனர். நியாயமானதென்று நம்பியும் செய்ய விரும்பியதாகக் கூறுவதையோ செய்யாமல் விடுகின்றனர். இப்பொழுது அப்போஸ்தலனாகிய பரி. யோவான் தம் வழக்கம்போல் நாம் ஆராய்ந்துகொண்டிருப்பதற்கு நேர் விரோதமானதை ஆராய்ந்து அதிலிருந்தும் இதன் பொருளை நன்கு விளக்குகிறார்.

வாக். 7: **அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்யப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு(கிறிஸ்து)வின் இரத்தம் சகல பாவங்க(ளிலுமிருந்து)ளையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.**

முந்திய வாக்கியத்தைப்போலன்றி வேறுவிதமாய்க் கூறுகிறார். அங்கே 'சொல்லியும்' என்றார். இங்கேயோ 'நடந்தால்' என்கிறார். இதன் மூலமாக நாம் சொல்வதும் ஒப்புக்கொள்வதும் தேவனுடைய பார்வையில் முக்யமானவை யல்லவெனவும், செய்வதும் அதன்படி ஜீவிப்பதுமே முக்யமானதெனவும் வற்புறுத்துகிறார். (மத். 7. 21.)

ஒளியில் நடப்பதென்றால் 'ஒவ்வொருநாளும் நாம் தேவனுடைய சந்நிதியிலிருப்பதுபோலவும் அவரே நம்மை நோக்கி நம்மையும் நம்முடைய சகோதரரையும் சகல உலகங்களையும்

நடத்துவதுபோலவும் நடந்துகொள்வதே’ என்கிறார், மாரிஸ் ஐயர். அதுவே தேவனுடைய மகிமையை நம்முடைய ஜீவியத்தின் விசேஷித்த நோக்கமாகக் கொள்வதாம். (ஆதி. 5. 24. ஏனோக்கு; 6. 9. நோவா; 17. 1; 24. 40. ஆபிரகாம்; 2 இரா. 20. 3. எசேக்கியா; சங். 16. 8; 128. 1. மீகா. 6. 8. மல். 2. 6.)

**அவர் ஒளியிலிருக்கிறதுபோல.** இவ்வார்த்தைகள் சுருக்கமாயிருப்பினும் மகா ஆழமானவை. அவர் அதாவது தேவன் என்பது மிகவும் வற்புறுத்திக் கூறப்படுகிறது. ஒரு சிறிதும் பாவக்கறை பிடியாத மகா பரிசுத்த நிலைமைக்கு அழைக்கப்படுகிறோம். தேவனுடைய பரிபூரண தன்மையே நமக்கு இலக்காகக் காட்டப்படுகிறது (லேவி. 2. 45; 19. 2; 20. 7. 26. மத். 5. 48. லூக். 6. 36, 40. எபே. 4. 13; 5. 1. கொலோ. 1. 28. 1 யோவா. 3. 3.). தேவனுடைய இந்தப் பரிபூரண நிலைமைக்கு நாமும் வந்துவிடலாம் என வாக்குப் பண்ணப்படுகிறது (1 யோவா. 3. 2. வியாக்யானம் பார்க்க.). நாம் ஒளியில் **நடக்கிறோம், அவர் ஒளியிலிருக்கிறார்.** நாம் பரிசுத்தத்தில் வரவர முன்னேறிக்கொண்டே போகிறோம். சதாகாலங்களிலுமிருக்கிறவராகிய தேவன், தாம் எக்காலத்தும் மாறாதவராயிருக்கிறபடியால் தம்முடைய இயல்புக்கொத்த பரிபூரணமான உண்மையிலும், பரிசுத்தத்திலும் தாபரித்திருக்கின்றார். (சங். 104. 2. 1 தீமோ. 6. 16.)

அந்த ஒளியில் நடப்பதன் பயனாக **நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.** நம்முடைய சகோதரரும் நம்மைப்போல் கிறிஸ்துவுக்குள் ஒளியிலிருக்க நாம் பார்க்கும்போது நாம் அவர்கள்மீதும் அன்பு கூருகிறோம். எல்லோரும் ஒளியின் பிள்ளைகளாயிருக்கிறபடியால், எல்லோரும் அவ்வொளியில் சகோதரராகிறோம். எல்லோரும் ஏகசிந்தையுடையவராய் ஒருவர் வெறுப்பதையே மற்றவரும் வெறுத்து, ஒருவர் விரும்புவதையே மற்றவரும் விரும்புகிறோம். ஒளியினாலேயே உண்மையான ஐக்கியம் உண்டாகக்கூடும். ‘தடவிக்கொண்டிருக்கும்படியான காரிருள்’ மூன்றுநாளளவாக எகிப்தியரை



மூடிக்கொண்டபோது, ஐக்யத்தைக் காட்டக்கூடிய சகலவிதமான வேலைகளும் நிறுத்தப்பட்டன. ‘ஒருவனையொருவர் காணவுமில்லை. ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவுமில்லை.’ தேவனுடைய அன்பின் ஒளியில் நடவாதவர் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய முடியாது. நாம் ஒளியில் நடக்கிறோம் என்பதை நம்மிடத்திற் காணப்படும் கிறிஸ்தவ ஐக்யமே வெளிப்படுத்தும்.

விசுவாசியின் ஆத்துமா தேவனுடைய ஒளியில் வந்தடைந்ததை நினைக்கும்பொழுது, அது இப்பொழுதுதான் விட்டுவந்த பாவாந்தகாரத்தை நினைத்துக்கொள்ளவும், திரும்பவும் அது அந்த அந்தகாரத்தில் விழுந்துவிடக்கூடும் எனப் பயப்படவும் நேரிடும். அதுகண்டே பரி. யோவான் அப்போஸ்தலன் சதாகாலமாகப் பாவம் கழுவப்பட்டு சுத்தமாக்கப்படும் வகையை உடனே கூறுகிறார் என்ன? **‘அவருடைய குமாரனாகிய இயேசு (கிறிஸ்து)வின் [1]இரத்தம் சகல பாவங்க(ளிலுமிருந்து)ளையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்’** இதனை வார்த்தையின்படியே பொருள்கொள்ளக்கூடாது. சாதாரணமான இரத்தம் பாவத்தை எங்ஙனம் சுத்தமாக்கக்கூடும்? ‘கிறிஸ்துவின் இரத்தம்’ எனும் இத்தொடர் கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, நம்மை நீதிமான்களாக்குமாறு உயிர்த்தெழுந்து நாம் பரிசுத்தம் பெறவேண்டித் தம் மரணத்தின் பின்னும் பிழைத்து, இவ்விதமாக நம்முடைய பாவங்களை நிவிர்த்திக்கும்படியாகத் தம்மையே பூரணபலியாக ஒப்புக்கொடுத்த அவருடைய முழு பிராயச்சித்தத்தையும் குறிக்கும். சுருங்கக்கூறின் வெஸ்ற்காட் அத்தியக்ஷர் சொல்வதுபோல் ‘கிறிஸ்துவின் இரத்தம் என்பது மனுஷருக்காக மரணத்தில் ஊற்றப்பட்ட கிறிஸ்துவின் ஜீவனையும், இப்பொழுதும் மனுஷருக்கு அருளப்படுகிற கிறிஸ்துவின் ஜீவனையும் குறிக்கும்.’

இங்கே குறிக்கப்பட்ட சுத்திகரிப்பு, ஞானஸ்நானத்தில் அடையாளமாகக் குறிக்கப்படும் பாவ நிவிர்த்தியைப்போன்ற

1 கிறிஸ்துவின் இரத்தம் அனுபந்தம் பார்க்க.

தன்று. ஒரு பாவி அவன் அதுவரை செய்த பாவம் மன்னிக்கப்பட்டு தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுவது பாவ நிவிர்த்தியாம். இங்கே குறிக்கப்பட்டது ஒளியில் நடப்பவர்மாட்டுத் தினந்தோறும் நடக்கும் சுத்திகரிப்பு (யோவா. 13. 10.). இதனால் 'இருதயத்தில் சுத்தம்' உள்ளவராகிறோம் (இங்கே வழங்கும் மூலபதமே மத். 5. 8 லும் வழங்குகிறது.) இந்தச்சுத்திகரிப்பினால் நமது பாவங்கள்மன்னிக்கப்படுவதுமாத்திரமன்று, நமது பாவத்தன்மையும்கூட நம்மைவிட்டகற்றிவிடப்படுகிறது; 'இது கிறிஸ்துவின் வேலை முடிந்த பாவி முழுவதுமாய் முற்றுமுடியப் பரிசுத்தமாக்கப்படும் நிலைமையைப்பெற முன்னேறிச் செல்வதைக் குறிக்கும். உலகிலேயே அந்தப் பூரண நிலைமையடையக்கூடும் என்கிற வாக்குத்தத்தம் இல்லை' என வெஸ்ற்காட் அத்தியக்ஷர் உரைக்கிறார். ஆராதிப்பதற்கேனும் ஊழியத்திற்கேனும் தேவனுடைய சந்நிதானத்திற் செல்ல விரும்பும் ஒவ்வொருவனும் புறம்பாக (ஆளிலும் உடையிலும்) சுத்தமாயிருக்கவேண்டுமென்பது அக்கால யூதர்களுடைய (தற்கால மகமதியரைப்போல) சடங்காசாரம். இது அந்தப் பரிசுத்த இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவர்மாத்திரம் தேவனுடைய சந்நிதியிற் செல்லலாம் என்பதனைப் போதிப்பதாயிருந்தது. (எபி. 10. 29.)

இவ்விடத்தில் எம்பெருமானை 'அவருடைய குமாரனாகிய [1]இயேசு' என்று அழைத்திருப்பது மிக விசேஷித்தது. ஏனெனில் இயேசுவினுடைய இரத்தமே பாவத்தைப் பரிகரிக்க வல்லமையுடையதென வற்புறுத்திக் கூறுகின்றது. ஏனென்றால் அவர் தேவனுடைய குமாரன். இயேசுவினுடைய தெய்வத்தன்மை அவர் ஞானஸ்நானம்பெற்ற காலமுதல் அவர் மரணத்துக் குட்படப்போகும் காலம்வரை அவருடனிருந்து அவர் மரணமடையுமுன்னரே அவரைவிட்டு நீங்கிவிட்டதெனவும்,

[1] இயேசு, குமாரன் என்பவற்றைப்பற்றி 3-ம் வாக்கிய வியாக்கியானம் பார்க்க.



அதுகாரணத்தால் அவர் மரணமடையும்போது தெய்வமாக வல்ல, மனுஷனாகவே யிருந்தாரெனவும், அவர் சிந்தியதும் மனுஷ இரத்தமே எனவும், வாய்கூசாது பொய்ப்போதகம் புனைந்துரைத்த செரிந்தியனை மறுத்து அவர் கொள்கையைப் பொய்ப்படுத்தி நிராகரிக்கும் தன்மையுடையது. இவ்விடத்தில் அப்போஸ்தலனால் எம்பிரானுக்கு வழங்கப்பட்ட திருநாமம்.

## பாவ உணர்வும் பாவ அறிக்கையும்.

(8) நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. (9) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் (நம்முடைய) பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (10) நாம் பாவம் செய்யவில்லை யென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (2. 1.) என் சிறுபிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (2) நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்.

நம்முடைய ஆத்துமாவில் எவ்வளவுக்கு அதிகமாய் ஒளி பிரகாசிக்கிறதோ நம்மில் இன்னும் தங்கியிருக்கிற அந்தகாரத்தை அவ்வளவுக்கு அதிகமாய் உணருகிறோம் (யோபு, 25. 4, 6. நீதி. 20. 9. பிர. 7. 20.). கிறிஸ்தவருடைய பாவமின்மையைப்பற்றியும், விசுவாசி 'பாவஞ்செய்யாதபடியும்' 'பாவஞ்செய்யக் கூடாதபடியும்' (3. 9.) ஒளியில் நடந்து கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதைப்பற்றியும் இந்த நிருபம் விசேஷமாய்க் கூறுகிறது. விசுவாசிகள் பாவஞ்செய்யாம லிருக்கவேண்டு

மென்பதே இந்நிருபத்தின் நோக்கம் (2. 1.). ஆகிலும் பரி. யோவான் அப்போஸ்தலன் பாவத்தைப்பற்றி முதல் முதலாகப் பேசும்போதே எவ்வளவுதூரம் பரிசுத்தமாயிருக்கக்கூடும் என்கிற அந்தச் சிறந்த நிலைமையைப்பற்றிப் பேசாமல், உண்மையில் எவ்வளவு பரிசுத்தம் காணப்படுகிறதோ அதைப்பற்றியே பேசுகிறார். காரியங்களும் கிறிஸ்தவர்களும் எவ்வளவுதூரம் பரிசுத்தமாய் இருக்கக்கூடும் என்பதைப்பற்றிப் பேசாமல் உண்மையில் எவ்வளவுதூரம் பரிசுத்தமாயிருக்கிறார்கள் என்பதைப் பற்றியே பேசுகிறார். அப்படிப் பேசி எவரும் பாவமேயில்லாமலிருக்கிறோம் என்று சொல்லாதபடி எச்சரிக்கவும் செய்கிறார். ஏனெனில் அப்படியிருப்பது உண்மையான காரியமன்று. கிறிஸ்தவர் மனதினால் நினைக்கக்கூடிய அந்த நிலைமையையே அடைய முயற்சிக்கவேண்டும். அந்த நிலைமையை யடையும்பரியந்தம் அவர்களிடத்தில் திருப்தி காணப்படக்கூடாது. அந்த நிலைமையை அடையக்கூடும் என்று நம்பவும் வேண்டும். எனினும் அவர்கள் தாங்கள் 'பாவம் செய்யவில்லை' யென்றேனும் தங்களுக்குப் 'பாவமில்லை' என்றேனும் சொல்லக்கூடாது. தங்களிடத்திலுள்ள பாவசுபாவத்தை இல்லையென்றாவது தாங்கள் வாஸ்தவத்தில் பாவஞ்செய்யவில்லையென்றாவது கூறக்கூடாது.

வாக். 8. **நமக்குப் பாவமில்லை.** இது மூலபாஷையின்படி 'நாங்கள் பாவமுடையவர்கள்' அல்ல என்றாகும். 'பாவமுடையவர்கள்' இதனால் எப்பொழுதும் பாவத்தோடு சார்ந்து பாவஞ்செய்கிறதற்கு ஆயத்தமாயிருக்கிற பாவ சுபாவம், பாவத்தன்மையுடையவர் என்பதைக் காட்டும். எனவே தன்னைப் புதிது புதிதாகப் பாவஞ்செய்யத் தூண்டுகிற பாவசுபாவம் தன்னிடத்தில்லை எனக் கூறுகிறவன் தன்னைத்தானே வஞ்சித்துத் தனக்குத்தானே விரோதியாகிறான். அவன் தன்னையே வழிதப்பி நடக்கச் செய்துகொள்ளுகிறான்.

பாவம்ஞான்மடைந்த இருதயத்தைக் கறைப்படுத்த முடியாதென்றும், பாவம் முழுவதும் உடலைச் சார்ந்ததொன்றே யென்



றும், பாவஞ்செய்யும் இயற்கையே ஒருவனிலிருக்கிறபடியால் அவன் செய்யும் பாவங்களுக்கு அவன் உத்தரவாதியல்லவென்றும், அச்சமயத்துக் கள்ளப்போதகர் போதித்தவற்றை மனதில் நினைந்தவராக பரி. யோவான் அப்போஸ்தலன் இவ்வாறு எழுதுகிறார். அத்தகைய போதகங்கள்தான் கிறிஸ்துசபையைக் காலாகாலத்தில் கெடுத்தன. அப்போதனைகளுக்குச் செவிசாய்த்தவர் அறிந்திருந்தும் உண்மையைவிட்டு விலகுகிறவர்களாயிருந்தார். **சத்தியம் அவர்களுக்குள் இல்லை.** தங்கள் ஜீவியத்தில் சத்தியத்தைச் சட்டமாகக்கொண்டு நடக்கவில்லை. வெளிச்சம் அறையினுட் செல்லவிடாதபடி மூடிவிடுபவர்போல் ஒளி தங்களுட் செல்லாதபடி இதயத்தை மூடிக்கொண்டனர். வெளியே எங்கும் வெளிச்சம் இருந்தாலும் உள்ளாகவோ காரிருளும் அந்தகாரமுமுண்டு.

இப்பொழுது அப்போஸ்தலன் தமது வழக்கம்போல் இதற்கு நேர்விரோதமான தன்மையை விளக்கி அதன்மூலமாய்த் தமது கருத்தை நன்குவிளக்கப் போகிறார்.

வாக். 9. **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் (நம்முடைய) பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

நாம் அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களில் ஒன்றையும் மறைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் தனித்தனியே அறிக்கையிட வேண்டுவது நமது பக்கத்தில் நாம் செய்யவேண்டிய கடமை (யாக். 5. 14.). இந்த நிபந்தனையை நாம் நிறைவேற்றினால் தேவனுடைய பூரண பிரமாணத்தின்படியே நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கும். அவர் இங்ஙனம் நமக்குச் செய்வது நமக்குத் தாட்சண்யங் காட்டியேனும் நாம் கெட்டுப்போமாறேனும் அன்று. ஆனால் தமது உண்மையின்படியும் நீதியின்படியும் அப்படிச் செய்கிறார். **நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிப்பதற்கு** (மன்னிக்கும்படியாகவே மூலபதம்.) **அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.** உண்மையா

யிருப்பது தேவலக்ஷணம் (2 தீமோ. 2. 13.). அவர் எவ்விஷயத்தில் உண்மையாயிருக்கின்றாரெனின் (1) தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற (எபி. 10. 23; 11. 11.), (2) தாம் ஆரம்பித்த இரக்ஷிப்பின் கிரியையை முடிக்க (1 தெச. 5. 24. 1 கொரி. 1. 9.), (3) தம்மை நம்பினோரைப் பாதுகாக்க (1 கொரி. 10. 3. 1 பேது. 4. 19.). ஆகையினால் தேவன் நமது பாவங்களை மன்னிப்பதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் (1) கிறிஸ்துவுக்குள் அதை நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். (2) தமது ஆவியின் மூலமாய் நமக்குள் இரட்சண்ய கிரியைகளை ஆரம்பித்திருக்கிறார். அவர் அதை முடிப்பார். (3) நாம் அவரிடத்தில் அறிக்கையிடுவதே நமக்கு அவர்மீதுள்ள விசுவாசத்தைக் காட்டுகிறது.

இவ்வாறு நமது பாவங்களை மன்னிப்பதில் அவர் இரக்கமுள்ளவராயிருப்பது மாத்திரமன்றி நீதியுள்ளவராகவுமிருக்கிறார். தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார் என்று வேதத்திற் கூறப்படும் இடங்களை ஆராய்வோமெனில் அங்கே இரண்டுவிதமான அர்த்தங்கள் இருக்கக் காண்போம்.

(1) தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார். ஏனெனில் அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறார். வேதத்திற் காணப்படும் ஆதாரங்கள் பலவும் அவருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் சத்தியமுமென்றே சாற்றுகின்றன. (வெளி. 16. 5, 7; 19. 2; 15. 3. யோவா. 5. 30; 7. 24.)

(2) தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார். ஏனெனில் அவரே பரீட்சிக்கப்பட்டு நீதியும் பரிசுத்தமும் உள்ளவரென்று அறியப்பட்டிருக்கிறார். அவர் நீதிபரராகிய வஸ்து (யோவா. 17. 25. 1 யோவா. 2. 29; 3. 12. வெளி. 22. 11.). நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டதின் மூலமாய்த் (நாம் கிறிஸ்துவின் மூலமாய்) தேவனோடு சம்பந்தப்பட்டுவிட்டபடியால், அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக ரட்சகர்நிமித்தம் நமது பாவக்கடனைச் செலுத்தித் தீர்த்துவிடுகிறார். சகலவிதமான நீதிகளும் அவரிலேயே முடிகின்றன. அவர் நமது பாவங்களை மன்னித்துவிடுகிறார். நாம் வெவ்வேறாக அறிக்கையிட்ட ஒவ்வொரு பாவத்தையும், அறிக்கையிட ஆசித்தும் அறிக்கை செய்ய இயலாதேபோன சகல பாவங்களையும் மன்னித்துவிடுகிறார். (சங். 32. 5. நீதி. 28. 13.)



அவர் நீதியின் பிழம்பாயிருப்பதினால் நாம் அவரது குமாரனுக்குள் அவருடன் இணைக்கப்பட்டிருக்கும் காரணம்பற்றி அவருடைய பரிசுத்தமான சொந்த சுபாவத்தையே நமக்குக் கொடுத்து நம்முடைய எல்லா அநீதியினின்றும் நம்மைக் கழுவிச் சுத்திகரித்துப் பாவக்கறைகளினின்று நம்மைக் கைதூக்கி இரக்ஷித்து நம்மைத் தூய்மையும் பரிசுத்தமுமுள்ளவர்களாக்கி பரிசுத்த ஆவியினால் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.

ஒரு இடத்தில் இயேசுவின் இரத்தம் நம்மைச் சுத்திகரிக்குமென்றும் மற்றுமோர் இடத்தில் தேவன் நம்மைச் சுத்திகரிப்பார் என்றும் பரி. அப்போஸ்தலன் கூறுவது கவனிக்கப்படத்தக்கது. 'தெய்வத்துவத்தின் ஊற்றாகிய ஆதிகாரணராயிருக்கிற (யோவா. 5. 26.) பிதாவானவர் விசுவாசிகளைத் தமது குமாரனின் இரத்தத்தின் மூலமாய்ச் சுத்திகரிக்கிறார்' என வெஸ்ற்காட் அத்தியக்ஷர் வியாக்கியானம் சொல்லுகிறார்.

பத்தாம் வாக்கியத்தைப் பார்த்தமாத்திரத்தில் எட்டாம் வாக்கியமே திரும்பவும் எழுதப்பட்டிருப்பதுபோல் நாம் எண்ணிக்கொள்ளலாம். பரி. யோவான் அப்போஸ்தலன் ஒன்றையே திரும்பவும் கூறுவதுபோல் காணப்பட்டாலும் அவை உண்மையில் அப்படித் திரும்பக் கூறப்பட்டவையாகா. 'நாம் பாவஞ்செய்யவில்லை' யென்கிற பத்தாம் வசனத்தில் காணப்படுகிற வாக்கியம் எட்டாம் வசனத்தில் காணப்படுகிற 'நமக்குப் பாவமில்லை' என்பதைப் போன்றதன்று. 'பாவமில்லை' என்பது பாவமுள்ள ஸ்திதியைக் குறித்தது. 'பாவஞ்செய்யவில்லை' என்பது பாவமான கிரியைகளைக் குறித்தது. இவ்வாறு சொல்லித் தப்பிக்கொள்ள நினைப்பதானது மனச்சாக்ஷியை மழுக்கித் தான் எக்காலத்திலும் பாவஞ்செய்யவில்லை என்றும் பாவம் என்றோ ஒன்றில்லையென்றும் கூறுமாறு செய்கிறது.

**வாக். 10. நாம் பாவஞ்செய்யவில்லை யென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்; அவருடைய வார்த்தை நமக்குள் இராது.** அப்படிப் பாவமில்லையென்று சொல்வது பயங்கரமான தேவதூஷணமாயிருக்கிறது. ஏனெனில் அப்படிச் சொல்வதானது தேவனைப் பொய்யராக்குகிறது (மூலபாஷைக் கருத்தும் இதனையே வற்புறுத்துகிறது.). அப்படிச் சொல்வது தேவனால் தம்முடைய வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டவற்றை மறுத்துரைத்தலாகும். எல்லாச் சமயக்கோட்பாடுகளிலுமுள்ள உண்மையை மறுத்தலாகும். எனவே கிறிஸ்து மரிப்பதற்கு அவசியமின்றெனவும், கிறிஸ்து மரித்த உண்மையை இன்றெனவும் கூறுவதாய்விடும். இவ்விதமாய் நாம் ஒளியும் உண்மையுமாய் விளங்கும் தெய்வத்தை இருளும் பொய்யுமுடையவரென இழித்துரைப்போம் என ஹாப்ட் ஐயர் சொல்லுகிறார்.

அப்படிச் சொல்லுபவனிடத்தில் தேவனுடைய வார்த்தையில்லை. உண்மையே உருவாயமைந்த தெய்வம் தம்முடைய உண்மையை மனிதன் அறிந்துகொள்ளக் கூடியவிதமாய் அவனுக்கு வெளிப்படுத்துகிறார். இயற்கையின் மூலமாயும், வெளிப்படுத்தலின் மூலமாயும், மனச்சாக்ஷியின் மூலமாயும் அவர் மனிதனோடு பேசுகிறார்.

மனிதனுக்குட் பிரவேசிக்கும் தேவனுடைய வார்த்தை 'நீ பாவஞ்செய்திருக்கிறாய்' என மனிதனை நோக்கிக் கூறுவதே அது மனிதனுக்கு அறிவிக்கிற முதல் விசேஷமாயிருக்கிறது. எனவே மனுஷன் பாவமில்லையென்று சொல்லும்போது அவர் வெளிப்படுத்தும் இவ்வுண்மையை முழுவதுமாய் மறுப்பதாகும். இவ்விதமாய் நம்முள் பேசும் அவருடைய வார்த்தையைப் பேசாதிருக்கச் செய்கிறோம். எல்லாவற்றிலும் மேலாய்த் தேவனுடைய வார்த்தையாகிய அவருடைய சுவிசேஷ வசனத்தை அவர் பேசாதிருக்கும்படி செய்கிறோம் (லூக். 5. 1; 8. 11. 21; 9, 28. அப். 4. 31; 6. 2. 7. முதலியன.). அன்றியும் தேவ



னுடைய ஜீவவார்த்தையாகிய அவருடைய குமாரனுடைய சத்தம் கேளாதபடி செய்கிறோம். (யோவா. 1. 1. 1 யோவா. 1. 1.)

முதலாம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இரண்டாம் அதிகாரத்தினும் எழுதிக்கொண்டுபோகிறார். எழுதுகிற சங்கதி நமது பாவத்தைப்பற்றியே.

பரி. யோவான் அப்போஸ்தலன் 'சொல்லியும்' 'சொல்வோமானால்' 'சொல்வோமானால்' என மூன்று வாக்கியங்களிற் கூறி (வாக். 6. 8, 10.), நாம் சொல்லக்கூடிய மூன்று தப்பிதமான காரியங்களைக் கண்டித்தார். ஆறும் எட்டாம் வாக்கியங்களையடுத்து ஏழாம் ஒன்பதாம் வசனங்களில் நாம் சொல்லக்கூடிய தப்பிதமான காரியங்களுக்கு மாறாக நமக்கு இருக்கவேண்டிய உண்மையான காரியங்கள் இன்னின்னவெனக் காட்டினார்.

இனிப் பத்தாவது வசனத்தையடுத்தும் அதற்குச் சமாதானமானவோர் வாக்கியத்தைச் சொல்லப்போகின்றாரோ? அன்று. இதுவரை யெழுதியதுபோலெழுதின் 'நாம் பாவஞ்செய்தால்' என அடுத்த வாக்கியத்தை யாரம்பித்தல்வேண்டும். ஆனால் கிறிஸ்தவன் பாவஞ்செய்வான் என்னும் அபிப்பிராயத்தை க்ஷணநேரமும் நினைக்கவும்படாது. எனவே துவக்கத்தில் பாவமே செய்யக்கூடாது என்பதை அழுத்திக்கூறிப் பின்னும் வழக்கம்போல் 'நாம்' என்று சொல்லாது அதற்கு மாறாய் 'ஒருவன்' எனக் கூறி 'ஒருவன் பாவஞ்செய்வானானால்' என்கிறார்.

இதுகாறும் தான் எழுதியதையும் இனி எழுதப்போவதையும் ஒருக்கால் தமது பிள்ளைகள் தப்பிதமாய் அர்த்தப்படுத்திக்கொள்வார்களோவெனும் பயமும் அவருக்குள் எழுகிறது. நமக்குப் பாவமில்லையென்றும், நாம் பாவம் செய்யவில்லையென்றும் சொல்லுவது அவ்வளவு பெரிய தப்பிதமெனின், அவர்கள் தாங்கள் பாவமுள்ளவராகவும், பாவஞ்செய்கிறவராயுமே இருக்கவேண்டுமென நினைத்துக்கொள்வார்களோவெனச் சந்தேகிக்கிறார். பாவத்தின்மேல் முழுதும் ஜெயங்கொள்ள முடியாதெனவும் பாவத்தை ஜெயிக்கப் பிரயாசிப்பது சித்தி

யாகாத ஓர் காரியமெனவும் கருதியே கிறிஸ்தவர் பலர் அரைமனதோடும், அவிசுவாசத்தோடும், அற்ப முயற்சியுடனும் பாவத்துக்காக மனஸ்தாபப்படுகின்றனர். பாவமில்லாமலே யிருத்தல் அரிதெனக் கருதியே முழுதும் பாவத்தில் ஜீவிக்கும் பேர்க் கிறிஸ்தவரும் பலராயினர். வாஸ்தவம், ஒருவிதமாகக் கஷ்டந்தான். ஆனால் நாம் பாவமில்லாமல் ஜீவிக்க முடியுமாவென யோசியாமல் நம்மை யகப்படுத்துகிற ஒவ்வோர் பாவத்தையும் தனித்தனியே ஜெயிக்கக் கூடுமாவென யோசிக்கவேண்டும். நாம் அறிந்துசெய்கிற ஒவ்வோர் பாவத்தையும் நாம் கிறிஸ்துவுக்குள் ஜெயிக்கலாம். ஜெயித்துவிடலாம் என நமது சத்திய வேதமாகிய விவிலியம் பறைசாற்றுகின்றது. எனவே நாம் விசுவாசத்தோடு 'தேவனே இந்த நாளில் நான் பாவஞ்செய்யாதபடி என்னைக் காத்தருளும்' என ஜெபிக்கலாம். ஆதலினால்தான் பரி. யோவான் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

வாக். 1, 2. **என் சிறுபிள்ளைகளே நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்.** 'ஒவ்வொருவருக்கும் பாவம் உண்டென்பது உண்மையாதல்பற்றி அப்போஸ்தலன் மிகுந்த பரிவுடன் தம்மையோர் தகப்பனாகப் பாவித்துப் பிதாவடைவாக 'என் பிள்ளைகளே' என்கிறார்' என விரிப்பார் வெஸ்ற்காட் அத்தியக்ஷர். கிறிஸ்துவானவர் தமது அருமைச்சீஷரை அன்புடன் அழைத்ததும் அவ்வாறே (யோவா. 13. 33.). பரி. பவுல் அப்போஸ்தலன் கலாத்தியரையும் அங்ஙனமே யழைத்தார். (கலா. 4. 19.)

'நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு' என்பது 'நீங்கள் பாவமான எச்செய்கைகளையும் செய்யாதபடிக்கு' எனப் பொருள்படும். ஒருபுறம் பாவத்தையும் பாவத்தில் விழுதற்கான எதுவையும், மற்றொருபுறம் பாவத்தின் பரிகாரத்தையும் அவர்களுக்குப் போதித்த நோக்கம் என்னையெனின், அவர்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக குற்றமற்ற 'மனச்சாக்ஷியையுடையவர்களா யிருக்குமாறேயாம். பாவஞ்செய்யாமலிருக்கும் பூரண' நிலைமையையே அவர்களுக்குமுன் நிறுத்துகிறார். (5. 6.)



நாம் நம்மைச் சுயமாகவே கிறிஸ்துவுக்கு முழுவதுமாய் தத்தம் செய்துவிடின் நாம் ஒளியில் இருக்கிறவர்களாவோம். அப்பொழுது 'அவர் நம்மை இடறாதபடி (பாவஞ்செய்யாதபடி) காக்க வல்லவராயிருக்கிறார். நாமோ அந்தகார அதிகாரியோடு இன்னும் கொடும்போர் புரிந்து நிற்கிறோம்.' மேலும் 'நமது பலவீன சுபாவத்தினிமித்தம் நாம் எப்பொழுதும் நிமிர்ந்து நிற்கவும் வலியற்றிருக்கிறோம்.' நாம் பாவஞ்செய்தது நமது குற்றமேயாகும். நம்முடைய ஆண்டவர்மீது முழு நம்பிக்கையோடு அவரை நோக்கியிருந்தால் நாம் பாவத்தில் விழுந்திருக்க மாட்டோம். விழுந்தோமேயானால் அவரை நேசித்து அவரையே நமக்காகப் பரிந்து பேசுகிறவராகப் பற்றிக்கொண்டு, உத்தம மனஸ்தாபத்துடன் அவரைக் கிட்டினால் நமக்குப் பாவமன்னிப்புண்டு.

**ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராகிய இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.** பரி. யோவான் இவ்வாக்கியத்தை எழுதுகிற விதம் கவனிக்கப்படத்தக்கது 'ஒருவன் பாவஞ்செய்தால் அவனுக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.' என்பதற்குப் பதிலாக, நமக்காக என எழுதுகிறார். பாவஞ்செய்தவனைத் தனியாக விட்டுவிடுவது நம்முடைய அப்போஸ்தலனுக்கு ஒவ்வாது. பாவஞ்செய்தவன் தமது 'சிறுபிள்ளைகளின்' கூட்டத்தைச் சேர்ந்தவன். எல்லோரும் ஏககுடும்பத்தவராவர். எனவே ஒருவன் பாவஞ்செய்தால் எல்லோரும் அவனுடன் சேர்ந்து அவனுக்காக மன்றாடவேண்டும். அன்றியும் பரி. யோவான் அப்போஸ்தலன் தமக்கும் தமையொத்த மற்ற அப்போஸ்தலருக்குங்கூட பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்க வேண்டியதென்பதையும் 'நமக்காக' என்பதில் அடக்கியே பேசுகிறார்.

இனி பரிந்து பேசுகிறவர் என்பதின் பொருளை யாய்வோம். இங்கே வருகிற மூலபாஷைப் பதம் புதிய ஏற்பாட்டில் ஐந்து தடவை வழங்குகிறது. ஐந்து தடவையும் பரி. யோவான் அப்

போஸ்தலனே அவ்வார்த்தையைச் சொல்லுகிறார் (யோவா. 14. 16. 26; 15. 26; 16. 7-லும் இவ்வாக்கியத்திலும்) சுவிசேஷத்தில் இப்பதம் பரிசுத்த ஆவியைக் குறிக்க வழங்குகிறது. மேலும் 'பரிந்து பேசுகிறவர்' எனக் கூறாது 'தேற்றரவாளன்' என மொழிபெயர்த்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியும் நமக்காகப் பரிந்து பேசுகிறவரே (ரோ. 8. 20, 27.). அவர் நமக்காகத் தேவனிடத்தில் பரிந்து பேசுகிறதேயன்றித் தேவனுக்காக நம்மிடத்திலும் பரிந்து பேசுகிறார். மூலபாஷைப் பதத்தின்படி பரிந்து பேசுகிறவர் என்பது நமக்கு யோசனைகூறி, நமக்கு உதவிசெய்து, நமக்காகப் பரிந்து பேசுதற்கு நாம் நம் மண்டையில் அழைக்கும் ஒருவனைக் குறிக்கும். எனவே அப்பதத்தின்படியே, நாம் நமது துன்பநேரத்தில் இயேசுவை நோக்கிக் கூப்பிடவேண்டுமென்றும், அவர் நமது காரியத்தைப் பார்த்துக்கொள்ளுவாரென்றும் விளங்குகிறது. அப்போஸ்தலன் யூதருக்கு இவ்வார்த்தையைச் சொல்லும்போது அவர்கள் நியாயஸ்தலத்தில் பரிந்து பேசுகிறவனையேயன்றி மகா பரிசுத்த ஸ்தலத்தில் தங்களுக்காகப் பரிந்து பேசும் பிரதான ஆசாரியனையும் ஒப்பிட்டுப் பொருள்கொள்வார். பிரதான ஆசாரியன் பன்னிரு கோத்திரத்தாருடைய நாமங்களும் தீட்டப்பெற்ற மார்ப்பதக்கத்தை அணிந்துகொண்டு, பரிசுத்த ஸ்தலத்தில் செல்லும்போது அவன் சமஸ்த இஸ்ரவேலருக்காகவும் பரிந்து பேசுகிறவனாக எண்ணப்படுவான். நம்முடைய கர்த்தர் உலகில் வசித்தகாலத்திலிருந்த ஓர் யூத நூலாசிரியர், பிரதான ஆசாரியனைப்பற்றி எழுதும்போது, பரிந்து பேசுகிறவன் என்னும் அதே மூலபாஷைப் பதத்தையே வழங்குகிறார். கிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியர். அவர் தம்முடைய ஜனங்களின் நாமங்களைத் தமது மனதிற்கொண்டவராய்த் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறார். நமக்காகப் பரிந்து பேசுபவர் அவரே, அவர் எவ்விதமாக நமக்காய்ப் பரிந்து பேசுகிறார் என்பதனை யறியோம். எனினும் அவர் ஜீவித்திருக்கிறாரென்றும், அவர் நமக்காகச் செய்கிற பெரிய வேலை நமக்காகத் தேவ



னிடத்தில் பரிந்து பேசுவதேயென்றும் நாம் அறிவோம். (எபி. 7. 25; 9. 11; 12. 24.)

தேவன் நமது பாவங்களை மன்னிப்பதில் நீதியுள்ளவராயிருக்கிறார் என்று பார்த்தோம். அதேபிரகாரமாகக் கிறிஸ்துரட்சகர் நமக்காகப் பரிந்து பேசுவதிலும் நீதியுள்ளவராகவேயிருக்கிறார். **நீதிபரராகிய இயேசுகிறிஸ்து.** 'பரிந்து பேசுகிற நீதிபரராகிய ஒருவர் அநீதியான காரியங்களுக்காகப் பேசமாட்டார்.' அவர் பரிந்து பேசுகிற நீதியுள்ளவர் என்பது அவரது திரு அவதாரம், அவரது பிராணத்யாகம் முதலியவற்றைச் சார்ந்திருக்கிறது. அவர் மனுஷனாக எவ்வளவு நீதிபரராய் விளங்கினார் என்பது நாம் இங்கே கவனிக்கவேண்டிய முக்கிய கருத்து. அவர் நியாயப்பிரமாணத்தைச் சாதாரண மனுஷனைப்போலன்றி மனுஷருக்கெல்லாம் தலையான மனுஷனாகவும், தமக்குள் மானிட ஜாதியார் அனைவரையும் ஒன்றாய் இணைக்கப்போகிற பூரண மனுஷனாகவும் நிறைவேற்றித் தீர்த்தார் (கலா. 3. 28. புதுத்திருத்தல். எபே. 4. 13.). எனவே அவர் அதை மனுஷர் பொருட்டாகவே நிறைவேற்றினார் (ரோ. 5. 19; 10. 4.). அவர் நீதியுடன் பரிந்து பேசுகிறவராயிருக்கிறபடியால், தேவனுடைய நீதிக்கு மாறாகச் செய்ய வேண்டுமெனப் பரிந்து பேசுகிறதில்லை. நீதி தம்மில் நிறைவேற்றப்பட்டபடியால், அதேபிரகாரமாய் நித்திய ஜீவனையடைந்த தமது ஜனங்களிலும் அது தமக்குள் நிறைவேற்றப் படவேண்டுமெனவே பரிந்து பேசுகிறார். '**அவரே நமது பாவங்களை நீக்குகிற பாவ நிவாரணம்**' (பாவ நிவாரணத்தைப்பற்றி அனுபந்தம் பார்க்க.)

மற்றும் கவனிக்கவேண்டிய இரு சிறு காரியங்கள்தானுள. 'பிதாவினிடத்தில்' என மொழிபெயர்க்கப்பட்டது மூலபாஷையில் 'பிதாவுக்கு நேராக' என வரும். இவ்வாறு வழங்கிய இவ்விடைச்சொல்லின் நோக்கமென்னவெனில், நாம் பிரிக்க முடியாமல் ஏகவஸ்துவாய் விளங்குகிற திரித்துவத்தின் ஒற்றுமையைப் பிரித்து வெவ்வேறாகப் பொருட்படுத்திக் கொள்

ளாதிருக்குமாறேயாம். பரிந்து பேசுகிறவர், மன்னிக்கும் பிதாவுடன் ஒன்றாயிருக்கிறார். (1. 2-ன் வியாக்கியானம் நோக்க.)

கிறிஸ்துவினுடைய பாவ நிவாரணத்தைப்பற்றிப் பேசும்போது பரி. யோவான் அப்போஸ்தலன் இரக்ஷகரின் மகா வல்லமையுடைய இரக்ஷிப்பின் கிரியை அரைகுறையாயிருப்பதுபோல் நாம் எண்ணிக்கொள்ளக்கூடாதென்று எச்சரிப்பதுபோல் பேசுகிறார். நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும். கிறிஸ்துவுக்கு முன்னிருந்தவரும் பின்னிருந்தவரும் அவருடைய சுவிசேஷத்தை யறிந்தவரும் அறியாதவருமாகிய சமஸ்த ஜனங்களும் இந்த மீட்பில் பங்குபெறத் தக்கவர்கள். உண்மையில் கிறிஸ்தவராயிருப்பவர் பரிசுத்தரேயாவார். கிறிஸ்துசபையிற் சேராதிருக்கும் உலகினர் எல்லோரும் பாவிகள் (5. 9.). 'கிறிஸ்துவின் பாவநிவாரணம் எல்லாருக்கும் உரியது, எல்லாவிடங்களிலும், எல்லாக்காலத்திலும், எங்கெங்கே பாவநிவாரணம் அவசியமோ அங்கெல்லாம் அவருடைய பாவநிவாரணம் செல்லத்தகும்' (4. 14. யோவா. 1. 29; 4. 42; 12. 32.) என்று வெஸ்றகாட் அத்தியக்ஷர் சொல்லுகின்றார்.

## கிறிஸ்துவைப் பின்பற்றித் தேவனுக்குக் கீழ்ப்படிதல்.

**(3) அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். (4) அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. (5) அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். (6) அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.**

அவரை அறிவது தான் முக்கியமான சங்கதி என்று கள்ளப்போதகர் திட்டமாகக்



கூறிவந்தனர். ஒருவன் இக்கள்ளப்போதகர் கருதியபடி தேவஞானத்தையறிந்து தெளிவடைந்திருப்பானெனில், அவன் தான் எவ்விதமாக ஜீவிக்கவேண்டுமென்பதை ஒரு சிறிதும் கவனிக்கவேண்டியதேயில்லை. நமது அப்போஸ்தலனோ அப்படிப்பட்ட அறிவு உண்மையான அறிவன்றென்று போதிக்க விரும்புகிறார். தேவனைப்பற்றிய உண்மையான அறிவடைந்திருப்பது மெய்யானால் ஜீவியத்தில் பரிசுத்தம் காணப்படவேண்டும். அன்றேல் அவ்வறிவு பயனற்ற உயிரற்ற அறிவேயாகும். ஆதலினால் அப்போஸ்தலன் ஒவ்வொருவரும் தேவனுடைய அறிவை அடைந்திருக்கிறார்களாவெனச் சோதித்து அறிந்துகொள்ள விரும்புகிறார். இவ்வாறு அறிந்துகொள்வது வருத்தமான காரியமன்று. என்ன? தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடப்பதே அவனறிவை யடைந்ததின் பயனைப் பெற்றதற்கு அடையாளமுமாகும்.

வாக். 3. **அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.** 'தெய்வத்தையறியும் மெய் அறிவு இருதயத்திடையே யறியப்படும் அறிவாம்.' தேவனை நேசிக்கிறதினால் அது கீழ்ப்படியவுஞ் செய்யும். ஏனெனில் தேவனுக்குக் கீழ்ப்படிந்தாலன்றி யவரை யறிய முடியாது: மூளையினால் தேவனைப்பற்றி கிரகித்தலும், அவரதருட் பெருங்குணங்களை வியத்தலும், அவரது அதிசயக் கிரியைகளைக் கண்டு ஆனந்தித்தலும் போதுமானதன்று. (3. 7. மத். 7. 21. யோவா. 8. 31; 14. 15. 21; 15. 10.)

தேவனுக்கு முன்பாக நமது நிலைமை எப்படியிருக்கிறதென்று நாம் **திட்டமாயறிந்திருக்க** வேண்டுமென அப்போஸ்தலன் விரும்புகிறார். இந்நிருபமே **அறிதலைப்** பற்றிய நிருபமாம். நமது ஆத்ம நிலைமை யித்தகைத்து என்று அறிதற்கு அநேக சாதனங்களை இந்நிருபத்தில் ஒன்றன்பின்னொன்றாய் எடுத்து எழுதுகிறார். அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் 'இரக்ஷிக்கப்பட்டவர்களோடு' சேர்ந்திருக்கிறார்களா அல்லது 'அழிவுக்

கேதுவானவர்களோடு' சேர்ந்திருக்கிறார்களா என்றும் கிறிஸ்துவோடு ஐக்யப்பட்டு ஜீவிக்கிறார்களாவென்றும் தமக்குள் நிச்சயம் பெறாதவர்களாயிருக்கின்றனர். அத்தகையார் தம் உண்மை நிலையை யறிந்துகொள்ளும்பொருட்டே இதை எழுதுகிறார். அதையறிதல் எங்ஙனம்? நிருபத்திற் காணலாம்.

| | | |
|---|---|---|
| 2. 3. நான் தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்ளுகிறேனா? அதாவது அவற்றைக் கைக்கொள்ளவேண்டுமென்பதே என் இடைவிடாத ஆசையும் நோக்கமுமாயிருக்கிறதா, அப்படியாயின் | நான் தேவனை அறிவேன் என்பது | எனக்குத் தெரியும். |
| 2. 5, 6. நான் கிறிஸ்துவைப்பின்பற்றுகிறேனா? அப்படியாயின் | நான் அவரில் நிலைத்திருக்கிறேன் என்று | எனக்குத் தெரியும். |
| 3. 24. 4. 13. அவர் எனக்குக் கொடுத்த அவருடைய ஆவி என்னிடமிருக்கிறதா? அப்படியாயின் | நான் அவரிலும் அவர் என்னிலும் நிலைத்திருக்கிறோமென்பது | எனக்குத் தெரியும். |
| 5. 2. தேவனை நேசித்து அவருடைய கற்பனைகளின்படி செய்கிறேனா? அப்படியாயின் | நான்தேவனுடைய பிள்ளைகளை நேசிக்கிறேன் என்பது. | எனக்குத் தெரியும். |

'அறிதல்' என்பதற்கு மூலபாஷையில் இவ்வாக்கியங்களில் வழங்கப்பட்டிருக்கும் பதம் வரவர வளர்ந்துகொண்டேயிருக்கும் அறிவைக் குறிக்கும். அவ்வறிவு ஜீவியத்தின் அனுபவத்தினாலும் காலத்துக்குக் காலம் மனதிடை நிகழ்வனவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதினாலுமே உண்டாகும். அவ்வகை யறிவினால்



தான் நாம் ஓர் ஆளோடு அல்லது ஏதேனும் ஓர் விஷயத்தில் அதிகமதிகமாய்ப் பழகுகிறோம். இது ஒரு காரியத்தைப்பற்றி நாம் ஒருதடவை யறிந்து அப்படியே அதனை நம் ஞாபகத்தில் வைத்திருக்கும் அறிவைப்போன்றதன்று. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதினால் நாம் அடையும் அனுபவமானது அதனோடுகூட தேவனைப்பற்றி யறிகிற அறிவையும் நமக்குப் போதிக்கும்.

'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல்' என்னும் வாசகத்தைப் பரி. யோவான் அப்போஸ்தலன் அதி சாதாரணமாய் வழங்குகிறார். மற்ற விடங்களில் புதிய ஏற்பாட்டில் அவ்வாசகம் மூன்றே தடவைதான் வருகிறது. 'கைக்கொள்ளுதல்' என்னும் வாசகம் சாதாரணமாய்ச் செய்வதை மாத்திரம் குறிக்கவில்லை. உன்னுடைய சிநேகிதன் ஒருவன் நீ அவனை நினைத்துக்கொள்ளும்படியாக உனக்கு ஒரு புஸ்தகத்தைக் கொடுக்கலாம். அதே மாதிரியாகவே நீ ஒரு காரியத்தை எப்பொழுதும் செய்துவரும்படியாகவும் உன்னைக் கேட்டுக்கொள்ளலாம். நீ அந்தப் புஸ்தகத்தை ஏற்றுக்கொண்டு பத்திரமாக வைத்துக்கொள்ளும் மாதிரியாகவே, அவனது கட்டளையையும் ஏற்றுக்கொண்டு பத்திரமாய்க் காத்து நடப்பாய். தேவனுடைய கற்பனைகளும் இவ்வாறே காக்கப்படவேண்டும். 'அதைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும், அடிக்கடி அதைப்பற்றி நினைவுகூரவேண்டும், ஒரு சிநேகிதனுடைய கட்டளையைப்போல அதைப் பாதுகாத்து நடக்கவும் வேண்டும்.' என மாரிஸ் ஐயர் சொல்லுகிறார்.

இனிப் பரி. யோவான் அப்போஸ்தலன் தனது வழக்கம்போல் இதற்கு நேர் விரோதமானதை யெடுத்து அதனை மறுத்து இப்பொழுது கூறியதனையே நன்கு தெளிவிப்பார்.

**வாக். 4. அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறன். அவனுக்குள் சத்தியமில்லை.** இவ்விடத்தில் 'அவரை' என்பது பிதாவையோ அல்லது குமாரனையோ

எவனைக் குறிக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், அதிலே யாதொரு வித்தியாசமுமில்லை. (முந்திய வாக்கியத்திலும் அப்படியே) ஏனெனில், பிதாவானவர் குமாரனுக்குள் குமாரனின் மூலமாய்த்தான் அறியப்படுகிறார் (யோவா. 14. 9.). இவ்வாக்கியத்துக்கும் முதலாம் அதிகாரம் ஆறும் வாக்கியத்துக்கும் அதிக ஒற்றுமையிருக்கிறது.

| | |
|---|---|
| 1. 6. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், | 2. 4. அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், |
| இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால்....... | அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன், |
| பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்....... | பொய்யனாயிருக்கிறான். |
| சத்தியத்தின்படி நடவாமல்.. | அவனுக்குள் சத்தியமில்லை. |

'பரி. யோவான் அதிகக் கண்டிப்பாய் எழுதுகிறார். ஏனெனில் இவ்விதமான பொய் அவர்காலத்துச் சபையுள் பாவிக்கொண்டிருந்தது. அவருக்குப் பிந்தியகாலத்திலும் அது அதிகமதிகமாய்ப் பாவிக்கொண்டே போகுமென்பதையும் அவர் அறிந்தார்' என (மாரிஸ்) ஐயர் சொல்லுகிறார். கள்ளக் குருக்கள் போதித்ததென்ன? 'நாங்கள் தேவனை அறிந்திருக்கிறோம். எங்களைப்போலும் தேர்ந்த அறிவு இல்லாத சாதாரண கிறிஸ்தவர்தான் தங்கள் தங்கள் ஒழுக்கத்தைக் கவனித்துத் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். எங்களுக்கோ அது அவசியமில்லை. நாங்கள் எங்கள் இஷ்டம்போலும் செய்யலாம். எங்களுடைய மாமிச இச்சைகளை நாங்கள் அடக்கவேண்டிய அவசியமுமின்று.' என்ன துணிகரமான கள்ளப்போதனை; நமது அப்போஸ்தலன் தேவனுடைய கற்பனையை அசட்டைசெய்தும், தான் தேவனை அறிந்திருக்கிறேனென்று சொல்பவனைப் பொய்யனென்று அழைக்கிறார். இவ்வாறு அழைப்பதுமன்றி இன்னும் அவனை இழிவுபடுத்துமாறு '**அவனுக்குள் சத்தியமில்லை**' எனத் தாம் முன்



கூறியதனையே திரும்பவும் பலமாய்ச் சொல்லுகிறார். இவ்வாறு சொல்வதினால் அவனுடைய நடத்தை தவறுடைத்தென்றும், அவனுடைய ஜீவியம் மெய்யையன்று பொய்யையே தனது நோக்காக உடைத்ததெனவும் கூறுகிறார் (எம்பிரான் சாத்தானைக்குறித்துக் கூறியதுமவ்வாறே யோவா. 8. 44.). இனி இப்பொய்யனுக்கு மாறாக தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு நடப்பவனுடைய ஸ்திதியைக் காட்டுகிறார்.

வாக். 5. **அவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.** மூலபாஷையின்படி '**கைக்கொள்ளுகிற அவன்**' என அவன் எனும் பதத்தை வற்புறுத்திக் கூறவேண்டும். இங்கே கூறப்படுகிறவன் தேவனிடத்தில் அன்புகூருகிறவன். இப்படிப்பட்டவன் அவருடைய பிரமாணங்களைக் கடினமான சட்டங்களாகவல்ல, தான் நேசிக்கிற ஒரு சிநேகிதனுடைய அன்பின் மொழியாகக் கொள்ளுவான். தேவனுடைய சித்தம் இன்னவாறு இருக்கிறதென்று தினந்தோறும் அவனுக்குச் சொல்லுகிற தேவ ஆவியானவருடைய சத்தத்திற்குப் பிரீதியோடு செவிகொடுத்து சந்தோஷத்தோடு கீழ்ப்படிவான். எனவே 'அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல்' என்பதினும் 'அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதல்' என்பது நம்மைக் கர்த்தருக்குள் அதிக அந்நியோந்நியமுடையவர்களாக்குகிறது.

அப்போஸ்தலன் 'மெய்யாக' எனக் கூறி அப்படிப்பட்டவனுடைய பாக்கியமான ஆத்மீக நிலைமையின் உண்மையை வற்புறுத்துகிறார். மற்றவர் அவனுடைய ஆவியின் நிலைமை பாக்கியமானதென நினையாதிருக்கலாம். அவனே அதை அறியாமலுமிருக்கலாம். எனினும் அவன் பாக்கியமான சிறந்த நிலைமையில் இருக்கிறான். **அவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.** பரி. யோவான் விசுவாசிகளுக்கு அவர்களுடைய அரைகுறையான, ஜீவியத்

தைக் காட்டாமல், அவர்களுக்குள் தேவனால் அருளப்பட்டிருப்பதும், அவர்கள் பூரணப்படும்போது வெளிப்படுவதுமான பூரணமான ஜீவியத்தைக் காட்டுகிறார். இவ்விடத்தில் தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிற மனுஷனிடத்தில் பூரணப்படும் தேவனுடைய அன்பைப்பற்றிப் பேசுகிறார். ஒவ்வொரு விஷயத்திலும் அணுவும் தவறாது தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதே பூரணமாகும். எனினும் கிறிஸ்தவன் எவனும் பூரணமானவனல்ல (பிலி. 11. 3. 12. யாக். 3. 2). மனுஷனுடைய இதயத்துட்சென்று (ரோ. 5. 6.), மனுஷன் தன்னுடைய அன்பினால் தேவனுடைய அன்பைக் காணுமாறு செய்த அந்த தேவனுடைய அன்போ பூரண அன்பு. சிறிது பாகத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே முழுமையையும் அறிந்துகொள்ளக் கூடியவரும், அற்பமான ஆரம்பத்தை நோக்கியமாத்திரத்தில் அது இன்னபிரகாரம் பூரணப்படுமென்பதை அறிந்துகொள்ளக் கூடியவருமாகிய அவரிடத்தில் இந்த மனுஷனுடைய அன்பும் பூரணப்பட்டதாகக் காணப்படுகின்றது. இப்படியே கிறிஸ்தவர்களைப்பற்றி 'இரட்சிக்கப்பட்டவர்கள்' என்றும், 'இரட்சிக்கப்படுகிறவர்கள்' (இப்பொழுதுதான் இரட்சிக்கப்பட்டுக் கொண்டு வருகிறவர்கள்) என்றும் பேசுகிறோம் (1 கொரி. 2. 6. பிலி. 3. 13.). இங்கே பரி. யோவான் அப்போஸ்தலன் 'பூரணப்படுதல்' எனும் பதத்தைத் தெரிந்துகொண்டார். ஏனெனில் இப்பதத்தையே அந்தக் கள்ளப்போதகர் தப்பிதமான அர்த்தத்தில் வழங்கிவந்தனர். அவர்கள் கொள்கைப்படி 'பூரணப்பட்ட மனுஷன்' யாரெனின் அவர்களால் ஞானம் என்று சொல்லப்பட்டதை யறிந்தவனே. பரி. யோவான் சொல்வதென்னவெனின், தேவனுடைய அன்பில் பூரணப்பட்ட மனுஷன் யாரெனின் அதை அறிந்தவனல்ல **அதின்படி செய்கிறவனே.** அதாவது அறிந்து செய்கிறவனேயாம். கடவுளுடைய ஞானம் கற்றவர்க்கும் சமர்த்தருக்கும் மாத்திரமன்று. அறிவீனர்க்கும் சாதாரண மனிதர்க்கும் புலப்



படுவதாகும். (வேதாந்தத்தின்படி தேவனைப்பற்றி யறிதலை அனுபந்தத்தில் பார்க்க.)

பரி. யோவான் தேவனைப்பற்றி யறிதலுக்குரிய அடையாளமாக தேவனுடைய கற்பனைகளை அதாவது அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதல் எனக் கூறினார். இனி தேவனோடு ஐக்யப்பட்டதன் அடையாளமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றலை அதாவது அவரைப்போல் நடத்தலைப்பற்றிச் சொல்லப் போகிறார்.

வாக். 6. **நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.** எல்லாவஸ்துக்களும் அவரால்தான் இருக்கின்றன. எல்லாமனிதரும் 'அவருக்குள்' இருக்கின்றனர். 'அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்' (அப். 16. 28.). இது ஒருவாறு வேதாந்தக் கொள்கைக்கு ஒத்திருப்பினும், அதிலுள்ள தப்பிதத்தை மறுப்பதாயிருக்கிறது. ஏனெனில் உலகிலுள்ள எல்லா சிருஷ்டிகளுள்ளும், மனிதன் ஒருவனே தான் தேவனுக்குள் இருக்கிறதாக அறியக்கூடும். அதிகமாய் ஆழ்ந்து யோசிக்குமிடத்து, தன்னுடைய ஜீவியம் தேவனால் நடத்தப்பட மனுஷன் எவ்வளவுக்கு இடம் கொடுக்கிறானோ, அவ்வளவுக்கு மனுஷனுடைய ஆவி தேவனில்தான் இருக்கிறது. மனுஷன் முழுவதுமாய்த் தேவனில் இருப்பதற்கு இவன் அவருக்குள் நிலைத்திருக்கவேண்டும். அவ்வாறு இவன் தானாக மனதார அவரில் நிலைத்திருந்து, இப்படியே தானாகவே எப்பொழுதும் அவரில் நிலைத்திருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்படி நிலைத்திருப்பதன் பயனாக பரிசுத்த ஜீவியம் என்பதுண்டாகும். நிலைத்திருப்பதை யறிதற்கு, அந்தப் பரிசுத்த ஜீவியமே சாக்ஷியாகும். கிளையானது திராட்சச்செடியோடு சேர்ந்திருக்கிறது (யோவா. 15.). என்பதை அது கனி கொடுப்பதினால் அறியலாம். செடியிருத்தலின் காரியமே கனியாம். அப்படியே மனிதன் தேவனில் (கிறிஸ்தவன்

கிறிஸ்துவில்) நிலைத்திருத்தலின் பயன் பரிசுத்தம், 'ஆவியின் கனி' அவர் நடந்தபடி நடக்கும் கிறிஸ்துவைப்போன்ற ஜீவியம், ஆகிய இவைகளே. ஆறும் வாக்கியத்தில் 'அவருக்குள்' எனும் பதம் மூலபாஷையில் 'கிறிஸ்துவுக்குள்' என்பதைக் குறிக்கிறது.

நாம் அவருடைய முன்மாதிரியையே பின்பற்றவேண்டும். அதாவது, அவர் எப்படி தேவனுடைய சித்தத்திற்கு அடங்கியும், தாழ்மையோடும், பிறருக்காகச் சுயவெறுப்போடும் நடந்தாரோ, அதே பிரகாரமாகவே நாமும் ஜீவிக்கவேண்டும். (மத். 2. 29. யோ. 13. 15. ரோ. 15. 2, 3. எபே. 5. 1, 2. பிலி. 2. 5–8. எபி. 12. 2. 1 பே. 2. 21.)

இதுகாரணம்பற்றியே நாம் அவர் செய்கையிலும், போதகத்திலும் அவருடைய **நோக்கமும் கருத்தும்** எப்படி யிருந்ததென்று அறிந்து, அவருடைய பரிசுத்த ஜீவியத்தைப்பற்றியே இடைவிடாது கவனத்தோடு சிந்தனை செய்யவேண்டும்.

இதுவே நாம் தன்னையும் உலகையும் வெறுப்பதாகிய நமது யோகாப்பியாசத்தின் நோக்கம். இதுவே தேவனோடு ஐக்கியப்படுதலின் முடிவு. இவ்வாறு தன்னையும் உலகையும் வெறுப்பது உலகிலிருப்பதால் விளையும் துன்பங்களையும், ஜீவியத்தின் கஷ்டங்களையும் விட்டு நீங்கித் தானறியாத நிஷ்டையில் தேவனோடு கலந்து போவதற்காகவன்று. ஆனால் தேவனோடு அதிக நெருக்கமாக ஜீவித்து, அவருடைய அன்பினால் ஏவப்பட்டு மற்றவருக்காக நாம் கஷ்டத்தை யநுபவிப்பதற்கே. இவ்வாறு கஷ்டத்தை யனுபவித்துத் தீர்ந்தபின், அவ்வாறு அனுபவித்தவருக்கு எத்தனை மகிழ்ச்சி யிருக்குமென்பதை அதனை ருசித்தவர் அறிவாரேயன்றி பிறர் அறியார். (வெளி. 21. 3, 4.)

தேவனுக்குள் நிலைத்திருப்பதுபோல் பாராட்டுவது மாத்திரம் போதுமானதன்றென நமக்குத் திரும்பவும் ஞாபகப்படுத்துகிறார். நாம் அவருக்குள் நிலைத்திருப்பதாகச் சொன்னால், நாம் தேவனுக்கு ஒரு விஷயத்தில் கடனாளிகளாக இருக்கி



றோம். அதாவது நாம் வெளியாகப் பாவனை பண்ணுகிறபடியே உண்மையில் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களா யிருக்கவேண்டும். இது ஒன்றே தேவனுக்குத் திருப்தியை யுண்டு பண்ணும். (மத். 7. 21–23.)

**அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.** திட்டமானதும், தேர்ச்சியடையக் கூடியதும், நிலைபெற்றிருக்கக்கூடியதுமான அத்தகைய நேர்மையான ஜீவியத்தை நாம் சிந்தித்துப் பார்ப்பது நன்று. 'கிறிஸ்துவின் ஜீவியமே நடமாடித் திரிதல்தான் (யோ. 7. 1; 11. 9, 10. லூக். 13. 33.)......ஜீவியமே ஒரு நடையென்றறிவதே உத்தமம்; அது விளையாட்டும் பொழுதுபோக்கும் ஆசையின் ஆட்டமுமன்று. அது இடையிடையே ஓடியும் மற்றும் சமயங்களில் ஊர்ந்தும், நகர்ந்தும், தடவியும், தவழ்ந்தும் செல்வதுமன்று; அது நடை, களைப்படையாத ஓரே நடை, முன்னேறிச் செல்கின்ற சோர்வில்லா நடை; காரியத்தைக்குறித்தும் கருமத்தைப்பற்றியும் முன்வைத்தகாலைப் பின்வையாது செல்லும் நடை என. காண்ட்லிஷ் ஐயர் சொல்லுகிறார்.

## சகோதர சிநேகம். (2. 7–11.)

**(7) சகோதரரே (பிரியமானவர்களே) நான் உங்களுக்குப் புதிய கற்பனையையல்ல; ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்; அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே. (8) மேலும் நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், அது (அந்தக் காரியம்) அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால் இருள் நீங்கிப்போகிறது. மெய்யான ஒளி இப்பொழுதுகூட (இதற்குள்ளாக) பிரகாசிக்கிறது. (9) ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். (10) தன் சகோதரனிடத்தில் அன்பு**

கூருகிறவன் அந்த ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவ
னிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. (11) தன் சகோதரனைப்
பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்;
இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால், தான்
போகுமிட மின்னதென்று அறியாதிருக்கிறான்.

வாக். 7. ஒளியில் நடப்பவர்களுடைய நாலாவது கடமை
யாக பரி. யோவான் சொல்லுவது அவர்கள் ஒருவரிலொருவர்
அன்புகூரவேண்டுமென்பதே. நிருபமெழுதப்பட்டவர்களைப்
பிரியமானவர்களே என்றழைக்கிறார். இது வெற்றுரையன்று.
அப்போஸ்தலனுடைய இருதயம் மற்ற விடங்களிற்போலவே,
இவ்விடத்திலும் அன்பினால் பொங்குகிறது. இப்பாகத்தில்
அன்பைப்பற்றி யெழுதப்போகின்றார். எனவே பிரியமான
வர்களே யென்றாரம்பிக்கிறார். அன்பையே விசேஷித்துக்
கூறும் இந்நிருபத்தின் இரண்டாம் பாகத்தில் இவ்வாறாகவே
பன்முறையும் அழைக்கின்றார் (3. 2, 21; 4. 1, 7, 11.).
அன்பைப்பற்றி ஆரம்பிக்கும்போது, ஒரு கற்பனையைப்பற்
றிப் பேசி அது புதிதாயும் பழையதாயு மிருக்கிறதென்கிறார்.
அக்கற்பனைதான் யாதென்பது 'ஒரு புதிய கற்பனை' என்று
இங்கே வழங்கிய வாசகத்தாலும், 2 யோவா. 6ல் இதைப்போல்
கூறியிருப்பதினாலும் நன்கு விளங்கும். அதுதான் யாதோ
வெனில் 'ஒரு புதிய கற்பனை' (யோவா. 13. 34.) என்று எம்
பெருமானே திருவாய்மலர்ந்து 'ஒருவரிலொருவர் அன்பாயிருங்
கள்' என்று அருளிச்செய்த கற்பனையே. இக்கற்பனையையே
புதியதெனவும் பழையதெனவும் கூறுவதன் கருத்தை யறிய
வேண்டும். இருவிதமாக இதனை வியாக்கியானப்படுத்துவர்.
ஒவ்வொன்றும் வாக். 7, 8.க்களை வெவ்வேறுவிதமாக வியாக்
கியானப்படுத்துவதா லுண்டாகும். நாமும் இவற்றைத் தனித்
தனியே முற்று மாராய்வோம்.

ஒரு கருத்துப்படி ஆதிமுதல் என்பது முதல் தடவையாக
நீங்கள் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட காலமுதல் எனப்
பொருள்படும். நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லு



கிற கற்பனை நீங்கள் முதல் தடவையாகக் கிறிஸ்தவர்களான
போது பெற்றுக்கொண்ட அதே கற்பனைதான் என்று பரி.
யோவான் சொல்லுகிறார்; எனினும் அது பழமையானதாகவு
மிருக்கிறது. இப்படி ஒன்றையே பழையதும் புதியதுமெனக்
கூறுவது மாறுபாடாய்த் தோன்றினும், அவருக்குள்ளும் உங்க
ளுக்குள்ளும் மெய்யாகவே இருக்கிறது. ஏனெனில் வருஷங்
கள் கடந்து செல்லச் செல்ல அதில் மிகவும் ஆழ்ந்த கருத்து
கள் வெளியாகின்றன. இவ்வன்புக்கு முதல் முதல் நிதரிசன
மாக விளங்கிய கிறிஸ்து இரட்சகரைப்பற்றி விசவாத் தெளி
வாய் அறிய ஏதுவுண்டாகிறது. இவ்விதமாய் ஒருவரிலொரு
வர் அன்புகூருவதினால், பழைய கற்பனை தினேதினே புதி
தாகக்கொண்டே வருகிறது. இருள் நீங்கிப்போகிறது
மெய்யான ஒளி இப்போது பிரகாசிக்கிறது. இந்தக் கற்
பனை முதல் முதல் கொடுக்கப்பட்ட காலந்தொடங்கி உலகம்
முழுவதிலுமே ஓர் மாறுதல் உண்டாகிவிட்டது. இந்தக்
கற்பனையை நிறைவேற்றுகிற கிறிஸ்தவ சகோதர ஐக்யக்
கூட்டம் ஒன்று ஸ்தாபகமாகிவிட்டது. ஒருவரையொருவர்
நேசிப்பது என்றால் என்னவென்பது வெள்ளிடை மலைபோ
ளும் விளக்கிக் காட்டப்பட்டது. விசுவாசிகளாகிய நீங்கள்
இதன்படி நடக்கும்போது கிறிஸ்து வரவாத் தெளிவாய் உங்
களுக்குக் காணப்படுகிறார்.

மற்றொரு கருத்துப்படி 'ஆதிமுத' லென்பது எக்காலத்தில்
தேவனுக்கும் மனுஷனுக்கும் சம்பந்தம் ஏற்பட்டதோ, அக்கால
முதல் எனப் பொருள்படும் (ஆதி. 3. 11, 12. இதையே ஸ்தாபிக்
கிறது. ஏனெனில் அவ்விடத்தில் 'ஆதிமுதல்' எனும் இதே
வாசகத்துக்குப் பின் அதனையடுத்து இப்பிரமாணத்தை முதல்
முதல் மீறி நடந்த காயீனைப்பற்றிச் சொல்லப்படுகிறது.). 'ஒரு
வரிலொருவர் அன்புகூருங்கள்' எனும் இக்கற்பனை 'ஒரு
பழைய கற்பனையே.' அன்பின் ஸ்வரூபியாகிய தேவன் மனி
தருக்குப் போதிக்கத் தொடங்கிய காலமுதல் இதுவே அவர்
கற்பனையாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் அது யூதருக்குப்

போதிக்கப்பட்டது (யாத். 23. 4, 5; லேவி. 19. 17, 18–33, 34. உபா. 15. 7–11; யோபு 31. 29, 30; நீதி. 20, 22–24; 17–19; 25. 21, 22; சக. 7. 10.). புறஜாதியாருக்கு இக்கற்பனை அவர்கள் மனச்சாட்சியில் பேசும் தேவனுடைய சத்தத்தின் மூலமாகவும், அவர்களுக்குள்ளிருந்த பரிசுத்தவான்களின் போதனையின் மூலமாகவும் கற்பிக்கப்பட்டது. எனினும் கிறிஸ்துவுக்கு முந்தியகாலம் அந்தகாரத்தின் காலமாயிருந்தது. யூதராவது புறஜாதியாராவது அன்பு இன்னதுதான் என்பதைத் திட்டமாய் அறியவில்லை. உண்மையான ஒளியாகிய கிறிஸ்து உலகத்தில் வந்தது முதல் முதலாக பூரண அன்புக்கு நிதரிசனமாய் விளங்கினதுமன்றி, தம்மோடு ஐக்யமாய் ஜீவிப்பவருக்கு இக்கற்பனையைக் கைக்கொண்டு நடக்கும் வல்லமையையும் கொடுத்தார். ஆதலினால் இக்கற்பனை ஒரு புதிய கற்பனையானது. பழைய கற்பனை போதித்தவற்றையெல்லாம் ஒருங்கே திரட்டி (ரோ. 13. 8–10.), அன்புகூருவதற்குத் தூண்டுகோலாய் (1 யோ. 3. 16, 17.), அன்போடு விளங்குதற்கு வல்லமையைக் கொடுத்தது.

இதனை யடுத்து அது (அந்தக் காரியம்) அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது. மூலபாஷையின்படி 'அது' எனும் பதம் கற்பனையைக் குறிக்கிறதாகவில்லை. பரி. யோவான் 'அந்தக் கற்பனை மெய்யாயிருக்கிறது' எனக் கூறாமல் 'அந்தக் காரியம் மெய்யாயிருக்கிறது' என்று சொல்லுகிறார். அதாவது புதியதாகவும் பழையதாகவும் சொல்லப்படுகிற இந்தக் காரியம், கிறிஸ்துவின் விஷயத்திலும் விசுவாசிகளின் விஷயத்திலும் உண்மையாயிருக்கிறது எனக் கூறுகிறார். மேலே குறித்த இருவித வியாக்கியானங்களுடன் ஒத்துப் பார்க்கவும்.

இதற்கு அடுத்த வாக்கியமாக, ஏனென்றால் இருள் நீங்கிப் போகிறது ஒளி, (அதாவது) [1] மெய்யான ஒளி, இப்பொழுது (நீகூட) பிரகாசிக்கிறது. எனக் கூறப்படுவது அக்கற்பனை

[1] இப்படி மொழிபெயர்ப்பது மூலபாஷைக்கு ஒத்திருக்கிறது.



யைப் புதியதும் பழையதுமெனக் கூறுவதேன் எனும் வினாவிற்கு விடையாகும். ஏனெனில் சூரியோதயத்திற்கு முன் உண்டாகும் சிறு வெளிச்சம் உதயத்தின்பின் சூரிய ஒளியொடு கலந்துபோவதுபோல, பழைய கற்பனையானது கிறிஸ்துவுக்குள் புதிதோடு கலந்துபோகிறது. அல்லது இவ்வாக்கியம் பிறிதோர் வினாவிற்கு விடையாகவும் தோன்றலாம். அதாவது இக்கற்பனையை ஏன் நீர் எங்களுக்கு ஞாபகப்படுத்துகிறீர்? ஏனெனில் ஒளியுள்ள நாள், பெரிய நாள் வந்துவிட்டது. இந்நாளில் அக்கற்பனையை அனுபவத்திற்குக் கொண்டுவரலாம். ஏனெனில் நீங்கள் 'ஒளியின் பிள்ளைகள்' ஆகையினால் நீங்கள் 'ஒளியில் நடக்க' வேண்டும். ஒளியில் நடப்பதாவது ஒருவரிலொருவர் அன்புகூருவதே.

அலங்கத்தின்மேல் நிற்கும் சாமக்காரன் விடியப்போகிற நேரத்தைக் கவனித்து நிற்பதுபோல், பரி. யோவான் கவனித்து நின்று அந்தகாரம் அகன்றுவிடுகிறது, நீதியின் சூரியன் உதயமாகிவிட்டது, பிரகாசிக்கிறது என்று சபைக்கு உற்சாகமாய் அறிவிக்கிறார் (மல். 4. 2. 2 சாமு. 23. 4. லூக். 1. 78. ரோ. 13. 11, 12.). 'ஒளி, மெய்யான ஒளி' என்பதினால் பரி. யோவான் இரக்ஷாபெருமானாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறார். ஏனெனில் தமது சுவிசேஷத்தில் 'அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது......உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி' (யோவா. 1. 4. 9.) எனவும் சொல்லுகிறார். தேவன் ஒளியாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவே தேவனுடைய பூரணமான வெளிப்படுத்தல் (எபி. 1. 2.). உண்மையென்பது 'தற்போதமற்ற சுத்த உண்மை' (सत्) இவ்வுண்மை எல்லாருடைய மனதையும் திருப்திப்படுத்தும் உண்மை. இவ்வுண்மையானது இன்மைக்கு மாறாகவிருக்கும் சாதாரண உண்மை மாத்திரமன்று; நமது நினைவினுள் அடங்காத்திட்டமாகவும், பூரணமாகவும், உளதாகவும், நமது நினைவுக்கு எட்டாததாகவும் விளங்குகிற உண்மை.

உண்மையெனும் இப்பதம் பரி. அப்போஸ்தலனுக்கு மிக்கப் பிரியமான ஓர் பதமாம். இதனை வழங்கும்போதெல்லாம் இவ்வாறு ஆழ்ந்த கருத்திலேயே வழங்குகின்றார். 'மெய்யான திராட்சச்செடி' (யோவா. 15. 1.) 'மெய்யான அப்பம்' (யோவா. 6. 32.) 'மெய்யான ஒளி' (யோவா. 1. 9.) முதலிய விடங்கள் கவனிக்கத்தக்கன.

இயற்கையிலும் மனுஷனுடைய சிந்தனையிலும் புறமதஸ்தருடைய வேதங்கள் தத்துவ 'சாஸ்திரங்களிலும், தேவன் அருளிச்செய்த நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளிலும் காணப்படும் மற்ற எல்லா ஒளிகளும் மெய்யான ஒளியாகிய இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகின்றன. ஏனெனில் இவற்றின் ஒளியெலாம் அவரினின்றும் இவைகள் அடைந்ததே. மனுஷஜாதியின் சரிதமே ஆதிமுதல் இற்றைநாள்பட்டும் ஒளிக்கும் அந்தகாரத்துக்கும், இடையே நடந்த நீடித்த போராகவிருக்கின்றது. உலகம் கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. மனிதனிலும் மற்றச் சிருஷ்டிகளிலும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொன்றிலும் கிறிஸ்துவின் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. எனினும் அவ்வொளி கிழக்கு வெளுக்கும் நேரத்திலுண்டாம், அற்பசொற்ப வெளிச்சமாகவேயிருந்தது. 'இப்பொழுதோ சூரியன் உதயமாய்விட்டது அந்தகாரம் முழுதுமாய் நீங்கிவிடவில்லை. எனினும் அது மறைந்துகொண்டே போகிறது. இறுதியில் ஒளியின்முன் நிற்கவலியற்று முழுவதும் மறைந்தே போகவேண்டும்' எனப் பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார்.

எட்டாம் வசனத்துக்கும் ஒன்பதாம் வசனத்துக்குமுள்ள சம்பந்தத்தை மாரிஸ் என்பவர் நன்கு விளக்கிக் காட்டுகிறார். 'ஒரு மனுஷன் தான் ஒளியிலிருக்கிறேனென்று சொல்லலாம். ஒளியிலிருக்கிறேனென்பவன் தன் சகோதரரைப் பார்க்கக் கூடியவனாயிருக்கிறான். அவர்கள்மேல் இடறி விழுகிறவனாயிரான்.' சொல்வதல்ல, செய்வதும், அன்பிருப்பதுபோல்



பாவிக்கும் ஜீவியமல்ல அன்பில் மெய்யாகவே ஜீவிப்பதும் ஆகிய இவையே ஒருவன் ஒளியில் வசிக்கிறான், அல்லது வசிக்கவில்லை என்பதைக் காட்டுமென நமது அப்போஸ்தலன் மிகத் தெளிவாய்க் கூறுகிறார்.

**வாக். 9. ஒளியிலே இருக்கிறேனென்று சொல்லியும், தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.**

மனிதர் எளிதில் தங்களை வஞ்சித்துக்கொள்ளலாம், வஞ்சித்துக்கொள்ளவும் செய்கிறார்கள். எப்படியெனில், தாங்கள் உண்மையை அறிகிறோமென்று நினைத்துக்கொள்ளுகிறதினாலே தங்களிடத்தில் உண்மையிருக்கிறதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். உண்மையிருக்கிறதாவென்று அறிவதற்குப் பரி. யோவான் ஒருவழியும் சொல்லுகிறார். அதாவது என்ன? நாம் எவரையாவது பகைக்கிறோமா? அப்படிப் பகைப்பதுண்டானால் நாம் அந்தகாரத்திலிருப்போம். ஏனெனில் ஒளியே அன்பு. அந்தகாரமோ பகை.

தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் அந்தகாரத்திலேயே இருக்கிறான்; சூரியன் உதயமாய்விட்டபோதிலும் (மல். 4. 2.), அவனைச் சுற்றி ஒளியிருந்தபோதிலும் அவன் இருளிலேயே இருக்கிறான். அவன் ஒளியின் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டபோதிலும், அவன் தான் ஒளியிலிருப்பதாகத் தன்னை வஞ்சித்துக் கொள்ளுகிறானேயன்றி வேறல்ல. அவனுடைய அந்தகாரம், அவன் தன் கண்களை மூடிக்கொண்டு தானாகவே தனக்கு உண்டுபண்ணிக்கொண்ட அந்தகாரம். ஏனெனின், அவன் தன் சகோதரனைப் பகைக்கிறான். அதாவது அவன் தன் சகோதரனுக்குத் தீமையைச் சிந்தித்துத் தன் சகோதரனுக்கு வரும் கஷ்டத்தில் களிகூருகிறான். காரணம்பற்றியோ காரணமில்லாமலோ தன் சகோதரனைப் பகைக்கிறான் என்பதைப்பற்றி யாதும் கூறவில்லை. காரணத்தோடு சகோதரனைப் பகைத்தாலும் பகைப்பது பகையே. நம்முடைய சகோதரனும் இருளிலிருக்கலாம். ஆனால் அது நம்மை ஒளியிலிருக்கச் செய்யாது. தேவன் இவ்விதப்

போக்கை ஏற்றுக்கொள்ளமாட்டார் (மத். 5. 46.). 'நீ உன் சகோதரனைப் பகைக்கிறாயா' வெனக் கேட்பாரேயன்றி 'நீ உன் சகோதரனை என் பகைக்கிறாய்' எனக் கேட்கமாட்டார். அது நியாயந்தான். நாம் நமது சகோதரனைப் பகைத்தால் எல்லாருக்கும் சகோதரனாகிய கிறிஸ்துவையே பகைக்கிறோம். கிறிஸ்துவைப் பகைப்பது ஒளியைப் பகைப்பதாம்; அதாவது இருளிலிருப்பதாம். இப்பகைக்குக் காரணம் தன்னயம். ஒருவனுடைய ஜீவிய ஓட்டத்தை முழுதும் அந்தகாரப்படுத்துவது அவனுடைய தன்னயமே.

சகோதரன் என்பதால் சாதாரணமாய்க் குறிக்கப்பட்டது உடன் கிறிஸ்தவர் (யோவா. 20. 17; 21. 23. அப். 1. 15. 1 தெச. 5. 26. எபி. 13. 1. வெளி. 1. 9. முதலியன.). ஆனால் இவ்விடத்தில் எம்பிரான் நல்ல சமாரியனுடைய உவமையிற் கற்பித்ததுபோல, ஒருவாறு சொல்லில் எல்லா மனுஷரும் நமது சகோதரர். உத்தம விசுவாசிகள் இதை உணருகிறார்கள். அன்பு கிறிஸ்தவரான சகோதரக் கூட்டத்துக்குள் ஆரம்பித்துப் பின் கிறிஸ்தவரல்லாத மற்றவருக்குள்ளும் பரவவேண்டும்.

வாக். 10. **தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன்** ('அன்புகூருகிறேன் என்று சொல்லுகிறவன்' அல்ல, உண்மையில் அன்புகூரவேண்டும்.) **(அந்த) ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்** (இந்நிருபத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிற அந்த ஒளி என்பது கவனிக்கத்தக்கது.). நாம் நமது சகோதரரில் அன்புகூருகிறோம் என்கிற காரியம், ஒளியாகவே விளங்குகிற கிறிஸ்துவோடு அவரில் நிலைகொண்டிருக்கிறோமென்பதை யறிவதற்குச் சான்றாம். தன்னயம் என்பது ஒரு சிறிதும் இல்லாத அந்த அன்புக்கு மூலாதாரம் அவரே. சகோதர சிநேகத்தை நம்மில் விர்த்திபண்ணினால், அதுவே அவரில் நிலைத்திருப்பதற்கு ஒரு ஏதுவாம். விசுவாசிகளினுடைய ஆவிக்குரிய ஐக்யம் கிறிஸ்தவ அன்பை அனல்மூட்டி எழுப்புகிறது. பிறருக்காகக் கவலைப்படுவதினால் நமது ஆத்துமாவே



நன்னிலை யடைகிறது. பிறருக்குள் இருக்கும் ஒளி அவர்களுக்கு நம்மீதுள்ள அனுதாபத்தினால் அவர்களை நேசிக்கிற நமது ஆத்துமாவுக்குள்ளும் வீசுகிறது.

**அவனிடத்தில் இடறலுக்கான ஏது ஒன்றுமில்லை.** இவ்வார்த்தைகளை இருவிதமாகப் பொருள் கொள்ளலாம். அவ்விதமாக நடப்பவன் தன்னிலேயே இடறுவதற்கு ஏதுவில்லையென்பதொன்று. பிறர்மீதுள்ள அன்பினால் நிறைந்திருக்கும் இருதயம் எவ்விதப் பாவத்திற்கும் இடமின்றி யிருக்கிறது. ஏனெனில் எல்லாப் பாவத்திற்கும் வேராயிருப்பது தன்னயமே. 11 வாக்கியத்தில் இவ்வாறு பொருள் படுத்துதற்கு இசைவாகவே கூறப்பட்டிருக்கிறது (யோவா. 2. 9, 10. சங். 119. 165. பு. கி.). அவ்விதமாக நடப்பவன் பிறர் இடறுவதற்கு ஏதுவாயிரான் என்பது மற்றொன்று. பிறர்மீது அன்பில்லாமலிருந்தால் பிறருடைய ஆத்துமாக்களுக்குச் சொல்லரிய தீங்கு விளைக்கிறோம். நாம் பேசிய ஓர் சூடான வார்த்தையும், நாம் இயற்றிய தகாதவிதமான ஒரு செய்கையும், நம்முடைய சகோதரனின் மனதில் நின்று அறுத்து அவன் இடறுவதற்கு ஏதுவாகிறது. கிறிஸ்துமார்க்கம் பரவுதற்குத் தடையாயிருப்பது கிறிஸ்தவரிடம் காணப்படும் அன்பின்மையே. புதிய ஏற்பாட்டில் மற்றவருக்கு விரோதமாய் 'இடறுதற்கான கல்' எனப் பலவிடங்களிலும் வழங்குவது இவ்வாறு பொருள் கொள்ள ஏதுவாகிறது.

இடறல் (இடறலுக்கான ஏது) என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மூலபதம் 'ஒரு பொறி, அல்லது பொறியில் எலியைப் பிடிப்பதற்காகப் பொருளைவைக்கும் பாகம், அல்லது அதைத் தொட்டவுடனே எலியை யகப்படுத்தும் பாகத்தைக் குறிக்கும். எனவே இடறல் எனக் கூறுவது முழுக்கருத்தையும் குறிக்கவில்லை. பக்ஷமில்லாமல் நாம் செய்த ஒரு சிறு செய்கை, கோபத்தோடு பார்த்த ஒரு பார்வை, பேசிய ஒரு பேச்சு ஆகிய இவைகள். அளவிடற்கரிய பெரிய தீமையை ஆவியில் விளைக்கும். இவ்வார்த்தை, பார்வை,

செய்கைகளில் தட்டி நமது சகோதரன் இடறுகிறான். தீமையான பொறி அவனை அகப்படுத்துகிறது.

வாக். 11. **தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகுமிடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்.** இருள் அதாவது ஞானவெளிச்சம் வீசாத இடத்திலிருக்கும் பாவமும் தன்னயமுமாகிய இருள். தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளில் இருப்பது மாத்திரமன்று, அவனுடைய எல்லாச் செய்கைகளும், நன்மைபோல் காணப்படுவனவுங்கூட, அந்தகாரத்தையடைகின்றன. அவன் **இருளில் நடக்கிறான்.** இருளுக்கும் ஒளிக்கும் இடையான ஓர் ஸ்திதியில்லை. ஒன்றில் சகோதரனை நேசித்து ஒளியிலிருக்க வேண்டும், அல்லது சகோதரனைப் பகைத்து இருளிலிருக்க வேண்டும். இருளில் நடப்பதென்பதை நீதி. 4. 19. ஒடு ஒப்பிட்டுப் பார்க்க. 'துன்மார்க்கருடைய பாதையோ காரிருள் போலிருக்கும், தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்' (யோவா. 12. 35.). இவ்வாக்கியத்தோடு அதிக ஒற்றுமையுடையது. வார்த்தை வார்த்தையாக ஒற்றுமையிருக்கிறது. சுவிசேஷத்திற்கும் நிருபத்திற்கும் அதிக ஒற்றுமையிருக்கும் பாகங்களில் இது ஒன்று.

**தான் போகுமிடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்.** இருளில் நடப்பவன் தான் அடுத்த எட்டு எடுத்துவைக்கையில் எதில் இடறுவானோவென்றும், தான் எதற்கு நேராகச் செல்கின்றானோ என்றும் அறியாதிருப்பதுபோல், தன் சகோதரனைப் பகைக்கிறவன் எவ்வளவு தீமைக்குத் தன்னை ஆளாக்கியிருக்கிறான் என்றும் அறியாதிருக்கிறான். அவன் நரகத்தின் பாதையில் விரைந்தோடுகிறான்; எனினும் அவ்வாறு விரைந்தோடுவதை யறியான்.

**இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால்,** ஒரு குருடனைச் சுற்றி ஒளியிருப்பதுபோலவே, இவனைச் சுற்றியும் ஒளியிருக்கிறது. எனினும் அதனைப் பார்க்கக்கூடிய கண்



ணே குருடாயிருக்கிறது. மனுஷனில் அவ்வொளியைப் பார்க்கக்கூடிய பாகம் ஆத்துமா—ஆத்துமா அன்பினால் ஒளியைப் பார்க்கக்கூடிய அகக்கண். இருளிலேயே இருக்கும் மனிதன் குருடாய்விடுகிறான். தேகத்தில் எவ்வுறுப்பையேனும் உபயோகியாதகாலத்தில் அது ஊனமாய்விடுகிறது. இது தேவ சட்டம். அமெரிக்காவில் மெக்சிக்கோ குடாக்கடலிலுள்ள இருண்ட குகையொன்றினுள் வசிக்கும் ஓர் ஜாதி மீன்களுக்குக் கண் கிடையாது. எப்போதும் இருளாயிருப்பதினால் அவைகட்குக் கண்ணிருந்தும் எதையும் பார்க்க இயலாது. இவ்வாறு கண்ணிருந்தும் பயன்படாதே போனபடியால், இப்பொழுது அவை கண்ணில்லாமலே யிருக்கின்றன. ஆவியின் பிரகாரமாகவும் இது உண்மைதான் 'உள்ளவனுக்குக் கொடுக்கப்படும் இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்.' இது தேவனுடைய சட்டமாயிருக்கிறபடியினால் தேவன் ஒருவிதத்தில் பாவியைக் குருடாக்கிவிடுகிறார் (எசா. 6. 10. யாத். 10.). மற்றொருவிதமாய்ப் பார்த்தால் பாவி தன்னையே குருடாக்கிக் கொள்ளுகிறான் (மத். 13. 15. யாத். 8. 32.). மூன்றாவதுவிதமாய்ப் பார்த்தால் சாத்தானே அவனைக் குருடாக்குகிறான் (2 கொரி. 4. 4.). ஒருவன் பிறனை நேசியாதபடியினால், நேசிக்கும் அந்தத் தன்மையை யிழந்து போகிறான். நேசிக்கும் அந்தத் தன்மையே பார்வை.

## மூன்றாம் பிரிவு.

### உலகில் நடப்பவர்களுக்கு ஏற்காத ஜீவியம்.

2. 12–28. தேவன் ஒளியாயிருக்கிறார்.

ஒளியில் நடப்போர் தவிர்க்கவேண்டியன.

விலக்கவேண்டிய மனுஷரும் காரியங்களும்.

இப்பாகத்தையும் இருபிரிவாய்ப் பிரிக்கலாம்.

(1) உலகமும் உலகத்திலுள்ளவைகளும். வாக். 12–17.

(2) அந்திக் கிறிஸ்து........வாக். 13–28.

*பரி. யோவான் அப்போஸ்தலன் தாம் எழுதுவதற்கான காரணங்களை மூன்றுவிதமாகச் சொல்லி யாரம்பித்து, (12–14) தாம் சொல்லிக்கொண்டுவந்த மோசங்களினின்றும், தப்பிப் பிழைத்தற்கு ஏதுவாய் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும் என அறிவித்து முடிக்கிறார். (27, 28.)*

### (1) உலகமும் உலகத்திலுள்ளவைகளும்.

(12) (என் சிறு) பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் (உங்களுக்கு) மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். (13) பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, (சிறுவரே) நீங்கள் பிதாவை யறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுது (எழுதியிருக்) கிறேன். (14) பிதாக்களே, ஆதிமுதல் இருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்த (ஜெயித்திருக்கிற)தினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். (15) உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன்



உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. (16) ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவன (ஜீவிய) த்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். (17) உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; (ஒழிந்துபோகிறது) (ஆனால்) தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

*நாம் கவனிக்கவேண்டிய முதலாவது காரியம் பரி. யோவான் தாம் எழுதுவதற்குக் காட்டும் மூன்றுவிதக் காரணங்கள். அக்காரணங்களை அவர் இருதடவை சொல்லுகிறார். இருதடவை கூறுவதில் சிறு சிறு மாறுதல்கள் உண்டு. அம்மாறுதல்கள் அடியில் வருமாறு:—*

| | |
|---|---|
| (என் சிறு) பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். | பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக் (அறி) கிறதினால் உங்களுக்கு எழுது (எழுதியிருக்) கிறேன். (எழுதினேன்.) |
| பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறபடியினாலே உங்களுக்கு எழுதுகிறேன். | பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறபடியினாலே உங்களுக்கு எழுதியிருக்கிறேன். (எழுதினேன்.) |
| வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால், உங்களுக்கு எழுதுகிறேன். | வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருப்பதினாலும் தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும் பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். (எழுதினேன்.) |

நாம் இங்கே கவனிக்கவேண்டிய இரு கேள்விகள் உண்டு.
அவையாவன:—

(1) மூன்று விதமான ஆட்களுக்கு எழுதுகிறாரா? இருவிதமானவர்கட்கா?

(2) முதல் மூன்று இடங்களிலும் எழுதுகிறேன் என நிகழ்காலத்திலும், இரண்டாவது மூன்றிடங்களிலும் எழுதினேன் என இறந்தகாலத்திலும் கூறியிருப்பதன் காரணமென்ன?

(1) பரி. யோவான் மூவிதமானவர்களுக்கு அல்ல இருவித
மானவர்களுக்கே எழுதினார் என்பது பெரும்பாலார் கொள்
கை. அப்படியாயின் 'பிள்ளைகளே' 'சிறுவரே' என்பவை,
வயதுசென்ற நமது அப்போஸ்தலன், கிறிஸ்துவை விசுவா
சிக்கிற தமது பிள்ளைகளை அதாவது தாம் எவருக்கு இந்நிரு
பத்தை எழுதுகிறாரோ, அக்கிறிஸ்தவரையெல்லாம் பரிவுடன்
அழைக்கிற விதமாம். 'சிறு பிள்ளைகள்' 2. 1. (வியாக்கியானம்)
28. 111. 7; 4. 4; 5. 21; 'சிறுவர்' 5. 18. யோவா. 21. 5. பார்க்க.

இங்கே 'சிறு பிள்ளைகள்' என்றது வயதில் இளமையான
வர்களைக் குறிக்கிறதெனில் 'சிறுபிள்ளைகளே, வாலிபரே,
பிதாக்களே,' எனும் ஒழுங்கில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.
ஆனால் இங்கே 'பிள்ளைகளே' 'பிதாக்களே' 'வாலிபரே' என
எழுதியிருக்கிறார். எனினும் சிலர் மூன்றுவிதமான மனுஷ
ருக்கே எழுதப்பட்டதென அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்
கள் அபிப்பிராயம் 'பிள்ளைகளே' என்பது உண்மையில் சிறு
வராயிருந்த பிள்ளைகளையேனும், அப்பொழுதுதான் ஞானஸ்
நானம் பெற்றவர்களையேனும், அன்றேல் இவ்விருதிறத்தாரை
யும் ஒருங்கே உட்படுத்தியேனும் குறிக்குமென்பது.

(2) நிகழ்காலமும் இறந்தகாலமும் இப்படிக் கலந்து வரு
வதை நாம் அதிகமாய்க் கவனிக்கவேண்டியதில்லை. கிரேக்க
பாஷை இலக்கணத்தில் தமிழிலக்கணத்திற்போலவே, ஒரு
விதமாய் வழுவமைதிகள் உண்டு. இங்கு காணப்படுவனவும்
அவ்வாறே கால வழுவமைதிகள் எனக் கொள்க. நிருபம்



எழுதிக்கொண்டிருப்பவனை அடுத்தவன் எழுதிவிட்டனையோ
வெனக் கேட்க, எழுதுபவன் தான் எழுதிக்கொண்டிருப்பவும்
எழுதிவிட்டேன் எனப் பதிலுரைத்தல் தமிழிலக்கணத்தின்படி
தவறாகாதவண்ணம் இங்கும் ஒப்புக்கொள்ளப்படும். இது
போல்வனவற்றைப் புதிய ஏற்பாட்டில் பல பாகங்களிலும் காண
லாம் (வாக். 21. 26; 5. 13. 2 யோவா. 12. வச. 1 பே. 5. 12.
கலா. 6. 11. பிலே. 19. 21.). இவ்விடத்தில் எழுதுகிறேன்,
எழுதினேன் என்பவற்றில் வித்தியாசமில்லை. பரிசுத்த அப்
போஸ்தலன் 13 வாக்கியத்தை எழுதிய பின்னும் தாம் எழுது
பவரைப்பற்றித் திரும்பவும் சிறிது யோசனைசெய்தார்போலும்,
எனவே திரும்பவும் அவரைச் சிறிது மாற்றிக் கூறுகிறார்.

இக்கால வேற்றுமையை வேறு விதமாகவும் வியாக்கியா
னப்படுத்துவர்.

(a) 'எழுதுகிறேன்' என்பது நிருபத்தில் எழுதுவது. 'எழு
தினேன்' என்பது சுவிசேஷத்திற் கண்டது.

(b) 'எழுதுகிறேன்' என்பது இந்நிருபத்திற் கண்டது. 'எழு
தினேன்' என்பது இவரெழுதிய ஏதேனும் முந்திய நிருபத்
திற் கண்டது.

(c) 'எழுதுகிறேன்' என்பது இந்நிருபம் முழுவதிலும் கண்
டது. 'எழுதினேன்' என்பது இதற்கு அடுத்த முந்திய பாகத்
திற் கண்டது.

பின் இந்நிருபத்தை வாசிக்கும் எல்லாருக்கும் சொல்லு
கிறார்:—

**வாக். 12. (என் சிறு) பிள்ளைகளே, அவர் நாமத்தினிமித்
தம் உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிற
தினால், உங்களுக்கு எழுதுகிறேன்.**

தேவனுடைய பிள்ளைகளாக நம்முடைய பாவங்கள் மன்னிக்
கப்பட்டிருக்கிறது. நாம் அவருடைய குமாரனில் நிலைத்திருக்
கும்பரியந்தம் இந்த மன்னிப்பில் நமக்குப் பங்குண்டு. நாம்
இந்த நிலையிலிருக்கிறபடியினால்தான் பரி. யோவான் நமக்கு அந்

நிலைமையைப்பற்றிப் பேசி, நாம் அந்நிலைமையிலேயே எப்பொழுதும் இருக்கவேண்டுமென்றும் ஒளியில் நடக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார். இது காரணம்பற்றியே அவர் ஒரு சமயத்தில் நம்மைப்பற்றிப் பாவமில்லாதவர்களென்றும், மற்றொரு சமயத்தில் நாம் பாவங்களை யறிக்கை செய்யவேண்டிய பாவிகளென்றும் பேசுகிறார். இதைப்பற்றி பின்னர் பார்ப்போம். சுவிசேஷ செய்தி இது. அதாவது 'தேவன் கிறிஸ்துவின் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு அருளிவிட்டார்' லூக். 24. 47. அப். 13. 38. இந்த விஷயம் உண்மையா யிராவிட்டால், அப்போஸ்தலன் ஒளியைப்பற்றியும் ஒளியில் நடத்தலைப் பற்றியும் அவர்களுக்கு எழுத முடியாது.

**அவருடைய நாமத்தினிமித்தம்** என்னும் வாசகம் நாம் கவனிக்கத்தக்கது. ஒருவனுடைய பேரைக் கேட்டமாத்திரத்தில் அவன் உன்னுடைய சிநேகிதனாயிருந்தால், அந்தப் பேரின் மூலமாய் அவனைப்பற்றிய சகலமும் உனக்குத் தெரிந்துவிடுகிறது. உன் சிநேகிதனுடைய பேரைக் கேட்டமாத்திரத்தில் அவனுடைய ஜாடை, உருவம், நிறம் முதலிய பலவும் உன் மனதிற்கு வெளியாய்விடுகிறது. அவனுடைய சங்கதிகள், நீயும் அவனுமாகச் சென்று செய்த காரியங்கள் பலவும் ஞாபகத்துக்கு வந்துவிடுகிறது. அவனுடைய சத்தம் அவன் பேசிய பல பேச்சுகள் அப்போதுதான் அவன் பேசுவதுபோலிருக்கிறது. எல்லாவற்றிலும் மிகுதியாய் அவன் நடத்தையின் உயர்வு இழிவு முதலியனவும் தோன்றிவிடுகிறது. எனவே அவனுடைய 'பேர்' என்னப்பட்ட அந்த ஒரு சிறுவார்த்தையில் அவனைப்பற்றிய சகலமும் வெளியாய்விடுகிறது.

அப்படிப்போலவே இயேசுகிறிஸ்துவினுடைய நாமம் நாம் தேவனைப்பற்றி யறிந்ததும், அறியக்கூடியதுமான எல்லாவற்றையும் ஒருசேரத் திரட்டிக் காட்டிவிடுகிறது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவெனும் பெயருடன் உலகில் வசித்த ஒருவரில் தேவன் கடைசியாகத் தம்மை வெளிப்படுத்தித் தம்முடைய திருநாமமாகிய பிதா என்பதையும் நாம் அறியக் காட்



டினார் (யோவா. 17. 6, 11, 12, 26.). 'கிறிஸ்து தாம் எத்தன்மையுடையவரென்று வெளிப்படுத்தப்பட்டாரோ அப்படியும், தமது திருநாமம் எதைக் குறிக்கிறதோ அதன்படியுமிருப்பதால், மனுஷனுக்குப் பாவமன்னிப்பு அருளப்படுகிறது (வெஸ்றகாட்). **அவருடைய நாமத்தினிமித்தம் உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது** எனும் வாக்கியம் அவர் நிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் போன்றதே. ஆனால் வித்தியாசமென்னவெனின் 'அவரே தேவனுடைய வெளிப்படுத்தப்படுதலாக நீங்கள் அவரில் விசுவாசிக்கிறீர்கள்' என்பது கூட்டப்படவேண்டும்.

அடியில் வரும் வாக்கியங்களும் அதே பொருளையுடையன:-

'நாமத்திலே ஞானஸ்நானம்' மத். 28. 19.

'நாமத்தில் விசுவாசம்' யோ. 1. 12; 2. 23; 3. 18; 20. 31. 1 யோ. 3. 23; 5. 13.

'நாமத்தினிமித்தம் பகைக்கப்படுதலும் உபத்திரவப் படுதலும். மத். 10. 22; 24. 9. யோவா. 15. 21. 3 யோவா. 7. வச. வெளி. 2. 3.

'நாமத்தினாலே அற்புதங்கள்' அப். 4. 10.

'நாமத்தினாலே புத்தி சொல்லுதல்' 1 கொரி. 1. 10.

'நாமத்தினாலே பாவமன்னிப்பு' அப். 10. 43.

'நாமத்தினாலே கேட்டல்' யோவா. 14. 14; 15. 16; 16. 23, 24.

'நாமத்தினாலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவி.' யோவா. 14. 26. (5. 43; 10. 25; 17. 6, 11, 12, 26.)

இப்பொழுது பரி. அப்போஸ்தலன் **பிதாக்களை** (குடும்பங்களின் தலைவர்களா யிருப்பவர்களையேயன்றி மற்ற வயோதிகரையும்) நோக்கிக் கூறுகிறார். 'பிதாக்களின் லக்ஷணம் அறிவின் தேர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும்' ஆதலினால்தான் அவர் அவர்களைநோக்கி ஆதிமுதலிருக்கிறவரை, அதாவது தேவகுமாரனை (யோவா. 1. 1)—(அவர்கள்) அறிந்திருக்கிறபடியினால் அவர்

களுக்குத் தாம் எழுதுவதாய்ச் சொல்லுகிறார். இங்கே ‘அறிதல்’ என்பதற்கு வழங்கியிருக்கும் பதம் 2; 3-ல் வழங்கியிருக்கும் அதே பதந்தான். (வியாக்கியானம் பார்க்க.)

இவ்வாக்கியத்தின் முழுக் கருத்தையும் ஒருவாறு இப்படிக் கூறலாம்:—

‘வயோதிகரே, ஆண்டவரின் குடும்பத்தாரே, கடந்தகாலங்கள் முதலே நீங்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்திருக்கிறீர்கள். அதுமுதற்கொண்டு உங்கள் ஜீவகாலமெல்லாம் அவரைப்பற்றி அதிகமதிகமாய் அறிந்துகொண்டேயிருக்கிறீர்கள். அதன் பயனாய் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் உங்கள் விசுவாசம் முற்றியிருக்கிறது.’ அவர் “நேற்றும் இன்றும் என்றும் ஒன்றுபோல் இருக்கிறவர்” என்பதை அறிந்துகொண்டீர்கள். உங்களுடைய சொந்த ஜீவியத்தில் அவருடைய நோக்கம் எவ்வாறு வெளிப்பட்டு உங்களை நடத்தியதெனவும் உங்களுக்குத் தெரியும். அன்றியும் ஆதிமுதற்கொண்டே உலகத்தில் அவருடைய நோக்கம் எவ்வாறு வெளிப்பட்டு உலக சம்பவங்களை நடத்திவந்ததென்பதையும் உணர்வீர்கள். நீங்கள் விசுவாசிக்கிற இயேசு ஆதிமுதலேயிருக்கிற அவர்தான் என்று இப்பொழுது உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்கிறபடியினால்தான் இந்த இரகசியங்களை நான் உங்களுக்கு வெளியிடுகிறேன். அப்படியிருக்கிறபடியினால்தான் நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும்படியாக, நீங்கள் வெறுத்தகற்றியதும், அதிசீக்கிரம் விட்டுப் பிரிவதுமாகிய உலகத்தோடு உங்களுக்குச் சிநேகம் (5. 15.) வேண்டாமென்று உங்களை எச்சரிக்கிறேன்!

வாலிபரே, எனப் பரி. அப்போஸ்தலன் அழைப்பவர் நடுப்பிராயமுற்றவரையேபோலும், ‘தங்கள் தேகபெலன் காரணமாய் ஜெயமடைவதே வாலிபருக்கழகு’ ஆதலினாற்றான் நமது அப்போஸ்தலன் **பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்** என்கிறார். ‘பரி. யோவான் அப்போஸ்தலன் தமது சுவிசேஷம் நிருபம் இரண்டிலும் துவக்கமுதல் முடிவுவரை நித்தியஜீவன் விசுவாசியினால் .ஜெ



யித்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றெனவே கூறுகிறார்’ (யோவா. 3. 36; 5. 24; 6. 47–54; 17. 3.). போராடுவது பெற்றுக்கொள்வதற்கு அல்ல பெற்றுக்கொண்டதை இழந்துவிடாமல் பற்றிக்கொண்டிருப்பதற்கே; நமதாண்டவர் பொல்லாங்கனை ஜெயித்துவிட்டார் (யோவா. 16. 33.). அவருடைய ஜனங்கள் எல்லாருக்கும் அந்த ஜெயத்தில் பங்குண்டு. ‘அவர் **ஜெயங் கொடுக்கிறார்**’ (1 கொரி. 15. 5–7.). எனினும் அவர்களும் தாங்களாகவே தங்கள் ஜீவகாலமெல்லாம் ஒளிக்கு விரோதியும் அந்தகார அதிபதியுமாகிய பொல்லாங்கனோடு போராடி அந்த ஜெயத்தைத் தமதாக்கி வைத்துக்கொள்ளவேண்டும் (எபே. 2. 2; 6. 12.). பெரும்பாலும் போர் மும்முரமாய் நடக்கிறகாலம் வாலிபப் பிராயம். அக்காலத்தில் பொல்லாங்கன் மாம்ச இச்சைகளை எழுப்பிப் போர்புரிகிறான். பரி. அப்போஸ்தலன் வாலிபரைநோக்கி ஜெயம் உங்களுடையதென்றும், ஜெயத்தை யடைதற்கு ஏதுவாகிய பெலனும் உங்களுடையதென்றும் சொல்லுகிறார். ஆகையால்தான் உலகத்தின் அதிபதியை (யோவா. 12. 31; 14. 30; 16. 11.) ஜெயித்து உலகத்தை வெறுத்து இப்பொழுதும் போராடிக்கொண்டிருக்கும் அவ்வுலகத்தோடு நேசம் இருக்கக்கூடாதென அவர்களை எச்சரிக்கிறார். (5. 15.)’

பரி. யோவான் அப்போஸ்தலன் இரண்டாந்தடவையாக அவர்களை அழைக்கும்போது முற்கூறிய பிரகாரமாகவே கூறவில்லை. முன் ‘பிள்ளைகளே’ என அழைத்தவர் இப்பொழுது ‘சிறுவரே’ என அழைக்கிறார். இப்படி யழைப்பதற்கு இரண்டு காரணங்களுண்டு.

(1) பிள்ளைகளோடு பேசும் பிதாவைப்போலன்றி, சீஷரோடு பேசும் குருவைப்போல் பேச விரும்புகிறார்.

(2) வெஸ்ற்காட் அத்தியக்ஷர் ‘இந்த இருவித விளியும் ஆவியின்பிரகாரமாய் இருவிதமானதாம். ஏனெனில் ‘பிள்ளைகள்’ ஆக நாம் இயற்கையில் ஒருவரோடொருவர் அன்பு பூண்டிருக்கிறோம் ‘சிறுவர்’ ஆக ஏக பிதாவாகிய தேவனுடைய சந்நிதா

ளத்தில் நமது பெலவீனம் எவ்வளவு பெரிதென்பதை உணருகிறோம் என்பர். பரி. யோவான் தாம் இதை எழுதுவதற்கு முன் காட்டியதேயன்றிப் பிறிதோர் காரணத்தையும் காட்டுகிறார். நீங்கள் பிதாவை யறிந்திருக்கிறபடியினால், இந்த வித்தியாசமும் 'பிள்ளைகளே' 'சிறுவரே' என அவர் மாற்றிக் கூறியதற்கு இசைவாகவே இருக்கிறது. சிறுவர் தேவனால் அப்பொழுதுதான் கற்பிக்கப்பட்டு அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதால் தேவனை அறியப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு அறிகிறபடியினால்தான் அவர்களுக்கு ஒரு கட்டளையையும் இடுகிறார். என்ன? 'உலகத்தில் அன்புகூராதிருங்கள்.'

பிதாக்களுக்கு எழுதும்போது தாம் எழுதுவதற்குப் புதிதான ஏதேனும் காரணத்தைக் கூறவில்லை. ஏனென்றால் 'உலகத் தோற்றமுதல் எல்லாவற்றையும் நடத்திவந்த வார்த்தையாகிய கிறிஸ்துவைப்பற்றி யறிவதே எல்லாவற்றையும் அறிந்ததாகும்' என வெஸ்ற்காட் அத்தியகூர் உரைக்கிறார்; ஆனால் வாலிபருக்கு எழுதும்போது முன்னெழுதியதோடுகூட வேறே இரண்டொரு காரணங்களையும் ஒட்டிக்கொள்ளுகிறார். நீங்கள் பலவான்களா யிருக்கிறபடியினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறபடியினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்த (ஜெயித்திருக்கிற)படியினாலும்: இவை புதிய காரணங்களாகா. முற் கூறப்பட்டதன் வியாக்கியானமேபோலும்.

இவற்றின் தாற்பரியத்தை ஒருவாறு அடியில் வருமாறு விளக்கலாம்.—'வாலிபரே' வாலிபபலம் உங்களுக்கிருப்பது சந்தோஷம். ஆகையினால் உங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது அதிகம், உங்களிடத்திலிருந்து அதிகமானவைகளை எதிர்பார்க்கிறேன். அதி மும்முரமான போரில் படைமுனையில் நின்று போர்புரியும் சிலாக்கியம் உங்களுடையது. உங்கள் வீட்டையும், சபையையும், தேசத்தையும், உலகத்தையும் முன்னிலைக்குக் கொண்டுவரவேண்டியது உங்கள் கடன். இதையே தேவன் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார். பிதாக்களும் வயோ



திகரான மற்ற பரிசுத்தவான்களும் அமைந்திருந்து தேவனைப் பற்றி சிந்தித்து ஆதிமுதலிருக்கிறவராகிய தேவனுடைய காரியங்களைப்பற்றிச் சொல்லவேண்டும். நீங்களோ பொல்லாங்கனோடு சண்டைசெய்து அவனை மேற்கொள்ளவேண்டும். நீங்கள் எதிர்த்துப் போர்செய்ய வேண்டியவர்களோ பலரும் வலியருமா யிருக்கின்றனர். உலகமோ புராதன வழக்கங்களாகிய தப்பிதமான கொள்கைகளை நீங்கள் கையாடாததற்காக உங்களைப் பகைக்கும்; உங்களின் உள்ளாகவே நின்றெழும் மாம்ச இச்சை உங்களுக்குப் பலவித இடுக்கண்களை விளைக்கும்; அன்றியும் பிசாசானவன் யாரை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம்போலவும் உங்களைச் சுற்றி வருகிறான். உங்கள் பகைவர் உங்களோடு அதிகப் பலமாய்ப் போர்செய்ய வருவதே நீங்கள் உண்மையில் அவர்களுக்கு விரோதிகளா யிருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. ஏனெனில் சாத்தான் வேண்டுமென்றே தனக்குக் கீழடங்கிப் போகிறவர்களுக்கு விரோதமாய் அதிகப் பலமாய் வரமாட்டான். அன்றியும் ஒரு சத்துவம் அதாவது 'சத்துருவினுடைய எல்லா வல்லமைகளையும் மேற்கொள்ளும் அதிகாரம்' உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் அதுவே சாட்சியாகும் (லூக். 10, 19. லூக். 9. 1, 2 கொரி. 10. 4, 5; 12. 9, 10. 2 இரா 6. 15–18.). 'பலப்படுங்கள்' (எபே. 6. 10.), ஏனெனில் பலம் உங்களுடையது. எவ்வளவுக்கு அதிகமாய் நீங்கள் போர்செய்யவேண்டுமோ, அவ்வளவுக்கு அதிகமாய் பலம் உங்களுக்குள் அளிக்கப்படுகிறது. 'கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ. ·. 16.), ஏனெனில் ஞானம் உங்களுடையது. உங்கள் கைகளை யுத்தத்துக்கும் உங்கள் கைவிரல்களைப் போருக்கும் கற்பிக்கிற 'தேவனுடைய ஜீவனுள்ள சத்தம் இடைவிடாது உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறது.' 'நீங்கள் வெல்லப்படாமல் வெல்லுங்கள் (ரோம. 12. 21.). ஏனெனில் ஜெயம் உங்களுடை
யது. உங்கள் இரக்ஷிப்பின் தலைகர்த்தன் ஜெயம் பெற்றாயிற்று.

ஆகையினால், அவரோடு இணைக்கப்பட்டிருக்கிற நீங்களும் அவசியம் ஜெயிக்கவே செய்வீர்கள்.

நீங்கள் அபஜெயப்பட்டால் நீங்கள் தேவனுடைய பலத்தில் சார்ந்திருக்கவில்லையென்பது வெளியாம். அபஜெயத்தின் மூலமாய் நீங்கள் உங்கள் பலவீனத்தை யுணர்ந்து, திரும்பவும் அவருடைய பலத்தின்மேல் சார்ந்தால் உங்கள் அபஜெயத்தின் பின்னும் நீங்கள் முன்னிலும் அதிக பலமடைந்து முன்னிலும் அதிக வீரமாய்ப் போர்செய்ய முடியும். (ஏசா. 40. 29–31.)

இந்த வியாக்கியானம் நமது தமிழ்நாட்டாருக்கு எனவே யெழுதப்பட்டது. ஏனெனில் அவர்விஷயத்தில் இது மிகவும் பொருத்தமுடையது. ஆகையினால் இங்குள்ள நமது இந்திய வாலிபர் இவ்வசனங்களைத் தாங்கள் தேவனுக்குள் பலமுள்ள மனுஷராய் விளங்கவேண்டுமெனத் தங்களை உற்சாகப்படுத்துவனவாய்க் கொள்ளவேண்டும். உலகத்தின் வேறெப்பாகத்திலும் இல்லாப்பிரகாரம் தேவனுடைய சத்தம் இங்குள்ள வாலிபரைப் பலவான்களாயாறு கூறுகிறது. தேவனுக்காகப் பலமுடையவராகவேண்டும். தங்கள் சுயதேசமாகிய இந்தியாவிற்காகப் பலமுள்ளவராகவேண்டும். வேறெத் தேசத்திலும் இல்லாப்பிரகாரம் இத்தேசத்தில் உள்ளும் புறமும் போர் அதிகமாய் இருக்கிறது. எல்லா பெலத்துக்கும் ஆதிகாரணராய் விளங்கும் தெய்வத்தோடு ஐக்யப்பட்டு அவ்வைக்யத்திலேயே நிலைத்திருந்தால், அது அக்காலத்திற்போலவே இக்காலத்திலும் ஜெயத்துக்கு வழி நடத்துவதாகும். தன்னுப்டி யாகமங்களுள் ஒன்றாகிய சீராக்கின் ஞானம் என்ற புஸ்தகத்தில் காணப்படும் இரண்டாம் அதிகாரம் விசேஷமாய் இந்தியாவின் அவசியத்தை நோக்கியே எழுதப்பட்டதுபோலும். அங்கு காணப்படும் சில வசனங்களைக் கவனித்தல் நன்றாம். 'என் மகனே! நீ கர்த்தரைச் சேவிக்க விரும்பினால் சோதனைகளை எதிர்ப்பதற்கு உன் ஆத்துமாவைப் பக்குவப்படுத்திக்கொள். உன் இருதயத்தை நேர்ப்படுத்தி தை-



விடாது துன்பங்களைச் சகித்துத் துன்பநேரத்திலும் பதறுமலிருந்துகொள். உன்னுடைய அந்தியகாலத்திலும் உன் வாழ்வு நீடிக்க தேவனையே சேர்ந்துகொண்டு அவரிலிருந்தும் விலகாதிருப்பாயாக. உனக்கு என்ன நேரிடினும் மகிழ்ச்சியைக் கைவிடாதே. உன் தாழ்வினின்று கீழ்வீழ்ந்த காலத்தும் பொறுமையோடே சகித்துக்கொள். பொன்னைப் புடமிட்டு, நன்னிலைக்குக் கொண்டுவருமாறுபோலும் தேவன் உன்னைத் துன்பங்களால் தமக்கு உகந்தவனாக்குகிறார். அவரை நம்பு, அப்பொழுது அவர் உனக்கு உதவிபுரிவார். உன் பாதையை ஒழுங்குபடுத்தி அவரில் நம்பிக்கையாயிரு. பயந்த இருதயமுள்ளவர்க்கும் கோழைத்தனமான கரங்களையுடையவர்க்கும் ஐயோ! கோழைத்தனமுள்ள இருதயமுள்ளவனுக்கும் ஐயோ! ஏனெனில் அவன் நம்புகிறதில்லை. தேவனும் அவனைக் காக்கமாட்டார். பொறுமையிழந்த உங்களுக்கும் ஐயோ! தேவன் உங்களைச் சந்திக்கும்காலத்து நீவிர் யாது செய்வீர்?'

பரி. யோவான் அப்போஸ்தலன் 'சிறு பிள்ளைகளுக்கு' சிறிய எளிதான காரியங்களைச் சொன்னார். பிதாக்களுக்கு அவர்களது பிதாக்கள் நிலைமையில் தெய்வத்தன்மையைக் காட்டினார். வாலிபருக்கு மனுஷத்தன்மைக்குரிய சரியமாக தெய்வ பலனைக் காட்டினார். இதன்பின் அவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைகுலைந்து போகாவாறும், உலக வலையிற் சிக்குண்டு அழிந்து போகாவாறும் ஒரு பெரிய கற்பனையைக் கொடுக்கிறார். என்ன?

'உலகத்தில் அன்புகூராதிருங்கள்.'

உலக நேசம், தெய்வ நேசத்துக்கு முற்றும் மாறுபட்டதெனக் கூறுகிறார். அன்றியும் நம்மிடத்தில் ஒரு நேசம் இருக்குமேல் அடுத்த நேசம் இருக்க முடியாதெனவும் எச்சரிக்கிறார். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. இவ்விரண்டும் ஏககாலத்திற்றானே ஒருவனிடத்தில் காணப்படக்கூடாத தன்மையுடை-

யன. 'உலகத்திலுள்ளவைகள்' வேறு 'பிதாவினிடத்' துள்ளவைகள் வேறு. இவ்விரண்டும் எக்காலத்தும் ஒன்றாய்ச் சந்திப்பனவல்ல. உலகத்திலுள்ளன நிலையற்றனவாய் அழிந்து நசித்துப்போம். பிதாவினிடத்துள்ளனவோ நிலையுள்ளனவாய் நித்தியகாலம் விளங்குவன.

ஆகையினால் இவ்விடத்துக் கூறப்படும் உலகம் தேவன் 'நன்றாயிருக்கிறதெனக் கண்ட' இயற்கையான உலகமன்று. 'தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்து அவ்வளவாய் அன்புகூர்ந்த' பாவஜென்மிகள் நிறைந்த உலகமுமன்று. மனுஷர் தமக்காகவே தாம் உண்டாக்கிக்கொள்ளும் உலகம். உலகமே சதமென நினைக்கும் உலகம். பிதாவினுடைய அன்பில் ஒரு சிறிதும் எண்ணமின்றித் தன்னயமே பெரிதாகக் கொண்டாடும் உலகம். (மத். 6. 23, 24. யாக். 4. 4.)

தேவன் பல்வகைத்தாம் ஆசைகள், விருப்பங்கள், யாஞ்சைகளையும் நமக்குள் கொடுத்திருக்கிறார். இவ்வாசைகளை நிவிர்த்திக்கும் எண்ணிறந்த பல பொருட்களையும் நம்மைச் சுற்றியும் படைத்து வைத்தார். நம் கண்ணுக்குத் தோற்றுவனவாய சகலமும் அநித்தியப் பொருட்கள். எனினும் அவற்றை நாம் சரியான வழியில் உபயோகிப்பின் அவையே நாம் நம்முள் நிலைத்திருக்கும் பரிசுத்த நோக்கத்தை நிறைவேற்ற நமக்கு உதவிசெய்யும். இந்நோக்கம் பிதாவின்மேலுள்ள அன்பே. அந்த அன்பு நம்மிதயத்திருப்பது உண்மையாயின், அதுவே எல்லாவற்றினும் மேலானதாய் முக்கியமானதாய் இருக்கவேண்டும். மற்றும் உலக விஷயங்களில் ஏதேனும் முதன்மையான ஸ்தானத்திலிருந்தால் தெய்வ நோக்கம் சித்தியாகாது. தேவனிலும் அதிகமாய் வேறெதை நேசித்தாலும் அது உலக நேசமேயாகும். இதுவே தன்னயம். தன்னயமோ அந்தகாரம்.

உலகம் என்றால் யாதெனப் பார்த்தோம். அப்படியாயின் உலகத்திலுள்ளவைகள் என்பதனாற் போந்த பொருளென்ன? அவை உலகிற் காணப்படும் இயற்கைப் பொருட்களேயோ? அன்று. அன்றென்பது 'மாம்சத்தின் இச்சையும் கண்களின்



இச்சையும் ஜீவனத்தின் பெருமையும்' எனப்படும் பிந்திய பாகத்தால் விளங்கும். அங்ஙனமாயின் அவையெவை? சாத்தானின் வலியுடைச் செயல்களாய் உலகத்தை ஆட்டிவைக்கும் நோக்கமும் ஜீவியமுமே.

பரி. யோவான் அப்போஸ்தலன் நிராகரித்துக் கண்டனம் பண்ணிப் பேசிவரும் கள்ளப்போதகர் உலகிற் காணப்படும் சகல வஸ்துக்களும் தம்மிற்றாமே தீங்குடையனவென்றும், ஆதலின் அவை கடவுளாலன்றிச் சாத்தானால் அல்லது வேறு ஒரு சக்தியால் படைக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் போதித்தார். அதற்கு மாறாகவே பரி. யோவான் தேவனால் படைக்கப்பட்டவை யாவும் 'பிதாவினால்' உண்டானவையெனவும் 'நல்லவை' எனவும் போதித்தார் (யோவா. 1. 3, 10.). அவ்வாறாயின் இந்தத் தகாத இச்சைகள் எங்கிருந்து உற்பத்தியாயின? பிதாவினிடமிருந்தேயோ? அன்று. இவ்விச்சைகளின் மூலமாய் தேவனோடெதிர்த்து, அவரை விரோதிக்கத் தூண்டி மனிதரைச் சோதிக்கும் சாத்தானால் விளைந்தனவாம்.

உலகத்தை நிலைகுலையச் செய்வனவென்று பரி. யோவான் அப்போஸ்தலன் கண்ட மூவகைப் பெரிய தீங்குகளுள் மாமிச இச்சை ஒன்று.

நமது சரீரத்தில் சகலவித ஆசைகளும் நிறைந்துள்ளன. மனிதனுடையவும், மனுஷஜாதியினுடையவும் நன்மையையும் விர்த்தியையும் நோக்கி இவை எம்பிரானால் மானிடர்க்கு அருளப்பட்டன. அவை தம்மில்தாமே பாவமானவையல்ல. எனினும் அவற்றையே வாயிலாகக்கொண்டு சாத்தான் நம்முட்புகுந்து தீங்கிழைக்கிறான். அவ்வாசைகளை வரம்பு கடந்தேனும், தேவகட்டளைக்கு மீறியேனும் நிறைவேற்றப் புகின் அவை பாவமாம். உண்ணலும், குடித்தலும், தூங்கலும், சுகித்தலும், போகந் துய்த்தலுமாய இவை இவ்வாசைகளின்பாற்படுவன. இவற்றை அளவுகடந்தும், தப்பிதமாகவும் நிறைவேற்றல் எவ்வளவு தன்னயமுடையதென்பது எளிதிற் புலப்படும். கிறிஸ்து மனிதனுடைய ஆத்துமாவை மாத்திரமல்ல

அவனுடைய சரீரத்தையுமே தமக்கெனக் கேட்கிறார். உடலும், ஆவியும் இவ்வுலகிலிருக்கும் காலபரியந்தமேனும் ஒன்றைவிட்டொன்று பிரிவனவல்ல. துர் இச்சை மனிதனுட் புகுந்தவுடன் சரீரம் அதனை நிறைவேற்று முன்னரே அது ஆத்துமாவைக் கறைப்படுத்துகிறது (மத். 5. 20.). அவ்வாறாகவே தன்னை யடக்கிக்கொள்ளுதலானது, ஜெயத்தைத் தேகத்தில் அடைதற்கு முன்னரே ஆத்துமாவைப் பலப்படுத்தி நிலைப்படுத்தும் இருதயத்தில் அதனை யடைவதாகும். ஆத்துமா பரிசுத்த ஆவிக்கு ஆலயமாக தத்தம் செய்யப்பட்டால் தேகம் பிசாசின் ஆலயமாக இருக்க முடியாது.

போகந் துய்த்தலாகிய ஆசை ஏனைய ஆசைகளினும் கடைசியாக நாம் நம்மை யடக்கியாளச் சக்தியுடையராகும் பருவத்தில்தான் நமக்கு அளிக்கப்படுகின்றது. காரணம் என்னை? அதனை யடக்கியாள அதிக ஞானமும் சுயவெறுப்பும் அவசியம். அளவுகடந்து அதை நிறைவேற்றின் நமக்கும் பிறர்க்கும் சொல்லரிய தீங்கை விளைப்போம். அது தேகம் நன்னிலைப்படுமாறு துய்க்கப்படுவதுமன்று. மேலும் மனுஷ ஜாதியின் நன்மைக்கும் விர்த்திக்கும் நம்மேல் ஏற்பட்ட உத்தரவாதத்தைத் தேவன் அதன் மூலமாகவே நமக்குக் கொடுத்திருக்கிறார். இவை காரணமாகவே அதனை நமக்குப் பிரீதி அளித்தார். இவ்விச்சையைத் தீய வழியில் நிறைவேற்றும் ஏதுக்கள் உலகில் அனந்தம். தப்பாயும் ஒப்பாயும் இதற்கு உதவிசெய்யும் உலக வழிகளும் பல. எனினும் இப்பாவம் ஆரம்பிக்கும் இடம் யாதோ? அவ்விடம் இதயம். புறம்பாக உலகினுள்ளவை இழுக்கும்போது இருதயம் சாய்ந்துவிடுகிறது. ஆகலின் ஆத்துமாவினுள்ள உலகபாசத்தைத் தவிர்க்க தேவனுடைய பலமுள்ள மனுஷன் இந்தக் கவர்ச்சியுள்ள உலகினூடே யாதும் தீங்கின்றி வாழ்ந்துய்யலாம். உலக பாசத்தினும் பெரிய பாசமொன்றிருந்தால் மாத்திரம் உலகை மேற்கொள்ளக்கூடும். இருக்கவேண்டிய பாசம் பிதாவின்மீதுள்ள பாசம்.



மாமிச இச்சையிலும் அதிக வஞ்சனையுள்ள இச்சையொன்றுண்டு. அதுதான் கண்களின் இச்சை; அது அதிக மோசமானது. ஏனெனில் அதினுடைய பாவம் பெரும்பாலும் வெளியிற் காணக்கூடியதன்று.

மாமிசத்தின் இச்சை போகந் துய்த்தலுக்குக் கொண்டுவந்து விடுகிறது. ஆனால் கண் இச்சிப்பதோ மனதினால் அனுபவித்தற்கும் ஆசிப்பதற்கும் வழிநடத்துகிறது. ஆதலால் 'கண்களின் இச்சை' என்பதினால் விலக்கப்பட்டவை யாவையெனின் நெறிமுறைக்கு மாறாய் இன்பம் அனுபவிக்க வேண்டுமெனப் பார்க்கும் அவலக்ஷணமும் இழிவுமான காட்சிகளும், அசங்கியமும், ஆபாசமுமான புத்தகங்களும் படங்களுமாம். இதன்மூலமாய் எபேசியர் தங்களுடைய நாடகசாலைகளில் ஒருவரையொருவர் ஒன்றையொன்று கொல்லும்வரை நடத்தும் குரூரமும் தவறுமான சிலம்பச் சண்டைகளும் துஷ்டமிருகங்களின் சண்டைகளும் பார்க்கத் தகாதனவென வுணர்வார். இந்தியராகிய நாமும் தாசிகளுடைய சதுர், விகாரமான கல்வெட்டுகள், படங்கள், சேவல்போர் முதலியன பார்க்கக்கூடாதென நம்மையும் எச்சரித்தவாறாம். நாம் பார்த்து ஆதாயமடையக்கூடிய காட்சிகள் பலவுள. அழகிய இயற்கையமைப்புகள், புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் பல யந்திரங்கள், சரீரத்தின் விசித்திரவமைப்பு, சித்திரங்கள், படங்கள், சிலைகள், சங்கீதங்கள் பண்டை ஞானமுள்ளோரா லெழுதப்பட்டவை ஆகிய இவை நாம் கண்டானந்திக்கத்தக்கன. இவையெல்லாம் நம்மைச் சந்தோஷிப்பிக்குமாறும் நம்மை விர்த்தியடையச் செய்யுமாறும் அளிக்கப்பட்டன. இவற்றில் ஏதேனுமொன்றைத் தேவனிலும் அதிகமாக விரும்புவோமென்னில் அது கண்களின் இச்சையாம், அப்படிச் செய்யும்போது 'நாம் உலகத்தில் அன்புகூருகிறோம்.'

இவ்வுலகிடை காணக்கிடக்கும் மூன்றாவது பெருந்தீங்கு ஜீவன (ஜீவிய) த்தின் பெருமை. ஜீவன் என்பதனைக் குறிக்கும் இருபதங்கள் மூலபாஷையில் (கிரேக்கில்) உண்டு. அவற்

றில் சாதாரணமாக யோவானும் வழங்கப்படுகிற வார்த்தை இம்மையிலேயே துவக்கி மறுமையில் பூரணப்படுகிற 'ஆவிக்குரிய பிரதான ஜீவனைக் குறிக்கும். அதி அபூர்வமாக வழங்கப்படுகிற மற்றொரு வார்த்தை உண்டுசெய்துக் களித்திருந்து மரணத்தில் முற்றுப்பெறும் உலக ஜீவனைக் குறிக்கும். இந்தப பிந்திய பதமே இவ்விடத்தில் குறிக்கப்படும் ஜீவனுக்கு வழங்குகிறது. 3. அதிகாரம் 17-ம் வசனத்திலும் இதே பதமே திரும்பவும் 'உலக ஆஸ்தியுடைமையை'க் குறிக்க வழங்குகிறது.

**ஜீவனத்தின் பெருமையானது** ஒருவன் தன்னிடத்திலுள்ள பொருட்களையிட்டு மனதிலேனும் பிறர்க்குக் காட்டியேனும் அகங்கரித்துப் பெருமை பாராட்டுதல் எனப்படும். ஒருவன் தன் செல்வம் மற்றும் பொருட்கள் காரணமாகப் பெருமை பாராட்டலாம். மற்றொருவன் தன் உயர்குடிப்பிறப்பு தனக்குள்ள அந்தஸ்து, தனது தேக சௌந்தர்யம், தனது அதிகாரம், அறிவு, சாமர்த்தியம், கல்வி முதலியவற்றைப்பற்றிப் பெருமை காட்டலாம். வேறொருவன் தனது புகழ், கண்யம், சொற்சக்தி முதலியவற்றால் பெருமைகொண்டலையலாம். மற்றும் ஒருவன் தன் வேதஅறிவு நல்லொழுக்கம் முதலியவற்றையே காரணமாகக்கொண்டு பெருமை கொள்ளலாம். இவ்வகை மாயையாகிய எல்லா மகிமைகளும் பெருமைகளும் வேதத்தில் ஒன்றுபோலவே மதிக்கப்பட்டுக் கண்டனம் பண்ணப்பட்டிருக்கின்றன. (சங். 49. பிர. 1. லூக். 12. 16-21. 1 கொரி. 4. 7.)

ஒரு மனிதன் தன்னைப்பற்றியும் தன் பொருட்களைப்பற்றியுமுள்ள பெருமையை ஜெயித்திருந்தபோதிலும், அவன் உலகத்தாருடைய நல்ல அபிப்பிராயத்தை யடையவேண்டுமென ஆசிக்கலாம். அதுவும் வஞ்சனையான உலகப் பெருமையேயாகும். ஒருவன் உலகத்தினுடைய ஆன்ற மதிப்பையும் அவமதிப்பையும் கவனியாதிருக்கும்வரை அவன் உலகப் பெருமையை விட்டவனாகான். இவைகள் பரி. யோவான் சொல்லுகிறபடி **பிதாவினால் உண்டானவைகளல்ல.** இவை அவரிடத்திலிருந் துண்டானவையுமல்ல; அவரிடத்து வழி நடத்



துவனவுமல்ல. அவை உலகத்தினாலும் உலகத்திலிருந்து முண்டானவை. உலகத்துக்கு வழி நடத்துவனவுமாம்.

**உலகம் ஒழிந்துபோம் (ஒழிந்துபோகிறது.)** உலகத்திற்கு சம்பந்தமான இருளைப்போலவே உலகமும் ஒழிந்துபோகிறது (வாக். 8.). இந்த வாக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நன்று.

| | |
|---|---|
| (பிதாவினும் அதிகமாய் நேசிக்கப்பட்ட காரணத்தால் நமது விக்கிரகமாகிற) உலகமும் அதின் இச்சையும் (உலகம் உண்டுபண்ண திருப்தி பயக்கிறவை. தேவசித்தத்தின்படி நடப்பதற்கு மாறாயிருப்பவை) ஒழிந்துபோகிறது. | அவன் (விசுவாசி) தேவனுடைய சித்தத்தின்படி செய்கிற (இந்த விரோதமான உலகத்தினிடையிலும்) என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். |

(1) **உலகமும்** மேலே கூறப்பட்ட உலகம். புலன்களுக்குப் புலப்படுவனவும் அவையே மேலானவையென்று பிதாவிலும் அதிகமாய் நேசிக்கப்பட்டனவுமாய எல்லாப் பொருட்களும் அவைகளை நேசிக்கும் மனிதனினின்றும் ஒழிந்து போகிறது. தன் ஜீவனில் அன்புகூருகிறபடியால் மனிதன் அதை இழக்கிறான்; உலகத்தின் ஐஸ்வர்யம், அதற்குச் சரியான ஐஸ்வர்யத்தை நாம் பரலோகத்தில் சேர்த்து வைத்தாலொழிய, நசித்துப் பாழ்படுகின்றது.

(2) **அதின் இச்சையும்** ஒழிந்துபோகிறது. இது நாம் தெளிவாய்ப் பார்க்கத்தக்கது. வயது ஏறஏற நாம் புலன்களினால் அனுபவிக்கக்கூடிய உலக சந்தோஷங்கள் வரவரக் குறைந்துகொண்டே போகின்றன. நித்திய ஆசைகளை விர்த்திபண்ணாத ஒருவன் தான் அனுபவிக்கக்கூடிய சக்திகளெல்லாம் குறைந்து சிறிதுமாத்திரம் அனுபவிக்கக் கூடியகாலத்திலும், உலக ஆசைகளையே பற்றுக்கோடாக் கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம். இறுதியில் ஆத்துமா தான் அனுபவிக்கும் பொருட்களும் அனுபவிக்கும் வகையுமின்றி வெறுமையும்

பாழுமாய்த் தத்தளிக்கிறது. எனினும் அவனுடைய தன்னயம் மாத்திரம் அவனைவிட்டு நீங்காமல் அவனை வருத்தி நிற்கும்.

உலகம் அநித்தியம், மாயை, நிலைக்கக்கூடியதன்றெனக் கருதிப் பலர் ஒரேபிடியாய் உலகத்தின் சகல பற்றுகளையும் விட்டு நீங்க முயன்றிருந்தனர். இவ்வாறிருந்தவர் இந்தியா தேசத்திலே அதிகம்; ஆனால் யோகியாகவேனும் சந்நியாசியாகவேனும் உலகில் நீங்கியிருந்தும், உலக ஆசையையும் தன்னைப் பற்றிய நேசத்தையும் தேவன்மீதுள்ள அன்பே காரணமாக நீக்காதிருந்து உலக ஆசையும் தன்னைப்பற்றிய நேசமும் உடையனாயிருப்பானேயாகில், அவனிடத்தில் உலகம் இருப்பதாகவே கொள்ளவேண்டும். இவற்றை நீக்கிய பரிசுத்தவானே 'உலகிலிருந்தும் உலகினனல்லன்'. கிறிஸ்துவானவர் தமது சீஷர் உலகத்தில் நீங்கி வசிக்கவேண்டுமெனக் கருதவில்லை. அவர் தீமையின் விலகி உண்மையுடையராய்ப் பரிசுத்தராகி உலகினுட் சென்று, தங்களுடைய போதகத்தினால் பலரும் கிறிஸ்துவை விசுவாசித்தற்கு ஏதுவாயிருக்கவேண்டுமெனக் கருதினார். (யோவா. 17. 15, 18–20.)

அப்படிப்பட்டவன் தேவசித்தத்தின்படி செய்கிறான். தேவனால் தனக்கு அருளப்பட்ட ஆசைகள் விருப்பங்கள் எல்லாவற்றையும் தேவ மகிமைக்காகவும் பிறருடைய நன்மைக்காகவும் உபயோகிக்கிறான். அவன் தேவனில் என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். என்னமாறுதல் நேரினும் தேவனில் நிலைத்திருந்து, தேவனுடைய புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டு, இம்மையிலே ஆரம்பித்தும் மறுமையிலே பூரணப்படுவதாகிய அந்த நித்திய ஜீவனுக்கான வழியையும் கண்டுகொள்ளுகிறான்.

### (2) விலக்கவேண்டிய மனிதர்.

அந்திக்கிறிஸ்துகள், 18–28.

(18) பிள்ளைகளே, இது கடைசிக்காலமா (நேரமா) யிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்



விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் (எழும்பி) யிருக்கிறார்கள், அதினாலே இது கடைசிக்காலம் (நேரம்) என்று அறிகிறோம்.

(19) அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், (ஆனால்) ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திரு(ந்திரு)ப்பார்களே; (அவர்கள்) எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்.

(20) (மேலும்) நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். (21) சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்ப(தை நீங்கள் அறிந்திருக்கிற)தினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். (22) இயேசுவைக் கிறிஸ்துவல்லவென்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிற அவனே அந்திக்கிறிஸ்து. (23) குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல. குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான். (24) ஆகையால் (உங்களுக்கோ) ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். (25) நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். (26) உங்களை வஞ்சிக்கிற (வழிதப்பும்படி செய்கிற)வர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கெழுதியிருக்கிறேன். (27) (உங்கள் விஷயத்தில்) நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை; (ஆனால்) அந்த (அவருடைய) அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; (படியே) அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில்

**நிலைத்திருப்பீர்களாக. (28) இப்படியிருக்க, (இப்பொழுதும்) பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.**

பரி. யோவான் அப்போஸ்தலன் ஒளியில் நடக்க விரும்புகிறவர்களுக்குச் சிலவைப்பற்றி எச்சரிப்பாகக் கூறப்போகிறார். இது கடைசிக்காலமென்றும் கர்த்தர் திரும்பவும் அதிசீக்கிரம் வரப்போகிறார் என்றும் அவர்கள் அடிக்கடி கேட்டிருந்தபடியே, கர்த்தருடைய இரண்டாவது வருகையின்முன் அந்திக்கிறிஸ்து வரப்போகிறான் என்று அவர்களுக்குச் சொல்லுகிறார் (வாக். 18.). அந்திக்கிறிஸ்துவின் ஆவியுடைய பலர் (வாக். 19.) எழும்பிவிட்டார்கள். அவர்கள் ஒருகாலத்தில் கிறிஸ்தவர்களாயிருந்தவர்கள். பிற்காலத்திலோ சபையைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். இதனால் அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்லவென்று தேவன் தெளிவாய்க் காட்டிவிட்டார் (வாக். 19, 20.). மேலும் அவர்கள் பிரிந்துவிட்டபடியினால், அவர்கள் அந்திக்கிறிஸ்துகள் என்று கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாயிருந்தது (வாக். 20.). ஏனென்றால் இவர்கள் பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தைப் பெற்றிருந்தார்கள். அதினால் உண்மையினின்று பொய்யின்னது (வாக். 22.) என்று சொல்லக்கூடும் (வாக். 21.). பொய்யரிற் பெரியன் இயேசுவைக் கிறிஸ்துவல்லவென்று மறுப்பவன்; இந்த அந்திக்கிறிஸ்துகள் கூறிய பொய் இதுதான். குமாரனை மறுதலிப்பவன் பிதாவையும் மறுதலிக்கவேண்டும் (வாக். 23.). ஆகையினால் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்கள் தாங்கள் பெற்ற உபதேசத்திலும் நித்தியஜீவனைப் பெறுதற்கேதுவான (வாக். 25.) பிதா குமாரனுடைய ஐக்யத்திலும் உறுதியாய் நிலைத்திருக்கும்படி கட்டளையிடுகிறார் (வாக். 24.). திரும்பவும் அவர் இந்தக் கள்ளப்போதகர் மத்தியில் அவர்கள் எக்காலமும் தவறாத ஆவியானவருடைய நடத்துதலில் நம்பிக்கையாயிருக்கும்படியாக (வாக். 27.), ஞாபகப்படுத்தி (வாக். 26.), கிறிஸ்து



வானவர் வரும்போது அவர் முன்னிலையில் வெட்கப்பட்டுப் போகாதபடி தைரியமாய் அவரை எதிர்கொள்ளத்தக்கதாய் அவரில் நிலைத்திருக்கும்படி உற்சாகப்படுத்திப் போதிக்கிறார்.

வாக். 18. பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது. இதே வாக்கியம் வேதாகமத்தின் வேறெந்த விடத்திலும் வருகிறதில்லை. எம்பிரான் இரண்டாந்தடவை திரும்பி வருகிற நாளைக் குறிப்பதற்கு நமது அப்போஸ்தலன் பிறரோடு வழங்குகிற வார்த்தை 'கடைசிநாள்' என்பது (யோவா. 6. 39, 40, 44, 54; 11. 24; 12. 48.). இவ்விடத்தில் தம்முடைய வழக்கமான வார்த்தையாகிய 'கடைசிநாள்' என்பதை வழங்காமல் வேறுவிதமாய்ச் சொல்லுகிறார். வேண்டுமென்றே சொல்லுகிறார். இவ்விடம் கூறுவது 'கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது' என்பதிலும் அதிகமாய்க் கூறுவதாகும். அது யாது? கடைசிக் காலத்துக்கும் (1 பே. 1. 5.), கடைசி நாட்களுக்குமுரிய (2 தீமோ. 3. 1. 2 பே. 3. 3.), துன்ப சமயமும், மெய்க்கும் பொய்க்கும் போர்நடக்கும் கொடிய இறுதி நேரமும் இப்பொழுது வந்திருக்கிறது.

கடைசிநாட்கள் வந்துவிட்டனபோலவும், கடைசிநாட்களின் இறுதி சம்பவித்ததுபோலவும் காணப்படும்படிக்குப் போர் அவ்வளவு கடுமையாகவும் துன்பங்கள் அவ்வளவு கசப்பாகவுமிருந்தன. சபையானது கடைசிக்காலத்தின் கடைசி நேரத்துக்கு வந்துவிட்டது.

வாஸ்தவந்தான், பரி. அப்போஸ்தலனும் அவர்காலக் கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் வருகையை அதிகமாய் எதிர்பார்த்த காலத்திருந்தனர். ஏனென்றால் அக்காலத்து அடையாளங்கள் அவர் உடனே வந்துவிடுதற்கு ஏதுவானவைபோற் காணப்பட்டன. அவர்காலத்தின் முந்தியகாலத்தினரும் அப்படியே கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருந்தனர் (2 தெச. 4. 15, 16. 1 கொரி. 15. 51. 2 தெச, 2. 1–6.). கடைசிவரையில் ஒவ்வொரு காலத்தவரும் ஒவ்வொரு சந்ததியும் அவர் வருகையை எதிர்பார்த்தே ஜீவிக்கவேண்டும். இவ்வாறு இடை

விடாது எதிர்பார்க்கும்படியாகக் கிறிஸ்து தெளிவாகக் கட்டளையிடுகிறார். இப்படி எதிர்பார்த்துக் காத்து விழித்திருத்தல் சபையின் பரிசுத்தத்துக்கும் சுறுசுறுப்பான ஜீவியத்திற்கும் ஏதுவாயிருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனம் கடைசியாக நிறைவேறுமுன், இடையில் நிறைவேறவேண்டிய மனுஷ குமாரனின் பல நாட்களும் கிறிஸ்துவின் பல வருகைகளுமாகிய பல காரியங்கள் உண்டு. போர்களும் துன்பங்களும் நேரிட்டபின் அவருடைய ராஜ்யம் வருவதற்குமுன் நடக்கவேண்டிய காரியங்கள் பல. அவ்வாறாகவே அவர் அவருடைய ராஜ்யம் புறஜாதியாருக்குள் பரவுவதற்கு இடையூறாயிருந்த இஸ்ரவேலரின் ஜாதியபிமான கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியுமாறு எருசலேம் இடிக்கப்பட்ட சமையத்தில் வந்தார். அதுபோலவே பாப்புவானவரின் அதிகாரத்தில் நீங்கி சுத்த சுவிசேஷ சபை யாரம்பித்தகாலத்தில், அதன்முன் நெடுங்காலமாக அறிவீனம் காரணமாகச் சபையில் உண்டாயிருந்த தப்பறைகளை நீக்குமாறு வெளிப்போந்தார். அதுபோலவே இந்தியாவிலும் மனுஷனைத் தேவனினின்றும், மனுஷனை மனுஷனினின்றும் பிரித்து வேறாக்கக் காரணமாகும் பல தாறுமாறான கொள்கைகளையும் நீக்குதற்கு வரவிருக்கிறார்.

கடைசிநாட்களின் *சமீபத்தை யறிதற்கு எல்லாவற்றிலும் மேலான அடையாளம் அந்திக்கிறிஸ்துவின் வருகை. பரி. யோவான் அப்போஸ்தலன் அப்பொழுது எழும்பியிருந்த பல அந்திக்கிறிஸ்துகளுள் இந்த ஆவியைக் கண்டுகொள்ளுகிறார். **அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி** அதாவது கிறிஸ்து வருகிறதுபோலவே அவருக்குமுன் அந்திக்கிறிஸ்து வருகிறானென்று திட்டமாய் உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் அந்திக்கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் அநேகம் இருக்கின்றன; மாற்கு, 13. 6. மத். 24. 5. அநேகர் என் நாமத்தைத் தரித்துக்கொண்டு வந்து, கள்ளக்கிறிஸ்துகள் பாசாங்கு பண்ணுவார்கள். அப். 20. 29-31. 1 தீமோ. 4. 1. 2 பே. 2. 1.



கேட்டுக்கேதுவான கள்ளப்போதகர். 2 தெச. 2. 3–5. ஒரு அந்திக்கிறிஸ்து.

இப்பொழுது அந்திக்கிறிஸ்துவென்றால் என்னவெனப் பார்ப்போம். அந்தி என்னப்பட்ட மூலபாஷைப் பதம் எப்பொழுதும் இருவிதப் பொருளில் வழங்குகிறது. 'எதிரான' அல்லது 'பதிலான' எனப் பொருள்படும். இவ்விருவிதப் பொருட்களும் அந்திக்கிறிஸ்துவில் அடங்கி யிருக்கின்றன. அவன் கிறிஸ்துவுக்கு விரோதியாகவும் தானே கிறிஸ்துவென மாயம் பண்ணுகிறவனாகவு மிருக்கிறான். தனது இயற்கைக்கு மாறான ஒரு தன்மை தன்னிடத்துளதாக மாயம் பண்ணும்போது அது எளிதில் வெளியாக்கப்படுகிறது. 'அந்திக்கிறிஸ்து கிறிஸ்துவை மறுதலித்தும் கிறிஸ்து செய்ததைச் செய்வதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் காட்டிக் கிறிஸ்துவைப் பலமாயெதிர்க்கிறான்' என வெஸ்றகாட், அந்தியட்சர் வியாக்கியானம் சொல்லுகிறார்.

கிறிஸ்து, குமாரனின் மூலமாய் மனிதர் பிதாவினிடத்தில் வரக்கூடுமென்றும், பாவத்தை ஜெயிக்கக்கூடுமென்றும், நித்திய பேரின்பத்தை யனுபவிக்கக்கூடுமென்றும் போதிக்க உலகில் வந்தார். அந்திக்கிறிஸ்துவினுடைய பொய்யோ, மனிதர் இவற்றையெல்லாம் தங்களுடைய சுய பலத்தினாலும் சுவிசேஷங்களிற் கூறப்படாத மற்ற ஏதுக்களினாலும் சாதிக்கக் கூடுமென்று போதிக்கிறது.

இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் (எழும்பி) யிருக்கிறார்கள்.—'இனிமேல் கிறிஸ்துவினிடம் இல்லாதனவும் அவரிலும் மாறுபட்டனவுமான எல்லா தீய தன்மைகளையும் ஒருங்கேயுடைய ஒருவன் வந்தாலும் வருவான். அதற்கிடையே அத்தகைய சுபாவங்களிற் சிலவற்றை யுடையவரும், அவரில் இல்லாத அசுத்த ஆவிகளையும் அவரால் அசுத்தமானவையென்றும் கட்டுக்கடங்காதவையென்றும் துரத்தி வெருட்டப்பட்ட ஆவிகளையுமுடைய பல அந்திக்கிறிஸ்துகள் இருப்பார்கள்' என்பார் மாரிஸ் ஐயர்.

இனி பரி. யோவான் அப்போஸ்தலன் இந்த அந்திக்கிறிஸ்துகளுக்கும் பரிசுத்த சபைக்குமுள்ள சம்பந்தத்தை விளக்கப் போகிறார். இந்த அந்திக்கிறிஸ்துகள் ஒருகாலத்தில் கிறிஸ்தவராயிருந்தவர். அவர்கள் எக்காலத்திலும் கிறிஸ்துவின் அங்கங்களாயிருந்தவரல்லர். ஒருவாறு புறம்பான சபையைச் சேர்ந்திருந்தார். இப்பொழுதோ புறம்பாகவும் கிறிஸ்தவரல்லர். எவ்வாற்றானும் சபையைச் சேர்ந்தவராகார். நம்மை, நம்முடைய வென்ப் பன்முறையும் இவ்வாக்கியத்தில் வருவது கவனிக்கத்தக்கது. **அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள்.** இதை மூலபாஷையிலுள்ளபடி வற்புறுத்திக் கூறவேண்டின் 'நம்மைவிட்டோ அவர்கள் பிரிந்துபோயினர்' எனவாகும். சபையினின்றும் முற்றிலுமாய் அவர்கள் பிரிந்துபோனது அவர்களே தங்களுக்குச் செய்துகொண்ட ஓர் காரியம். இந்த எபேசு பட்டணத்திலேயே இவ்வாறான கள்ளப்போதகர் சபையைவிட்டுப் போவார்களென்பதை பரி. பவுல் அப்போஸ்தலன் முன்னரே தீர்க்கதரிசனமாகக் கூறினார். 'உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.' அப். 20. 30. **(ஆனால்) ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களா யிருக்கவில்லை** அவர்கள் வாஸ்தவத்தில் நம்மைச் சேர்ந்தவர்களல்ல. 'அவர்களுடைய ஜீவன் நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்துவிலிருந்து உண்டாகவில்லை (1. 3.) எனவே, அவர்கள் திருச்சரீரத்தில் உயிருள்ள அங்கங்களாகவும் இருக்கவில்லை. (எபி. 6. 4–6.) (வெஸ்ற்காட்.)

அந்திக்கிறிஸ்துகள் பேர்க்கிறிஸ்தவராக விருந்தும், தாங்கள்மாத்திரம் உண்மையான கிறிஸ்தவரென்று கூறித் திரிந்தபடியினால் அவர்களுடைய சொற்சக்தி அதிகமாயது. இதிலிருந்து, 'தாங்கள் உண்மையின் அந்திக்கிறிஸ்துகளாயிருந்தும், தங்களைக் கிறிஸ்தவர்களென்று பாராட்டிக் கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொள்ளுகிறவர்களும் கிறிஸ்துசபையி லிருக்கலாம்' என்பதனை நாம் அறிகிறோம்.



**நம்முடையவர்களா யிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திரு (ந்திரு) ப்பார்களே.** கிறிஸ்துவோடும் ஒருவரோடொருவரும் உண்மையின் ஐக்யமுடையவர்களை விட்டு அவர்கள் பிரிந்ததே அவர்கள் எக்காலத்தும் உண்மையில் சகோதர ஐக்யமுடையவர்களா யிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. 'திரும்பவும் உலகத்தோடு சார்ந்துபோகிறவன் எக்காலத்திலுமே உலகத்தைவிட்டு முற்றிலுமாய்ப் பிரிந்திருந்தவனல்லன்.'

அடுத்த வாக்கியத்தி லிருப்பதை மூலபாஷையி லிருக்கிற பொருள்கொண்டு அர்த்தப்படுத்தில், **அவர்கள் வெளியாக்கப்படும்படிக்கே** என்றாகும்:—அவர்களுடைய உண்மையான தன்மை வெளியாக்கப்படும்படிக்கே இப்படி நடந்தது. அவர்கள் அந்தரங்கமாய்க் கிறிஸ்தவர்களுக்குள் நடப்பித்துக்கொண்டிருந்த தீமையைத் தடுக்கும்படிக்கே இதை வெளியாக்கும்படிக்குத் தேவன் சித்தங்கொண்டார். பரி. அப்போஸ்தலன் தம்முடைய சுவிசேஷத்தில் முழுவதிலும் கிறிஸ்துவின் வருகை காரணமாக இன்றியமையாததாய் விளைந்த செய்கையே இப்பொழுது எம்பிரான் பரமேறிய பிற்றையும் நிறைவேறுகிறது என்கிறார். என்ன? ஒளியினின்றும் அந்தகாரம் பிரிதல், சபையினின்றும் உலகம் பிரிதல், உண்மைக் கிறிஸ்தவரினின்றும் பேர்க்கிறிஸ்தவர் பிரிதல். பரி. யோவான் அப்போஸ்தலன் சபையிலேயே தவறுதல்களும் அவிசுவாசமும் இருப்பது கண்டு கிறிஸ்தவர் தம் விசுவாசத்தில் நிலைகுலையாதிருக்க வேண்டுமென்று கூறுகிறார். ஏனெனில் இவ்வாறிருப்பதும் தேவ நியமனப்படியேயாகும் எனக் காட்டுகிறார். உண்மைவெளிப்படுதலே அதனைக் கொள்ளுவோரையும் தள்ளுவோரையும் பிரித்தற்கேயன்றோ? குறிக்கப்பட்டது மிதுவேயன்றோ? தேவன் எவரும் உண்மையைத் தள்ளிவிடவேண்டுமென்று அணுவளவும் விரும்புகிறதில்லை. ஆனால் அங்ஙனம் தள்ளுவோர் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் அவர் சித்தம். பரி. பவுல் அப்போஸ்தலன் இதே உண்மையை விசுவாசிகள் பிரிக்கப்படுகிற சந்தர்ப்பத்தில் பேசுகிறார். "ஏனெ

னில் உங்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்டவர் இன்னார் என வெளிப்படுத்தப்படும் பொருட்டு உங்களில் வேதப்புரட்டரும் இருக்கவேண்டும் என ப்ளம்மர் ஐயர் சொல்லுகிறார்.

**(அவர்கள்) எல்லாரும் நம்முடையவர்களல்ல** வென்பது அவர்களில் ஒருவர்கூட நம்முடையவர்களல்ல எனப் பொருள்படும். **எல்லாரும்** எனும் பதம் பரி. அப்போஸ்தலன் யோசித்துப் பின் கூட்டினார்போலும். 'அவர்கள் எவ்வளவு நன்றாய் மாயம்பண்ணியபோதிலும், அவர்கள் எவ்வாற்றானும் ஒரு சிறிதும் நம்முடையவர்களல்லவென்பது வெளிப்படும்படிக்கே அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள்.' என்பார் வெஸ்ற்காட் அத்தியட்சர்.

மாயமான அந்திக்கிறிஸ்துகளைப்பற்றி யோசிக்கும்போதே பரி. யோவான் அப்போஸ்தலன் உண்மையான கூட்டுக்கிறிஸ்துகளையும் நினைத்துக்கொள்ளுகிறார். அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டவரை எதிர்க்கிறார்கள். நீங்களோ அவருடைய அபிஷேகத்தில் பங்கு பெறுகிறீர்கள் என்கிறார். **நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று**, அவர்கள் எல்லாரிலும் மேலான அறிவு தங்களுக்குண்டெனச் சொல்லி, தலைகீழாய்த் தப்பிதத்தில் வீழ்ந்தனர். நீங்களோ எல்லாவற்றையும் அறிகிறீர்கள். அவர்கள் 'பிரிந்துபோனார்கள்' நீங்களோ நிலைத்திருக்கிறீர்கள். இனிமேலும் நிலைத்திருப்பீர்கள்.

**மேலும்** என்பதின் பொருள் அடியில் வருமாறு:—உங்கள் மத்தியிலிருந்து பிரிந்த காரணத்தினால் அவர்களை அந்திக்கிறிஸ்து என்று அறிய ஏதுவாயிருந்ததுமன்றி, அவர்களை யறிதற்கு ஏதுவான மற்றுமோர் திட்டமான வகையையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். என்ன? நீங்கள் அறியவேண்டிய எல்லாவற்றையும் பற்றிய பூரண அறிவை உங்களுக்குக் கொடுக்கிற பரிசுத்தஆவியின் அபிஷேகமே.

கிறிஸ்து தம்முடைய பதவியின்பொருட்டு அபிஷேகம் பண்ணப்பட்டபடியே (லூக். 4. 18.) நாமும் நமது பதவியின்பொருட்டு அபிஷேகம் பண்ணப்படுகிறோம் (2 கொரி.



1. 21.). இங்கே 'அபிஷேகம்' எனத் திருப்பியிருக்கும் மூல பதம் அபிஷேகத் திரவியமாம் எண்ணெயைக் குறிக்கும். எண்ணெயென்பது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்த ஆவியை உருவகப்படுத்தி வழங்குகிறது. மனுஷராயினும் பொருட்களாயினும் அபிஷேகம் பண்ணப்படுவது சாதாரணமா யிருப்பதற்காகவன்றி பிரித்தெடுக்கப்படும் ஒரு விசேஷித்த பரிசுத்தமான காரியத்திற்காகவே செய்யப்பட்டது. **பரிசுத்தரால்** எனக் கூறப்படுவது பிதாவையேனும் குமாரனையேனும் குறிக்கும்.

பிதாவும் 'பரிசுத்தர்' என அழைக்கப்படுகிறார் (ஆப. 3. 3. ஓசி. 11. 9.). குமாரனும் 'பரிசுத்தர்' என அழைக்கப்படுகிறார். (வெளி. 3. 7. யோவா. 6. 69. அப். 3. 14; 4. 27–30.) ஆவி பிதாவினாலும் (1 கொரி. 6. 19. யோவா. 14. 26.), குமாரனாலும் (யோவா. 15. 26; 16. 7.) கொடுக்கப்படுகிறார்.

**(நீங்கள்) சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.** இதனை 'நீங்கள் (சகலரும்) எல்லாரும் அறிந்திருக்கிறீர்கள்' எனவும் வழங்குவர். அப்பொழுது இவ்வாக்கியம் 'நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியாதென்று நான் எழுதவில்லையென்று நீங்கள் எல்லாரும் உண்மையை அறிந்திருக்கிறீர்கள் எனவாம். இதனையே ஒப்புவோமெனின் இதன் பொருள் அடியில் வருமாறு:—உங்களுடைய இருதயத்தில் பரிசுத்தஆவி யிருப்பதனால், எவ்விஷயத்திலும் நீங்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று அறியவேண்டியதெல்லாம் உங்களுக்குத் தெரியும். இவ்விடத்தில் அறியவேண்டிய காரியம் கிறிஸ்துவின் உண்மையும் அந்திக்கிறிஸ்துவின் பொய்யும். கிறிஸ்துவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆவி 'உண்மையின் ஆவி.' அந்த ஆவி எல்லா உண்மைக்கும் வழி நடத்துகிறது. விசுவாசி தேவனுடைய பாதையில் நடந்துகொண்டு போகும்போதே அவர் இதைப் படிப்படியாய்ச் செய்கிறார் (நீதி. 28. 5. சங். 119. 98–100. 1 கொரி. 2. 15. யாக். 1. 5. யூதா, 5. 4, 9. 2 பே. 1. 3. 9–10.). இதன்படி பார்த்தால் விசு

வாசிக்கு எல்லாம் தெரியும். மற்றதின்படி பார்த்தால் அவனுக்கு ஒரு பாகம்மாத்திரம் தெரியும். (1 கொரி. 13. 9–12.)

21–ம் வாக்கியத்தில் வருகிற வார்த்தைகளுடைய தொடர்ச்சி எப்படியெனின், 'நான் கள்ளப்போதகரைப்பற்றி உங்களை எச்சரிக்கிறபடியால் உங்களுக்கு அவர்களைப்பற்றித் தெரியாதென நான் அபிப்பிராயப்பட்டதாய் நினைக்கவேண்டாம். சத்திய ஆவியினால் அபிஷேகம்பெற்ற உங்களுக்கு இதுவிஷயம் தெரியாமலிராது. தெரிந்த விஷயத்தையே பிறரும் கூறக் கேட்கும்போது, மகிழ்ச்சியுமுண்டன்றோ? அத்தன்மைபற்றி எழுதுகிறேன்: போதிக்கும்படி யெழுதியதன்று. தெரிந்த உண்மையை நிலைப்படுத்தும்பொருட்டே எழுதியதாம்.'

வாக். 21. **சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை யறிந்திருக்கிறதினாலும் சத்தியத்தினால் ஒரு பொய்யு முண்டாயிராதென்பதை (நீங்கள் அறிந்திருக்கிறதினாலும்) உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.** இதில் பிந்திய பாதம் மூலபாஷைப்படி 'பொய்யெனப்பட்ட ஒவ்வொன்றும் உண்மையினாலுண்டானதல்ல' எனவாம். அதாவது உண்மை தாமாகவேயிருக்கிற பிதாவிலிருந்து பொய்கள் உண்டானவையல்ல. பொய்களின் பிதாவிலிருந்துண்டாயின (யோ. 8. 44.). ஒளிக்கும் இருளுக்கும் கூறப்பட்டபடியே (1. 5.) இங்கு மெய்க்கும் பொய்க்கும் கூறப்படுகிறது. பொய்யெனப்பட்ட ஒவ்வொன்றும் இருளின் பாகமாயிருக்கிறது. அதற்கு ஒளியோடு ஒட்டும் உறவுமில்லை. ஒவ்வொரு சிறு பொய்யும் நம்மை அந்திக்கிறிஸ்துவின் தன்மையோடு ஐக்கியப்படுத்துகிறபடியால், நாம் அவற்றை எப்படிப் பகைத்து விலக்கவேண்டுமென்றும் நாம் விலக்குவது மாத்திரமேயன்றி நமது பிள்ளைகளுக்கும் அவ்வாறே கற்பிக்கவேண்டுமென்றும் காட்டுகிறது.

எந்தப் பொய்யும் மெய்யினின்று உண்டாவதல்லவென்றறிவதனால் சபையில் மெய்யின் அருகே பொய்யும் கலந்திருக்கவும், சகோதரருக்குள்ளிருந்தே அந்திக்கிறிஸ்துகள் எழும்பவும் காணும்போது சகோதரர் யாதும் பயமின்றியும் அவிசுவாச



மின்றியும் இருக்கலாம். மெய்யும் பொய்யும் ஒன்றிலிருந்தே உற்பத்தியாவது அசாத்தியம். மெய் பரத்திலிருந்து வருவது, பொய் உலகில் முளைப்பது. எந்தப் பொய்யும் மெய்யிலிருந்து உண்டாவதாகக் கூற முடியாது. அந்திக்கிறிஸ்துகளும் விசுவாசிகளும் ஒன்றாயிருத்தல் அசாத்தியம்.

இதையடுத்து 22–ம் வாக்கியத்தில் திடீரென ஓர் வினா எழுகிறது. **இயேசுவைக் கிறிஸ்துவல்லவென்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்?** 21 வாக்கியத்தை முடித்தவுடன் சிறிது தாமதிக்கிறார். யோசிக்கிறார். என்ன? பொய்யைப்பற்றியோ பேசினேன் எது? எதுவா? அன்று யார்? பொய்க்குக் காரணர் யார்? பொய்யன் யார்? இந்த யோசனையின் பின்னே 21 வாக்கியத்தையடுத்து 22–3 வசனங்களை முன் பின் சம்பந்தமின்றித் திடீரென எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. 'ஒவ்வோர் வாக்கியமும் தனித்தனியே யாதும் சம்பந்தமற்றவைபோல் காணப்படுகின்றனவென்று வெஸ்ற்காட் அத்தியட்சர் சொல்லுகிறார். வாசிப்போர் இருதயத்தில் இவ்வாக்கியங்கள் தனித்தனியே மணியொலிபோலும் விழுகின்றன.' இயேசுவை நமது பார்வையில் கொண்டுவரும்போது அவரினின்றும் முகத்தைத் திருப்புவதும், அவரே உண்மையுள்ளவர் என நமது மனச்சாக்ஷி கூறும்போது அவரை மறுதலிப்பதும், அவருக்கு விரோதமான இருளை நாம் விரும்பும் காரணத்தால் அவர் சொல்லுகிறபடி அவர் இல்லை எனச் சொல்வதும், சகல மெய்யினின்றும் நீங்கிக்கொள்வதாம். ஏனெனில் எல்லா மெய்யும் அவரிலேயே இருக்கின்றன. சத்தியத்தை யறிதற்கு வேறே மார்க்கமில்லை. ஆகையினால் இயேசுவைப் பிதாவினுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவரும், தேவ ஆவியினால் அளவின்றி யபிஷேகம் பண்ணப்பட்டவருமாகிய கிறிஸ்து அல்லவென்று மறுக்கிறவன் எவனோ அவனே அந்தப் பொய்யன். எல்லாரிலும் மேலான பொய்யன். அவன் சொல்வதிலும் பெரிய பொய் இலது. ஏனெனில் அந்தப் பொய் குமாரனை யனுப்பி அபிஷேகம் பண்ணியவராகிய பிதாவை மறுத

விக்கிறது. குமாரன் அனுப்பிய ஆவியானவரையும் மறுதலிக்கிறது. ஏனெனில் ஆவியானவர் குமாரனைப்பற்றி யறிவித்த சாக்ஷியையும் மறுதலிக்கிறதன்றோ? **அவனே அந்திக்கிறிஸ்து** என பரி. யோவான் கூறுகிறார். ஏனெனில் அப்படிப்பட்டவன் ஒவ்வொருவனும் அந்திக்கிறிஸ்துவின் தன்மையுடையவனா யிருக்கிறதுமன்றி அந்திக்கிறிஸ்துவின் ஸ்வரூபமுடையவனாகவு மிருக்கிறான்.

இவ்விடத்தில் செரிந்துவையும் (Cerinthus) மனதில் குறித்துப் பேசுகிறார். ஏனெனில் அவன் இயேசுவைக் கிறிஸ்துவல்லவென்று மறுதலித்து, இயேசுவாகிய மனிதனும் கிறிஸ்துவாகிய தேவனும் வெவ்வேறாயிருந்தவர்கள் எனக் கூறினான். அவன் இயேசு தம் ஞானஸ்நானம்வரை சாதாரணமான மனிதனாயிருந்ததாகவும், ஞானஸ்நானம் பெற்ற சமயத்தில் கிறிஸ்து அவர்மேல் வந்து இறங்கினதாகவும், அப்பொழுதுதான் அவருக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமை யளிக்கப்பட்டு அதுவரையும் அவர் அறியாதிருந்த பிதாவானவரும் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டாரென்றும் போதித்தான். இந்த ஆவி பாடுபடக்கூடிய தன்மையுடையதன்றாதலின், இயேசுவானவரின் பாடுபடுதலின் முன்னரே அவரைவிட்டுப் போய்விட்டதாம். இவ்வாறாகக் கிறிஸ்துசமயத்தின் முக்கிய இருகொள்கைகளாகிய திரு அவதாரமும், பாவ நிவாரணமும் அவன் போதனையில் மறுக்கப்பட்டன. (வேதப்புரட்டான இக்கொள்கையைப்பற்றி அனுபந்தம் பார்க்க.)

பரி. யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்துவை மறுதலித்தல் பிதாவையும் குமாரனையும் மறுதலித்தலே எனச் சாதிக்கிறார். **பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிற அவனே.** இயேசு தான் கிறிஸ்து எனும் கோட்பாட்டை மறுதலித்தலானது, பிதாவையும் குமாரனையும் மறுதலித்தலாவதெங்ஙனம் என்பதை யாராயவேண்டும். 'ஒரு மனுஷனைப்பற்றிய சித்தாந்தத்தை மறுப்பதானது அந்த மனிதனையே மறுப்பதற்குச் சமானமாயிருப்பின், அந்த சித்தாந்தமானது அந்த மனிதனுடைய தன்மையை



யும் சுபாவத்தையும் சார்ந்ததாகவேயிருக்கவேண்டும்' எனக் கூறுவர் காண்ட்லிஷ் ஐயர். உதாரணத்தின் மூலமாய் இதனை நன்கு விளக்கலாம். ஒரு பிரஜையானவன் தன் ராஜ்யத்தை யாளவிருக்கும் இளவரசைக்குறித்து ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறான். அவன் பேசுவதானது அவருடைய வயது, அவருடைய உயரம் முதலிய சாதாரணமான விஷயங்கள். இவ்விஷயங்களை அவன் மாற்றியும் தப்பிதமாகவும் கூறியகாலத்தும் அவன் இளவரசனைப்பற்றி அவர் இராஜாவாக யோக்கியதையுடையவரல்லவென மறுதலித்ததாகாது. ஆனால் பேசுவதானது இளவரசரது பிறப்பு, சுதந்தரம், அவருடைய ஒழுக்கம் முதலியவைகளைக் குறித்ததாயிருந்து, இவ்விஷயங்களால் அவர் அரசராயிருக்கும் பதவிக்கு வர ஒரு சிறிதும் அருகரல்லவெனவும் ஸ்தாபிக்கக்கூடியதாயுமிருந்தால், அப்படிப்பட்ட மனிதன் இளவரசனை மறுத்தவனாகவும் ராஜதுரோகியாகவு மிருப்பான். இவன் தன் பேச்சின் மூலமாய் இராஜாவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தவற்றையும் மறுப்பதாக விருந்தால், அவன் இளவரசனை மறுப்பவனாக மாத்திரமல்ல அரசனையுமே மறுப்பவனாக விருப்பான். (1 யோவான் காண்ட்லிஷ் வியாக்கியானம் 15 அத்தியாயம் பார்க்க.)

செரிந்து என்பவன் (Cerinthus) எம்பிரானது திரு அவதாரத்தை மறுதலித்ததன் மூலமாய்க் குமாரனை மறுதலித்த விதமும் இது காரணமாய்க் குமாரன் மூலமாய் அறிதற்கேதுவான பிதாவை மறுதலித்த விதமும் இதனின்றும் தெள்ளிதின் வெளியாம் (மத். 11. 27. யோவா. 5. 23; 14. 6. 15–23.). இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை மறுக்கிற சகல கொள்கைகளும் மனுஷீகமாக அவரை எத்துணை அதிகமாய் உயர்த்திப் பேசிய போதிலும் அவரை மனுஷனாகமாத்திரம் மதிப்பனவாம், எனவே அவை பிதாவையும் குமாரனையும் மறுதலிப்பனவாகும்.

வாக். 23. **குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை யுடையவனல்ல.** அதைச் சரியானபடி மொழிதிருப்பின் தான் உடையவனாகக் கூறுகிற 'பிதாவையுங் கூட உடையவனல்ல' என

வரும். 'அப்படிப்பட்ட மனுஷன் பிதாவைத் தன் வாயினால் மறுதலித்தற்கு அஞ்சலாம். ஒருக்கால் தான் பிதாவுக்கு விரோத மியற்றுவதாகவும் கூறலாம். எனினும் பரி. யோவான் அப்போஸ்தலன் ஒரு சிநேகிதன் திட்டமாகவே தனக்கிருக்கிறான் என மகிழ்வதுபோல் மகிழ்தற்கேதுவாய் அவன் பிதாவையுங் கூட உடையவனல்ல' என்கிறார் வெஸ்ற்காட் அத்தியட்சர்.

கள்ளப்போதகர் தாங்கள் குமாரனை மறுதலித்தும் அதே காலத்திற்றானே தாங்கள் மற்றவரினும் அதிகமாய்ப் பிதாவை அறிந்திருப்பதாகக் கூறிவந்தனர் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர் கூற்றை நிராகரிப்பது மாத்திரமேயன்றி, அவர்கள் 'பிதாவையுங் கூட உடையவரல்ல' வெனச் சாதிக்கிறார். இதனாற்போந்த தென்னவெனின் அவர்கள் தேவனுடைய குமாரர் என அழைக்கப்பெறும் சிலாக்கியத்தை இழந்துபோகிறார்கள். தேவனே பிதாவாகவும் கிறிஸ்துவே மூத்த சகோதரனாகவு மிருக்கும் அந்தப் பெரிய குடும்பத்தினின்றும் தங்களை விலக்கிக் குடும்பப் பிரஷ்டமாக்கிக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவை 'ஏற்றுக் கொள்ளுகிற' அவர்களுக்குமாத்திரம் 'தேவனுடைய பிள்ளைகளாகும் சிலாக்கியம்' கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவா. 1. 12.)

**குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.** நாம் முன் பார்த்த மறுதலிப்பைப்போலவே 'அறிக்கையிடுதலும்' கிறிஸ்துவினுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுமாறு அன்போடு முயல்வதற்கு ஏதுவாய் மனதினின்றும் உண்டாகவேண்டுமேயன்றி வாக்கினால்மாத்திரம் உண்டாவது போதுமானதன்று. இவ்வாறாகக் குமாரனை யறிக்கையிடுபவனுக்கு ஒரு வாக்குத்தத்தம் கிடைக்கிறது. என்ன? பிதாவும் குமாரனும் அவனிடத்தில் வந்து அவனையே தம் இருப்பிடமாகக் கொள்வர் (யோவா. 14. 23.). குமாரனும் பிதாவும் ஒன்று. ஒருவரையின்றி ஒருவரை நாம் அடைய முடியாது. 'குமாரனைக் குமாரன் இருக்கிறபடியே யறிதலானது பிதாவைப் பற்றி நாம் இப்பொழுது அறியக்கூடியவற்றை அறிந்ததாகும்' என்பது வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம்.



கிறிஸ்துவைக்குறித்துச் செய்யும் இந்த அறிக்கை மகா வல்லமையுடையது. இருதயத்திலிருந்துண்டாகிற இந்த அறிக்கையில் நாம் உறுதியாயிருந்தால் நாம் குமாரனிலும் பிதாவிலும் தங்கியிருக்கிறோம். தேவன் வாக்குப்பண்ணிய நித்தியஜீவனும் நமக்குண்டு.

வாக். 24. **ஆகையால் (உங்களுக்குள்ளே) ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைநிற்கக்கடவது.** '(உங்களுக்குள்ளே)' இது 22 வாக்கியத்தில் கூறப்பட்ட கள்ளப் போதகருக்கு மாறாகக் கூறப்பட்டது. பரி. யோவான் அப்போஸ்தலன் 'உங்களுக்கோ.........நீங்கள் எதைக் கொள்ளுகிறீர்கள்' என எழுத ஆரம்பித்ததுபோல் தோன்றும். அவர் நினைவு மாறிவிடுகிறது. அவர்களுடைய பலம் அடிக்கடி மாறும் தன்மையுடையதான அவர்களுடைய சுய பிரயாசத்தையும் உணர்ச்சியையும் சார்ந்ததன்றெனவும் அதிக வல்லமையுடையதும் எக்காலத்தும் நிலைத்திருக்கக் கூடியதுமான கிறிஸ்துவின் வல்லமையையே சார்ந்திருக்கிறதென்றும் கூற விரும்புகிறார். எனவே இடையில் வாக்கியத்தை மாற்றி 'உங்களுக்கோ——நிலைத்திருக்கக்கடவது' என எழுதுகிறார்.

'கிறிஸ்தவனுடைய கடைசிப்பலம் அவனுடைய சுயப்பிரயாசத்தைச் சார்ந்ததன்று, அவன் உற்சாகப்படுத்தப்படும் உண்மையினால் விளைவது. அதுவே ஜீவனுக்குரிய வல்லமை. அதையவன் தடைசெய்யக் கூடாதெனவும் எச்சரிக்கப்படுகிறான்' என வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம் உரைப்பார். அவர்களிடத்தில் நிலைத்திருக்கவேண்டியது யாது? **ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது.** அதாவது அவர்கள் கேட்டதும் விசுவாசித்ததுமாகிய சுவிசேஷ செய்தி. அவர்களுக்குள் வசிப்பதாகிய கிறிஸ்துவினுடைய வார்த்தை (கொலோ. 3. 16.). அவர்களைச் சுற்றிலுமுள்ள பலரும் விலகிப்போயினும், அவர்களையும் தங்களோடு இழுத்துச் செல்ல முயற்சித்தாலும், இது அவர்களை தேவ ஐக்கியத்தில் நிலைத்திருக்கச் செய்யும். ஏனெனில் **ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைநி**

**திருந்தால் நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.** 'நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்; நம்மில் தேவன் வாசம் பண்ணுகிறார். தேவன் நம்முடைய ஆலயமாயிருக்கிறார்; அவரில் நாம் வாசம்பண்ணுகிறோம். இந்த இருவித உபதேசங்களும் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகிய முழுவேதத்திலும் அடங்கியிருக்கிறது' எனச் சொல்லுவர் ஹோப்ட் ஐயர். நாம் ஆலயமாயிருப்பது தேவன் நம்மில் எப்படிக் கிரியை செய்கிறார் என்பதனைக் காட்டுகிறது. அவர் ஆலயமாயிருப்பதில் நாம் அவரில் கண்டுபிடிக்கக்கூடிய யாவற்றையும் விளக்குகிறது.

மற்றவர்கள் விலகிப்போகிற காலத்திலும் நிலைத்திருக்கிறவர்கள் காத்து நடக்கிற உண்மையின் வழியைப்பற்றிய நினைவானது, நாம் செல்லவேண்டிய எல்லைக்குரிய நினைவையும் அந்த எல்லையை அடையக்கூடும் என வாக்குப்பண்ணப்பட்ட உறுதியையும் நமக்குத் தருகிறது. இப்பாதையில் நடப்பதற்கு மற்றவர் தப்பிப்போயினும் நிலைத்திருப்பவர் தப்பாது செல்வர்.

வாக். 25. **நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.** செய்யப்பட்ட வாக்குத்தத்தம் இது, குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பதனாலுண்டாகும் நித்தியஜீவன். இந்த வாக்குத்தத்தம் திட்டமாய்க் கர்த்தரால் சொல்லப்பட்டதாக நாம் எங்கும் (யாக். 1. 2. வெளி. 2. 10. நீங்கலாக) பார்க்க முடியாது. அவருடைய போதகத்தின் முழு நோக்கமும் கருத்தும் மனுஷர் இந்த ஜீவனைத் தேடிக் கண்டு கொள்ளும்படியாக அவர்களை வழிநடத்துவதேயாம் (யோவா. 3. 15; 4. 14; 6. 40; 10. 10.). இவ்வாறு கண்டுபிடிக்கும்படி விடப்பட்டதே வாக்குத்தத்தமாகும் என வெஸ்ற்காட் அத்தியட்சர் கூறுகிறார்.

வாக். 26. **உங்களை வஞ்சிக்கிற (வழிதப்பும்படி செய்கிற) வர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.** 'இவைகளை அதாவது' 'தாங்கள் புறம்பாக மனிதரை கிறிஸ்து சபையின் ஐக்யத்தினின்று வழிதப்பச் செய்கிறவர்களாக'



நாம் பார்த்த அந்திக்கிறிஸ்துவைக்குறித்துச் சொன்ன எச்சரிப்புகளை கள்ளப்போதகர் கிறிஸ்தவரை நோக்கி 'நீங்கள் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டும். எங்களைப் பின்பற்றுங்கள். நாங்கள் உங்களுக்குக் கிறிஸ்துவின் போதகத்திலடங்கிய ஆழ்ந்தமைந்த கருத்துகளை வெளிப்படுத்துவோம். எங்களுக்கு அதிலடங்கிய அந்தரங்கங்களெல்லாம் வெகு நன்றாய்த் தெரியும். உங்களுக்கு அவற்றைப் போதிப்பது அவசியமாதல் நோக்கி அவற்றைப் போதிப்போம்' என இடைவிடாது கூறிக்கொண்டேயிருந்தனர். பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்கள் பெற்ற அபிஷேகத்தைப்பற்றியும் அவர்கள் மத்தியில் வாசம்பண்ணும் தெய்வகுருவாகிய பரிசுத்த ஆவியைப்பற்றியும் ஞாபகப்படுத்துகிறார். (5. 20.)

27. **([1]உங்களுக்கோ) நீங்கள் அவராலே[2] பெற்ற[3] அபிஷேகம்[4] உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை.** 'அபிஷேகம் நிலைத்திருக்கிறது' 'தேவன் தாம் செய்யும் காரியத்தை எப்படிச் செய்வார் என்பதை யுற்றுநோக்கி எழுதுகிறார். தேவன் தாம் கொடுப்பவற்றைத் திட்டமாகக் கொடுத்துவிடுவார்' என்பது வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம். பரிசுத்தஆவி தங்கியிருப்பதால் அவர்களுக்கு வேறே போதகன் அவசியமில்லை. தருக்கியலையும் கள்ளப்போதகருக்குமுன் தாங்கள் பெற்ற இந்த அபிஷேகத்தைக் கூசாது தைரியமாயுரைக்கலாம்.

அப்போஸ்தலன் இவர்களுக்கு வேறே கிறிஸ்தவ போதகர் வேண்டாமென்றாவது, அப்போஸ்தலராவது சபையிலுள்ள வேறு யாராவது போதிக்கவேண்டா மென்றாவது சொல்லவில்லை. எபி. 5. 12-ல் அபிஷேகம்பெற்ற கிறிஸ்தவர் தங்க

[1] உங்கள் என்பது மூலபாஷையில் அவர்களில் மாறான உங்களுக்கு என்று அர்த்தப்படுகிறது.

[2] பரிசுத்தரால் (வாக். 20.). கிறிஸ்துவினால் (வாக். 25.).

[3] திட்டமாய்ப் பெற்றுக்கொண்டீர்களெனப் பொருள்படும்.

[4] 20-ம் வாக்கியம் வியாக்கியானம் பார்க்க.

ளுக்கு ஒரு போதகர் வேண்டுமென்றிருந்ததை நாம் வாசிக்கிறோம். அப்படிப்பட்ட போதகத்துக்கு சபையில் பேசுகிற பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்குச் செவிகொடுப்பதுபோல் அதிக பயபக்தியோடும் செவிகொடுப்பார். இந்தக் கள்ளப் போதகரோ தாங்கள் குமாரனை மறுதலித்த காரணத்தினால், பரமகுருவாகிய பரிசுத்த ஆவியினின்றும் பிரிந்துகொண்டார்கள். ஆதலினால் அவர்களுக்குச் செவி கொடுக்கக்கூடாது. தாம் ஒருதடவை கூறியதையே பரி. அப்போஸ்தலன் திரும்பவும் கூறுகிறார்—**(ஆனால்) அந்த (அவருடைய) அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிற (படியே)து, அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.**

கூறியதையே திரும்பவும் வற்புறுத்திக் கூறுதற்குக் காரணம் உண்டு. தவறான கொள்கைகளும், வேதப்புரட்டுகளும், பிரிவினைகளும் ஆங்காங்கே உண்டாய்க்கொண்டிருக்கின்றன. தாங்கள் நேராகக் கண்டு கேட்டிருந்தவர்களும், போதிக்கும்படியாக இயேசுவினிடத்திலிருந்து கட்டளை பெற்றவர்களுமாகிய அப்போஸ்தலருள் நம்முடைய பரி. யோவான் அப்போஸ்தலன்தவிர மற்றவரெல்லாம் இறந்துபோனார். மனுஷர் உண்மையானவரும் குறைவற்றவருமான பரம குருவுக்குச் செவிகொடாது குறைவுள்ள மானிடக் குருக்களுக்குச் செவிசாய்க்கும் இயல்பினர் என்பதையும் நன்கறிந்தார். அப்போஸ்தல பிதாவாகிய தாமும் இறந்துவிடின் தமது பிள்ளைகள் ஒருவாறு அநாதப் பிள்ளைகள்போலிருப்பார் எனக் கண்டார். கிறிஸ்துவால் தெரிந்துகொள்ளப்பட்ட சகல அப்போஸ்தலரும் இறந்துவிட்டால் யார் இவர்களைத் தப்பிதங்களிலும் குறைவுகளிலுமிருந்து உண்மையான வழியில் நடத்துவாரோவென வெண்ணி எங்கினார். ஆகவே அவர் மாறாதவரும் உண்மையானவரும் நிலையானவருமாகிய பரமகுருவாகிய பரிசுத்த ஆவியையே தங்களுடைய பெலத்திற்கும் அறிவிற்கும் காரணராகச் சார்ந்திருக்கவேண்டுமெனக் கூறுகிறார்.



**உங்களுக்குப் போதிக்கிற......உங்களுக்குப் போதித்த** ‘போதித்த’ வென்பது அவர்களுக்குப் ‘பரிசுத்தஆவி கொடுக்கப்பட்ட’ அந்த விசேஷித்த சம்பவத்தைக் குறிக்கும். ‘போதிக்கிற’ வென்பது இடைவிடாது பரிசுத்தஆவி அவர்களுக்குள் செய்கிற கிரியையைக் குறிக்கும். இந்தக் கிரியையானது ‘அவர்கள் நினைவினாலும் காட்சியினாலும் புதிது புதிதாய் அடைகிற காரியங்களுக்கு இயைய கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய கிரியையைப்பற்றியும் புதிது புதிதான காரியங்களைப் போதிப்பது’ எனக் கூறுவார் வெஸ்ற்காட் அத்தியட்சர்.

கிறிஸ்து திரும்பவும் வரும்போது தமது பிள்ளைகள் அவருக்கு முன்பாக வெட்கத்தோடும் பயத்தோடும் ஒதுங்கி நிற்பவர்களைப்போலாது, தைரியமாய் அவர்முன் நிற்கும்படியாக இப்பொழுதும் தங்கள் எதிரியின் முன்னிலையில் தங்கள் ஜீவனை நன்குணர்ந்து தேவனில் நிலைத்திருந்து தங்களுடைய நீதியான கிரியைகளினால் (வாக். 23.), தாங்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகள்தானெனக் காட்டுமாறு உற்சாகப்படுத்திப் போதித்துப் புத்தி சொல்லுகிறார்.

(வாக். 28.) **இப்படியிருக்க, (இப்பொழுதும்) பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.**

**நாம் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு** இவ்விடத்தில் தைரியம் என்பது மூலபாஷையின்படிக்கு பயமின்றிக் கூசாமல் மனதில் நினைத்ததை அச்சமின்றிப் பேசுதலைக் குறிக்கும். இந்நிருபத்திலும் எபிரெயர் நிருபத்திலும் விசுவாசியொருவன் தேவனைச் சந்தித்துத் தனக்குள்ள நம்பிக்கையின் மூலமாய் அச்சமின்றி யிருத்தலையே குறிக்கும் (3. 21; 4. 17. 5–14.). இந்த வார்த்தை ‘ஒவ்வொருவனும் தன்னுடைய ஜீவியத்தைப்பற்றிக் கிறிஸ்துவினுடைய (2 கொரி. 5. 10.), அல்லது தேவனுடைய (ரோம. 14. 10.), நியாயாசனத்தின் முன் கணக்கொப்பிக்கவேண்டியதைப்பற்றி (ரோம. 14. 12.), பரி.

பவுல் அப்போஸ்தலன் கூறியதை ஒருவாறு குறிக்கும்' என்னும் வியாக்கியானம் வெஸ்ற்காட் அத்தியட்சருடையது.

நம்முடைய ஜீவநர் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால், நாமும் நம் உடன் அப்போஸ்தலரும் நியாயத்தீர்ப்புநாளில் அவர்களுக்குள் சந்தோஷமும் தைரியமுமுடையவர்களாயிருப்பார்கள் எனப் பரி. யோவான் அப்போஸ்தலன் சொண்டதாகச் சிலர் கருதுகிறார்கள் (1 தெச. 2. 19, 20.). இங்கே 'நாம்' எனக் கூறப்படுவது 'நீங்களும் நானும்' எனப் பொருள்படும். இங்கே குறிக்கப்படுவது அவருடைய வருகையின் நாளில் அவரில் நிலைத்திருந்தோர் அடையும் மகிழ்ச்சியைக் குறிக்கும்.

இவ்விடத்தில் 'வருகை' என மொழிபெயர்த்திருக்கும் மூல பதத்தை பரி. யோவான் அப்போஸ்தலன் வேறு எங்கும் உபயோகியாவிடினும், புதிய ஏற்பாட்டில் நியாயத்தீர்ப்புக்காகத் திரும்ப வருவதைக் குறிப்பதற்குப் பெரும்பாலும் வழங்கியிருக்கும் பதம் இதுவே. (மத். 21. 3, 27, 37, 39. 1 கொரி. 15. 23. 1 தெச. 2. 19.)

# நான்காம் பிரிவு.

---

## தேவன் அன்பாயிருக்கிறார்.

2. 29–3. 12. தேவனுடைய அன்பினால் நாம் பெற்றது என்ன?

இந்நிருபத்தின் இரண்டாம் பாகம் சற்றேறக்குறைய இரண்டாம் அதிகாரத்தின் முடிவிலும் மூன்றாம் அதிகாரத்தின் துவக்கத்திலும் ஆரம்பிக்கிறது. அப்போஸ்தலன் இந்நிருபத்தை யெழுதும்போதே அதிகாரம் அதிகாரமாகப் பிரித்தெழுதவில்லை. அவர் காலத்துக்கு நெடுநாள் பிந்தியவரே இவ்வாறு பிரித்தார். இந்நிருபத்தின் எப்பாகத்திலும் ஒரு பாகம் முடித்து அடுத்த பாகம் ஆரம்பிக்கிறமாதிரி வெகு தெளிவாயில்லை. முதல் பாகத்தையும் வெவ்வேறு வியாக்கியான கர்த்தர் வெவ்வேறு இடங்களிற் பிரிப்பர். சிலர் 27, 28-ம் வசனங்களினிடையே பிரிப்பர். மற்றும் சிலர் 28, 29-ம் வசனங்களினிடையே பிரிப்பர். இரண்டாம் அதிகாரத்தோடு முடிக்கும் சிலருமுளர்.

இவ்விரு பிரிவுகளுக்கும் அதிநெருங்கிய சம்பந்தம் இருக்கிறபடியால், அவ்விடத்தில் பிரிவே யில்லையெனக் கருதப்படாது. ஒன்றை முடித்து மற்றொன்றைத் திடீரென ஆரம்பித்துவிடவில்லை. வரவரச் சிறிது சிறிதாய் மாறிக்கொண்டு வருகிறது. ஆனால் இரண்டாம் பாகத்திற்கு வந்தவுடன் அது வேறு பாகந்தான் எனத் தெளிவாய் விளங்குகிறது. இதுவரையும் இருளுக்கும் ஒளிக்குமுள்ள வித்தியாசத்தைக் கூறிக்கொண்டுவந்தது இப்பொழுது அன்புக்கும் பகைக்குமுள்ள வித்தியாசமாக மாறிவிடுகிறது. தேவனுக்கும் உலகத்துக்குமுள்ள மாறுபாட்டைக்குறித்து வந்தது இப்பொழுது உலகத்துக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் உள்ள வித்தியாசமாய் மாறிவிடுகிறது. தேவனோடு ஐக்கியமாகுதல் எனும் கருத்து

தேவனுடைய பிள்ளைகளாகுதல் எனவாகிவிடுகிறது. 'ஒளியில் நடத்தல்' என்பது 'நீதியைச் செய்தல்' எனக் கூறப்படுகிறது. முன் கூறப்பட்ட கருத்துகளே திரும்பக் கூறப்படினும் அவை வேறுவிதமாய்க் கூறப்படுகின்றன. இரண்டாம் வருகை, விசுவாசிகளின் தைரியம், தேவனுக்கும் விசுவாசிகளுக்குமுள்ள பிதா புத்ர சம்பந்தமுதலிய புதுக் கருத்துகளும் ஆங்காங்கே கூறப்படுகின்றன. இரு பிரிவுகளும் எவ்விடத்திலிருந்து பிரிகின்றன என்பதைப்பற்றிய சந்தேகம் நிகழினும், இரு பிரிவும் ஒன்றுதானெனக் கூறுவதற்கான சந்தேகம் நிகழவில்லை.

இதுகாறும் பரி. அப்போஸ்தலன் தாம் முக்ய கருத்துக்களாகக் கூறப்போகும் இருவிஷயங்களுக்கு இசைவாகவே கூறிக்கொண்டு வந்தார். அவையாவன: அன்பு வெளிப்படுத்தப்பட்டதும், அன்பினால் நாமடைந்ததும். மனிதன் அதிக சந்தோஷத்தோடும் பிரீதியோடும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செய்தி தேவன் அன்பாயிருக்கிறார் என்பதே. இதை ஏற்றுக்கொள்ளுமுன் வேறொரு மோசமும் நேரிடக்கூடும். என்ன? 'தேவன் ஒளியாயிருக்கிறார்' என்பதை ஏற்றுக்கொள்ளாதே போவோமோவெனும் மோசம். அவர் ஒளியாயிருக்கிறார் என்பதை பயபக்தியோடும் ஏற்றுக்கொண்ட பின்னரே அவர் அன்பாயிருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நியாயப்பிரமாணம் சுவிசேஷத்திற்கு முந்தியது. தேவனுடைய அன்பைப்பற்றிய பரிவான வார்த்தைகளைப் பாவி தன் ஆத்ம ஈடேற்றத்துக் கேதுவாய் ஏற்றுக்கொள்ளுமுன்னரே அந்தப் பாவி தன் பாவத்தையும் பாவத்தினால் விளையும் தீமையையும்பற்றி நன்குணருமாறு பலமாய் எச்சரிக்கப்படவேண்டும். தேவனுடைய பரிசுத்தத்தின் தூயஒளியின் மூலமாய் மனிதன் தன் இழிவான பாவநிலையை யுணர்ந்து, அவன் தன்னையே வஞ்சித்துக்கொள்ளும் அந்தகாரத்தினின்றும் தன்னை மெய்யான ஒளிக்குக் கொண்டுவரவேண்டும். அப்படியானால் தான் தேவனுடைய அன்பின் ஏற்றத்தைப் பாவியுணர்ந்து அனுபவிக்கக்கூடும். அதுபற்



றியே பரி. யோவான் அப்போஸ்தலன் தேவன் ஒளியாயிருக்கிறார் என்னும் கண்டிப்பும், பயபக்தியுமான செய்தியைக் கூறி முடிக்கும்பரியந்தம் தேவன் அன்பாயிருக்கிறார் எனும் அந்த இன்பமான செய்தியைக் கூறாதிருந்தனர். பின்னும் தாம் சொல்லும்படி அதிகமாய் விரும்பிய இந்தச் செய்தியைக் கூறவாரம்பிக்கும்போதும், அன்பாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பவருக்கு இருக்கவேண்டிய பரிசுத்த ஜீவியத்தைப்பற்றிப் பேசுகிறார். (3. 3.)

**தேவனுடைய அன்பினால் நாம் பெற்ற பேறு என்ன?—தேவகுமாரராகும் சிலாக்கியம்.**

*தேவனுக்குப் பிள்ளைகளா யிருப்பவரின் லக்ஷணங்களும், பிள்ளைகளல்லாதவருடைய லக்ஷணங்களும், தேவனுடைய பிள்ளைகளும், பிசாசினுடைய பிள்ளைகளும்.* 2. 29–3. 12.

(2. 29.) அவர் நீதியுள்ளவரா யிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திரு(ந்தால்)ப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்திருக்கிறானென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

(3. 1.) நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்ப(டவேண்டியதற்கா)டுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டி(யிருக்கிற-கொடுத்திருந்த)ன அன்பு எவ்வளவு பெரிதென்று (என்னவிதமானதென்று) பாருங்கள்; நாம் அப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம். உலகம் அவரை அறியாதபடியினாலே (இக்காரணத்தையிட்டு) (அது) நம்மையும் அறியவில்லை. (2) பிரியமானவர்களே, இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாகவே யிருப்போமென்று அறிந்திருக்கிறோம், ஏனென்றால் அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம். (3) அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவரா யிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

(4) பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (5) அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க (அகற்றிப்போட) வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை, (6) அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவு (கண்டிருக்கவு)மில்லை, அவரை அறி(ந்திருக்கவு)யவுமில்லை. (7) என் சிறுபிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்க (வழிதப்பப் பண்ண)ப்படாதிருங்கள், நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவரா யிருக்கிறதுபோல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். (8) பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே (இதற்காகவே) தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (9) தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்; ஏனெனில் அவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியால் பாவஞ்செய்யமாட்டான். (செய்யமுடியாது) (10) இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசினுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலிருக்கிறவனெவனும் தேவனால் உண்டானவனல்ல. (11) ஏனென்றால் நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்(னும்)பதே நீங்கள் ஆதிமுதல் கேட்ட விசேஷமாயிருக்கிறது. (12) பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போல இருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமா யிருந்ததினிமித்தந்தானே.

*இந்தப் பிரிவில் முதலாவது பரி. யோவான் அப்போஸ்தலன் தேவனுடைய பிள்ளைகளுடைய தற்கால, பிற்கால ஸ்திதிகளைப் பற்றிச் சொல்லுகிறார் (2. 29; 3. 1.) உலகம் அவர்களை*



*அறியாதேபோயினும் அவர்கள் தங்கள் செய்கையின்படி பிதாவினுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர் காணப்படும்போது அவர்கள் 'அவருக்கு ஒப்பாயி'ருக்கப் போகிறார்கள். ஆகையினால் இனிமேல் அவர்களுக்கு வரப்போகிற அந்த மகிமையைப்பற்றிய நினைவே இப்பொழுதும் அவர்கள் தூய்மையானவற்றையே நாடிப் புரியத் தூண்டவேண்டும். பரி. அப்போஸ்தலன் அதன்பின் தேவனுடைய பிள்ளைகளையும் பிசாசினுடைய பிள்ளைகளையும் பேதப்படுத்துகிற அடையாளங்கள் இன்னவெனக் காட்டுகிறார். (4–9.) நீதி தேவனுடைய பிள்ளைகளையும் பாவம் பிசாசின் மக்களையும் காட்டும். பாவமும் செய்துகொண்டு தேவனுடைய பிள்ளைகளாயுமிருப்பது பொருந்தாதகாரியம். இந்த வித்தியாசத்தைத் தோன்றாதபடி செய்யும் எப்போதனையும் பொய்யானதே. கடைசியாக அவர், இம்மாறுபாடான காரியங்கள் அவரவர்கள் செயல்களில் அவசியம் வெளிப்படவேண்டுமெனவும் சொல்லுகிறார். கிறிஸ்துவின் அன்பைப்போன்ற அன்பிலும், காயீனின் பகையைப் போன்ற பகையிலும் வெளிப்படும். (10–12.)*

*தேவனுடைய குமாரருக்குரிய சிலாக்கியங்களைப்பற்றிப் பேசாமுன் பரி. யோவான் அப்போஸ்தலன் அந்தக் குமாரத்துவத்துக்குரிய லக்ஷணமாக நீதியைச் சொல்லுகிறார். அவர் சொல்லப்புகுவது 'நீதியே நீதியைப் பிறப்பிக்கும்' என்பதே.*

(வாக். 29.) அவர் நீதியுள்ளவரா யிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திரு(ந்தால்)ப்பதனால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரி(னா)ல் பிறந்திருக்கிறானென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். *இங்கு கூறப்படும்* அவர், அவரால் *என்பன முற்கூறிய வாக்கியத்தில் குறிக்கப்பட்ட கிறிஸ்துவையே குறிக்கும். ஆனால் 'கிறிஸ்துவால் பிறந்தவன்' என்று வேதத்தில் எங்கும் வழங்கப்படாமையாலும், வேதத்தில் தேவனால் பிறந்தவன், ஆவியால் பிறந்தவன் எனவே வழங்குவதாலும் இங்கு குறிக்கப்பட்ட அவர், அவரால் என்பன கிறிஸ்துவைக் குறியாதெனவும் சிலர் மறுக்கலாம். எனினும் 'பரி. யோவான் அப்*

போஸ்தலன் தேவன் மனுஷரோடு சம்பந்தப்படும் விஷயத்தில் தேவன் வேறு கிறிஸ்து வேறாக நினைப்பாரல்லர் (வாக். 20.). அன்றியும் கிறிஸ்துவை அவருடைய தெய்வ சுபாவத்தோடன்றி மனித சுபாவத்தில்மாத்திரம் சிந்திப்பவருமல்ல.' இவ்வாறாக தேவனுடைய தெய்வீக மனுஷ லக்ஷணத்தினின்று அடுத்ததற்கு மாறுவது வெகு எளிதே' என்பது வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம்.

**தெரிந்திருப்பதனால்** என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மூலபதம் மனதினால் பெற்ற காட்சியை, தெரிதலைப் பெறுதல் மாத்திரமல்ல, தெரிதலைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளுதலைக் குறிக்கும் (5. 13; 5. 18.). 'தேவன் நீதியுள்ளவராயிருக்கிறாரெனும் உண்மையை நீங்கள் அறிந்திருந்தால்................ நீங்கள் கண்டுகொள்ளத் தவறமாட்டீர்கள்.' (அதாவது 'அனுபவத்தினாற் கண்டுகொள்ள) 'நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்' (யோவா. 13. 7.). ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் (காண்கிறீர்.). (21. 17.) என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். (14. 7.)

தேவ புத்திரனாதலை யறிதலுக்கு அடையாளம் நீதியான ஜீவியமாம். நீதியைச் செய்கிறவனெவனும் எனக் குறிக்கப்பட்டதால், செய்யாதவனெவனும் தேவ புத்திரன் அல்லனென மறுக்கப்பட்டது. வெஸ்ற்காட் அத்தியட்சர் 'நாம் ஒரே ஒழுங்குப்படி எப்போதும் நியாயந்தீர்க்கிறதில்லை. அடிக்கடி மாறிவிடுகிறோம். சிலரைத் தப்பவிடுகிறோம். தேவ சட்டமோ எவனையும் தப்பவிடுகிறதில்லை' என்கிறார். நீதியை அதாவது தேவ சுபாவத்திற்கு நேரான தேவனுடைய நீதியைச் **செய்கிற** (செய்கிறதையே வழக்கமாகக் கொண்டவென்பது மூலபாஷையின் தாத்பரியம்) **எவனும் அவரில் (ரால்) பிறந்திருக்கிறான்.** பரிசுத்த ஜீவியமாக நீதியையே செய்தல் தேவகுமாரராதற்குக் காரணமன்று. ஆனால் அந்த ஜீவியம் தேவகுமார



ரானதின் அடையாளமாம். ஏனெனில் தேவனே எல்லா நீதிக்கும் ஊற்றாய், ஆதிகாரணராய் இருக்கிறார். தேவனாற் பிறந்ததைக் காட்டுகிற மற்றும் அடையாளங்கள் சகோதர சிநேகமும், இயேசுவையே கிறிஸ்துவாகக்கொண்டு அவரை விசுவாசித்தலுமாம். இம்மூன்று அடையாளங்களும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன.

'மனிதர் தேவகுமாரராகும் அந்த உண்மை ஸ்வரூபம் பரி. யோவான் அப்போஸ்தலனின் கண்முன் காணப்படுகிறது போலும். எனவே தாம் அதைப்பற்றிச் சிந்திக்கும்போதே மற்றவரும் அது தங்கள் கண்முன் இருக்கிறதாகப் பாவித்து அதைப்பற்றிச் சிந்திக்கச் சொல்லுகிறார் என வெஸ்ட்காட் அத்தியட்சர் உரைப்பார்.

(வாக். 1.) [1] **நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படவேண்டியதற்காக பிதாவானவர் நமக்குப் பாராட்டியிருக்கிற அன்பு [2]என்னவிதமானதென்று பாருங்கள்;[3]** தேவன் அன்பாயிருக்கிறார். அன்பே அவர் தன்மை (4, 8, 16.). நம்மைத் தம் பிள்ளைகள் என அழைக்கும்படி அவ்வளவுதூரம் நம்மில் அன்புகூருவது மாத்திரமன்று; அதிலும் மேலாகத் தமது அன்பையே நமக்கும் அளிக்கின்றார். பிதாவானவர் (தேவன் எனக் கூறுவதிலும் இவ்வாறு கூறுவது அதிகப் பொருத்தமுடைத்து. ஏனெனில் பிதாவானவரா யிருப்பவர் நம்முடைய பிதாவன்றோ) இந்த அன்பை நமக்குப் பாராட்டியிருக்கிறார். குமாரனுக்குள் அவர் நமக்கு அளித்த பெருங் கொடையிது

---

[1] 'பிதாவானவர்' 'நமக்கு' என்பன மூலபாஷையிலும் சேர்ந்தே வழங்குகின்றன. அதாவது இரண்டிற்குமுள்ள வித்தியாசம் இப்பொழுது நன்கு புலப்படும். பிதாவானவர் மகா பரிசுத்தர். நமக்கு அரும்பெரும் பாவிகட்கு.

[2] 'என்னவிதம்' என்பது 'எவ்வாறென' அர்த்தமில்லை என்ன ஆச்சரியமானவிதம் எனப் பொருள்படும்.

[3] பாருங்கள் என்பதன் மூலபதம் கண்ணினாற் பார்க்கக்கூடியவொன்றையே குறிப்பதற்கு வழங்கும் பதம்.

(யோவா. 3. 16.). இந்தக் கொடையே நாம் அவர் சாயலைத்தரித்துக்கொள்ளச்செய்து நம்மை அவர் பிள்ளைகளாக்கியது. ஏனெனில் நமது ஆவியின் ஜீவனுக்கு இந்த அன்பே ஆதாரம். அவர் நமக்கு இவ்வன்பைக் கொடுத்த காரணமே அதுதான். (வேண்டிய தற்காக) இந்தக் கொடையேதவிர வேறெதுவும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் பாத்தியதையை நமக்குக் கொடுக்க முடியாது. (யோவா, 1. 12.)

பரி. பவுல் அப்போஸ்தலனும், பரி. யோவான் அப்போஸ்தலனும் ஆகிய இருவரும் கிறிஸ்தவர்க்கும் தேவனுக்குமுள்ள பிதா புத்ர சம்பந்தத்தையே கூறுகின்றனர். ஆனால் இருவரும் வெவ்வேறு பதங்களை வழங்குகின்றனர். பரி. பவுல் அப்போஸ்தலன் 'குமாரர்' என வழங்குகிறார். பரி. யோவான் அப்போஸ்தலன் 'பிள்ளைகள்' என வழங்குகிறார். இவர்கள் வழங்கும் பதங்களைப்போலவே இவர்கள் வழங்கும் கருத்துகளும் வேறுபாடுடையன. ஒருவன் மற்றொரு குடும்பத்திலொருவனைத் தன் குமாரனாகச் சுவிகாரம் செய்துகொள்ளுகிறான். சுவிகாரம் பண்ணப்பட்டவன் தன்னைப் பிதாவென்றழைக்கும்படி சட்டத்துக்கிசையப் பாத்தியதை யுடையவனாகின்றான். பரி. பவுல் அப்போஸ்தலன் வசித்த ரோமசட்டத்தின்படி சுவிகாரம் பண்ணியவன் பண்ணப்பட்டவனுக்கு உண்மையாகவே பிதாவாகிவிடுகிறான். பரி. பவுல் இவ்விதமாய்த் தேவன் பாவிகளாய் நம்மைச் சுவிகாரம் செய்துகொண்டதாய்க் கூறுகிறார். பரி. யோவான் அப்போஸ்தலன் பிள்ளைகள் என வழங்குகிறார். அவர் கருத்துப்படி பிள்ளைகட்கும் பிதாவுக்கும் ஒரே தன்மையுண்டு. தேவன் தம்மிலிருந்தே நம்மைப் பிறப்பிக்கிறார். தம்முடைய சுபாவத்தையே நமக்கு அளிக்கிறார். தேவன் நமக்குக் கொடுத்தவற்றை நாம் விர்த்தி செய்துகொண்டு வரவரப் பலமடைந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருகிறோம். இந்தப் பாகத்தில் பரி. யோவான் அப்போஸ்தலன் 'அவருடைய பிள்ளைகள்' எனமாத்திரம் அழையாதபடி கிறிஸ்தவருடைய முழு நாமமாக 'தேவனுடைய



பிள்ளைகள் எனக் கூறி (வாக். 10; 5. 2. யோ. 1. 12; 11. 52; ரோ. 8. 16; 9. 8. பிலி. 2. 15.), கிறிஸ்தவருடைய நிலைமை (தேவனுடையிருக்கிறவருடைய பிள்ளைகள்) யின் பெருமையை வற்புறுத்துகிறார்' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர்.

நாம் அப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம். அப்போஸ்தலன் நாம் தேவனுடைய பிள்ளைகள் என எழுதினார். எழுதியவுடன் அவருக்கே அதியாச்சரியமுண்டாயது. எழுதிக்கொண்டிருந்த இறகைக் கீழே வைத்தார். யோசிக்கிறார், என்ன யோசனை? கிறிஸ்தவரின் பெருமையைப்பற்றிய யோசனை. என்ன பெருமை! என்ன சிலாக்கியம்! எத்தனை உயர்வு! எவ்வளவு மேன்மை! தேவனுடைய பிள்ளைகளாகும் பெருமையும் பதவியும் அதியாச்சரியமானவையன்றோ. இத்தனை ஆச்சரிய பதவி நமக்கே கிடைத்ததென யோசித்து அடக்கொணா அகமகிழ்ச்சி கொள்ளுகிறார். இப்பதவி கிடைத்தது சந்தேகமல்ல, உண்மையே. உண்மையெனவும் அவருக்குத் தெரியும். உடனே கீழ்வைத்த இறகை எடுத்துக்கொள்ளுகிறார். திரும்பவும் எழுதுகிறார். எழுதியதென்ன? நாம் அப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம். அத்தனைப் பெருமையும் நமக்கல்லவா என வெழுதுகிறார்.

இக்காரணத்தையிட்டு அதாவது நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருப்பதினால் உலகம் நம்மை அறியவில்லை. 'நம்முடைய கருத்தையும், நாம் காரியங்களைச்செய்யும் வகையையும், நம்முடைய ஒழுக்கத்தையும் உலகம் உற்றாராய்ந்து அறிந்துகொள்ளவில்லை. ஏனெனில் அனுதாபத்தோடு நோக்கினாலன்றிக் காய்வதன்கண் உற்றகுணந் தோன்றாதன்றோ' (வெஸ்ற்காட்). உலகம் நம்மிடத்துள்ள தெய்வ சுபாவத்திற்காக ஒரு சிறிதும் பிரீதி காட்டுவதில்லை. ஏனெனில் உலகம் அறியாதபடியினால் தேவனுடைய பூரண குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய் வெளியாக்கப்பட்ட தெய்வ சுபாவத்தோடு உலகத்திற்கு ஒரு சிறிதும் அனுதாபமில்லை.

உலகினர் நம்முடைய செயல்களை மாறாகக்கொண்டு நம்மைப் பழிக்கும்போது அவர் பழிப்பையும் இழிப்பையும் சகிப்

பதற்கு இவ்வாக்கியம் நமக்குப் பேருதவிசெய்கிறது. நாம் அன்புடன் பரிசுத்தமாய் ஜீவிப்பின் உலகினர் நம் வசப்பட்டு நம்மை மதிப்பார் எனவெண்ணுவோம். அவர்கள் அப்படியிராததுகண்டு, நாம் தளர்ச்சியடையவும் கூடும். ஆனால் பரி. யோவான் உலகம் இப்படியிருக்கத்தான் வேண்டும் எனக் கூறுகிறார். உலகினர்க்கும் கிறிஸ்தவர்க்கும் ஒற்றுமையும் அனுதாபமுமில்லை (யோவா. 7. 7; 16. 2. 3. இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்க.). பரி. அகஸ்தீன் என்பவர் உலகினர் தெய்வத்தின்மாட்டு நடந்துகொள்ளும் விதத்தை ஜன்னிகண்டு பிரக்ஞையற்றிருக்கு மொருவன்தனைக் குணமாக்கவந்திருக்கும் மருத்துவன்மாட்டு நடந்துகொள்ளும்விதத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

வாக். 2. **பிரியமானவர்களே, இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; பிரியமானவர்களே** என்று முதல் பாகத்தில் ஒரேதடவைதான், அன்பைப்பற்றிச் சில வசனங்களிற் கூறுமிடத்து, விளித்திருக்கிறார். (2. 7.) ஆனால் இப்பொழுது முழுவதும் அன்பைப்பற்றியே பேசிக்கொண்டுபோவதால் **பிரியமானவர்களே** என்று பன்முறையும் விளிக்கிறார். அதேபிரகாரமாய் 13-ம் வாக்கியத்தில் சகோதர சிநேகத்தைப்பற்றிப் பேசும்போது 'சகோதரரே' என விளிக்கிறார். **இப்பொழுது** என்பது **இன்னும்** என்பதோடு மாறுபட வற்புறுத்தப்படுகிறது. இவ்வுலகத்தில் நாமடையும் சிலாக்கியங்கள் இன்னின்னவெனத் தெளிவாய்த் தெரிகிறது. இனி வரும் உலகத்தில் நமக்குள்ள மகிமை இன்னும் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 'கிறிஸ்தவர் எப்படியிருக்கிறார்களெனும் கருத்தும், இனி எப்படியிருப்பார்களெனும் கருத்தும் வெவ்வேறு கூறப்படாமல் ஒரே கருத்துப்போலவே வரையப்படுகின்றன. தற்கால உண்மையும் இனி வருங்கால நம்பிக்கையும் ஜீவனுக்கு அதிக உறுதிபயப்பன' என்று வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியான முரைப்பார்.



கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய மகிமை இதுகாறும் நமக்கு மறைக்கப்பட்டிருந்தது. **இன்னும் வெளிப்படவில்லை,** மனிதராணபடியால் நம்முடைய லக்ஷணத்தின்படி அவரை நாம் 'அவர் இருக்கிறபடியே பார்க்க முடியாது. பார்த்தலைச் சகிக்க முடியாது. பார்க்கக்கூடிய பலமில்லை (யாத். 33. 20.). ஆனால் கிறிஸ்து நமக்காக மன்றாடுவது நாம் 'அவருடைய மகிமையைக் காணும்' பொருட்டே (யோவா. 17. 24.). நாம் விரும்புவதும் அவரை முகமுகமாய்க் காணுமாறே (சங். 17. 15. 1 கொரி. 13 12.). நாம் அக்காக்ஷியைப் பெறுவோமென்பதும் நாம் அறிந்திருக்கிறோம். **அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாகவே இருப்போமென்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால் அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்.**

இந்த வார்த்தைகளை வாசிக்கும்போது வரப்போகிற கிறிஸ்துவின் வெளிப்படுதலின் மகிமையைபற்றிய சிந்தனை எழுகிறது. அந்த மகிமை எப்படியிருக்குமென்று நாம் இப்பொழுது நினைப்பதற்கும் இயலாதேபோயினும் நம்மில் ஒவ்வொருவருடையவும் அளவுக்குத்தக்கபடி அந்த மகிமையை யடைவோம் என நாம் அறிந்திருக்கிறோம். **அவருக்கு ஒப்பாகவே இருப்போம்.** நாம் சிருஷ்டிக்கப்பட்ட (ஆதி. 1. 27.) 'தேவனுடைய சாயல்' (எபி. 1. 3.) ஆகவிருக்கிற கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு ஒப்பாக இருப்போம். **ஏனென்றால் அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்.** ஆண்டவரை அவருடைய மகிமையில் நாம் தரிசிப்பதே நம்மை அவருக்கு ஒப்பாக மாற்றிவிடும். (2 கொரி. 3. 18.)

'விசுவாசியினுடைய பெரிய நம்பிக்கை யாதெனின் தேவனுடைய முழு வெளிப்படுதலையும் கிறிஸ்துவுக்குள் கண்டுகொள்ளக்கூடுமென்பதே. ஆதலினால் அந்த வெளிப்படுதலுண்டாகும்போது, விசுவாசி அவருக்கு ஒப்பாகிவிடுகிறான்.' என்று வெஸ்ற்காட் அத்தியட்சர் உரைப்பர். சுதேசியாகிய பண்டிதரொருவர் இப்பாகத்தை மொழிபெயர்த்த ஒரு ஐரோப்பிய

பிரசங்கியாருக்கு உதவிசெய்துகொண்டிருந்த சமயத்தில் இது கூடாதகாரியம். நம்பக்கூடாதபடி அவ்வளவு உணர்வுடையதாகத் தோன்றுகின்றதென்று சொல்லி, 'இது அளவுக்கு மிஞ்சிய சிலாக்கியம்; அவருடைய பாதங்களை முத்தமிடும் சிலாக்கியம் நமக்குக் கிடைக்குமென வெழுதுவோம்' என்றனராம்.

தேவனிடத்தில் இந்த மகிமையான நம்பிக்கையையுடைய கிறிஸ்தவன் இனி கிறிஸ்துவைப்போலாவதற்கு முயலவேண்டும்—[1]**அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருப்பதுபோல் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறன்.** கிறிஸ்தவன் கிறிஸ்துவிலிருக்கிறபடியால் அவன் சாதாரண சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவனல்ல, அவன் எப்படி நடப்பினும் சரிதான் எனச் சில கள்ளப்போதகர் போதித்துவந்தார். இதை ஆக்ஷேபிக்கவே பரி. அப்போஸ்தலன் 'நம்பிக்கை வைத்திருக்கிறவன்' எனக் கூருமல் '**நம்பிக்கை வைத்திருக்கிற எவனும்**' எனக் கூறுகிருர். பரி. அப்போஸ்தலன் எங்கெல்லாம் இப்படி வழங்குகிருரோ அங்கெல்லாம் இவர் சொல்வதற்கு மாருகக்கூறும் கொள்கையைக்குறித்தே என்பது வெளிப்படும். (வாக் 4. 6, 9, 10, 15; 2. 23, 29; 4. 7; 5. 1. 4, 18. 2 யோவா. 9.)

**தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறன்** 'இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தமே நமது பாவங்களற நம்மைக் கழுவி நம்மைச் சுத்திகரிக்கும்' என்பது உண்மைதான். எனினும் நாமும் தேவனேடுகூடச் சேர்ந்தும், உண்மையான நம்முடைய சொந்தப் பிரயாசத்தினுலும், நம்முடைய பாவங்களை நம்மை விட்டகற்ற முயலவேண்டும். 'இவ்விரு முயற்சியுமின்றி ஒன்றினல்மாத்திரம் இரக்ஷிப்படைய முடியாது.' (யாக். 11. 8. 1 பே. 1. 22. 2 கொரி. 7. 1. 1 தீமோ. 5. 22.)

நமக்கு முன்மாதிரியாகக் காட்டப்படும் பரிசுத்த வடிவம் கிறிஸ்துவே. அவர் பூமியிலே சகலவிதமான அசுத்தங்களுக்கு

[1] மூலபாஷைப்படி முதல் அவர் பிதாவையும் இரண்டாம் அவர் கிறிஸ்துவையும் குறிக்கும்.



மிடையே வசித்தும் பலவிதமான அகோர சோதனைக்குட்பட்டும் தம்மைப் பரிசுத்தமாகக் காத்துக்கொண்டார். பரிசுத்த மனுஷனுகவே பரத்துக்கெழுந்தருளி அங்கிருந்தே நாமும் அவரைப்போல் பரிசுத்தராகுமாறு நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள உதவிசெய்கிருர். (யோவா. 17. 15–19.)

இப்பொழுது பரி. யோவான் அப்போஸ்தலன் தேவனுடைய பிள்ளைகளுக்கும் பிசாசினுடைய பிள்ளைகளுக்குமுள்ள லக்ஷணங்களைக் கூறப்போகிருர். ஆனுல் அதைக் கூறுமுன் பாவத்தைப்பற்றியும் பாவத்திற்கும் கிறிஸ்துவுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் இரண்டு விஷயங்களைச் சொல்லப்போகிருர்.

அவற்றுள் முதல் விஷயம் பாவத்தைப்பற்றி — **பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறன். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.** நியாயப்பிரமாணம் என்பது எப்பொழுதும் நியாயமானதாகவும் நலமானதாகவும் இருக்கிற தேவனுடைய சித்தத்தைக் குறிக்கும். மனுஷனுடைய விஷயத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணம் அவன் செய்யவேண்டிய கடமையாயிருக்கிறது. மனுஷன் மூன்றுவிதமான கடமைகட்குட்பட்டிருக்கிருன்—தனக்குச் செய்யவேண்டிய கடமை, தன்னையடுத்த மற்றும் அயலாருக்குச் செய்யவேண்டிய கடமை, தேவனுக்குச் செய்யவேண்டிய கடமை. இக்கடமைகளை மீறி நடப்பதே பாவம். எனவே அது நியாயப்பிரமாணத்தை மீறுதல் எனப்பட்டது. நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். பாவமே நியாயப்பிரமாணத்தை மீறுவது. நமது மூவிதக்கடமைகளிலேதேனும் ஒன்றை மீறினும் எல்லாவற்றையும் மீறி நடப்பதேயாகும் (யாக். 2. 10.). ஏனெனில் மீறுவதானது நமது உண்மைக்கேதுவான சட்டத்துக்கு மாறுபட நடந்து நாம் சிருஷ்டிக்கப்பட்ட மகிமையுள்ள கதிக்கு மாருய்த் திரும்புவதாகும். பாவம் பெரிதெனவும், சிறிதெனவும், மோசமற்றதெனவும், மோசமானதெனவும் இல்லை. ஒவ்வொரு பாவமும் நம்முடைய பூரணமின்மையைக் காட்டுதலுமன்றி நம்மை நியாயப்பிரமாணத்தை மீறியவர்களாக்குகிறது.

பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுகிற இரண்டாவது காரியம். பாவத்திற்கும் கிறிஸ்துவுக்குமுள்ள சம்பந்தம். **அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்துதீர்க்க (அகற்றிப்போட) வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை.** பாவத்தை அகற்றுகிற காரியம் நமக்குப் புறம்பாகவிருந்து நம்மிடத்தில் வரவேண்டும். மனுஷன் பாவஞ்செய்தபடியால், தான் மீறிய நியாயப்பிரமாணத்தைச் சரிப்படுத்த முடியாது. பாவமாகிய கர்மத்துக்குட்பட்டான். கர்மத்தால் விளைவனவற்றைத் தடுத்தல் இயலாது. அவன் தான் நியாயப்பிரமாணத்தை மீறிய தன்மையை நீக்கித் தன்னை முதலிலிருந்த ஸ்திதிக்குக் கொண்டுவர முடியாது. மேலும் பாவஞ்செய்யாமலிருந்து ஒரு பாவத்தைச் செய்த நிலைமைக்கும் ஒரு பாவத்தைச் செய்தபின் வேறு பாவத்தைச் செய்யும் நிலைமைக்கும் பேதமுண்டு. ஏனெனில் ஒருதடவை பாவஞ்செய்தபின் அவனுடைய சித்தம் பலவீனப்பட்டது. பாவம் செய்வதற்கேதுவான தன்மைகள் அவன் பிறப்பின் சுதந்தரமாகவே அவனிலிருக்கின்றன. நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவரே அவனை அவன் முன்னிலைமைக்குக் கொண்டுவரக்கூடும். அதற்காக அவர் பாவமில்லாத ஒருவராக வெளிப்படவேண்டுவதுமன்றிப் பாவஞ்செய்த மனுஷஜாதியின் தலையானவராக உலகத்தின் எல்லாப் பாவங்களையும் சுமந்து தீர்க்கவேண்டும்.

'கர்த்தர் வெளிப்படுதல் என்பது அவர் உலகில் வசித்த அவரது முழு ஜீவியத்தையும் அதன் பயன்களையும் குறிக்கும். அவர் திருஅவதாரம், அவர் வளர்ச்சி, அவரது ஊழியம், அவர் பாடுபடுதல், அவர் பரமேறுதல், அவருடைய ஜீவியத்தின் ஒவ்வோர் சம்பவமும் நமது பாவங்கள் நீக்கப்படுதற்கு ஏதுவாய் நின்றது. அவர் ஜீவித்திருந்ததும் அவர் மரித்ததும் நமது மீட்புக்கும் பாவமன்னிப்புக்கும் ஏதுவாயிருந்தன' என்பது வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம்.

யோவான் 1. 29–ல் ஸ்நானகன் கிறிஸ்துவின் ஊழியத்தின் துவக்கத்தைப்பற்றிக் கூறும்போதே அவரைப்பற்றி 'உலகத்



தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி' என்கிறார். அவ்விடத்தில் ஸ்நானகன் 'சுமந்துதீர்க்கும்' என எதிர்காலத்தில் உரையாது 'சுமந்துதீர்க்கிற' என நிகழ்காலத்திலேயே உரைத்ததும் விசேஷமானது. ஏனெனின் எமது இரக்ஷாபெருமான் அக்காலத்திலேயே உலகத்தின் பாவங்களை நிவிர்த்திக்கிற அப்பெரிய வேலையைக் கைக்கொண்டு நடத்தவாரம்பித்துவிட்டார் என்பது வெளிப்படை.

**பாவங்களைச் சுமந்துதீர்க்க** என்பது மனிதரை அவர்கள் பாவக்கட்டுகளினும், அக்கட்டுகளால் விளையும் தீங்குகளினும் நின்று விடுதலை செய்வதைமாத்திரம் குறியாமல் அவற்றினும் அதிகமானவற்றையும் குறிக்கும். என்ன? அது இரக்ஷிப்பின் முழுக்கிரியையும், அது காரணமாய் ஆத்துமாக்கள் பாவமற்ற பூரண நிலையடைதலையும் குறித்து நிற்கும். பாவத்தையென ஒருமையிற் கூறாது பாவங்களை எனப் பன்மையிற் கூறியதும் எமது பாவங்களை மாத்திரமேயன்றி உலகினோருடையவும் சகல பாவங்களையும், என ஒருங்கே உட்படுத்திக் கூறியதும் எம்பிரானது திருவருட்பெருக்கத்தை நன்கு விளக்கும்.

'எம்பிரான் நாம் செய்த பாவங்களை மன்னித்தார்; இனியும் நாம் பாவஞ்செய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்ள உதவிபுரிகிறார். அன்றியும் பாவமே செய்யக்கூடாத ஓர் ஜீவியத்துக்கு நம்மை வழிநடத்தவும் செய்கிறார்.' என்பர் (பீட்) ஆசிரியர். **அவரிடத்தில் பாவமில்லை** இதனை மூலபாஷைக்கியையப் பொருட்படுத்தின் 'பாவம் அவரிடத்தில் தங்குவதன்று' எனவாம். இப்பாகம் அடியில்வரும் விஷயங்களைக் காட்டுவனவாம்:—

1. கிறிஸ்து பாவங்களைச் சுமந்துதீர்த்தல் எங்ஙனமாம்?

2. கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் ஏககாலத்திற்றானே பாவம் செய்வது அசாத்தியமென்பது எங்ஙனமாம்?

கிறிஸ்து வெளிப்படுதலின் நோக்கம் இதுவேயென உணர்ந்தார்மாட்டு, இந்நோக்கத்தைத் தள்ளிவிடுதலினாலும், அவரே

பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவரெனும் விசுவாசத்தை ஏகற்றி விடுதலினாலும், அவர் நம்மை மீட்கவந்த பாவங்களினின்றும் விடுபட மனமின்றி அவற்றோடு நெருங்கி ஜீவிப்பதினாலும், பாவமானது அளவின்றிப் பெருகிப் பூரணப்படும். விசுவாசமே அவரில் தங்கியிருத்தற் கேதுவாம். அவரில் தங்கியிருத்தலே சகல பாவங்களையும் அகற்றலன்றோ?

**அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை, பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவு (கண்டிருக்கவு) மில்லை, அவரை அறியவு (அறிந்திருக்கவு) மில்லை.** இங்கே ஓர் உண்மையை நேர்வழியாகவும் எதிர்வழியாகவும் கூறி அதி உறுதியாய் ஸ்தாபிக்கிறார். என்ன? கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் பாவஞ்செய்தலை யகற்றுகிறது. பாவஞ்செய்தல் கிறிஸ்துவில் நிலைத்தலை யகற்றுவதுமன்றி இதுவரை நாம் எம்பிரானை யறிந்தும் கண்டும் அனுபவித்த சகல சிலாக்கியங்களையும் பறறக் களைந்தும்விடுகிறது. இதற்கொப்பக் கூறப்படும் வாக்கியங்கள் பல (வாக். 9.). தேவனால் பிறந்த எவனும் **பாவஞ்செய்யமாட்டான்.** ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் 'தேவனால் பிறந்தபடியால் பாவஞ்செய்யமாட்டான்' (5–18.) 'தேவனால் பிறந்த எவனும் **பாவஞ்செய்யான்'**—இவ்வாக்கியங்கள் மேற்கூறிய நாம் பார்த்துக்கொண்டுவருகிற வாக்கியத்தின் கருத்தைச் சாந்தப்படுத்தாது; முன்னினும் அதிகக் கண்டிப்பாய் ஸ்தாபிக்கின்றன. இவற்றை வாசிக்கும்போது நம் மனதிடை ஓர் பெருஞ்சந்தேகம் எழுகிறது. என்ன? 'நானோ பாவஞ்செய்யாதவனல்ல. நாடோறும் நினைவிலும், வாக்கிலும், செயலிலும் நான் நடத்தும் பாவங்கள் பல. ஆதலின் நான் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையோ? தேவனாற் பிறக்கவில்லையோ?' எனும் நினைவே.

இவ்வாறெழுந்த சந்தேகத்தை மூன்றுவிதமாக நிவிர்த்திக்கலாம். அவற்றில் முதல்விதம் மோசமானது. அதின்படி, கூறப்பட்ட சத்தியத்தை ஒப்புக்கொண்டு உண்மையில் இருக்கும் காரியத்தை மறுக்கவேண்டும். என்ன? கிறிஸ்தவன்



கிறிஸ்துவில் நிலைத்திருப்பவன். ஆனால் கிறிஸ்துவில் நிலைத்திருப்பவன் பாவமற்றவன். எனவே கிறிஸ்தவன் பாவமற்றவன். இதுவே பாவமின்றிப் பூரணமாயிருப்பதன் கொள்கை. இக்கொள்கையை யனுசரிப்பார் தாங்கள் இப்பூரண நிலையை யடைந்ததாகவும் அங்ஙனம் அடையாதார் பலரும் கிறிஸ்தவரல்லரென்றும் கூறுவர்.

வேதமும் இக்கோட்பாட்டுக்கு மாறாகவே சாற்றுகின்றது. பரி. யோவான் அப்போஸ்தலன் இந்நிருபத்தில் கூறுவதே போந்த சான்றாம். **'நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது'** (1–8.). ஜீவியத்தில் உண்மையிற் காணப்படுவதும் இவர் கோட்பாட்டுக்கு மாறுபடும். உலகினருள் மகா பரிசுத்தவான்களும் தங்கள் மகா பரிசுத்த நிலையில், பாவமற்ற பூரண பரிசுத்தநிலைக்கும் தங்கட்கும் வெகுதூரம் என இரங்கல் வெளிப்படை.

இச்சந்தேகத்தை நிவிர்த்திக்கும் இரண்டாம்வகையும் அத்துணைத் திருப்தியானதன்று. இவ்வகைப்படி 'பாவஞ்செய்கிற' என்பதை நலிந்து பொருள்கொண்டு அதன் உட்கருத்தை ஒருவாறு குறைத்துவிடுதல். என்ன? 'பாவஞ்செய்கிற' என்பதை மனமறிய, அறிந்திருந்தும் வேண்டுமென்று பாவஞ்செய்கிற என்பர். அங்ஙனம் கூறுதல் அத்துணைப் பொருத்தமுடைத்தன்று. மனிதன் செய்கிறதாய் அறிகிற எப்பாவமும் ஒருவாறு மனச்சாக்ஷிக்குத் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே செய்வதாம். ஒரு மனிதன் தான் பாவஞ்செய்தும் தான் அதனை அறிந்து வேண்டுமென்றே செய்யவில்லை எனச் சொல்லிக் கொள்ளுதல் பெருவிபத்துக்கே ஏதுவாம்.

அன்றியும் 'பாவஞ்செய்கிறதில்லை' என நிகழ்காலத்துக் கூறியிருப்பதனையே காரணமாகக்கொண்டு, அது வழக்கமாய் பாவஞ்செய்கிறதில்லை, அதாவது தன்னைப் பாவத்துக்குக் கீழடக்கிப் பாவஞ்செய்கிறதில்லையெனவும் கூறுவர். மேலும் பாவம் செய்துவிட்டால் அது தன் இயல்புப்படி செய்யப்

பட்டதொன்றன்று. ஆனால் கிறிஸ்தவன் தன்னுடைய பல்புக்கு மாறாக ஏதோ இடையிற் செய்துவிட்ட தப்பித கவும் அதற்காக உத்தம மனஸ்தாபப்பட்டுவிடின் அது கிறிஸ்துவால் அகற்றப்பட்டுக் கிறிஸ்தவன் தன் இயற்கையான நல்லொழுக்கத்தை யடைகிறானெனவும் சொல்வர். ஆனால் நிகழ்காலத்தில் எதிர்மறையோடு சேர்த்துக் கூறப்பட்டிருக்கும் மூல பாஷைப் பதத்தின்படி அது இயற்கையில் பாவ சுபாவமில்லாத ஓர் தன்மையைக் குறிக்காது. மேலும் ஒன்பதாவது வாக்கியத்திற் கூறப்பட்டிருக்கும் 'பாவஞ்செய்யான்' பாவஞ்செய்ய மாட்டான் (செய்யமுடியாது) என்பனவும் இவ்விரண்டாவது சமாதானத்திற்கு மாறாகவே யிருக்கின்றன. இந்தக் கொள்கை நியாயமாயிருப்பின் விசுவாசிகள் 'எங்களுக்குப் பாவமில்லை' எனக் கூறுவது தப்பிதமெனக் கொள்ளப்படுவதேன்? (1. 8.)

எழுந்த சந்தேகத்தை நிவிர்த்திக்கிற மூன்றாவது சமாதானமுமுண்டு. அதன்படி, வார்த்தைகள் நலிந்து பொருள்கொள்ளப்படுவதுமன்று. உண்மை மறைக்கப்படுவதுமன்று. அஃதென்னவெனின் பரி. யோவான் அப்போஸ்தலன் மனதினால் நினைக்கக்கூடிய எக்காலும் நிலைத்திருக்கும் அந்த உன்னத ஸ்திதியையே உண்மையானதும் வாஸ்தவத்திலிருப்பதுமாகப் பாவித்துப் பேசுகிறார். நாம் மனோராஜ்யமாயிருக்கிற உன்னத ஸ்திதியையும் உண்மையில் உலகிடைக் காணக்கிடக்கும் உன்னத ஸ்திதியையும் ஒப்பிட்டுப் பேதப்படுத்துவோம். ஆனால் பரி. அப்போஸ்தலனோ அவ்விரண்டும் ஒரே ஸ்திதியிலிருப்பனவாகக்கொண்டு, அவற்றை மாறக்கூடியதும் பூரணமில்லாததும் மேலானதுபோற் காணப்படுவதுமாயவற்றோடு ஒப்பிட்டுப் பேதப்படுத்துகிறார்.

நாம் பரலோகத்திலுள்ள நிலைமையைப்பற்றி நினைத்தால், மனதினால் நினைப்பதான உன்னத ஸ்திதியை யறிகிறோம். அங்கே நாம் பாவமில்லாமலும், பாவஞ்செய்ய முடியாமலு மிருப்போம். பாவமின்றியும், பாவஞ்செய்ய முடியாமலுமிருப்ப



தெவ்விதம்? எவ்விதமெனின் (1) பாவமில்லாமல்—ஏனென்றால் நம்முடைய சித்தம் தேவனுடைய சித்தத்தோடு இரண்டறவொன்றாயிருக்கும். ஆகையினால் அவருடைய நியாயப்பிரமாணமே, நாமாகவே நமக்குத் தெரிந்துகொண்ட நம்முடைய நியாயப்பிரமாணமாகும். வேறுவிதமாய்க் கூறில் நாம் 'கிறிஸ்துவில் நிலைத்திருப்போம்.' (2) பாவஞ்செய்ய முடியாமல்—நாம் பரிசுத்தராகவே இருக்குமாறு கட்டாயப்படுத்தப்படுவோமென்பதன்று. நமக்குச் சோதனைகள் ஏதும் நேரிடாதென்பதுமன்று. ஆனால் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதே நமது சித்தமாயிருக்கும். அவரில் நாம் பாவஞ்செய்ய முடியாது.

பரலோகத்தில் எல்லோரும் ஒரே ஒரு சித்தத்தைமாத்திரம் செய்வார். எல்லாரிலுமிருப்பது ஒரே ஜீவன். எல்லோரும் ஒருவரிலும், ஒருவரே எல்லாரிலும் இருப்பார். எல்லாரிலும் காணப்படுவது அன்பின் ஒரே ஆத்துமா. இந்த ஸ்திதியிலிருந்தால் தேவனுடைய பாவமின்மை மனுஷனுக்குமாகிறது. மனுஷனுடைய பாவமின்மையும் தேவனுடைய பாவமின்மையைப்போன்றே இருக்கிறது.

பூரணமில்லாமல் தேர்ச்சியடைந்துகொண்டேபோகும் உலகக் காரியங்களைக் கவனிக்குமிடத்து, பாவமின்மையானது உலகத்திலிருக்கிறபடி பரலோகத்திலிருக்கிற பாவமின்மையைப் போன்றேயிருக்கிறது. இருவிடங்களிலும் பாவமின்மைக்குக் காரணம் ஒன்றே. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்வனாயில் பாவஞ்செய்கிறதில்லை. நாம் பாவஞ்செய்கிறவனாயில் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறதுமில்லை. தாங்கள் பாவமில்லாமலிருப்பதே தங்களுடைய ஒரே நோக்காகக்கொண்டிருப்பவனா உற்சாகப்படுத்தவே இவ்வசனம் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்கு மாறான எந்த எண்ணமும் இல்லாதிருப்பதே அவர்களுக்கு சுவர்க்கமாம். இவ்வசனம் அவர்களுக்குச் சொல்வதென்ன? 'பாவமின்மைக்கு அவசியமான' சகல ஏதுக்களும் இப்பொழுதே உங்களிடத்திலிருக்கின்றன. இப்பொழுதே நீங்கள் உபயோகிக்கலாம். நீங்கள் அவரில் நிலைத்திருக்கும்

போது பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்யவு முடியாது. ஏனெனில் செய்யப்படுவது உங்கள் சித்தமல்ல அவரது சித்தமே. நீங்கள் பாவஞ்செய்யும்போது அவரில் நிலைத்திருக்கிறதில்லை. அப்பொழுது செய்யப்படுவது அவரது சித்தமல்ல உங்கள் சித்தமே. நீங்கள் பாவஞ்செய்யும்போது, இதற்குமுன் நீங்கள் அவரை ஒருக்காலும் பார்த்தும் அறிந்தும் இராதது போல் உங்களுக்கும் அவருக்குமிடையே உண்மையில் அகன்ற பிளப்பு உண்டாய்விடுகிறது. நீங்கள் பாவஞ்செய்யும்போது, இதற்குமுன் தேவனருளால் உங்களுக்குக் கிடைத்த மறுபிறப்பு, நீதிமானுக்கப்படுதல், பரிசுத்தம் முதலிய எதுவும் உங்களுக்குப் பயன்படா. இவற்றின் உதவியால் தப்பவுமுடியாது. தேவனுக்கும் உங்களுக்குமிடையிலிருந்த ஐக்யம் அற்றது: நீங்கள் அந்தகாரத்துக்கு வந்துவிட்டீர்கள். முன் நீங்கள் பாவத்திற்காக உத்தம மனஸ்தாபப்பட்டதும் விசுவாசித்ததும் இப்பொழுது பயனற்றதானபடியால் திரும்பவும் நீங்கள் மனஸ்தாபப்பட்டு அறிக்கைசெய்து விசுவாசிக்கவேண்டும்.'

ஆனல் பாவமான ஸ்திதியிலிருப்பதிலேயே திருப்தியுற்று, பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதற்குத் தடையாயிராமல் எவ்வளவுதூரம் பாவம் தேவனுடைய பிள்ளைகளைச் சார்ந்திருக்கக் கூடுமென அறிய விரும்புகிறவர்களையோ இவ்வாக்கியம் அதிகக் கண்டிப்பாய் எச்சரிக்கிறது. 'உங்கள் பாவம் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு முற்றிலும் தடையாயிருக்கிறது. எல்லாப் பாவமும் தடையே, எந்தப் பாவமும் தடையே, ஒவ்வொரு பாவமும் தடையே.'

இப்பொழுது பரி. யோவான் அப்போஸ்தலன் பாவஞ்செய்தலும் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதும் முழுவதும் மாறுபட்ட இரண்டு சங்கதிகள் என்பதனை விஸ்தரிக்கிறர். செயலிலாயினும் சரி, செயலுக்குக் காரணமாயிருப்பவற்றிலாயினும் சரி, பாவம் பாவமே. அவர் சொல்வது அக்காலத்துக் கிறிஸ்துசபையைக் கெடுப்பதற்கு ஏதுவாயிருந்த தப்பிதங்களை முற்றிலும் மறுப்பனவாயும், எக்காலத்திலேயுமுள்ள மனிதர் இரு



தயங்களைக் கறைப்படுத்தற்கேதுவான தப்பிதங்களை மறுப்பனவாயுமிருக்கின்றன. எனவே அவர் பாசத்தோடு அழைத்து பயபக்தியோடு எச்சரிக்கிறர்.

**(என் சிறு) பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படா (வழிதப்பப்பண்ணப்படா)-திருங்கள்.** இவ்விடத்தில் வழிதப்பப்பண்ணல் தவறான கொள்கைக்குள் நடத்துவது மாத்திரமல்ல அதிலுமதிகமாய் தவறான ஜீவியத்திலும், அநீதியிலும் வழிநடத்துவதாம்.

இவ்வாக்கியத்தையடுத்து ஒன்றுக்கொன்று எதிரான இரு வாக்கியங்களிருக்கின்றன.

**நீதியைச் செய்கிறவன் நீதியுள்ளவனாயிருக்கிறன்; அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல,**

**பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறன்; ஏனெனில், பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறன்.**

இவ்வாக்கியங்களின் பொருள் வெளிப்படை:—நீதிக்காயினும் பாவத்துக்காயினும் சரி, அந்தந்த ஸ்திதியிலிருத்தலே—தங்கியிருத்தலே—அதைச் செய்யவேண்டி நேருகிறது. செய்தலினால்மாத்திரம் அந்த ஸ்திதியிலிருப்பதைத் தெளிவாய் அறியலாம். இவ்வாறு இருத்தலுக்கும் செய்தலுக்கும் மூலகாரணமாய் தேவனும் பிசாசுமிருக்கின்றனர்.

(1) நீதியான ஒழுக்கம் அதற்குச் சம்பந்தமான நீதியான ஜீவியத்தை உண்டுபண்ணும். யாவரேயாயினும், சாக்ஷாத் கடவுளேயாயினும், இவ்விதிக்குத் தப்பியவரல்லர். ஒழுக்க வேறுபாடுகள் ஆதிமுதலுள்ளன. 'வல்லமையுடையார்க்குப் பாவமில்லை' எனக் கூறும் சாஸ்திரங்கள் இவ்விஷயத்தில் பொய்படுவன. கிருஷ்ணன் அநீதியைச் செய்தபடியால் கிருஷ்ணன் அநீதியுள்ளவன். கிறிஸ்து நீதியுள்ளவரானபடியால் நீதியுள்ளவற்றைச் செய்தார். நீதியானவற்றைச் செய்யாவிடின் கிறிஸ்துவர் அநீதரேயாவர் (மத். 7. 17, 18.). நீதியிருக்குமெனின் அது மறைந்து வெளிப்படாது. செயலின்றியிராது, அது இருக்குமிடமெல்லாம் தன் இயற்கைப்படியே செய்கையால் வெளிப்படும்.

(2) நீதியானவைகளைச் செய்தலே நீதியாயிருத்தலை யறிதற்கு முழு அடையாளம். 'அவைகளின் கனிகளால் நீங்கள் அவைகளை அறிவீர்கள்' இதைப் பார்த்தமாத்திரத்தில், ஒரு மனிதன் எதை விசுவாசித்தாலும் காரியமில்லை, அவன் ஜீவியமாத்திரம் நல்லதாயிருந்தால் போதும் என்கிற பொதுவான ஒரு கருத்து அனுசரித்திருப்பதுபோலத் தோற்றுகிறது. 'எவனுடைய ஜீவியம் நியாயமான விஷயத்தைப் பற்றியிருக்கிறதோ, அவன் தப்பிதமாயிருக்க முடியாது' எனவும் சொல்லிக்கொள்ளுவர். ஆனால் நீதி என்பதை லக்ஷணிக்குமிடத்து இதிலுள்ள தப்பிதம் வெளியாம். 'பாவியான ஒரு ஆத்துமா எவ்வளவுதூரம் நீதியாயிருக்க முடியுமோ அதனையே நீதியென்றழைப்பர் உலகினர். ஆனால் இவ்வகை நீதி ஒருமனுஷன் வசிக்கும் இடத்தையும் அவன் எவரோடு சம்பந்தப்பட்டு எவரோடு கூட்டுறவாயிருக்கிறானோ அதனையும் சார்ந்திருக்கிறது. ஆதலால் நீதியென்பது இடத்துக்கிடம் வேறுபட்டுத் தோற்றும். உள்ளதை இல்லதெனக் கூறுதலே பொய்யெனக் கொள்ளும் கொள்கையுடையவரும், உண்மை இல்லாததேயாயினும் நன்மை கொடுக்கக் கூடியதாயின் மெய்தான் எனக்கொள்ளும் கொள்கையினரும் மெய் பொய் எனும் விஷயத்தில் மாறுபடல் வெளிப்படை.

இதன்படித் தம்மனதிற்குப் பொருந்துவனவற்றையெல்லாம் நலமானதெனத் தழுவியும், எவற்றைத் தமக்கு இடையூறுனவையென விலக்கவேண்டுமோ அவற்றையே தீமையெனத் தள்ளியும் நன்மை தீமையைப் பாராட்டுவர். எனவே நன்மை தீமையென்பனவற்றில் மனிதன் தேவனுக்கு முன்பாக இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றிப் பெரும்பாலும் யாதொன்றுமில்லை. ஒரு மனுஷன் தன் ஒழுக்கத்தைச் சார்ந்தும் எவ்விதமாகவும் நடத்தவேண்டுமெனவும் யாதுமில்லை. அவனது ஒழுக்கம் உயர்வாகவோ தணிவாகவோ செல்கின்றதைப்பற்றியும் கணக்கில்லை. ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலனுடைய கருத்துப்படி நீதியெனப்படுவது கிறிஸ்துவினுடைய இருதயத்திற்கியைய நாம் நடக்கவேண்டியதற்கென



அவரால் முன் குறிக்கப்பட்ட நற்கிரியைகளைச் செய்து அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி அவருடைய சாயலில் பங்குபெறுவதேயாம். எனவே நீதியைச் செய்தல் என்பது நீதியான கிரியைகளைமாத்திரம் செய்தல் எனப் பொருள்படாது, ஆனால் நீதியான கிரியைகளை அவருடைய சித்தத்திற்கியைய அவருடைய வல்லமையின்படி செய்வதெனப்படும். நீதியைப் பற்றி பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுகிற முழுக் காரியமும் யாதெனில் ஒருவன் இருக்கும் நிலைமைக்குத் தக்கபடியே அவன் செய்கையுமிருக்கும் (வாக். 6.) எனவே ஒருவனிடத்தில் செய்கையிருப்பின் அங்கு நிலைத்திருத்தலும் இருக்கும் என்பது தெளிவாகிறது........ஒருவன் செய்வதெப்படியோ அவன் இருப்பது மப்படியே.' என்பர் காண்ட்லிஷ் எனும் வியாக்கியான கர்த்தா.

(3) நீதிக்கும் பாவத்திற்குமுள்ள பேதம் அவை தேவனிலிருந்தும் பிசாசிலிருந்தும் உண்டாய் அதற்கொப்பாயிருப்பதனையும் அதற்கு இயையச் செய்வதனையும் சார்ந்திருக்கிறது. மனிதர் ஒன்றில் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவேண்டும் அன்றேல் பிசாசினுடைய பிள்ளைகளாயிருக்கவேண்டும். இப்பொழுது பரி. யோவான் சொல்லுகிற நீதிக்கும், உலகத்தாரால் மதிக்கப்படும் நீதிக்கும் உள்ள வித்தியாசம் அதிக தெளிவாகிறது. உலகத்தார் ஒருவனைப் பிசாசின் மகனென்றுசொன்னால் அவன் அதிக இழிதொழிலுடைய கடையன் என்பதைக் குறிக்கும். ஆனால் பரி. யோவான் சொல்லுகிறபடி எல்லாப் பாவமும், எல்லா மீறுதலும், தேவனுடைய சித்தத்திற்கடங்காமல் சுயாதீனமாயிருக்கப் பிரீதிகொள்ளுதலும், தான் நினைத்தவாறெல்லாம் செய்தலும், பிசாசினாலுண்டானவையே—எனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். மனுஷன் உண்டான காலமுதல், பாவம் எப்பொழுதுண்டானதோ அக்காலமுதலே பிசாசானவன் பாவஞ்செய்கிறான். செய்கையின் இயல்புநோக்கி நமது ஒழுக்கம் யாரிலிருந்துண்டானதெனக் கூறலாம். காண்ட்லிஷ் ஆசிரியர் 'ஒருவாறு

சொல்லவேண்டுமானால் இரு பிதாக்கள் நாம் அவர்களுக்குப் பிள்ளைகளாமாறு விரும்புகின்றனர்' (என்பர்.). அவர்களில் நாம் எவருக்குக் கீழ்ப்படிகிறோமோ அவர் தமது சுபாவத்தை நமக்கு அளிக்கிறார். தேவனைப் பிதாவாகக்கொண்டால் அவர் நம்மைத் தம்மைப்போல் முழுவதும் நீதிமான்களாகவும் பாவஞ்செய்யச் சக்தியற்றவராகவும் ஆக்குவார். பிசாசானவனைப் பிதாவாக ஏற்றுக்கொண்டால் அவன் நம்மைத் தன்னைப்போல் முழுதும் பாவமுள்ளவராகவும் பாவஞ்செய்யாமல் இருக்க முடியாதவராகவும் ஆக்குவான். ஒரு மனுஷன் பாவஞ்செய்யும்போதெல்லாம் அவன் தன்னைப் பிசாசு தன் பிள்ளையாக்கிக்கொள்ள இடங்கொடுக்கிறான். உலகத்தாரெல்லாம் ஒன்றுபோல் நீதிமான்கள் என்று அழைத்தவர்களைக் கிறிஸ்து 'பிசாசின் பிள்ளைகள்' என்றழைக்கிறார் (யோவா. 8.23.44.). கிறிஸ்துவானவர் தமது அப்போஸ்தலனாகத் தெரிந்துகொண்டு கன்மலை என்று பெயரிட்டு அழைத்த ஒருவனுங்கூட தேவசித்தத்துக்கு விரோதமாய்த் தன்னைச் சின்னேரம் பாவத்துக்கு ஒப்புக்கொடுக்க, அதுகண்ட கிறிஸ்து அவனைச் சாத்தான் என்றழைத்தார். (மத். 16. 23.)

நாம் முழுவதுமாய் எக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் பதவிக்கு வந்துவிடவுமில்லை, முழுவதும் ஒரு காலத்திலாவது பிசாசின் பிள்ளைகளாகக்கூடாத ஸ்திதியையடையவுமில்லை. ஆனால் அப்படி விரும்புபவர்க்கு அந்த ஸ்திதி முயற்சி செய்யப்படும். அவர்கள் காரியசித்தி யடைவதும் சத்தியம். **பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே (இதற்காகவே) தேவனுடைய குமாரன், வெளிப்பட்டார்.**

'கனத்துக்குரிய பட்டமாகிய தேவனுடைய குமாரன் என்பது இப்பொழுது முதல் தடவையாக இந்நிருபத்தில் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்குவது போரின் (4. 4.) தன்மையை விளக்குவதற்கே. இதுவரையும் கிறிஸ்துவைக் 'குமாரன் (2. 22–4.) என்றும் அவருடைய பிதாவினுடைய குமாரன்' என்றும் வழங்கினார். இதுமுதல் அவரைப் பெரும்பா



லும் 'தேவனுடைய குமாரன்' என்றழைக்கிறார் (4. 15; 5. 5, 9, 20.) ஆவியில் மனுஷனுக்கு விரோதமாய் இருப்பவனுக்கு அவனிலும் வலிய விரோதி யொருவரிருக்கின்றார். இரண்டாம் ஆதாம்முதல் ஆதாமை எதிர்த்துப் போர்செய்வார். 'தேவனுடைய குமாரன் பிசாசைப் போர்செய்தடக்குவார்' என்பது வெஸ்ற்காட் அத்தியட்சர் வியாக்கியானம்.

பிசாசின் கிரியைகளை அழித்தலென்பது பல்வேறு விதப்படும். ஆனால் இவ்விடத்தில் குறிக்கப்பட்டது பிசாசானவன் விசுவாசியை நியாயப்பிரமாணத்துக்கு மீறி நடக்கும்படி செய்ததும் செய்கிறதுமாகிய கிரியை. விசுவாசியிற் காணப்படுகிறபடி பிசாசின் கிரியையை அழித்தலென்பதைப் பரி. பவுல் அப்போஸ்தலன் 'பாவத்துக்கு மரித்தல்' என்றார். மாமிசத்தின் கிரியைகளை அழிக்கும் வல்லமையை உயிர்த்தெழுந்த ஆண்டவரிடத்தினின்றும் விசுவாசத்தினால் அடையலாம்.

9–ம் வசனத்தில் விவரிக்கவேண்டியவற்றையெல்லாம் 6–ம் வாக்கிய வியாக்கியானத்திலேயே கூறியாயிற்று. அதில் கவனிக்கவேண்டிய ஒரே காரியமுண்டு. அதாவது அவ்வாக்கியத்தில் ஈரிடங்களில் வரும் 'பிறந்த' என்பது மூலபாஷையின்படி 'தேவனால் பிறந்த தேவனுடைய பிள்ளையாகவே எக்காலும் ஜீவித்துவருகிற' எனப் பொருள்படும். ஆகையால் இந்த ஒன்பதாம் வாக்கியத்தில் கூறப்பட்டது ஆறாம் வாக்கியத்தில் கூறப்பட்டதையே ஒக்கும். 'அவரில் நிலைத்திருப்பவன் பாவஞ்செய்கிறதில்லை.' (வியாக்கியானம் பார்க்க.)

இவ்விடத்தில் அவருடைய வித்து என உருவகமாகக் கூறப்பட்டிருப்பது 'தேவனுடைய வார்த்தை'யினால் நம்முள் ஊன்றப்பட்டிருக்கிறது. ஜீவனுள்ள ஒரு மரத்தின் விதையையாவது (1 பே. 1. 23. லூக். 8. 12.) அல்லது அதினுமதிகமாய், ஒரு பிதாவினுடைய சாயலாய் ஒரு பிள்ளை பிறப்பதற்காகவுள்ள மனுஷஜீவனின் வித்தையாவது குறிக்கும். ஒரு பிள்ளையானது அவ்வளவு அதிகமாகத் தகப்பனுடைய நடபடிகள், நல்லொழுக்கம், தீயொழுக்கம், சாமர்த்தியம், தேகக்கட்டு,

ஜாடை, பேச்சு மற்றும் பற்பல விஷயங்களிலும் ஒத்திருக்கிறதென்பதை நாம் கவனிக்கும்போது, தேவனுடைய வித்தானது எவ்விதமாய் நம்மை அவருக்கு ஒத்திருக்கச்செய்து, தேவனுடைய புத்திரராக்கி 'தேவசாய'லில் பங்குள்ளவர்களாக்குகிறது (2 பே. 1. 3.) என்பதை நாம் அறிய ஏதுவாகிறது.

எவ்விஷயத்திலும் வித்தென்பது தேவனுடைய ஆவியினால் நமக்குள் அருளப்பட்ட ஜீவனைக் குறிக்கும். அது நமக்குள் நாமறியாத ஆவியின் வளர்ச்சியின்மூலமாய் கிறிஸ்துவின் சாயலை யுண்டுபண்ணுகிறது. நம்முடைய ஒழுக்கத்தை அவரது ஒழுக்கத்துக்கு நேராக்கி நம்முடைய சித்தத்தை அவரது சித்தத்துக்குக் கீழாக்குகிறது (யோவா. 3. 5.). பரிசுத்த ஆவியானவர் இடைவிடாது உற்சாகமாயிருக்கிற ஜீவனாய் நம்மில் நிலைத்திருக்கிறார். நாம் அவரோடு உண்மையின் ஐக்கியமாயிருக்கிற அந்த உன்னத ஸ்திதியில் பாவஞ்செய்வது அசாத்தியம்.

இனி எவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதை யறிதற்குரிய கடைசி அடையாளம் இன்னதெனப் பார்ப்போம். நாம் நீதியானதைச் செய்யவேண்டுமென உணர்வதினால்மாத்திரமல்ல அவ்வாறே செய்வதினால்மாத்திரம் அதனை யறியக்கூடும். **இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசினுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்.** இதிற் கூறப்பட்ட 'இதினால்' என்பது முன்கூறப்பட்டதை (4—3.)க் குறிப்பினும் பின்கூறப்படுவதை (வாக். 10.)க் குறிப்பினும் அதைப்பற்றி யாதொரு வித்தியாசமுமில்லை. இப்பொழுதும், கடைசிநாளிலும், நம்முடைய ஜீவியத்தையும் கிரியைகளையும் கவனித்தே தேவன் நியாயந்தீர்க்கிறார். நீதியானவைகளைச் செய்யாமையும், சகோதர சிநேகமின்மையும் நாம் தேவனால் உண்டானவர்களல்லவென்பதைக் காட்டும். ஆதையினால் அவைகள், நாம் பிசாசினாலுண்டானவர்களென விளக்கும்.

**பிசாசினுடைய பிள்ளைகள்** எனும் இதே வாசகம் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் வழங்கவில்லை. ஆனால் 'பிசாசின் மகன்'



(அப். 13. 10.) 'பொல்லாங்கனுடைய புத்திரர்' (மத். 13. 38.) 'கோபாக்கினையின் பிள்ளைகள்' (எபே. 2. 3.) 'நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினாலுண்டானவர்கள்' (யோவா. 8. 44.) என வழங்குகின்றன. பரி. யோவான் அப்போஸ்தலன் உலகிலுள்ளோர் எல்லோரையும் இருபிரிவில் பிரித்துவிடுகிறார். 'தேவனுடைய பிள்ளைகள்' ஒரு பிரிவு 'பிசாசினுடைய பிள்ளைகள்' மற்றொரு பிரிவு. அவர் அறிந்தது 'ஒளி'யும் 'இருளு'ம் தான். இடையிட்ட மங்கிய வெளிச்சங்களை யறியார். இப்பொழுது தங்கள் ஜீவியத்துக்குத் தூண்டுகோலாயிருக்கிற பழக்க வழக்கங்கள் முதலியன எக்காலமும் நிற்குமாவெனத் தேவன் பார்ப்பதுபோலவே பரி. யோவான் அப்போஸ்தலனும் பார்க்கிறார்.

**நீதியைச் செய்யாமலிருக்கிற எவனும்; தன் சகோதரனில் அன்புகூராதவன்** என்று இப்பொழுது விளக்கிக் காட்டுகிறார். ஏனெனில் மற்றவரோடு நாம் சம்பந்தப்படுகிற காரியத்தில் அன்பே நீதியாம் (கலா. 5. 14.). இந்த அன்பு இயற்கையில் வந்த நற்சுபாவமுமன்று: நாமே சம்பாதித்த நற்சுபாவமுமன்று. ஆனால் இது இயற்கையான மனுஷன் எவர்களைப் பகைக்கிறானோ அவர்களை நேசிக்கிற அன்பு. இந்த அன்பு தேவனிலிருந்து உண்டாகிறது. எனவே இப்பொழுது நாம் கவனித்துக்கொண்டு வருகிற காரியத்தைச் சுருக்கத்தில் அறியக்கூடியதாகிறது. என்ன? அன்பே தேவனுடைய பிள்ளைகளைக் காட்டுகிற அடையாளம். பகையோ பிசாசினுடைய பிள்ளைகளைக் காட்டுகிற அடையாளம். சுவிசேஷத்தால் போதிக்கப்படுகிற கண்கூடாப் பார்க்கக்கூடிய விஷயம் அன்பே. ஏனென்றால் **நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே (என்னுமிதே) நீங்கள் ஆதிமுதல் கேட்ட விசேஷமாயிருக்கிறது.** 'கேட்ட' என்னும் பதம் திட்டமாக இறந்தகாலத்தைக் காட்டுகிறபடியால் 'நீங்கள் ஆதிமுதல் கேட்ட விசேஷம்' என்பது உங்களுக்கு ஆதியில் போதிக்கப்பட்ட சுவிசேஷ செய்தியெனப் பொருள்படும். கிறிஸ்துவினுடைய முழுஜீவியமும்,

சுவிசேஷத்தின் முழுசெய்தியும், கிறிஸ்துசமயத்தின் முழுப் போதனையும் அன்புதான்.

அன்பு அறிவிக்கப்பட்ட விசேஷம் மாத்திரமல்ல கற்றுக் கொள்ளும்படியாகவும் நமக்குக் கொடுக்கப்பட்ட செய்தியுமாம். கிறிஸ்துவினுடைய சுயவெறுப்பே நமக்கு அன்பைப் போதிக்குமா றெழுந்ததன்றோ. பரி. யோவான் அப்போஸ்தலன் வயோதிகனாய் யாதும்பேசத் தானும் சக்தியற்றிருக்கும்போதும் அவர் கடைசியாகக் கூறியவார்த்தைகள் 'சிறு பிள்ளைகளே ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்பதே.

'ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்' எனக் கூறுவது கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதைக் குறிக்கிறது. எனினும் நாம் மனுஷர்மீதும் அன்புகூரவேண்டுமென்பதே கருதிய நோக்கம். அவ்வாறு எல்லாரோடும் அன்பாயிருப்பதைக் கற்பதற்கு முதலில் கிறிஸ்தவர் எல்லாரோடும் அன்பாயிருப்பதும் அவசியம்.

இப்படிச் சகோதர சிநேகத்தைப்பற்றி யோசிக்கும்போதே சகோதரபகை என்னவென்பதும் வெளியாம். இப்பகைக்கு நிதரிசனமாய் முதல் முதலிலிருந்தவன் உடன் பிறந்தவனைக் கொலைபுரிந்த காயீன். இவனைப்பற்றி பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார். **பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்க வேண்டாம்.** இவ்வாக்கியம் சரியாக அமையவில்லையெனினும் அதன்பொருள் தெளிவே—'நாம் காயீனைப்போலிருக்கிறதில்லை, இருக்கவும் கூடாது. அவன் பொல்லாங்கனால் உண்டாயிருந்தான். தன் சகோதரனைக் கொலைசெய்தான்.'

இரு சகோதரரைப்பற்றிச் சொல்லப்படுகிற முதல் சரித்திரத்திலேயே ஒரு சகோதரன் மற்றவனைக் கொலைபுரிந்தான் எனச் சொல்லப்படுகிறது. மனிதனுடைய ஆதிச் சரித்திரத்திலேயே, மனுஷன் தன்னுடைய சித்தத்தைப் பிசாசினுடைய சித்தத்திற்குக் கீழடங்க இடங்கொடுத்தபின் பிசாசினுடைய தன்மை எவ்வளவு அகோரமாய்க் காணப்பட்டதெனக் காண்கிறோம்.



**அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான், தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமா யிருந்ததினிமித்தந்தானே** நாமே யோசித்துப் பார்க்கும்படியாகப் பரி. யோவான் அப்போஸ்தலன் இந்தக் கேள்வியைப் போடுகிறார். ஆபேல் காயீனுக்கு விரோதமாய்ச் செய்த ஏதாவது குற்றமிருந்ததுண்டா? ஏதாவது தீங்கு செய்திருந்தானா? தனக்குச் செய்த தீங்குக்குக் காரணமாய்த் திடீரென வெழுந்த கோபத்தினாலுண்டான கொலையா? உலகில் நடக்கும் கொலைகளுக்குப் பெரும்பாலும் இப்படிப்பட்ட காரணங்களிருப்பதுண்டு. ஆனால் காயீன் செய்த கொலைக்கோ இத்தகைய காரணங்கள் ஒன்றுமில்லை. நெடுங்காலமாக அவனுடைய கிரியைகள் (கிரியைகள் எனப் பன்மையிற் கூறப்பட்டிருப்பது கவனிக்கப்படத்தக்கது.) அவன் சேவித்த 'பொல்லாங்கனால்' உண்டானவையாயிருந்தன (யோவா. 8. 39; 41. 44.). அவன் சகோதரனுடைய கிரியைகளோ நீதியுள்ளவைகளாயிருந்தன. ஆபேல் நல்லவனாயிருந்த ஒரே காரணம் பற்றிக் காயீன் அவனைப் பகைத்தான். தான் பொல்லாதவனாய் அசுத்தனாயிருக்கவும் தன் சகோதரன் நல்லவனாய்ப் பரிசுத்தனாயிருக்கிறானே என உணர்ந்து வருந்தினான். இவ்வெண்ணம் அவனில் பொல்லாப்பையும் 'பொல்லாங்கனால்' உண்டாகும் சகல தீக்குணங்களையும் எழுப்பினது. இக்காரணம்பற்றியேபோலும் தேவன் காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. (மத். 5. 23, 24.)

எனவே அவன் தன் சகோதரன் ஆபேலை இரக்கமின்றி வன்கொலைபுரிந்தான். கிரேக்கு பதப்படி கொலைசெய்தான் என்பதற்கு வழங்கியிருக்கும் பதம் ஆபேல் தடைசெய்யாமலும் தப்பிக்கொள்ள இயலாதுமிருக்கையில் கொலைசெய்தான் எனப் பொருள்படும். நமக்குள்ளும் சகோதரனைப் பகைக்கிற இந்தக் காயீனுடைய ஆவி எழுவதை நாம் அறிவோம். ஆனால் காயீனின் ஆவியை மேற்கொள்ளவும் சகோதரரில் அன்புகூரவும் தக்கதாக இயேசுகிறிஸ்துவின் ஆவி கொடுக்கப்பட்டிருக்

கிறது. பிசாசு ஆதிமுதலே மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் (யோவா. 8. 44.). பகையென்பதே அவனுடைய ஜென்மலக்ஷணம். ஆதலின் பிசாசின் சாயலை யணிந்தவர்கள் யாவரும் அவனுடைய பகையையும் உடையவர்களாவார். அவர்கள் சமயம் வாய்க்குமிடத்துக் கொலைபுரிய நாணார். ஆனால் தேவனுடைய குமாரன் இரக்ஷகராய் விளங்குகிறார் (வாக். 16.). அன்பே அவர் ஜென்மலக்ஷணம். அவருடைய சாயலில் பங்குபெற்றவரில் அவருடைய அன்பின் வித்து இருக்கிறது. அவர்கள் அவசியமாயின் தங்கள் உயிரையும் கொடுத்துத் (வாக். 16.) தம் சுயவெறுப்பைக் காட்டுவார்கள்.

காயீன் தன்னிடத்தில் இல்லாத பல நற்சுபாவங்களை ஆபேலிடத்தில் கண்டதே அவனுக்குள் ஆபேலுக்கு விரோதமாய்ப் பகையை விளைத்துக் கோபமூட்டி எழுப்பிவிட்டது.

குற்றமுள்ள நெஞ்சும் பாவத்துக்காக மனஸ்தாபப்படாத இருதயமும் காயீனின் ஆவியை நமக்குள் வர்த்திக்கச் செய்கிறது. தெய்வபக்தியுள்ள நல்லொழுக்கமான ஒருவனைக் கண்டவிடத்து அவனைப் பார்த்தமாத்திரத்தில் நமது மனதில் ஒருவிதமான கெட்ட எண்ணம் எழும்புகிறது. நாம் இருக்கவேண்டிய பிரகாரம் இருக்கவில்லை யென்பதனை யறிகிறோம். அதுபற்றி பக்தியுள்ளவருக்குமுன் நம்மைத் தாழ்த்தி அவரைப் பின்பற்ற வேண்டியதற்குப் பதிலாக அவரோடு சிநேகம்பண்ண மனமின்றி அவருக்கு விரோதமாய் நினைத்து அவருக்கு விரோதமாய் அவதூறுபேசியும் பேசக்கேட்டும் ஆபேலைக் கொலை செய்கிறோம். இப்படியிருக்கும்போது நாம் எவ்வளவுதூரம் தான் கிறிஸ்தவராயிருப்பினும் நாம் இருக்கவேண்டிய நிலைமையில்லை. 'தேவனுடைய பிள்ளைகளாயுமில்லை.'



# ஐந்தாம் பிரிவு.

## 3. 13–24. தேவ அன்பின் பயன்.

*(1) உலகப் பகையும் சகோதர அன்பும்.* 3. 13–18.

(13) என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்.

(14) நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; (சகோதரரிடத்தில்) அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். (15) தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகன் எவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள். (16) அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (17) (ஆனால்) ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாகவிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (18) என் (சிறு) பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

ஜீவனும் மரணமும் ஒன்றுக்கொன்று எப்படியிருக்கிறதோ அன்பும் பகையும் ஒன்றுக்கொன்று அப்படியே யிருக்கின்றன. அவை முறையே ஜீவனுக்கும் மரணத்திற்கும் அடையாளங்களாம். 'பாவத்திலும் மீறுதலிலும் மரித்திருக்கிற' உலகமானது இயற்கையாகப் பகையுடையதாயிருக்கிறது. நாம் அதற்காக

ஆச்சரியப்படவேண்டாம் (வாக். 13.). ஆனால் கிறிஸ்தவர்கள் அன்போடு ஜீவிக்கிறதினால் தாங்கள் 'ஜீவனோ'டிருக்கிறதாய் நம்பலாம் (வாக். 14.). கிறிஸ்தவரும் பகையுடன் ஜீவித்தால் அது அவர்கள் 'ஜீவன்' இல்லாமலிருக்கிறார்கள் என்பதை மாத்திரமல்ல அவர்களே ஜீவனை யழிக்கிறவர்களா யிருக்கிறார்கள் என்பதையும் காட்டும் (வாக். 15.). நாம் கிறிஸ்துவினுடைய அன்பைப்பார்த்து அன்பை யறிந்திருக்கிறோம், எம்பிரான் தம்மையே பலியாயீந்து தமது அன்பை வெளிப்படுத்தியதைக் கவனித்து அவருடைய அன்புக்குச் சமமாக நமது அன்பையும் வளர்க்கலாம் (வாக். 16.). இவ்வாறு செய்யும்போது நாம் அவ்வன்பைப்பற்றி வாயினால் பேசுபவர்களாய் மாத்திரமிருந்து அன்பின் கிரியைகளைச் செய்ய மறந்து நம்மை வஞ்சித்துக்கொள்ளாதபடி நாம் எச்சரிப்பா யிருந்துகொள்ள வேண்டும். நமது அன்றாடக நாடோடிய ஜீவியத்தில் பிறர் துன்பம் துக்கங்களை யனுபவிக்க நாம் காணும்போது அவர்களுக்கு நாம் உதவிசெய்வதினின்றும் நமக்கு அன்பு உண்டோ இல்லையோ என்பதை யறிந்துகொள்ளலாம்.

**உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்.** சகோதர சிநேகத்தைப் பேசப்போகும் இப்பாகத்தில் பரி. அப்போஸ்தலனும் **சகோதரரே** என அழைக்கிற தன்மை கவனிக்கத்தக்கது. இந்த ஓரிடம்தவிர வேறெந்தவிடத்திலும் அப்போஸ்தலன் சகோதரரே என அழைப்பதில்லை. கிறிஸ்துவினுடைய அன்பினால் ஒருவரையொருவர் அன்பு பூண்டொழுகும் கிறிஸ்தவரைக் காயீனுடைய பகையினால் ஒருவரையொருவர் பகைக்கும் உலகினர் தங்களுக்குப் பகையாளிகளென்று எண்ணுகிறார்கள். எனினும் இப்பாகம் பகைபூண்டிருக்கும் உலகினருடைய துன்பத்தைச் சகித்து விளங்கும் கிறிஸ்தவரை ஆறுதல்படுத்தும் நோக்கமாக மாத்திரம் எழுதப்பட்டதன்று. ஆனால் அந்த பயங்கர சுபாவமாகிய பகையென்பது கிறிஸ்தவர் மனதிலும் புகுந்துவிட அவர்கள் இடங்கொடாதபடி அவர்களை எச்சரிக்கவும் எழுதப்படுகிறது. ஏனெனில் பகை



யென்பது இதயத்துட் புகுந்தமாத்திரத்தில் இவர்கள் பெயர் மாத்திரந்தான் கிறிஸ்தவராகவேயிருப்பினும், அவர்கள் மரணத்தில் உலகத்தோடுங்கூடப் பங்குடையவராகிறார். அதுகாரணமாக நித்தியஜீவனை யடைதற்கும் அபாத்திரராகிறார்.

ஆனால் **ஆச்சரியப்படாதிருங்கள்** என்கிற பாகத்தை நாம் உற்றாராயுமிடத்து அடுத்தகாரியம் நன்கு வெளியாகிறது. கிறிஸ்துவின் அன்பினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆத்துமா தன் சுகத்தையும் பெலத்தையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது; பிறருடைய ஆத்துமாக்களைக் கிறிஸ்துவினண்டையிற் சேர்க்க முயலும்போது அதற்காக உலகம் அவ்வாத்துமாவை நேசிக்கவேண்டியதற்குப் பதிலாக அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் வாய்தூறி, வம்பு பிதற்றி, பழிசுமத்தி, இம்சித்து, கொடுமைபுரிந்து, அவனைக் கொலைபுரியவும் செய்யின் அதுகண்டு ஆச்சரியமடையானோ? இதுபற்றியே கர்த்தர் இவ்விஷயத்தை முன்னுரைத்து எச்சரித்தார் (யோவா. 15. 18–21; 16. 1–3. லூக். 6. 26.). இது சம்பந்தமாகவே உலகத்தோடுறவாடல் தவறென யாக்கோபு நிருபத்திலும் இடித்துரைக்கப்படுகின்றது. (யாக். 4. 4.)

ஆத்துமாக்கள்பேரில் பேராவல்கொண்டு உலகில் வந்த எம்பிரானைப்போலும் அத்துணை அதிகமாய்ப் பகைக்கப்பட்டவரும், இரக்கமின்றிக் கோரமாய் சித்திரவதை செய்யப்பட்டவரும் வேறு யாருளர்? எவருமிலர். பூரண அன்பும் இடையறா ஞானமும், பெருமையும் சுய நலமும் இல்லாதவராய்ப் போந்த எம்பிரானையே உலகம் அவ்வாறு பகைத்ததென்னின், உலகத்தின் பகையை எழுப்புதற்கு இடமாய் ஞானமின்மையும் பெலவீனமும் குடிகொண்ட அவருடைய சீஷரை உலகம் பகைப்பதும் ஆச்சரியமோ? அன்று. அப்பகையை எதிர்பார்க்க வேண்டுவதும் சீஷர்கடனன்றோ?

மற்றுமோர் விதமாய்ப் பார்த்தால் நாம் ஆச்சரியப்பட நிமித்தமில்லை. நம்மிடத்தில் புதிதாகவெழுந்த இந்த அன்பு நாம் புதிதாக அடைந்த ஜீவனின் பலனாகவும் அடையாளமாகவு

மிருக்கிறது. இன்னும் மரணத்திலேயே இருப்பீர் இதனை யடைதல் அசாத்தியம். அங்ஙனமாயின் உலகம் நல்லோரைப் பகைத்தல் கண்டு அதிசயிப்பதேன்? நாம் ஒருகாலத்தில் அப்படிச் செய்தவரல்லரோ? **நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்.** மூலபாஷையின்படி பொருள் 'நாம் சகோதரரில் அன்புகூருகிற காரணத்தினால் மரணமாகவேயிருக்கிற மரண நிலைமையிலிருந்து கடந்து ஜீவனாகவேயிருக்கிற ஜீவனுள்ள நிலைமைக்குள் பிரவேசித்திருக்கிறோமென்று நாம் அறிந்திருக்கிறோம்' (பகையேபூண்ட அந்தகாரம் கவிந்த உலகம் நம்மைப்பற்றி யாது நினைப்பினும் நமக்கு யாது இயற்றினும் அது காரியமில்லை.) அந்த ஜீவனுள்ள நிலைமையில் இன்னும் இருக்கிறோம்.

மரணமுள்ள நிலைமையில் னீங்கி ஜீவனுள்ள நிலைமைக்குள் பிரவேசித்திருக்கிறதைப்பற்றிக் கிறிஸ்தவருக்குள் எவ்வித சந்தேகமும் நிகழப்படாது. அதனை யறிதற்கான அடையாளம் அன்புதான்: நாம் நமது சகோதரரில் அன்புகூருகிறோமா? அல்லது நம்மில் அன்புகூருகிறவரிலும், அன்புகூருவதால் நாம் லாபமடையக் கூடியவரிலும்மாத்திரம் அன்புகூருகிறோமா? இப்படிப்பட்டவர்களில்மாத்திரம் அன்புகூருவது உலக அன்பு (மத். 5. 43–48.). அது தன்னயமுள்ள அன்பு. நமக்கு மனம்பொருந்தாதவரிடத்தும் நமக்குத் தீங்கியற்றுபவரிடத்தும், நம்மைப் பகைப்பவரிடத்தும் அன்புகூரவேண்டும். நாம் இப்படிப்பட்டவரை ஒருதடவை நேசிக்க ஆரம்பித்தவுடன் நாம் அவர்களிடத்து எவ்வளவு அற்பசொற்பமாய் அன்புகூர்ந்தபோதிலும், நம்மைப் பகைக்கிறவர்களுடைய குற்றங்களை உண்மையில் மன்னித்து அவர்களுக்கு விரோதமான எவ்வெண்ணத்தையும் மனதில் பேணிப் பாதுகாவாதிருப்பின் நாம் மரணதேசத்தினின்றும் ஜீவனுள்ளோரின் தேசத்தினுள் பிரவேசித்துவிட்டோமென்பதைப்பற்றித் திட்டமாய்ச் சந்தேகமின்றி யறியலாம்.



பரி. யோவான் அப்போஸ்தலனுடைய கருத்துப்படி நித்திய ஜீவனென்பது பிற்காலத்தில் நாம் பரலோகராஜ்யத்தில் அடையக்கூடிய ஸ்திதியன்று. அது நாம் இங்கிருக்கும்போதே பிரவேசிக்கக்கூடிய தற்கால ஸ்திதியேயாம்.

நாம் அன்புகூரவேண்டிய சகோதரர் யாவர்? புதிய ஏற்பாட்டில் சகோதரர் எனும் பதம் கிறிஸ்தவரையே குறித்து நிற்கின்றது. பரி. யோவான் அப்போஸ்தலன் எழுதியவற்றுள்ளும் அப்பதம் அடியில்வரும் இடங்களில் வழங்குகிறது. 3 யோவா. 10. வச. யோவா. 21. 23. வெளி. 6. 11; 12. 10; 18. 10; 22. 9. இவ்விடங்களிலெல்லாம் (தீர்க்கதரிசிகளாகிய உன் சகோதரர் என வழங்கும் கடைசியிடந்தவிர) அது திட்டமாகவே கிறிஸ்தவரைத்தான் குறிக்கிறது. அன்பானது முதல் முதல் கிறிஸ்தவ சகோதரருக்குள் வெளிப்படவேண்டும். இத்தகைய அன்பு பூரணமான தென்பதன்று. எல்லோரும் நமது சகோதரரே, எவனையேனும் ஒருவனைப் பகைத்தபோதிலும் அப்பகை நம்மை 15-ம் வசனத்திற் குறிக்கப்பட்ட குற்றத்திற்காளாக்கும். இவ்வுண்மை அடுத்த வசனத்திற் குறிக்கப்பட்டிருப்பதினின்றும் வெளியாகும். **அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.** எவரில் அன்புகூராதவன் எனக் கூறப்படவில்லை. சகோதரனில் மாத்திரமன்று எவனிலாயினும் அன்புகூராதவன் என்பது இதனாற் போந்த பொருள். எனவே அவன் கிறிஸ்துவால் மீட்கப்படாத (நம்மை மீட்கவந்த) மரணநிலைமையில்—அதாவது தேவனுக்கு விரோதமான நிலை, மனுஷரைப் பகைப்பதாகிய நிலையில்—தங்கியிருக்கிறான்.

'அன்புகூராதவனே மரணநிலையிலிருப்பானென்னில் பிறரைப் பகைப்பானொருவனிருக்கும் மரணநிலை யாதோ' வெனக் கூறினார் பூர்வ நூலாசிரியருள் ஒருவர். ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் விஷயத்தில் 'அன்புகூராமைக்கும் பகைக்கும் பேதமில்லை. அன்புகூராத கிறிஸ்தவன் பகைக்கிறான். பகைக்கிற கிறிஸ்தவன் மனுஷ கொலைபாதகனாயிருக்

கிறான். மனுஷ கொலைபாதகனோ மரணத்தில் நிலைத்திருக்கிறான்.'

**'தன் சகோதரனைப் பகைக்கிற எவனும், மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்.'** செய்கைகளை யுற்றுநோக்குகிற தேவன் அந்தச் செய்கைகளுக்குக் காரணமாகிய நோக்கம் யாதெனக் கவனிக்கிறார். இருதயம் ஒருவனைப் பகைக்கும்போது அப்பகை முற்றிக் கொலையாவதை யவரறிகிறார். எம்பிரான் மலைமீது ஹிதோபதேசம் செய்ததும் அப்படியே (மத். 5. 21; 22. 28.). பகை என்பது அநீதியைக் கண்டவிடத்தெழும் நீதியான கோபமன்று. இவ்வகைத்தாம் கோபம் தீங்கையும் அநீதியையும் கண்டவிடத்து தெய்வச்செயலால் மனதிலெழுவதாம். உண்மையிற் பகைதானோவென்பதை யறிதற்கான அடையாளம் மனதினிடை அன்பு அகன்றுவிட்டதோவென ஆராய்வதே. தங்களிடத்துள்ள சகோதர சிநேகம் நசித்துவிடாதபடி கிறிஸ்தவர் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சிநேகம் கெடுவது பகைக்கும் கொலைக்கும் ஏதுவாம். அன்பு கெடுவதாகிய இத்தன்மை கிறிஸ்தவ ரிதயத்துள்ளும் பல்வேறு விதமாக வெளிப்படலாம். நியாயம்போலும், எச்சரிப்புப்போலும், நியாயமான கோபம்போலும் வெளிப்படுதலுமுண்டு. உலகத்தாரால் பகைக்கப்படுதல் காரணமாய் ஏதோ தமது பெருமைக்குப் பங்கம் உண்டாயதாய் நினைந்து இனி உலகத்தோடு எவ்வித சம்பந்தமுமின்றி அகல விருந்துவிடவும் எண்ணமுண்டாவதுண்டு. பலகால் பொறுத்தும் பின்னும் பொறுமைக்கு வழியில்லாமையாலும் ஏதோ செய்யவேண்டியவற்றில் தவறிவிட்டமையாலும் மனந்தளர்ந்து, மரணத்தினின்றும் ஆத்துமாக்களை இரக்ஷிக்குமாறெழுந்த ஆசையனல் குறைந்துபோவதுமுண்டு. ஒரு சகோதரனிடத்தில் சிநேகம் ஆவக்குங்கால் பேரன்பு பூண்டிருந்து, பின் அவனிடத்திற் சில குற்றங்களைக் கண்டவிடத்து அவ்வன்பு குறைந்துபோவதுமுண்டு. வாஸ்தவம், நாம் அன்புகூருவது பிரயோசனமா யிருக்கவேண்டுமாயின், ஞானத்தோடும், எச்சரிக்கையோடும், அடக்கத்தோ



டும் (வரம்புகடவாமலும்) சிறிது கண்டிப்பாகவுமே அன்புகூரவேண்டும். ஆனால் நாம் இவ்விதமாய் யோசித்து அன்புகூருவதாய் நினைந்து இறுதியில் அன்பில்லாமலே போய்விடலாகாது. இதுபற்றியே, அன்பின்மை முற்றி மனுஷ கொலைபாதகத்தில் முடியும் எனும் நிலையைக் கூறி எச்சரிக்கிறார்.

மனுஷ கொலைபாதகம் என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மூலபதம் புதிய ஏற்பாட்டில் மற்றும் ஓர் இடத்தில்மாத்திரம் வருகிறது (யோவா. 8. 44.). காயீனுடைய இந்த ஆவி எதிலிருந்து உற்பத்தியானதென்பதை இந்த வாக்கியம் நமக்குக் காட்டுகிறது. அது 'ஆதிமுதல் மனுஷ கொலைபாதகனாய்' இருக்கும் சாத்தானிலிருந்து உண்டாகிறது.

பகையைப் பாதுகாக்கும் மனிதன் தன் சொந்த ஆத்துமாவையே கொலைபுரிகிறான். நாம் பார்த்தபடி ஜீவனாக விளங்கும் அன்பைத் தன் இதயம்விட்டும் அகற்றிவிடுகிறான். ஆகையினால்தான் தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் என எழுதும் இந்த நமது அப்போஸ்தலன் வெளிப்படுத்தின விசேஷத்தில் கொலைபாதகருக்கு நேரும் தண்டனையைப்பற்றிக் கூறுமிடத்து......'கொலைபாதகரும்...... இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்' (வெளி. 21. 8.) என்கிறார்.

மனுஷ கொலைபாதகன் இனிமேலல்ல இப்பொழுதே நித்தியஜீவனை இழந்துவிடுகிறான். **'மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள்'** நித்தியஜீவனென்பது அன்பாகவே இருக்கிற தேவனைப்பற்றி யறிகிற அறிவு. எனவே அது (நித்தியஜீவன்) அன்பில் வளர்ச்சியடையும். ஆகையினால் அன்பில் விர்த்தியடையாமல் பகையில் வளர்ந்துகொண்டேபோகு மொருவனிடத்தில் நித்தியஜீவனிருக்க முடியாதென்பது வெளிப்படை. மனுஷ கொலைபாதகனாகிய காயீன்! தன்னையே பிராணத்யாகம் செய்த கிறிஸ்து! இருவருக்கும் எத்தனை வித்தியாசம்! காயீனுடைய பெரும்பாதகத்தினால் பகையின் திறனும் எம்பிரானது பிரா

ணத்யாகத்தினால் அன்பின் திறனும் யாவென விளங்கும். அவர்
தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே, அன்பு
இன்னதென்று அறிகிறோம். அன்பு ஒரு புதிதான காரியமாக
உலகத்தாருக்கு இயேசுவில் வெளிப்பட்டது. அவர் அன்பை
முக்கியப்படுத்தினார். அன்பைப் பெருக்கினார். அதனையே
உயர்த்தினார். இவ்வாறாக அந்த அன்பையே புதிதான ஒன்றாகப்
படைத்துவிட்டார். அந்த அன்பை—அந்த தேவ அன்பை—
கல்வாரிக் குருசினடியில் நின்று காண்கிறோம். 'நமக்காக
இவ்விடத்தில் (நமக்குப் பதிலாகவல்ல) (நம்பொருட்டு) அவர்
தமது ஜீவனைக் கொடுத்தார்.' அவர் நமக்காக நமக்குப் பதிலாக
மரித்தாரென்பதிலும் இது மேலானது. 'ஜீவனைக் கொடுத்தல்'
என்பதில் கடைசியாக எல்லாவற்றையும் முடிக்கிறதாக வெளிப்
படுவது மரணம். இங்கு ஜீவனை என்பது சரீர ஜீவனையன்று.
ஜீவனோடிருக்கையில் ஒருவன் தன் காரியங்களை நடத்துதற்குக்
காரணமாய் 'நான்' 'எனது' எனக் கூறுமியல்புள்ள அந்த
உள்ளுறை தன்மையே அந்த ஜீவனாகும். கிறிஸ்துவோ முழுது
மாய்த் தம்மை வெறுத்து நமக்காக, நம்பொருட்டுத் தம்மை
ஒப்புக்கொடுத்தார்.'

காயீனுடைய ஆவியினின்றும் நாம் நம்மைக் காத்துக்கொள்
ளக்கூடிய எது இங்கேயிருக்கிறது. பகைப்பது ஒருகாலத்தில்
நமது இயல்பாக இருந்ததுபோல அன்புகூருவதும் இப்பொ
ழுது 'கிறிஸ்துவில்' நமது இயல்பாகவும் கடமையாகவுமிருக்
கிறது. கிறிஸ்துவின் முன்மாதிரியும் அவர் நமக்குக் கொடுக்
கிற வல்லமையும், அவருடைய சேஷாகிய நாமும் அவரைப்
போல் பிறரில் அன்புகூர நமக்குப் பலனளிக்கின்றன.

**'நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளி
களாயிருக்கிறோம்.'** ஜீவனைக் கொடுத்தலைத் தவிர வேறெந்த
சாதாரண செய்கையையும் அன்பின் பிரதான நோக்கமாகப்
பரி. யோவான் அப்போஸ்தலன் பாராட்டமாட்டார். ஜீவ
னைக் கொடுப்பதையும் ஓர் வீரச்செயலென மதியார். அதைப்
பற்றி நாம் பெருமைபாராட்டவும் ஏதுவில்லை. பிறர் அதி



சயிக்கக் காரணமுமில்லை. ஏனெனில் அதுவும் நமது கடமை
தானெனக் கூறுகிறார். நாம் ஒருவருக்காக ஒருவர் மரிக்கக்
கூடியவர்களாயிருக்கவேண்டும் என ஸ்லெட்டர் ஆசிரியர்
வியாக்கியானம் உரைக்கிறார். கிறிஸ்துவின் விஷயத்திற்
போலவே நம்விஷயத்திலும் சாதாரணமாய் மரித்துவிடுவது
மாத்திரம் அக்கடமையின் பொருளன்று, மற்றவருக்காக எல்
லாவற்றையும் சகித்து ஊழியஞ்செய்கிற ஜீவியமே அக்கடமை.
இவ்விஷயத்தில் கிறிஸ்தவர் மற்றவர்களுக்குக் கடனாளிகளா
யிருக்கிறார்கள். 'நான் மற்றவருக்கு உதவிசெய்து மற்றவருக்
காக ஜீவிப்பேன். ஆனால் அப்படி ஜீவிப்பது எனக்கு எவ்
வித இடையூறையும் உண்டுபண்ணக்கூடாது. எனக்குக்
களைப்பையுண்டுபண்ணக்கூடாது. என் சுகத்தைக் கெடுக்கக்
கூடாது. என் ஜீவனுக்கு எவ்வித மோசத்தையும் விளக்கக்
கூடாது' என்கிற ஒரு பிரமாணத்தை மேற்கொண்டொழுகி
னால் நம்மிலுள்ள அன்பு செத்துப்போம். ஏனெனில் அன்பை
அதிகமாய்க் காட்டவேண்டிய அவசியமிருக்கும்; அந்த நேரத்
தில் நமது அன்பு முன்னுக்குவராமல் 'நான்' என்கிற தன்
னயமே முன்னிற்கும். அச்சமயத்தில் நமது ஜீவனை நமது
சகோதரருக்காகக் கொடுக்கவேண்டியதற்குப் பதிலாக சுயநலங்
காரணமாக அதனை நமக்கென வைத்துக்கொள்ளுகிறோம்.

**(ஆனால்) ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து
தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன்
இருதயத்தை யவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள்
தேவ அன்பு நிலைகொள்வதெப்படி?** அன்பின் அறிகுறி
யாய்ச் செய்யவேண்டிய சுயவெறுப்பின் பெருஞ்செய்கை பிற
னுக்காக மரித்தல், அதனையடுத்து சுயவெறுப்பின் அதிசாதா
ரண காரியமாகிய ஏழைக்குதவுந் தன்மையைக் கூறுகிறார். அதி
யுன்னத ஸ்தானத்திலிருந்து அதிசாதாரண காரியத்திற்கு வந்து
விட்டார். நாம் பெரிய காரியங்களைச் செய்வதாகச் சொல்லி
அடிக்கடி நம்மை வஞ்சித்துக்கொள்ளுகிறோம். சுயவெறுப்
பைப்பற்றிய வார்த்தையும் நினைவும் எப்போதும் கிறிஸ்தவ

ருக்குமுன் நின்றபோதிலும் அதின்படி நடத்தல் சிறிது கஷ்டமே. 'நான் எல்லாரையும் நேசிக்கிறேன். அவர்களுக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்.' 'அப்படியா நல்லது, இங்கே ஒருவர் அதிக கஷ்டமான நிலைமையிலிருக்கிறார். அவருக்கு உனது பொருளையும் கொடுத்து, அவருக்காகக் கொஞ்சம் வேலைசெய்து நேரத்தையும் செலவிட்டு உதவிசெய்வாயா? இது ஒரு அற்பமான காரியந்தான். இதைச் செய்யாத் தவறினால் நியாயந்தீர்க்கப்படுதற்கு இனி வேறுகாரணம் வேண்டாம்.'

இவ்வுலக ஆஸ்தி. நமது ஐஸ்வர்யம், அந்தஸ்து, அறிவு முதலிய சகலமும் நமது உலக ஆஸ்தியாம். இவ்விடத்தில் ஆஸ்தியென மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பதம் 2. 16—ல் 'ஜீவனத்தின் பெருமை' யெனுமிடத்தில் ஜீவனமென மொழிபெயர்க்கப்பட்டுளது: உலகஜீவனம் நித்தியமாயிருக்கிற ஜீவனத்துக்கு மாறாக இந்தவித ஆஸ்திகளாயிருக்கிறது. இவை எவ்வளவு அற்பமான காரியம்! இதைப்பற்றி ஹார்ட் ஆசிரியர் அடியில் வருமாறு வியாக்கியான முரைப்பார்: — பரி. பவுல் அப்போஸ்தலன் தன் சகோதரருக்காகத் தன்னிடத்துள்ள எல்லாவற்றினும் மேலானதும் சிறந்ததுமான செல்வமாகிய கிறிஸ்துவோடுள்ள ஐக்யத்தையும்கூட விட்டுவிட உடன்படுவதாகச் சொல்லுகிறார் (ரோ. 9. 3.). அப்படியிருக்க நீங்கள் எல்லாவற்றினும் அற்பமானதான இந்த ஆஸ்திகளைக் கொடுக்கக் கூடாதா? கொடாமலிருப்பது உலகப்பிரகாரமாகவும் இழிவெனப்படும். ஏனெனில் உலகப்பிரகாரமாகவேனும் நீ இரக்கமும் அனுதாபமு முடையனா யிருக்கவேண்டும். ஆனால் உதவிசெய்யாத விஷயத்தில் உலகப்பிரகாரமான இரக்கம் அனுதாபம் முதலிய லக்ஷணங்களும் இல்லனவாம். 'உலகத்துக்கு மாறாய இவ்விதக் கன்னெஞ்சனும் தன்மை தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டும்' எனும் தொடரிலிருந்து விளங்குகிறது. அவனுக்கு என்னென்ன காரியங்கள் குறையென்பது எனக்குத் தெரியும். என் கண்களே அக்குறைகளைக் காணுகின்றன. என் எண்ணத்துக்கும் தெரிகி



றது. 'இரக்கமிருக்குமேல் நான் அவனுக்கு உதவிசெய்ய வேண்டும். ஆனாலும் நான் இருதயத்தைத் தாழிட்டுக்கொள்ளுகிறேன்.

'அவனுக்கு அடைத்துக்கொண்டால்' என்பது முதுகைக் காட்டித் திரும்பிப் போய்விடுதல் எனக் காட்டுகிறது. வருகிற யாசகருக்கெல்லாம் வரையாதளிப்பதே கிறிஸ்தவ அன்பென்பதன்று. கஷ்டப்படுகிறவனைத் தனது சகோதரனாகப் பாவித்து அவனுக்குள்ள இன்னல் இடைஞ்சல்களைக் கஷ்டப்பட்டாயினும் அறிந்து ஞானத்தோடும் பக்ஷத்தோடும் அவனை அக்கஷ்டத்தினின்றும் நீக்குவதே கிறிஸ்தவ அன்பாகும்.

**அவனுக்குள் தேவனுடைய அன்பு நிலைகொள்வதெப்படி?** இங்கு தேவனுடைய அன்பென்பது யாது? இவன் தேவன்மீது வைக்கும் அன்போ, தேவன் இவன்மீதுவைக்கும் அன்போ? இரண்டுமே. தன் சகோதரனிடத்தில் அன்புகூராதவ னிதயத்தில் தேவன்மீதும் அன்பு இருக்கிறதில்லை (4. 20.). நாம் பிறர்மீதுவைக்கும் அன்பு தேவன் நம்மீதுவைக்கும் அன்பினால் உண்டாகிறபடியால் பிறனுக்கு அனுதாபங்காட்டாது தன் இருதயத்தை யடைத்துக்கொள்ளுகிறவனிடத்தில் தேவனுடைய அன்பும் நிலைத்திருக்கிறதில்லை.

இப்பாகத்தை முடிக்குமுன் உண்மையான மாயமில்லாத அன்பு நமக்கு இருக்கவேண்டுமென நம்மைப் பரிவுடன் கேட்டுக்கொள்ளுகிறார். பரி. யோவான் அப்போஸ்தலன் தமது சீஷரை நோக்கி ஒரு பிதாவைப்போல பேசுகிறார். அவர் கர்த்தருக்குள் அவர்களைப் பெற்றவராவார். இவரோ விருத்தாப்பியமான கனமுள்ள ஓர் குரு. அதுபற்றியே அவர்கள் இதயத்தில் பதியத்தக்கதாய் 'என் சிறுபிள்ளைகளே' என விளிக்கிறார். **வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்** எனக் கூறுகிறார். இங்கு கூறப்படும் ஒவ்வோர் பதமும் முக்கியமானது. இவற்றில் இவ்விரண்டு வார்த்தைகளாக எடுத்துப்பார்த்தால் பொருள் நன்கு புலப்படும்.

**(1) வசனத்தினாலல்ல கிரியையினால் அன்பு கூரக்கடவோம்.** சிலர் அனுதாபத்தோடு அதிகம் செய்யக்கூடியது பக்ஷமாய்ப் பேசுதல் மாத்திரம்தான். இங்கு பக்ஷமான வார்த்தைகள் என்பது அனுதாபத்தோடும் பச்சாத்தாபத்தோடும் உண்டாகும் பக்ஷமான வார்த்தைகளாம்.—ஆனால் சுயவெறுப்போடு மரணத்தைக்கூட சகிக்கக்கூடிய பக்ஷமான அன்பின் கிரியைகளைச் செய்வதற்கோ அவர்கள் ஒருப்படார். இத்தகைய கிறிஸ்தவரைப்பற்றி யாக். 2. 15, 16—ல் கூறப்பட்டிருக்கிறது.

**(2) நாவினாலல்ல உண்மையினால் அன்பு கூரக்கடவோம்.** இங்கு விபரீதமான ஓர் காரியம் சொல்லப்படுகிறது. வார்த்தைகள் அன்பான வார்த்தைகள்தான். எனினும் அவை இதயத்தினின்றும் புறப்படுகின்றனவல்ல. அவை நாவினால்மாத்திரம் உண்டானவை. **உண்மையானவையல்ல.** உண்மையின் அன்பில்லாதிருக்கவும் வெற்றுரையாக மாயமாய் அன்பிருப்பது போல் பேசப்படும் வசனங்களுக்கு நாம் எச்சரிக்கையாய் நடந்துகொள்ளவேண்டும். (இவ்வெச்சரிப்பின் அவசியத்தை யுணராதார் யாவர்?)

### தேவனுக்குமுன் நம்பிக்கை. 3. 19—24.

பரி. யோவான் அப்போஸ்தலன் தமது சிறுபிள்ளைகள் தாங்கள் கிறிஸ்துவிலிருக்கிறதாக நம்பி சந்தோஷமும் மகிழ்ச்சியுமுள்ள கிறிஸ்தவரா யிருக்கவேண்டுமெனவும் நியாயத்தீர்ப்பு நாளில் அவருக்குமுன் நிற்கக்கூடியவர்களா யிருக்கவேண்டுமெனவும் விரும்புகிறார். அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் இருதயத்தில் அதிக கஷ்டத்தையும் பயத்தையும் அநுபவிக்கிறார்கள் என்பதை அவர் அறிவார். அவர்கள் இருதயம் அவர்களைக் குத்துகிறது. தங்கள் பாவங்கள் அதிக ஏராளமாயிருப்பதால் தங்களுக்கு மன்னிப்புக் கிடையாதேபோமோவென வருந்துகிறார்கள். உண்மையான நல்ல கிறிஸ்தவர் பலர் பலதடவைகளில் இப்படி நினைந்து வருந்துவதுமுண்டு. தம்மை வருத்துகிற மனச்சான்றை எவ்வாறு அமைந்திருக்கச் செய்யலாம் என்பதைப் பரி. அப்போஸ்தலன் இப்பாகத்தின் முதல் பிரி



வில் கூறுகிறார் (வாக். 19, 20.). பின் விசுவாசமுள்ள ஜெபத்தினால் நமக்குக் கிடைத்த தேவனுடைய அன்பின் பயனாய் ஆத்துமாவுக்குள்ள நம்பிக்கையைப்பற்றிக் கூறுகிறார். அந்த ஜெபத்தை அவசியம் கேட்கவே கேட்பார். ஏனெனில் அது கீழ்ப்படிதலுள்ள அன்பின் சத்தம் (வாக். 21, 23.). இறுதியில் நாமடைவது தேவனோடு நமக்குள்ள ஐக்கியமும் நம்மோடு தேவனுக்குள்ள ஐக்கியமுமே. (வாக். 24.)

**19. இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்கு உரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். (20) நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். (21) பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, (22) அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் (அவருடைய பார்வையில்) பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிற தெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். (23) நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. (24) அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறது அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.**

19—ம் 20—ம் வசனங்களைப் பலவாறு மொழிதிருப்பிப் பலவாறு பொருள்கொள்வர். இங்கே அவற்றில் ஒருவிதமான பொருளைக் கவனிப்போம். அன்பினாலேயே தேவனுக்கு முன்பாக நம்மை நிச்சயப்படுத்திக்கொள்ளக்கூடிய ஸ்திதியுண்டாகிறது. **இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று**

**அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்குமுன் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.** 'இதினாலே' என்பது அன்பின்படி நடப்பதினால் எனப் பொருள்படும். 'வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் உண்மையினாலும்' அன்புகூர்வது. இதுவே நமது விசுவாசத்திற்கும் நாம் கிறிஸ்துவோடு உண்மையின் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது. இதுவன்றி நாம் உணர்வதையும், நாம் நினைத்துக் கொள்வதையுமே அடையாளமாகக் கொள்வோமென்னில் அது ஒப்பாகாது. ஏனெனில் அது மாறுந்தன்மையுடையது; ஒரு நிலையானதன்று. ஆகையினால் கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூருகிற அடையாளத்தின் மூலமாய் நாம் உண்மையாகவே விளங்குகிற அவரினின்று நமது ஜீவனைப்பெற்றுச் 'சத்தியத்திற்குரியவர்கள்' என்று அனுபவத்தில் அறிந்துகொள்ளலாம். 'சத்தியத்திற்குரியவர்கள்' என்கிற இந்த வாசகம் பரி. அப்போஸ்தலன் எம்பிரானிடமிருந்தும் கேட்டறிந்த ஓர் காரியம். எம்பிரான் உலகத்திலிருந்தகாலத்தில் உலகினர் எல்லோரையும் சத்தியத்திற்குரியவர் என்றும் சத்தியத்திற்குரியரல்லாதவரென்றும் இருபிரிவினராகப் பிரித்துச் சத்தியத்திற்குரியவர் தம்முடைய சத்தத்தைக் கேட்கிறார்கள் என்றார். (யோவா. 8. 37.)

நம்முடைய இருதயம் நம்மைக் குற்றப்படுத்துகிறது. எனினும் நாம் சகோதரரில் அன்பு கூருகிறோமெனச் சொல்லியும், நமது இருதயத்திலும் தேவன் பெரியராயிருத்தலின் நமது இதயம் அறிவதினும் அதிகமாய் அவர் அறிவார் எனச்சொல்லி நமது இதயம் நம்மைக் குற்றஞ்சாட்டும்போது அதை அடக்கி விடுகிறோம். இனி நமது இருதயம் இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறதாவதென்ன? ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும் ஒருகாலம் வருகிறது. அப்பொழுது அவன் செய்த சகல தீவினைகளும், செய்யாதுவிட்ட சகல நற்காரியங்களும், அவன் விலக்கின சகல தேவகிருபைகளும், அவனுடைய பழைய நிலைமையின் இழிவும், அவனுடைய இதயத்துக்கு நன்றாய்த்



தோற்றி அவனை வருத்துகின்றன. அப்பொழுது தான் இருக்கிற அந்தகார நிலைமையைப் பார்க்கிறான். தான் தேவனினின்றும் பிரிந்திருப்பதாய் எண்ணுகிறான். தான் மோசத்துக்குள்ளிருப்பதாயெண்ணிப் பரிதபிக்கிறான். அவன் இருதயம் அவனைக் குற்றஞ்சாட்டி அவனுடைய பாவங்கள் மிகப் பலவென்றும் மிகக் கொடுமையானவையென்றும் மன்னிக்கப்படக் கூடாதனவென்றும் சொல்லி அவன் கொண்டிருந்த நம்பிக்கையும், அவன் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டடைந்த மகிழ்ச்சியும், தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென அவன் எண்ணியிருந்த எண்ணமும் ஆகிய பலவும் மாயம் எனவும் காட்டுகிறது. இத்தகைய துயரிலாழ்ந்து தத்தளித்த பரிசுத்தவான்களும் பலர். **நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்குமானால் நம்முடைய இருதயத்தை அவருக்குமுன் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்** (மூலபாஷையில் இப்படித்தான் முன் பின்னாக எழுதியிருக்கிறது.). நம்முடைய இருதயத்தின் வாக்குமூலம் உண்மையாகவேயிருப்பினும், நம்முடைய இருதயமன்று; தேவனே நியாயந்தீர்க்கிறவரென்பதை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் நியாயந்தீர்க்கிற **தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்.** நாம் நம்மைத் தேவனுடைய சந்நிதானத்தில் நிறுத்துவதொன்றே நமக்குத் தெளிவையும் விடுதலையையும் கொண்டுவரும். ஏனெனில் தன்னைத்தான் வஞ்சிக்கிற எவனும், பாவத்துக்காக மனஸ்தாபப்படாதவனாகிய எந்தப் பாவியும் தன்னை அப்பரிசுத்த சந்நிதியில் கொண்டுவந்து நிறுத்திக்கொள்ள முடியாது. அங்கே என் தேவனுடைய சந்நிதியில் என்னைக் குற்றப்படுத்துகிற என் இருதயத்தை யடக்கிவைக்கக்கூடும். உண்மையாகவே நான் என் சகோதரனில் அன்புகூருகிறேனா என என்னைச் சோதித்தறியக்கூடும். நான் அன்புகூருவது வாஸ்தவமென்னில் எவ்வளவு அற்ப சொற்பமாய் அன்புகூர ஆரம்பித்திருந்தபோதிலும், எனக்கு இந்த அன்பு எங்கிருந்து வந்ததெனக் கேட்கக்கூடும்

அப்பொழுது இவ்வன்பு தேவனால் எனக்குக் கிடைத்ததென வறிகிறேன். இயேசுவுக்குச் சிஷனாய் இந்த அன்பைப் பெற்றேன் (யோவா. 3. 35.). தேவனுடைய ஆவியானவரின் மூலமாய் அது எனக்குக் கிடைக்கிறது, தேவன் உண்மையாகவே என்னிலோர் நற்கிரியை யாரம்பித்திருக்கிறார். அவர் இயேசு கிறிஸ்துவின் நாள்வரைக்கும் உண்மையாகவே அதைப் பூரணப்படுத்துவார். அவ்வாறு செய்வதாக அவரே வாக்குப் பண்ணியிருக்கிறார். நான் என் இருதயத்தைப் பார்த்துத்தான் நம்பிக்கையற்றுப் பயப்பட்டேன். ஆனால் அவருடைய முகத்தைத் தரிசிக்க அங்கே பாவமன்னிப்பைக் கண்டுகொள்ளுகிறேன். உடனே எனக்குத் தைரியம் வந்துவிடுகிறது. நான் அவரை நோக்கி: 'அப்பா, பிதாவே' என்றழைக்கிறேன். சகலத்தையும் அறிகிற அவர் என் இருதயம் என்னை யறிவதிலும் அதிகமாய் என்னை அறிகிறார். என்னுடைய சகல பாவங்களும் அவருக்குத் தெரியும். நான் அவரில் அன்புகூருகிறேனென்பதையும் அவர் அறிவார். (யோவா. 21. 27.)

**பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டு,** கிறிஸ்தவர்களுக்குரிய பயத்தையும் நம்பிக்கையையும் நோக்கியே 'பிரியமானவர்களே' எனப் பரிவுடன் அழைக்கிறார் என்று வெஸ்ற்காட் அத்தியட்சர் கூறுகிறார்.

நாம் நமது பாவங்களை அதிகமாய் உணருகிற நேரத்தில் நமக்குத் தேவன்மீதுள்ள அன்பும் நம்பிக்கையும் மாயமானவைபோல் பறந்துவிடுதல்போல தேவனை நமது பிதாவென நாம் அதிகமாய் உணருகிறபோது சாத்தானை நமது காலின்கீழ் வைத்து நசுக்கிவிடுவதுபோல் தோன்றுகிறது, இருதயம் மகிழ்ச்சியோடு நம்பிக்கையடைந்து தைரியங்கொள்ளுகிறது. '**நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டு**' நியாயாதிபதியின் முன் தைரியமாய் நிற்கும் குற்றவாளியைப்போலல்ல—தேவனை அப்படி நினைத்தால் நமது இருதயம் நம்மைக் குற்றஞ்சாட்டு



கிறது. நாமும் நடுங்குகிறோம்—பக்ஷமுள்ள பிதாவினண்டையில் தைரியமாய் நம்பிக்கையோடு நிற்கும் பிள்ளையைப்போல தைரியங்கொள்ளுகிறோம். நாம் நல்லவர்களாயிருந்தால்மாத்திரம் தேவன் நம்மில் அன்புகூருவார் எனத் தப்பிதமாய் நினைத்து நம்மை வருத்தப்படுத்திக்கொள்ளுகிறோம். ஏனெனில் அப்படி நினைத்தால் நாம் நல்லவர்களல்ல, முழுவதுமாய் நல்லவர்களாகவு முடியாதென்று நாம் அறிந்தவுடன் நமக்குப் பயமுண்டாகிவிடுகிறது. ஆனால் தேவன் நமது **பிதாவாயிருக்கிறார்.** நாம் பாவஞ்செய்யும்போது அவர் துக்கப்பட்டாலும் அவர் எப்போதும் நம்மை நேசித்து நமக்கு உதவிசெய்கிறார் என்கிற உண்மையை நினைத்தால் நமக்குச் சந்தோஷம் உண்டாகும்.

வாக். 22. தேவனிடத்தில் நமக்குள்ள தைரியம் காரணமாக நமக்குள்ள நம்பிக்கையின் வல்லமையில் அவரை நோக்கிப் பிள்ளை தன் பிதாவை வேண்டிக்கொள்வதுபோல் ஜெபிக்கிறோம். நமது ஜெபத்துக்கு உத்தரவளிக்கப்படும் என்பதும் நமக்குத் தெரியும். **நாம் வேண்டிக்கொள்ளுகிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.** ஜெபத்தில் நாம் கேட்டுக்கொள்ளுகிறது இவ்வளவுதான் கொடுக்கப்படும் என்று ஓர் வரையறையில்லை. அல்லது இனி எப்போதாவது ஓர் காலத்தில்தான் கிடைக்கும் என ஓர் நியதியுமில்லை. தேவன் உண்மையான எந்த ஜெபத்துக்கும் பதிலளிக்கிறார். உடனேயும் பதிலளிக்கிறார். ஆனால் அவருடைய பதில் நாம் நினைத்துக்கொள்ளுகிறவிதமாய் அல்லது நாம் தப்பிதமாய் எதிர்பார்க்கிறவிதமாய் இருக்கும் என்பதில்லை. ஒருக்கால் நாம் கேட்டுக்கொண்டதிலும் நலமானதை நமக்குக் கட்டளையிடுவார். அதுவும் நமது ஜெபத்துக்குப் பதிலாகாதோ? ஒருக்கால் நாம் கேட்டுக்கொண்டது சற்றுத் தாமதித்து நமக்குக் கிடைக்கலாம். அதுபற்றி அவர் நமது விண்ணப்பத்தை மறந்துவிட்டார் எனக் கொள்ளலாகாது. ஆனால் நமக்கு வேண்டிய **சரியான நேரத்தில்** பதில் கிடைக்கும். இப்படியன்றி வேறெவ்விதமாய்த் தேவன் நமது ஜெபத்துக்குப் பதிலளிக்கக்கூடும்? 'நமது நிலைமையையும்

தேவனுடைய நிலைமையையும் மாற்றி நம்மை ஆண்டவனாகவும்
தேவனை நமக்கு ஊழியாராகவுமாக்குகிறது இந்த வாக்குத்தத்தத்தி
லடங்கியதன்று' என்பது 'ஸ்லேட்டர்' ஆசிரியர் வியாக்கியானம்.
எனவே பரி. யோவான் அப்போஸ்தலன் அவருடைய கற்பனை
களைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாக (அவருடைய பார்
வையில்) பிரியமானவைகளைச் செய்கிறபடியினால், என்று
சொல்லுகிறார். கர்த்தர் துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறார்.
ஆனால் நீதிமான்களின் ஜெபத்துக்கோ செவிகொடுக்கிறார்
(நீதி. 15. 29. யோவா. 9. 31. சங். 66. 18, 19. யோபு, 27. 8, 9.
ஏசா. 1, 11. 15.). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்
மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக். 5. 16.)

அங்ஙனமாயின் ஜெபத்துக்குப் பதிலளிப்பது நீதிமானுக்
குக் கிடைக்கிற அருளாகவும் பொல்லாதவனுக்கு மறுக்கப்படு
கிறதொன்றாயுமிருக்கிறதோ? ஆம், நீதிமான்களுக்குப்பரலோக
ராஜ்யம் கிடைப்பதும் அத்தகைய ஓர் அருளேயன்றோ, இரு
விஷயங்களிலும் இந்த 'அருள்' இலக்கியமான ஜீவனை முற்றிலு
முணர்வதும் பாரமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதுமா
யிருக்கிறது. இதற்காக நாம் தேவகிருபையைப் பெற்று நம்
மைப் பக்குவப்படுத்திவந்தோம். தேவனுடைய 'அருள்' அதிக
மான ஊழியத்திற்கேதுவாம். தங்களுடைய ஜெபங்களுக்கு
அதிகமாக உத்தரவளிக்கப் பெறுபவர்கள் பிறருக்காக அதிகமாக
உழைத்து அதிகம் அனுபவிக்கவும் வேண்டும். தேவனுடைய
கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய பார்வையில் பிரிய
மானவைகளைச் செய்கிறவனுக்கு அவரிடத்தில் கேட்பவற்றை
யெல்லாம் அவர் கொடுக்கவேண்டியதும் இயற்கையே. ஏனெ
னில் உண்மையில் தேவனுடைய பிள்ளையாயிருப்பவன் தேவ
னுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்றே ஆசிப்பான்.
ஆதலின் அவருடைய சித்தம் மாற்றப்படும்படியாகவன்று
அவருடைய சித்தம் நிறைவேறும்படியாகவே ஜெபிப்பான்.
ஜெபத்தில் தானும் பரமபிதாவுடன்கூடச் சேர்ந்து அவர்
கொண்டிருக்கிற அதேசித்தம் நிறைவேறும்படியாகத் தானும்



முயல்வான். இவ்விதமாக இவன் செய்யும் ஜெபம் ஏற்றுக்
கொள்ளப்படாமலுமிருக்குமோ? இராது. ஏனெனில் அவ
னுக்குள் அவனோடு இருந்து ஜெபிப்பது பரிசுத்த ஆவியே
யன்றோ. அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்
கிறபடியினால் என்கிற வாசகம் பிதாவைப் பிரியப்படுத்தும்படி
யாகப் பிள்ளை தானாகவே சந்தோஷமாகச்செய்யும் செயல்களைக்
குறிக்கும். நம்மிடத்தில் வேலைவாங்குகிற கடினமான எஜ
மானல்ல. நமக்கு உதவிசெய்கிற அன்புள்ள பிதாவே நம்மைக்
கவனிக்கிறார். ஆதலால் நாம் செய்கிற ஒவ்வொரு அற்ப
காரியத்திலுங்கூட அவரைப் பிரியப்படுத்த முயல்வது நமது
கடமையாகும்.

வாக். 23. தேவனுடைய கற்பனைகள் இன்னின்னதான்
என்று அறியாமல் நாம் நம்மனம்போல் இவைதான் நீதி இவை
தான் அநீதி எனத் தீர்மானித்துக்கொள்ளாதபடி தேவனுடைய
கற்பனைகள் இவைதாம் எனப் பரி. அப்போஸ்தலன் கூறு
கிறார். அவற்றை இரண்டு வார்த்தைகளில் அடக்கிவிடுகிறார்.
முதல் வார்த்தை நாம் தேவனுக்குச் செய்யவேண்டியதையும்,
இரண்டாவது வார்த்தை நாம் பிறருக்குச் செய்யவேண்டியதை
யும் காட்டும்.

நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்
தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்ட
படி ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவ
ருடைய கற்பனையாயிருக்கிறது.

பத்துக் கற்பனைகளில் இருபிரிவுகளாகிய தேவனுக்குச் செய்ய
வேண்டிய கடமையும் பிறனுக்குச் செய்யவேண்டிய கடமை
யும் ஆகிய இரண்டும் உண்மையில் ஒன்றாயிருப்பதுபோலவே
இங்கும் விசுவாசமும் அன்பும் ஒன்றாயிருக்கின்றன.

நாம் சரியாயிருப்பவற்றைமாத்திரம் புரிந்தவரின் எதை நம்
பினாலும் ஒன்றையுமே நம்பாதிருந்தாலும் அதைப்பற்றிக் காரிய
மில்லை எனப் பெரும்பாலார் சொல்லுவார்.

ஆனால் நமது கடமையிலும் கீழ்ப்படிதலிலும் முக்கியமான முதல்காரியம் விசுவாசம். விசுவாசமின்றித் தேவனைப் பிரியப்படுத்துவது அசாத்தியம். அவருடைய பார்வையில் பிரியமாயிருப்பவற்றைச் செய்தல் கூடாதகாரியம். தேவன் நாம் அன்பாயிருக்கவேண்டுமெனக் கட்டளையிட்டதுமல்லவே விசுவாசிக்கவேண்டுமெனவும் கட்டளையிட்டிருக்கிறார். எக்காரணம்பற்றி அன்பாயிருக்கவேண்டுமெனக் கட்டளையிட்டாரோ அக்காரணம்பற்றியே விசுவாசிக்கவேண்டுமெனவும் கட்டளையிட்டிருக்கிறார். தேவன் நம்மில் அன்புகூருகிறார் என நாமும் அவரில் அன்புகூர்ந்தால் அவர் தம்மைத் தமது அன்புள்ள குமாரனின்மூலமாய் வெளிப்படுத்தி விசுவாசத்தை நமக்களிக்கிறார் (தேவன் முதலில் நம்மில் அன்புகூர்ந்து நம்மை நம்பினார். ஆகையால் நாமும் அன்புகூரவும் விசுவாசிக்கவும் அவரால் திராணியுள்ளவர்களாகிறோம்.). ஆதலினால்தான் யூதர் அவரை நோக்கி 'தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்யவேண்டும்?' எனக் கேட்டபோது 'அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுடைய கிரியையாயிருக்கிறது' என விடை பகர்ந்தார். (யோவா. 6. 28, 29, 40; 14. 1.)

அவருடைய நாமத்தை விசுவாசிக்கிறது என்றால் என்னவென்பதை இரண்டாம் அதிகாரம் பன்னிரண்டாம்வசன வியாக்கியானத்தில் பார்த்தோம். இங்கே பரி. அப்போஸ்தலன் அந்த 'நாமத்தை' முழுவதுமாய் இன்னதெனக் கூறுகிறார். 'நாமத்தை விசுவாசித்தல்' ஆவது கிறிஸ்து வெளியாக்கப்பட்ட முழுவிதத்தையும் விசுவாசிப்பதேயாம். அதுதான் என்ன?

1. அவருடைய குமாரன்....நித்தியர்....பிதாவோடு ஒரே தன்மையுடையவர்.

2. இயேசு....பூரண புருஷன்....மனிதரை இரக்ஷிப்பவர்.

3. கிறிஸ்து....அபிஷேகம்பண்ணப்பட்ட கர்த்தர்....தீர்க்கதரிசி. ஆசாரியன். இராஜா.



'அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து' என்பதே சுருக்கமான ஒரு விசுவாசப்பிரமாணமாயிருக்கிறது, எனக் கூறுவர் (வெஸ்ற்காட்) அத்தியட்சர்.

இடைக்கூற்றாக 23-ம் வசனத்தில் தேவனுடைய கற்பனையைக் கூறிப் பின் தாம் 22-ம் வசனத்திற் கூறியதை 24-ம் வசனத்தில் தொடர்ந்து எழுதி ஆத்துமா தேவனில் இடைவிடாது நிலைத்திருப்பதினாலும் தேவன் ஆத்துமாவில் நிலைத்திருப்பதினாலும் கடைசியில் விளையும் நன்மைகளைக் கூறுகிறார். இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கிறார். என்ன? (1) நான் தேவனிலும் தேவன் என்னிலும் எப்படி நிலைத்திருக்கலாம்? அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான் அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். (2) அவர் என்னில் நிலைத்திருக்கிறார் என்பதனை நான் எப்படியறியலாம்? அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.

தேவன் மனுஷனிலும் மனுஷன் தேவனிலும் நிலைத்திருப்பதான இருவித நிலைத்திருப்பதைப்பற்றிப் பேசுகிறார். ஆண்டவர் பேசியதும் அப்படியே. 'நீங்கள் என்னிலும் நான் உங்களிலும்' (யோவா. 15. 4–5; 6. 56.), இவை ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஒன்றின்றி அடுத்ததில்லை. நிலனும் வித்தும் ஜீவனைப் பிறப்பிக்கும். அவை தேவ ஈகையும் மனித ஏற்புமாம்.

இங்கே பேசப்படுகிற ஐக்யம் திராட்சச்செடி கொடியிலும் கொடி திராட்சச்செடியிலும் சேர்ந்திருப்பதுபோன்ற மகா நெருக்கமான ஓர் ஐக்யம். ஆங்கிலத்தில் முதல் வியாக்கியான கர்த்தாவாகிய பீட் ஆசிரியர், 'தேவன் உனக்கு வீடும், நீ தேவனுக்கு வீடுமாயிருக்கவேண்டும்' எனக் கூறுகிறார்.

இந்தியராகிய நம்மவர் இவ்வைக்யத்தைச் சற்றுக் கவனித்து நோக்கவேண்டியது அவசியம். என்ன? பரி. யோவான் அப்போஸ்தலனுடைய கருத்துப்படி மனிதன் தேவனிலும் தேவன்

மனிதனிலும் நிலைத்திருத்தலானது மனிதன் தன் இருதயத்தில் உணரக்கூடிய ஓர் விஷயமாத்திரமாகும். அது நமது கிரியையினால் விளைவது. நமது கீழ்ப்படிதலினால் நீடித்திருப்பது. இது வேதாந்திகள் கூறுவதுபோல் தோற்றத்தில் வேறாகவிருக்கும் ஆன்மாவானது நிர்க்குண பிரமத்தோடு இரண்டறவொன்றாய்க் கலந்துபோகும் சாயுஜ்ய பதத்தைக் குறிப்பதன்று. வேதாந்தக் கொள்கைப்படி இக்கலத்தலானது சிந்தையையடக்கிச் சும்மாவிருந்து ஆழ்ந்த நிஷ்டையின் சஞ்சோக தர்ஸனத்தின் மூலமாய் நடத்தும் அவனையும், நடத்தப்படும் தன்னையும் இரண்டல்லா ஒன்றாய்க் காண்பதாம். நடத்துவதும், நடத்தப்படுவதும் மாயையென்பதே யவர் கோட்பாடு. சிருஷ்டிகனையும் சிருஷ்டியையும், ஆள்பவனையும் ஆளப்படுவோனையும், பிதாவையும் பிள்ளையையும், ஒன்றென மதிக்கும் இத்தவறான கொள்கைக்கு பரி. யோவான் அப்போஸ்தலன் ஒரு சிறிதும் உடன்படார். ஒருவர் பிரமாணம் கொடுக்கவும் மற்றவர் அதனைக் காத்து நடக்கவுமாக ஏற்படும் கீழ்ப்படிதலினால் விளையும் கலப்பே அவருக்கு உடன்பாடு. 'இவ்வைக்யம் மானத வைக்யமன்று. ஆனால் மனிதன் தன் புத்தி; நோக்கம், சித்தம் முதலியவற்றில் தேவனோடு ஐக்யப்பட்டு அவரது சிந்தை, நோக்கம், பிரீதி முதலியவற்றையே தனதாகவும் கொள்ளும் ஐக்யம். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதலே மனிதன் தேவனோடு சம்பந்தப்படுதற்கேதுவாம். மனிதனும் தேவனும் வெவ்வேறானவர் என்பதனைக் காட்டக் கூடியதும் பின்னும் ஐக்யம் விளைக்கக் கூடியதுமான பொருத்தமானதும் நாமறியக்கூடியதுமான ஏது இஃதொன்றே.....நமது சித்தம் தேவனது சித்தத்தோடு கலப்பதினால் நாம் அவரில் ஜீவிப்போம். அவரிலேயே தங்கி ஜீவிப்போம். அவரிலேயே தங்கி இளைப்பாறுவோம். நமது சித்தம் அவர் சித்தத்திலும் நமது சிந்தை அவர் சிந்தையிலும் நமது வழி அவர் வழியிலும் தங்கும். அவர் நம்மில் வசிப்பார். அவர் சித்தம் நமது சித்தத்திலும், அவர் சிந்தை நமது சிந்தையிலும், அவர் வழிகள் நமது



வழியிலும் நிலைக்கும். நாம் அவர் இருதயத்திலும் மனதிலும் புகுவோம். அவரும் நம்மில் புகுவார்.' எனக் கூறுவார் வெஸ்ற்காட் அத்தியட்சர்.

கிறிஸ்துவானவர் மனிதனாகத் தம் பிதாவில் நிலைத்திருந்ததும் இவ்வாறே. இவ்வாறிருக்கும்படியாகவே அவர் நம்மையழைக்கிறார் (யோவா. 15. 10.). இனி பரி. அப்போஸ்தலன் அடுத்த வினாவிற்கு விடையளிப்பார்—தேவன் என்னில் நிலைத்திருக்கிறார் என்பதை நான் எப்படி யறியலாம்? **அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.**

வேதாந்தத்தின்படி தேவனோடு ஒன்றாய்க் கலத்தலானது நமது அறிவினுக்கெட்டாத ஓர் விஷயம். ஏனெனில் அக்கொள்கைப்படி அந்நிலைமையடைவது இவ்வாறாகத்தானிருக்குமென உணர்ந்துகொள்ள முடியாது. அது புத்திக்குத் தெரியாது. ஏதோ மங்கலாய்த் தோற்றுவதான ஓர் காரியம். அதனையடைய முயற்சித்துச் சித்தியடைபவர் சிலரே. ஆனால் பரி. அப்போஸ்தலன் கூறுகிற ஐக்யம் எல்லோரும் அறியக்கூடியது. விரும்பியோர் பலரும் அடையக்கூடியது. மானதமாக அறியக்கூடியது மாத்திரமன்று. உண்மையில் அனுபவிக்கக்கூடியது. நமது ஜீவியத்தில் வேறெவ்வனுபவத்தையும் அனுபவித்தறிதல்போல் இதனையும் அனுபவித்தறியலாம். தேவனே தமது ஆவியைக் கொடுத்திருக்கிறார். தமது ஆவியினால் நம்மில் நிலைத்திருக்கிறார். அந்த ஆவி நம்மில் இருப்பதே தேவன் நம்மில் நிலைத்திருக்கிறார் என்பதனை விளக்கும். அந்த ஆவி இருத்தல் மறைவாகவும் அந்தரங்கமாகவும் காணக்கூடாததாயிருப்பின் அதனை யறிதல் எங்ஙனம்? அந்த ஆவியின் கனிகளால், அந்த ஆவியால் நம்மில் விளைவனவற்றால் கண்டு தெளியலாம். அக்கனிகள் யாவை? அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலியவையாம். இவையே நாம் தேவ

னுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சித்தத்திற்கிசைய நடப்பதால் நம்மில் விளையும் நற்குணங்கள். ஆவியின்றியும் இக்கிரியைகள் நம்மிற் காணப்படலாம் (பரிசேயரைப்போல). அப்படி தேவனுடைய கற்பனைகளைக் குறைவற நிறைவேற்றினும் அதினால் தேவன் நம்மில் நிலைத்திருக்கிறார் என்பது விளங்காது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆவி இயேசுவில் இருந்த தேவகுமாரனுடைய ஆவி. அந்த ஆவியே இயேசுவானவர் செய்ததுபோல நாமும் பிதாவினுடைய சித்தத்திற்கிசைய தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளச் செய்கிறது. ஆதலினால் இந்த ஆவி நமது இருதயத்திற் குடிகொண்டிருக்கிறதின் மூலமாய் நாம் தேவனிலும் தேவன் நம்மிலும் நிலைத்திருக்கிறதை யறியலாம். (4. 13.)

# ஆறும் பிரிவு.

## தேவன் அன்பாயிருக்கிறார்.

*இடைக்கூற்று: சத்திய ஆவியும் வஞ்சக ஆவியும். நமக்குள் வசிக்கும் ஆவியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போதே (3. 24.) அப்போஸ்தலன் பிறஆவிகளையும் நினைத்துக்கொண்டார். இந்த ஆவிகள் தீமையை விளைக்கும் கள்ளத்தனமான ஆவிகள். கிறிஸ்தவர்கள் இந்த ஆவிகளை எவ்விதமாய் அறிந்துகொள்ளலாம் எனவும் தேவ ஆவிக்கும் இவற்றுக்கும் உள்ள பேதமின்னதெனவும் கூறுகிறார்.*

1. பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள். (2) தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. (3) (மாம்சத்தில் வந்த) இயேசு (கிறிஸ்து)வை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் (இதற்குள்ளாக) உலகத்தில் இருக்கிறது. (4) (என் சிறு) பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள். ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிடத்திலிருக்கிறவர் பெரியவர். (5) அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையினால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள்; உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும். (6) நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கி

றன்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்தியஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.

அந்திக்கிறிஸ்துகளைப்பற்றித் திரும்பவும் பேசுகிறார் (வாக். 2. 3.). ஆனால் அவர்களைப்பற்றி முன்கூறிய விஷயத்தையல்ல வேறு காரியத்தைப் பேசுகிறார். இரண்டாம் அதிகாரத்தில் கடைசிக்காலத்தின் அடையாளமாக அந்திக்கிறிஸ்துகளைப் பற்றிப் பேசி, கிறிஸ்தவர்கள் அவர்களுடைய கள்ளப்போதகங்களுக்குச் செவிகொடாமல் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினும் தம்மில் நிலைத்திருக்கிற பிதாவிலும் குமாரனிலும் தங்கள் விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுமாறு கூறினார். அவ்விடத்தில் மனிதருக்கும் அதாவது உண்மைக் குருக்களுக்கும் கள்ளக் குருக்களுக்கு மிருக்கப்பட்ட போரை விளக்கினார். இங்கும் அவர்களைப்பற்றியே பேசுகிறார். ஆனால் அங்கே அவர்களை அந்திக்கிறிஸ்துகளாகக் காட்டினார். இங்கோ அவர்களையே கள்ளத்தீர்க்கதரிசிகள் என்கிறார். ஏனெனில் இவ்விடத்தில் அவர் சத்திய ஆவியையும் வஞ்சக ஆவியையும்பற்றிப் பேசுகிறார். இந்தக் கள்ளப்போதகர் தங்களுக்கு ஆவி இருப்பதாகவும், தாங்கள் அறிவும், ஆவிக்குரிய பக்தியுமுடையவரென்றும் அவை காரணங்களால் தாங்கள் கிறிஸ்தவரினும் பன்மடங்கு சிறந்தவரெனவும் பிதற்றிவந்தனர். ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்களிடத்திலிருக்கிற ஆவி கிறிஸ்தவர்களிடத்திலிருப்பதுபோல் பரிசுத்தஆவி யல்லவென்றும், அது அந்திக்கிறிஸ்துவின் ஆவி (வாக். 3.) யென்றும் காட்டி சுத்த ஆவியையும் இந்த அசுத்த ஆவியையும் திட்டமாய் அறிவதற்கான வழியையும் கற்பிக்கிறார் (வாக். 2.). சுத்த ஆவிக்கும் அதைச் சார்ந்தவர்க்கும் கள்ளஆவிக்கும் அதைச் சார்ந்தவர்க்கும் இடைவிடாத போர் நடந்துகொண்டேயிருக்கிறது. இறுதியில் ஜெயமடைபவர் யாவர் என்பதும் திட்டமாய்த் தெரியும். தேவனால் உண்டானது அதிக வல்லமையுள்ளது. உலகத்தினால் உண்டானது பலவீனமுள்ளது. பலமுள்ளது பலவீனமானதை



மேற்கொள்ளும் என்பது வெளிப்படை. அப்பொழுது உண்மையான எல்லா மனுஷரும் உண்மையைக் கேட்டு இதுதான் உண்மையென அறிந்துகொள்வார்கள். (வாக். 6.)

மானத பூசைக்காரரும் ஆவிகளோடு பேசுகிறவர்களும் மிகுந்துள்ள இக்காலத்தில் இப்போதனை நமக்கு வெகு முக்கியமானது.

தற்காலத்தில் சொல்லப்படுகிற அந்த ஆவிகள் உண்மையின் உள்ளனவல்லவெனக் கூறுதல் ஒண்ணாது. இந்தவிதமான ஆவிகள் இருப்பதாக பரி. யோவான் ஒப்புக்கொள்ளுகிறார். பரி. பேதுரு அப்போஸ்தலன் சீமோன் ஆவியினால் நடப்பித்த அதிசயங்களை ஒப்புக்கொண்டார் (அப். 8.). பரி. பவுல் அப்போஸ்தலனும் எலியாவுடையவும் (அப். 13.) பிலிப்பிப்பட்டணத்துப் பெண்ணினுடையவும் (அப். 16.) அசுத்த ஆவியின் அதிசயச் செயல்களைக் கண்டு கண்டித்தார். எனவே அந்நாள் தொட்டு இந்நாள்வரையும் ஆவிகளின் தன்மையை யுணர்ந்து அவற்றோடு கூட்டுறவு பயின்ற மனிதர் இருந்துகொண்டே வருகின்றனர்.

ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் இத்தகைய ஆவிகள் ஒப்புக்கொள்ளப்படத்தக்கனவோ அல்லனவோ என்பதையறிதற்கான ஓர் வழியைக் காட்டுகிறார். இவ்வழியாய் அவற்றின் தன்மையைத் திட்டமாய் அறியலாம். காணக்கூடிய இவ்வுலகிலுள்ளவர் காணக்கூடாத மறுவுலகிலிருப்பதை யறிதற்கு ஒரே வழிமாத்திரம் உண்டு. அவ்வழிதான் யாதோவெனில் அதுவே **மாம்சத்தில்வந்த** இயேசுகிறிஸ்து. உண்மையான ஆவிகள் யாவும் தங்களை அவருடன் சேர்த்தே பேசும். வஞ்சக ஆவிகளெல்லாம் அவரை மறுதலித்துத் தங்களைச் சுயாதீனமாகப் பாவித்து பூலோகத்திலுள்ளவர்கட்கு மறுலோக விஷயங்களைப் பேசும்.

**1. பிரியமானவர்களே, நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோவென்று சோதித்தறியுங்கள்.**

மனுஷரிலும் மனுஷருக்கு வெளியிலும் (புறம்பாகவும்) இருந்து நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆவிகள் அனந்தம். நினைவுகளும், சிந்தனைகளும், கருத்துகளும், விசேஷ வெளிப்படுதல்களும், கனவுகளும் நமது மனதில் எழுகின்றன. ஆயினும் அவை எங்கிருந்து உண்டாயினவென்பதை யறியோம். அவை கிறிஸ்துவின் நாமத்தைக் கூறிவந்தாலன்றி நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. என்னிடத்தில் பேசுகிற ஆவி கிறிஸ்துவுக்கு வணங்குகிறதா? கிறிஸ்து எனக்குப் போதித்த வெல்லாவற்றையும் கைக்கொள்ளுகிறதா? எனப் பார்க்கவேண்டும். அவை கிறிஸ்துவுக்கு மாறுபட்டிருப்பின் ‘அப்பாலேபோ சாத்தானே’ எனக் கூறி யதனை அகற்றவேண்டும்.

இயற்கையிலேயோ, இயற்கைக்கு மேற்பட்டோ மனிதனிடத்தில் ஆவிக்குரிய வல்லமைகள் வெளிப்படக் காண்கிறோம். அதிசாதுரியமாய்ப் பேசுதல், வெகு தீர்க்கமாய் எழுதுதல், எவரையும் மேற்கொள்ள வல்ல சொற்சக்தி, ஆச்சரியமான வல்லமைகள், விசேஷ தரிசனங்கள், திரிகால சக்தி, அற்புதச் செயல்கள், தான் அறியாப் பாஷைகளைப் பேசுதல், மந்திரம் செய்தல், குறிசொல்லுதல், ஆட்களை மயக்குதல் முதலிய வனந்தம் செயல்களைப் புரிகின்றனர். இவை இயற்கையான காரணங்களினாலே யுண்டாயிருத்தல் கூடுமெனினும் அவையெலாம் ஆவியினாலுண்டாயதாய்க் கருதுகிறோம். அவற்றைப் பார்த்தவுடனே அவற்றை நம்பி அவற்றுக்குக் கீழ்ப்படியவும் எண்ணமுண்டாகிறது. அக்காலத்தில் நாமும் ஆவிகள், நம்மிடத்தில் எல்லாவற்றிலும் பெரிய ஆவியாகிய பரிசுத்த ஆவியிருக்கிறார் என நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். தேவனாலுண்டாயிராத எந்த ஆவிக்கும் கீழ்ப்படிய உடன்படலாகாது. அவை கிறிஸ்துவால், கிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாயிருப்பவையோவெனவும் ‘தேவனால்’ உண்டானவையோ ‘பொல்லாங்கனால்’ உண்டானவையோவெனவும் விசாரித்தறியவேண்டும் (கலா. 1. 8. உபா. 13. 1–3.). கிறிஸ்தவர் எல்லாருக்காகவும் ஒருவர்மாத்திரம் ஏற்பட்டு இவற்றைச் சோதித்தறிந்தால்



போதுமென்பது ஒரு பிரிவாரது கோட்பாடு. பரி. யோவான் அப்போஸ்தலன் இவரது கோட்பாட்டையே மேற்கொள்பவரெனில் கிறிஸ்தவர் பலரும் தாங்கள் தாங்களே சோதித்தறியவேண்டுமெனக் கூறியிரார். மற்றும் சிலர் ஒவ்வொருவரும் பிறர் சம்பந்தமின்றித் தாம் தாமே அறிந்துகொள்ளவேண்டுமெனக் கூறுவர். இதுவும் அவ்வளவு சிறப்புடையதல்ல. ஏனெனில் தாங்கள் அபிப்பிராயப்படுவதே சரியெனும் நம்பிக்கை பலருக்கு ஏற்படாது. தம்மிலும் பெரியவராயிருப்பவரது அபிப்பிராயத்தை யனுசரித்து நடக்கவேண்டுமென வெண்ணுவதும் உலக வியற்கையன்றோ?

**உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால்:** இங்கே ‘கள்ளப்போதகர்’ என்றழையாது ‘கள்ளத்தீர்க்கதரிசிகள்’ என்றழைக்கிறார். ஏனெனில் தீர்க்கதரிசியானவன் தானாகவே பேசாமல் (2 பே. 1. 21.), **தனக்குள்ளிருக்கும் ஆவி** சொல்லுகிறபடி பேசுகிறான்.

தீர்க்கதரிசியென்பவன் பின்வருங் காரியத்தை முன்னுரைப்பவன் என்பதுமாத்திரம் பொருளன்று. இது சாதாரணமான அர்த்தமேயன்றி முக்கிய கருத்தன்று. அப்பதத்தின் உண்மையான பொருள் யாதெனின் ‘முன்வந்து சொல்பவன்.’ அதாவது மனிதருக்குச் செய்தியை யறிவிப்பவன் என்றாம். இவ்வாறு அவன் சொல்லுகிற செய்தி தேவ ஆவியினால் அறிவிக்கப்பட்டுச் சொல்லப்பட்டதெனின் அவன் உண்மையான தீர்க்கதரிசி. பொல்லாங்கனால் அறிவிக்கப்பட்ட செய்தியெனின் அவன் கள்ளத்தீர்க்கதரிசி.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் உண்மையான தீர்க்கதரிசிகளுக்கு விரோதிகளாயிருந்த கள்ளத்தீர்க்கதரிசிகளும் பலரிருந்தனர் (லூக். 6. 26; 2 பே. 2. 1.). அப்படியே சபையின் தீர்க்கதரிசிகளுக்கும் கிறிஸ்துவுக்கும் விரோதமாயுரைக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் இருப்பார்களென்று கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசனமாக உரைத்தார்கள்

(மத். 7. 25; 24. 11, 23, 24.). அப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றி அப். 13. 6–ல் பார்க்கலாம். இக்கள்ளத்தீர்க்கதரிசிகள் தாங்கள்தான் மெய்யானவர்களென்று கூறித் தங்களுடைய அதிசயமான கிரியைகளினால் பலரைத் தங்களிடமாகச் சேர்த்துக்கொள்வார்கள். (மத். 24. 24. 'பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.' அப். 13. 6. மாயவித்தைக்காரன். வெளி. 19. 20. மோசம் போக்கின.)

உண்மையான ஆவியோ தவறான ஆவியோ என்பதை யறிதற்குரிய பெரிய பரிசோதனை யாதெனக் கூறுகிறார்—என்ன? அடையாளங்களல்ல, அற்புதங்களல்ல, வல்லமையல்ல. ஆனால் கிறிஸ்துவை அறிக்கையிடுவதே.

**தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகின்ற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. (மாம்சத்தில் வந்த) இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல.**

பரி. யோவான் அப்போஸ்தலனுக்கும், அவர்காலத்துச் சபைக்கும் விரோதமாகப் போதித்துவந்த செரிந்து (Cerinthus) வென்பவனுடைய போதனைகளைப்பற்றி அனுபந்தத்தில் வேதப்புரட்டைப்பற்றிக் கூறியிருக்கும் பாகத்தில் விளக்கியிருக்கிறது. அவற்றையெல்லாம் ஒருசேரத் திரட்டிச் சொல்லவேண்டுமானால் இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை மறுதலிப்பதே. செரிந்துவென்பவன் எம்பிரான் கன்னியாஸ்திரியின் கற்பத்தில் திருஅவதரித்ததை மறுத்தனன். இயேசுவானவர் அதிக நல்ல மனுஷரிலும் மேலானவர் அன்றென்பதே அவனுடைய கோட்பாடு. இயேசுவையும் கிறிஸ்துவையும் வித்தியாசமான இருவராகப் பாவித்து, இயேசு உலகத்திலுள்ள சாதாரண மனுஷனெனவும் கிறிஸ்து பரத்திலுள்ளதோர் ஆவியெனவும், இந்த ஆவியே ஞானஸ்நானகாலத்தில் இயேசுவின்மேல் வந்திறங்கி அவருக்குப் பிதாவை வெளிப்படுத்தி அற்புதங்



களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்ததெனவும் கூறிவந்தான். அன்றியும் இயேசுகிறிஸ்து பாடுபட்டகாலத்தில் கிறிஸ்துவெனும் ஆவி இயேசுவெனும் மனிதனினின்றும் அகன்றுவிட்டபடியால் இயேசுகிறிஸ்து பாடுபட்டு மரித்துத் திரும்பவும் எழுந்தார் என்பதனையும் மறுத்துவந்தான். தேவனும் மனிதனும் இயேசுகிறிஸ்துவாகிய ஒருவரில் எக்காலத்திலும் ஐக்கியப்பட்டிருக்கமாட்டார்கள் இருக்கவு முடியாது என்பது அவன் கொள்கை. கிறிஸ்துவானவர் 'மாம்சத்துடன்' வந்தார் என்பதை ஒருவாறு அங்கீகரிப்பினும் 'இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்தார்' என்பதை அவன் அங்கீகரிக்கமாட்டான்.

பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுகிற சோதனை வெகுதூரம் பிரயோசனப்படக்கூடியதும் அந்திக்கிறிஸ்து எவ்வேடந்தாங்கிவரினும் அவனை இன்னான் என அறிந்துகொள்ளக் கூடியதுமாயிருக்கிறது. அறிக்கை செய்வதென்றால் என்ன? எதை அறிக்கை செய்வது? என்பவற்றை ஆராயுமிடத்து இது தெள்ளிதின் விளங்கும். பரி. யோவான் அப்போஸ்தலனுடைய அபிப்பிராயப்படி அறிக்கை செய்தலென்பது வாக்கினால் மாத்திரமல்ல செய்கையினாலும் நமது நம்பிக்கை இதுதான் என்பதை வெளியரங்கமாய்க் காட்டுவதேயாம். உலகப்பிரகாரமாக என்ன நஷ்டமும் இடையூறும் நேரிட்டகாலத்தும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இப்படி அறிக்கை செய்யவேண்டும். எதை அறிக்கை செய்வது? கொள்கையையோ? எத்துணை உண்மையானதாகவும் பெரிதானதாகவுமிருப்பினும் அறிக்கை செய்யவேண்டியது கொள்கையையன்று, கிறிஸ்துவையேயாம். இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை மாத்திரமன்று, மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவையும் அறிக்கை செய்யவேண்டும். இதனாற் போந்ததென்? இயேசுவே தெய்வம், அவர் விண்துறந்து மண்புகுந்தார், அவரே இயேசுவாகிய மனிதனானார் (கள்ளப்போதகர் கூறுவதுபோல் தோற்றத்தில் மாத்திரமல்ல உண்மையில் மனிதனானார்.). மனித சாயலை (மாம்சத்தை) தரித்தார் (மூலபாஷைப்படி மாம்சத்தில்

வந்து தங்கியிருக்கிறார்.); இன்னும் மனுஷரோடு தங்கியிருக்கிறார் என்பனவே. இவ்வளவும் அடங்கியிருந்தபோதிலும் அது மாத்திரம் அறிக்கையாகாது, என்ன? பைசாசமும் இதனையறிக்கைபண்ணக்கூடும் (யாக். 2. 19.). இயேசுவை அறிக்கை செய்வதெனில் அவரில் அன்புகூர்ந்து அவரை விசுவாசித்து முற்றுமாய் தம்மை யவருக்குத் தத்தம்செய்வதாம் (ரோ. 10. 9.). பரிசுத்த ஆவியின் வல்லமையினால்மாத்திரம் ஒருவன் இவ்விதம் செய்யக்கூடும். (1 கொரி. 12. 3.)

எனவே எதிர்மறையாகக் கூறுமிடத்து பரி. யோவான் அப்போஸ்தலன் **'இயேசுவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல'** எனமாத்திரம் சொல்லுகிறார். 3. 10-ல் இதே வார்த்தைகள் 'தேவனால் உண்டானவனல்ல' என வழங்குகிறது. அங்கே குறிக்கப்பட்டவர் 'நீதியைச் செய்யாமலிருக்கிற எவனும்' நீதியைச் செய்வதினால் மனுஷர்விஷயத்திலும், கிறிஸ்துவை அறிக்கைபண்ணுவதினால் ஆவியின் விஷயத்திலும் உண்மையைச் சோதித்து அறியலாம். ஆராயுமிடத்து இரண்டும் ஒன்றேயாம். ஏனெனில் நாம் முன் பார்த்தபடி கிறிஸ்து உள்ளாக வசிப்பதினால்தான் நீதி ஒருவனிடத்தில் காணப்படும், அதுவே அவரை ஜீவியத்தில் அறிக்கை செய்வதாம். ஆவிகளை யறியும்விஷயத்தில் கிரியைகளுக்குக் காரணமாயிருப்பதை யாராயவேண்டும்.

பரி. அப்போஸ்தலன் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் கள்ளப் போதனைகளைப் புனைந்து அசுத்த ஜீவியஞ்செய்வதே அந்திக் கிறிஸ்துவினுடைய பகை என்கிறார். **வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் (இதற்குள்ளாக) உலகத்திலிருக்கிறது. நீங்கள் கேள்விப்பட்ட:** 2. 18. வியாக்கியானத்தைப் பார்க்க, 'இப்பொழுதும்' (இதற்குள்ளாக) என்பதினால் கிறிஸ்துசபை எதிர்பார்த்த காலத்திற்கு முன்னதாகவே அந்திக்கிறிஸ்து வந்துவிட்டான் என்பதைக் காட்டுகிறது.



அந்திக்கிறிஸ்து இதற்குள்ளாக உலகில் வந்துவிட்டான். அவனுக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்கள் அந்திக்கிறிஸ்துவை மேற்கொண்டாயிற்றென்று சொல்வது மாத்திரமல்ல தாம் சொல்வதற்குக் காரணத்தையும் காட்டுகிறார். **(என் சிறு) பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள். ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். நீங்கள்** எனும் பதம் வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. கள்ளப்போதகருக்கு மாறுபட்ட நீங்கள், தேவ ஆவியினால் நிறைந்திருக்கும் நீங்கள் என்பது பொருள். (2. 20. 'நீங்கள் அபிஷேகம் பெற்றவர்கள்.')

பரி. அப்போஸ்தலன் சற்று முன்தான் அந்திக்கிறிஸ்துகள் 'தேவனால் உண்டானவர்களல்ல' என்றார். இப்பொழுது தம்முடைய பிள்ளைகள் **தேவனால் உண்டானவர்கள்** என்கிறார். அவர்கள் இயேசுவை அறிக்கையிடுவதில் உறுதியாய் நீதியின் கிரியைகளில் நிறைந்திருக்கிறார்களென மகிழ்ச்சியோடு சாட்சி பகருகிறார்.

கிறிஸ்துவை அறிக்கைசெய்வதால் உலகத்தோடு பகையும் போரும் விளைகிறது (மத். 10. 35–37.). உண்மையான ஆவியும் வஞ்சகஆவியும் இடைவிடாது பொருது நிற்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொருவரும் அவற்றில் ஏதேனும் ஒன்றினுடைய பக்கத்தைச் சேரவேண்டும் (எபே. 6. 10–17.). கிறிஸ்தவருக்கும் எபேசிலும் ஏனையவிடங்களிலுமிருந்த கள்ளப் போதகருக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்திருக்கலாம். கிறிஸ்துசபை கிறிஸ்துவின் உண்மையைப் பற்றிப் பிடித்துக்கொண்டது. கிறிஸ்துவின் மந்தை அந்நியருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்க மறுத்துவிட்டது. (யோவா. 10. 5.)

**நீங்கள் அவர்களை ஜெயித்தீர்கள்.** பரி. அப்போஸ்தலன் ஜெயங்கிடைத்துவிட்டதாகவே பேசுகிறார். அவர் பேசுவதும் பொய்யன்று, இதைப்பற்றி ஸ்லேட்டர் ஆசிரியர் அடியில்

வருமாறு சொல்லுகிறார்:—'அக்காலத்துச் சபைக்கு தொந்தரை யியற்றிவந்த கள்ளத்தீர்க்கதரிசிகள் பட்டொழிந்தார். அவர் பெயர்தானும் யாதென நாமறியோம். அப்போஸ்தலன் கூறியனவோ இக்காலத்தும் நின்றுலவுகின்றன. இயேசுவின் நாமம் அதற்கு விரோதமாய் எழும்பிய பல்வேறு நாமங்களையும் மேற்கொண்டு இன்னும் நிலைத்திருக்கிறது. அந்நாமத்திற்கு இடர் விளைத்து அதனை விரோதிப்பவரை இன்னும் மேற்கொள்ளாதிராது.

இதுகாறும் கூறிவந்தது கிறிஸ்துசபைக்கும் உலகத்துக்கும் நடக்கும் பெரும்போரினிடையில் நடந்த ஓர் சிறு சண்டை. இக்கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களை யடிமைகொண்ட அதிபதியாகிய 'உலகத்திலிருக்கிறவனுடைய' போர்ச்சேவகர். அவனை எம்பிரான் 'உலகத்தின் அதிபதி' யென வழைத்தார். யோவா. 12. 31; 14. 30. எபே. 2. 2. பரி. அப்போஸ்தலன் எம்பிரானையும் லோகாதிபதியையும் ஒப்பிட்டுப் பேசுமிடத்து 'உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் எனக் கூறி அவனும் ஒருவாறு பெரியனே என்பதை யொப்புக்கொள்ளுகிறார். இதுவும் உண்மையே. ஏனெனில் அவனும், 'பலவான்' (மத். 12. 29.). 'கர்ச்சிக்கிற சிங்கம்' (1 பே. 5. 8.). 'பெரிய வலுசர்ப்பம்' (வெளி. 12. 13.). மேலும், 'துரைத்தனங்களும், அதிகாரங்களும்' இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் (எபே. 6. 12.) அவனோடு சேர்ந்திருக்கின்றன.

நமக்கு விரோதியாய் வருபவனின் படைவலி இத்துணைப் பெருமையுடையது. ஆதலின் நாம் அவனை ஜெயித்தோமெனில் நமது அற்ப பலத்தினால் அவனை மேற்கொண்டோமென்பதன்று. ஆனால் அவனிலும் பெரியராய் நமக்குள்ளிருக்கும் ஒருவரே அவனை ஜெயித்தார். ஜெயித்ததின் பெருமையை நமக்கெனக் கொள்ளாது 'எங்களுக்கல்ல, எங்களுக்கல்ல, கர்த்தாவே உம்முடைய நாமத்திற்குப் புகழ் உண்டாக' என அவருக்கே கொடுக்கவேண்டும். பலவானிலும் அதிக பலவான்



நம்மோடிருக்கிறார். நாம் ஒருக்காலும் பயப்படவேண்டியதில்லை. நமக்கு விரோதமாய் வரும் பெரும் படையைக் கண்டு அதைரியங் கொள்ளவும் நிமித்தமில்லை (2 இரா. 5. 44–47.). நமது சேனாபதி யுத்தத்தில் ஜெயங்கொண்டாயிற்று (யோவா. 26. 33.). அந்த ஜெயத்தை நமக்குக் கொடுக்கிறார் (1 கொரி. 15. 17. 1 யோவா. 2. 14.). நாம் செய்யவேண்டியது அதன் பயனை யனுபவிக்கவேண்டிய தொன்றே.

நம்மிலிருப்பவர் **யார்** என்பதைப்பற்றி 'நமக்குள்' சந்தேகம் எழக்கூடாது (யோவா. 6. 56; 14. 20; 15. 4–5; 17. 23–26.). விசுவாசிக்கிற ஒவ்வொருவனுக்குள்ளும் இயேசுவானவர் இருக்கிறார் (கலா. 2. 20.). நமது சகோதர ஐக்யத்திலுமிருக்கிறார். சபையிலுமிருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் தேவனால் உண்டானவர்களாயிருப்பதினாலே இறுதியில் ஜெயமடைபவர் அவரே. ஆனால் அந்திக்கிறிஸ்துவைச் சார்ந்தவர் உலகத்தாரானபடியினால் துவக்கத்தில் சிறிது ஜெயமடைபவர்கள்போற் காணப்படுகின்றனர். அதைக்கண்ட உலகினர் அவர்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். **அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையினால் உலகத்துக் குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவி கொடுக் (கிறது) கும்.**

மூலபாஷையில் **அவர்கள்** என்பதை வற்புறுத்திக் கூறியிருக்கிறது. **உலகத்துக்குரியவர்கள்** என்பதையும் வற்புறுத்திக் கூறியிருக்கிறது. மூலபாஷையின்படி 'அவர்கள் உலகத்துக்குரியவர்களாயிருக்கிறார்கள்; ஆகையினால் உலகத்துக்குரியவைகளைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள்' எனவாகும். 'உலகத்துக்குரிய' என்பதன் பொருளை 2. 15. வியாக்கியானத்தில் பார்த்தாயிற்று.

மற்றுமொருதடவை பரி. அப்போஸ்தலன் எம்பிரான் கூறிய அதே வார்த்தைகளைச் சொல்லுகிறார். இவ்வார்த்தைகளை எம்பிரான் கடைசி இராப்போசன சமயத்தில் பேசினார் (யோவா. 15. 19; 17. 14–16; 8. 23.). **உலகமும் அவர்களுக்குச் செவி**

**கொடுக்(கிறது) தும்.** அதாவது தாமதமின்றி முழுமனதுடன் செவிகொடுக்கும். இவ்வாறு செவிகொடுப்பதும் இயற்கையே. ஏனெனில் அவர்கள் பேசுவதில்-தன்னுடைய (உலகினுடைய) ஆவியே வெளிப்படுகிறது. எனவே அது தன்னுடைய பிள்ளைகளுக்கே செவிகொடுக்கிறது (1 யோவா. 7. 7; 15. 19.). அவர்கள் உலகின் தீங்கை நன்குமதித்து, அதன் சுயநலத்திற்கு இடங்கொடுத்து, 'அதன் கிரியைகள் யாவும் தீமையானவையே' எனக்கூறும் தேவசத்தத்தை அடக்குகிறார்கள்.

ஆனால் பரி. அப்போஸ்தலன்காலத்தில் உலகத்திற்கும் கிறிஸ்துசபைக்கும் அதிகமான சம்பந்தமில்லை. அந்திக்கிறிஸ்துகள் சபையை வஞ்சிக்க யோசித்தும் சித்தியடையாமல் தங்களைச் சபைக்குப் புறம்பாக்கிக்கொண்டனர். அந்திக்கிறிஸ்துகளும் அவரைச் சார்ந்தவரும் ஒருபுறமும், கிறிஸ்துசபை அவர்க்கு மறுபுறமும் நின்று போர்புரிந்தார்கள். தற்காலத்திலோ இப்படிப் பிரிவு பிரிவாகக் காணப்படவில்லை. உலகம் புளித்தமாவொப்ப உள்ளாகவிருந்துகொண்டே வரவரச் சபையைக் கெடுத்துக்கொண்டுவருகிறது. 'அந்திக்கிறிஸ்துவின் ஆவியாயிருக்கிற சாத்தானுக்கும் திருச்சபையின் உள்ளேயே ஓர் உலகம் இருக்கிறது. அவ்வுலகத்தில் அவனே பெரியனாக மதிக்கப்படுகிறான். மதசம்பந்தமாய்ப் பெரியன். காலத்துக்குக் காலம் மாறுபடும் மனிதருடைய மனதிற்கியைய மதக்கோட்பாடுகளையும் மாற்றி அவர்களைச் சரிப்படுத்திக்கொள்வதிற் பெரியன். உலகத்தாரோடு தங்கள் கிரியைகளை நடப்பிக்கிற மகா தெய்வபக்தியுடையவரையும் தீர்க்கதரிசிகளையும் போதகரையும்கூட சில வேளைகளில் அவன் அடக்கியாளப் பிரயாசப்படுகிறான். ஆண்டுவிடவும் செய்கிறான். இவ்விஷயத்திலும் அவன் பெரியனே. எனவே அவன் தூண்டுதலின்பேரில் உலகினர் தாங்கள் வணங்குதற்கு ஓர் பொற்கன்றுக்குட்டி வேண்டுமெனக் கேட்பின் அதைச் செய்து ஜனங்களுக்குக் கொடுக்க அவ்விடத்தில் ஓர் ஆரோன் முன்வருவான். அவன் ஏவுதலுக்குட்பட்டு ஜனங்கள் தங்களோடு சாந்தமாய்த் தயவாய்ப் பேசுகிற தீர்க்கதரிசிகள்



வேண்டுமெனக் கேட்பின், அவர்கள் கேளாமுன்னரே அவன் தானே அவர்களுக்கு அப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளை ஆயத்தம் பண்ணிவைக்கிறான். இவ்விதமாய் மேய்ப்பனுக்குத்தக்க ஆடுகளும் ஆடுகளுக்குத்தக்க மேய்ப்பனும் உண்டு. ஜனங்களுக்குத்தக்க பாதிரிகளும் பாதிரிகளுக்குத்தக்க ஜனங்களும் ஏற்படுகின்றனர். நேரத்துக்குத்தக்க போதனையும் போதனைக்குத் தக்க நேரமும் வாய்க்கின்றன. இவையெலாம் ஒன்றோடொன்று ஒற்றுமையுடையன. இந்தப் போதகர், வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு, உலகத்தின் ஆவிக்குத் தக்கபிரகாரமாய்ப் போதிக்கவாவது தீர்க்கதரிசனம் சொல்லவாவது செய்கிறதில்லை. அவர்கள் இயற்கையே அப்படியாய்விடுகிறது. அவர்கள் ஆத்துமாக்களை மயக்கிவிடுகிறது. அவர்கள் உலகத்திற்குரியவர்கள். ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள். உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.

இந்த மோசத்தினின்றும் தப்புதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அதாவது போதிப்பவர்களும் போதனையைக் கேட்பவர்களும் தேவனுக்குரியவராயிருந்து, தேவனையறிந்து அவருடைய உண்மையான பரிசுத்த ஆவியானவரையே தங்களுக்குள் எல்லாவற்றிலும் மேலாக உடையவர்களாயிருக்கவேண்டும். **நாங்கள் (நாம்) தேவனால் உண்டானவர்கள். தேவனை அறிந்தவன் எங்களுக்கு (நமக்கு)ச் செவிகொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்கு (நமக்கு)ச் செவிகொடுக்கிறதில்லை.**

இங்கே நாங்கள் என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பதம் 'நாம்' என இருக்கவேண்டும். இது பரி. யோவான் அப்போஸ்தலனையும் அவரால் நிருபம் எழுதப்பட்டவரையும் குறித்து நின்றது. இப்பொழுதும் எப்பொழுதும் போதிப்பவரையும் போதனையைக் கேட்பவரையும் குறிக்கும். எவ்விதமாக அந்திக்கிறிஸ்துவினுடைய ஒரே ஆவி உலகத்துக்குரிய போதகரையும் போதகங் கேட்போரையும் மயக்கிப் போதகர்,

போதகத்தைக் கேட்பவருடைய 'செவித்தினவுக்கு'த் தக்கதாக போதனைகளைக் கற்பிக்கவும், கேட்பவர் தங்கள் காலத்திற்குத் தக்கதாக அப்போதனைகளை ஏற்றுக்கொள்ளவும் செய்ததோ, அவ்விதமாகவே தேவனுடைய ஒரே ஆவி, திருச்சபையில் போதிப்பவர் போதனையைக் கேட்பவர் முதலியோருடைய இதயங்களைத் தமக்கு நோக்கி, உண்மையான மேய்ப்பர் ஆடுகளை நல்ல மேய்ப்பனுடைய சத்தத்தைக் காட்டியழைக்கவும், ஆடுகள் தங்கள் மேய்ப்பனுடைய சத்தத்தைக் கேட்கிறபடியால் அவர்களைப் பின்பற்றவும் செய்கிறார். (யோவா. 10. 4, 5.)

நம்முடைய கர்த்தரின் போதனை விஷயத்திலும் அப்படியேயிருந்தது. தேவனுடைய சத்தத்தைக் கேட்கக் காத்திருந்தவரே அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர்; உலசக்காரியங்களின்மேல் சிந்தைவைத்தவர் அவரை விலக்கிவிட்டனர் (யோவா. 8. 47; 18. 37.). தேவனுடைய சத்தியம் மனிதனுக்குச் சொல்லப்படும்போது தேவனை நேசிக்கிறவர்கள் அதற்குச் செவிகொடுக்கின்றார்கள், தேவனைப் பகைக்கிறவர்கள் முழுப்பகையாய் அவற்றை விலக்குகிறார்கள். இயேசுவினுடைய ஆவி அவருடைய சீஷரின்மூலமாய்ப் பேசுகிற இப்பொழுதும் அதேகாரியம்தான் நடக்கிறது. (கொரி. 2. 10–16.)

ஆகவே தேவனை ஆவலோடு தேடுகிறவனையே பரி. அப்போஸ்தலன் தேவனை அறிந்தவன் என அழைக்கிறார். மூலபாஷையின்படி அது தேவனை அறிந்துகொண்டே போகிறவன் எனக் குறிக்கும். தேவனுடைய அறிவில் நாடோறும் விர்த்தியடைந்துகொண்டு செல்பவனே உண்மையான சீஷன். அவன் எப்பொழுதும் தேவனிடத்தில் காத்திருந்து அவர் சொல்வதற்குச் செவிகொடுக்கிறதினால் தேவன் சொல்லுகிறதைக் கேட்கக் கூடியவனாகிறான். (ஏசா. 1. 4, 5.)

இப்பொழுது மூழுவதையும் மொத்தமாகக் கூறுகிறார். இதனாலே **சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்** இரண்டு திட்டமான குறிப்புக



ளைக் காட்டுகிறார். (1) சத்திய ஆவியையுடையவன் இயேசுவை
அறிக்கைபண்ணுகிறான். வஞ்சக ஆவியையுடையவன் அவ
ரை மறுதலிக்கிறான். (2) சத்திய ஆவியுடையவர் தங்களைப்போ
லும் சத்திய ஆவியையுடையவரும் நீதியைச் செய்கிறவருமான
ஆத்திரமுள்ள மனுஷரைத் தமக்குச் சீஷராக்கிக்கொள்ளுகிறார்
கள். மற்றவர் தம்மைப்போலும் தீயசிந்தையுள்ள உலக மனு
ஷரைத் தமக்குச் சீஷராக்கிக்கொள்ளுகிறார்கள்.

**சத்திய ஆவி.** இவ்வார்த்தைகளும் எம்பிரான் தமது அரு
மைத் திருவாக்கால் விளம்பியதே (யோவா. 14. 17; 15. 26;
16. 13.). ஆவி சத்தியம் (வாக். 17.). சத்தியமாயிருக்கும் அவ
ரிடமிருந்தும் வருகிறது (யோவா. 14. 6–26.). நமக்குச் சத்தி
யத்தைப் போதிக்கிறது. சத்தியத்தின் வல்லமையையும் தரு
கிறது. (யோவா. 16. 13, 14.)

## ஏழாம் பிரிவு.

—o:※:o—

### தேவன் அன்பாயிருக்கிறார்.

*மிருபவிஷயத் தொடர்ச்சி. தேவனும் அன்பும்.* (4. 7–21.)

(7) பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். (8) அன்பில்லாதவன் தேவனை யறியான்; தேவன் அன்பாகவேயிருக்கிறார். (9) நம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால், தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (10) நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. (11) பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். (12) தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படும். (13) அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். (14) பிதாவானவர் குமாரனை உலகரக்ஷகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாக்ஷியிடுகிறோம். (15) இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவனெவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். (16) தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவேயிருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (17) நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக (இவ்விதத்தில்) அன்பு நம் (மோடு) மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். (18) அன்பிலே பயமில்லை; (ஆனால்) பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். (ஏனெனில்) பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (19) அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். (20) தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (21) தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.

*சத்திய ஆவியையும் வஞ்சக ஆவியையும்பற்றிய இடைக்கூற்று முடிந்தபின் தாம் முன்கூறிவந்த முக்கிய விஷயமாகிய அன்பைப்பற்றித் திரும்பவும் ஆரம்பித்துவிடுகிறார். இப்பாகத்தில் தாம் கூறப்போகும் விஷயத்திற்கு முக்கியமான* **தேவன் அன்பாயிருக்கிறார்** *எனும் வாசகத்தை இருமுறை* (வாக். 8. 16.) *எழுதி அதைப்பற்றிய பல விஷயங்களையும் எடுத்துக் காட்டுகிறார். இப்பாகத்தில் கருத்துகள் இங்கு மங்குமாய் விரவிக்கிடத்தலின் இதனைப் பிரிவு பிரிவாகப் பிரிப்பது ஒருவாறு கூடாத காரியமெனினும் அதனை இருபிரிவாகவாவது பிரித்துக்கொள்வது பொருள் இனிது விளங்குதற்கேதுவாம்.*

(1) 7–10 ........*அன்பின் காரணம்.*

(2) 11–21 ........*அன்பின் பயன்.*

#### (1) *அன்பின் காரணம்.* (வாக். 7–10.)

பரி. யோவான் அப்போஸ்தலன் நாம் அன்பாயிருக்கவேண்டுமெனப் புத்திபுகட்டிப் பின் தாமே அன்பாய் விளங்குகிற (வாக். 7, 8.) தேவனில் அது உற்பத்தியாயிருப்பதைக் காட்டுகிறார். தம்முடைய குமாரனை அனுப்பினபடியால் அன்பானது பிதாவினிடத்தில் காணப்பட்டது. அது நம்மிடத்திலினின்றும் உற்பத்தியானதன்று. (வாக். 9, 10.)

(வாக். 7.) பரி. அப்போஸ்தலன் அன்பிற்குரிய அடைமொழியாக 'பிரியமானவர்களே' என அழைக்கிறார். அன்பிற்குரிய கற்பனையை (2. 7.)த் திரும்பக் கூறும் இச்சமயத்தில் இவ்வாறழைப்பதும் இயற்கையேயாகும். '**ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்**' எனக் கட்டளையிடுகிறார் (3. 11. வியாக்கியானம் பார்க்க.). இதைப்பற்றி மாரிஸ் என்பவர் அடியில் வருமாறு கூறுகிறார். 'ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்' எனக் கூறியதனால் அவ்விஷயத்தை ஓர் எளிதான காரியமாகப் புத்தி புகட்டிவிட்டாரெனக் கருதிவிடக்கூடாது. நாம் அடிக்கடி நெருங்கிப் பழகாதவரிடத்தும், நம்முடன் மாறுபட்டு நமக்கு விரோதமாயிராதவரிடத்தும், நம்முடன் எவ்வித சம்பந்தமுமற்றவரிடத்தும் அன்புகூர்வது கஷ்டமன்று. ஆனால் தாம் அறிந்தோ அறியாதோ நமக்குத் தீங்கிழைத்து நமக்குக் குற்றமுண்டாக்கி நம்முடைய விரோதத்தை எழுப்புகிறவர்களோடு நாம் சுயவெறுப்புக்காட்டி இடைவிடாமல் அன்போடு விளங்குதல் அதிக கஷ்டமானகாரியம். ஒருவன் மிக்கவும் பரோபகாரியென உலகினரால் நன்குமதிக்கப்பெற்றுப் புகழப்படலாம், ஆனால் அதே மனிதனை அவனுடன் நெருங்கிப் பழகிய அவனுடைய வேலைக்காரரும் அவனுடைய பிள்ளைகளும் அத்துணை நல்லவனென்று கூறாமலுமிருக்கலாம். 'எபேசு சபையார் பரி. அப்போஸ்தலன் விரும்புகிறவிதமான அந்த அன்பு உடையவர்களாயிருந்தால் அவர்கள் மற்றும் இடங்களில் உள்ளவர்களோடு அப்படியே அன்பாயிருப்பார்கள் என்பதை அப்போஸ்தலன் சந்தேகித்தற்கு இடமிராது.'



நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். **ஏனெனில் அன்பு தேவனால் (உண்டாய்) இருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்.** அன்பாயிருக்கவேண்டும் என்பதற்குக் கூறப்பட்டிருக்கும் காரணத்தில் இருவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதால், தாமே அன்பாயிருக்கிற அவருடைய சாயலில் பங்கடையவேண்டும். இரண்டாவது, நாம் அன்பாயிருக்கிறோமென்பதே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதைத் திட்டமாய்ச் சந்தேகமற அறிதற்கு ஏதுவாயிருக்கிறது.

பரி. அப்போஸ்தலன் பேசுகிற அன்பு உலகத்திற்குரிய அன்பன்று. அது தேவனுடைய சாயலும், சத்துவமும் இயற்கையுமாயிருப்பதினால் அது தேவனுக்குரியதாயிருக்கிறது. எனவே ஒருவனும் தேவனுடைய அன்பினளவு அன்புடையனாயிருத்தல் கூடாதகாரியம். அந்த அன்பு முற்றிலும் சுயவெறுப்புடைய அன்பு. சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவும் அவ்வளவு அன்புடனிருத்தல் இயலாது. ஆனால் **தேவனால் பிறந்து** 'தேவசாயலை யணிந்திருக்கிற' தேவ குமாரனாகிய அவர்மாத்திரம் இவ்வன்பைச் சாதித்தல்கூடும். எவரில் பூரணமான அன்பு வெளிப்பட்டதோ, எவர் தேவனுடைய நித்திய குமாரனாயிருக்கின்றாரோ, அவரை முழுமனதோடும் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்குமாத்திரம் 'தேவனுடைய பிள்ளைகளாகும் சுதந்தரம்' (யோவா. 1. 12.) கொடுக்கப்படுகிறது. இதைக் கொடுப்பவரும் அந்தக் குமாரனே. பரி. யோவான் அப்போஸ்தலன் கூறுவதினின்றும் இருவிஷயங்களை யறியலாம். (1) ஒருவன் தேவனுடைய அன்புடையனாயிருப்பின், இந்த அன்பு அவன் தேவனால் பிறந்த காரணம்பற்றியேயன்றி வேறு எக்காரணத்தினாலும் அவனில் உண்டானதன்று. (2) ஒருவன் உண்மையின் தேவனால் பிறந்திருப்பானென்னின், அவன் தேவனுடைய இந்த அன்பையுடையனாய் மாத்திரமல்ல, அதைக் காட்டுகிறவனாயுமிருப்பான்.

தேவனால் பிறவாமல் பரமபதத்தை யிழந்து உலகத்தோடொட்டி யுறவாடுகிறவர்க்குள்ளும் இவ்வகை அன்பு காணப்படுகிறது. இவருடைய அன்பைத் தேவனால் பிறந்தோரின் அன்பினும் வேறாகக் காண்டல் யாங்ஙனம்? எம்பிரான் மனுவுருத் தாங்கி யுலகிலிருந்த காலத்தில் ஒருக்கால் யூதரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் இவ்வினாவுக்கு விடையளித்தார், என்னை? யோவா. 8, 42–ல் காணலாம். 'தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள்' கிறிஸ்துவைப் பார்த்தும் அவரில் அன்புகூராமல்—எல்லாவற்றிலும் அதிகமாய் அவரில் அன்புகூராமல்—இருக்கிற இருதயத்தில் தேவனுடைய அன்பு இல்லை.

தேவனால் பிறந்திருக்கிற மனிதன்—பிறரிடம் அன்புடன் விளங்கும் மனிதன்—**தேவனை அறிந்திருக்கிறான்.** அப்படிப்பட்ட அம்மனிதனேயன்றி வேறெவனும் தேவனையறிதல் அசாத்தியம். அந்த அறிவு பிதா புத்ரசம்பந்தமாய் உண்டாகும் விசேஷித்த அறிவு. அது புத்ரனுக்குப் பிதாவின்மேலுள்ள பாந்தவம், அனுதாபம் முதலியவை காரணமாக எழுவதும், நாடோறும் வளர்ந்துகொண்டிருப்பதுமாகிய அறிவு. தேவனைப் பற்றிய இந்த அறிவு தமது புத்ரத்துவத்தின் மூலமாய்க் குமாரனானவர் பிதாவிடம் நின்றும் அடைந்த அறிவு. குமாரன் எவர்களைத் தேவனுடைய பிள்ளைகளாக்குவாரோ அவர்களுக்கு அவர் அதைத் தெரிவிப்பார் (மத். 11, 27. யோவா. 8. 53; 14. 7–9; 17. 25, 26.). இப்படி அவரால்பெற்ற இந்த அறிவானது அவ்வளவுதூரம் பூரணமானதாகவும், அவ்வளவுதூரம் பெருக்கமுடையதாகவும் இராதேபோயினும், அறிவு அதே அறிவுதான் என்பதற்கோ ஐயமில்லை. அன்பின் ஆவியினால் தேவன் அறியப்படுகிறார். அந்த ஆவியையே அவர் குமாரனுக்கு அளவின்றிக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாகும்போது நமக்கும் அதைக் கொடுப்பார்.



தேவன் நினைக்கிறதும் செய்கிறதும் எல்லாம் அன்பே. அவருடைய கிரியைகளெல்லாம் அவருடைய அன்பை விளக்குகின்றன. அன்பில்லாதவனும், தேவனைப்பற்றியவற்றைத் தான் அறிதற்கேதுவாய்த் தேவனுடைய அன்பின் ஆவியைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளாதவனும், அவர் நினைவுகளையேனும், அவர் செயல்களையேனும் அவர் வெளிப்படுத்துவனவற்றையேனும், அவருடைய அதியற்புத கிரியைகளையேனும் அறிந்துகொள்ளுதல் இயலாது. அதுபற்றியே பரி. அப்போஸ்தலன் **அன்பில்லாதவன் தேவனையறியான் (ஏனெனில்) தேவன் அன்பாயிருக்கிறார்** என்கிறார். அன்பை யறியாதிருத்தலே தேவனை யறியாதிருத்தலாகும்.

**(ஏனெனில்) தேவன் அன்பாயிருக்கிறார்.** தேவனுடைய மூலத்தன்மை இன்னது என்பதனை விளக்கும் மூன்றாவது லக்ஷணிப்பை இங்கு கூறுகிறார். அப்போஸ்தலன் வேறெதனையும் எழுதாதேபோயினும் அவர் கூறும் லக்ஷணிப்புகளினின்றும் அவர் தேவனைப்பற்றிய ஆழ்ந்த அந்தரங்க அறிவுடையரென்பது நன்கு விள்ங்கும். அவர் கூறிய மூன்று லக்ஷணிப்புகளும் வருமாறு:—

தேவன் ஆவியாயிருக்கிறார். யோவா. 4. 24.
தேவன் ஒளியாயிருக்கிறார். 1 யோவா. 1. 5.
தேவன் அன்பாயிருக்கிறார். 1 யோவா. 4. 8.

இவ்வார்த்தைகள் அதிதெளிவான சிறுபதங்களே. எனினும் அவற்றின் ஆழ்ந்த கருத்தும் அவை அவரின் பூரணத்துவத்தை விரிக்கும் விதமும் வியப்புடைத்தே.

**'தேவன் ஒளியாயிருக்கிறார்'** (1. 5. வியாக்கியானம் நோக்க.) என்பதில் அடங்கிய கருத்துகளைப் பார்த்தோம். இப்பொழுது **தேவன் அன்பாயிருக்கிறார்** எனும் வாசகத்திலடங்கிய பொருளைக் கவனிப்போம். இதில் அடங்கிய ஆழ்ந்த கருத்துகளை நமது இருதயம் எளிதில் அறிதல் இயலாது. அவற்றை விவரிப்பதும் அரிதே. எனினும் ஒருவாறு நோக்குவோம்.

இந்த அன்பானது தேவசாயலின் ஓர் தன்மையாக அல்லது சுபாவமாக அன்று, அதுவே தேவசுபாவமாய் தெய்வீகமாயிருக்கிறது. தேவன் அன்பாயிருக்கிறார் என்றது 'தேவன் அன்பு நிறைந்தவராயிருக்கிறார்' அல்லது அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது என்பவற்றைப் போன்றதன்று.

**'தேவன் அன்பாயிருக்கிறார்'** என இப்பொழுது கொடுக்கப்படுகிற இந்த மூன்றாவது லக்ஷணிப்பானது இதற்கு முந்திய இருலக்ஷணிப்புகளையும் பூரணப்படுத்துகிறது. அன்றியும் மனுஷராகிய நமக்கு அதிபிரயோசனமான, ஓர் உண்மையையும் காட்டுகிறது.

**தேவன் ஆவியாயிருக்கிறார்.** என்றது அவர் தாமாகவே இருக்கும் தன்மையை விளக்கிற்று. ஆனால் தேவன் பிம்பஸ்வரூபியாய் மனுஷர் கைவேலையாகிய ஆலயங்களில் வசிப்பவரல்லர் என்பது போதரும். மனுஷரின் பார்வைக் கெளியரல்லர். காலம் இடமுதலியவற்றிற்கு அடங்காதவர். தெய்வத்தின் இத்திறம் வேதாந்த விசாரணையுடைய நம்மிந்தியர்க்குத் தெரியாததொன்றன்று.

**தேவன் ஒளியாயிருக்கிறார்.** என்பது அவர் தன்மையைச் சற்று அதிகமாய் விளக்குகின்றது. தெய்வத்தின் திவ்ய சுபாவ லக்ஷணத்தைக் காட்டுகிறது. அவரால் சிருஷ்டிக்கப்பட்டவற்றுக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுகிறது. அவருடைய அளவற்ற பரிசுத்தம், தூய்மை, ஞானம் முதலியவற்றையும், அவர் தம்மைத் தமது சிருஷ்டிகளுக்கு எப்படித் தெரியப்படுத்துவார் என்பதையும் குறிக்கிறது. எனினும் மேற்கூறிய இரண்டும் அவர் நம்மீது அன்புள்ளவர்தான் என்பதைப்பற்றி யாதும் கூறவில்லை. அதை, இந்த மூன்றாம் லக்ஷணிப்புத்தான் கூறுகிறது. **தேவன் அன்பாயிருக்கிறார்.** இதைப் பற்றித் திட்டமாய் நாம் அறிவதற்கு 'நான் அன்புகூருகிறேன்' என்பதின் கருத்தை யறியவேண்டும். அன்புகூருகிற ஒருவரிருக்கவேண்டும். 'நான்' என்னப்பட்ட ஒருவர் அவசி



யம். எதில் அன்புகூருவதெனவும் ஒன்று வேண்டும். எனெனில் அன்பு தன்னிலிருந்து வெளிச்செல்லும் ஓர் விஷயம். (சுயநலம் அன்புக்கு மாறானது) இது என்னிடத்திலுள்ள ஓர் நற்காரியத்தைப் பிறருக்குக் கொடுப்பதாம். இனி தேவன் அன்பாயிருக்கிறார் என்றதனால் போந்ததென்னை யெனின், அவரே அன்பாய்—பூரணஅன்பாய்-இருக்கிறார். அன்பின்றி அவர் வேறில்லை என்பதாம். ஆகையினால் (1) தேவன் ஒரு ஆளாயிருக்கவேண்டும். 'நான்' என்பது, 'அது' என்பதன்று. (2) அவர் தம்மால் யாதொன்றும் சிருஷ்டிக்கப்படா முன்னரே நித்தியமாய் அன்புகூரும் ஒன்றை உடையாராயிருத்தல் வேண்டும். இதினின்றும் திரித்துவத்தின் தன்மையையும் நாம் சிறிது அறியலாம். அன்பாயிருக்கிற ஒரேதேவன் ஒருவரே. எனினும் மூவர். நித்தியமாய் அன்புகூரும் பிதா; நித்தியமாய் அன்புகூரப்படும் குமாரன்; பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள அன்பின் ஐக்யத்தைக் குறிக்கும் பரிசுத்தஆவி.

(3) அவர் முழுதும் நல்லவராயிருக்கவேண்டும். எக்காலத்திலும் அவர் தமது அன்பைப் பிறருக்குக் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும்.

இதைப்பற்றி ஹாப்ட் ஆசிரியர் கூறுவது.—'தேவன் எக்காலத்திலும் எவ்வளவாவது தமது பூரணதன்மையைத் தமக்காக வைத்துக்கொண்டதுமில்லை; வைத்துக்கொள்ளுகிறதுமில்லை; வைத்துக்கொள்ளவு முடியாது. 'தேவன் அன்பாயிருக்கிறார்' என்பதினாலே அவர் எவ்விஷயத்திலாவது, எக்காலத்திலாவது தமக்குள் தமக்காகவே இருக்கமுடியாதென்பது போதரும்.

முன்னமே கூறியபடி தேவன் அன்பாயிருக்கிறார். என்னும் இச்சத்தியம் இந்நிருபத்தின் பிந்தியபாகத்தில் விசேஷித்துக் காட்டப்படுகிறது. இந்நிருபத்தின் பிந்திய இரண்டொரு அதிகாரங்களில் (3. 1–5. 12.) காணப்படுகிறபடி, புதிய ஏற்பாட்டில் வேறெப்புத்தகத்திலும் இந்த அன்பு காணப்படுவதில்லை. யோவான் சுவிசேஷம் தவிர்ந்த வேறெப்புத்தகத்திலும் அன்பு

எனும் பதம் இத்தனைதரம் வருகிறதுமில்லை. இதற்குப் பாதியளவுதானும் வருவதுமில்லை. எனவே இந்நிருபம் எழுதியவராகிய பரி. யோவான் அப்போஸ்தலனை 'அன்பின் அப்போஸ்தலன்' எனச் சபையினர் அழைத்ததுவும் மிகவும் பொருத்தமுடையதே. 'இந்நிருபம் முழுவதிலும் அன்பின் புகழைப்பற்றி யாதும் கூறப்படாதேபோயினும், வேதமுழுதிலுமே வேறெப்பாகத்திலும் அவ்விஷயத்தைப்பற்றி யாதும் கூறப்படாதேபோயினும், ஏனெனில் தேவன் அன்பாயிருக்கிறர் எனும் இவ்வாசகம்மாத்திரம் கூறப்பட்டிருந்தால் இஃதொன்றே நமக்குப் போதுமானது. வேறு யாதும் அதைப்பற்றிக் கூறப்படவேண்டியதில்லை' என அகுஸ்தீன் சொல்லுகிறார்.

தேவன் எப்படி நித்தியரோ தேவஅன்பும் அப்படியே நித்தியமானது. அவர் உலகங்களைப் படைக்குமுன்னரே தமது குமாரனில் அன்புகூர்ந்தார். நம்மிலும் அன்புகூர்ந்தார். ஏனெனில் அவர் 'ஆதிகாலமுதலே' (2 தீமோ. 1. 9, 10. எரே. 31. 3.). தமது குமாரனுக்குள் நம்மை முன்னறிந்திருந்தார். சிருஷ்டிப்பும், மீட்பும், தேவஅன்பின்படி நித்தியமாயுள்ளவை. எனினும் காலங்கடந்து நித்தியமாய் மாருததாயிருந்த இந்த அன்பு ஏற்றகாலத்தில் வெளியாக்கப்பட்டது. தம்முடைய ஒரேபேறன குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல்வைத்த அன்பு வெளிப்பட்டது.

ஏனெனில் அவருடைய அன்பு அதுகாறுமில்லாப்பிரகாரம் தமது அன்புக்குரிய புதிதானவற்றைச் சிருஷ்டித்தபடியினால் உலக சிருஷ்டிப்பிலேயே அந்த அன்பு வெளிப்பட்டது. சிருஷ்டிப்பில் தேவன் தமது நித்திய அன்பைக் குமாரனின் மூலமாய் வெளியாக்கினர். ஏனெனில் சகலமும் குமாரனின் மூலமாய்க் குமாரனுக்காகப் படைக்கப்பட்டன. குமாரனே எல்லாவற்றிற்கும் தலையாகவும் சுதந்தரவாளியாகவும் நியமிக்கப்பட்டார். சகலமும் அடங்கியிருப்பதும் 'அவரிலேயே.



தமது வல்லமையுள்ள வாக்கினால் சகலத்தையும் தாங்குகிறவரும்' அவரே. பின் மனுஷன் பாவஞ்செய்தான். மனிதன் பாவஞ்செய்தகாலத்தில் தேவன் அவன்மேல்வைத்த அன்பை மாற்றுவதற்குப் பதிலாகத் தமது அன்பை அதிகமாக வெளிப்படுத்தினர். அதைப்பற்றி, பரி. யோவான் அப்போஸ்தலன் பேசுகிறார். என்ன? காலம் நிறைவேறினபோது பாவத்தில் மரிக்கும் பாவிகளுக்கு அவர் 'தமது ஜீவனையே கொடுத்து ஜீவன் அளிப்பதற்காகத் தமது குமாரனைத் தேவன் அனுப்பினர்.' கிறிஸ்துவின் வருகையே தேவன் உலகை மீட்குமாறு கொண்ட அன்பின் வெளிப்படையன்றோ. (யோவா. 17. 6.)

தம்முடைய குமாரனை, தம்முடைய ஒரேபேறன குமாரனை உலகத்தில் அனுப்பினர் என்னும்போது பரிசுத்த அப்போஸ்தலன் அனுப்பப்பட்டவர் யாவர். யாண்டு அனுப்பப்பட்டார் என வெவ்வேருகக் கூறி தேவஅன்பின் ஈகையின் பெருமையை வற்புறுத்துகிறார்—தாம் அன்புகூர்ந்த ஒருவரைப் பகை நிறைந்த உலகுக்கு அனுப்பினர்; பரிசுத்தரான ஒருவரைப் பாவம் நிறைந்த உலகுக்கு அனுப்பினர்; ஜீவனுள்ள ஒருவரை மரணம் நிறைந்த உலகுக்கு அனுப்பினர். ஆபிரகாம் 'தான் அன்புகூர்ந்ததன்னுடையகுமாரனை' தன்னுடைய ஒரேபேறன குமாரனை! மனப்பூர்வமாய்த் தேவனுக்குப் பலியிடவந்த சம்பவத்தைச் சிந்திக்கும்போது தேவன் தமது குமாரனை நமக்காக ஒப்புவித்த தன்மை ஒருவாறு விளங்கும். அந்த அன்பு மனிதருக்குமாத்திரம் வெளிப்படுத்தப்பட்டதன்று. 'நமக்குள்' வெளிப்படுத்தப்பட்டது—அதாவது விசுவாசிக்கிற நமக்குள் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் அன்பு மனிதருக்கு வெளிப்படுத்தப்பட்ட ஓர் காட்சி மாத்திரமன்று. அது மனிதருக்குள் பிரவேசிக்கும் ஓர் வல்லமையாயுமிருக்கிறது. ஒவ்வோர் விசுவாசியும் தேவ அன்புக்கு அடையாளமாய் விளங்குகிறான்.

'ஒரேபேறன' எனும் தொடரைப் புதிய ஏற்பாட்டுப் புத்தகம் எழுதிய பலருக்குள் பரி. யோவான் அப்போஸ்தலன் ஒரு

வரே தமது சுவிசேஷத்தில் நான்குதடவையும் (1. 14–18; 3. 16–18.), இந்த இடத்திலும் வழங்குகிறார். 'ஒரேபேறான' வென்பது லத்தீன் மொழிபெயர்ப்புப்படி 'ஒருவர்மாத்திரமான' அல்லது 'வேறொருவருமில்லாத மாதிரியாய் விசேஷித்த' எனப் பொருள்படும். இப்பதம் ஆதிகாலத்தில் குமாரன் விசேஷித்த விதமான குமாரனாயிருந்தார் என்றும் வேறெவரும் அவரைப் போல் குமாரராயிருத்தல் அசாத்தியம் என்றும் பொருள்கொள்ளப்பட்டது. ஆனால் அதில் குமாரனுடைய சந்ததியாரைப் பற்றி, அவர் இயற்கையான குமாரன் என்பதையும், மற்றவர் சுவிகார புத்திரர் என்பதையும்பற்றி யாதும் சாற்றப்படவில்லை.

**நாம் அவர் மூலமாய்ப் பிழைக்கும்படிக்கு,** அவர் வந்திராவிட்டால் நாம் மரித்திருப்போம். ஆவியின்பிரகாரம் மரித்திருப்போம். அம்மரணமென்? தேவனிலிருந்து நித்தியகாலமாய்ப் பிரிந்துவிடுவதாலுண்டாகும் மரணம். அம்மரணத்திலும் கொடிய மரணமுமுண்டோ? (3. 14. யோவா. 3. 16, 17.)

'கிறிஸ்துவின் மூலமாய்ப் பிழைத்தல்' என்பது அவரையே நமக்குள் நமது ஜீவனுக்கு ஊற்றாகக்கொண்டிருத்தல் எனப் பொருள்படும் (கலா. 2. 19, 20. பிலி. 1. 21.). இதின் பயனாய்:—

1. அவருடைய ஜீவன் நமது ஜீவியத்தில் விளங்கும்படி முயற்சித்தல். (2 கொரி. 4. 10, 11. ரோ. 14. 8.)

2. அவருடைய வல்லமையின் மூலமாய் எல்லாவற்றையும் செய்தல். (பிலி. 4. 13.)

3. அவருடனேகூட ஏகமாய்ப் பிழைத்திருத்தல். (1 தெச. 5. 10.)

தேவனில் விசுவாசமுள்ள எவனும், தேவனுடைய அன்பு மனிதன் உண்டாக்கப்படுமுன்னே இருந்ததென்றும், ஆதலால் தேவனுடைய அன்பே முந்தியது, மனித அன்பு பிந்தியதென்



றும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால் அவன் மனுஷ அன்பு தானாக உண்டானதென்றும், தேவன் நம்மேல்வைத்த அன்பு நாம் அவர்மேல்வைத்த அன்பு காரணமாய் நமது பாவநிவாரணத்தின் பொருட்டுண்டானதென்றும் சொல்லக்கூடும். இவ்வாறு கூறுதல் தவறென மறுத்துப் பரி. அப்போஸ்தலன் **நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினாலல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது** எனக் கூறுகிறார்.

நாம் தேவனிடத்தில் அன்புகூருவதானது 'தேவ அனல் காரணமாக நம்மில் எழுந்த அனலேயன்றித் தானேயுண்டாகிற, தானாயிருக்கவல்ல அனலன்று.' 'நான் அன்புகூருகிறேன்' எனும்போது தேவஅன்பு என்னில் புகுந்து நான் அன்புகூருமாறு செய்ததெனவே பொருள்படும். என்னுடைய அன்பென்பது எனக்குக் காட்டப்பட்ட அன்புக்குக் கைம்மாறாக வெழுந்த அன்பேயாகும். நாம் முற்றிலும் பகையுடையராகவும் பகைத்துக்கொண்டுமிருக்கும்போது தேவன் நம்மில் அன்புகூர்ந்தார் (ரோ. 5. 8.). அவர் நமக்கு எத்தனையோ காரியங்களைச் செய்தபின்னும் நாம் இன்னும் நன்றியற்றும் அவரில் சரியான அன்புகூராமலுமிருக்க அவரோ நம்மில் அன்பு மிகுந்தவராகவே இருந்துவருகிறார். கிறிஸ்துவின் சிலுவையே இதற்குப் போந்த சான்றாம். அங்கே தேவன் தம்மைக் குரூரமாய் வதைசெய்பவரை நேசிக்கிறதாகக் காண்கிறோம்; நம்முடைய பாவங்களே (ஒவ்வொரு பாவமும் நமக்கு அவர்மீது அன்பின்மையை வெளிப்படுத்தும்) அவரைச் சிலுவையில் அறைந்திருக்கவும் அவர் நம்மில் அன்புகூருகிறார். சிலுவையின் நோக்கம் தேவனைச் சாந்தப்படுத்தவன்று. ஆனால் நம்மை அவரோடு ஒப்புரவாக்குதற்காம். நமக்குள் புது ஜீவனுக்கு ஆதாரமாக தேவனுடைய அன்பு புகவிடாதபடி அதைத் தடுத்திருக்கும் பாவச்சுவரை நீக்கிப்போடுவதற்காம். (2. 2. வியாக்கியானம் நோக்க.)

## 2. அன்பின் பயன். (4. 11-27.)

*இப்பிரிவின் முக்கிய கருத்து அடியில் வருமாறு:—தேவன் நம்மில் அவ்வளவாய் அன்புகூர்ந்தபடியால் நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் (5. 1.). தேவனையோ நாம் பார்க்கமுடியாது; ஆனால் அன்புகூருவதினால் அவர் நமது இருதயத்தில் நிலைத்திருப்பார். அவர் நமக்களித்த ஆவியே அதைப்பற்றி சாக்ஷிபகரும் (12, 13.). நம்முடைய விசுவாசமானது அபிப்பிராயங்களையேனும் கொள்கைகளையேனும் சார்ந்ததல்ல. அது உண்மையென்று சரித்திரவாயிலாய்ச் சாதிக்கப்படுகிற காரியத்தைச் சார்ந்திருக்கிறது. இயேசுவை அறிக்கையிட்டு நாம் அறிந்தும் விசுவாசித்துமிருக்கிற அன்பின் நிலைத்திருத்தலானது நாம் தேவனிலும் தேவன் நம்மிலும் நிலைத்திருக்கச் செய்கிறது (வாக். 15, 16.). அன்பு நம்மில் பூரணப்படுவதால் நமக்குள்ள பயம் அற்றுப்போகிறது. நாமும் நியாயத்தீர்ப்புநாளில் தைரியமாயிருப்போம் (வாக். 17, 18.). தேவனுடைய அன்பு நம்மிடத்தில் வந்து நம்முடைய அன்பை எழுப்பினது (19.). ஆகையினால் கண்ட சகோதரன்மீது அன்புகூராதிருந்தும் காணாத தேவன்மேல் அன்புகூருகிறேன் என்று சொல்வது பொய்யும் அபத்தமுமாயிருக்கிறது (20.). அப்படி நடத்தல் தேவன் நமக்கு அளித்த மேலான கற்பனையை மீறுவதாம். (21.)*

(4. 11-21.) (11) பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். (12) தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். (13) அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். (14) பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். (15) இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். (16) தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (17) நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். (18) அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (19) அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். (20) தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (21) தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.



11. பிரியமானவர்களே, தேவன் இவ்வளவாய் நம்மில் அன்புகூர்ந்திருக்க நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். *இவ்வளவாய் எனும் பதம் அதிகமாய் வற்புறுத்தப்படுகிறது. நம்மை மீட்பதற்கு எம்பிரான் கொடுத்த மதிக்கப்படாத கிரயமும் அளவிறந்த அன்பும் இதனால் குறிக்கப்பட்டது. நன்றி பாராட்டவேண்டுவது நமது கடன். தேவனுக்கு இவ்விஷயத்தில் அதிகக் கடனாளிகளாயிருக்கிறோம். ஆனால் தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்தது மாத்திரமல்ல, அன்பையே நம்மிலும் ஸ்தாபித்து நமக்கும் அன்*

பைக் கொடுத்தார். இந்த ஈகையை உபயோகிப்பதில் நாம் தேவனுக்குக் கடனாளிகளாயிருக்கிறோம்.

பரி. யோவான் அப்போஸ்தலன் நாம் 'தேவனிடத்தில் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்' எனக் கூறி முடித்துவிடவில்லை. ஏனெனில் இந்த நமது ஜீவியத்தில் மனிதரிடத்தில் அன்புகூருவதால்மாத்திரம் தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என்பதைக் காட்டக்கூடும். அவ்வாறு மனிதரிடத்தில் அன்புகூராத விஷயத்தில் நம்மை நாமே வஞ்சிக்கிறவராயிருப்போம் (வாக்: 20.). மேலும் அவர் அடுத்த வாக்கியத்தில் கூறுகிறபடி தேவன் நமது மாம்சக்கண்ணுக்குப் புலப்படாத பிரகாரம் ஆவியாயிருக்கிறதினால் நம்முடைய நாடோடிய ஜீவியத்தில் பிறரிடத்தில் அன்புகூர்ந்து மற்றும் செயல்கள் நடத்துவதுபோல் அவரிடத்தில் அன்புகூர்வது கூடாதகாரியம்.

**தேவனை ஒருபோதும் ஒருவனும் கண்டதில்லை.** தேவன் அவருடைய தேவலக்ஷணப்படி மனிதர் கண்களுக்குப் புலப்படாதவர். (மூலபாஷையில் தேவன் என்னும் பதம் ஒருவாறு தேவ சுபாவத்தைமாத்திரம் குறித்து நிற்கிறது.) மகா பரிசுத்தவான்கள் தீர்க்கதரிசிகள் பெரியோர் தத்துவசாஸ்திரிகள் முதலிய எவராயினும் சரி; அவர்கள் எவ்வளவுதூரம் நிஷ்டை கூடியிருந்தபோதிலும் தேவனை அவருடைய சுய லக்ஷணத்தின்படி தமது கண்களால் பார்த்ததில்லை. அவர் அளவிலா அரூபி. நாமோ சுருங்கிய ஆயுளுள்ள ரூபிகள். ஆனால் நம்மிடத்துள்ள அன்போ நாம் கண்ணினால் பார்த்து அறியக்கூடியதாய வொன்றினிடத்துமாத்திரம் தன் செயல் காட்டி விளங்கும் தன்மையுடையது. அங்ஙனமாயின் தெய்வத்தின்மீது நமக்குள்ள அன்பைக் காட்டுதலெங்ஙனம்? பரி. அப்போஸ்தலன் நாம் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால் தேவன் நம்மில் நிலைத்திருப்பார் எனச் சொல்லுகிறார். **ஒருவரிடத்திலொருவர் அன்புகூர்ந்தால் தேவன் நம்மில் நிலைத்திருக்கிறார்;** எனவே, தேவசாயலின்படி சிருஷ்டிக்கப்பட்ட மனிதரிடம் 'நாம் அன்புகூர்வதால்



அதின் பயனாய் அவரிலும் அன்புகூருபவர்களாயவனையே சேவிப்பவராவோம். இவ்விதமாய் நமக்குக் கொடுக்கப்பட்ட நம்மிலுள்ள அவருடைய அன்பைப் பூரணப்படச் செய்வோம். அவரிடமிருந்தும் நாம் பெற்ற இந்த அன்பே நாம் அவரிடத்திலும் பிறரிடத்திலும் அன்புகூரச் செய்கிறது. **அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.** அன்பில் விசுவாசி பூரணப்படுவான். விசுவாசியில் அன்பு பூரணப்படும். மனுஷன் தன் ஜீவியத்தின் நோக்கமாய்க் கொள்ளவேண்டியனவும் இவையேயாகும்.' (2. 5; 4. 17, 18.)

எனவே, பரி. அப்போஸ்தலன் நாம் காணக்கூடாத தெய்வத்தில் அன்புகூர்வதை யறிவதற்கான ஓர் உரைகல்லைக் காட்டுகிறார். என்ன? காணக்கூடியவர்களில் நாம் அன்புகூர்ந்தாலொழிய காணக்கூடாத தேவனில் அன்புகூருகிறோம் என்பது பொய்படும். இவ்வுரைகல்லின் மூலமாய்ப் பரீக்ஷித்து அறிதலும் அவசியம். ஏனெனில் மனிதர் இவ்விஷயத்தில் அடிக்கடி மோசம்போகிறார்கள். இதைப்பற்றி, காண்ட்லிஷ் ஆசிரியர் கூறுவது:—'தெய்வ இயற்கையைப்பற்றி இடைவிடாது சிந்தித்தல், ஏகாந்தமாயிருந்து மோனநிஷ்டை கூடுதல், தெய்வபக்தியைத் தியானித்தல், தெய்வத்தின் பெருமையையும், அவருடைய திவ்ய கல்யாணகுணங்களையும், அவரது அளவில் பேரழகையும், மனதில் நினைந்திருத்தல் முதலியன ஒருவாறு தெய்வத்தைப்பற்றிய பயபக்தியையும், அவர்மீது பாசத்தையும் எழுப்பிவிடும். ஆனால் அதனையே நாம் தெய்வத்தின்மீதுகொண்ட அன்பாகப் பாராட்டிவிடுகிறோம். இது ஒருவாறு மோசமானதாய் முடியவுங்கூடும். நம்முடைய அன்பு தெய்வத்தால் நம்மிலுண்டான அன்பெனின் அவருடைய அன்பைப்போலவே எல்லாவற்றையும் அவர் நோக்குவதுபோல் நாமும் நோக்கும் அன்பாயிருத்தல்வேண்டும். சாதாரணமாய்க் காணப்படுகிறவற்றில் அவர் எப்படி அன்புகூருகிறாரோ நாமும் அப்படியே அன்புகூரவேண்டும்; இவ்விதமாய்ச் செய்தால் நாம் அவரில் அன்புகூருவது விர்த்தியாம்.'

இதையறிதற்கு மற்றுமோர் வகையுமுண்டு. அதாவது, தே
வன் நமக்குக் கொடுத்தருளிய ஆவி நம்முள்ளிருத்தலை யறிதலே
யாம். **அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளியதினு
லே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்
திருக்கிறேம்** (3. 24. வியாக்கியானம் பார்க்க.). இவ்விரண்டு
வகைகளையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கக்கூடாது. பிற
ர்க்கு அதிக தானதர்மங்களைச் செய்வதினாலாவது, தேவனைப்
பற்றிய பயபக்தி யிருப்பதினாலாவது நாம் தேவனில் அன்பு
கூருகிறோமெனச் சொல்லமுடியாது. ஆனால் உள்ளாக அன்
பின் ஆவியும் புறம்பாக அந்த அன்பைக்காட்டும் செயல்களும்
காணப்படுமாயின் காணப்படாத தேவனில் அன்புகூருகிறோ
மென்பதை உண்மையாகவே அறியலாம்.

நமக்கு அருளப்பட்ட ஆவி அன்பின் ஆவி. தேவ அன்
பின் சாயலாகவே யிருக்கும் அதே அன்பின் ஆவி. தேவன்
எவ்வெப்பொருட்களின்மீது அன்புகூருகிறரோ அவ்வப்பொ
ருட்களின்மீது அவர் அன்புகூருவதையே காரணமாகக்
கொண்டு நாமும் அன்புகூருகிறோம். மற்றப்படி நாம் வெறு
த்து அருவருக்கக்கூடிய ஆண்கள் பெண்கள்மீது இவ்வொன்
றையே காரணமாகக்கொண்டு அன்புகூருகிறோம். எனெ
னில் நாம் அந்நிலைமையிலிருக்கும்போது தேவன் நம்மில் அன்பு
கூர்ந்தார். தேவசாயல் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்கப்
பட்டது கண்டு, நம்மிலும் அதே சாயலிருப்பதால் இயற்கை
யாகவே அவர்களில் அன்புகூருகிறோம். தேவனுடைய அன்பு
நம்மில் பூரணமாகும்போது அவர் காட்டிய சுயவெறுப்பை
ஒருவாறு அற்பமாகவேனும் நாமும் காட்டுகிறோம்.

13 முதல் 16 வரையுள்ள வாக்கியங்களின் தொடர்ச்சி தெளி
வாய் விளங்கவில்லை. எனினும் அவற்றின் முக்கியதோற்றம்
வெளியாகிறது. **நாம் தேவனிலும் தேவன் நம்மிலும் நிலைத்
திருக்கிறேம்** என்கிற காரியம் மூன்றுவகையாக வெளியாகிறது.

1. ஆவி நம்மிலிருப்பதனால் அது வெளியாகிறது........13.
2. அது அறிக்கையிடுவதனால் விளைகிறது..................15.



3. அது அன்பினால் விளைகிறது..................................16.

4. 1–6 வாக்கியங்களில் கூறப்பட்ட கிறிஸ்துவை அறிக்கை
பண்ணும் அதேகாரியத்தையே 5. 14–ல் ஒருவாறு திரட்டிக்
கூறுகிறதுபோல் காணப்படுகிறது. அப்படியே 4. 7-12 வாக்
கியங்களில் கூறப்பட்ட அன்பைப்பற்றியே 5. 16-ல் திரட்டிக்
கூறுகிறது. அப்படியாயின் 5, 13. ஒருவாறு எல்லாவற்றை
யுமே திரட்டிக் கூறுவதாகும். எனெனில் அறிக்கைசெய்வதும்
அன்புகூருவதும் நம்முள் வசிக்கும் ஆவியால் விளைவனவன்றோ?
அன்றியும் 'நாங்கள் கண்டு சாக்ஷியிடுகிறோம்' எனும் 14–ம் வச
னத்துக்கும் 'நாம் அறிந்து விசுவாசிக்கிறோம்' எனும் 16–ம்
வாக்கியத்திற்கும் சிறிது சம்பந்தமிருப்பதாகக் காண்கிறோம்.

நாம் உண்மையென்றறிதற்கு இங்கே இரண்டு திட்டமான
காரணங்கள் இருக்கின்றன. அவையாவன: — 1. உண்மை
யென ஸ்தாபிக்கப்பட்ட புறம்பான சாக்ஷியங்கள். இவை கற்
பிதமானவும் கனவுபோன்றனவுமல்ல. அன்றியும் மனோபா
வனை செய்துகொள்ளப்படுவனவுமல்ல. ஆனால் உண்மைதா
னெனச் சரித்திரவாயிலாய் ஸ்தாபிக்கப்பட்டன. 2. உள்ளான
நமது ஆத்துமாவின் சாட்சி என்ன? புறம்பாக நமக்குக் காட்
டப்பட்ட தேவனுடைய அன்பு நமக்கு வேண்டிய அளவுக்கும்
அதிகமாய் விளங்குகிறது. இவ்விரு சாக்ஷியங்களும் ஒருங்கு
சேர்ந்தாலன்றி நீடித்த விசுவாசமுண்டாகாது. இவை சேர்ந்த
பிற்றையோ விசுவாசத்தைத் தடுத்தலரிது.

12–ம் வாக்கியத்தில் 'ஒருவனும் கண்டதில்லை' எனவும் 14-ம்
வாக்கியத்தில் 'நாங்கள் கண்டோம்' எனவும் வருதலினால் இவ்
வாக்கியங்களில் மற்றொரு சம்பந்தமும் காணப்படுகிறது. அரூ
பியான தெய்வத்தை நாம் காணக்கூடாதெனினும் அவர் தம்மு
டைய சாயலாகவிருக்கும் ஒருவனை அனுப்பினார். அவரில்
'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவ
ருக்குள் வாசமாயிருக்கிறது.' கொலோ. 2. 9. அவரில் மனுஷர்
தேவனைக் கண்டார்கள் — 'என்னைக் கண்டவன் பிதாவைக்
கண்டான்.'

பிதாவானவர் குமாரனை உலகரக்ஷகராக அனுப்பினரென்று நாங்கள் கண்டு சாக்ஷியிடுகிறோம். விசேஷவிதமாய்ப் பொருள்கொள்ளின் 'நாங்கள்' என்பது அப்போஸ்தலரைமாத்திரம் குறிக்கும். ஒருவிதமாய்ப் பார்த்தால் கிறிஸ்துவை நேரிற் கண்டு அவரையும் அவர் உயிர்த்தெழுதலையும்பற்றிச் சாக்ஷி பகர்ந்த எல்லோரையும் குறிக்கும். மற்றொருவிதமாய் அப்பதம் அவரைத் தங்கள் கண்ணாலே பாராதேபோயினும் குமாரனை அனுப்பினதினாலே தமது அன்பை வெளிப்படுத்திக்காட்டிய பிதாவின்செயலைச் சிந்தனைசெய்யும் எல்லாக் கிறிஸ்தவரையும் குறிக்கும். காக்ஷியும், அதைப்பற்றிப் பகரும் சாக்ஷியும் சகோதரராகவிருக்கும் எல்லாக் கிறிஸ்தவருக்கும் ஒருவாறு பாத்தியப்பட்டதாகும். கிறிஸ்தவன் சாட்சியாக விளங்கவேண்டியது அவசியம். இரட்சகரின் அன்பைப்பற்றி உலகத்துக்கு அவன் சாக்ஷிபகராவிட்டால் அவன் இருப்பதன் பயன்தான் யாதோ?

**அனுப்பினார்—கண்டோம்** மூலபாஷையின்படி இவற்றின் பொருள்—நாங்கள் கண்டோம். அந்தக் காட்சியே எங்களுக்கு வல்லமையைக் கொடுக்கிறது. பிதா குமாரனை அனுப்பினார். அனுப்பினதின் பிரயோசனத்தை இப்பொழுது உலகம் அடைகிறது.

உலகரக்ஷகராக: வெஸ்ற்காட் அத்தியட்சர் இது மூலபாஷையின்படி 'அவர் அனுப்பப்பட்டதை மாத்திரமன்று அவர் உண்மையில் எப்படியிருக்கிறார் என்பதனையும் குறிக்கிறது' என்பார். 'உலகரக்ஷகர்' என்பது எல்லாரையும் மீட்கும்படியாக அவரிடம் எழுந்த அளவினுளடங்கா விருப்பையும் அவரது வல்லமையையும் குறிக்கிறது. எப்படியும் எல்லாரையும் இரக்ஷிக்கிறவரென்று வேதத்தில் வேறு ஒரு இடத்தில்மாத்திரம் வருகிறது (யோவா. 4. 42.). அதைக் கூறியவன் மற்றெல்லாரிலும் இழிவுள்ளவனாக மதிக்கப்பட்ட ஓர் சமாரியன். அக்காலத்திருந்த சீஷரினும் அதிகமாய் எம்பிரானது அன்பையும் பேராற்றலையும் அறிந்திருந்த அச்சமாரியனின் அறிவின் பெருக்கம் இருந்தவாறு ஆச்சரியப்படத்தக்கதே!



**இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவனெவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.** 2. 23. வியாக்கியானம் பார்க்க. இவ்வாறு அறிக்கை செய்வதில், கிறிஸ்துவைப் பூரண மனிதனாகவும் (இயேசு) பூரண தெய்வமாகவும் (தெய்வகுமாரன்) விசுவாசித்து ஆண்டவராக அவருக்கு நம்மை ஒப்படைப்பதும் அடங்கியிருக்கிறது. 'எவனோ' எனும் பதத்திலிருந்து இந்தச் சுவிசேஷம் எல்லாருக்கும் உரியதெனப் பொருள்படும். நிர்மூடரும், நாகரிகமற்றவரும், பிறரால் இழிவானவரென மதிக்கப்படும் ஜாதியாரும்கூட இந்தச் சுவிசேஷத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதிசாதாரணமான விசுவாசிகளுக்கும் அதிக உயர்வான அப்போஸ்தலனுக்கும் இவ்விஷயத்திலே வித்தியாசமில்லை. எம்பிரானால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலருங்கூடக் கல்வியறிவற்ற பேதமையான மீன்பிடிப்பவரே என்பதும் பொய்யன்றே.

**தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம் (அறிந்து விசுவாசிக்கிறோம்).** அறியுமுன் விசுவாசிக்கவேண்டுமோ? விசுவாசிக்குமுன் அறியவேண்டுமோ? ஒருவிதமாய்ப் பார்த்தால் இருவினாக்களுக்கும் ஆம் என்றே விடை பகரவேண்டும். ஏனெனில் நாம் விசுவாசிக்கவேண்டிய காரியத்தைப்பற்றி அற்பமேனும் அறியாதபடி நாம் ஒன்றை விசுவாசிக்க முடியாது. விசுவாசித்தாலன்றி அதைப்பற்றி முழுதுமறிதல் முடியாது. கிறிஸ்துவைப்பற்றி முழுதும் அறிந்தபின்னரே அவரை விசுவாசிக்கவேண்டும் எனச் சீஷர் தாமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் அவரை விசுவாசித்தபின் அவர் அவர்களைக் கைப்பிடித்து நடத்தி அவர்களுக்குப் போதித்தார். அதுபற்றியே பரி. பேதுரு அப்போஸ்தலன் தாங்கள் அவரை விசுவாசித்தபின்னரே அவரைப்பற்றியறிந்ததாகக் கூறுகிறார் (யோவா. 4. 69. நாங்கள் விசுவாசித்து நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று அறிகிறோம்.). எனவே, கிறிஸ்தவரல்லாதவர், கிறிஸ்துவை அறிக்கை பண்ணுமுன் கிறிஸ்துமார்க்கத்தைப்,

பற்றி முழுதும் அறிந்து தான் செய்யவேண்டுமெனக் காலந் தாழ்த்தலாகாது (நெடுநாட் கிறிஸ்தவரும், அதிபுத்திமான்களான கிறிஸ்தவருமே இன்னும் அவ்வறிவடையவில்லை.). ஆனால் முற்கூறப்பட்ட புறம்பானதும் உள்ளானதுமான சாக்ஷியங்கள் தங்கள் மனதில் பட்டவுடனே அதைப்பற்றிய அதிக அறிவை யடையத்தக்கதாய் அதை விசுவாசிக்கவேண்டும். ஆனால் நாமறிந்து விசுவாசிக்கிற அன்பு தேவன் நமக்குக் காட்டும் அன்பு மாத்திரமல்ல, அது நமக்குள்ளிருக்கிற தேவ அன்புமாம். முதலாவது புறம்பாகவிருந்து நமக்கு வெளியாக்கப்பட்ட அந்த அன்பு இப்பொழுது உள்ளாக நமது ஜீவியத்தின் பெருநாக்கமாகவே யாகிவிட்டது. அது நம்முடையதானதெனினும் அது தேவனுடையதாயிருக்கிறது. 'அறிந்து விசுவாசிக்கிற நம்மால் தேவன் தமது அன்பை உண்மையின் நிலைப்படுத்திக் கிரியை நடப்பிக்கச் செய்கிறார்' என்பார் காண்ட்லிஷ் வியாக்கியானி. எனவே, பரி. அப்போஸ்தலன் இந்த அன்பினால் மாத்திரம் நாம் தேவசாயலில் பங்குள்ளவர்களாகக்கூடும் என்பதைப் பலமாய் ஸ்தாபிக்குமாறு தேவன் அன்பாயிருக்கிறார் எனும் அப்பெரிய உண்மையைத் திரும்பவும் கூறுகிறார். சர்வ வியாபகரும் சர்வ ஞானமுடையவரும், ராஜாவும் நியாயாதிபதியுமாயிருக்கிற அவருடைய திவ்யலக்ஷணங்களில் நாம் பங்கடைதல் கூடாது எனினும் **அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.**

'நிலைத்திருத்தல்' என மும்முறை வழங்குதலானது நமது ஐக்யத்தின் ஊர்ஜிதத்தை ஸ்தாபிக்கிறது. அதனை நிலைகுலையச் செய்யவல்லது யாதுமில்லை. மற்றவையெல்லாம் நிலைகலங்கும் கடைசி நியாயத்தீர்ப்புநாளிலுங்கூட அது அசையாது.

'அன்பில் நிலைத்திருத்தல்' என்பது கடைசி இராப்போஜன காலத்தில் எம்பிரான் திருவாய்மலர்ந்தருளிய 'என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்' (யோவா. 15. 9, 10.) என்பதனை ஞாபகப்படுத்துவதாகுமன்றோ. அவ்விடத்தில் இந்நிலைத்தலா



னது, கொடி திராட்சச்செடியில் நிலைத்திருத்தலோடு உருவகப்படுத்தப்படுகிறது. இதே உண்மையை உறுப்புகள் சரீரத்தில் நிலைத்திருப்பதற்கும், கற்கள் தேவாலயத்தில் இசைந்திருத்தலுக்கும் உருவகமாக வேதத்திற் பிறவிடங்களில் கூறியிருக்கிறது.

நமது ஆத்துமா தேவனுடைய பாதுகாப்பிலிருக்கிறது, நமது ஜீவியத்தில் நமக்கு உதவிபுரிய அவர் நம்மோடிருக்கிறார் எனும் நினைவு இந்த ஆசீர்வாதத்தைப் பெறுதற்குக் காரணமாகிய மூன்று நிபந்தனைகளாம்-மூன்றெனினும் ஒருவாறு ஒன்றேயாகும்—அறிக்கை (4. 15.). கீழ்ப்படிதல். (3. 24.). அன்பு என்பவற்றைச் சாதிக்க நம்மை இடைவிடாது தூண்டுகிறதாயிருக்க வேண்டும். அன்றேல் அவிசுவாசிகளோடு அந்தகாரத்திலும் (யோவா. 12. 46.), அன்பற்றவரோடு மரணத்திலும் (3. 14.) நிலைத்திருக்கவேண்டும்.

**நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத் தக்கதாக அன்பு நம்மிடத்தில் (இவ்விதமாய்) பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்திலிருக்கிறோம்.**

இவ்வாக்கியம் .2. 28—ன் கருத்தைக் கூறி (வியாக்கியானம் பார்க்க.) நியாயத்தீர்ப்புநாளில் தேவனில் நிலைத்திருத்தலானது எப்படி தைரியத்தைக் கொடுக்கிறது என விஸ்தரிக்கிறது.

(இவ்விதமாய்)—அதாவது தேவன் நம்மில் நிலைத்திருத்தலும் நாம் தேவனில் நிலைத்திருத்தலும்—அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. இவ்வாறு பூரணப்படுவதன் நோக்கம் நியாயத்தீர்ப்புநாளில் நாம் தைரியமுடையரா யிருக்கும்படிக்கேயாம். அந்தத் தைரியத்திற்குக் காரணம் என்னையெனின் அவர் (கிறிஸ்து) இருக்கிறதுபோலவே நாமும் உலகிலிருக்கிறோம்.

நாம் தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் காட்டுகிற அன்பு பலவீனமான அனலற்ற பூரணப்படாத அன்பாயிருக்கவும், பரி. அப்போஸ்தலன் அன்பு நம்மில் பூரணப்பட்டது எனக்

கூறியதென்ன? தேவனில் நிலைத்திருப்பதால் நமது அன்பு பூரணப்படுகிற காலமாகிய அந்த நியாயத்தீர்ப்பின் நாளை மனதில் நினைந்தவராக இதைப் பேசுகிறார். அந்த நாளில் நாம் 'பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளாய் (எபி. 12, 23.) இருப்போம். அதுவரையில் தேவன் தம்முடைய அன்பில் நம்மை நிலைத்திருக்கச் செய்வார். அந்தநாள் வருமுன் எப்படியும் நமது அன்பைப் பூரணப்படுத்துவார் என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கவேண்டும்.

'அன்பு நம்மிடத்தில் பூரணப்படும்' என்கிறாரேயன்றி 'நமக்குள் பூரணப்படும்' எனக் கூறாதது கவனிக்கத்தக்கது. வெஸ்ற்காட் அத்தியட்சர் 'தேவனுடைய வல்லமையினால் அன்பு எளிதாய்ப் பூரணப்படுவதன்று. ஆனால் இதை நிறைவேற்றும் விஷயத்தில் தேவன் மனுஷனோடு சேர்ந்து முயற்சிக்கிறார்' என்பார்.

நம்முடைய நம்பிக்கை நாம் இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவைப்போலிருப்பதனாலுண்டாயிருக்கிறது. அவர் உலகை விட்டபோது பிதா தம்மில் அன்புகூர்ந்ததுபோல் அவர்களிலும் அன்புகூரும்படிக்கும், அவர் அவர்களிலிருக்கும்படிக்கும், தாம் பிதாவில் நிலைத்திருந்ததுபோல அவர்களும் அவரில் நிலைத்திருக்கிறவர்களாய்க் காக்கப்படும்படிக்கும், தமது சீஷர்களை உலகைவிட்டுப் பிரித்துவிடாதபடி தம்முடைய பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டார் (யோவா. 17.). (ஏனெனில் அவர்கள் செய்யவேண்டிய வேலை அவரிடமிருந்தது. சோதனை நிறைந்த நிலைமையில் அவர்கள் அன்பு பூரணப்படுத்தப்பட வேண்டியதிருந்தது) ('இவ்விஷயமாய் யோவா. 17. 11, 15, 18, 20, 21, 23. கவனிக்கத்தக்கன.' 'அவர்கள் **ஒருமைப்பாட்டில் பூரணப் படத்தக்கதாய்**'), நாம் கிறிஸ்துவைப்போலிருக்கிறோம். அதிகக் குறையுள்ளவராயிருந்தாலும் உண்மையில் அவரைப்போலவே யிருக்கிறோம். ஏனெனில் கிறிதுவின் ஜீவியத்தில் முக்கியமானதாயிருந்த அன்பில் நிலைத்திருந்த—தேவனில் நிலைத்



திருந்த—அந்த நிலைத்திருத்தலே நமது ஜீவியத்திலும் முக்கியமானதாயிருக்கிறது. நாம் நிலைத்திருந்தால் நம்முடைய சாயல் பூரணப்படும் (3. 2.). கடைசி நியாயத்தீர்ப்புநாளில் நியாயாதிபதியாயிருக்கப்போகிறவர் நம்மைத் தம்மைப்போலாக்கியவரும், நம்மில் அன்புகூருகிறவரும், நாம் அன்புகூருகிறவருமாகிய இரக்ஷகரே. ஆகையினால் நியாயத்தீர்ப்புநாளில் தைரியமாயிருக்கலாம். உலகத்தாரோடு நம்மையும் தண்டிக்கமாட்டார். (கொரி. 11. 32; ரோம். 8. 33.)

நியாயத்தீர்ப்பு நாளைப்பற்றிய நினைவு வந்தமாத்திரத்தில் பயத்தைப்பற்றியும் நினைவெழுகிறது. உடனே பரி. அப்போஸ்தலன் பயத்தைப்பற்றிப் பேசுகிறார். என்ன? **அன்பிலே பயமில்லை; (ஆனால்) பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; (ஏனெனில்) பயமானது வேதனையுள்ளது. பயப்படுகின்றவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.**

இங்கே பேசப்படுகிற பயமானது தன் தகப்பனுக்கு விசனமுண்டாகும் செய்கையைச் செய்துவிட்ட பிள்ளையின் பயமன்று. தன் எஜமானனது கோபத்தைக் கண்டஞ்சும் அடிமையின் பயமேயாகும் (ரோம. 8. 15.). முந்தின பயம் நம்மெல்லோருக்கும் இருக்கவேண்டுமெனக் கட்டளையிடப்படுகிறது (யோபு, 28. 28.); நீதி. 8. 13. பிலி. 2. 12. எபி. 5. 7.). அன்பிலே பயமில்லை. இதை உண்மையான ஓர் சுயப்பிரமாணமாகக் கூறுகிறாரேயன்றி இதனை ரூபிக்கிறதற்கு யாதும் கூறவில்லை. இப்பிரமாணத்தை எவ்வளவுக்கு அதிகமாய்ச் சிந்தனை செய்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய் அதன் உண்மை நமக்கு வெளிப்படும். இருவர் ஒருவரிலொருவர் பூரண அன்புடையவராயிருந்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் அற்பமும் பயப்படவேண்டியதில்லை. உடலுக்கு ஏதும் சேதம் நேரிட்டுவிடுமோவென வெழுகிற பயமானது வருத்தத்திற்கு அஞ்சாத அன்பின் பற்றினால் ஒழிந்துவிடும்; மாறிப்போமோவென வெழும் பயமானது மாறாத தன்மையுடைய அன்பின் இடையறா நிகழ்ச்

சியினால் நீங்கும்; மனவருத்த முண்டாய்விடுமோவென வெழும் பயமானது சந்தேகிக்கும் தன்மையல்லாத அன்பின் நம்பிக்கையில் அகன்றுவிடும்.

எவ்விடத்தில் பயமிருக்கிறதோ அவ்விடத்தில் அன்பு பூரணப்படவில்லை என்பது வெளியாம். அன்பின் இயற்கையே பயத்தை யகற்றுவதன்றோ, (மோசமான நிலைமைகளிலிருக்கும் தங்கள் பிள்ளைகளைக் காப்பதற்குத் தாய்மார் காட்டுகிற பயமின்மையும் தைரியமும் இதற்குச் சான்றாம்.) உண்மையான பூரண அன்பு பயத்தின் அடையாளம் அற்பமுமின்றித் துரத்திவிடும். பூரண அன்பு பயத்தை அகற்றும் என்பதற்கு எம்பிரான் இயேசுகிறிஸ்துவே திருஷ்டாந்தமாய் விளங்கினார். அவர் தமது பூரண அன்பு காரணமாகவே அற்பமும் பயமின்றி ஜீவித்து உயிர்விட்டார்.

உண்மையான சீஷரிடத்தில் அவர்கள் அன்பு பூரணப்பட்டுக்கொண்டேபோக பயம் தேய்ந்துகொண்டே போகுமெனினும் ஒருவாறு எல்லாரிடத்திலும் அற்பமாகவோ அதிகமாகவோ பயம் குடிகொண்டேயிருக்கிறது. இப்பயம் காரணமாக ஆத்துமாவில் நிகழ்வதொன்றுண்டு—'பயமானது வேதனையுள்ளது'—இந்த வேதனை ஆத்துமாவைத் திருத்தி அதனைச் சீரடையச்செய்யும்.

உலகத்தில் முதல் முதல் பயமுண்டானவிதத்தை ஆராய்ந்து இதைப்பற்றித் தெளிவாயறியலாம். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்தபோது பயம் என்பதே யாதென ஒரு சிறிதும் அறியாதிருந்தனர். தேவனுக்கு முன்பாகப் பாவமறியாத ஜெந்மிகளாய் நடந்து திரிந்தனர். ஏனெனில் அவர்களுக்கும் தேவனுக்கும் பூரண அன்பும் ஒற்றுமையுமிருந்தது. ஆனால் அவர்கள் பாவஞ்செய்தபோதோ பயந்து தங்களை ஒழித்துக் கொண்டார்கள் (ஆதி. 3. 8–10.). பூரண அன்பு போய்விட்டது. பயம் உட்பிரவேசித்தது. ஆதலினால் பாவம் காரணமாகவே பயம் உண்டாகிறதென்பது விளங்குகிறது. தங்களுக்கும் தேவ



னுக்கும் பிரிவினையுண்டாயிற்றென்றும், தாங்கள் தேவகோபத்துக்குப் பாத்திரராயினரென்றும் தங்களுக்குள்ளிருந்து சொல்லுகிற மனச்சாக்ஷியின் தொனியே இந்தப் பயமாகும். இவ்வகைப் பயமின்றி மனிதன் எக்காலத்திலும் தன் பாவத்துக்காகத் துக்கப்பட்டு மனந்திரும்பான். பாவம் காரணமாகத் தனக்குண்டாம். தண்டனையை முன்னுணர்த்தி, தேவனிலிருந்தும் பிரிந்து வசிப்பதின் பயங்கரத்தை விளக்குகிற அந்தத் திகிலைப்பற்றிய உணர்ச்சியே மனிதன் உத்தம மனஸ்தாபப்படும்படி அவனை ஏவுகிறது.

பயம் காரணமாக ஆத்துமாவில் விளைவதையும் வேதனை காரணமாக சரீரத்தில் நிகழ்வதையும் ஒப்பிட்டறிவோம். தேகத்தில் பூரண சுகமின்மையே தேகத்தில் வருத்தத்திற்குக் காரணம். எனினும் அந்த வருத்தமே நமது தேகத்தில் நாம் அடைந்த குறையைக் கண்டுபிடிக்கவும் அக்குறையை நிவிர்த்திக்கும் ஔஷதப்பிரயோகம் செய்யவும் நம்மைத் தூண்டுகிறது. அதைப்பற்றி நாம் 'ஆரோக்கியத்தில் வேதனையில்லை. ஆனால் பூரண சுகம் வருத்தத்தை யகற்றுகிறது. ஏனெனில் வருத்தம் வேதனையுள்ளது' எனக் கூறலாம். பாவி தான் ஒப்புரவாக்கப்பட்ட தேவனில் அன்புகூருமுன்னமே தான் அவருக்கு விரோதமாகச் செய்தபாவங் காரணமாக அவருக்குப் பயந்து ஆரம்பிக்கவேண்டும். படிப்படியாகப் போதிக்கப்பட்டது. எவ்வாறெனின்:– அன்பும் பயமுமின்றி யிருந்த ஸ்திதி; பயமின்றி அன்பிருந்த ஸ்திதி.

**அவர் முந்தி நம்மில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரில் அன்புகூருகிறோம்.**

பத்தாம் வாக்கியத்தில் தேவனுடைய அன்பு முதலில் வந்து நம்மைக் கண்டுபிடித்து, அன்புகூராதவரும் அன்புகூரப்படத் தகாதவருமாய் (ரோம. 5. 8.) இருந்த நம்மிதயத்திலும் அன்பை மூட்டியதென்று பார்த்தோம். நாம் மனந்திரும்பித் தேவனில் அன்புகூருகிறவரை நாம் தேவகோபத்திற்கு இலக்கானவர்கள் என்பதை நினைக்கவேண்டாம். அதன்பின் நாம்

அவரில் அன்புகூரும்போது அவரும் நம்மில் அன்புகூருகிறார். நாம் சிறுவராய் ஞானஸ்நானம் பெறும்போதே தேவனுடைய அன்பைப்பற்றி நமக்குக் கூறப்படுகிறது.

இவ்வார்த்தைகளிலிருந்து மற்றொரு அர்த்தமும் தொனிக்கிறது. நாம் தேவனுடைய அன்பினால் அன்புகூரவேண்டும். மற்றவர் நம்மில் அன்புகூரும்வரை காத்திருந்து நாமவரில் அன்புகூரவேண்டுமென விருக்கக்கூடாது. நாம் அன்புகூரக் கூடாதவரா யிருப்பவரிடத்திலும் நாமே முதலில் அன்புகூர வேண்டும். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.' (மத். 5. 44, 45.)

தேவன் நம்மீதுகொண்ட அன்பானது நாம் அதை உண்மையாய்த் தழுவிக்கொண்டால் நமது இதயத்திலும் அதேவிதமான அன்பை எழுப்பிவிடுகிறதெனப் பார்த்தோம். தேவன் அன்புகூருகிறதுபோலவே நாமும் அன்புகூருகிறோம். தேவன் நம்மில் அன்புகூர்ந்த பிரகாரமாகவும் அன்புகூருகிற பிரகாரமாகவும் அதேவிதமாய் நாம் அன்புகூரக் கூடியவர்கள் நமது சகோதரர்மாத்திரமே. நம்மில் அன்புகூர்ந்து நம்மை இரக்ஷித்து நம்மைத் தம்மோடு ஐக்யமாக்கிக்கொண்ட தேவன்மீது நாம் அன்புகூரவேண்டுவ தியற்கையே. அப்படிச் செய்வதும் எளிதே. அப்படிச் செய்கிறோமெனச் சொல்வதுமெளிதே. நம்மை அவ்விஷயத்தில் வஞ்சித்துக்கொள்ளுதலு மெளிதே. நாம் அவருடைய அன்புக்கு ஒரு சிறிதும் பாத்திரராயிராத சமயத்தில் தேவன் நம்மீது அன்புகூர்ந்தார் (எபே. 16. 1–6.). இப்பொ



ழுதும் அவர் காட்டிய அன்புக்கு அபாத்திரராகவும், அவர் மாட்டு நன்றியற்றவராகவும் இருக்குஞ்சமயத்தில் அவர் இன்னும் நம்மில் அன்புகூருகிறார். நம்முடைய அன்புக்கு அபாத்திரராயு நம்மிடத்து நன்றியற்றவராயு மிருப்பவரிடத்து நாம் காட்டுகிற அன்பையே அவர் நமக்குக் காட்டுகிற அன்புக்குக் கைம்மாறாக ஏற்றுக்கொள்ளுவார். நாம் இவ்வாறு அன்புகூராவிடின் நாம் தேவனில் அன்புகூருகிறோமெனக் கூறுதல் அவலமேயாம். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான்கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? இதற்கு வேறே வியாக்கியானம் வேண்டாம். இரக்கமற்ற வேலைக்காரனைப்பற்றிய உவமையே போதும். மத். 18. 23–36.

இவ்வாக்கியத்தின் பொருள் காணப்படாதவற்றின்மீது அன்புகூர்வதிலும் கண்டவற்றின்மீது அன்புகூருதல் எளிதெனவும், மனிதன்மீது அன்புகூருதல் சாதாரணமான ஓர் அற்ப விஷயம் எனவும், அதனையே நாம் அனுஷ்டியாவிடின் அதனிலும் அதியுன்னதமானதும் கடினமானதுமான காணக்கூடாதவற்றின்மீதுள்ள அன்பை அனுஷ்டித்தல் அசாத்தியம் எனவும் கூறுவர். இவ்வாறு பொருள் கொள்ளுதல் தவறாம். பரி. யோவான் அப்போஸ்தலன் சொல்வதெல்லாம் மனுஷர்மீது அன்புகூர்வது தேவனுடைய அன்பினால் விளைவதும் தேவனுடைய அன்பு நம்மிலிருப்பதை யறிதற்கான ஏதுவுமாம் என்பதே. ஒன்று மற்றொன்றினும் எளிதன்று. ஏனெனில் இரண்டும் ஓரே அன்பிலிருந்து விளைவன. இரண்டும் நம்மீதும் நமக்குள்ளுமிருக்கிற தேவ அன்பாலேயே விளையும். இவ்விஷயத்தில் நாம் எவ்வளவு எளிதாய் நம்மையே வஞ்சித்து மோசம் போகக் கூடுமென்பது பரிசேயர் எம்பிரான் விஷயத்தில் நடந்துகொண்டதினின்றும் வெளியாம். காணப்படாத தேவன் மீது அன்புகூர்ந்ததாய் அவர்கள் நினைந்தார்கள். ஆனால்

தேவன் மனிதனாய்ப் பூமியில் வந்தபோதோ அவனைப் பகைத்தார்கள். (யோவா. 15. 24.)

ஒருவன் தன் சகோதரனில் அன்புகூராதிருந்தால் மாத்திரம் அவன் தன் சகோதரனைப் பகைக்கிறான் எனக் கூறுவது நியாயமாகுமா? அநேகர் தங்கள் சகோதரர் வாழ்ந்தாலென் தாழ்ந்தாலென் என ஏனோதானோவென்றிருக்கின்றனர். அவர்கள் தங்கள் சகோதரனைத் தொண்டையில் நெறிப்பதில்லை. வேறெவ்வகையிலும் இடுக்கண் விளைப்பதுமில்லை. எனினும் இந்த வேண்டாவெறுப்பையும் தேவன் பகையெனவே கொள்வார். ஏனெனில் இவ்வாறு இருப்பதின் காரணம் சுயநலமேயாம். அந்த சுயநலத்திற்கு மாறாக தேவஅன்பினால் இருதயத்திலுண்டாகும் சுயநலப் பிரீதியின்மை யுண்டாகவில்லை. சகோதரனிடத்தில் அநுதாபமின்மையே ஏனோதானோ வென்றிருக்கச்செய்வது. 'அநுதாபமில்லாவிடத்தில் பகையிருப்பது மியற்கையன்றோ' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர். திடீரெனப் பகை காணப்படாதேபோயினும் அவ்விடத்தில் பகையிருப்பதுண்மை. சமயம் வாய்த்தவிடத்துப் பகை வெளியாம்.

பரி. யோவான் அப்போஸ்தலன் இனி நியாயதோரணையின்பேரில் அன்பைப்பற்றிப் பேசாமல் அது தேவகட்டளையாயிருக்கிறதினாலேயே அதைக் கூறுகிறார். **தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.** தேவனால் வெகு தெளிவாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற கற்பனையை அறிந்திருந்தும் அதை மீறி நடந்தால் அது அவரில் அன்புகூருதலாகாது. (யோவா. 14. 15.)

'அவராலே' என்பது பிதாவைக்குறிக்கும். அவர் பூர்வகாலங்களில் தமது தீர்க்கதரிசிகள் மூலமாகவும் இந்தப் பிற்காலத்தில் தமது குமாரனின் மூலமாகவும் ஏனைய கற்பனைகளையெல்லாம் ஒருசேரக் கைக்கொண்டு நிறைவேற்றுவதற்கொப்ப இந்த அன்பின் கற்பனையைக் கொடுத்திருக்கிறார். (உபா. 6. 5. லேவி. 19. 18. லூக். 10. 27, 28. யோவா. 13. 34.)

# எட்டாம் பிரிவு.

## விசுவாசம். 5. 1–12.

இந்நிருபத்தின் மூன்றாவது பாகம் விசுவாசத்தைப்பற்றியது. அப்பாகத்தையும் இருபிரிவாய் நோக்கலாம். (1) 5. 1–5. விசுவாசத்தின் ஜெயம். (2) 5. 6–12. விசுவாசத்தின் சாக்ஷி.

விசுவாசம் என்னும் பதம் இப்பன்னிரண்டு வாக்கியங்களுள் ஆறுதடவை வருகிறது ('விசுவாசிக்கிற எவனும்.' வாக். 1; 'நம்முடைய விசுவாசம்' வாக். 4; 'விசுவாசிக்கிறவன்' வாக். 5; 'விசுவாசமாயிருக்கிறவன்' வாக். 10; 'விசுவாசியாதவன்' வாக். 10; 'விசுவாசியாததினால்' வாக். 10.). இப்பன்னிரண்டுவாக்கியங்களும் நீங்கலாக இந்நிருபத்தின் மீதப்பாகங்களில் இப்பதம் மூன்றுதடவைமாத்திரம் வருகிறது. விசுவாசம் என்னும் இப்பதம் ஜெயம், சாட்சி எனும் இருபதங்களோடும் சேர்ந்து வந்து அவ்விரண்டையுங் கூறும் பாகங்களை இணைக்கிறது. 1–5. வாக்கியங்களில் ஜெயத்தை விசேஷித்துக் கூறுகிறார். அப்பாகத்தில் ஜெயம் எனும் வார்த்தை நாலுதடவை வருகிறது. 6–12. வாக்கியங்களில் சாட்சியைப்பற்றி விசேஷித்துக் கூறுகிறார். அப்பாகத்தில் சாட்சியென்பது பத்துத்தடவை வருகிறது.

### (1.) விசுவாசத்தின் ஜெயம். வாக். 1–5.

**(1) இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும், அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான். (2) நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளு**

**கிறேம். (3) (ஏனெனில்) நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. (4) (ஏனெனில்), தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயி(த்திரு)க்கிற ஜெயம். (5) இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி ஜெயிக்கிறவன் யார்?**

இப்பாகத்தில் கூறப்படும் கருத்து அடியில் வருமாறு:— ஒருவன் இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனாயிருப்பின் அதுவே அவன் தேவனால் பிறந்திருக்கிறான் என்பதற்கு அடையாளமாகும். அவன் இப்பொழுதும் தேவ ஜீவனில் பங்கு பெறுகிறான். இது உண்மையெனின் தன்னைப்போலவே தேவஜீவனில் பங்குபெறுகிற தன்னுடைய எல்லா சகோதரரிலும் அவன் இயல்பாகவே அன்புகூரவேண்டும் (வாக். 1.). ஒருவன் தன் சகோதரனிடத்தில் உண்மையாக அன்புகூருகிறானா அல்லது பெரும்பாலும் உலகில் நிகழ்வதாய சுயப்பிரயோஜனத்துக்காக அன்புகூருகிறானா எனும் விஷயத்தில் மனுஷன் அடிக்கடி தன்னை வஞ்சித்துக்கொள்ளுகிறான். இவ்வாறு வஞ்சனைக்கு இடமின்றித் தன் அன்பை உண்மையோ அன்றோ என்று பரீக்ஷித்தறிதற்கு ஒரு சாதனத்தையும் காட்டுகிறார். என்ன? எல்லாவற்றிலும் மேலாகவும் எல்லாவற்றிலும் அதிகமாகவும் ஒருவன் தேவனில் அன்புகூர்ந்து தன் சகோதரருடன் தான் நடந்துகொள்ளும் ஒவ்வோர் விஷயத்திலும் தேவ கற்பனைகளைக் கைக்கொள்ளப் பிரயாசிக்கிறானவென்பதே. (வாக். 2, 3.)

ஆவியின் ஜீவியம் அளிக்கப்பட்டதே தேவ கற்பனைகளைக் கைக்கொள்ளுதற்கும், அதனைக் கைக்கொள்ள விடாமல் தடுக்கிற உலகத்தை மேற்கொள்ளுகிறதற்கும் சத்துவத்தை நமக்குக் கொடுக்கும்பொருட்டே ஆவியின் ஜீவியம் அளிக்கப்பட்டதாம். விசுவாசத்தினாலாய இந்த ஜெயத்தை நம் தலைவராய எம்பிரான் கிறிஸ்துவின் மூலமாய் நாமிதன் முன்னமே யடைந்தாயிற்று (வாக். 4.). இந்த நம்பிக்கையுடையவனே உலகை ஜெயிப்பவன்.



**(வச். 1.) இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்.**

இப்பிரிவின் துவக்கத்துக்கும் முந்தின பிரிவின் முடிவுக்கும் சம்பந்தமிருக்கிறது. 4. 21-ல் தேவனில் அன்புகூருகிற எவனும் தன் சகோதரனிலும் அன்புகூரவேண்டுமெனக் கூறப்பட்டது. இப்பொழுது (5. 1.) பரி. அப்போஸ்தலன் முன் தேவனுடைய குடும்பத்தைச் சார்ந்த சகோதரரெனக் கூறியது கற்பிதமாய் உருவகப்படுத்திக் கூறிய தொன்றன்றெனவும் இயற்கையிலேவே நமது புதுப்பிறப்பினால் உண்டானதோர் பாந்தவம் எனவும் நமக்கு ஞாபகப்படுத்துகிறார். நாம் தேவனால் பிறந்தவர். அவ்வாறாகவே ஏனைய மெய்க்கிறிஸ்தவரும் தேவனால் பிறந்தவர். எனவே நாமெல்லோரும் ஏககுடும்பத்தினர். ஆதலின் 'பிறப்பித்தவரிடத்தில்' அன்புகூருதலேயன்றி 'அவரால் பிறப்பிக்கப்பட்ட' நம் து சகோதரரிலும் அன்புகூரக் கடப்பாடுடையோம். இது தேவனால் கற்பிக்கப்பட்ட ஓர் கட்டளையென்றுமாத்திரம் நாம் நினைக்கலாகாது. குடும்பத்தில் சகோதரருக்குள் அன்பு காணப்படவேண்டும் எனும் இயற்கைப் பிரமாணமாகும்.

கிறிஸ்துசமயம் மனிதரைத் தனித்தனியேமாத்திரம் நோக்குவதன்று. ஒவ்வொருவனும் தனக்காகவே இரக்ஷிக்கப்படவேண்டுமென்பதையும், எல்லாரையும் ஒவ்வொருவராக இரக்ஷிக்கவேண்டுமென்பதையுமே தனக்குப் பெருநோக்காக உடையதன்று. மனிதரது கூட்டுறவை விர்த்திசெய்யும் மதமேயாகும். உலகின் நாலுதிசையிலுமுள்ளோர் யாவரையும் சகோதர பாந்துவமுடையராக்கு மியல்புடையது. உலகில் எண்ணிறந்த குடும்பங்களுள. குடும்பத்தினர் ஒருவர்மீதொருவர் அன்புடனும் ஒழுகுகின்றார். எனினும் உலகமுழுதுமே எம்பிரானைத் தலையாகவுடைய ஓர் குடும்பமாகவிருக்கும் அப்பெருங் குடும்

*பத்தோடு இவை ஒப்பிடத்தக்கனவேயோ? அன்று. கிறிஸ்து சபையே இச்சகோதரக் கூட்டம். உலகினர் பெரும்பாலார் இதற்கொப்ப நடந்துகொள்கின்றாரில்லை. இதுவும் பரிதாபமே! கள்ளச் சகோதரர் இங்குமங்கும் காணப்படுதலும் இயல்பாயது. இத்தகையார் தங்களிடத்துக் கிறிஸ்துவின் ஜீவனில்லாதிருப்பவும் தங்களைக் கிறிஸ்தவரெனப் பிதற்றி நடித்து ‘கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராய்’ சபையில் பிரிவினையையும் பகையையும் விரோதத்தையும் விளைக்கின்றனர். உண்மையான விசுவாசிகளும் இருக்கின்றனர். ஆனால் ‘ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்’ எனும் எம்பிரானது விசேஷித்த கற்பனையின் தன்மையை இவ்விசுவாசிகளும் நன்கறியார், அறிந்தமட்டில் அவர்கள் அதனை அனுஷ்டித்தலும் சுருக்கமே. இவ்வாறாக அப்பெருங் குடும்பத்துட் காணப்படும் குறைகள் பல. எனினும் நாம் எல்லோரும் முயற்சிக்கவேண்டும். அப்பெரிய குடும்பம் உண்மையில் உற்பத்தியாய் நிலைபெறும்பொருட்டு நாம் முயற்சித்தால் சித்தியாகும். உண்மையான சகோதரர் பூரணப்பட்டு, கள்ளச் சகோதரர் விலக்கப்படும்போது பிதாவின் வீட்டில் ஏக குடும்பம் நிலைபெற்று நீங்காது நிற்கும்.*

**இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்;** *தேவனால் பிறந்திருப்பதை அறிதற்கான மூன்றாவது அடையாளத்தைப் பரி. அப்போஸ்தலன் இங்ஙனம் கூறுகிறார்.*

(1) *நீதியைச் செய்கிறவனெவனும் அவரால் பிறந்திருக்கிறான்.* 1 *யோவா.* 2. 20.

(2) *அன்புள்ள எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.* 1 *யோவா.* 4–7.

(3) *இயேசுவை....விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.* 1 *யோவா.* 5. 1.

**பிறந்திருக்கிறான்** *என்பதன் மூலபதம் பிறப்பினால் அளிக்கப்படும் ஜீவன் தொடர்ந்தேர்ச்சியாய்ச் செல்வதைக் குறிக்*



*கும். மேலே கூறப்பட்ட மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டன. சாதாரணமாய் ஒரு கொள்கையை ஒப்புக்கொள்வதினும் இயேசுதான் கிறிஸ்துவென விசுவாசித்தல் மேலானது. இவ்விசுவாசத்தினால் இயேசுவையே மனிதனாகவும் தெய்வமாகவும் நம்பி அவரே நமது இரக்ஷகர் (இயேசு), அவரே நமது இராஜா (கிறிஸ்து), அவரே நமது பரிசுத்த ஜீவியத்திற்கு வேண்டிய சத்துவத்தையளிப்பவர் என அவரை ஏற்றுக்கொள்ளுகிறோம். அன்பற்ற விசுவாசமானது பரி. அகுஸ்தீன் என்பவர் சொல்வதொப்பப் பிசாசின் விசுவாசமேயாம். (யாக். 2. 19.)*

**(வாக். 2.) நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம்.**

*தான் உண்மையில் தேவனிடத்தில் அன்புகூருகிறானோவெனத் தன்னைப் பரீக்ஷித்தறிய விரும்பிய ஒருவன் தன் சகோதரனில் அன்புகூருகிறானோவென அறியவேண்டுமெனவும் அங்ஙனம் அன்பில்லாமலிருப்பனேல் அவன் தேவனிடத்தில் உண்மையான அன்புடையனல்லன் என்வும் கூறினர் (4. 20–21.). இப்பொழுது தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறானோவென அறிய விரும்புமொருவன் தான் தேவனிடத்தில் அன்புடையனாதலை யறியவேண்டுமென்கிறார். இது விபரீத தர்க்கமாய், பீஜாங்குர நியாயமாய்த் தோன்றும் (பீஜாங்குர நியாயம் கோழியினின்று முட்டையும், முட்டையினின்றும் கோழியும் வந்ததென மாறிமாறிக் கூறுதல்). இவ்விடத்தில் அது அப்படியன்று. ஏனெனில் தேவனில் அன்புகூருதல், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல், சகோதரரிடத்தில் அன்புகூருதல், ஆகிய மூன்றும் அதிக நெருங்கிய சம்பந்தமுடையன. இவற்றில் ஒன்றை நிறைவேற்றல் உண்மையெனின் பிறவற்றையும் நிறைவேற்றல் உண்மை என்பது பெறப்படும்.*

*நான் என் சகோதரனில் அன்புகூருகிறேன் என்பதையும் பரீக்ஷித்து அறியவேண்டிய அவசியமுண்டோவெனின்*

உண்டு. ஏனெனில் தேவ அன்பினால் பிறவாமல், சுயநலத்தையே காரணமாகக்கொண்டும் உலகினர் அன்பு பாராட்டல் வெளிப்படை.

நம்மில் அன்புடையானை நாமும் அன்புடனேக்கல் எளிதாம்—நமக்கு இலாபமும் இன்பமும் அளிப்பவரிடத்தில் நாம் அன்புடனிருத்தல் வருத்தமன்று. உலக அன்பே மனிதரோடு பாராட்டும் சிநேகத்துவத்தினால் விளையும் இன்பத்தின் பரத்தது. இத்தகைய அன்புடையார் தேவனையே எல்லாவற்றினும் அதிகமாக நேசித்தலையும், பரமராஜ்யத்தையும், பாவத்தின் மீது பகையையும், தாம் அன்புகொண்டாரின் அழியாத வாழ்க்கையையும் பொருட்படுத்தார். இது பலவீனமான சாதாரண அன்பு. இவ்வன்புடையார் தாம் அன்புகூர்ந்தவர் தேவகட்டளைக்கு மாறுகக் கட்டளையிடுவாரேல் அக்கட்டளையை மறுத்துரையார். பாவத்தைப் பகையார். தமது சிநேகிதர் தகாத வழி நடந்தவிடத்து மேற்சென்றிடித்து அவரை நல்வழிப்படுத்தார். இத்தகைய அன்பும் உண்மையான அன்பேயோ? அன்று. இதுபற்றியே தேவனிடத்தில் நாம் கொண்ட அன்பை மனிதரிடத்து நமக்குள் அன்பினால் அறியலாகுமெனக் கூறியவாறே மனிதரிடத்துக்கொண்ட அன்பையும் தேவனிடத்துக்காட்டும் அன்பினாலறியலாகும் என்றார்.

(வாக். 3.) **(ஏனெனில்) நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாம்** (2 யோவா. 6.). எம்பிரானும் இதனைத் திரும்பத்திரும்பக் கூறினர்:—'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.' யோவா. 14. 21. 'என் கற்பனைகளை ஏற்றுக்கொண்டு அவைகளின்படி நடக்கிறவன் என்னில் அன்பாயிருக்கிறான்.' நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.' யோவா. 15. 10. நாம் தேவகற்பனையை மீறும்போதெல்லாம், தேவனிலும் அதிகமாக நம்மிலே அன்புகூருகிறோமென்பதும், தேவனிலும் அதிகமாக நமது சிநேகிதரில் அன்புகூருகிறோமென்பதும், தேவனுடைய கட்டளையை மீறியேனும் நம்முடையவும், சிநேகிதருடையவும் காரியங்களையே நாடுகிறோமென்பதும் வெளியாகும். எவ்வளவுக்கதிகமாய் அவர் கற்பனைகளைப் பரிபாலிக்கிறோமோ அவ்வளவுக்கதிகம் அவரையே கனம்பண்ணுகிறோமென்பது போதரும். அவரை நேசிக்கும் அளவுக்கு அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம்.



**அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.** உலக மக்களுக்கு அவை பாரமும் வருத்தமுமானவைகளே. ஏனெனில் அவற்றின்படி நடப்பவர் பாவத்துக்கு இடங்கொடுக்க முடியாது. அன்றியும் அவற்றைக் கைக்கொள்ளுதற்கு இடையறா முயற்சியும், சுயவெறுப்பும், சிக்ஷையும், அடக்கமும் அவசியம். உலகத்தோடொட்ட ஒழுக முடியாது. பலவேளைகளில் உலகமக்களின் பழிப்புக்கும் இழிப்புக்கும் ஆட்பட நேரிடும். கஷ்ட நிஷ்டூரங்களையும் அனுபவிக்குமாறு நேரும். பொருள் நஷ்டத்திற்கும் இடனாம். தேவகற்பனைக் கடங்காமல் தத்தமிஷ்டமே பெரிதென நடக்கும் மனுஷரை நாம் பார்க்கும்போதும், உலகம் தேவகற்பனைக்கு விரோதமாக நடக்கும்போதும் அவற்றைப்போல் நடக்குமாறு நம்மிருதயத்திலும் எண்ணம் உதிக்கின்றது. அச்சமயத்திற்றான் தேவகற்பனை பாரமாகத் தோற்றும். தேவனுடைய பிள்ளைகளுக்கோ அவை பாரமானவையல்ல. **(ஏனெனில்) தேவனால் பிறந்ததெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்.**

கட்டளையுடனேயே ஜெயமும், ஜெயமடையவேண்டிய ஜீவியத்தின் வல்லமையும் வந்துவிடுகிறது. 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு' (பிலி. 4. 13.). தேவகற்பனைகள் பாரமானவையல்ல. ஏனெனில் அவை அன்பினால் கொடுக்கப்பட்ட கற்பனைகள். அன்றியும் தன்னை நேசிக்கிற பிதாவுக்காகப் பிள்ளைகள் அதிக பாரமும் கடினமுமானவைகளைச் சாதித்தல் வெளிப்படையன்றோ. இக்கற்பனைகள் நம்மை அடக்கிச் சிக்ஷிப்பி

னும் அவற்றைப் பிரீதியோடே ஏற்றுக்கொள்ளுவோம். ஏனெனில் அவை நாம் தேவனில் நிலைத்திருக்கும்படியும் அவருடைய அன்பினின்றும் பிரிந்துபோகாதபடியும் நம்மைக் காத்துக்கொள்ளுகின்றன. நாம் அக்கற்பனைகளைக் கைக்கொள்ளுவதால், பாவசந்தோஷங்களினால் நாம் அடையக்கூடாத ஒருவித மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் அடைகிறோம். 'அவர் வழிகளெல்லாம் மகிழ்ச்சியும் அவர் பாதைகளெல்லாம் சமாதானமுமானவைகள்.' பரி. யோவான் இவ்வார்த்தைகளை எழுதினபோது எம்பிரான் மத். 11. 30–ல் கூறியிருக்கிற 'என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது' எனும் வாக்கியத்தை நினைத்துக்கொண்டார்போலும்.

தேவனுடைய கற்பனைகள் பிரமாணங்கள்மாத்திரம் இலகுவாயும் பாரமற்றவையாயும் இருக்கின்றனவென்பதல்ல. நாம் சகித்துப் பொறுத்துக்கொள்ளுமாறு அவர் கற்பிக்கிற பாடுகளும் பாரமற்றவையே. நாம் எந்த அன்பினால் உலகை மேற்கொண்டோமோ அதே அன்பினால் அவர் நம்மேல் சுமத்துகிற சிலுவைகளையும் பயமின்றித் தாங்கி மேற்கொள்ளலாம். காண்ட்லிஷ் என்பவர் இதைப்பற்றி வெகு நன்றாய் எழுதுகிறார். 'நான் செய்யவும் அனுபவிக்கவும் வேண்டுமெனத் தேவரீர் கட்டளையிடுவன எவையோ அவை எனக்கு மகிழ்ச்சியையே விளைக்கும் கட்டளையிடுபவர் நீரேயாதலின். எனினும் நான் அழுகையும் கண்ணீரும்பெருமூச்சுமின்றி அவற்றைச்செய்தோ அனுபவித்தோ முடித்துவிடுவேன் எனக் கூறத் துணியேன். உம்முடைய பிரியமுள்ள குமாரனுங்கூட பெருமூச்சு, கண்ணீர், அழுகை இவற்றோடுதான் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றித் தீர்த்தார். எனினும் உமது கிருபையினால் உமது கற்பனைகளையும் கட்டளைகளையும் உமது குமாரனோடு ஒன்றாய் நிறைவேற்றுவேன். உமக்குக் கீழ்ப்படிந்து பாவங்களுக்காகத் தமது ஜீவனையும் கொடுக்குமாறெழுந்த உமது கட்டளையினும் எனக்குக் கொடுக்கும் எக்கட்டளையும் அதிகப் பாரமாகவும் வருத்தமாகவுமிராது.'



பரி. யோவான் அப்போஸ்தலன் இந்நிருபத்தில் ஜெயத்தைப்பற்றி முதல்தடவையாகக் கூறும்போதே ஜெயத்தையடையும் மனிதனைப்பற்றிப் பேசாமல் ஜெயத்தையளிக்கும் வல்லமையைப்பற்றி அதாவது விசுவாசியில் நிலைத்திருக்கிற தேவனுடைய வித்தைப்—**தேவனால் பிறப்பதெல்லாம்**—பற்றி பேசுகிறார். இவ்விஷயம் கவனிக்கத்தக்கது (3. 9. வியாக்கியானம் பார்க்க.). ஜெயிக்கிறது மனுஷனல்ல. ஆனால் மனுஷனிலுள்ள தேவவல்லமையே ஜெயிக்கிறது (1 கொரி 15. 57. ரோம. 8. 37.). ஆகையினால் மிகப்பெரிய சோதனையும் துன்பமும் நேரிட்டகாலத்து நாம் அஞ்சுவதற்கு ஏதுவில்லை ஏனெனில் எப்படியும் ஜெயம் கிடைப்பது திண்ணம்.

**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயி(த்திரு)க்கிற ஜெயம்.** பரி. யோவான் ஜெயம் கிடைத்துவிட்டதாகக் கூறுவதினால் அதிக தைரியமாய்ப் பேசுகிறார். ஒவ்வொரு விசுவாசிக்கும் விசுவாசத்தினால் உண்டாயதும் தேவனிடத்திலிருந்துவந்த ஜீவனால் பெற்றதுமான வல்லமையுண்டு. அந்த வல்லமை எப்படியும் ஜெயத்தை யளிக்கும். தேவன்விஷயத்தில் அதே வல்லமை இதன் முன்னரே ஜெயம் கொண்டுவிட்டது. விசுவாசிகளின் கூட்டமாகிய தேவனுடைய சபையிலும் இந்த வல்லமையிருக்கிறது. கடைசியில் அது உலகத்தை மேற்கொள்ளும். பரி. யோவான் இந்நிருபத்தை எழுதிய காலத்தில் சபையானது மிகவும் அற்பமானதாகவும் பலராலும் மிகவும் இழிவா யெண்ணப்பட்டதாகவுமிருந்தது. அடிமைகளும் இழிந்த ஜாதியாரும் தரித்திரருமே கிறிஸ்தவராயிருந்தனர். கிறிஸ்தசனத்துக்கு இருக்கவேண்டிய பல லக்ஷணங்களில் குறையுடையராகவுமிருந்தனர். கள்ளப்போதகரும் சபைக்குத் தீங்கு விளைத்துவந்தனர். ஆனால் சபைக்கு வெளியான உலகமோ பலமும், ஐக்யமும் எதிர்க்கமுடியாத வல்லமையுமுடைய ரோமராஜ்யம். ஐஸ்வர்யமும், பலமும், நாகரீகமும் மிகுத்திருந்தது. அப்படியிருந்தும் அப்போஸ்தலன் சபை உலகத்தை மேற்கொள்ளுமென்று தீர்க்கதரிசனமாகக் கூறியதன்றியும்,

ஜெயித்துவிட்டதாகவும் திட்டமாகக் கூறினர். மேலும் அவர் கூறுவதிலிருந்து நம்மிலுள்ள சகல தீமைகளும், உலகத்திலுள்ள சகல கேடுகளும், தேவனுக்கு விரோதமாகவிருக்கும் சகல பொல்லாத தப்பறையான கொள்கைகளும் மேற்கொள்ளப்படுமென்றும் தேவன் சம்பந்தப்பட்டவளவில் அவற்றையெல்லாம் மேற்கொண்டாயிற்றென்று கூறியதாகவும் விளங்குகிறது.

தற்காலத்தில் ஆழ்ந்து யோசிக்கும் திறமுடையார் பலரும் (கர்த்தர் சற்று தாமதித்து வருவரேல்) உலகமுழுவதும் கூடிய சீக்கிரம் பேரளவிலேனும் கிறிஸ்தவராய்விடுவர் என அபிப்பிராயங் கொள்கின்றனர். ஆனாலும் புறம்பாகக் காணப்படும் சபை அதிக மோசமான நிலைமையிலிருக்கிறது. தேவகற்பனைகள் பாரமானவைகளெனச் சபை கொள்வதுபோல் தோற்றுகிறது. ஒன்றில் உலகம் நம்மை மேற்கொள்ளவேண்டும்; அன்றேல் நாம் உலகை மேற்கொள்ளவேண்டும். நாம் உலகை மேற்கொள்ளுவதற்கு ஒரேவகை யிருக்கிறது. அவ்வகைதான் விசுவாசம். தேவனுடைய பிள்ளைகளாகிய விசுவாசிகளுடைய விசுவாசமெல்லாம் ஒன்றிலே அடங்கியிருக்கிறது. அதாவது இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்யவேண்டும். அதினால் உலகத்தை ஜெயித்தவராகிய (யோவா. 16. 33.) அந்தப் பெரிய ஜெயவீரனோடு நம்மையும் சேர்த்துக்கொள்ளுகிறோம். அவர் பிதாவின்மீது இடைவிடாது கொண்டிருந்த விசுவாசத்தினால் மேற்கொண்டார். நாம் அடையும் ஜெயம் அவர் ஜெயித்ததின் பயனே. 'எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும் அவர் ஆளுகை செய்யவேண்டியது. (1 கொரி. 15. 25.)

**(வாக். 5.) இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?**

கடைசியாக ஜெயங்கிடைத்தல் திண்ணம். ஆனால் இப்பொழுது நடக்கிற கடினமான போரின் மத்தியில் உலகத்தை மேற்கொள்ளுகிறவராகக் காணப்படுபவர் யாவர்? உலகத்தின் கொடூரங்களுக்கு அஞ்சாமலும், உலகத்தின் ஆன்ற மதிப்பையும் 



பெருமையையும் பொருட்படுத்தாமலும் உலகின் வஞ்சகங்களால் ஏமாற்றப்படாமலு மிருப்பவர் யாவர்? வரவர உலகத்தை உள்ளாக மேற்கொண்டு உலகத்தோடொட்டா தொழுகலில் விர்த்தியடைந்து வருபவர் யாவர்? உலகத்தின் தீங்குகளுக்கும் தாறுமாறுகளுக்கும் எதிர்த்துப் போர்செய்து தேவஒளியினால் உலகின் அந்தகாரத்தையும் துக்காந்தகாரத்தையும் ஊடுருவிச் சென்று வெளியாகவும் உலகத்தை ஜெயிக்கிறவர் யாவர்? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களே யன்றோ? உலகம் எவருக்குச் செவிகொடுத்துக் கடைசியில் எவ்வா ஏற்றுக்கொள்ளுகிறது? விசுவாசிகளையே யன்றோ?

அவரை யறிந்திருந்தும் அவரினின்றும் விலகிப்போனவர் உலகத்தை மேற்கொள்ள வலியற்றவரானார். உலகம் தோன்றியதுமுதல் இதுவரையில் ஜீவித்தவர்களுக்குள்ளே உலகத்தில் எல்லோரினும் உயர்ந்தவராயிருந்தவர் ஒருவரே. அவர் இயேசுவே. அவர் உலகத்தவர் அல்ல. ஆனால் தேவனுடையவர். அவரிற் சார்ந்திருக்கிறவன் அவரைப்போல உலகத்தின்மேலாய் உயர்ந்திருப்பான். அவரிற் சேர்ந்திருக்கிறவனோ உலகமாம்; சாகரத்தில் அமிழ்ந்தாக் கெட்டுப்போகிறான் என்கிறார் ஸ்லேற்றர் வியாக்கியானி.

### (2.) விசுவாசத்தின் சாக்ஷி. வாக். 6–12.

**(6) இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, (அனல்) ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். (7) ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர். (8) (ஏனென்றால்) சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கின்றது (9) நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாக (பெரிதா) யிருக்கிறது; தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே (தேவன் தமது குமாரனைக்குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார் என்பதே தேவனுடைய சாட்சியாயிருக்கி**

றது.). (10) தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான். தேவனை விசுவாசியாதவனோ தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால் அவரைப் பொய்யரா(க்கியிருக்கிறான்)க்குகிறான். (11) தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார் (தந்தார்.). அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். (12) குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

இயேசுவைத் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று விசுவாசிப்பதே உலகத்தை மேற்கொள்ளுவதற்கான ஒரே ஒரு வல்லமையாயிருப்பின் அந்தக் காரியத்தை ஸ்தாபிப்பதற்குப் பலத்த சாட்சியங்களிருக்கவேண்டும். அப்படியிருக்குமாயின் அதை முழுவதும் நம்பி அதின்படி செய்யலாம். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதான் என்பதற்குப் போந்த சாட்சியமாகக் கூடியதென்ன? கற்பிதமான கதைகளும், மனோபாவனையாகக் கருதிக்கொள்ளக் கூடியனவும், உண்மையென்று ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகா. சரித்திரவாயிலாக உண்மையென ஸ்தாபிக்கப்பட்ட விஷயமாக விருக்கவேண்டும். மனதினால் நினைக்கக்கூடிய மனிதனுடைய ஆத்துமதாகத்தை நிவிர்த்திக்கக் கூடியவரென மனதும் சாட்சி பகரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்தன் இருதயத்தில் இவ்விதமாக இருக்கிறதென்று புத்தி பூர்வமாக நினைந்தறியவேண்டும். எல்லாவற்றினும் மேலாய் மனிதருடைய சாட்சியன்று தேவனுடைய சாட்சியும் அவசியம்.

இவ்வாறான சாட்சியை மனிதன் எதிர்பார்ப்பதும் இயற்கையே. அதனைத் திருப்திசெய்யுமாறே பரி. யோவான் அப்போஸ்தலன் விசுவாசத்தின் சாட்சியைப்பற்றி இப்பாகத்தில் வரைகிறார். இவரைச் சாட்சியப்போஸ்தலன் எனக் கூறினும் பொருந்தும். ஏனெனில் அவர் தமது சுவிசேஷத்தைச் சாட்சியைப்பற்றிக் கூறி யாரம்பித்து அதனைப்பற்றிக் கூறியே முடிக்



கிறார். யோவா. 1. 15, 19, 32, 34. யோவா. 19. 35; 21. 24. அவ்வாறாகவே தமக்கு வெளிப்படுத்தின விசேஷத்தையும் ஆரம்பித்து முடிக்கிறார். வெளி. 1. 2; 22. 16, 18, 20. தமது நிருபத்தையு மப்படியே. 1 யோவா. 1. 2; 5. 6–12.

முன்னரே கூறியாங்கு சாட்சியென்பது இப்பாகத்தில் பத்துமுறை வருகிறது. இதை ஆராய்ந்தால் பரி. யோவானால் ஸ்தாபிக்கப்படுகிற சாட்சியானது முற்றிலுமாய் விசுவாசித்துப் பற்றிக்கொள்வதற் கேதுவானதென விளங்கும். நாம் விசுவாசிப்பதற்கேதுவாய் சரித்திரவாயிலாகவும் அது ஸ்தாபிக்கப்படுகிறது என்ன? 'இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்' (வாக். 6.). ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் என்பது அவர் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றுச் சிலுவையில் இரத்தம் சிந்தி யுயிர்விட்டதைக் குறிக்கும். அதைப்பற்றிப் பின்னர் பார்ப்போம். இதைப்பற்றி 'ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்' (வாக். 7.). இங்கு ஆவியானவர் என்பது அவரையே குறியாமல் அவருடைய தொழிலைக் குறிக்கும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவரது பரமேறுதல், பரிசுத்தஆவியை அனுப்புதல், பின்னும் பரிசுத்தஆவி உலகில் பல கிரித்தியங்களைச் செய்தல் ஆகிய இவை யாவும் உண்மையெனச் சரித்திரவாயிலாக அறிகிறோம். எனவே எக்காலத்திற்குமே மூன்று சாட்சிகளிருக்கின்றன—ஆவி, ஜலம், இரத்தம் (வாக். 8.). இவை மனிதனால் மறுக்கக்கூடாத் சாட்சிகளாயுமிருக்கின்றன.—ஏனெனில் ஆவியானவர் சத்தியம் (வாக். 7.). இக்காலத்தினும் சபையில் ஞானஸ்நானம், இராப்போசனம் இவற்றில் ஜலமும், இரத்தமும் அறிகுறியாய் மனிதனுடைய இருதயத்தைச் சுத்திகரித்து உற்சாகப்படுத்திப் பரிசுத்தஆவியின் சத்தியத்தை விளக்குகின்றன. மேலும் இது மனிதசாட்சி மாத்திரமன்று. தேவனுடையவும் சாட்சியாம் (வாக். 9.). இதை ஏற்றுக்கொள்ளுகிறவனுடைய மனதையும் கவனத்தையும் கவர்ந்துகொள்ளுகிற சாட்சியாம். இதனை ஏற்றுக்கொள்ளாதவனோ தேவனைப் பொய் (வாக். 10.). இதனை ஏற்றுக்கொள்ளாவிடின் மனித யனாக்குகிறான். இதை ஒருவன் ஏற்றுக்

ஜாதியின் வரலாறும், எம்பிரானது ஜீவியமும், கிரியையும்
அவை காரணமாய்ச் சபையானது உலகில் ஸ்தாபிக்கப்பட்ட
தும் ஆகியவெல்லாம் பொய்யெனவும், இவையெல்லாம் உல
கினரை அவரது முக்கியவிஷயமாகிய ஆத்துமகாரியத்தில் வஞ்
சித்துவிடுமாறு தேவன் செய்த சூழ்ச்சியெனவும் முடியும். தெய்
வமே பொய்யரெனில் இவ்வுலகினில் மெய்யென விளங்குவது
மொன்றுண்டாமோ? (வாக். 10.) தெய்வத்தின் சாட்சியே இவ்
விடத்துப் பூரணமாகக் கூறப்படுகிறது (வாக். 11.). என்ன?
'தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்(தார்)திருக்கிறார். அந்த
ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே.' அதி
லிருந்து ஒவ்வொருவனும் அடையக்கூடியதை அறிந்துகொள்
ளலாம்.

(வாக். 6.) இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும்
இரத்தத்தினாலும் வந்தவர். ஜலத்தி(னா)லே மாத்திரமல்ல,
(ஆனால்) ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். இவ்
வாக்கியத்திற்கும் இதற்கு முந்திய வாக்கியத்திற்கும் நெருங்கிய
சம்பந்தமிருக்கிறது. எவரின்மேலுள்ள விசுவாசம் உலகத்தை
மேற்கொள்ளச் செய்கிறதோ அந்த தேவகுமாரன் ஜலத்தினா
லும் இரத்தத்தினாலும் வந்தவராகச் சரித்திரவாயிலாக ஸ்தாபிக்
கப்படுகிற இயேசுகிறிஸ்துவே. இவ்வாக்கியமும் இதனையடுத்
தவையும் சற்றுக் கடினமானவை. அவற்றுக்கு வெவ்வேறான
வர் வெவ்வேறான வியாக்கியானங் கற்பிப்பார். எம்பிரான் ஜலத்
தினாலும் இரத்தத்தினாலும் போந்ததெங்ஙனம்? வந்தவர் என்ப
தனை நோக்குமிடத்து இதன் விடை வெளியாம். இப்பதம் விசே
ஷித்தது. எம்பிரானது காலத்திருந்த யூதர் மேசியாவைக்குறித்து
'வரப்போகிறவர்' எனப் பேசினர். ஸ்நானகன் 'வருகிறவர் நீர்
தானோ?' (லூக். 7. 19.) எனக் கேட்டனன். 'மெய்யாகவே இவர்
உலகில் வருகிறவரான தீர்க்கதரிசி' என்றார்கள் யூதர் (யோவா.
6. 14.). 'நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய
கிறிஸ்து' என்றனள் மார்த்தாள் (யோவா. 11. 27.). 'வருகிறவர்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர்' என யூதரும் சாற்றினர். மூலபாஷை



யில் இவ்விடங்களிலெல்லாம் 'வருகிறவர் வருகிறவர்' எனவே
கூறப்பட்டிருக்கிறது. பரி. யோவான் அப்போஸ்தலன் இந்
நிருபத்தை யெழுதிய காலத்திலும்கூட 'வருகிறவர்' வருவதற்
காக யூதர்கள் காத்திருந்ததுண்டு. கிறிஸ்தவன் அவ்வாறு காத்
திருக்கவேண்டாம். ஏனெனில் எம்பிரான் வந்தாயிற்று. அது
பற்றியே பரி. அப்போஸ்தலன் 'வருகிறவர்' என உரையாது
'வந்தவர்' எனக் கூறினர்.

எனவே 'வந்தவர்' என்பது மேசியாவாக வந்தவரைக் குறிக்க
வேண்டும். அது கடந்தகால விஷயத்தைக் கூறுவது. எனவே
இயேசுபெருமான் மேசியாவென வெளிப்படுதற்குச் சம்பந்த
மான ஜலத்தையும் இரத்தத்தையும் கவனிக்கவேண்டியதாகிறது.
அவற்றையே சாட்சியங்களாகக் கூறுகிறார். ஆதலின் அவை
அவரே கிறிஸ்து என்பதனை ஸ்தாபித்தற்கான ஏதுக்களாக
வேண்டும். அவரையே மேசியாவென ஸ்தாபித்தற்கும் இவை
யே மேலான அடையாளங்களுமாம்.

பழைய ஏற்பாடு முழுவதிலும், மேசியாவின்து இருவிதத்
தொழில்களைப்பற்றிக் கூறும் இருவிதமான தீர்க்கதரிசனங்க
ளைக் காணலாம். ஒருவகையான் தீர்க்கதரிசனங்கள் அவர்
அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜாவெனவும், ஜெயமும்
கீர்த்தியு முடையரென்றும் தமது ஜனங்களை அவர்களுடைய
விரோதிகளின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பவர் என்றும் கூறு
கின்றன. மற்றொருவிதமான தீர்க்கதரிசனங்கள் அவர் பலரா
லும் இகழப்படும் தாழ்மையானவரென்றும் பாடனுபவிப்பவ
ரென்றும், தம்மைத்தாமே பாவநிவாரணபலியாக ஒப்படைப்
பவரென்றும் கூறுகின்றன.

எம்பிரான் தாம் பிறந்து வளர்ந்து இதுகாறுமிருந்த யிடமா
கிய நாசரேத்தினின்றும் மேசியாவாக, கிறிஸ்துவாக உலகில்
தமது கிரியையை ஆரம்பிக்க வெளிப்போந்தபோது அவரு
டைய ஞானஸ்நானகாலத்தில் பரிசுத்தஆவியானவர் அவர்
மீது இறங்கி அவரைப்பற்றி சாட்சி பகர்ந்தார். அந்நேரத்திற்
றானே எம்பிரான் கிறிஸ்துவாக தேவனால் அபிஷேகிக்கப்பட்

டார். அன்றியும் தேவன் வானத்திலிருந்து 'இவர் எனது நேசகுமாரன் எனப் பரக்கக் கூறிப் பறையறைந்து சாட்சிபகர்ந்தார். இதைக்கண்டு கேட்ட ஸ்நானகன் 'வரப்போகிறவர்' ஆகிய கிறிஸ்து இந்த இயேசுதான் எனக் கண்டான் (யோவா. 1. 33, 34.). பின்னர் எம்பிரானைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிற சகலமும், அவருடைய வல்லமையுள்ள அற்புத கிரியைகளும், அவர் கிறிஸ்துவெனப் பூரணமாய் அப்பொழுது அபிஷேகம் பண்ணப்பட்டதினாலும் ஆவியின் வல்லமையினாலும் விளைந்தனவே. எனவே தமது கிரியை யாரம்பிக்குங்காலத்தில் அவர் 'ஜலத்தினால்' வந்தார். மேலும் அவர் ராஜாவாக மாத்திரமல்ல பாவநிவாரணபலியாகப் பாடுபடுகிறவராகவும், வரப்போகிறவர் எனத் திட்டமாய் சாட்சிபெறுகிறவராகவும், கிறிஸ்துவென இரண்டாந்தடவையும் வெளிப்படுத்தப்பட இரண்டாவது ஸ்நானமும் இருக்கவேண்டியதாயது. இதுவே அவர் சிலுவையில் இரத்தத்தினால் பெற்ற ஸ்நானம். சிலுவையில் அவர் தமது கிரியைகளை முடிக்கிறகாலத்தில் அவர் இரத்தத்தினால் வந்தார். ஆழ்ந்து யோசிக்கும் திறமுடைய எந்த யூதனும், பழைய ஏற்பாட்டில் அவரைப்பற்றிக் கூறியிருப்பவைகளையும் இப்பொழுது கிறிஸ்து ஜலத்தினாலும், இரத்தத்தினாலும் வந்ததையும் ஒப்பிட்டு நோக்க இயேசுவே கிறிஸ்துவென அறிந்து உணரக்கூடியவனாவன். புறஜாதியார் சரித்திரவாயிலாகவும் மற்றும் நிராகரிக்கக்கூடாத ஆதாரங்கள் மூலமாகவும் ஸ்தாபிக்கப்படுகிற இயேசுவானவருடைய அற்புத ஜீவியத்தையும் அதியற்புத மரணத்தையும் அறிந்து அவர்தாமே கூறியபடி அவர் இஸ்ரவேலரின் மேசியாவாகவும், உலகமீட்பராகவும், தேவகுமாரனாகவும் இருக்கிறார் என நம்புதற்கு ஏதுவாயிருக்கிறது.

இவ்விடத்தில் ஜலம், இரத்தம் என்பன எம்பிரானது திருவிலாநின்றும் புரண்டோடிய ஜலமும், இரத்தமுமாகவோ? இவ்வாறு கருதியவருமிலரோ? உளர் சிலர். ஒருவாறு இவர் கருதுவதும் தவறாகாதிருக்கலாம். ஏனெனில் பரி. யோவான் மாத்திரம் தான் இச்சம்பவத்தைக் கண்ட சாட்சியாக எழுதிய



வர். யோவா 19. 34, 35. இச்சம்பவம் அப்போஸ்தலன் மனதில் அதிக ஆழமாய்ப் பதிந்துவிட்டது. பூமியதிர்ச்சியும் பரிசுத்தவான்கள் உயிரோடெழும்பியதும் (மத். 27. 51–53.), அவ்வளவு ஆச்சரியத்தை எழுப்பவில்லை. பரி. அப்போஸ்தலன் தான், இச்சம்பவத்தை பிறர் விசுவாசிக்கத்தக்கதாக சாட்சியாய் எழுதியதாய்க் கூறுகிறார் (யோவா. 19. 35.). எம்பிரான் சிலுவையில் தொங்கும்போது அவரது விலாப்புறம் நின்றும் ஜலமும், இரத்தமும் பெருகிவந்த சம்பவம் தமது மனதில் அழுந்தாதவிஷயத்தில் இயேசுகிறிஸ்து ஜலத்தினாலும் இரத்தத்தினாலும், வந்தவர் எனக் கூறியிரார் என்பது உண்மைதான். அவர் இரத்தத்தினாலும், ஜலத்தினாலும் வந்தவர் என இங்கு எழுதுதற்கு அக்காட்சியும் அக்காட்சியால் அவர் மனதில் பதிந்த எண்ணமுமே காரணமன்றெனக் கூறுதற்குச் சில காரணங்களுள.

1. இரத்தமும் ஜலமும் பெருகிவந்ததினால் இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என ஸ்தாபிக்க முடியாது. ஏனெனில் மரணத்தின்பின் இரத்தம் இயற்கையாக இரண்டு பாகமாகப் பிரிந்து ஒன்று ஜலம்போல் திரவமாகவும் மற்றொன்று சிவப்பாயும் சற்று இறுகியுமிருக்கும் எனக் கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் எம்பிரான் இரத்தாசயம் உடைந்து உயிர்விட்டாரெனக் கருதுகின்றனர். இரத்தமும், ஜலமும் புறப்பட்டுவந்தமை அவர் உயிர்விட்டாரென்பதனை ஸ்தாபிக்கும். இவை காரணங்களால்மாத்திரம் அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென நம்புதற்கு இடமுண்டாகாது.

2. சுவிசேஷத்தில் 'இரத்தமும், ஜலமும்' எனக் கூறி இங்கு அந்த ஒழுங்கை மாற்றி 'ஜலமும், இரத்தமும்' எனக் கூறியிருக்கிறார். ஒரே அப்போஸ்தலன் அதேவிஷயத்தைக் கூறும்போது ஒன்றுபோற் கூறுவார். அங்ஙனமின்றி மாறிக் கூறியதே இதுவேறு அதுவேறு என்பதற்குச் சான்றாம்.

3. யோவா. 19. 34–ல் கூறியதையே ஈண்டும் கூறினாரென்னில், நாம் இப்பொழுது கவனிக்கிற 6-ம் வாக்கியத்தின்

பின்பாகத்திற்குப் பொருளின்றாம். 'ஜலத்தினாலே மாத்திரமல்ல ஜலத்தினாலும், இரத்தத்தினாலும்' சிலுவைக் காட்சியில் இவ்விஷயத்தில் முக்கியமானது ஜலமோடியதேயன்றி இரத்தம் ஓடியதன்று. ஏனெனில், இரத்தம் ஓடுதல் இயற்கை. அப்படியானால் இரத்தத்தினால் மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் எனக் கூறியிருப்பார். அங்ஙனம் கூறாது 'ஜலத்தினால் மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்' எனக் கூறுகிறார்.

எம்பிரானது ஞானஸ்நானத்திற்கும் அவரது மரணத்திற்கும் அடையாளமாக அவருடைய காயத்தினின்றும் ஜலமும், இரத்தமும் வந்ததெனின் ஜலமும், இரத்தமும், இராஜாவாகவும், பாடுபடுகிறவராகவும், ஆசாரியராகவும், பலியாகவும், நம்மைச் சுத்திகரிப்பவராகவும், நம்முடைய பாவநிவாரணமாகவும், ஞானஸ்நானத்தில் நமக்கு ஜீவனளிப்பவராகவும், பரி. இராப்போசனத்தில் அந்த ஜீவனைக் காப்பாற்றுகிறவராகவுமுள்ள அவருடைய கிரியைகளில் ஒன்றையோ பலவற்றையோ காட்டுவதற்கான அடையாளமாயிருந்தால் (சுவிசேஷத்தில் ஜலத்தையும், இரத்தத்தையும் விசேஷ அடையாளங்களாகக் கூறுவதே பரி. யோவானின் முக்கிய கருத்துகளில் ஒன்று என்பது அந்த சுவிசேஷத்தை வாசிக்கும் யாவர்க்கும் வெளிப்படை. ஜலம், யோவா. 3. 5; 4. 10, 15; 7. 37–39. இரத்தம், 6. 53–56.), உண்மையில் நடந்த இந்த விஷயம் எவ்வளவுதூரம் நமது ஆன்மகாரியங்களை விளக்குதற்குச் சாதனமாம் என்பதை வியாக்கியானத்தில் கவனிப்போம். இந்நிகழ்ச்சி நமது புத்திக்கு ஒத்தது. அவை அடையாளமாகும் காரியம் நமது இதயத்திற்கும் ஆத்துமாவுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியாகும்.

'ஜலத்தினால் மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்' எனப் பரி. அப்போஸ்தலன் வற்புறுத்திக்கூறிய காரணமென்? ஏனெனில் அக்காலத்தில் இயேசுவானவர் பரிசுத்தவான் என்றும், அவர் தேவனன்றென்றும் போதித்த கள்ளப்



போதகரிருந்தனர். (அவர்களுள் முக்கியமானவன் செரிந்து) (Cerinthus) அவர்கள் இயேசுவானவர் தமது ஞானஸ்நான காலத்தில் தேவவல்லமையாகிய கிறிஸ்துவைப்பெற்று அந்த வல்லமையின்மூலமாய் அவர் தமது அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்துவந்தாரெனவும், இந்தக் கிறிஸ்து சாகாத் தன்மையுடைமையால் இயேசு சிலுவையில் மரணமடையுமுன் அவரைவிட்டு விலகிவிட அவர் திரும்பவும் சாதாரண மனுஷனாகியே மரணமடைந்தாரெனவும், ஆகையினால் சிலுவையில் மரணமடைந்தது மனிதனாகிய இயேசுவேயன்றித் தெய்வமாகிய கிறிஸ்து வல்லவென்றும் போதித்தனர். இத்தகையார் கிறிஸ்து 'ஜலத்தினால் வந்தார் என்பதனை ஒப்புக்கொள்ளுவர். ஆனால் அவர் 'இரத்தத்தினால் வந்தார்' என்பதனை ஒப்புக்கொள்ளார். அதுபற்றியே அப்போஸ்தலன் 'ஜலத்தினால் மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்' என வற்புறுத்துகிறார். இத்தகைய தப்பறை இதுவரையும் மகமதியரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அவர்கள் மேசியாவாகிய இயேசு மரிக்கவில்லையெனவும் அவருக்குப் பதிலாய் யூதாஸ் சிலுவையிலறையுண்டானெனவும் கூறுகின்றார்கள்.

பரி. யோவான் அப்போஸ்தலன் முக்கியமானதாகிய மூன்றாவது சாட்சியைப்பற்றிக் கூறுகிறார்.

(வாக். 7, 8.) ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர் (ஏனெனில்) சாக்ஷியிடுகிறவைகள் மூன்று. ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே. இந்த மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. பரி. அப்போஸ்தலன் தாம் ஆக்ஷேபிக்கிற தவறான கொள்கைகளைப்பற்றியே முதலாவது பேசுவதுபோல் காணப்படுகிறது. செரிந்து (Cerinthus) வைச் சேர்ந்தவர் பரிசுத்தஆவியை மறுதலிக்கவில்லை. ஆனால் அவர் ஞானஸ்நானத்தின்போது இயேசுவின்மேல் இறங்கிய 'ஆவியாகிய கிறிஸ்துவெனச்' சொல்லினார். பரிசுத்தஆவி ஜலத்தினால் சாட்சிகொடுத்ததை ஒப்புக்கொள்வார். ஆனால் இரத்தத்தினால் சாட்சிபகர்ந்ததை யொப்பார். பரி.

அப்போஸ்தலனே ஆவியானவர் இரண்டினாலும் சாட்சிகொடுத்தார் என உறுதியாய்க் கூறுகிறார். ஆவியானவர் (இயேசு) கிறிஸ்து மாமிசத்தில் வந்து, மாமிசத்தில் பாடுபட்டார் என சாட்சிகொடுக்கிறார். இந்த விசுவாசம் உண்மையின் ஆவிக்கேதுவான விசுவாசம். இவ்வாறு சாட்சி பகருகிறவராகிய ஆவியானவர் சத்தியம். செரிந்தியர் (Cerinthians) தங்கள் கொள்கை முழுவதும் ஆவிக்கேதுவானதெனச் சாற்றினர். மனுஷீகமும் தெய்வீகமும் ஐக்கியப்படக் கூடுமென்பதும், கிறிஸ்துவானவர் சுடவெறுப்புள்ள அன்போடு பாடுபட்டு மரணமடையக் கூடுமென்பதும் அவர்களுக்கு உடன்பாடாகா. எம்பிரானது திருஅவதாரமும் பாடுபடுதலும் தப்பிதமானவையென வெறுத்தனர். பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்கள் பக்தி அவமென்று கூறி ஜலம், இரத்தம், ஆவி மூன்றும் பிரிக்கக்கூடாதனவென்றும் அவதாரம், பிராயச்சித்தம் என்பவற்றில் அவை மூன்றும் 'ஒருமைப்பட்டிருக்கின்றன' 'வென்றும் சொல்லுகிறார்.

பரி. யோவான் அப்போஸ்தலன் ஆவியானவரின் சாட்சியைப்பற்றி இவ்விஷயத்தில் விசேஷித்துக் கூறினரேனும் அவருடைய வார்த்தைகள் இதினும் ஆழ்ந்த கருத்துடையன. எக்காலத்திலும் உண்மையாக ஆராய்வார்க்கு அந்தக் கருத்து இயேசு உண்மையினாலேயே கிறிஸ்துதான் என்பதை ஐயமின்றி ஸ்தாபித்தற்கு ஏதுவானது.

ஜலம் முதல் சாட்சி, இரத்தம் இரண்டாவது சாட்சி, ஆவி மூன்றாவது சாட்சி. ஆவியானவர் காணக்கூடாதபடி அரூபியாயிருத்தலின் தமது சாட்சியைத் தமது கிரியைகளின் மூலமாய் வெளியிடுகிறார். ஆவியின் வல்லமையினாலேயே எம்பிரான் கல்லறைநின்றும் உயிர்த்தெழுந்தார். அதுமுதல் சபைகளில் காணப்படும் சகல அற்புதங்களும் ஆவியானவராலேயே நடக்கின்றன. கிறிஸ்து மகிமைப்படுதலும், பெந்தெகொஸ்து ஆவி ஊற்றப்படுதலும், சபையில் பக்தி வளர்தலும் ஆகிய பரிசுத்த ஆவியின் கிரியைகளையே மூன்றாவது சாட்சியாகக் கூறுகிறார்.



ஜலம், கிறிஸ்து உலகில் ஜீவித்ததைப்பற்றியும்; இரத்தம் அவர் மரணத்தைப்பற்றியும்; பரிசுத்தஆவி, அவர் எக்காலத்தும் ஜீவித்திருப்பதைப்பற்றியும் சாட்சியிடுகின்றன. 'நான் உயிருள்ளவருமாயிருக்கிறேன்.' மரித்தேன் ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் (வெளி. 1. 18.). எனவே கிறிஸ்துமார்க்கத்தின் சகல ஆதாரங்களையும் உள்ளடக்கி சாட்சியிடுகிற மூன்று சாட்சிகளிருக்கின்றன. (1) மனுஷர் செய்யக்கூடாத செய்கைகளைச் செய்து மனிதருள் எவரும் வசனிக்க முடியாதபடி வசனித்து யாதொரு பாவமுமின்றி அதியற்புதமாய் பூமியில் ஜீவித்த ஜீவியம். (2) தேவனுடைய சொல்லக்கூடாத அன்பை வெளியிட்டுத் தெய்வீகமாக அடைந்த பாடும், மரணமும். (3) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், அவர் மகிமையடைதலுமாகிய கிரியைகளைச் செய்தும் சபையிலும் நீங்காது நிலைத்திருக்கும் பரிசுத்தஆவியின் கிரியைகள்.

இம்மூன்று சாட்சிகளிலும் மகா முக்கியமானதும், இம்மூன்றையும் ஒருமைப்படுத்துவதுமாகிய சாட்சி பரிசுத்தஆவியானவரே. ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்; ஏனெனில் மனுஷராவது, மற்று எந்தச் சம்பவமாவது, கிறிஸ்துசபையில் வழங்கும் ஜலம், இரத்தம் முதலியவையாவது, தாமாகக் கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சிகொடுக்கும் வல்லமையுடையனவல்ல. இவற்றோடு சேர்ந்தும் இவற்றின் ஆதாரங்களை மனிதருடைய மனதிற் பதித்தும் சாட்சியிடுகிறவர் பரிசுத்தஆவியே (அப். 5. 32. யோவா. 15. 26.). தேவனால் நமக்கு அருளப்பட்டு, உண்மையை அறிந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென நம்முள் எழும் ஆசையைத் திருப்திசெய்யக்கூடியது இந்தச் சாட்சியே, ஆவியானவரே சத்தியமாகையால், 'கிறிஸ்து சத்தியமாயிருப்பது போலவே (யோவா. 14. 6.), கிறிஸ்துவின் நாமத்தினால் அனுப்பப்பட்ட ஆவியானவரும் சத்தியம்' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர். இந்த சாட்சி சதாகாலமும் நீடித்துக்கொண்டே போவது. அது ஆதிச்சபையிருந்த அக்காலத்தில் எவ்வளவு வல்லமையாகவிருந்ததோ அப்படியே இன்றுமிருக்கிறது. பூர்வீக ச

யார், பரி. யோவான் மரணமடைந்துவிடின், எம்பிரான் உயிர்த்தெழுந்ததைத் தம் கண்ணினால் கண்டவர் எவருமில்லாதே போய்விடுவரே பின் என்செய்வதென ஒருவாறு கலங்கியிருக்கலாம். 'நான் கண்டு, கேட்டு என் கையினாலேயே பரிசித்துணர்ந்தேன்' என்று கூறி இனி மனுஷரைத் திருப்திசெய்பவர் யாவர்? பரி. யோவான் அப்போஸ்தலனுக்கு அத்தகைய கலக்கம் ஒன்றும் ஏற்படவில்லை. பூமியின்மேல் எக்காலத்தும் நிலைத்திருப்பதான குமாரனுடைய ஆவி கிறிஸ்துவின் உண்மையைப்பற்றிப் புறம்பாகவும், உள்ளாக மனிதர் இருதயங்களிலும் சாட்சியிடுவார். அந்த ஆவியின் வல்லமையினால் இறந்துபோன அப்போஸ்தலர் இனி வரவிருக்கும் சந்ததியாரோடும் பேசுவார்.

(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.) இந்த வாக்கியம் ஆதியிலேயே இந்நிருபத்திலடங்கியதன்றாதலின் விடப்பட்டது. (1) பதினான்காம் நூற்றாண்டுக்கு முந்திய இந்த கிரேக்கு நிருபத்தில் இது காணப்படவில்லை. (2) திரித்துவத்தைப்பற்றித் தர்க்கம்பண்ணின மூன்றாம், நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளிலிருந்த கிரேக்க லத்தீன் மூப்பர்கள் எவரும் இவ்வாக்கியத்தைக் குறித்துப் பேசவேயில்லை. (3) முதல் முதலாக இவ்வாக்கியம் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட லத்தீன் சுருளில்தான் காணப்படுகிறது. பின் பதின்மூன்றாம் நூற்றாண்டில்தான் கிரேக்கு பாஷையில் எழுதுபவரும் இதைக் கூட்டி எழுதினர்.

(வாக். 9.) பரி. அப்போஸ்தலன் இதுகாறும் கவனித்துவந்த இந்தக் காரியம் மனித சாட்சி மாத்திரமன்று, தேவனுடையவும் சாட்சியாயிருக்கிறதென்று சொல்லப்போகிறார்.' நாம் மனிதருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால் அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமா (பெரிதா) யிருக்கிறது.

ஏற்றுக்கொண்டால் என்பதில் 'ஆல்' எனும் விகுதி சந்தேகங்குறித்து நின்றதன்று. 'ஆனால் நமக்குத் தெரிந்திருக்கிற



படி மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால்' என்றே பொருள்படும். நாம் நாடோறும் மனிதருடைய சாட்சியங்களை ஏற்றுக்கொண்டு அதின்படி செய்கிறோம். அப்படி ஏற்றுக்கொள்ளாவிடில் அன்றாடக மனித ஜீவியம் அசாத்தியமாய் விடும். 'அனுமானங் காரணமாகவே மனிதன் ஜீவிக்கிறான்.' மனிதர் கூறுவது எவ்வளவு உண்மையென நாம் அனுமானித்து நடந்துபோகிறோம். இடையிடையே அவர்கள் வஞ்சித்து ஏமாற்றிவிட்டனரோ அல்லது தாமே யறியாமற் கூறிவிட்டனரோவென அற்பசொற்ப சந்தேகங்களும் நிகழ்வதுண்டு. ஆனால் தேவனுடைய சாட்சியின் விஷயமாகவோ அப்படி அற்பமும் சந்தேகிக்க இடமின்று. ஆதலினால் தேவனுடைய சாட்சி மனிதனுடைய சாட்சியிலும் பெரிதுதான். அது தப்பிதமாகக் கூடாதது. ஆகையினால் மனுஷருடைய சாட்சியே ஏற்றுக்கொண்டு நடக்கும் நாம், தேவனுடைய சாட்சியை எவ்வளவு அதிகமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்பொழுது கிறிஸ்துவின்விஷயமாய் மனிதருடைய சாட்சி மாத்திரமல்ல, தேவனுடைய சாட்சியமும் நமக்குண்டு. **தேவன் தமது குமாரனைக்குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார் என்பதே தேவனுடைய சாட்சியாயிருக்கிறது.**

மூலபாஷையை ஒருவிதமாய் மொழிபெயர்த்தால் இங்ஙனம் வரும். ஆனால் இதில் ஏதேனும் சிறந்த பொருள் இருப்பதாகத் தோற்றவில்லை. அன்றியும் 11-ம் வாக்கியத்தில் அவர் கூறுகிற சாட்சியே இன்னதென்றும் சொல்லப்படுகிறது.

இதை வேறொருவிதமாகவும் மொழிபெயர்க்கலாம். அதில்
ஒருவேளை சிறிது பொருள் விளங்கலாம். தேவன் தமது கு
ரனைக்குறித்து சாட்சியிடுகிறபடியால், இது தேவனு
சாட்சியாயிருக்கிறபடியால் நாம் செய்வதுபோல மனுஷ
சாட்சியை ஏற்றுக்கொண்டால் நாம் இதையும் ஏற்
வேண்டும். (நாம் கவனித்துக்கொண்டுவருகி
அதன் உட்பொருளும் யாதென 11-ம் வாக்
கப்பட்டிருக்கிறது.) ஏனெனில் இது

யல்ல தேவனுடைய சாட்சி, ஏனெனில் உண்மையாகவே தேவன் தமது குமாரனைக்குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார்.

(வாக். 10.) தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான். இந்தச் சாட்சி புறம்பானதாய் நடந்த சம்பவங்களைக் குறிப்பதாய் மாத்திரமல்ல, விசுவாசிக்கிறவனுடைய இருதயத்தில் உள்ளானதாயுமிருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றி நமக்கு அறிவிக்கப்படும்போது நாம் அவரை ஏற்றுக்கொள்ளும்படியாகத் தேவனுடைய சத்தம் நமக்குள்ளிருந்து சொல்லுகிறது. பரிசுத்தம், உண்மை, ... நமக்கு வேண்டிய அளவு அவரிலிருக்கின்றன. அவருடைய வார்த்தைகள் நமது இதயத்தின் ஆழங்களிலும் ஊடுருவிச் சென்று நமது எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. நாம் விசுவாசித்தால் அந்தச் சாட்சியே நமதாய்விடுகின்றது. ஜலமும், இரத்தமும், ஆவியும் நம்விஷயத்தில் மெய்யான ஜீவனாய்விடுகின்றன. அப்பொழுது நாம் சுத்தமாக்கப்பட்டோமெனவும், நாம் மீட்கப்பட்டோமெனவும், ஆவியானவர் வசிக்கத்தக்க ஆலயமானோம் எனவும் அறிந்துகொள்ளுகிறோம்.

கடைசியாக நம்மைத் திருப்திசெய்வது இந்த உள்ளான சாட்சியே. இந்த ஆவி நமது ஆவியோடு சாட்சி பகர்வதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (ரோ. 8. 14.). கிறிஸ்துவின் அவதாரம், பாடு, உயிர்த்தெழுதல், பரமேறுதல் முதலியவற்றைப்பற்றிய புறம்பான சாட்சியங்கள் நமது புத்தியை ..., இந்த உள்ளான சாட்சியங்கள் நமது இதயத்தையும் திருப்தி ...ப்பும்போது நாம் தவறாமல் நிலைத்திருப்போம்.

...ன விசுவாசியாதவனோ, அவரைப் பொய்யராக்கிறான். விசுவாசியாதவன் எனச் சொல்லப்பட்ட...ப ஏற்றுக்கொள்ளுமாறு பரிசுத்த ஆவியினால் ... அவன் கிறிஸ்துவைக் காண்கிறான். அவர் ...றான். தம்மைப் பின்பற்றுமாறு அவர்



அழைக்கிற சத்தத்தைக் கேட்கிறான். எனினும் அவன் தன் இருதயத்தைக் கடினமாக்கித் தன் பாவங்களைவிட மனமற்றுத் தன் கண்களை ...டி காதையடைத்துக்கொண்டு அவரை விசுவாசிக்க மறுத்துவிடுகிறான். அவன் தேவனைப் பொய்யராக்குகிறான். உண்மையின் பொய்யாகுவது அவனது சொந்த இருதயமே. அப்படிப்பட்டவனைப்பற்றி அவன் தன் செயல்கள் தீமையானபடியால் ஒளியைப் பகைக்கிறான் என யோவா. 3. 19–20-ல் கூறியிருக்கிறது.

அத்தகைய ...தன் தேவனைப் பொய்யராக்கவே வேண்டும். (அப்படியே ...சொல்லத் ...கனி...ரோ தனியானோ வென்பது காரியமல்ல.) தேவன் இருப்பது உண்மையெனின், கிறிஸ்துவின் விஷயத்தைப்பற்றி ஆராயுமிடத்து அடியிற் கூறப்படும் இரண்டிலொரு காரியம் அந்தத் தேவனைப்பற்றி விளங்குகிறது. ஒன்றில் அவர், கிறிஸ்து உண்மையிலேயே கிறிஸ்துதான், என ஸ்தாபித்த தேவனாகவேண்டும். அன்றேல் கிறிஸ்து உண்மையிற் கிறிஸ்துவல்லாதிருப்பவும் அவரைக் கிறிஸ்துதான் என ஸ்தாபித்தற்கு எண்ணிறந்த சாட்சிகளை ஏற்படுத்திய பொய்யராகவேண்டும்.

அவ்வாறு அவரால் ஏற்படுத்தப்பட்ட சாட்சியங்கள்:—தீர்க்கதரிசனங்களும் வேதமும்; கிறிஸ்துவின் வருகைக்காக இரண்டாயிரம் வருடகாலம் ஆயத்தம்பண்ணப்பட்டு வந்தபின் அவரை ஏற்றுக்கொள்ளாமைக்காக இப்பொழுது இரண்டாயிரம் வருடகாலமாகத் தண்டிக்கப்படுகிற யூதருடைய அற்புத சரித்திரம்; உலகில் கிறிஸ்தவரல்லாதவருக்குள்ளும், தெய்வம் அவ புருஷனாக வெளிப்படவேண்டுமெனவும் மனிதருடைய ப... களுக்கு நிவாரணபலியிருக்கவேண்டுமெனவும் எழுகி... கிறிஸ்துவின் ஜீவியத்தில் காணப்பட்ட அடையாள... கிறிஸ்துவின் பாவமற்ற ஜீவியம்; அழுக்கற்ற ந... உபதேசம்; அவருடைய ஆச்சரிய மரணம்... ளைக் கிறிஸ்துவென ஒப்புக்கொண்டது...

ருடைய உயிர்த்தெழுதல்; பரமேறுதல்; இ ற்றையெலாம்
கண்ணாரக் கண்டவர்கள் கூறுகிற சாட்சிகள்; கிறிஸ்துமார்க்
கம் நாளொரு ண்ணமாய் வளர்ந்து உலகில் வியாபித்தல்;
எக்காலத்தும் கிறிஸ்துமார்க்க வல்லமையினால் காலத்துக்குக்
காலம் உலகம் வ்ர்த்தியாகி சுத்தமாக்கப்பட்டுவ கிற அற்புதம்;
ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் வல்லமையினால் ப வத்தில் நீங்கி
நீதிக்குத் திரும்புதல் ஆகிய இவையே.

இரண்டாவது கருத்துப்படி எடுத்துக்கொண் டால் தேவன்
மேற்கூறிய சகல ாரியங்களையும் மனிதனை வ ஞ்சிக்கும் ஒரே
நோக்கமாகமாத்திர செய்ததாகும். தேவன் ப்படிப் பொய்
யராயிருக்கிறார் எனக் கரு — ய மதா வத்தின்மீதே நம்பிக்
கையில்லாத நிரீச்சுரவாதிகளாயிருத்தல் நலம். ஏனெனில்
அப்படியிருந்தால் தேவன் தன்னை வஞ்சிக்க முயன்றும்
சிக்க வியலாதே போயினபடியால் மனிதனே அவரினும் பெரி
தேவனாய் விடுவனன்றோ!

இனி தேவனுடைய சாட்சி இன்னதென்பது முழுவதுமாய்க்
கூறப்படுகிறது. தேவனுடைய சாட்சி ஒரு காரியத்தை உண்
மையென ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்ட சாட்சியமாகமாத்திர
மிருப்பதன்று. ஆனால் அந்தக் காரியமாகவே யிருக்கிறது.
ஏனெனில் இருப்பதெல்லாம் தேவனாலேயே இருக்கின்றன.
மேலும் தேவன் பேசியமாத்திரத்திலேயே பேசப்பட்ட காரியம்
செய்யப்பட்டதாம். (ஏனெனில் அவர் கட்டளையிட அவை
சிருஷ்டிக்கப்பட்டன சங். 148. 5.). தேவனுடைய சாட்சி
இதுவே:—தேவன் நமக்கு நித்தியஜீவனை தந்திருக்கிறார்,
த்தார்) அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிற
ன்படே. நாம் பாவம் காரணமாக தேவனைவிட்டுப் பிரிந்து
மரணத்திற் குள்ளானோம். ஆனால் தேவன் நம்மை
ணத்திற்கு ஒப்புக்கொடுக்கமாட்டார். ஏனெனில்
விசேஷமாக கிறிஸ்தவராகிய நமக்கு, உண்மை
விளங்குகிற நித்தியஜீவனைக் கொடுத்தார்
பார்க்க. ரோ. 6. 23.)



அந்த ஜீவ அவருடைய குமாரனில் இருக்கிறது: குமா
ரன் தன்னில் ஜீவனுடையராயிருக்கும்படி பிதா அவருக்கு
ஜீவனைக்கொடு த்தார் (யோவா. 5. 26.). தாம் ஜீவனுக்கு ஊற்றா
யிருப்பதுபோல் குமாரனுமிருக்குமாறு செய்தார். தேவன்
நமக்கு அவரு டைய குமாரனைத் தந்திருக்கி ார் (யோவா. 3.
16.). எனவே தமது குமாரனில் நமக்கு நித் ய ஜீவனைத் தந்
திருக்கிறார். ஆகையினால் கிறிஸ்துவின் மாய் நமக்குத்
தேவனோடு க்யமுண்டாகி அந்த ஐக்ய இனிமேல் பூர
ணப்படும். (யோவா. 1. 4; 10. 12; 17. 3; 20. 31.)

இதனால் வெளியாகும் உண்மை:—

குமாரனை உடைபவன் ஜீவனை உடையவன், தேவனு
டைய குமா வாகவன் ஜீவன் இல்லாதவன். மனி
னுக்கு வேண்டிய ஜீவனெல்லாம் குமாரனிலேயே இருக்கி
றது. தேவனுடையஆவி தன் ன ஏவுவதினால் தேவனை அறி
யவேண்டுமென உண்மையின் முயற்சிக்கிற எவனும் கிறி
ஸ்துவை அறியாதிருந்தும் தேவனுடைய ஆவி தனக்குள் கற்
பிக்கிறவிதமாகச் செய்வனேல் அவன் குமாரனையும் ஜீவனையு
முடையனாகின்றான்.. தன் பிந்தியகாலத்தில் மறுமையில்
தான் தேடிய தேவன் இன்னார் என்பதை நன்றாயறிந்துகொள்
வான். ஆனால் தேவனுடைய ஆவியானவரின் சத்தத்துக்குச்
செவிகொடாமல் குமாரன் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட
காலத்தும் அவரை ஏற்றுக்கொள்ள மனமற்றிருப்பனேல் அவன்
பரிதபிக்கப்படும் நிலையுடையனாவன். ஏனெனில் 'அவனிடத்
தில் ஜீவனில்லை; (யோவா. 3. 36.)

இவ்வாக்கியத்தின் இரண்டாம்பாகத்தில் 'தேவனுடைய
ரன்' எனக் கூறுவது மிகவும் விசேஷமுடைத்து. எ
குமாரனையுடையவரெல்லாம் அவர் தேவனுடைய
தான் என்பதனை நன்கறிவார். அவரை யுடை
அவர் தேவனுடைய குமாரன் என்பது தெ
அப்படிப்பட்டவர்களைக் குறித்துக் கூற

டைய' வென்னும் அடைகொடுத்துக் கூறின... மூலபாஷைப் யின்படி குமாரனையுடையனல்லாதவன் ... வரேதேதை யுடையனுயிருந்தும் ஜீவனையுடையனுகான் என க் குறிக்கிறது. இந்நிருபத்தின் துவக்கத்தில் தேவனுடைய ஜீ வார்த்தையை யும் விசுவாசிகளி ன் இதயத்தில் அந்த ஜீவன் வெளிப்படுத்தப் படுவதையும் குறி த்துப் பேசினுர் (1. 1, 2.). இங்கு நிருபத்தை முடிப்பதற்கு மு ன்னும் அதைக்குறித்தே பேசுகிறார்.

## ஒன்பதாம் பிரிவு.

### (3) முடிவு. கிறிஸ்தவனின் நம்பிக்கை. (5. 13–21.)

இந்த முடிவுபாகத்தின் கருத்து அடியில் வருமாறு:–பரி. யோவான் அப்போஸ்தலன் இந்நிருபம் எழுதிய தன்னுடைய முக்கிய நோக்கம் (1. 3, 4.) இப்பொழுது முடிந்துவிட்ட தெனக் காட்டுகிறார் (வாக். 13.). பின் 'உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாகும்படி' என அவர் எழுதியதினுல் மனதில் உறுதிப்படுவதால் விளையும் கிறிஸ்தவ நம்பிக்கையைப்பற்றிச் சொல்லுகிறார். அதையே மூன்று விதமாய்த் திருஷ்டாந் தப்படுத்தியும் காட்டுகிறார். (1) ஆவியின் கிரியைகள் (14–17.). (2) திட்டமான உள்ளுணர்ச்சி (18–20.). (3) தேவனுக்கீடாக வேறெதையும் மதிக்கப்படாதெனும் எச்சரிப்பு. (21)

நிருபத்தின் நோக்கம். (வாக். 13.)

(வாக். 13.) உங்களுக்கு நித்திய ஜீவனுண்டென்று நீங்கள் அறிய தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயி ருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். 'உங்க ளுக்கு ஜீவனுண்டென்று நீங்கள் அறிய' எனக் காரணம் காட்டி இந்நிருபத்தை எழுதுகிறார்.

'இயேசு தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து என்று நீங் கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினுலே நித்தியஜீவனை அடையும்படியாகவும்' (யோ 20. 31.) எனக் காரணங்காட்டித் தமது சுவிசேஷத்தை எ னுர். 'இவ்விருகாரணங்களையும் ஒப்பிட்டுப்பார்ப யிருக்கும். இயேசுவைத் தேவனுடைய குமாரனெ வாசியாதவர், நித்தியஜீவனை யடையும்படியாக அ விசுவாசத்தை உண்டுபண்ணும் நோக்கத்தே சேஷத்தை எழுதினுர். இந்தச் சுவிசே

மனந்திரும்பித் தேவனுடைய குமாரனில் விசுவாசமுள்ளவர்கள், தங்களுக்கு நித்திய ஜீவன் கிடைத்திருப்பது உண்மையென்று உணரும்படிக்குத் தமது நிருபத்தை எழுதினார். எனவே அவர்களும் தாமும் ஒருவரோடொருவரும் பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியப்பட்டு (1. 3.), அதன் மூலமாய் அவருடையவும் அவர்களுடையவும் சந்தோஷம் பூரணப்படுவதே யவருடைய நோக்கம். இந்த ஐக்யம் நித்தியஜீவன் தங்களுக்கு உண்டென்னும் நம்பிக்கையால் விளையும். இது பற்றியே அவர்கள் நித்திய ஜீவனைப்பற்றித் தைரியமாயிருக்க வேண்டுமென விரும்புகிறார். 'அறிய' வென்பதற்கு அவர் வழங்கும்பதம் 'அறிவையுடையவராக' வென ஒருவாறு பொருள்படும். இதன்படி அறிகிற மனுஷனென்பவன் தன் மனதிலே அக்காட்சியைக்கண்டு அதுகாரணமாய் 'நான் கண்டபடியினால் அதை அறிகிறேன்' என்று சொல்லுகிறவனே (2. 29. வியாக்கியானம் பார்க்க.). இப்பொழுது பரி. யோவான் அப்போஸ்தலன் நமக்குத் திட்டமாய் நித்தியஜீவன் உண்டென்று நம்பிக்கையாயிருக்கவேண்டுமென விரும்புகிறார். நாம் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறோமென்றல்ல, பெற்றுக்கொள்ளும் வகையுள்ளவர்களென்றல்ல, இப்பொழுதே அதைப் பெற்றிருக்கிறோமென்று உறுதியாய் நம்பிக்கையோடிருக்கும்படி விரும்புகிறார். நம்முடைய அனுபவம் நம்முடைய நம்பிக்கையை வரவர நிலைப்படுத்தி அதைப் பலப்படுத்தும். நாம் நித்தியஜீவனை யுடையராயிருக்கிறோமென்பதைப் பற்றி உறுதியாயிருப்பதற்கு நமது ஜீவகாலமெல்லாம் காத்...க்கவேண்டியதில்லை. இந்நிருபமே ஆதிமுதல் அந்தம்வரை அவ்விஷயத்தில் உறுதியாயிருக்கவேண்டுமெனும் நோக்... ...தப்பட்டதாம்.

இவ்வாறு உறுதியாயிருக்கக் கூடியவர் யாவர்? 'தேவ... ...ய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்க... ...க்கிறவர்கள்மாத்திரம் தங்கள் நித்தியஜீவ... ...மாயிருக்கலாம். அவர்களுடைய விசுவாசமே



அவர்களிடத்தில் ஜீவன் உண்டென்பதற்கு அடையாளமாம். 'நாமம்' என்பதன் பொருளைப்பற்றி 2. 12. வியாக்கியானம் பார்க்க. தேவனுடைய குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருத்தல் என்பது தேவனுடைய குமாரனாயிருப்பவராக நாமம் சூட்டப்பெற்றவராய் வெளிப்படுத்தப்பட்டவரின் மேல் விசுவாசமாயிருத்தல் எனவாம்.

1. ஆவியின் கிரியை கிறிஸ்தவனின் நம்பிக்கை. (14–17.)

(14) நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். (15) நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (16) மரணத்துக்கு ஏதுவல்லாப் பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால் அவன் வேண்டுதல் செய்ய (கேட்க)க் கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவன் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்பவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுமுண்டு அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன். (17) அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு.

ஆவிக்குரிய முக்கியமான செய்கை ஜெபம். நமக்கு நித்... ஜீவன் உண்டென்னும் நம்பிக்கையும், அது காரணமா... அவரிலும் அவர் நம்மிலும் ஆவியினால் கிறிஸ்துவுக்குள்... ...ளோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம் எனும் நம்பிக்கையு... ...தில் நமக்குத் தைரியத்தைக் கொடுக்கின்றன. நாம்... ...லும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால்... செவிகொடுக்கிறார் என்பதே அவரைப் பற்... ...ருக்கிற தைரியம். (தைரியத்தைப்பற்றி... 2. 28; 3. 21 வியாக்கியானங்களில் பா...

நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டதானது 'விசுவாசி தேவ
னிடத்தில் நேராக வரவும் (எபி. 4. 16.) தான் நினைத்ததை
மறைத்துக்கொள்ளாமல் திறந்து சொல்லவும் ஏதுவாயிருக்கிறது'
என (வெஸ்ற்காட்) அத்தியட்சர் சொல்லுகிறார். நம்முடைய
ஜெபத்துக்கு விடை கிடைப்பதானது ஒரு தாராளமான விஷ
யத்தில்மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகிறது. என்ன? அவரு
டைய சித்தத்தின்படி. எம்பிரான் நமக்கு மாதிரியாகக் கற்பித்த
ஜெபத்தில் தேவனையும் தேவனுடைய மகிமையையும் முதலிற்
கூறிப் பின் நமக்கு வேண்டியவைகளுக்காகக் கேட்டுக்கொள்
ளாமுன் 'உம்முடைய சித்தம்....செய்யப்படுவதாக' எனவும்
சொன்னார். நமக்குச் சந்தோஷமானதும் செள்க்கியமானதும்
தேவசித்தமே. தேவனுக்குச் சித்தமல்லாத ஒன்றை நாம் கேட்
டும் அவருடைய சித்தத்தின்படியே நமக்கு உத்தரவாகவேண்டு
மென விரும்பினால், நாம் விரும்பியது அவருடைய சித்தத்
திற்கு இசைந்ததன்றானபடியால், அவர் தம்முடைய திருச்
சித்தத்தின்படியே நாம் விரும்பியதினும் ஆசைப்பட்டதினும்
மேலான ஒன்றைக் கட்டளையிடுகிறார். 2 கொரி. 12. 8, 9-ல்
பரி. பவுல் அப்போஸ்தலனுடைய ஜெபத்திற்குத் தேவன்
அவன் கேட்டுக்கொண்டபடி உத்தரவருளாமல் வேறுவிதமாய்
உத்தரவருளினார் என்பது கவனிக்கத்தக்கது. உலகப் பிரகார
... ஆசீர்வாதங்களில் அவைகள் எவ்வளவுதூரம் நமது ஆவிக்
குரிய பக்தி பூரணப்படுவதற்கு ஏதுவாயிருக்குமோ அவ்வளவு
... மட்டும் அவர் 'சித்தம்' கொள்ளுகிறார்.
(வாக். 15.) அவர் நமக்குச் செவிகொடுக்கிறார். 'தேவன்
(செவி)கொடுத்தலானது தேவனைப்பற்றிய அறிவைப்போலவே
...யனளிக்கவல்லது' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர்.
நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோ
...ருக்கிறோம். நாம் விண்ணப்பம் பண்ணுவனவற்
...கேட்கப்போதே கொடுத்துவிடுகிறார். நமது எந்த
...யளிக்கத் தேவன் தாமதிப்பதில்லை. வெளி
...வதற்குக் காலம் செல்லலாம். அன்



றேல் அதைப்பற்றி நாம் அடிக்கடி வருந்திக் கேட்டுக்கொள்ள
வேண்டியதாகலாம். அல்லது நாம் எதிர்பார்த்த மாதிரியின்றி
வேறுவிதமாக நமக்குப் பதிற்கிடைக்கலாம். அது எப்படிக்
கிடைத்தாலும் எப்பொழுது கிடைத்தாலும் அது விசுவாசியின்
இஷ்டப்படிக்கே கிடைக்கிறது. ஏனெனில் தேவனுடைய
சித்தம் எதுவோ அதுவே அவருடைய மனதுகிய விசுவாசியி
னுடையவும் சித்தமாம். ஆகையால் அவன் தன் சித்தம் எது
வோ அதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும் செய்கிறான்.
(யோவா. 15. 7; 14. 15. மாற் 1...4.)
(வாக். 16, 17.) இந்த இருவாக்கியங்களிலும் விசுவாசததின்
பலத்த சோதனையின்மூலமாய்க் கிறிஸ்தவனுக்கு ஜெபத்தில்
உள்ள நம்பிக்கையைத் திருஷ்டாந்தப்படுத்துகிறார். ஒரு சகோ
தரன் தவறிப்போவது ஜெபத்தின் வல்லமையில் நமக்குள்ள
நம்பிக்கைக்குப் பெரிய சோதனையாகிறது. இவ்விடத்திலும்
நமக்கு நம்பிக்கை யிருக்கவேண்டும். ஒருவருக்காக மற்றவர்
ஜெபிப்பது அதிக வல்லமையுடையது. ஏனெனில் அந்த
ஜெபத்தில் ஒரு ஆத்துமா மற்றொரு ஆத்துமாவுக்காக ஜெபிக்
கிறது. மேலும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு சகோதரன் மற்
றொரு சகோதரனோடும், ஒருவன் மற்றவனோடும் சேர்க்கப்
பட்டு இணைக்கப்பட்டிருக்கிறான். ஜெபமானது சரீரத்தின்
ஓர் அங்கம் மற்றொரு அங்கத்துக்காகச் செய்கிற ஆ...ய
முயற்சியேயன்றோ? உண்மையான எல்லா ஜெபமுமே பிற
பொருட்டாகவும் செய்யப்படும் ஜெபமாம். ஏனெனில்
பிறருக்கு உதவிசெய்து தேவனை மகிமைப்படுத்த ஒரே
தின் அவயவமாக நாமும் பெலப்படுத்தப்பட வேண்
நாம் ஜெபிக்கவேண்டும்.
(வாக். 16.) பாவத்தைத் தன் சகோதரன்
கண்டால், நாம் தேவனுடைய ஆவியினால் ந
மென்பதை யறிதற்கு இதனினும் வேறு பரீ
என்ன? ஒரு சகோதரன் பாவஞ்செய்
சான ஓர் காரியமன்று. அதைப்

யம் வருத்தமடைகின்றது. உடனே அவனுக்காக ஜெபிக்க
வும் நம்மைத் தூண்டுகின்றது. கலா. 6. 1, 2. தன் சகோ
தரன் பாவஞ்செய்யக் காணுமொருவன் யாதும் யோசனையின்
றித் தாமதமின்றி அவனுக்காக ஜெபிப்பான்.

அப்பொழுது அ... ...த ஜீவன் கொடுப்பார், யாருக்கென்
றல் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்
களுக்கே, மூலபா...வைத்...ன்படி 'மரணத்துக்கு ஏதுவல்லாத
பாவத்தைச் செய்த...ர்க... விஷயத்தில், ஜெபத்துக்கு உத்தர
வாக பாவஞ்செய்கிற ச...க...தரனுக்குத் தேவன் ஜீவன் கொ
டுப்பார்' என...வும் அன்...றல் 'தன் சகோதரனுக்காக ஜெபிக்
கிறவன் அவனுக்கு ஜீ...னைக் ...காடுப்பான்' எனவும் பொரு...
கொள்ளலா... ...ப்படியாயினும் உண்மையில் ஜீவனைக் கொ
டுப்பவர் தேவனே. பரி. யாக்கோபு அப்போஸ்தலனும் அப்
படியே பேசுகிறார் (யாக். 5. 19, 20.). 'தப்பிப்போன மார்க்
கத்திலிருந்து பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை
மரணத்தினின்று இரட்சிக்கிறன்.' அவ்விதமாகவே ஒருவன்
தன் சகோதரனுக்காக ஜெபித்து அவனுக்கு ஜீவனைக் கொடுக்
கிறான் என்று சொல்வது விபரீதமன்று.

இதுநிற்க, மற்றுமோர் வினா இயல்பாகவே எழுகின்றது.
என... நம்முடைய ஜெபம் பாவஞ்செய்கிற நமது சகோதரர்
...ல்லாருடைய விஷயத்திலும் பயன்படுமா? உண்மையான
...ா ஜெபத்திற்கும் அதாவது தேவனுடைய சித்தத்திற்கு
...ப் செய்யப்படுகிற ஒவ்வொரு ஜெபத்திற்கும் தேவன்
...ன பதிலளிக்கிறார் எனப் பார்த்தோமே. ஒவ்வோர்
...ரகரிப்பது தெய்வசித்தமெனவும் நாம் அறி
...மா. 2. 4.). ஆகையினால் நாம் எவர்களுக்காக
அவர்களுடைய பாவம் மன்னிக்கப்பட்டதென
...வல்லமையினால் மனந்திரும்புவார்கள் என
...ல்...மா? அப்படியின்றி நாம் ஜெபித்த
...ம் மனந்திரும்பாதிருப்பின் 'நாம்



அவர் சித்தத்திற்கியைய எதைக்கேட்டாலும் அவர் அதற்குச்
செவிகொடுக்க நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொள்ளுகி
றோம்' எனும் வாக்குத்தத்தத்தினால் போந்த பயனென்?
நமது ஜெபம் சிலர் விஷயத்தில் கேட்கப்படாதே போவ
தின் காரணத்தையறிவது நமக்கு ... கஷ்டமாயிருந்தபோதி
லும், சிலர் விஷயத்தில் நமது ஜெபம் ...கேட்கப்படாதெனத்
தேவனே கூறுகிறார். ஏனெனில் பாவ...களில் மரணத்துக்
கேதுவான பாவமுண்டு, மரணத்...க்...துவல்லாத பாவமு
முண்டு. ஒருவிதமான பாவத்தில் ...மது வேண்டுகோள் எப்
படியும் பயன்படும் எனும் பூரண ...ம்பிக்கையோ...டு ஜெபிக்க
...லாம். மற்றொரு பாவத்தின் விஷ...த்தில் அவ்வளவு உறுதி
யோடு ஜெபிக்கமுடியாது. ...ரி. யோவ...ன் அ...போஸ்தலன்
ஒரு விஷயத்தில் பாவஞ்செய்கிற சகோத...க்குத் தேவன்
ஜீவனை யளிப்பார் என உறுதியாய்ச் சொல்லுகிறார். மற்றொரு
விஷயத்தில் நாம் ஜெபஞ்செய்யவேண்டாமென நம்மை யவர்
தடுப்பதில்லை. வேண்டுதல்செய்ய நான் சொல்லேன் என
மாத்திரம் சொல்லிவிடுகிறார். மரணத்துக்கேதுவல்லாத பாவத்
தைச் செய்தார் விஷயத்தில் பொதுவாகக் கேட்கவெனும்
பதத்தை வழங்குகிறார். மரணத்துக்கேதுவான பாவத்தைச்
செய்தார் விஷயத்திலோ 'வேண்டிக்கொள்ளச் சொல்லேன்'
எனக் கூறுகிறார். பாத்தியதை உரிமையாதல்பற்றிக் கேட்க
லாம். 'ஐக்யம் காரணமாக வேண்டிக்கோடல்' (வெஸ்ற்
காட்) இம்மாறுதல் கவனிக்கத்தக்கது. எனவே மரணத்துக்
கேதுவான பாவஞ்செய்தவர்களுக்காக 'கேட்டல்' செய்யமுடி
யாது. மரணத்துக்கேதுவல்லாத பாவஞ்செய்தவர்களுக்காகச்
செய்யலாம். எம்பிரான் தம் பிதாவைநோக்கிப் ...ன்முறை
யும் வேண்டிக்கொண்டதாக வாசிக்கிறோம். தேவ... ...ய
குடும்பத்தில் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரே ஜீ...
ராக விருத்தலினால் சகோதரர் ஒருவருக்கொருவ...
யும் வல்லமையைப் பெற்றுக்கொள்...
ஜெபம் செய்யும்போது 'வேண்...

வேண்டிக்கொள்ளும் வழக்கும் பாத்தியத்தையும் அவர்களுக்குண்டு. மாணத்துக்கேதுவான பாவமென்பதன் பொருளும் இதிலிருந்து சற்று விளங்கும். மரணத்துக்கேதுவான பாவஞ் செய்த சகோதரனாகிய அவயவம் சரீரத்தோடு தனக்குள்ள ஐக்யத்தைவிட்டு விலகுகிறான். தேவனுடைய குடும்பத்தினின்று தானாகவே ன்னை விலக்கிக்கொள்ளுகிறான். இப்படி விலகிக்கொண் ட ஒருவனுக்காக, விலகிக்கொள்ளாமல் இன்னும் ஐக்யமா ருக்கும் ஒருவனுக்காக நாம் விண்ணப்பம் செய்தல்போல வி ணப்பம் செய்யமுடியாது நாம் ஜெபிக்கக்கூடா தெனத் த க்கப்படுவதில்லை. வேதத்தின் பல பாகங்களைக் கவனிக்கு த்து அவர்களுக்காக ஜெபிக்கும்படியாகவே உ சாகப்ப த்தப்படுகி றோம். அஞ்ஞானிகளுக்காகவும் புறமதஸ் க்காகவும் ஜெபிக்கவேண்டுவது எவ்வளவு தூரம் நமது கடமையோ அவ்வளவுதூரம் விலக்கப்பட்டவனும் பாதகமான பாவத்தைச் செய்பவனுமாகிய சகோதரனுக்காகவும் ஜெபிக்கவேண்டுவது கடமையே (மத். 18. 17. 2 தெச. 3. 14, 15.). நாம் 'எல்லா மனிதருக்காகவும்' ஜெபிக்குமாறு கட்டளைபெறுகிறோம் (1 தீமோ. 2. 1–4.). அப்படியானால் நமது 'சகோதரர்' பொருட்டு எத்தனை அதிகமாக ஜெபிக்க வேண்டும். பரி. பவுல் அப்போஸ்தலனுடைய 'இருதயத்தின் விருப்பம்' தன்னுடைய யூதச் சகோதரர் பொருட்டாகத் தன்னையே 'கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவன்' ஆக்கிக் கொள்ளவும் ஆயத்தமாய் அவ்வளவு பெரிதாயிருந்ததென்னின் (ரோ. 10. 1; 9. 1–3.), கடினப்பட்ட கிறிஸ்தவர்பொருட்டு ஜெபிப்பதற்கு நாமும் அதே ஆவியுடையாராயிருக்கவேண்டுமல்லவா? எல்லாவற்றிலும் மேலாக எம்பிரானே நாம் நமது பு
க்காகவும் ஜெபிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டி
(மத். 5. 44.). 'கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகை
விரோதிகளேயன்றோ.
ஙவினின்றும் தங்களை விலக்கிக்
ஜெபிப்பதுபோல அவ்வளவு நம்



பிக்கையோடு இவர்களுக்காக ஜெபிக்கமுடியாது. மனுஷனுடைய சித்தம் தேவனுடைய சித்தத்தைப்போலவே சுயாதீனமானதாயு மிருக்கிறது. தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியாக தேவன் ஒருவனைக் கட்டாயம்பண்ணவும் வலுவந்தம் செய்யவும் முடியாது. ஆனால் அவர் ஒவ்வொருவர் பேரிலும் தமது அளவற்ற அன்பைப் பொழிகிறார். அதன் வல்லமையின் மூலமாய் மனிதனைக் கிறிஸ்து னிடமாகவும் தம்மிடமாகவும் இழுத்துக்கொள்ளுகிறா. இவ்வாறு இழுத்துக் கொள்ளப் பெறுதற்கு ஏதுவாய் தேவ அன்புக்கு மனித அன்பு இணங்கவேண்டும். தனது அன்ை வெளியிடாது அடக்த் தடுத்தாளவல்ல சக்தியும் மனிதனுக்கி க்கிறது. எனவே எல்லோரும் இரக்ஷிக்கப்படவேண் மென்ப தெய் சித்தமேயெனினும் அந்தச் சித்தத்தை மனிதனு ய சித்தம் மட்டுப்படுத்திவிடுகிறது. இது ஒரு பெரிய இரகசியமாயிருக்கிறது. அதுவும் அவர் எக்காரியங்களையும் முன்னறிந்துகொள்ளும் இயல்பினர் என்பதை நோக்குமிடத்து இத்தன்மை நமக்கு விளங்காத இரகசியமாகவேயிருக்கிறது. எனினும் நமக்குச் சந்தேகம் நிகழ்ந்தகாலையில் நாமும் பரி. பவுல் அப்போஸ்தலன் கூறியவாறே. 'ஆ, மனிதனே, தேவனுக்கு விரோதமாய்ப் பதிலுரைப்பதற்கு நீ யார்?' என மாத்திரம் கூற வேண்டும். பாவத்தைப்பற்றி யாராயுமிடத்து மனிதனுக்குள்ள பெரிய சோதனை யென்னவெனின் அவன் தேவன் நினைக்கிறபடி நினையாமல் தனக்கு நலமானபடியே பாவத்தின் தன்மையைப்பற்றி நினைத்துக்கொள்ளுகிறான். மனிதனுடைய இயற்கையான சுபாபம் என்னவெனில் அவன் எந்தப் பாவமும் மரணத்துக்கேதுவானதன்றென நினைக்கிறான். தான் கஷ்டமும் துன்பமுமின்றி யிருக்கவேண்டுமென விரும்புகிறான். நியாயமான பிரமாணங்களை நமக்கு ஏற்படுத்
நமது இராஜாவுமாகிய அவருடைய பெருமைக்கும்
துக்கும் விரோதமாய்த் தான்செய்
ரமாகக் காணப்படும் என்பதை

இல்லை. 'நீங்கள் சாகவே சாவதில்லை.' எனச் சர்ப்பம் கூறியதனையே உண்மையெனக் கொள்கின்றான். எனினும் தேவகுமாரனுக்குள் நித்தியஜீவனில் பங்குள்ளவர்களாகவாக தேவன் அதைப்பற்றி என்ன நினைப்பார் அவற்றை எவ்வாறு நோக்குவார் என நமக்குத் தெரிகிறது. பாவத்தின் பயங்கரம் வரவர அதிகப்படுகிறது. ஆனாலும் 'தேவன் நம்மிடத்து விரும்புங் காரியங்களினும் மனிதர் விரும்புகிற காரியங்களையே செய்கிற' (காண்ட்லிஷ்) அந்தச் சோதனை இன்னும் அகன்றுவிடவில்லை. தேவனுடைய கட்டளைகள் சற்று எளிதானவைகளாயிருக்கவேண்டுமென மனிதர் விரும்புகின்றனர். நமது சகோதரன் தான்செய்த பாவத்துக்காக மனஸ்தாபப்படானாயின் அவன் மனஸ்தாபப்படாமலே இரக்ஷிக்கப்படவேண்டுமென விரும்புகிறோம். அதிக மோசமானவையென நமக்குத் தெரிந்தவற்றையும் தேவன் அவ்வளவு மோசமானதன்றெனக் கருதமாட்டாராவென எதிர்பார்க்கிறோம். இந்த ஒரு விஷயத்தில் 'உம்முடைய சித்தமல்ல என்னுடைய சித்தம் செய்யப்படுவதாக' எனக் கேட்கிறோம். கடவுள்மீது நமக்குள பற்று இவ்விஷயத்தில் அதிகமாய்ச் சோதிக்கப்படுகிறது. இதைப்பற்றிக் காண்ட்லிஷ் ஐயர் அடியில்வருமாறு சொல்லுகிறார்:—'எனினும் நாம் பலவீன சித்தத்திற்கு இடங்கொடுத்து நமக்குப் பிரியமானவற்றைச்செய்து நடந்து தேவன்பேரில் நமக்குள்ள விசுவாசத்தையும் பற்றையும்விட்டு விலகாதிருக்கவேண்டும். நமது சகோதரன் இரக்ஷிக்கப்படும் காரியத்தில் அது எவ்விதமாயிருப்பினும், நமக்காகவும் தேவனுக்காகவும், தேவனுடைய மகிமைக்காகவும் நமது இரக்ஷிப்புக்காகவும் "எல்லா அநீதியும் பாவந்தான், மரணத்துக்கேதுவான பாவமுமுண்டு" என்பதைமாத்திரம் உண்மையென நம்பி ஏற்றுக் ...மாக.'

...க்கேதுவான பாவம் என்பது ஒரு சகோதரனைப் ...யத்தினின்றும் பிரித்துவிடுவதெனப் ...ன்னும் சற்று ஆராய்வோம்.



'பாவம்' என்பதைக் குறிக்கும் மூலபதம் 'பாவம்' அல்லது 'ஒரு பாவம்' எனப் பொருள்படும். அந்தப் பாவத்தின் தன்மை மரணத்துக்கேதுவானது. அது பாவமா அல்லது ஒரு பாவமா? அநேகர் அது மரணத்துக்கேதுவான ஒருவகையான பாவமெனக் கருதுகிறார்கள். ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் அத்தகைய ஒருவிதமான பாவத்தைக்குறித்துப் பேசியதாகத் தோற்றவில்லை. ஏனெனில் (1) அப்படிக் கூறுவது அவர் கருத்தாயின் அதை மூலபாஷையில் அதிகத் தெளிவாய்க் கூறியிருக்கக்கூடும். பொதுவாகப் பாவமெனமாத்திரம் கூறியிருப்பாராயின் இப்படி இருவிதமாகவும் பொருள்படுகிற மாதிரியே எழுதுவார். (2) அப்படியாயின் அந்த விசேஷித்த பாவம் யாதெனத் தெளிவாய்க் கூறிவிடுவாரேயன்றி நாம் அதை நிதானித்துக்கொள்ளும்படியாக விட்டிருக்கமாட்டார். (3) 'மரணத்துக்கேதுவல்லாத' ஒருவிதமான பாவமிருப்பதாக எவரும் கருதுவதில்லை. ஆனால் இருவாசகங்களுக்கும் கிரேக்கு பாஷையில் வழங்குவது ஒரே பதம்தான்.

ஒருவிதமாய்ப் பார்த்தால் ஒவ்வொரு பாவமும் 'மரணத்துக்கேதுவானதே.' பாவத்தின் இயற்கையே மரணத்துக்கு வழிநடத்துவதுதான். எப்படியும் அற்ப சொற்பமாகவோ அதிகமாகவோ அது நம்மைக் கிறிஸ்துவினின்றும் பிரிக்கிறது. ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் 'மரணத்துக்கேதுவல்லாத' பாவமுமுண்டெனத் தெளிவாயுரைக்கிறார். ஆகையினால் ஒவ்வொரு வியாதியும் மரணத்துக்கேதுவாயிருப்பது போலவே ஒவ்வொரு பாவமும் மரணத்துக்கேதுவாதல் அது அதிகப்படுவதையும் குறைவதையும் சார்ந்திருக்கிறது. ஒரு வியாதி மரணத்துக்குக் காரணமாய் அநேகக் கடூரமாயிருக்கும்போது அது மரணத்துக்கேதுவான வியாதியெனச் சொல்லுகிறோம்.

இதனால் போந்ததென்? நாம் பாவத்தை மர... வான மோசமுடையதென்றும் மரண... ரண பாவமென்றும் இருபிரிவாக...

யில் சிலகாலங்களில் பாவத்தை இவ்வாறு பிரித்திருந்தனர். அதனால் அடைந்த பயன் பெருவிபத்தே. ஞானஸ்நானத்தின் பின் செய்யப்பட்ட மரணத்துக்கேதுவான பாவம் மன்னிக்கப்படாதென ஒருகாலத்தில் நினைந்திருந்தனர். தற்காலத்திலும் உரோமைச்சபையார் மரணத்துக்கேதுவானவையென்றும் மன்னிக்கப்படத்தக்கனவென்றும் இருவிதமாய்ப் பாவத்தைப் பிரித்திருக்கின்றனர். இதனால் விளைவது பெருந்தீங்கே. ஒருவன் சிலவகையான கொடிய பாவங்களைச் செய்தமாத்திரத்தில் அவன் தன்னைக் கிறிஸ்துவின் கூட்டுறவினின்றும் பிரித்துக்கொண்டதாக ஐயுறவின்றிச் சொல்லுகிறோம். அப்படிப்பட்டவன் தான் மனமாற மறுப்பனேல் அவன் தன் பாவத்தினின்றும் சீர்திருந்திக் குணப்படமாட்டானோவென நினைந்து, அவன் அப்போஸ்தலருடைய போதனையின்படி (1 கொரி. 5.); சபையினின்றும் புறம்பாக்கப்படுகிறான். மற்றொருவன் இவன் செய்ததிலும் அதிகக் கொடுமையும் பொல்லாப்புமான பாவங்களைப் பிறரறியாமற்செய்து சபையினின்றும் புறம்பாக்கப்படாமலுமிருக்கலாம். எனவே பாவத்தில் அப்படிப்பட்ட பிரிவுகள் ஏற்படுத்தமுடியாது. வைத்தியன் எந்த வியாதி மரணத்துக்கேதுவானதெனவும் எந்த வியாதி மரணத்துக்கேதுவானதன்றெனவும் சொல்லமுடியாது. சில வியாதிகள் எப்பொழுதும் மரணத்துக்கேதுவானவைதான். மற்றும் சில ஒருவாறுதான் அப்படி, வேறு சில வியாதிகள் ஒருவனுக்குப் பெரிய தீங்கை விளைப்பனவாகவும் மற்றவனுக்கு அற்பசொற்ப தீங்கைமாத்திரம் விளைப்பனவாகும். ஆகையினால் பெரும்பாலும் வியாதியின் தன்மை நோயாளியின் சரீர ஸ்திதியையும் அவன் வசிக்குமிடத்தையும் சார்ந்திருக்கிறது.

திட்டமாகவே இரக்ஷிக்கப்படுவார்கள் எனும் நம்பிக்கை
எவர்களுக்காக நாம் ஜெபிக்கமுடியாதோ அவர்கள்
...ாகவே சகோதரராயிராமல் ...ராளவாகமாத்திரம்
...ள் எனப் பார்த்தோம். சில விஷயங்
...ளைக் கூறிவிடலாம். பெரும்பாலார்



காரியத்தில் இதைச் சொல்லமுடியாது. இந்த நிருபத்தில் இருளில் இருப்பவர்களைக் குறித்தும், நித்தியஜீவன் தங்களில் நிலைத்திராதவரைக்குறித்தும் சொல்லியிருக்கிறது. இவர் யாவரெனில் (1) தங்கள் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படாமலும் தங்கள் பாவங்களை அறிக்கையிடாமலும் இருப்பவர்கள் (1. 6, 8, 10.), (2) சகோதரனைப் பகைப்பவர் (3. 15.), (3) கிறிஸ்துவை மறுதலிக்கிறவர் (4. 1–6.), இவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படாதென பரி. அப்போஸ்தலன் சொல்லவில்லை. வேதத்தின் சில பாகங்களில் கடினப்பட்ட பாவங்கள் தேவனால் மன்னிக்கப்படக்கூடாத ஸ்திதிக்கு வந்துவிடுகிறதாகப் பார்க்கிறோம். (மத். 12. 31. மாற். 3. 28, 29. எபி. 6. 4–8; 10. 26–31. 1 தீமோ. 4. 2.)

ஒருவன் இருதயம் கடினப்படும்போது அது தாறுமாறாகி நன்மைசெய்யுமாறு எவ்வளவுதூரம் தெளிவாக தேவனுடைய ஆவி அவனைத் தூண்டியபோதிலும் அதற்கு இடங்கொடாமல் அறிந்திருந்தும் வேண்டுமென அற்பமும் மனவருத்தமின்றிப் பாவத்தைச் செய்கிறான். கிறிஸ்தவன் தனக்கு எவ்வளவு சோதனை நேரிட்டபோதிலும் தேவனுடைய ஞானத்திலும் அன்பிலும் நம்பிக்கைவைத்து நினைத்தற்கரிய நியாயமும் இரக்கமும் நிறைந்த தெய்வமே அவனைச் சீர்திருத்துமாறு விட்டுவிடவேண்டும்.

இனி '**அநீதியெல்லாம் பாவந்தான்**' என்பதைமாத்திரம் கவனிக்கவேண்டும். இதை எழுதுவதற்கு இருகாரணங்களுண்டு. மரணத்துக்கேதுவல்லாத பாவங்களைப்பற்றி நாம் பயமற்றிருக்கக்கூடாதென நம்மை எச்சரிப்பதொருகாரணம். நாம் தவறுதல்களும் பாவங்களும் செய்தபோதிலும் சகோதரன் ஒருவன் நமக்காக ஜெபித்தால் கிறிஸ்துவோடு நமக்குள் ஐக்கியம் பிரிந்துபோகாமல் அந்தச் சகோதரனின் விண்ணப்பத்தின் பயனாய் நமது பாவம் மன்னிக்கப்படும் எனும் உண்மையும், தம்மில் அன்புகூருகிறவர்கள் மரணத்துக்கேதுவான பாவஞ்செய்தாலும் தேவன் அவர்கள் பாவத்தை மன்னித்து

அவர்கள் பிரீதியாகித் திரும்பவும் தமது பூரண ஐக்யத்தில் நிலைத்திருக்கச் செய்வார் எனும் உண்மையும், நாம் நோக்கும் போது நாம் பாவத்தின் சம்பளத்தைப்பற்றி எளிதாய் கிறிஸ்து வால் சிலுவையில் சுமக்கப்படாவிட்டால் நாம் மிகவும் அற்ப மென நினைக்கும் ஒரே ஒரு சிறுபாவமும் நம்மை மோட்ச ராஜ் யத்தில் அடியெடுத்துவைக்கவிடாது நம்மைப் புறம்பாக்கி விடும். இரண்டாவது, தேவன் நீதியெனக் கருதுவதற்கு மாறாக அறிந்தோ அறியாமலோ சிறிது பிசகு செய்தகாலத்தும் அதுவும் பாவமாகையால் நாம் எவ்வளவு அதிகமாக நம்முடைய சகோதரருக்காகவும் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்துவதற்காம். நம்மில் ஒவ்வொருவருக் காகவும் சகோதரராகிய நாம் ஜெபிக்கவேண்டும். ‘நாம் எல் லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்’ (யாக். 3. 2.). ஒவ்வொரு பாவமும் தேவனுடைய பார்வையில் விரோதமா கவேயிருக்கிறது.

திட்டமான உள்ளுணர்ச்சியில் ஆவிக்குரிய நம்பிக்கை (18–20.). ‘பாவம்’ சகோதரருக்குள் பாவம், மரணத்துக்கேது வானபாவம், இவைப்பற்றி நினைந்தமாத்திரத்தில் மற்றுமோர் முறை விசுவாசத்தின் உறுதியைப்பற்றிச் சொல்லுகிறார். கிறிஸ்தவராகிய நாம் நாடோறும் பார்த்துப் பரிதபித்து அறிந் திருந்தும் திரும்பவும் அதே உண்மைகளையே உறுதிப்படுத்திக் கூறுகிறார். தேவனால் பிறப்பதின் இலாக்கியம். (18) தெய்வத் தோடு நமக்குள்ள இலாக்கியம். (19) தெய்வத்தோடு நமக்குள் ஐக்யத்தால் தெய்வத்தைப்பற்றி நாம் அறியும் அறிவு. (20) (வெஸ்றகாட்.)

(18) தேவனால் பிறந்த (திருக்கிற, எவனும் பாவஞ்செய்யா னென்று அறி(வோம்)ந்திருக்கிறோம்; (ஆனால்) தேவனால் பிறந்தவ(ர் அவனை)ன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். (19) நாம் தேவனால் உண்டாயிருக்கி றோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்



கிறதென்றும் அறி(வோம்)ந்திருக்கிறோம். (20) அன்றி யும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனு டைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென் றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவ ரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.

இப்பாகத்தில் ஒவ்வோர் வாக்கியமும் ‘அறிவோம்’ எனும் பதத்தை மகுடமாக உடைத்தாயிருத்தல் விசேஷமே.

கடைசி வாக்கியங்கள் பிரிக்கப்படக்கூடாமல் ஒன் றோடொன்று இணைக்கப்பட்ட சங்கிலிகள்போலிருக்கின் றன. தேவன் ஜீவன்கொடுத்ததினால் பாவஞ்செய்ய முடியாது. பாவஞ்செய்ய முடியாமையால் பிசாசானவனின் சகல கிரியை களினின்றும் விடுபட்டிருக்கிறோம். அவ்வாறு விடுபட்டிருப் பதினால் உலகத்தினின்றும் பிரிந்திருக்கிறோம். இத்தனையும் செய்தவர் குமாரன். சத்தியமாய் விளங்குகிற தேவனுக்கு அவர் மூலமாய்ச் சொந்தமானோம். இதைக் கவனிக்கும்போது இந்நிரு பத்தின் துவக்கத்தில் ‘நம்முடைய ஐக்யம் பிதாவோடும் அவ ருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடுமிருக்கிறது’ எனக் கூறியதன் ஆழ்ந்த கருத்தின்னதென வெளியாகிறது.

(வாக். 18.) நாம் அறிவோம். இவ்வார்த்தையை முன்னரும் பார்த்தோம் (வாக். 13 வியாக்கியானம் பார்க்க.). இத்தொடர் நாம் அறிவையுடையராயிருக்கிறோமென்பதாகிய நமது இரு தயக் காட்சியைக் குறிக்கிறது. கள்ளப்போதகர் தாங்கள் அறிந்ததே பேரறிவெனவும் அவ்வறிவைச் சாதாரண மனிதர் அறியாரெனவும் அறிய முடியாதெனவும் கூறிக்கொண்டிருப் பதும் பரி. அப்போஸ்தலன் ஆத்திரமின்றி வெகு எளிதாய்க் கிறிஸ்துவின் அறிவை இந்தவிதமாய்க் கூறிவிடுகிறார். இக் காலத்திலும் அதேபிரகாரமாகவே இந்துக்கள் தங்கள் ஞான மாத்திரம் பெரிதெனக்கூறவும், மற்றும் அஞ்ஞவாதிகக் கொள்கை யர் தேவன் அறியப்படாதவரெனவும், அறியப்படக் கூடாதவ

ரெனவும் கூறவும் கிறிஸ்தவராகிய நாமோ தேவனைப்பற்றிய நமது அறிவைக் கூறியறிவிக்கலாம்.

கிறிஸ்தவர்கள் பூரணமாய்த் திட்டமாயறிகிறவைகள் எனக் கூறும் ஐந்து உண்மைகளையும் ஒருங்கேவைத்து நோக்குவது நமக்குப் பேருதவியாகும்.

அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினாலே அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 3. 2.

மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். 3. 14.

நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். 5. 19.

தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம். 5. 18.

நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிந்திருக்கிறோம். 5. 20.

இவற்றுக்கெல்லாம் ஆமென் எனச் சொல்லக்கூடியவன் பாக்கியவான்.

**தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்.** 'பிறந்த எவனும்' எனும் வார்த்தைகள் 3. 9—ல் வழங்குவனபோல்வனவே. அதன் விவரிப்பை 3. 6—ல் காண்க. இதற்கு இரண்டு வாக்கியங்கட்கு முன்தான் பரி. அப்போஸ்தலன் கிறிஸ்தவனை சகோதரன் பாவஞ்செய்கிறதாகப் பேசினார். இப்பொழுதோ பாவஞ்செய்யாததாகப் பேசுகிறார். இதைப்பற்றி மாரிஸ் என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார். 'நாம் சில மனிதரைக் குறித்துக்கொண்டு "இவர்கள் தேவனுடைய பிள்ளைகள்" எனச் சொன்னால் இவர்களுடைய ஜீவியம் தேவனுடைய கற்பனைக்கு இசைய விருப்பதற்கு மாறாய்த் தேவனுடைய கற்பனை அதிசாதாரணமாய் இவர்கள் நடைக்கு இசைவானதாக



விருக்கவேண்டியதாகும். அப்படியின்றி பரி. அப்போஸ்தலன் ஒவ்வொருவரையும் நோக்கி "உங்களில் தேவனால் பிறந்தது பாவஞ் செய்யாது. நீங்கள் இடைவிடாது எப்போதும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் நீங்கள் பாவஞ்செய்யமாட்டீர்கள்" எனச் சொன்னால் பாவத்தை அறிக்கையிடுகிற எந்த ஆத்துமாவும் "அது அப்படித்தான். நான் அதை அறிவேன். நான் நீதியானவைகளைச் செய்யும்போதும் தப்பிதமானவைகளைச் செய்யும்போதும் அவர் சொல்வது சரிதான் என்று அறிந்துகொள்ளுகிறேன். ஏனெனில் நான நீதியான கிரியைகளைச் செய்யும்போது நான் என்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவரை என் பிதாவாகக் கொண்டிருந்தேன்; என் சித்தமே பெரிதெனக்கொண்டு நான் நினைத்ததைச் செய்து உண்மையை மறுத்து அவர் என்னோடு இருப்பதாகவும் சகல நன்மைகளுக்கும் காரணர் அவரே என்பதையும் சொல்ல மறந்தபோதோ நான் தப்பிதமானவைகளைச் செய்தேன்" எனவே சொல்லவேண்டும். பரி. யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்தவனைப்பற்றி இவ்வாக்கியத்தின் முதல்பாகத்தில் 'தேவனால் பிறந்திருக்கிறவன்' எனச் சொன்னார். அதையடுத்து 'தேவனால் பிறந்திருக்கிறவன்' எனச் சொல்லுகிறார். 'தேவனால்பிறந்தவ(ரீ அவனை)ன் தன்னைக்காக்கிறன்(ர்.)' இதனின்றும் பிறந்தவன்(ர்) எனப் பேசப்படுவது இயேசுகிறிஸ்துவேயென வறிய ஏதுவாகிறது. ஈரிடங்களிலும் பேசப்படுகிறவன் தேவனுடைய பிள்ளையாக்கப்பட்டவனேயென்றும் அத்தகையான் தன்னைக் காத்துக்கொள்ளுகிறான் என்றும் வேறுவிதமாகவும் வியாக்கியானம் சொல்லுவர்.

கிறிஸ்து இரவு பகலாக விசுவாசியின் ஆத்துமாவைக் காத்துவருகிறார். இங்கே காக்கிறார் என்பதற்கு வழங்கும் பதமும் சிலுவையைப் போர்ச்சேவகரும் நூற்றுக்கதிபதியும் காத்தார்கள் (மத். 18. 36, 54.) என்பதில் வழங்கும் பதமும் கிறிஸ்துவின் கல்லறையைக் காத்ததற்கு வழங்கும் பதமும் (மத். 28. 4.) மூலபாஷையில் ஒரேபதந்தான். நமக்கு விரோ

தங்களும் மோசங்களும் நேரிட்டகாலத்தும் கிறிஸ்து நம்மைக் காக்கிறார் என நம்பிக்கையோடு இருக்கலாம்.

**பொல்லாங்கன் அவனைத் தொடான்.** இதை 'அவன்மேல் கைபோடான்' எனவும் மொழிபெயர்க்கலாம். [illegible] தான் நம்மைத் தொடான் என்பதன்று. அவன் தொ[illegible] காலத்தும் அவன் நம்மைப் பிடித்திழுத்துப்போதற்கு இ[illegible] அவனுக்கு இடங்கொடார். சாத்தானை வாசற்படியில் படு[illegible]திருக்கும் துஷ்டமிருகத்துக்கும் (ஆதி. 4. 7.), யாரை [illegible] விழுங்கலாமெனக் கர்ச்சித்துத் திரியும் சிங்கத்துக்கும் (1 பே. 5. 8.), ஆடுகளைப் பீறிச் சிதறடிக்கும் ஓநாய்க்கும் (யோவா. 10. 2.) ஒப்பிட்டிருக்கிறது. ஆனால் எம்பிரானே நல்ல மேய்ப்பன். தம் கையினின்றும் எவனும் தம் ஆடுகளைப் பறித்துக்கொள்ள விடேன் என வாக்குப்பண்ணுகிறார் (யோவா. 10. 2[illegible].). இக்கூற்று எம்பிரான் கடைசியாகத் தமது சீஷருக்காகச் செய்த விண்ணப்பத்தை யொத்திருக்கிறது. 'நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்' என்றார்.

**(வாக். 19.) நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறி(வோம்)ந்திருக்கிறோம்.**

கிறிஸ்தவனையும் உலகினையும் மறுபடியும் மாறுபடுத்திக் கூறுகிறார். கிறிஸ்தவர் தேவனோடு இணைக்கப்பட்டுள்ளார். உலகினர் பொல்லாங்கனோடு பிணைக்கப்பட்டுள்ளார். **தேவனால்** என்பதற்கும் **பொல்லாங்கனுக்குள்** என்பதற்கும் மிகுந்த பேதமுண்டு. தேவனால் என்பது தேவனிலிருந்து உண்டாய், முழுவதுமாய் அவருக்குச் சொந்தமாய் அவருடைய ஜீவனிலே பங்குள்ளவர்கள் என்பதைக் குறிக்கும். சாத்தானுக்கும் உலகுக்கும் அத்துணைச் சம்மந்தம் கிடையாது. உலகம் அவனுக்குள் கிடக்கிறது. அதாவது அவனுடைய வல்லமைக்குள்



அவனுடைய ஆளுகையின்கீழ் இருக்கிறதெனவாம். தற்காலஸ்திதியும் அதுவே. உலகம் அப்படித்தான் இருக்கவேண்டுமெனக் குறிக்கப்படவில்லை. கிறிஸ்துவின்மூலமாய் வாசல் திறவுண்டிருக்கிறது. உலகம் மரணத்தினீங்கி ஜீவனுக்குள் பிரவேசிக்கலாம். கிறிஸ்துவின் வல்லமையினின்றும் தனக் கடிமைபூண்ட மனிதனைப் பிடித்து இழுத்துக்கொள்வதற்கு சாத்தானுக்கு வலிமை கிடையாது. தமதூழியனைச் சாத்தானின் பகையிலும் வஞ்சகத்திலும் நின்று மீட்டு இரக்ஷிக்கும் வலிமையோ எம்பிரானுக்குண்டு. 'என் கையினின்றும் எவனும் அவர்களைப் பறித்துக்கொள்ள முடியாது' எனச் சாத்தான் கூறமுடியாது. ஏனெனில் எம்பிரான் சாத்தானிலும் மிக்க வலிமையுடையாரன்றோ.

ஈண்டு உலகமெனப்படுவது 2. 15–ல் கூறியாங்கு (வியாக்கியானம் நோக்க.) தெய்வத்துக்கு விரோதமாய்க் கலகம்செய்து சாத்தானின் வல்லமையின் கீழிருக்கும் உலகமேயாம். உலகமுழுவதும், மூலபாஷையில் முழுவதும் எனும் பதம் வற்புறுத்தப்படுகிறது. 'உலகம் எல்லா விஷயத்திலும் எல்லா நிலைமையிலும்' என்பது பொருள்.

காமம், குரோதம், பகை, அவநம்பிக்கை முதலியவற்றால் கறைப்பட்டு அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கும் உலகைப்பற்றிச் சிந்தனை செய்யும்போது கிறிஸ்தவனின் நம்பிக்கை ஒருவாறு தளர்ச்சியடையலாம். ஏனெனில் இவ்விஷயங்களைச் ஜெயிக்கப் போகும்போது அவனுக்கும் சோதனைகள் நேரிடலாம். அன்றியும் அவனுக்குள்ளும் இவ்வுலக வியற்கையோடு சார்ந்தொழுகும் தன்மையுமுண்டு. சிறிது கிறிஸ்துவின் பதத்தை விட்டு நீங்க இத்தீமைகள் அவனைப் பற்றிவிடும் என்பதுண்மை. ஆனால் பரி. அப்போஸ்தலன் இங்கு உலகையும் உலகாதிபதியையும்பற்றிக் கூறியது கிறிஸ்தவனின் விசுவாசத்திற்குப் பங்கம் விளைக்குமாறன்று. அவனது விசுவாசத்தை நிலைப்படுத்துமாறேயாம். எனவே மூன்றுந்தடவையாக 'நாம் அறிந்திருக்கிறோம்' என விளம்புகிறார்.

(வாக். 20.) அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை யறிந்து கொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்.

உலகில் பலவிதமான சோதனைகளிருந்தபோதிலும் நமக்குள்ள விசுவாசம் குறைவுபடாது என்பதற்குக் கடைசி ஆதாரத்தைக் காட்டுகிறார். உலகில் எவ்வகைத்தாம் தீமையுஞ் சங்கடமும் நேர்ந்தகாலையும் இதைமாத்திரம் அறிந்து பலமாய்ப் பற்றிக்கொள்ளுதல் போதுமானது. இத்தீய உலகின் காரியங்களைச் செவ்வைப்படுத்துமாறு வந்தவர் மனுஷருக்குள்ளிருந்தே வந்த வேறோர் சீர்திருத்தக்காரரல்லர். விண்ணின்றிழிந்த தேவதூதனுமல்ல. தேவனுடைய குமாரனாகிய அவரே வந்தார். அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றவும் செய்வார். அதுவரையும் அமர்ந்து காத்திருப்போம். அதுவரையில் 'உலகிலிருந்து தாம் தெரிந்துகொண்ட' நமக்கு உண்மையான தெய்வத்தைப்பற்றிய உண்மையான உணர்வையும் அவரோடு உண்மையும் உயிருள்ளதுமான ஐக்கியத்தையும் கட்டளையிட்டிருக்கிறார்.

மனுஷருக்குத் தெய்வத்தை உண்மையானவராகக் காட்டுவதும் மனுஷனுக்குள்ள சகல சம்பந்தங்களிலும் அவனைத் தேவனோடு உண்மையுள்ளவனாக்குவதும் தேவகுமாரன் நமக்குப் புறம்பாகவும் உள்ளாகவும் நடப்பித்த இருகாரியங்களாம். தேவன் உண்மையுள்ளவரெனக் காட்ட தேவகுமாரன் உலகில் வந்தார்; மனிதராகிய நாம் உண்மையுள்ளவராகும்படி தேவகுமாரன் நமக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவாலன்றித் தேவனை உண்மையின் இருப்பவராக நாம் அறிதலும், அவரைப்பற்றித் தியானித்தலும் அவர் தன்மையையுணர்தலும் அசாத்தியமாம். ஏனெனில் பாவமும் பாவத்தாலுண்டான இதயாந்தகாரமும் அவரை நமக்கு மறைத்துவிடும்.



'தேவனை உண்மையில் நாம் அறிந்தால் நாம் அவரில் மூழ்குவோம்.' தேவன் உண்மையும் சத்தியமுமாயிருப்பின் எனது பாவமும் சத்தியமும் உண்மையுமாம். பாவியாகிய நானும் உண்மையும் சத்தியமுமே. தப்பிதம் உண்மை. தேவகோபம் உண்மை. நியாயத்தீர்ப்பு உண்மை. தண்டனையும் உண்மையென்று காண்ட்விஷ் ஐயர் சொல்லுகிறார். தேவகுமாரன் இயற்றுமாறு வந்த இருவிதத்தொழில்கள் தம்மைப் பலியிட்டுப் பாவத்தடுப்பைத் தகர்ப்பதும், ஆன்மாந்தகாரத்தை வெளிப்படுத்தியதனை அகற்றுவதுமேயாம். கிறிஸ்துவுக்குள் தேவன் உண்மையாய் ஜீவனுள்ளவரும் இருப்பவரும், நம்மோடு தனித்தனியே சம்பந்தமுடையவரும் ஆகிறார். இந்தச் சம்பந்தம் எல்லாம் தெய்வமென்றே கொள்ளும் கொள்கையுடையதன்று. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் இப்பொழுதும் மனுஷன் தேவனோடு ஐக்கியப்படுகிற அறிவைக் குறிக்கும். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்.

இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் அதாவது சத்தியமுள்ளவரை நாம் அறிதற்பொருட்டு வந்து நமக்கு அறிவைக்கொடுத்த இவர் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து. இவர் மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார். இயேசுவானவர் தம்மை ஜீவனென்றழைக்கிறார் (யோவா. 14. 16.). 'நித்தியஜீவன்' என்பது காலத்துக்கும் அதன் வேறுபாடுகட்கும் அடங்கியதன்று. உலகத்துக்கும் உலக சரித்திரங்கட்கும், சகல அண்டங்கட்கும் அடங்கியதுமன்று. தேவன் உண்மையானவராக ஜீவிக்கும் ஜீவன் அது. அவரிலும், அவரிலிருந்தும், அவருக்காகவும், அவருக்கும் உள்ள ஜீவன் அது. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே இந்த நித்தியஜீவன். உண்மையான தெய்வமானபடியால் அவர் அப்படியிருக்கிறார். ஆகையினால் நித்தியமாயிருக்கிற அவருக்குள் ஜீவிக்கும் யாவரும் அவரைப்போலவே நித்தியஜீவனுள்ளவராயிருக்கின்றனர்.

தாம் நித்தியஜீவனெனத் தாமே சொல்லுகிறார். என்ன? காண்ட்லிஷ் வியாக்கியானி சொல்லுகிறபடி 'அமைதி, சமாதானம், சந்தோஷம், தூய்மையும் பரிசுத்தமுமான அன்பு, முடிவற்ற பூரணமான பாக்கியம், மகிமை' ஆகிய நித்திய ஜீவனைச் சார்ந்த யாவும் என்னை யடைதலாற் பெறலாம். நான் பிதாவினிடம் நின்று பெற்றவெல்லாம் உங்களுக்கும் உரியன. பிதா எனக்கு எப்படியோ உங்களுக்கும் அப்படியே. இவ்விதமாய் உங்களுக்காகவும், உங்களுக்குப் உண்மையான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறேன், என்கிறார்.

### 4. கடைசி எச்சரிப்பு. வாக். 21.

இந்நிருபத்தின் கடைசிவாக்கியம் நிருபத்தை எழுதி முடித்தபின் திரும்பவும் நினைந்து எழுதியதொன்றுபோல் காணப்படுகிறது. 'இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்' என எழுதி முடித்துவிட்டார். பின்னரும் கீழ் வைத்த தமது இறகை எடுத்து.

வாக். 21. (என் சிறு) **பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக** என்று எழுதுகிறார். இங்கு விக்கிரகங்கள் என்பதை வார்த்தையின்படி எடுத்துக்கொள்ளாமல் மூலபாஷையின் பொருட்படி 'ஒப்புமை' எனக் கொள்ளவேண்டுமென்று பலர் கருதுகின்றனர். அங்ஙனமாயின் விக்கிரகங்கள் என்பது உண்மைபோல் காணப்பட்ட எல்லாவற்றையும், உண்மையான தெய்வத்துக்கு விரோதமாகச் செரிந்து (Cerinthus) வென்பவன் சொல்லிவந்த சகல தப்பறைகளையும், கிறிஸ்து மாமிசத்தில் வந்த உண்மைக்கு மாறாகக் கூறப்பட்ட சகல கொள்கைகளையும் குறிக்கும். ஆனால் பரி. அப்போஸ்தலன் இப்பதத்தை இதே பொருளில் இதற்குமுன் அவர்களுக்குள் வழங்கியிருந்தாலன்றி, எபேசிலுள்ளவர்கள் இதை உண்மையின் சாதாரண விக்கிரகங்களென்றே கருதுவர். ஏனெனில் அவர்களுக்குள் விக்கிரகங்களைப்பற்றிய பலத்த பயங்கரமான சோதனை யிருந்துவந்தது.



ஏனெனில் எபேசுப்பட்டணம் உலகிலெல்லாம் விக்கிரகாராதனை மலிந்த இடம். எத்தெருவிற் சென்றாலும் எப்புறம் திரும்பினாலும் எவ்வீட்டினுட் புகுந்தாலும் அங்கங்கெலாம் காணப்படுவது விக்கிரகமே. அந்நகரத்திற் பல வழகிய பெரும் பெரும் விக்கிரகங்களிருந்தன. அவற்றைச் சுற்றிலும் 'தீங்கனி பயப்பனவும் நறுமலருருப்பனவுமாய் தழைசெறிதருக்கள்' நிறைந்துள்ள சோலைகளும் வனங்களுமுண்டு. இவற்றினிடையே விக்கிரகாராதனைக் கொள்கையர் பலர் பற்பல அசங்கிய ஆபாசகிரியைகளை நடத்தியும் வந்தனர். ஒன்றையடுத்து ஒன்றாய் உற்சவங்களும் வேடிக்கைகளும் நடைபெற்று வந்தன. விக்கிரகாராதனை சம்பந்தமாய் சகலவித மந்திர ஜாலங்களும் செய்துவந்தனர் (அப். 19. 19, 27, 35.). கிறிஸ்தவரோ சொற்பப்பேரும் பலரால் அவமதிக்கப்பட்டவருமாயிருந்தனர். இராஜ்யத்திலும் தற்காலம் இந்திய கிறிஸ்தவருக்கிருப்பது போல் அவர்களுக்கு ஆதரவில்லை. பிறர் துன்பத்தினின்றும் அவர்களை மீட்பவருமிலர். தேசமதத்திற்கு விரோதிகளானமையின் இராஜபக்தியின்மைக்கு இஃதோர் அறிகுறியென நினைந்து அரசாங்கத்தாரும் அவர்களை ஒருவாறு பகைத்தனர். இவை காரணங்களால் அக்காலத்து அங்கிருந்த கிறிஸ்தவருக்கு நேர்ந்த சோதனைகள் பல. நாள்தவறினும் சோதனைகள்தவறா. பொது விசேஷங்களையும் கொண்டாட்டங்களையும் போய்ப் பார்க்கவேண்டுமெனவும் தாங்களும் கொண்டாடவேண்டுமெனவும் எழும் ஆசை ஒருபுறம்; தங்கள் அஞ்ஞான விசேஷங்களில் தங்களுடன் கூடாமைக்காக அவர்கள் சிநேகிதர் கோபித்துக்கொள்வார்களோவெனும் பயம் ஒருபுறம்; மற்றெல்லாரும் ஒருவிதமாக நடக்கையில் தாங்கள்மாத்திரம் இரண்டொருவர் அவர்களுக்கு மாறாக ஒழுகுவதாலெழும் வெட்கமும் நாணமும் ஒருபுறம்; இம்மட்டோ நியாயாதிபதிகளும் ஜனங்களும் கிறிஸ்தவரைப் பயமுறுத்தி அவருக்கு விரோதமாய் எழும்பிச் சிற்சிலரைக் கொலைபுரிந்ததுமுண்டு. எல்லாவற்றினும் மேலாய்க் கள்ளப்போதகர் ஒருவன் தன் இதயத்

தில் தேவனைத் தியானித்துக்கொண்டிருந்தால் அவன் விக்கிர காராதனை செய்தபோதிலும் அவனுக்கு அதனால் விளையும் தீங்கு யாதுமின்றெனப் போதித்துவந்தார். இவையே ஏதுக்களாக எபேசுவிலிருந்த கிறிஸ்தவரின் ஜீவியம் நாடோறும் கடினமாய்க்கொண்டே வந்தது. ஆதலின் பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்களை நோக்கி எச்சரிப்பாக 'நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக' எனக் கூறியதும் வியப்பேயோ? 'உண்மையான தேவனும் நித்திய ஜீவனுமாக விருப்பவரை இயேசுவால் கண்டுகொண்டீர்கள். உண்மையாயிருப்பவரில் நீங்களிருந்தால் உங்களுக்கும் அஞ்ஞானிகளுடைய மற்ற விஷயங்களுக்கும் பிரிவினையுண்டாக்கி ஒருகாலத்தில் நீங்கள் வணங்கிவந்த விக்கிரகங்களை விலக்குதற்குப் பலமுள்ளவர்களாவீர்கள்' என ஸ்லேற்றர் ஐயர் உரைக்கிறார்.

# யோவான் எழுதின

## பொதுவான இரண்டாவது நிருபம்.

முதலாவது நிருபத்தில் அது யாருக்கெழுதப்பட்டதென்றாவது எவர் எழுதியதென்றாவது யாதொரு வாழ்த்துதலாவது காணப்படவில்லை யென்பதைக் கவனித்தோம். இரண்டாம் மூன்றாம் நிருபங்களிலோ அவ்விஷயங்கள் காட்டப்படுகின்றன. மூன்றாவது நிருபம் காயு (Gaius) என்னப்பட்ட ஒருவருக்கு எழுதப்பட்ட கடிதமேயாகும். இரண்டாவது நிருபம் ஒரு ஸ்திரீக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் எனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். முதலாம் வாக்கியத்தில் காணப்படும் வெவ்வேறு விதமான விளிகளைப்பற்றி அவ்வாக்கியத்தின் வியாக்கியானத்தில் பார்ப்போம். எனினும் அதற்கிடையில் இந்நிருபம் ஒரு ஸ்திரீக்குத்தான் எழுதப்பட்டதெனும் அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு அந்நிருபத்தின் பொதுவான காரியங்களைக் கவனிப்போம்.

இந்த அம்மாள் ஓர் கிறிஸ்தவள். அவள் ஒருவேளை எபேசுக் கருகாமையிலிருந்த ஆறு முக்கியபட்டணங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்திருக்கலாம் (வெளி. 1. 11.). அவளுக்கு விவாகமான ஒரு சகோதரியுமிருந்தனள். அந்தச் சகோதரியின் பிள்ளைகள் எபேசுவில் வசித்திருந்தார் (வாக். 13.). பரி. யோவான் அப்போஸ்தலன் அவளிடத்து மிக்கப் பழக்கமுடையவர்போலும், சமீபகாலத்தில் அவளைப் பார்க்கப்போவதாகவும் எழுதுகிறார். மேலும் அவளுடைய பிள்ளைகளை எபேசுவில் கண்டதாகவும் (இவர்கள் தங்கள் சிறிய தாயாரின் பிள்ளை

களைப் பார்க்கப் போயிருந்திருக்கலாம்.) அவர்கள் நீதியின் பாதையில் நடப்பது கண்டு தாம் ஆனந்திப்பதாகவும் எழுதுகிறார் (வாக். 4.). அவள் அன்பும் கீழ்ப்படிதலுமுள்ளவளாய் விளங்குமாறு போதனை செய்கிறார். தேவனின் மனுஷாவதாரத்தை மறுக்கிறவர்களும் அவளை அடிக்கடி பார்க்கக்கூடியவர்களுமாகிய கள்ளப்போதகரைக்குறித்து அவர்கள் அவள் வீட்டுக்கு வருவதற்கு இடங்கொடுக்கக்கூடாதென எச்சரித்து (வாக். 7–11.) கடைசியாகத் தான் அவளைக் கூடியசீக்கிரம் பார்க்கப்போவதாகக் கூறி எபேசிலுள்ள அவளுடைய சகோதரியின் பிள்ளைகள் அவளுக்குச் சொல்லும் வாழ்த்துதலை அறிவித்து (வாக். 12.) நிருபத்தை முடிக்கிறார்.

எனவே இந்நிருபத்தின் முக்கிய பிரிவுகள்:—

1. வாழ்த்து. 1–3.
2. புத்திமதி. 4–6.
3. எச்சரிப்பு. 7–11.
4. முடிவு. 12–13.

### 1. வாழ்த்து.

**நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தினிமித்தம், நான்மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசி(ந்திரு)க்கிறவளும், (2) தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது, (3) பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும், இரக்கமும், சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங்கூட, உங்களோ (நம்மோ) டிருப்பதாக.**

நாம் முதலில் கவனிக்கவேண்டிய காரியம் இந்நிருபம் யாரால் எழுதப்பட்டதென்பதும் யாருக்கு எழுதப்பட்டதென்பதுமே.



இங்கு மூப்பன் எனும் பதம் வயதைமாத்திரம் குறிப்பதன்று. அவருடைய உத்தியோகத்தையும் குறிக்கும். தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள் என்பது ஒருவேளை ஒரு சபையையே பெண்ணாகப் பாவித்து எழுதப்பட்டதாயிருக்கலாம். (இப்படிப்பட்ட உதாரணங்களும் வேதத்திலில்லாதனவல்ல) அல்லது கிறிஸ்தவளான ஒரு அம்மாளுக்கே எழுதப்பட்டிருக்கலாம். தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள் என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மூலபதம் 'தெரிந்துகொள்ளப்பட்ட கைரி' (Kyrie) எனும் பெண்ணெனவும் மொழிபெயர்க்கப்படலாம். 'இந்நிருபம் யாருக்கு எழுதப்பட்டதென்பதை நமக்குள்ள தற்கால அறிவைக்கொண்டு நாம் அறிந்துகொள்ள முடியாது' என வெஸ்ற்காட் அத்தியட்சர் உரைக்கிறார்.

'தெரிந்துகொள்ளப்பட்ட' வென்பது பலர் மத்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவெனப் பொருள்படும். கிறிஸ்தவர்கள் உலகத்தினின்றும் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டிருக்கும் காரணம்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என அழைக்கப்பெறுகிறார். (1 பே. 1. 1. 2 தீமோ. 2. 10. ரோ. 16. 13.)

வாழ்த்துதலில் முக்கியமாய்க் காணப்படும் விஷயம் சத்தியம் என்பது. காக்ஸ் எனும் வியாக்கியானி சொல்வதாவது:— இதனை மும்முறை வழங்குகிறார். 'பரி. யோவான் அப்போஸ்தலன்தான் அந்த அம்மாளையும் அவள் பிள்ளைகளையும் நேசிக்கிறேன் என்கிறார். அந்த நேசம் சத்தியத்தின்படியேயாம். அவனைப்போலவே மற்றவரும் நேசிக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை யறிந்திருக்கிறவர்கள். அவர்களும் அவரும் ஏன் நேசிக்கிறார்கள்? அம்மாள்மாட்டும் பிள்ளைகள்மாட்டும் காணப்படும் அழகினாலோ, நல்லொழுக்கம் உயர்ந்த நடத்தை முதலியவை காரணமாகவோ அல்ல, **நமக்குள் நிலைத்திருக்கும் சத்தியத்தினிமித்தம்** என்கிறார்' (காக்ஸ்). சத்தியம் எனும் இதே பதம் அடுத்த வாக்கியத்திலும் வருகிறது. 'கிருபையும், இரக்-

கமும், சமாதானமும் சத்தியத்தோடு........இருப்பதாக' 'உம்முடைய பிள்ளைகளிற் சிலர் சத்தியத்திலே நடக்கிறதைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.' உண்மையற்றனவாகிய தப்பறைகள் வஞ்சகங்களைப்பற்றி எச்சரிக்கும் இந்நிருபத்தின் துவக்கத்தில் பன்முறையும் சத்தியத்தைப்பற்றிக் கூறவேண்டுவதும் அவசியமேபோலும்.

சத்தியம் எனும் பதத்தினால் பரி. அப்போஸ்தலன் கிறிஸ்துவில் இருப்பதுபோன்ற ஜீவனுள்ள சத்தியத்தின் பூரணத்தைக் குறிக்கிறார். இவ்விடங்களில் சத்தியம் என்னும் பதத்தை நீக்கிவிட்டால் அதற்குப் பதிலாக அவ்விடங்களில் வழங்கக்கூடிய ஒரேபதம் கிறிஸ்துவெனும் பதமே. அப்படிச் செய்தால் அதன் பொருள் நன்கு புலப்படும்.

முதல் நிருபம் கிறிஸ்தவர் ஒருவர்மீதொருவர் அன்புகூர்வதையே தனது கருத்தாக உடைத்து, அந்நிருபத்திற்கு நிதர்சனமாகவேபோலும் பரி. அப்போஸ்தலன் தமது இரண்டாவது நிருபத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளை எனையோர் முகமுகமாய்க் கண்டறிந்திலரெனினும் சத்தியத்தையறிந்தவர் யாவரும் அவளை நேசிக்கிறதாக எழுதுகிறார். பரி. அப்போஸ்தலனும் பிறரும் அவளை நேசிப்பது அவருக்குள் நிலைத்திருக்கும் சத்தியம் காரணமாகவேயாகும். 'சத்தியத்தினாலேயே உண்மை நேசம் சாத்தியமாகும்' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர். பரி. அப்போஸ்தலன் முன் நாம் கவனித்தபடி (1 யோவா. 3. 1.), இங்கும் தாமதித்து யோசிக்கிறார்போலும். 'தாம் கூறுகிற உண்மையைப்பற்றி யோசிக்கிறார். பின் தமக்கு அதன்மேலுள்ள பூரண விசுவாசத்தை ஊர்ஜிதப்படுத்துகிறார்.' என்ன?—'**என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய**' பின் கிடைக்குமென்று நம்பக்கூடிய காரியங்களைப்பற்றிப் பேசுகிறார். 'கிருபையும் இரக்கமும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக' என்னாமல் 'கிருபையும், இரக்கமும், சமாதானமும் நம்மோடிருப்பதாக' என்கிறார். "கிருபை, இரக்கம் சமாதானம் இம்மூன்றும் கூறப்பட்டிருக்கும் ஒழுங்கும் விசேஷமுடைத்தே.



ஏனெனில் தேவனிடத்தி லுற்பத்தியான கிருபை அவர்க்கு நம்மீது இரக்கத்தை யுண்டுபண்ணி அதுகாரணமாய் நமக்குச் சமாதானத்தைப் பயந்தது எனக் கூறியவாறும்" என்பர், வெஸ்ற்காட் அத்தியட்சர். பாவிகளாகிய நாம் ஒரு சிறிதும் அவருடைய கிருபைக்குப் பாத்திரரல்லாதிருப்பவும் நம்மீது அவர் கிருபை கூர்ந்தார். பின்னர் அதின் பயனாய் அவரது இரக்கம் உதித்து நம்மைப்போல் அவர் தம்மைத் தாழ்த்தி மனுவுருவெடுக்குமாறு செய்தது. இது காரணமாக நாம் நமது பாவக்குற்றம் நீக்கப்பெற்று நமது துன்பங்களில் நீங்கித் தேவனோடு ஒப்புரவானோம். இது நாமடைந்த பெருஞ் சமாதானமன்றோ?

இங்கு விசேஷித்தபிரகாரமாக "**பிதாவினுடைய குமாரன்**" என வழங்குகிறார். இதனாற் போந்ததென்னையெனின் அவர் தெய்வத்தன்மையான குமாரன் என்பது நிலைப்படும். இங்ஙனம் கூறியது தாம் 7-ம் 10-ம் வாக்கியங்களில் கண்டனம்பண்ணும் தப்பிதங்களை முன் கருதியேயோ?

'கிருபை, இரக்கம், சமாதானம்' இம்மூன்று ஆசீர்வாதங்களும் தேவனிடமிருந்து மனிதனுக்குச் **சத்தியத்தோடும் அன்போடும்** வருகின்றன. ஆகையினால் அவை மனிதன் மனதில் சத்தியத்தின் ஒற்றுமையையும், மனிதனின் ஜீவியத்தில் அன்பின் ஒற்றுமையையும் விளக்கின்றன. ஏனெனில் சத்தியமும் அன்பும் நினைவிலும் கிரியையிலும் தேவனுடைய ஒரே ஜீவியத்தின் இருவிதத் தன்மைகளாம். விசுவாசிக்கிற சத்தியத்திலும் அதனால் விளையும் அன்பிலும் நிலைத்திருக்குமாறு இந்த நிருபத்தின் துவக்கத்திலே இவைகளைப்பற்றிப் பேசுகிறார்.

### 2. புத்திமதி. வாக். 4-6.

**(4) பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளிற் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் (படுகிறேன்.). (5) இப்பொழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்று, உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல்,**

ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். (6) நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே (நடக்கிற இதுவே) அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே. (நீங்கள் அதிலே நடக்கவேண்டுமென்று ஆதிமுதல் கேட்டிருக்கிற கற்பனை இதுவே.)

இப்பகுதியில் விசேஷமாய்க் காணப்படுவன அன்பும், கற்பனையும். அதாவது அன்பும் கடமையும். பரி. அப்போஸ்தலன் முதலாவது அக்கற்பனை அன்பென்கிறார். பின்னர் கற்பனையின்படி நடந்துகொள்வது அன்பு என்கிறார். இதன் மூலமாய் அன்பும் கடமையும் ஒன்றினோடொன்று மிகவும் ஐக்யப்பட்ட விஷயங்கள் எனவும் அவற்றைப் பிரிக்கொணாதெனவும் காட்டுகிறார். கடமையின்றுணரப்படாத அன்பு தவறிப்போகலாம். அது வீணான அன்பு. அன்பின்றிக் கடமையை நிறைவேற்றலோ கஷ்டமானதும் அனலற்றதுமாயிருக்கும்.

இந்த அம்மாளின் பிள்ளைகளிற் சிலர் சத்தியத்தில் நடந்து வருவதைக் காண மகிழ்வதாய் எழுதும் அப்போஸ்தலன் அந்த அம்மாளின் மற்றப் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கவில்லை என்பதனைக் காட்ட விரும்பினரோவென்பது விளங்கவில்லை. அநேகமாய் இப்படியிராதுபோலும். பரி. பவுல் அப்போஸ்தலனைப்போலவே இவருக்கும் கிறிஸ்தவர், விசேஷமாய்த் தம்மால் குணப்பட்டவராகிய கிறிஸ்தவர், நீதியின் பாதையில் நடப்பதைப் பார்த்தவுடன் அதிக அகமகிழ்ச்சி உண்டாகிறது. (3 யோவா. 3–4. 1 தெச. 1. 2. 2 தெச. 1. 3. 1 கொரி. 1. 4. ரோ. 1. 8. பிலி. 1. 3–5. எபி. 1. 16. கொலோ. 1. 3. பிலே. 4. வச.

பரி. யோவான் அப்போஸ்தலன் தமது புத்திமதியைப் பொதுவாகக் கூறவில்லை. ஒருவரிடத்தில்மாத்திரம் வேண்டிக்கொள்வதாக எழுதுகிறார். 'இப்போழுதும் அம்மாளே.... உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.' வேண்டிக்கொள்வ



தென்னை? நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று இடையில் காணப்படும் வார்த்தைகளை ஓர் இடைக்கூற்றுப் போலும் வழங்குகிறார்.

புதிய கற்பனை. ஆதிமுதல் என்பவற்றின் வியாக்கியானத்தை 1 யோவா. 2. 7–ல் பார்க்க.

ஆறும் வாக்கியத்தில் இதன் இருவிஷயங்களாகிய அன்பு, கற்பனை என்பவற்றைப்பற்றிச் சொல்லுகிறார்— இதுவே அன்பு இதுவே கற்பனை. இவற்றை விளக்கும்போது பீஜாங்குர நியாய (முட்டை முந்தியதோ கோழி முந்தியதோ என ஒன்றினொன்று முந்தியதாகத் தர்க்கிப்பது) மாய்த் தர்க்கிப்பது போலக் காணப்படுகிறது. என்ன? அவர் சொல்லுகிறார். 'தேவ கற்பனைகளின்படி நடக்க முயல்வதே அன்பு, மறுபடி 'அன்பில் நடக்க முயல்வதே தேவ கற்பனை, 'கற்பனை, 'கற்பனைகள்' என்பவற்றின் பேதத்தை அறிந்துகொண்டால் இதனை அறிவதும் எளிதாய்விடும். அன்பெனப்படுவது தேவனுடைய சித்தத்தின்படி அதிதிட்டவட்டமாய் நடந்துகொள்ளும் தன்மையது. தேவனுடைய சித்தத்தைச் சுருக்கமாய்க் கூறின மனுஷர் தேவபுத்திரருக்கிருக்கவேண்டிய ஆவியுடையராய் அன்பின் வழி யொழுகவேண்டுமென்பது (1 யோவா. 3. 1.). 1 யோவா. 5. 3 வியாக்கியானம் நோக்க. கற்பனை, கற்பனைகள் இவற்றைப்பற்றி 1 யோவா. 3. 22, 23 நோக்க.

'நீங்கள் அதிலே நடக்கவேண்டுமென்று' 'அதில்' என்றால் 'அன்பில்' (கற்பனையிலென்று யாண்டும் கூறப்படவில்லை.) எபே. 5. 2. மனுஷர் மனதில் எழும் உணர்ச்சியும் ஆசையும் பரி. அப்போஸ்தலனுக்கு உடன்பாடாகாது. ஆனால் அவர் கொள்கைப்படி அன்பின் ஜீவியம் எனப்படுவது தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளும்படி அதிகப் பிரயாசத்துடன் முயலும் ஜீவியமேயாம். (1 யோவா. 5. 2, 3.)

3. எச்சரிப்பு. வாக். 7–11.

(7) (ஏனெனில்) மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத (இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்தார்

என அறிக்கைபண்ணாத) அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; (இவனே) இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான். (8) (நமது) உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாதபடிக்கு, பூரண பலனை பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (உங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்) (9) கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். (10) ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (11) (ஏனெனில்) அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.

கடினமும் அன்பற்றதுமாய்க் காணப்படுகிற வழியில் நடக்க முயல்வதுபோல் அவ்வளவு கஷ்டமானது அன்புள்ள ஒரு மனிதனுக்கு வேறொன்றில்லை. கண்டிப்பாயிருப்பதொன்றே பரிகாரமெனக் கண்டவிடத்து உண்மையான அன்பு அப்பரிகாரத்தைக் கையாட நேர்ணுது. உண்மையான அன்புடையார் தம் அன்புக்காகச் சத்தியத்தைக் கைநெகிழவிடார். அன்பையே தமது காரியமாகக்கொண்ட நமது அப்போஸ்தலன் பொய்யர், வஞ்சகர், அந்திக்கிறிஸ்துகள் முதலியவருக்கு விரோதமாய் இவ்வளவு கண்டிப்பாய் எச்சரித்து எழுதுவது அவருக்கே வருத்தமான காரியந்தான். இக்கட்டளைக்குக் கீழடங்குவது போல் அவ்வளவு கடினமான காரியமும் அந்த அம்மாளுக்குப் பிறிதொன்றிலது. ஆனால் அப்படிச் செய்யாவிடில் அதற்காக இழக்கவேண்டியது சத்தியம். திரள்திரளான அஞ்ஞானிகட்கிடையே இங்குமங்குமாய்ச் சிதறிக்கிடந்த கிறிஸ்து சபைக்கு இவ்வஞ்சகரால் விளையக்கூடிய தீங்கு கொஞ்சமன்று. ஏனெனில் அவ்வஞ்சகர் கிறிஸ்துமார்க்கத்துக்குப் போரா



தாரமாகிய எம்பிரானது திருஅவதாரத்தை மறுத்துவந்தனர். இங்ஙனம் மறுப்பதாற் போந்ததென்? பிராயச்சித்தம் என்பதின்றாம். மனுஷசாயல் பரத்துக்கடுத்த சாயலாக உயர்த்தப்படுதலின்றாம். கிறிஸ்துவுக்குள் எல்லோரும் சகோதரர் என்பதின்றாம். எம்பிரானது உயிர்த்தெழுதலையே எதுவாகக்கொண்ட விசுவாசிகளின் உயிர்த்தெழுதலுமின்றாம்.

இக்கொள்கையிற் பலர் கிறிஸ்தவரிருக்கும் இடங்களுக்குச் சென்று உத்தம சீஷனையும் விசேஷமாய்க் கிறிஸ்தவரான ஸ்திரீகளையும் அணுகி அவர்கள் தங்கள் நம்பிக்கையினின்று விலகுமாறு போதித்து அவர்கள் விவாகஞ்செய்து மற்றும் ஆசைகளுக் கிடங்கொடுப்பது தீதென்றும் அங்ஙனஞ் செய்யாதிருப்பின் அவர்கள் உயர்வான ஞானத்தையும் பரிசுத்த ஜீவியத்தையும் அடையலாமென்றும் பிதற்றிவந்தனர். உண்மையாகப் பரிசுத்த ஜீவியத்தின்மீது நோக்கமுடையவர் பலர் துறவறத்துக்குரிய இப்போதனையைக் கேட்டமாத்திரத்தில் அதற்கு இடங்கொடுத்தலும் கூடும். ஏனெனில் அவர்களைச் சுற்றியுள்ளவர் சொல்லொணாத் தீயொழுக்கங்கட் குட்பட்டுப் பல வகைத்தாம் விகாரமான இழிதொழில்களை இயற்றிவந்தனர்.

எனவே அந்த அம்மாள் இத்தகைய வஞ்சகர்க்கு ஒரு சிறிதும் இடங்கொடுத்தலாகாதென அவளுக்குப் புத்திகூறியது ஞானமும் அவசியமுமானதே. இந்தப் போதனை அக்காலத்திற்கும் அந்த அம்மாள் இருந்த இடத்திற்கும் ஏற்றதேயொழிய அதனை எல்லாக்கிறிஸ்தவர்க்கும் ஏற்ற பொதுவான ஓர் கட்டளையாகப் பாவிக்கக்கூடாது. விசுவாசத்தில் சரியான பக்குவதசையடையாத ஒருவன் அவிசுவாசிகளுடனும் கள்ளப்போதகருடனும் கூடி அவர் கூறுவதைக் கேட்டமாத்திரத்தில் ஒருவேளை தவறிப்போகக்கூடும். ஆனால் பூரண விசுவாசி அப்படிப்பட்ட அவிசுவாசிகளையும் குணப்படுத்த வல்லனாவான். சிலவிஷயங்களிற் பார்த்தால் அதிகக் கண்டிப்பாயிருத்தல் நற்பயனளியாது. ஏனெனில் அதிகக் கண்டிப்பாயிருந்தவிடத்து அதுகாரணமாய் அவிசுவாசிகளிடத்து அனுதாபங்காட்டவும்

அவர் கொள்கைகட்குச் சிறிது சாய்ந்துநடக்கவும் ஏதுவாகும். இரக்ஷிப்புக்காதாரமான மூலகொள்கைகள் மாறுபடாத கிறிஸ்துசபைகளுள் ஒருவருக்கொருவர் அனுதாபங்காட்டி ஒருவர் கொள்கையை ஒருவர் அறிந்துகொள்ள முயலவேண்டும். அங்ஙனமாயின் கிறிஸ்துவுக்குள் ஐக்யப்படுவதான அந்தப் பூரணநிலைமையை யடையலாம். (மாற். 9. 38–41. அப். 18. 26.)

(ஏனெனில்) அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். '(ஏனெனில்) என்பதனால் விசுவாசிகள் ஒருவரிலொருவர் ஏன் அன்புகூரவேண்டுமென்பதற்குக் காரணம் காட்டியதாயிற்று. ஒருவரிலொருவர் அன்புடைய சகோதரக் கூட்டமாகச் சேர்ந்துகொள்ளுங்கள். ஏனெனில் தப்பிதத்திற்குத் தப்பிக்கொள்ளும் வகை இதுவொன்றே. தற்காலமோ அதிக மோசத்திற்கிடமாகுங்காலம்! ஏனெனில் வஞ்சகர் பலர் தோன்றியிருக்கின்றனர்.

தப்பறைகளுக்கு வழி நடத்துபவர்மாத்திரம் வஞ்சகராகார். தீயொழுக்கங்களுக்குத் தூண்டுபவரும் வஞ்சகரே. (1 யோவா. 1. 8; 3. 7 வியாக்கியானம் பார்க்க.)

பரி. யோவான் அப்போஸ்தலன் அவர்களைக்குறித்து 'உலகத்திலே தோன்றியிருக்கிறவர்கள்' எனப் பேசுகிறார். ஏனெனில் அவர்கள் சபையிலிருந்து பிரிந்துபோய்த் தங்கள் தப்பிதமான கொள்கைகளைப் போதிக்கச் செல்வதற்கான ஏதுவுமிருந்தது. (1 யோவா. 2 9 வியாக்கியானம்.)

இவ்வஞ்சகர்களுடைய முக்கியமான தப்பான கொள்கை நாம் பார்த்தபடி எம்பிரானது திருஅவதாரத்தை மறுதலித்ததே. என்ன? அவர்கள் மாம்சத்தில்வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாதவர்கள். அல்லது இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வருவதை அறிக்கைபண்ணாதவர்கள். அவதார கிறிஸ்துவை மறுத்ததுமன்றி அவதாரம்பண்ணுதலும் சாத்தியமன்றெனச் சாதித்தனர். (1 யோவா. 4. 2.)



இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான். இவனைப்பற்றி நீங்கள் முன்னரே கேட்டிருக்கிறீர்கள் (1 யோவா. 2. 18.). மனுஷர்விஷயமாய் அவன் 'வஞ்சகன்;' தேவன்விஷயமாய் அவன் 'அந்திக்கிறிஸ்து.'

உங்கள் (நமது) செய்கைகளின் பலனை இழந்துபோகாதபடிக்கு பூரணபலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (உங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்.) அதாவது அப்போஸ்தலரும் கிறிஸ்துவின் போதகருமாகிய நாங்கள் உங்களுக்குச் சத்திய அறிவைப் புகட்டி எண்ணிறந்த ஆசீர்வாதங்களைக் கொடுத்து நம்பிக்கையையும் உண்டுபண்ணினோம். இவற்றை இழந்துபோகாதபடிக்கு தப்பிதம் பெருகின இக்காலத்தில் எச்சரிக்கையாயிருங்கள்.' கிறிஸ்து உங்களுக்காகப் பரலோகத்தில் சேர்த்துவைத்திருக்கிற பூரணபயனைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். (வெளி. 11. 18; 22. 12. யோவா. 4. 36. மத். 5. 12. 1 கொரி. 3. 8.)

கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; அதாவது கிறிஸ்துவின் விசுவாசத்தினுள் அடங்காதவராய்ப் புதிய பல சத்தியங்களைக் கண்டுகொண்டதாகப் பிதற்றுபவர். புதிதான உண்மைகளைக் கண்டுகொண்டதன் அடையாளம் பழையவற்றினும் நிலைத்திருத்தலன்றோ? கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலாதார சத்தியங்களில் நிலைத்திருந்தால்மாத்திரம் பயமின்றி முன்னேறிச் செல்லலாம். 'பழையவற்றையும் தழுவிச்சேறலே உண்மையான தேர்ச்சியாம்' என்கிறார் வெஸ்றகாட் அத்தியட்சர்.

கிறிஸ்துவின் உபதேசத்தில் அதாவது கிறிஸ்து தாமாகவும் தம்முடைய ஆவியின் மூலமாகவும் தமது அடியாருக்குப் போதித்தவை (எபி. 2. 3.). கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராதவன் தேவனை யுடையனல்லன். அப்படிப்பட்டவன் யாவனென்னின் தான் நம்பி அன்புகூர்ந்து வணங்கக்

கூடியவரெனத் தேவனைப்பற்றி நினையாமலும் அவனையே தன் இதயத்தில் ஏற்றுக்கொள்ளாமலுமிருப்பவனே. (1 யோவா. 2. 23.)

தாழ்மையும் உண்மையுமுள்ள பக்தனாகிக் கிறிஸ்துவின் போதனைகளை அவர் கூறக்கேட்டு ஏற்றுக்கொள்பவனெவனும் பிதாவையும் குமாரனையும் ஒருங்கே தன்னிதயத்துடையனாவான். (1 யோவா. 2. 23 வியாக்கியானம்.)

இனி இத்தகைய கள்ளப்போதகரைக்குறித்து அந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளை எச்சரிக்கிறார். **ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவாராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலுமிருங்கள்.** இங்கே 'வந்து' என்பது ஒருக்கால் வருவார்கள் எனும் அனுமானத்துடன் கூறுவதன்று. மூலபாஷையின்படி திட்டமாய் வருகிறவர்களைக் குறிக்கும். [illegible] வருதல் என்பது அவர்கள் தங்கள் தீயகொள்கைகளைப் போதிக்குமாறு வரும் அந்த விசேஷித்த வரவைக் குறிக்கும்.

பரி. அப்போஸ்தலன் இங்கு கூறுவது ஒரு அன்னியனுடைய சாதாரண வரவைக் குறித்ததன்று. கள்ளப்போதகர் என்பதை அவர்கள் போதனையின் மூலமாய்ப் பரீக்ஷித்து அறியவேண்டும். 'அவர்களுடைய போதனை தேவனுடைய குமாரன் மனுஷனானார் எனும் சுவிசேஷப் போதனையோடு ஒத்திருக்கிறதா? ஒத்திராமல் இப்போதனைக்கு மாறான எப்போதனையும் உடையதாயின் அவர்களைச் சகோதரர் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவர்களுக்கு ஆகாரமுதலியன அளித்து அவர்களை உபசரிக்கக்கூடாது. கிறிஸ்தவரான சகோதரருக்குச் செய்வதுபோல அவர்கள் வீட்டுக்கு வரும்போதும் வீட்டைவிட்டுப் போம்போதும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லக்கூடாது.

**(ஏனெனில்) அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.** துர்க்



கிரியைகள் என்பது வற்புறுத்தப்படுகிறது. 'அவனுடைய கிரியைகள், ஆம் அவனுடைய துர்க்கிரியைகள்.'

இவ்வாக்கிய விடயம் அனுபவத்தில் காட்டவேண்டிய ஓர் முக்கியகாரியம். ஏனெனில் இடையிடையே பலவீன சிந்தையராய்த் தீமைக்கு இடங்கொடுத்துவிடுகிறோம். பிறர் நம்மீது கோபித்துக்கொள்வார்களோ அல்லது நம்மை அறிவிலிகள் எனவேனும் தாக்ஷண்யமற்றவரெனவேனும் இழிவாய் நினைத்துக்கொள்வார்களோ எனவும் யோசித்து அவர்களுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவர்களாகிறோம். இவ்வாறுவதே அவர்களை உற்சாகப்படுத்துவதாகும். பலர் கூடியிருக்குமிடத்து ஒருவன் தகாததோர் செய்கையைச் செய்யப் பிறர் அதனைப் பார்த்திருந்தும் அதனைத் தடுக்காதிருப்பரேல் அவரும் அக்குற்றத்திற்கு உடன்பட்டவரே யாவர். அங்ஙனமிருப்பவும் அத்தகாத செயலைக் கண்டு அகமகிழ்ந்து ஆர்ப்பரிப்பின் அக்குற்றத்திற்குப் பெரிதும் உடன்பட்டவராவர் என்பது கூறாதே வெளியாம்.

கள்ளப்போதகருடைய கொள்கையில் நமக்கு அனுதாபமிருப்பதாகவும் அக்கொள்கைகளை நாம் ஒப்புக்கொள்வதாகவும் அவர்கள் நினைத்துக்கொள்வதற்கு இந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள் இடங்கொடுப்பளேல் அவளும் அவர்கள் செய்யும் தீயசெய்கையாகிய ஆத்துமாக்களைக் கெடுக்கும் வேலையில் சம்பந்தப்பட்டு அதற்கு உடன்பட்டதாகும். நமது நாட்டிலும் நம் இந்தியர்க்குப் பெரும்பாலும் நேரிடும் பெரிய சோதனை இதுவே. தப்பிதமானவைகளே எனக் கண்டறிந்திருந்தும் மற்றவர்க்குப் பயந்து கோழைத்தனமாய் அதற்கு மாறாக யாதும் கூறாமலிருந்துவிடுகின்றனர். இது பெரும்பாதகமாம்

### 4. முடிவுரை. வாக். 12–13.

**(12) உங்களுக்கு எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு; காகிதத்தினாலும் மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனமில்லை. உங்களுடைய சந்தோஷம் நிறைவா**

யிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, முகமுகமாய்ப் பேசலாமென்று நம்பியிருக்கிறேன். (13) தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். (ஆமென்.)

இம்முடிவுரையில் வியாக்கியானப்படுத்தவேண்டியன அதிகமில்லை. தாம் எழுதவேண்டிய காரியங்கள் அதிகமிருந்தும் நீண்ட கடிதமூலமாய் அவற்றை எழுதப் பிரியமில்லாத அதே சங்கதியைத் தாம் காயு (Gaius) வுக்கு எழுதும் மூன்றாம் நிருபத்திலும் சொல்லுகிறார். தமது வயதுசென்றகாலத்தில் நீண்ட நிருபங்கள் எழுதுவதும் அவருக்கு இயலாதிருந்தது போலும்.

இங்கு காகிதத்தினால் என்பது 2 தீமோ. 4. 13–ல் காட்டியிருக்கும் தோற் சுருள்களைப்போலும் அவ்வளவு விலையுயர்ந்ததன்று. எனினும் இதுவும் விலையுயர்ந்த பொருளே. நிருபம் சுருக்கமாக எழுதப்பட்டதற்கு இதன் கிரயமும் ஒரு காரணமாகலாம்.

உங்களிடத்தில் வந்து என்பது மூலபாஷையின்படி 'உங்களிடத்தில் பிரசன்னமாயிருந்து' எனப் பொருள்படும். தாம் சந்திக்குங்காலத்து அனுபவிக்கும் பெரிய சந்தோஷத்தை எதிர்பார்த்தவராய் எழுதுகிறார். அச்சந்தோஷம் எத்தன்மைத்தென்பதை 1 யோவா. 1. 4 வியாக்கியானத்திலும் ரோ. 1. 12–லும் பார்க்கலாம்.

இந்த நிருபம் ஒரு அம்மாளுக்கு எழுதப்பட்டதென்னின் இந்த வாழ்த்து அந்த அம்மாளுடைய சகோதரி பிள்ளைகளுடைய வாழ்த்துதலாம். இந்த அம்மாளுடைய தெரிந்துகொள்ளப்பட்ட சகோதரியும் இவ்வாழ்த்துதலைச் சொன்னதாகவில்லை. ஒருக்கால் அந்த அம்மாள் இந்நிருபம் எழுதப்பட்டகாலத்தில் எபேசுவி லில்லைபோலும். இந்நிருபம் ஒரு சபைக்கு எழுதப்பட்டதென்னின் இந்த வாழ்த்து எபேசு சபையார் அந்தச் சபையாருக்குச் சொல்லுகிற வாழ்த்துதலாம்.

# யோவான் எழுதின

## பொதுவான மூன்றாவது நிருபம்.

மூன்றாவது நிருபம் தற்மசிந்தையுள்ள கிறிஸ்தவனும் காயு (Gaius) வென்பவனுக்கு எழுதப்பட்டது. காயு சத்தியத்தில் நடப்பதுபற்றியும், தங்களைப்போன்ற உடன் கிறிஸ்தவரால் மாத்திரம் ஆதரிக்கப்பெறுவதை எதிர்நோக்கிப் புறஜாதியாருக்குப் பிரசங்கிக்கப்போன அன்னியரான கிறிஸ்தவருக்கு அதிக உதவிசெய்ததுபற்றியும் அவனைப் பரி. அப்போஸ்தலன் புகழ்கிறார். இந்தச் சுவிசேஷப் பிரசங்கிகள் தாங்கள் பிரசங்கத்திலிருந்து திரும்பிவந்தபின் ஓரிடத்தில் (எபேசுவாகவிருக்கலாம்) கூடிய கூட்டத்தில் தங்களுக்குக் காயுவால் செய்யப்பட்ட உபகாரங்களைப்பற்றிப் பெரிதும் வியந்து பேசியிருந்தனர். அப்போஸ்தலன் காயுவைப் புகழ்தற்குக் காரணமாயிருந்தது இதுவே. மேற்கூறிய பிரசங்கிகள் திரும்பவும் தங்களுடைய சுவிசேஷ வேலையின்மேற் செல்லவிருக்கின்றனர். ஆகவே அவர்களுக்கு முன்போல் மறுபடியும் வழியில் உதவி புரியுமாறு பரி. அப்போஸ்தலன் காயுவைக் கேட்டுக்கொள்ளுகிறார். இதைப்பற்றிச் சபைக்கு (இது காயுவிருந்த சபையாகவிருக்கலாம்.) எழுதியிருப்பதாகவும் சொல்லுகிறார். ஆனால் தியோத்திரிபு (Diotrephes) எனும் பிடிவாத குணமுள்ள சுயநலப் பிரியனொருவன் பரி. அப்போஸ்தலனுடைய கட்டளையை மறுத்து, பிரசங்கிகளுக்கு உதவிசெய்ய உடன்படாமல், உதவிசெய்தாரையும் சபையினின்றும் நீக்கினன். பலபல தீமொழிகள் சொல்லிப் பரி. அப்போஸ்தலனையும் இவன் இழித்துரைத்து வந்தனன். எனவே பரி. அப்போஸ்தலன் தான் திரும்

பவும் அங்கு சென்று தன் அதிகாரத்தை ஸ்தாபிக்கவெண்ணினார். இம்மனிதனுடைய துர்ப்பழக்கங்களைப் பின்பற்றுவண்ணம் பரி. அப்போஸ்தலன் காயுவை எச்சரிக்கிறார். தெமத்திரியுவை (Demeprius) (இவர் இந்நிருபத்தைக்கொண்டு சென்றவரும் பிரசங்கிகளின் தலைவனாகவுமிருக்கலாம்.) உபசரிக்குமாறு அதிக வற்புறுத்திப் பேசுகிறார். இந்நிருபத்தின் ஈற்றிலும் இரண்டாவது நிருபத்தின் ஈற்றிலேயேபோல தாம் இவர்களைப் போய்ப் பார்க்கவிருப்பதாகவும் அக்காலத்து அவர்களிடம் முகமுகமாய்ப் பேசிக்கொள்வதாகவும் சொல்லுகிறார்.

இந்நிருபம் எழுதப்பட்ட காலம் காரணமுதலியவற்றை இதனிலும் அதிகமாய் நிதானித்துக்கொள்ள முடியாது.

காயுவென்பவன் ஆசியாவின் பெரும்பட்டணங்கள் ஒன்றில் வசித்துவந்த ஓர் கிறிஸ்தவனாயிருக்கலாம். ஒருவேளை இவன் பெர்கமம் (Pergamum) எனுமிடத்தில் வசித்தனன்போலும் (ஏனெனில் இந்தக் காயு பெர்கமத்தில் அத்தியட்சராக விருந்தாய்ப் பூர்வகாலத்தார் சிலர் சொல்லுகிறார்கள்.) தையோத்திரிபு (Diotrephes) அச்சபையின் மூப்பனாகவோ கண்காணியாகவோ இருந்திருக்கலாம். எப்படியாயினும் சரி. இம்மனிதன் பரி. யோவான் அப்போஸ்தலனுக்கு விரோதமாய்ப் பலரை எழுப்பவும் அவர்களுக்குத் தலைவனாகவிருக்கவும் கூடிய சொற்சக்தி யுடையனாயிருந்தான். அன்றியும் அதிகாரமுடைத்தோ அதிகாரமின்றியோ கிறிஸ்தவரைச் சபையினின்று தள்ளக்கூடிய திறனும் அவனுக்கு இருந்ததாகத் தெரிகிறது. இந்தச் சுவிசேஷகரை அவன் பகைப்பதற்கான காரணங்களில்லை. இவன் பிடிவாதமும் சுயநலப்பிரியனுமாயிருக்கையில், அவர்கள் அவனுக்கு மாறாய்ப் பரிசுத்தமுடையராய்ச் சுயவெறுப்புடன் தேவநாமத்தைப் பிரசங்கித்து வந்தனர். இதுவே பிரசங்கிகளை அவன் பகைக்கு இலக்காக்கியதுபோலும். இவன் தன் சபையின்மேல் கொடுமையான ஆட்சிசெய்ய விரும்பினன் (1 பே. 5. 3.). வயோதிகரான நமது அப்போஸ்தலனுடைய நயமொழிகளுக்குச் செவிகொடுப்பது அவனுக்குக் கஷ்டமா



யிருந்தது. இதுபற்றியே இவன் அப்போஸ்தலனைப் பகைத்து அவர் நிருபங்கட்குச் செவிகொடுத்தவரைத் தம் சபையினின்றும் நீக்கி ஹிம்சித்தான். இவ்வாறு கஷ்டமுற்றவரில் காயுவுமொருவன். ஆனால் காயு சபைக்குப் புறம்பாக்கப்பட்டானோ அல்லனோ வென்பதை அறிதற்கான ஏதுக்களில்லை. இந்நிருபம் அந்தக் காயுவை அவன் சங்கடங்களில் ஆறுதல்படுத்தவும், அப்போஸ்தலன் அவன்மீதுகொண்டிருந்த அனுதாபத்தைக் காட்டவும், அவன் உத்தம நடத்தையில் நிலைத்திருக்குமாறு அவனை எச்சரிக்கவுமாக எழுதப்பட்டது.

இந்நிருபத்தை அடியில் வருமாறு பிரிக்கலாம்:—

1. வாழ்த்து. 1.
2. ஆசீர்வாதமும் அநுதாபமும். 2–4.
3. காயுவை யவன் தர்மசிந்தைக்காகப் புகழ்தல். தர்மசிந்தையின் விசேஷம். 5–8.
4. தையோத்திரிபுவை அவன் விரோதம் மூர்க்கம் காரணமாகக் கண்டனஞ்செய்தல். 9, 10.
5. திமோத்திரியுவின் நடத்தையைப் புகழ்தல். 11, 12.
6. முடிவுரை. 13, 14.

1. வாழ்த்து.

**மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது.**

மூப்பன், சத்தியம் என்பவற்றின் வியாக்கியானத்தை 2 யோவா. 1-ல் பார்க்க. இந்தக் காயு (Gaius) யாரென்றறிதற்கான ஏது யாதொன்றும் காணப்படவில்லை. இப்பெயர் புதிய ஏற்பாட்டில் மற்று மூன்று இடங்களில் வருகிறது. மக்கதோனியனாகிய காயு (அப். 19. 29.), தெர்பையின் காயு (அப். 20. 4.), கொரிந்துவின் காயு (ரோ. 16. 23.). இப்பெயர் அதிசாதாரணமாகையால் (ரோமருக்குள் இப்பெயர் வெகு சாதாரணம்.) இவ்விடத்தில் கூறப்பட்ட காயு இம்மூவரில் ஒருவனேயோ என நிதானிக்கத் தானும் இயலாதிருக்கின்றது.

### 2. ஆசீர்வாதமும் அநுதாபமும். (2-4.)

பரி. அப்போஸ்தலன் கிறிஸ்தவரிடத்தில் கீழ்ப்படிதலையும் தர்மசிந்தையையும் எதிர்பார்த்திருக்க அதற்கு மாறாக அவர்கள் நடந்தபோது அதற்காகத் துக்கித்தவராக அதிக மனக்கிலேசத்துடன் எழுதுகிறார். எனினும் காரியங்களின் குணங்களை ஏற்றுக் குற்றங்களைப் பொருட்படுத்தாத பெரியோரின் இயல்புக்கொப்ப இவரும் சந்தோஷத்துடன் தம் நிருபத்தை யாரம்பிக்கிறார். இதேமாதிரியாகவே பரி. பவுல் அப்போஸ்தலனும் கொரிந்தியருக்கு எழுதிய தமது முதல் நிருபத்தை ஆரம்பிக்கிறார். கொரிந்து சபையில் காணப்பட்ட தவறுதல்கள் அனந்தம். அவற்றைத் துக்கத்தோடும் கண்டிப்போடும் தமது நிருபவாயிலாய்க் கண்டனஞ்செய்கிறார். எனினும் அந்நிருபத்தின் ஆரம்பத்திலேயே 'நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.' (1 கொரி. 1. 6.) என்கிறார்.

**(2) பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3) (ஏனெனில்) சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சிகொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன். (4) என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.**

காயுவின் ஆத்துமா கர்த்தருக்குள் சுகமாயிருக்கிற சங்கதியைப்பற்றி நமது அப்போஸ்தலன் திட்டமாய் அறிவார். எனவே அவன் சரீரத்திலும் சுகமாயும் மற்றும் உலக விஷயங்களில் யாதொரு குறைவின்றியும் வாழவேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறார். ஒருகால் காயுவின் தேகசுகம் குறைவுபட்டு அவனுடைய உலகசம்பத்து க்ஷீணித்து வந்திருக்கலாம். உலக விஷயமான ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் வேண்டிக்கோடல் தவறன்றென்பது இதனாற் கற்பிக்கப்படுகின்றது. இதுநிற்க,



காயுவின் ஆத்துமசுகம் பெருகியிருந்தது கண்டு அவனது தேகசுகமும் உலக சம்பத்தும் பெருகவேண்டுமென வேண்டிக்கொண்ட பரி. அப்போஸ்தலன் தமது ஜெபத்தை மாற்றி, தேகசுகமும் உலக சம்பத்தும் இருக்கிறதுகண்டு அவைபோல் ஆத்துமசுகமும் இருக்கவேண்டுமென நம்மில் எத்துணைப்பெயருக்காக வேண்டிக்கோடல் வேண்டுமோ!

(ஏனெனில்) என்பது காயுவின் ஆத்துமா சுகமுடனிருந்ததென்பதை நாம் அறிந்துகொண்ட காரணத்தைக் காட்டுகிறது. காயுவைப்பற்றிச் சமீபகாலத்தில் கேட்டறிந்திருந்தார். [illegible]டத்தில் சொன்னவரை நம்பவும் செய்தார். இடையிடையே சகோதரர் வந்து காயுவின் நற்கிரியைகளையும் பரோபகாரத்தையும்பற்றி அவருக்கு அறிவித்ததுண்டு. இதைக்கேட்ட அவர் இருதயம் மகிழ்ந்தது. நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய். நீ எனும் பதம் வற்புறுத்தப்படுகிறது. ஏனெனில் சத்தியத்தில் நடந்துகொள்ளாத தையோத்திரிபுவைப் (Diotrephes) போன்றவரும் சிலரிருந்தனர். வெஸ்ற்காட் அத்தியட்சர் கூறுகிறார்:— 'ஒருவரைப்பற்றி எழுதும்விஷயத்தில், அதை எழுதி முடித்தவுடன் அப்போஸ்தலன் சற்றுத் தாமதித்துப் பேசுவதுபோல் காணப்படுகிறது. "உன்னுடைய உண்மையைப்பற்றி சாட்சி கொடுத்தனர்." பலர் உண்மையின்றி மாய்மாலமாக நடித்துத் திரிகின்றனர். அவரை யோசிக்குமிடத்து நீயேனுமொருவன் நீ கூறுவதுபோலவே நடந்துகொள்ளுகிறாயென அறிகிறேன்."

இவ்வகைச் சங்கதிகள் பரி. யோவான் அப்போஸ்தலனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. காயுவை என்னுடைய பிள்ளைகளில் ஒருவன் என்று அழைக்கிறார். அவரால் குணப்படுத்தப்பட்டவன்போலும், எப்படியாயினும் காயுவென்பவன் தேவனால் அப்போஸ்தலனிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட குடும்பத்தின் ஓர் அங்கம் என்பது உண்மை. அஞ்ஞானிகளைத் தேவனிடத்து வழி நடத்துவது சந்தோஷமானகாரியம். அவ்வாறு நடத்தப்பட்டவர்கள் கிருபையில் வளர்ந்துகொண்டே வருகின்றனர் என அறிவதோ அதனினும் பன்மடங்கு சந்தோஷமாம்.

3. காயு(Gaius)வை அவன் தர்மசிந்தைக்காகப் புகழ்தல்; தர்மசிந்தையின் விசேஷம். (5-8.)

**(5) பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்(றிலும்)றையும் உண்மையாய்ச் செய்கிறாய். (6) அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள். தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும். (7) ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள்: (8) ஆகையால், நாம் சத்தியத்திற்கு உடன்வேலையாட்களாயிருக்கும்படிக்கு அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.**

இவ்வார்த்தைகள் எதைப்பற்றியதென்பதை நாம் முன்னரே பார்த்தாயிற்று. காயு தன் சபையில் சிலருக்குப் பிரியவீனத்தை யுண்டாக்கிக்கொண்டான்போலும். அவனது சபையின் போதகர் அவன்மீது பிரீதியாயிருக்கவில்லை. அந்நியரான சகோதரருக்கு (சுவிசேஷ பிரசங்கிகளுக்கு) உதவிசெய்ததைப்பற்றி அவர்கள் ஒருவேளை அவனைச் சபையினின்றும் நீக்கியிருக்கலாம். பரி. அப்போஸ்தலன் தாம் காயுவின் நடத்தையை ஒப்பியதாகவும், அவ்வாறாகவே இன்னும் அன்பின் கிரியையில் நடந்து வரவேண்டுமெனவும், அப்படியாயின் சத்தியத்திற்கு உடன்வேலையாட்களாகலாமெனவும் பலமாய்ப் பேசுகிறார்.

'நீ உண்மையாய்ச் செய்கிறாய்' என்பது மூலபாஷையில் இருவிதமாய்ப் பொருள்படும். 1. உன்னுடைய விசுவாசத்திற்கு ஏற்றபடி செய்கிறாய். அதாவது உன் கிரியை உன் விசுவாசத்தை விளக்குகிறது. 2. நீ செய்கிற எதையும் திட்டமாயும் உண்மையோடும் செய்கிறாய். அதாவது 'அப்படிப்பட்ட செய்கையில் மனிதன் தவறமுடியாது. அதற்குரிய பலனும் அவசியம் அடையலாம்' என்பது வெஸ்ற்காட் அத்தியக்ஷர் கூறுவது.



காயுவின் உதவியைப்பெற்றவர் 'அந்நியர்.' அந்நியராதலின் அவர்களுக்கு அதிகமாக உதவிசெய்யவேண்டும் (எபி. 13. 2.). காயு [illegible]க்கப்பட்டதற்குக் காரணமாகவிருந்ததும் இதுதான். ஒரு விசேஷித்த சமயத்தில் இந்த அந்நியர் காயுவின் நற்கிரியைகளைப்பற்றிச் சபைக்குமுன்பாகச் சாட்சி கொடுத்தனர். அதாவது கிறிஸ்தவரான சபையார் யாவரும் கூடிவந்த தருணத்தில் எனவாம். இக்கூட்டம் கூடிவந்தது பரி. அப்போஸ்தலனுடைய நகரமாகிய எபேசுவாகவிருக்கலாம்.

இந்தச் சகோதரரை அவர்களில் முதல்வனான தேமேத்திரியு (இந்நிருபத்தைக்கொண்டு சென்றவன் இவனே.) கூட்டிக்கொண்டு மற்றொருதடவையும் பிரசங்கத்துக்குப் போகிறான். அவர்களுக்கு உதவிபுரியுமாறு பரி. அப்போஸ்தலன் கேட்டுக்கொள்ளுகிறார். அவர்களுடைய பிரயாணத்திற்காக உதவிபுரியுமாறும் கேட்டுக்கொள்ளுகிறார்.—**அவர்களை நீ வழிவிட்டனுப்பினால்**, அதுவும் அவனுடையவும் அவர்களுடையவும் **தேவனுக்குமுன்பாகப் பாத்திரமானபடி** வழிவிட்டனுப்பினால், **நலமாயிருக்கும்** என்கிறார்.

இப்பிரசங்கிகளுக்கு உதவிசெய்யவேண்டியது அவசியந்தான் என்பது ஏழாம் வாக்கியத்தினின்றும் விளங்கும். ஏனெனில் **அவருடைய நாமத்தினிமித்தம்.** அந்த நாமத்தை விர்த்தி செய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடேயே அவர்கள் பிரயாணம் போகின்றனர் (அப். 5. 4. யாக். 2. 7.). திட்டமாய்ச் சுவிசேஷ வேலைக்காகவே **புறப்பட்டுப்போனார்கள்** (2 யோவா. 7. வச. 1 யோவா. 2. 19 வியாக்கியானம் பார்க்க.). **புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல்** போனார்கள். தாங்கள் பிரசங்கிக்கப் போகும் புறஜாதியாரிடத்தில் அவர்கள் யாதொரு விதமான உதவியையும் பெற்றுக்கொள்வதில்லை. புறஜாதியார் உதவிசெய்தாலும் பெற்றுக்கொள்ளார்கள். ஏனெனில் அப்படிப் பெறுமிடத்து அப் புறஜாதியார் இவர்கள் தங்கள் வயிறு வளர்க்கும்பொருட்டே இவ்வாறு சுற்றிப் பிரசங்கித்துத் திரிவதாய் எண்ணிக்கொள்ளவும் கூடும்.

இவர்கள் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் இழந்துவிட்ட கிறிஸ்தவர்; அதாவது 'கிறிஸ்தவரானமையால் யாதும் இல்லாதபடி துரத்திவிடப்பட்டவர்' எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வபிப்பிராயம் வார்த்தையின்படியும் சந்தர்ப்பத்தின்படியும் நன்கு பொருந்துவதன்று.

சுவிசேஷப் பிரசங்கிகளுக்கு உதவிபுரியவேண்டியது. அப்படிச்செய்வதால் நாம் **சத்தியத்திற்கு உடன் வேலையாட்களா**கிறோம். இது 'சத்தியத்தைப் பரப்புவதில் நாம் அவர்களுக்கு உதவிசெய்கிறோம்' எனவாவது 'அவர்கள் பிரஸ்தாபிக்கிற சத்தியத்திற்கு நாமும் உதவிசெய்கிறோம்' எனவாவது பொருள்படலாம். எவ்வாறாயினும் சரி. பொருள் ஒன்றே. என்ன? கிறிஸ்துசபை என்பது [illegible] சரீரம்; மற்றெல்லாருடையவும் சந்தோஷத்தையும் ஒவ்வொருவனும் அனுபவிக்கக்கூடும். சுவிசேஷப் பிரசங்கிகளுக்கு உதவிசெய்பவர் அப்பிரசங்கிகளினால் செய்யப்படும் சகல நற்கிரியைகளிலும் பங்குபெறுகின்றனர். எம்பிரான் மத். 10. 41-லும் யோவா. 4. 36-லும் சொன்ன கருத்தும் இதுவே. காயு தன் நற்கிரியைகளின் பயனாக 'வெள்ளியையும் பொன்னையுமல்ல, ஜனங்களுடைய நல்லபிப்பிராயத்தையும் புகழையுமல்ல, தான் உதவிசெய்த பிரசங்கிகளின் நல்ல வேலையில் பங்கு' (காக்ஸ்) அடைவான் எனக் காட்டுகிறார்.

இவற்றை நாம் ஆராயுமிடத்து இதேபிரகாரமாக இந்தியாவிலும் தற்சமயத்தில் நடக்கும் காரியங்களையும் உற்றுநோக்க நேர்கின்றது. இந்தியா சபையானது சுதேச சுவிசேஷ பிரபல்யக் கூட்டங்கள் ஏற்படுத்தி, சகோதரர் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் தங்கள் தேசத்தாருக்கு மெய்யான ஜீவனாகவே விளங்குகிற அந்த ஜீவனைப் பிரசங்கிக்கப் போகுமாறு செய்கின்றது. இந்தப் பிரசங்கங்களை ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு உதவிபுரியவும், இவ்விதமாய்ச் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாகவும் இந்திய கிறிஸ்தவர் எல்லாரும் அழைக்கப்படுகின்றனர். இவ்வ



ழைப்புக்குச் செவிகொடுக்கும் அளவுக்குத்தக்கதாய் இந்தியாவின் சபையின் நிலைமையும் இந்தியாவின் நிலைமையும் சீர்த்தியாகும். இவ்வாறு பிரசங்கிகளாக வருபவருள் லாபத்தையும், தற்பெருமையையும் நாடியவரும் 'சத்தியத்திற்கே சாட்சியாக' வருபவருமாகிய தையோதிரிபு (Diotrephes) களும் தேமேத்திரியு (Deuetrius) களும் எழும்பலாம். ஆனாலும் இந்திய கிறிஸ்தவர் காயுவைப்போல தங்களுக்கு எவ்வளவு விரோதிகளிருந்தபோதிலும் அவரைப் பொருட்படுத்தாது உண்மையானவர்களுக்கு உதவிபுரியக் கற்கவேண்டும்.

### (Diotrephes)

### 4. தியோத்திரிப்புவின் இறுமாப்பையும் விரோதத்தையும் கண்டனஞ்செய்தல். (9, 10.)

**(9) நான் சபைக்கு எழுதினேன். ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை (நம்மை) ஏற்றுக்கொள்ளவில்லை. (10) ஆனபடியால், நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன். அவன் இப்படிச் செய்துவருவதும் போதாமல், தான் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து, சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.**

பரி. அப்போஸ்தலன் இந்நிருபத்தைக் காயுவிருந்த சபைக்கு எழுதுவதாகச் சொல்லுகிறார். இந்நிருபம் தம்மிடத்திற்கு வரும் பிரசங்கிகளாகிய சகோதரரை ஏற்றுக்கொள்ளுமாறும் அவர்களுக்கு உதவிபுரியுமாறும் அச்சபையாருக்கு எழுதப்பட்டது போலும், இந்நோக்கம் சித்திபெறவில்லை. ஏனெனில் அவ்விடத்தில் கண்காணியாயிருந்த தியோத்திரேப்பு இந்நிருபத்திற்குக் கீழ்ப்படியவில்லை. எல்லா அப்போஸ்தலரும் மரித்துப்போக இவர் ஒருவரே மீந்திருக்கவும் இவ்வொருவருக்கும் கீழ்ப்படியாமை காட்டுவது அதிஆச்சரியமே. ஆனால் இதுவும் விப

ரீதமன்று. ஏனெனில் அப்போஸ்தலரின் நடபடி காலம்துவக்கி எக்காலத்திலும் இத்தகைய பெருமையும் அன்புத் தாழ்ச்சியும் காணப்பட்டதுண்டு.

தியோத்திரேப்புவின் பாவமென்ன? தான் முதன்மையாயிருக்க விரும்புகிற பாவமே. நியாயமான அதிகாரத்துக்குத் தானும் கீழ்ப்பட்டிருப்பது அவனுக்குச் சம்மதியில்லை. தானும் தன் சபையும் பரி. அப்போஸ்தலனுக்கு அற்பமும் ஆட்படாமல் சுயாதீனமாயிருக்கவேண்டுமென விரும்பினன். அவன் வேறெவ்விதமான தவறான கொள்கையும் போதித்ததாகக் கூறப்படவில்லை. அவன் தன் இறுமாப்பும் அகந்தையும் காரணமாக வயோதிகரும் வணக்கத்திற்குரியவருமான நமது அப்போஸ்தலனுக்கு விரோதமாய்ப் பல தீமொழிகளைப் பிதற்றி வந்தான். மூலபாஷையின்படி அவன் பேசியவை பொல்லாப்பானவை மாத்திரமன்று புத்தியீனமானவை யெனவும் பொருள்படும். அப்போஸ்தலனோ தாம் கொண்ட அப்போஸ்தலக் கோலத்திற்கேற்பத் தாழ்மையை யணிந்தவராய்த் தம்மையும் ஏனைய சகோதரருள் ஒருவராக்கி 'எனக்கு விரோதமாய்' என்னாது 'எங்களுக்கு விரோதமாய்' என்கிறார். அதன் மூலமாய்த் தியோத்திரேப்பு தன்னைமாத்திரம் பேசியதாக தான் அவன்மீது கோபித்துக்கொள்ளவில்லை என்பது வெளியாகிறது. தான் திரும்பவந்து தனது அதிகாரத்தைத் திரும்பவும் ஏற்படுத்துவதாகக் கூறும்போதும் அவர் தமது சொந்த அதிகாரத்தையல்ல சபையின் சிலாக்கியத்தையும் அதற்குரிய மகிமையையும் பெருமையையுமே குறித்துப் பேசுகிறார்.

'வந்தால்' எனும் பதம் சந்தேகத்தைக் காட்டவில்லை. 'வரும்போது' என்பதே அதன்பொருள். வரும்போது தான் செய்வதாகக் கூறுவதென்ன? 'அவன் செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன்.' இதனால் போந்ததென்? 'அவனுடைய செயல்களை எல்லோருமறியக் கூறிச் சபைக்குமுன்பாக அவனுடைய கிரியைகளை விசாரிப்பேன்' என்பதாம். தியோத்



திரேப்பு தனக்குக் கீழ்ப்படியாமல் பரி. அப்போஸ்தலனுக்குக் கீழ்ப்படிந்தோரை உண்மையாகவே சபையைவிட்டு நீக்கினனென்பது அதிகந் தெளிவாயில்லை. தடைசெய்து புறம்பே தள்ளுகிறன் என்பது அவன் கருத்தையும் முயற்சியையும் மாத்திரம் குறிக்கவும் செய்யும்.

### 5. தேமேத்திரியு (Demetrius)வின் நல்லொழுக்கம் புகழப்பட்டது. (11, 12.)

**(11) பிரியமானவனே, தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறன்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை. (12) தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சிபெற்றவன்; (ஆம்) நாங்களும் சாட்சிகொடுக்கிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்.**

காயு தியோத்திரேப்புவின் மாதிரியைப் பின்பற்றாதபடி அவனை எச்சரிக்கிறார். மேலும் 1 யோவானில் நாம் கவனித்த சில விஷயங்களைத் திரும்பவும் இங்கு கூறுகிறார். (1 யோவா. 3. 6 வியாக்கியானம் பார்க்க.). முன்னரே கூறியபடி தேமேத்திரியுவைப்பற்றி யாதும் தெரியவில்லை. அவன் ஒருவேளை இங்கு கூறப்படும் பிரசங்கிகளின் தலைவனாகவும் இந்நிருபத்தைக் காயுவினிடம் எடுத்துச் சென்றவனாகவு மிருக்கலாம். இதற்கு முந்தியகாலத்தில் அவன் நடத்தை அவனை யறிந்தார் எல்லாருடையவும் நற்சாட்சியை யடையத்தக்கதாய் அவ்வளவு நன்றாயிருந்தது. அவன் சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன். அதாவது அவன் செய்த கிரியையில் வல்லமையை யுண்டு பண்ணி அதிக பயனை யடையச்செய்து இவ்விதமாய்ச் சத்தியத்தின் ஆவியாகிய பரிசுத்தஆவியே நற்சாட்சி கொடுத்தார் போலும். இந்தச் சாட்சிகளோடு பரி. அப்போஸ்தலன் தமது சாட்சியையும் கூட்டுகிறார். இந்தச் சாட்சி உண்மையென்பது காயுவுக்கு நன்றாய்த் தெரியும்.

### 6. முடிவுரை. (13, 14.)

(13) எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு. ஆனாலும் மையினாலும் இறகினாலும் எழுத எனக்கு மனமில்லை. (14) சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன். அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்ளுவோம்.

உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக.

இந்த மூன்றாவது நிருபமும் இரண்டாவது நிருபமும் ஒன்றுபோல் முடிந்திருப்பதே. இவ்விரண்டும் கொஞ்சங்குறைய ஏக காலத்தில் எழுதப்பட்டதென்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. உனக்குச் சமாதானம் உண்டாவதாக (1 பே. 5. 14. எபே. 6. 23. 2 தெச. 3. 16. கலா. 6. 16.). உயிர்த்தெழுந்த எம்பிரானது பிரிய வாழ்த்து வசனமும் இதுவே (யோவா. 20. 19, 26.). பரி. அப்போஸ்தலன் சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்தச் சொல்லுகிறார். இதேமாதிரியாக புதியஏற்பாடு முழுவதிலும் யோவா. 10. 3–ல் மாத்திரம் வழங்குகிறது. ‘அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிடுகிறான். பரி. அப்போஸ்தலனும் ஆசியாவின் சபைகளின் மெய்ப்பனாக தமது நல்ல மேய்ப்பனையே பின்பற்றித் தமது ஆடுகளைப் பேர்பேராக வாழ்த்துகிறார்.’

## அனுபந்தம் 1.

### நோஸ்திக்கம் (Gnosticism) (அதாவது ஞானமார்க்கம் என்றழைக்கப்பட்ட வேதப்புரட்டு.)

பரி. யோவான் அப்போஸ்தலனுடைய நிருபங்களை வாசிக்கும்போது இங்குமங்கும் கள்ளப்போதகரைப்பற்றியும் கள்ளப்போதகங்களைப்பற்றியும் காண்கிறோம் (2. 18, 19, 26;



4. 3–6. 2 யோவா. 7–10.). இக்கள்ளப்போதகங்கள் யாவையென நாம் உணர்ந்துகொண்டு அதன்பின் இந்நிருபங்களை வாசிக்கப் புகின் இக்கள்ளப்போதகங்களால் கிறிஸ்தவர் தமது கொள்கையினின்றும் விழுந்துபோகாதபடிக்கு இந்நிருபங்கள் எழுதப்பட்டனவென்பது வெளியாம்.

பரி. யோவான் அப்போஸ்தலனுடைய காலத்தில் கள்ளப்போதகர் பலர் இருந்தனர். அவர்கள், மனுஷர் இருளில் நடந்தபோதிலும் தேவனோடு ஐக்யப்பட்டிருக்கலாம் என்றும் (1. 6.), பாவமென்றே ஒன்றிலதென்றும், மனுஷர் பாவிகளல்லரென்றும் (1. 8–10; 3. 4–12.) தேவனைப்பற்றிய அறிவு மனிதருடைய இருதயத்தில் மாத்திரம் இருக்கக்கூடியதொன்றென்றும், அவ்வறிவு தமதும் இப்போதகருடைய கொள்கைகளில் ஆழ்ந்த அறிவுடையோரும் மாத்திரம் எய்தக்கூடியதென்றும், அவ்வறிவை யடையும்பொருட்டுத் தேவகற்பனைகளைக் கைக்கொள்ளுவதும் தேவன்மீதும் மனிதர்மீதும் அன்புடையராதலும் காரியமன்றெனவும் (2. 4–6, 9; 4. 7–8.), இயேசு சாதாரண மனிதனே என்றும், தேவகுமாரன் அல்லவென்றும், கிறிஸ்துவென்பவர் இயேசுவைப்போன்றவ ரல்லவெனவும்; ஆனால் கிறிஸ்துவென்பவர் இயேசுவின் ஞானஸ்நானகாலத்தில் ஆவியின் ரூபமாக அவருக்குள் பிரவேசித்துப் பின் இயேசு சிலுவையில் அறையப்படா முன்னரே அவரைவிட்டுப் பிரிந்துவிட்டாரெனவும் (2. 22–23; 4. 2–3, 14, 15; 5. 1, 6. 2 யோவா. 7,) இயேசு நம்மைப் பாவத்தினின்றும் விடுதலையாக்கி இரக்ஷித்து நமக்கு நித்தியஜீவனை யளிக்கவில்லையெனவும் (1. 7; 2. 2; 3. 5; 4. 9, 10, 14; 5. 10–12.), கூறிவந்தனர்.

இவ்வாறு கூறிவந்தவரே பிற்காலத்தில் நோஸ்டீகர் (Gnostics) என்றழைக்கப்பட்டனர். (நோஸ்டீகர் எனும் பதம். அறிவுடையவரெனப் பொருள்படும்.) அவர்கள் மார்க்கம் நோஸ்டீகமதம் (அறிவுடைய மதம், அல்லது ஞானமார்க்கம்) என்ற

ழைக்கப்பட்டது. ஆனால் பரி. யோவான் அப்போஸ்தல
னுடைய காலத்தில் வேதப்புரட்டானது அப்போதுதான் தலை
யெடுத்துக்கொண்டிருந்தது. அக்காலத்தில் அவர்களுக்கு நோஸ்
தீகர் எனும் பெயர் கொடுக்கப்படவில்லை. அது பிற்காலத்தில்
அதாவது இரண்டாம் நூற்றாண்டளவில் பற்பல கோட்பாடு
களாகவும் பிரிவுகளாகவும் விபரீத கொள்கைகளாகவும் பிரிந்தது.

இந்தியர்களுக்கு இந்த நோஸ்தீகமார்க்கத்தையும், அது விஷ
யத்தில் பரி. யோவான் அப்போஸ்தலனுக்கு ஏற்பட்டிருந்த
துவேஷத்தையும் ஆராய்வது மிகப் பிரீதியை விளைக்கும். ஏனெ
னில் அக்காலத்துச் சின்ன ஆசியாவிலிருந்த நோஸ்தீகக் கொள்
கைகளிற் சில இந்தியாவிலிருந்துதான் அங்குசென்றன.
அக்கொள்கைகள் இன்னும் இந்தியாவில் நிலைத்து இந்து
மதத்திற் வழங்குகின்றன. கிறிஸ்துமதத்திற்கும் இந்திய
கொள்கைகளுக்கும் பூர்வத்திலேயே இருந்த சம்பந்தத்தையும்
அதனால் விளைந்த பேதங்களையும் உற்றாராய்வது இந்திய கிறி
ஸ்தவர்களுக்கும் பேருதவியாம். ஏனெனில் இந்தியரின் அபிப்
பிராயத்திற்கேற்பக் கிறிஸ்துவையும் கிறிஸ்து சுவிசேஷங்களை
யும் பிரசங்கிக்கப் புகுவோர்க்குப் பரி. யோவான் அப்போஸ்
தலனுடைய போதனைகளும் எச்சரிப்புகளும் அதுமூலமாய்
அடையும் பாதுகாப்பும் அவசியமன்றோ. மேலும் புறமதஸ்
தரான இந்தியர் தேவனையும் உலகத்தையும்பற்றிய தங்கள்
கொள்கைகள் இந்த நோஸ்தீகக் கொள்கைகளோடு ஒருவாறு
ஒத்திருப்பது கண்டு அதனோடு அனுதாபமுடையராகலாம்.
ஆனால் பரி. யோவான் அப்போஸ்தலன் அக்கொள்கைகள்
எவ்வளவு தூரம் சத்தியத்திற்கு மாறுபட்டிருக்கின்றனவென்
றும், அக்கொள்கையுடையார் தங்கள் நினைவிலும் ஜீவியத்தி
லும் எத்தனைக் குற்றமுடையராயிருக்கின்றாரெனவும் கூறு
வதைக் கவனிக்கையில் அதனால் விளையும் பயனும் பெரிதே
யாகும். இந்தியரோ கீழ்நாட்டாருக்குரிய ஆழ்ந்த அறிவும்
சிந்தனையுமுடையார். பரி. யோவான் அப்போஸ்தலனும் அத்
தன்மையுடையரே. ஆதலின் அப்போஸ்தலன் தமது காலத்



திலும் தமக்குப்பின் எக்காலத்திலும் இருப்பவரை அந்த நோஸ்
தீகமார்க்கத்துக் கொள்கைகளுக்கு விரோதமாக எச்சரித்துக்
கூறும் விதமும், அவர் தமது பரம எஜமானிடத்திலிருந்து தாம்
கற்றுக்கொண்ட சத்தியங்களையும் உண்மைகளையும் விவரிக்கிற
விதமும் இந்தியருக்கு அதிகப் பிரீதியையும் பிரயோசனத்தை
யும் விளைக்கும் என்பதற் கையமில்லை.

### நோஸ்தீகமார்க்கத்தின் (Gnosticism) மூலாதாரம்.

கிறிஸ்து சமயம் முதல்முதல் ஆசியா நாட்டாருக்குள்ளே
பரவிற்றென்பதும் பரி. யோவான் அப்போஸ்தலனும் தமது
திருபங்களை அந்த ஆசியா நாட்டாருக்கே எழுதினர் என்பதும்
விசேஷித்த காரியங்களே. அக்காலத்தில் சின்ன ஆசியாவி
லுள்ளவர் தேவனையும், உலகத்தையும், மனிதருடைய ஆத்து
மாக்களையும்பற்றி ஆழ்ந்ததும், விபரீதமானதும், மூடாசார
டமும் குருட்டாட்டமுமானதுமான கொள்கையுடையராயிருந்
தனர். அந்நாட்டாருக்கு எவை எவை ஆழ்ந்ததாகவும், மானத
மானதாகவும், மாந்திரீகமானதாகவும் காணப்படுமோ அவை
யெலாம் ரீதியை விளக்கும். அவர்கள் ஒருவாறு மத்தியஸ்
தானத்திலிருந்தனர். அவர்களைச் சுற்றிலும் ஆழ்ந்த ஞான
முடைய இந்தியரும், பெர்சியரும், எகிப்தியரும், கிரேக்கரும்,
யூதேயாநாட்டாரு மிருந்தனர். இந்நாடுகளின் கொள்கைகளும்
போதனைகளும் சின்ன ஆசியாவின் மதக்கொள்கைகளுக்குக்
காரணமா யதுமுண்டு. இந்நாடுகளிலெல்லாம், விசேஷமாய்
இந்தியாவிலும் கிரேக்கிலுமுள்ளவர் பல்லாயிரம் வருடங்களாக
உலகமெல்லாம் இருப்பதற்கு ஆதாரமான ஓர் மூலாதார மின்
னதென ஆராய்ந்து வந்ததுமன்றி பூரணராய், அளவிலுள்
டங்காராய் ஆதியந்தரகிதராய் விளங்குமோர் பரம்பொருள்
உளரெனவும் கருதியும் கூறியும் வந்தனர். (இப்பரம்பொருளை
இந்தியர் **பிரமம்** எனவும் கிரேக்கர் டுவான் Toon எனவும்
அழைத்தனர். இதன்பொருள் 'இருக்கிறதாகிய அது' என்
பதாம்.)

இத்தகையவோர் பரம்பொருளைச் சிந்திப்பதற்கும் அதற்குச் சார்பான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கும் ஏதுவாய் அக்கால சாஸ்திரிகள் தெய்வம் சகல நல்லொழுக்கங்களுக்கும் மூலமாகவும் சமய நிர்ணயவஸ்துவாகவுமிருக்கிறார் எனும் தத்துவங்களை மறுக்கவேண்டி நேர்ந்தது. அன்றியும் அதுவே காரணமாகத் தெய்வம் ஸ்வரூபமுடையவராயிருத்தல் கூடாதென அவரையோர் உயிரற்ற வஸ்துவாகப் பாவித்து அவரைக்குறித்து ஒன்றன்பாலிலும் பேசிவந்தனர்.

உலகம் உண்டுபடுதற்கான முதற் காரணத்திற்கும், காணக்கூடிய உலகத்திற்கும் உள்ள சம்பந்தத்தையும் உலகில் தீமை எவ்வாறு பிரவேசித்ததென்பதையும் ஆராய்வதே பெரு வேலையாயிருந்தது. கிரேக்கர் இயற்கையில் எளிதில் மாறுபடுமியல்பினரும், எதையும் நன்றாகக் கொண்டு களிக்கும் இயல்பினருமாதலின் உலகமெல்லாம் பூரணமில்லாத நிலைமையிலிருந்து தானாகவே விர்த்தியாகிக்கொண்டே வருகிறதெனவும், ஒரு காலத்தில் அது பூரணப்படுமெனவும் கூறிவந்தனர். ஆனால் அவர்களின் கீழ்திசையிலிருந்தவரோ உலகின் தீமையைக் குறித்து அவ்வாறு எளிதாய் நினைத்துவிடாமல் வெவ்வேறு விதமாய் அதனைப் பாராட்டிவந்தனர். இவற்றில் பாரசீகரும் இந்தியரும் வெவ்வேறு கொள்கையுடையவரானார்.

பாரசீகர். இவர் ஜோராஸ்டரின் (Zoroaster) கோட்பாட்டையுடையார். இவர் கொள்கை துவிதம். இவர் கொள்கைப்படி ஆதியாய், ஒன்றினொன்று சாராததாயுள்ள நல்ல வஸ்துவும் தீயவஸ்துவுமாகிய இரண்டுண்டு. இவையே ஒளியும் இருளுமாம். இவற்றுள் ஆர்மஸ்ட் (Ormuzd ஞானமுள்ள நாயன்) எனும் நல்லவஸ்து பூரணஒளியில் வசிப்பதாம். அஹ்ரிமான் (Ahriman: துஷ்டஆவி) எனும் பொல்லாதவஸ்து பூரண இருளில் வசிப்பதாம். இவை இரண்டும் இடைவிடாது ஒன்றோடொன்று போர்புரிகின்றன. ஒவ்வொன்றும் தத்தம் சுபாவமுடைய தமக்குக் கீழ்ப்பட்ட பல வஸ்துக்களைச் சிருஷ்டித்துத் தமக்குப் போரில் உதவிபுரியச் செய்கின்றன.



இவற்றில் ஆர்மஸ்ட், உலகையும், நல்லவர்களாகவும் சுயாதீன சித்தமுடையராகவுமுள்ள ஒரு புருஷனையும், ஸ்திரீயையும் மற்றும் உலகிலுள்ள சகல நல்ல வஸ்துக்களையும் சிருஷ்டித்தது. அஹ்ரிமானும் உலகுக்கு வருகிறது. உலகையே தனக்குப் போர்க்களமாகச்செய்து, விஷமுள்ள செடிகளையும் பொல்லாத மிருகங்களையும் படைத்து இறுதியில் முதல் மனுஷன் மனுஷியாகிய இருவரும் ஆர்மஸ்ட்டுக்கு விரோதமாய் எழும்படி செய்து இவ்விதமாய் உலகில் சகலவிதமான துன்பங்களையும் துக்கங்களையும் மனிதருக்கு விளைத்தது.

இந்தப் பாரசீக தத்துவசாஸ்திரம் மிகவும் குருட்டாட்டமானதும் புத்திக்குப் பொருந்தாததுமாயிருப்பினும் மற்ற சாஸ்திரத்தைப்போல் அவ்வளவு தப்பிதமுடையதல்ல. ஏனெனில் அவர்கள் ஒரே கடவுளே நன்மைக்கும் தீமைக்கும் காரணரெனக் கூறுகின்றார். சீரியாநாட்டு நோஸ்திகர் ஒருவாறு இந்தப் பாரசீக கொள்கையையே பின்பற்றுவாராயினர். எனினும் அவர்கள் உலகமானது அந்தகாரத்தின் கடவுளாகிய தீயவஸ்துவால் படைக்கப்பட்டது எனக்கொண்டனர்.

நம் இந்தியருடைய கொள்கையோ ஆழ்ந்த யோசனையுடைய இந்தியருக்கெல்லாம் வெளிப்படை. இந்தியர் பாரசீகரைப் போலாது ஏகேஸ்வரவாதிகள். இவர் கொள்கைப்படி நித்தியராய், பூரணராய், அளக்கரிய பரம்பொருள் ஒருவர் உளர் (ஏகம் ஏவா அத்விதயம் இரண்டல்ல ஒன்றே) உள்ளனவாகத் தோற்றும் பிறவெல்லாம் உள்ளதாகிய அவ்வொரே பரம்பொருளினின்று தோன்றி, அல்லது தோன்றுவதாகக் காணப்பட்டு, இறுதியில் அவ்வொன்றோடே கலந்துவிடும். சடமாகிய வஸ்துவெல்லாம் தீயனவே. உண்மையில் பார்க்குமளவில் சடப்பொருளும், சடத்திலடங்கிய தீமையும் ஆகிய எல்லாம் மாயாதோற்றமே. மனிதனுக்குள்ள ஆவி பிரமத்தோடு ஐக்யமுடையது (தத்வமசி.). எனவே மதக்கோட்பாட்டின் முக்கியகருத் தென்னையோவெனின், நித்தியமாய் விளங்கும் பிரமத்தோடு தனக்குள்ள ஐக்யத்தையுணர்ந்து சடத்தின்

மாயையினீங்கி ஆன்ம சுயாதீனமடைந்து அப்பரம்பொருளோடு ஐக்கியமாவதேயாம்.

எம்பிரான் பரி. கிறிஸ்து பகவான் திருவவதாரம் பண்ணிய பின் கிறிஸ்துமார்க்கம் பரவிய தேசங்களில் அவரது அவதாரத்தின்முன் நின்றுலவிய கொள்கைகள் இவைகளே. நாம் இப்பொழுது ஆராயவிருக்கும் தப்பறையான கொள்கைக்கு மூலாதாரமாயிருந்தவையும் இவையே. இக்கொள்கைகளைக் கிறிஸ்துமதக் கோட்பாடுகளோடு இயைக்கப் பிரயத்தனிக்கையில் இத்தப்பறைகள் விர்த்தியாயின.

### கீழ்நாட்டார் கொள்கை

### யூதமார்க்கத்துடன் கலந்தது.

மேற்கூறிய கொள்கைகள் கிறிஸ்துமதக் கோட்பாடுகளோடு கலவாமுன் யூதமார்க்கக் கோட்பாடுகளுடன் கலந்தன. அலெக்சந்திரியா பட்டணத்துப் பைலோ (Philo) வெனும் யூததத்துவ சாஸ்திரியொருவர் கிரேக்கரும், இந்தியரும் கொண்டிருந்த பரம்பொருள் நிர்ணயத்தைப் பழைய ஏற்பாட்டு ஏகேஸ்வரக் கொள்கையுடன் ஒற்றுமையாக்க முயன்றனர். ஆனால் இது கூடாததாயது. ஏனெனில் நிர்க்குணராய் விளங்கும் பரம்பொருளென்பவர் உலகைப்படைத்துத் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களுடன் அதிக உறவாடிய யூதஜனங்களின் எகோவாவுடன் ஒன்றுவ தெங்ஙனம்? எனவே இந்த யூதசாஸ்திரி லோகாஸ் (Logos) எனும் பிறிதோர் தெய்வத்தை ஸ்தாபித்தார் (லோகாஸ் = வார்த்தை) இந்த லோகாஸ் என்பவர் எகோவாவின் மாறுபட்டு வேறுபவரோ அன்றேல் அவரின் பிறிதோர் அம்சமேயோவென்பது திட்டமாகக் காணப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் சகல காரியங்களும் இந்த லோகாஸால் இயற்றப்பட்டனவெனக் கூறினர். இந்த நிராதீனவஸ்துவும் லோகாசும் இந்திய சாஸ்திரிகள் கூறும் பிரமத்துக்கும் பிர்மாவுக்குஞ் ஒப்பாம். இந்த லோகாசுக்குக் கீழ்ப்பட்டு பலஜீவிகள் அல்லது 'சத்து' கள் இருந்த



தாகவும் இந்த சாஸ்திரி வாதித்தார். இந்த லோகாஸ் அல்லது 'வார்த்தை'யைப் பற்றிக் கூறும் தப்பானகொள்கையை மறுப்பதற்காகப் பரி. யோவான் அப்போஸ்தலனின் சுவிசேஷத்தின் முகவுரை (யோவா. 1. 1–18.) வரையப்பட்டது போலும்.

### கீழ்நாட்டார் கொள்கை

### கிறிஸ்து சமயத்தோடு கலந்தது.

மேற்கூறிய பைலோ (Philo)வின் கோட்பாடுகள் தவிர மற்றும் பலவகையாலும் யூதமார்க்கத்தோடு கீழ்நாட்டுக் கோட்பாடுகள் கலந்தன. எஸனீஸ் (Essenes) சகோதரக் கூட்டத்தார் ஒருவாறு இக்கொள்கைகளையுடையோராய் சடப்பொருள் தீமை விளைப்பனவே எனச் சாதித்தார். இவற்றினீங்கி இந்த கீழ்நாட்டுக் கொள்கை கலந்த யூதமார்க்கம் கிறிஸ்துமதத்தோடு கலந்ததை யாய்வாம். இக்கொள்கைகள் கிறிஸ்துமதக் கோட்பாடுகளைக் கலவாதிருந்தபோது அவை பிறிதோர் சாஸ்திரமாகக் கருதப்படலாம். ஆனால் அவை கிறிஸ்துசமயக் கோட்பாடுகளையும் தம்முடன் கலக்கும்போது அவற்றை வேதப்புரட்டெனவே அழைக்கவேண்டும். ஏனெனில் அக்கொள்கையுடையார் கிறிஸ்துமார்க்க முக்கிய போதனைகளை மறுத்தும் மாற்றியுமல்லாது அக்கொள்கைகளை இவற்றுடன் கலத்தல் இயலாது. அன்றியும் அவ்வாறு கலந்தவர் தாம் கொண்டிருப்பதே சரியான கிறிஸ்துமார்க்கக் கொள்கைகள் எனக்கூறி விசுவாசிகள் பலரை அவர் நேர் வழியினின்று விலகுமா செய்தனர்.

நாம் மேலேபார்த்த பலகொள்கைகள் கிறிஸ்துமார்க்க சத்தியங்களோடு முற்றிலும் மாறுபட்டனவென்பதும் ஒரு சிறிதும் ஒவ்வாதனவென்பதும் வெளிப்படை.

1. பைலோ போதித்தபடி நிர்க்குணராகிய முழுமுதற் கடவுள் உலக சிருஷ்டிகராகவும், யூதருக்கு நியாயப்பிரமாணத்தை யளித்தவராகவும் இருத்தல்கூடாது. அவர் நிர்க்குணராயிருத்தலே இது கூடாதகாரியமென ஸ்தாபிக்கும். அன்றியும் வஸ்துவெல்

மானம் தீமையின் தன்மையென அவர் கூறுவதும் இதற்குப் பொருந்துவதன்று.

எனவே இக்கொள்கையார் பைலோ நினைந்ததினும் சற்று பின்னமாகச் சிந்தித்து, எண்ணிறந்த பல சத்துக்கள் (சிறு தேவர்கள் or தேவதூதர்கள்.), இருப்பதாகக் கொண்டனர். இவற்றுள் முதலாவதானது தெய்வத்தினின்றும் போந்தது. மற்றவையெல்லாம் ஒன்றிலிருந்தொன்றாக வந்தன. கடைசியாக வந்த சத்து டெமியர்ஜ் (Demiurge) இந்த டெமியர்ஜ உலகையும், உலகின் தீங்குகளையும் படைத்து யூதருக்கு நியாயப்பிரமாணத்தை யளித்ததாகவும் கொண்டார். இந்த டெமியர்ஜ் என்பது நிர்க்குண நிராதீன வஸ்துவாகிய பரம்பொருளினும் முற்றும் மாறுபட்டது.

2. தெய்வம் மனுஷனாக அவதரித்துப் பாடுபடுதல் கூடாத காரியம் எனவும் கருதினர். ஆனால் இயேசுகிறிஸ்து தெய்வீகமானவராயிருந்தும் பாடுபட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார். இதை அவர்கள் மறுக்கமுடியாது. ஏனெனில் இவ்விஷயம் சரித்திரவாயிலாகவும் உண்மையென ஸ்தாபிக்கப்பட்டது. எனவே இதற்காக வேறு பல கொள்கைகளை ஏற்படுத்தினர். அவற்றுள் இயேசுவானவர் வெளித்தோற்றத்தளவில் மனுஷனைப்போல்தோற்றினும் உண்மையில் அவர் மனுஷ தேக முடையவரல்லர் என்பது ஒருகொள்கை. அவர் சாதாரண மனுஷன்தான். ஆனால் கிறிஸ்துவெனப்பட்ட ஓர் தெய்வீக சத்து அவருடைய ஞானஸ்நான காலத்தில் அவர்மீது வந்து அமர்ந்து அவர் சிலுவையில் அறையப்படும்வரை யவருடனிருந்து. அவர் அறையப்படாமுன்னரே அவரைவிட்டுப் பிரிந்துபோயிற்று என்பது மற்றுமோர் கொள்கை.

3. அன்றியும் இக்கொள்கையார் பாவத்தைப் பற்றிக்கொண்டிருந்த கோட்பாடு மீட்பைப்பற்றிய கிறிஸ்துமதக் கோட்பாட்டுக்கு முற்றிலும் முரணானது. கிறிஸ்தவன் பெரிய தீமையெனக் கருதுவது பாவத்தையே. பாவமென்பது தேவகட்



டளையை மீறுவதாம். உலகத்தின் பாவங்களுக்கும் நிவாரணம் கிறிஸ்து. கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் கழுவிச் சுத்தமாக்கும். ஆனால் நோஸ்தீகக் கொள்கையின்படி உள்ளனவாகக் காணப்படும் சகலமும் ஒன்றிலிருந்தும் ஒன்றினாலும் இருப்பன. மனுஷனுக்கு அவனுக்கென்றேற்பட்ட சுயாதீன சித்தம் கிடையாது. ஆதலின் அவன் மீறுதலாகிய குற்றமுடையவனல்லன். உலகில் தீமை காணப்படவேண்டியதும் இயற்கையே. ஏனெனில் உலகம் உண்டுபடுதற்குக் காரணமாயிருந்து உலகைப் படைத்தது பூரணமற்றதும் விரோதத்தன்மையுள்ளதுமான டெமியர் ஜன்றோ? கிறிஸ்துவின் மீட்பு மனிதருக்கு மேலான உண்மையைப் போதிப்பதனால்மாத்திரம் உண்டாகும். இந்த விஷயத்தில் மேற்கூறிய இருவித நோஸ்தீகரும்—இந்தியரும் பாரசீகரும்—பேதமுடையராவார். ஒரு பிரிவார் உலகைப் படைத்த டெமியர்ஜ எனும் சத்து தீமையிலிருந்து உற்பத்தியானதெனக் கூறுவர். ஆதலின் அவர்கள் கிறிஸ்து, யூதமார்க்கத்தையும் யூதமார்க்கத்தின் தீயபோதனைகளையும் அழிக்கவந்ததாகக் கூறுவார். மற்றவர் இந்த டெமியர்ஜானது நிராதாரமான நிர்க்குணபிரம்மத்தின் ஒரு சத்துஎனக் கூறி, ஆதலினால் கிறிஸ்து யூதமார்க்கத்தையும் யூதமார்க்கப் போதனையையும் பூரணமாக்க வந்தார் எனக் கூறுவார்கள்.

4. கிறிஸ்தவரையும் நோஸ்தீகரையும் பிரித்த நாலாவது வித்தியாசமு மொன்றுண்டு. அதாவது கிறிஸ்தவர் யூதமார்க்கத்தைக் கருதியதுபோல, நோஸ்தீகர் தாங்கள் நினைந்திருந்த ஒரு பூரண நிலைமைக்கு இந்தக் கிறிஸ்துமார்க்கம் ஆயத்தப்படுத்துவதும், ஆதாரமாவதும், பூரணப்படாததும், அடையாளமானதாகவுமிருக்கிற ஒரு கொள்கையெனக் கருதினர். தாங்கள் பூரண அறிவடைந்ததாக எண்ணிவந்த நோஸ்தீகர், தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்துவந்த கிறிஸ்தவரைத் தங்களுக் கீழானவர்கள் என மதித்துவந்தனர். நோஸ்தீகர் கொள்கைப்படி, 'அறிவு' (அதாவது மூளையின் அறிவு, இருதயத்தின் அறிவன்று.) விசுவாசத்திலும் மேலானதாக எண்ணப்பட்டது.

இந்த 'அறிவு' சாதாரணமான பாமரஜனங்கள் அடையக்கூடியதன்று. ஆனால் அந்த அறிவின் ஆழத்தை யறிதற்கெனப் பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்க்கே அவ்வறிவு கிட்டும்.

## செரிந்து (Cerinthus) வும் பரி. யோவானும்.

இந்தக் கள்ளப் போதகங்களுக்கு விரோதமாய் எழுதப்பட்ட பல பாகங்களைப் புதிய ஏற்பாட்டாகமங்கள் பலவற்றில் காணலாம். அவைகளில் விசேஷித்தது கொலோசேயருக்கு எழுதப்பட்ட நிருபம். யோவான் நிருபம் எழுதப்படுமுன் இந்த வேதப்புரட்டு அதிகமாகப் பரவிவிட்டது. பரி. யோவான் அப்போஸ்தலனுடைய காலத்தில் இதைப் போதித்துவந்தவன் செரிந்து.

செரிந்துவினுடைய போதகத்தைப்பற்றி ஆதிக்கிறிஸ்தவ நூலாசிரியருள் ஒருவராகிய ஐரேனியூ (Ireneus) வென்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—'ஆசியாவிலுள்ள செரிந்து வென்பவன் உலகம் மேலான தேவனால் படைக்கப்படவில்லையென்றும், சர்வவல்லவரினும் மாறான எல்லாவற்றிற்கும் மேலானவராயிருக்கிற அத்தெய்வத்தைப்பற்றி யாதும் அறியாததுமான ஒரு சத்துவே உலகைப் படைத்ததென்றும் சொல்லுகிறான். இயேசு ஒரு கன்னிகையின் வயிற்றில் அவதரித்தார் என்பது அவனுக்கு உடன்பாடன்று. அவர் மற்றவரைப்போலத் தம் பிதா மாதாக்களாகிய யோசேப்புக்கும் மேரிக்கும் பிறந்தார் எனக் கூறுகிறான். இயேசு எல்லா மனிதரிலும் அதிகமாய் ஞானத்திலும், அறிவிலும், நீதியிலும் விளங்கினாரெனினும், அவருடைய ஞானஸ்நானத்தின்பின், சர்வவல்லவராகிய தேவனிடமிருந்து கிறிஸ்துவானவர் புறப்பட்டு ஒரு புறாவைப்போல் இந்த இயேசுவானவர்பேரில் இறங்கினார். அது காரணமாய் இந்த இயேசு தாம் அறியாத தம்முடைய பரமபிதாவைப் பற்றிப் பிரஸ்தாபித்து அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். இறுதியில் கிறிஸ்துவானவர் இயேசுவிலிருந்து பிரிந்துபோனபின் இயேசு பாடுபட்டு மரித்துப்பின் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். பாடுபட்டது கிறிஸ்துவல்ல. ஏனெனில்



அக்கிறிஸ்து பாடுபடக்கூடாத தன்மையுடையவர்.' என்று கூறுகிறான்.

கிறிஸ்து மனிதரைப் பாவங்களினின்று இரக்ஷிப்பவர் என்று செரிந்து அறியான். ஏனெனில் தீமையைப்பற்றிய அவனுடைய கொள்கைகள் விபரீதமானவைகள். கிறிஸ்து தேவனுடைய அன்பை வெளியிடுகிறவர் என்பதை அவன் அறியான். ஏனெனில் கடவுள் நிர்க்குணராய் யாதும் லக்ஷணங்கள் இல்லாதவரென்பதே அவனுடைய கொள்கை. கிறிஸ்தவன் தேவனைப்பற்றித் தான் அறிகிற அறிவினால் பரிசுத்தமடையக்கூடும் என்பதை யறியான். ஏனெனில் அவன் கொள்கைப்படி அறிவெனப்படுவது விளங்காத காரியங்களை மூளையினால் கிரகிப்ப தொன்றேயாகும்.

பரி. யோவான் அப்போஸ்தலன் கள்ளப்போதகனை அதிகக் கண்டிப்பாய்க் கண்டனம் பண்ணுகிறார் (1 யோவா. 2. 22. 2 யோவா. 10. 11.). இது சம்பந்தமாய் பரி. யோவான் அப்போஸ்தலனுடைய சீஷனாகிய போலிகார்ப்பு (Polycarp) என்பவர் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார். அதாவது, 'ஒருநாள் பரி. யோவான் அப்போஸ்தலன் எபேசுவிலுள்ள ஓர் மஞ்சனச் சாலைக்குப் போயிருந்தார். அப்போது செரிந்து அச்சாலையினுள் இருக்கிறான் என யாரோ சொல்ல, அதைக்கேட்ட நமது அப்போஸ்தலன் 'சத்தியத்திற்கு விரோதியாகிய செரிந்து உள்ளிருப்பதனால் இச்சாலை இடிந்துவிழாமுன் நாம் ஓடிவிடுவோம்' எனச் சொன்னாராம்.

இக்கள்ளப்போதகத்தினால் பெருந்தீங்கு விளையும் எனப் பரி. அப்போஸ்தலன் கண்டறிந்து அதற்கு விரோதமாக இவ்வளவு பலமாய் எழுதுவதன் காரணமென்னவென் றாய்வோம்.

## நோஸ்தீகக் கொள்கையின் மோசமும் அக்கொள்கையால் விளைவதும்.

நோஸ்தீகர் தாங்கள் கடவுளைப்பற்றி யறிந்துவிட்டதாகப் பெருமை பாராட்டினார்கள். கர்த்தராகிய இயேசு, தேவனை

யறிவதே நித்தியஜீவன் என லக்ஷணித்தார். ஈண்டு எம்பிரானும் நோஸ்தீகரும் வெவ்வேறு கருத்துடையார். எம்பிரான் கற்பித்தது இருதயத்தின் உணர்ச்சி. நோஸ்தீகர் கூறுவது மனதின் ஆராய்ச்சி. நோஸ்தீகர் தேவன் நமக்கு வெளிப்படுத்தாத சகல அந்தரங்கங்களையும் ஆராய்ந்தறியும் பிரீதிகொண்டவர். ஆனால் எம்பிரான் தேவன் தமது குமாரன் மூலமாய் வெளிப்படுத்தினவற்றை நாம் அவரில் அன்புகூர்வதின் மூலமாய் அறிந்துகொள்ளுமாறு பணித்தார். கிறிஸ்துமார்க்கத்துக்கு ஆதாரம் சரித்திரவாயிலாக நிலைப்படுத்தப்பட்ட உண்மைகள். நோஸ்தீகக் கொள்கை மனுஷருடைய ஆராய்ச்சியையே தனக்கு ஆதாரமாகவுடையது.

கிறிஸ்து சமயம் ஆவிக்குரிய ஜீவியத்தில் மனிதனுடைய ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்தும். அதாவது தேவனுக்கு மனிதர் மீதுள்ள உறவும் அதுகாரணமாய் மனிதன் கடவுளிடத்தும், மனிதன் மனிதனிடத்தும் எவ்வளவு கடப்பாடுடையான் என்பதையும் வரையறுக்கும். ஆனால் நோஸ்தீகமார்க்கம் கடவுளுக்கும் மனிதருக்குமுள்ள வஸ்து நிர்ணயத்தை இல்லதாக்கி தேவனுக்கும் மனிதருக்கும் அன்பு காரணமாய் உண்டாகக்கூடிய கூட்டுறவை மறுப்பதாகும். கிறிஸ்துமார்க்கம், கிறிஸ்து சிலுவையில் பிராணத்தியாகம் செய்து தமது அன்பை விளக்கி மனிதரை மீட்டுக்கொண்டதனால் மனிதருடைய பாவத்தின் அகோரத்தைக் காட்டுகிறது. நோஸ்தீகமோ நீதிக்கும் அநீதிக்கும் உள்ள பேதத்தை இல்லதாக்கி அதுகாரணமாய் தேவன் அளவற்ற அன்பினால் மனிதரை மீட்டுக்கொண்ட மீட்பை மறுக்கிறது.

இத்தவறான நோஸ்தீகக் கொள்கையினால் உலகில் விளைந்ததென்ன? மனிதர் துறவறத்தை நாடினர். சடமெல்லாம் தீமைக்குறைவிடமெனக் கொண்டதினால் ஆன்மா வசிக்கும் மானிட சரீரமாகிய சடமும் தீமை விளைப்பதாய்க்கொண்டு அச்சரீரத்தினின்றும் எவ்வளவுதூரம் வேறாயிருக்கக்கூடுமோ அவ்வளவுதூரத்திற்குத் தூயராகலாமெனக் கருதிவந்தனர். ஐம்பொறி



யடக்கலே ஆற்றலாய்க் கொண்டார். நல்ல போஜனமும் செய்யார். கொடிய விரதங்களிலும் தபசுகளிலும் நேரத்தைச் செலவிட்டார். விவாகஞ்செய்தலும் தவறெனக்கொண்டார். பக்தியுடையாரென்பவர் ஜனசங்கத்தின் நீங்கிக் காடுகளிலும் மலைகளிலும் வசித்துவந்தனர் (கொலோ. 2. 16, 21, 23; 3. 1, 3, 5, 10.). காலத்துக்காலம் எண்ணிறந்த பெருந்தகையாளர் தமதான்மாக்களைச் சுத்தஞ்செய்யும் நோக்கமுடையராய் அரிய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பொருட்படுத்தாது இத்தவறான பாதையிற் சென்றிருக்கின்றனர். அவர் திறம் அதிசயிக்கத்தக்கதே. இத்தவறான நெறியில் சென்று எவ்வளவுக் கதிகம் துன்பங்களைச் சகித்தனரோ அவ்வளவுக்கதிகமாய் அவருக்காகப் பரிதபிக்கவேண்டியதே கடன். இதைக்குறித்துப் பரி. பவுல் அப்போஸ்தலன் கூறியதுண்மை.

'தேவன் நம்மிடத்தில் கேட்பதென்ன? நம்மை நாமே சித்ரவதை செய்துகொள்ளக் கேட்கிறாரோ அன்று. நாம் மனந்திரும்பி நம்முடைய சுயநலப் பிரீதியைத் தவிர்க்கத்தக்கதாக இயேசுவானவரின் ஆவியை அங்கீகரிக்கவே சொல்லுகிறார். மனிதன் உலகில் சந்தோஷத்துடன் உயிர் வாழ்ந்து உலகம் நன்னிலையடைவதை ஒவ்வொருவனும் விரும்பவேண்டுமெனக் கூறுகிறார். உலகத்துக்குத் தப்பி மலைகளிலும் கெபிகளிலும் பதுங்கி வசிக்கவேண்டுமென்பது தெய்வசித்தமன்று.

ஆதியில் இவ்வாறான பெருந்திறல் கொண்டு விளங்கின நோஸ்தீகக் கொள்கை, காலக்கிரமத்தில் கீழான நிலைக்கு வந்துவிட்டது. அறிவே பிரதானமெனக் கொண்டதனாலும், சடப்பொருளாகிய சரீரம் தீமைக்கே யுறைவிடமாதலினாலும், சரியான அறிவடைந்தோரின் ஆன்மாவில் பாவக்கறை பற்றாதெனக் கொண்டதினாலும், மனிதர் தங்களுக்கு உலகின் மீதுள்ள வெறுப்பையும் அது தங்களைக் கறைப்படுத்தாதென்னும் எண்ணத்தையும் பிரதானமாகக்கொண்டு சகலவிதமான இச்சைகளுக்கும் ஆபாசங்களுக்கும் இடங்கொடுத்ததுமன்றி அவர்களிற் சிலர்

ஆன்மா மீட்படைதற்கு ஏதுவாய்ப் பூரண அறிவடைதற்கு இவ்வகையான அறிவும் அவசியமே எனவும் போதிக்கவும் தலைப்பட்டார்.

### இந்தியாவில் இதனை யொப்பிய கொள்கை.

'நிகழ்ந்தனவே மாறியும் நிகழும்.' மேற்கூறிய அதேவிதமான பூர்வீகக் கொள்கைகள் இந்தியாவில் உண்டு. அவைகளோடு கிறிஸ்துமதக் கோட்பாடுகள் சம்பந்தப்பட்டது. இந்தியாவில் இக்கொள்கைகள் அதிக உச்சநிலையடைந்தது. இந்தியர் ஆழ்ந்த யோசனையுடையார். சின்ன ஆசியாவின் நோஸ்தீகரறியாத பற்பல கொள்கைகளையும் ஆராய்ச்சியையும் தேர்ச்சியையும் இந்தியர் அடைந்திருந்தார். அநேகேச்சுரவாதிகளாயிருந்தனர். அத்தகைய கொள்கையரின் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பரமபிதாவானவர் வெளிப்படுத்தப்படுகிறார். அக்காலத்து சின்ன ஆசியாவிலிருந்த நோஸ்தீகரைப்போலவே இக்காலத்தில் இந்தியரும் பூரணமாக வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துமார்க்கக் கொள்கைகளிற் பலவற்றைத் தள்ளி சிலவற்றை யொப்பித் தம் கொள்கைகளோடுகூட்டி இரண்டையும் ஒப்புரவாக்க நினைக்கின்றனர். கீழ்தேசத்தவதாரியாகிய கிறிஸ்துவை கீழ்தேசவாசிகளாகிய இந்தியர் அகற்றிவிடல் கூடாத காரியம். ஆனால் எம்பிரானை முழுதுமாய் ஏற்றுக்கொள்வாரோ வென்பது சந்தேகம். இங்குமங்கும் பலபல சமாஜங்கள் தலையெடுக்கின்றன. அவற்றில் எம்பிரானது கொள்கைகளையும் போதனைகளையும் ஒருவாறு அங்கீகரிக்கின்றார். அந்த சமாஜத்தார் எம்பிரானை ஓர் பெரிய மகாத்துமாவெனக் கொள்கின்றனரேனும் அவர் தேவனும் மனிதனுமாய் விளங்கி மண்ணுலகில் அவதரித்த அவதார புருஷன் என்பதனை மறுக்கின்றார். அவர்கள் அவரது சன்மார்க்க போதனைகளை யொப்புக்கொள்ளுகின்றார்கள். எனினும் அவர் செய்த மீட்பின் கிரியையையோ மறுக்கின்றார்கள். அக்காலத்தேபோல் இக்காலத்திலும் பாவத்தின் உண்மையை மறுத்து அதுவே ஏதுவாய் சிலுவையின் இரட்சிப்பைக் கைநெகிழ விடுகின்றார்கள். நித்தியகுமாரனுகிய குமாரனின் மூலமாய் வெளியாக்கப்பட்ட பிதாவைப்பற்றிய அறிவையடைந்து நித்தியஜீவனைப் பெறுதற்கு மாறாக வெளியாக்கப்படாத அந்தரங்கங்களை யறிதலே நித்தியஜீவனை யடைதற்கான வழியென வீணே கருதுகின்றார். எல்லோருக்கும் ஒன்றுபோலச் சம்பாதிக்கப்பட்ட எளிதான இரட்சிப்பை யசட்டைசெய்து பூரண அறிவையடைதற்கு வெளியாக்கப்படாத வழிவகைகள் உளவோவென நாடித்தேடி யலைகின்றார்.

இந்தியர் மீட்படையும் வழியும் உண்டு. என்ன? இந்தியர் 'பிள்ளைகள்' ஆக தேவனால் வெளியாக்கப்பட்ட ஒளியையும் சத்தியத்தையும் ஏற்றுக்கொண்டு, அந்த ஒளியிலே நடந்து, அந்த சத்தியத்திலே நிலைத்து, நமக்கு இன்னும் வெளியாக்கப்படாதன, நாம் தேவனுக்குச் சமீபமாவதால் வெளிப்படுத்தப்படும்வரை பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.



## அனுபந்தம் 2.

### இயேசுவின் இரத்தம்.

பரி. யோவான் அப்போஸ்தலன் எழுதின முதலாம் நிருபத்தின்பேரில் வெஸ்ற்காட் அத்தியட்சர் எழுதியிருக்கும் வியாக்கியானத்தில் இரத்தம் என்பது பழைய ஏற்பாட்டில் ஜீவனின் இருப்பிடத்தைக் குறிப்பதாகக் கூறுகிறார். ஆதி. 9. 4; உபா. 12. 23. இவ்விடங்களில் இரத்தம் ஜீவனென்றே அழைக்கப்படுகிறது. லேவி. 17. 11-ல். ஜீவன் இரத்தத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. மாமிசத்தை அதன் இரத்தத்தோடு புசிக்கக்கூடாதென்பதற்கு இதுவே காரணமாகும். (ஆதி. 9. 4. லேவி. 7. 26, 27; 17. 11, 14. உபா. 12. 23, 24.)

இரத்தம் சிந்தப்பட்ட பிற்நையும் ஜீவன் அதில் இருப்பதாகவே கொள்ளப்பட்டது. எனவே ஆபேலின் இரத்தம் பூமி

யிலிருந்து கூப்பிடுகிறது எனச் சொல்லும்போது அது உருவகமாகமாத்திரம் சொல்லப்பட்டதன்று. ஒருவாறு உண்மையாகவும் கூறப்பட்டதேயாகும் ஆதி. 4. 10. (எபி. 12. 24) ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும்....பேசுகிற இரத்தம்.) வெளி. 6. 10. எனவே பலியில் இரத்தம் சிந்தப்பட்டு பலிபீடத்தின்மேல் படைக்கப்படும்போது தேவனுக்குப் படைக்கப்படுவது பலியிடப்படும் பிராணியல்ல, அதினுடைய ஜீவனே படைக்கப்படுகிறது. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக—உயிர்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யப்படும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவின் உயிருக்காகப் பாவநிவர்த்தி செய்கிறது இரத்தமே. லேவி. 17. 10, 11. பலிபீடத்தின்மேல் சிந்தப்பட்ட இரத்தம் உயிருடையதாகப் பாவிக்கப்பட்டது.

பலியைக் கொல்லுகிறது பலி செலுத்துகிறவனுடைய வேலை. பலியிடப்படும் பிராணி அவனுக்குப் பதிலாக அவனைக் குறித்து நிற்கும். அதைப் பலியிடுவதன் மூலமாய் பலிசெலுத்துவோன் தன் பாவத்துக்குத் தனக்கு வரவேண்டிய தண்டனை மரணமே என ஒப்புக்கொள்ளுகிறான். ஆனால் இரத்தத்தைத் தெளிப்பதோ ஆசாரியனுடைய வேலை. அவன் மாத்திரம் தான் அதைத் தெளிக்கலாம். பாவமற்றதாய்ப் படைக்கப்பட்ட அந்த ஜீவனைப் பாவத்திற்குப் பிராயச்சித்தமாக ஆசாரியன் தேவனுக்கு முன்பாகப் படைக்கிறான். அவ்விதமான பலியாக அந்தப்பலி செலுத்துவோன் தன்னையே படைத்தல் கூடாத காரியம். கிறிஸ்துவானவர் சிலுவையின்மீது நம்மெல்லாருடைய பாவங்களுக்காகவும் தம்மையே பலியிட்டு இரத்தம் சிந்ினதுமாத்திரமல்ல, 'தம்முடைய சொந்த இரத்தத்தையே' 'தெளிக்கப்படுகிற இரத்தமாகக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து அதுமுதலாக அவருடைய ஜீவனே நாம் தேவனை அவருக்குள் கிட்டிச் சேரத்தக்கதாக வகைசெய்து கொண்டிருக்கிறது.'



'கிறிஸ்துவின் இரத்தம் 'தெளிக்கப்படுத'லால் விசுவாசி கிறிஸ்துவுக்குள் தேவனோடு ஐக்கியப்படுத்தப்படுகிறான். தப்பும் தவறுமான அவனுடைய ஜீவியத்தில் அது பூரணமாய்ப் பரிசுத்தமாய் வளரும்படியாகக் கிறிஸ்துவின் ஜீவன் அவனுக்கு இடைவிடாமல் அளிக்கப்படுகிறது' என்பர் வெஸ்ற்காட் அத்தியட்சர். அடியில் வரும் வாக்கியங்கள் மேற்கூறியவற்றை விளக்கும். யோவா. 6. 53–56. அப். 20. 28. ரோ. 5. 9. எபே. 2. 13. கொலோ. 1. 20. எபி. 9. 14; 10. 19; 12. 24. 1 பே. 1. 2, 18, 19. வெளி. 1. 5; 5. 9; 7. 14; 12. 11.

## அனுபந்தம் 3.

### பாவநிவாரணம். 2, 3.

இவ்வனுபந்தம் மூன்று முக்கிய நோக்கங்களுடன் எழுதப்படுகிறது:—

முதலாவது:—பாவநிவாரணம் என்பதன் பொருளை விரித்தல்.

இரண்டாவது:—பாவநிவாரணஞ் சம்பந்தப்பட்ட பிராயச்சித்தத்தைப்பற்றி வேதாகமத்தில் ஒவ்வொருவரும் கற்றறிந்து கொள்ளுமாறு வழிவகைகளைக் காட்டல்.

மூன்றாவது:—இப்பெரிய அந்தரங்க மறைபொருளைப்பற்றிச் சிந்தனைசெய்து அதன்மூலமாய் அதைப்பற்றிய தவறான கொள்கைகளினின்று நீங்கிக்கொள்ளுமாறு வாசிப்போருக்குச் சில கருத்துகளைக் காட்டிவிடுதல்.

### I.

பாவநிவிர்த்திக்கு வழங்கும் ('ஹிலாஸ்மஸ்' எனும்) கிரேக்கு பதம் புதிய ஏற்பாட்டில் அற்ப சொற்பமாகத்தான் வருகிறது (யோவா. 2. 2; 4. 10. எபி. 2. 17). எபிரெயபாஷையில் 'கிப்பர்' எனும் பதத்தைக் கிரேக்கில் மொழி பெயர்ப்பதற்கு வழங்

கும் பதமும் இதுவே. இந்த எபிரெய பதம் தமிழில் பாவ நிவிர்த்தி எனத் திருப்பப்படுகிறது.

'கிப்பர்' (Kipper) எனும் எபிரெய பதம் 'முழுதும் மூடல்' எனும் பொருள் தரும். 'முழுதுமாய்த் துடைத்துவிடல்' எனும் பொருளையும் கொடுக்கும். இதே வார்த்தையின் மூலத்திலிருந்துண்டான அராபிக், சிரியாக் பாஷைச் சொற்கள் 'மூடுதல்,' 'பாத்தியதையை யகற்றல்' எனும் பொருள் பயக்கின்றன. இஸ்லாம் மார்க்கத்தை மறுத்துவிட்ட ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள ஜனங்கள் மகம்மதியரால் 'காப்பிரி'கள் என அழைக்கப்படுகிறார்கள். கோரானில் தேவன் பாவத்தைத் துடைத்தல் அல்லது மன்னித்தல் என்பதற்கு 'கப்பாரா' என வழங்கப்படுகிறது.

இப்பதம் (கிப்பர்) பழைய ஏற்பாட்டில் உருவகமாக வழங்கப்படுகிறது. தன் 'சகோதரனைச் சாந்தப்படுத்திக்கொண்டு பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன்' என யாக்கோபு சொல்லுமிடத்தில் இதே பதம் வழங்குகிறது. அதாவது மூல பதத்தின்படி மொழிந்திருப்பினால் 'வெகுமதியை யனுப்பி அவன் முகத்தை மூடி' எனவரும். வெகுமதியானது அவனுடைய கண்களை மூட அல்லது குருடாக்கி அது காரணமாய் அவனுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றத்தைப்பார்க்க வழியில்லாமல் இருந்து விடுகிறது. இப்பொருள் விரிந்தே ஒப்புரவாகுதல் என வழங்கும். வேறுவிதமாய்ப் பார்த்தால் குற்றஞ்செய்தவனாவது, அவன் செய்த குற்றமாவது மறைக்கப்படுகிறது எனவும் பொருள்தரும். (1 சாமு. 3. 14. ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை.) மூலபாஷையில் 'மறைக்கப்படுவதில்லை' என வருகிறது.

இத்தப் பொருளிலேயே 'கிப்பர்' எனும் மூல எபிரெயு பதம் தேவன் தமது பாவமுள்ள ஜனங்களை 'மூடி' மன்னித்துப் பாராமுகமாயிருக்கும் கருத்தில் வழங்குகிறது. (சங். 21. 8; 32. 43). ஆனாலும் பெரும்பாலும் இப்பதம், ஓர் ஆசாரியன், அல்



லது பலி, விசேஷமாய் பாவநிவாரணபலி, பலிசெலுத்துபவனையும் அவன் பாவத்தையும் மூடுகிறது எனும் பொருளில் வழங்குகிறது. லேவியாகமத்தில் இப்பதம் ஐம்பத்தெட்டுத்தடவை வருகிறது. அவற்றை பாவநிவிர்த்தி, பாவநிவாரணம், பாவநிவிர்த்திசெய், பாவநிவாரணம் செய் எனத் தமிழில் திருப்பியிருக்கிறது. மூன்று காரியங்கள் வெகு தெளிவாய்த் தெரிகின்றன. முதலாவது பலிகளினால் பாவம் மூடப்பட்டதாக வேதாகமம் ஒருக்காலும் சொல்லுகிறதில்லை. (சங். 32. 1-ல் பாவம் மூடப்படுதல் என்பது வேறு எபிரெயு பதத்தினால் குறிக்கப்படுகிறது.) ஆனால் பாவம் விலக்கப்படுகிறதினால் பாவி மூடப்படுகிறான். இரண்டாவது தேவன் பலிகளினால் சாந்தப்பட்டுவிட்டார் என்றாவது சமாதானமாய் விட்டார் என்றாவது எங்கும் வேதாகமத்தில் கூறப்படுகிறதில்லை. மற்றெல்லா மதங்களும் இப்படி தேவனே சாந்தப்பட்டு விடுகிறதாக உரைக்கும். மூன்றாவது மூடுதல்—பாவநிவாரணம்—என்பது அறியாமற்செய்த பாவங்களுக்குமாத்திரம் ஏற்பட்டது. துணிகரமாய் வேண்டுமென்று செய்த பாவங்களுக்கு மரணமே தண்டனையாக விதிக்கப்பட்டது (எண். 15. 30, 31;). பாவத்தில் மரித்துப்போன நமது ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு இப்பலிகளிலும் மேலான ஓர் பலி அவசியம்.

'கிருபாசனம்' என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பதம் மூலபாஷையில் 'மூடுகிற' இரத்தம் தெளிக்கப்படுகிற இடமாகிய 'மூடுகிற இடம்' எனும் பொருள்தரும். (எபி. 9. 5 ரோ. 3. 25.). அதேபிரகாரமாகவே 'மீட்கும் பொருள், (யாத். 30. 12.) 'மூடும் பொருள்' ஆம். இவைகளினால் பரிசுத்த ஸ்தலத்தின் பாதங்களும் திரைகளின் பாதங்களும் செய்யப்பட்டதும் வெகு விசேஷமானதே. (யாத். 30. 16; 38. 25, 27.)

## II.

பிராயச்சித்தத்தைப்பற்றி வாசிக்கத்தகுந்த மேலான நூல் விவிலியமே. பழைய ஏற்பாடு பிராயச்சித்தத்தைப்பற்றிய

விதத்தையும், அதைப்பற்றிய தீர்க்கதரிசனங்களையும் உரைக்கும். சுவிசேஷங்கள், அவைகளிலும், விசேஷமாய் எம்பிரானது பாடுபடுதல் சரிதம், பிராயச்சித்த உண்மையையும் பிராயச்சித்தம் நிறைவேறிய விதத்தையும் அறிவிக்கும்; அப்போஸ்தலர் நடபடிகளும் மற்றும் நிருபங்களும் பிராயச்சித்தம் எவ்வாறு உபயோகப்படுகிறது என்பதை விரிக்கும். பிராயச்சித்தத்தைப் பற்றிய விவரிப்பை வேதத்திற் காணமுடியாது. எனினும் அதின் கருத்து, நோக்கம் முதலியவற்றையறிந்து அதன் மூலமாய்ப் பிறகொள்கைகளை யாராயலாம். இவ்வித ஆராய்ச்சிக்குச் சாதனமான சில குறிப்புகளைப் பின்னர் காண்க.

பழைய ஏற்பாட்டில் பலியிடுகிற ஒழுங்கானது கிறிஸ்துவின் பிராணத்தியாகத்தை முன்னறிவிப்பதாகத் தேவனால் குறிக்கப்பட்டது. எனவே அதைத் திட்டமாய்ப் படித்து ஆங்காங்கே காணப்படும் பேதா பேதங்களைக் கவனித்து அவற்றைப் புதிய ஏற்பாட்டு வாசகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். முக்கியமான மூன்று பலிகள் கையாடப்பட்டன. தகனபலி, பாவநிவாரணபலி, சமாதானபலி. இவை வருஷாவருஷம் 'பஸ்கா' பண்டிகையிலும் 'பிராயச்சித்தநாளிலும்' செய்யப்படும் பலிகளோடு சம்பந்தப்பட்டிருந்தன. இவைகளில் ஒவ்வொன்றும் பிராயச்சித்தத்தின் பொருளை விளக்கும்.

(1) தகனபலி. லேவி. 1; 6. 8–13. பூர்வகாலத்திலிருந்த முற்பிதாக்கள் அறிந்திருந்தபலி இஃதொன்றே. தெரிந்துகொள்ளப்படும் பிராணி சிறந்ததும் பரிசுத்தமானதுமாயிருக்கவேண்டும். பலி செலுத்துபவன் தான் அதைச்சார்ந்தவன் அல்லது அது தனக்குப் பதிலாகப் பலி செய்யப்படுகிறதென்பதைக் குறிப்பதற்காக அதன் தலைமேல் கைவைக்கவேண்டும். அப்பலியின் விசேஷம் யாதெனின், அதில் யாதொன்றும் மீதிராதபடி முழுதுமாய் அதைச் சுட்டெரித்துப் போடுவதே. ஜீவனைத் தனக்கென்று கொஞ்சமும் வைத்துக்கொள்ளாமல் முழுதுமாய்க் கர்த்தருக்குக் கொடுத்து விடுவதை இது அடையாள



மாகக் குறிக்கும். எம்பிரான் பலியானதற்கும் இப்பலிக்கும் இருவித வித்தியாசங்களுண்டு. 1. பாவிக்குப் பதிலாக இந்தப் பிராணி ஒரு பொய்யான அடையாளமாகமாத்திரமிருக்கிறது. 2. பலியிடப்படும் பிராணி அதனுடை இஷ்டத்துடன் பலியிடப்படுகிறதில்லை. இவ்விரு குறைவையும் எம்பிரான் நிவிர்த்திக்கிறார்.

(2) பாவநிவாரணபலி. லேவி. 5; 6. 1–7, 24–30; 7. 7. பலி செலுத்துபவன் முன்போலவே பலியிடப்படும் பிராணியின்மீது தன் கைகளை வைத்துக்கொள்ளுகிறான். ஆனால் ஏககாலத்திற்றானே ஆசாரியனிடத்தில் தன் பாவங்களை அறிக்கையிடுகிறான். இப்பாவ நிவாரணபலியின் விசேஷம் யாதெனில் பலி செலுத்துபவன் தேவனுடைய மகா பரிசுத்த நிலையையுணர்ந்து தன் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படுவதே. பலியிடப்படும் பிராணி இழந்துபோன ஜீவனைக் குறிக்கும். இப்பலியில் முக்கியமானது இரத்தத்தைத் தெளித்தல். யூதர் மாட்டு இரத்தம் ஜீவனைக்குறித்து நின்றது. இப்பலி முற்றுப்பெறுவது பிராணியைக் கொல்வதினாலல்ல அதின் இரத்தத்தைத் தெளித்தலினாலேயே. இதில் ஏற்பட்ட குறையாதெனின் பலி செலுத்துவோனுடைய மனஸ்தாபம் பூரணமானதல்ல. இக்குறையையும் எம்பிரான் பலியானபோது நிவிர்த்தித்தார். எம்பிரான் பலியானபோது பலி செலுத்தினவரும், பலியானவரும் அவரே. மனித பாவத்திற்குப் பூரண மனஸ்தாபம் அவர்மாட்டுக் காணப்பட்டது. நாம் குறைவாய்க் காணப்படும் இடங்களில் நமது மனஸ்தாபம் பூரணப்படும்படியாகவும் அவருடைய பிராயச்சித்தம் ஏற்பட்டது.

(3) சமாதான பலி. லேவி. 3; 7. 11–21. இப்பலி மற்றப் பலிகளிலும் வித்தியாசமானது. ஏனெனில் இது தேவனோடு சமாதானம், ஒற்றுமை, ஐக்கியம் இவற்றைக் குறிப்பாகக்கொண்டது. பலியிடுவோன் அவர் சந்நிதானத்தில் அதைப் புசிப்பதும், பரிசுத்தஆவிக்கு அடையாளமாகிய மகிழ்ச்சியின் தைலமும், பாவத்தை அப்புறப்படுத்துவதின் அடையாளமாகப்

புளிப்பில்லா அப்பத்தைப் புசித்தலுமாகிய இவை இப்பலியில் விசேஷமானவை. கொழுப்பானது தேவனுக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படும். இந்தப் பலி கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தின் முக்கியமான காரியமாக விசுவாசியினுடைய ஆத்துமாவைப் பரிசுத்தஆவி பரிசுத்தப்படுத்துவதைக் குறித்து நிற்கும்.

4. பஸ்கா. யாத். 12. 1-28. பிராயச்சித்த பலிக்கு முழுதும் முன்னடையாளமாயிருந்தது இஃதொன்றே. இது விசேஷித்த அடையாளம். ஏனெனில் இது மரணத்தை விளக்கக் கூடிய தேவனுடைய நியாயத்தீர்ப்பினின்று குற்றமற்ற இரத்தத்தினால் மீட்பையுண்டாக்கிற்று. அடிமைத்தனத்திலிருந்து மீட்பை விளைத்தது, வாக்குத்தத்த தேசத்திற்குப் போவதற்கான வழியை யளித்தது. மேலும் இப்பஸ்காவானது முற்கூறப்பட்ட மூன்று பலிகளையும் உள்ளடக்கியது. ஏனெனில் சர்வாங்க தகனபலியைப்போல பஸ்கா ஆட்டிலும் யாதும் மீந்திருப்பதில்லை. சமாதானபலியைப்போல பலி புசிக்கப்பட்டது. பாவநிவாரணபலியைப்போல இரத்தம் தெளிக்கப்பட்டது.

5. பாவநிவிர்த்தி செய்யும் நாள். லேவி. 16; 23. 26-32. (எபி. 9. 6-28.) இதில் தகனபலியும் பாவநிவாரண பலியும் கலந்திருக்கிறது. இங்கு குறிக்கப்பட்ட பிராயச்சித்தம் இஸ்ரவேலர் ஒரு ஜாதியாகச் சேர்ந்து செய்வது. ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாகச் செய்வதில்லை. இந்தப் பலி செலுத்தக்குரியவன் பிரதான ஆசாரியன் ஒருவனே. அவன் தன் பொன்னங்கியைக் கழற்றிவைத்துப் பின் பலி செலுத்தப் புகுவான். பலி முடிந்தவுடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் (லூக். 23. 34. எபி. 7. 25.) (ஜெபத்திற்கு அடையாளமாக,) தூபங்காட்டுவதுண்டு. இதில் பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் பிராயச்சித்தம் செய்யப்படும். கடைசியாக முதலாவது பலியிடப்பட்ட வெள்ளாட்டின் இரத்தத்தை, வேறெக்காலத்திலும் பிரவேசிக்கக்கூடாத மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்து, ஒருவாறு தேவனுக்குப் பாவத்தின் மேலுண்டான நியாயமான கோபத்திற்கடையாளமான (ஆதி. 3. 24.) கேருபின்களின் கீழும் உடைந்த கற்பலகையாயிருந்த இடத்தின் மேலுமிருந்த கிருபாசனத்தின்மீதும் ஏழுதடவை தெளிக்கவேண்டும். இரண்டாவது, பிரதான ஆசாரியன், பாவத்தைச் சுமக்கத் தெரிந்துகொள்ளப்பட்ட வெள்ளாட்டின் தலைமேல் கையைவைத்து இஸ்ரவேலர் எல்லாருடைய பாவங்களையும் அறிக்கையிட்டு, (இஸ்ரவேலர் இச்சமயத்தில் தங்கள் பாவங்களை நினைந்து உபவாசித்துத் தங்களைத் தாழ்த்துவார்கள்) தங்கள் பாவங்களை முழுதும் புறம்பாக்கிவிட்டதற்கு அடையாளமாக அந்த ஆட்டை வனாந்தரத்துக்கு அனுப்பிவிடுவார்கள். இந்த நாள் இவ்விரு சடங்குகளுடன் முடியும். இவ்வாறு இந்த ஆட்டைத் தனியே வனாந்தரத்துக்கு அனுப்பிவிடுவது எம்பிரான் உலகத்தின் பாவத்தைச் சுமந்து நின்று தேவனால் கைவிடப்பட்டுத் தவிக்கும்போது 'என் தேவனே, என் தேவனே என் என்னைக் கைவிட்டீர் எனக் கூறியதை ஞாபகப்படுத்தும்.



இனிப் பழைய ஏற்பாட்டைவிட்டு புதிய ஏற்பாட்டைத் திருப்ப பிராயச்சித்தத்தைப்பற்றிப் படிப்பதற்கு ஏதுவான அநேக பாகங்கள் இருக்கின்றன. அவற்றின் முக்கியமான பாகங்களை அடியில் வருமாறு வகுத்துக் காட்டலாம்.—

### I. பிராயச்சித்தம்: தேவனைச் சார்ந்தவளவில்.

(a) தேவ அன்பினால் நிலைப்பது. யோவா. 3. 16. ரோ. 5. 8; 8. 32. 1 யோவா. 4. 9-10.

(b) நித்தியகாலமாய் தேவனால் நிர்ணயிக்கப்பட்டது. யோவா. 6. 38-40. அப். 2. 23; 4. 27, 28. ரோ. 3. 24, 25. கொலோ. 1. 19, 20. 1 பே. 1. 20. வெளி. 13. 8.

(c) தேவனால் கிறிஸ்துவில் விளங்கிய ஓர்செய்கை. யோவா. 10. 18. அப். 20. 28. 2 கொரி. 5. 19. எபி. 1. 3; 9. 14.

(d) தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தமாயிருப்பது. 1 தீமோ. 2. 5. எபி. 8. 6; 9. 15; 12. 24.

(*e*) நமக்காக இடைவிடாமல் வேண்டிக்கொள்ளப்படுவது. எபி. 7. 25; 9. 24. 1 யோவா. 2. 1.

II. பிராயச்சித்தம் மனிதனைச் சார்ந்தவளவில்.

(*a*) மனந்திரும்பிய நமக்காக மரணத்தைக் குறிப்பது. லூக். 22. 19–20. யோவா. 6. 51; 10. 11, 15. ரோ. 5. 6, 8; 8. 32. 2 கொரி. 5. 14, 15. கலா. 2. 20. எபே. 5. 2, 25. 1 தீமோ. 2. 5–6. எபி. 2. 9. 1 பே. 3. 18. 1 யோவா. 3. 16.

(*b*) தேவனோடு நம்மை ஒப்புரவாக்குவது. ரோ. 5. 10–11. 2 கொரி. 5. 18–19. எபே. 2. 16. கொலோ. 1. 20–22. 1 பே. 3. 18.

(*c*) நம்மைப் பாவத்திலிருந்து மீட்டு விடுவிப்பது. மத். 20. 28. (அநேகரை மீட்கும்பொருள்.); அப். 20. 28. (தேவன் தமது இரத்தத்தால், தமது சொந்த இரத்தத்தால் திருச்சபையைச் சம்பாதித்தார்). ரோ. 3. 24. எபே. 1. 7. கொலோ. 1. 14. எபி. 9. 15. (மீட்பு) 1. கொரி. 6. 19. (நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்.) கலா. 4. 5. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டும்படியாக) 1 தீமோ. 2. 6. (மீட்கும் பொருள்.) எபி. 9. 12. (நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.) 1 பே. 1. 19. (விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள்.) வெளி. 5. 9. (தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு.)

(*d*) ஆவியின் சுத்திகரிப்பு நமக்குக் கிடைத்தது. யோவா. 7. 39; 16. 7. அப். 2. 33. 1 கொரி. 1. 30. கலா. 3. 13–14. தீத். 3. 5, 6. எபே. 4. 7, 8. எபி. 10. 10; 13. 12.

(*e*) நமது அன்பையும் ஊழியத்தையும் எதிர்பார்ப்பது. 2. கொரி. 4. 14. 15. தீத். 2. 14. 1 யோவா. 4. 10, 11, 19.

(*f*) நமக்கு நித்தியஜீவனைச் சம்பாதிப்பது. யோவா. 3. 14. 15; 6. 51. ரோ. 5. 21; 6. 23. 2 தீமோ. 2. 10. எபி. 9. 15. 1 யோவா. 5. 11.



(*g*) மனிதன் பாவத்துக்காக மனஸ்தாபம், விசுவாசம், ஞானஸ்நானம் இவற்றால் தனதாக்கிக் கொள்வது. மத். 28. 19. மாற்கு. 16. 15, 16. லூக். 24. 47. யோவா. 1. 12; 3. 15, 16. அப். 2. 38, 41; 3. 19; 13. 38–39; 16. 31; 22. 16. ரோ. 6. 3–6; 10. 9–10. எபே. 2. 8–9. கொலோ. 2. 12. தீத். 3. 5. 1 பே. 3. 21. etc.

III. பிராயச்சித்தம் பாவத்தைச் சார்ந்தவளவில்.

(*a*) பாவத்துக்கும் சாபத்துக்கும் ஒற்றுமையுடையது. ரோ. 8. 3. 2 கொரி. 5. 21. கலா. 3. 13 (யோவா. 3. 14.)

(*b*) பாவத்துக்காக ஏற்பட்ட பலியாயிது. யோவா. 1. 29. மத். 26. 28. ரோ. 3. 25; 4. 25. 1 கொரி. 5. 7 எபி. 2. 17; 9. 22–28; 10. 11, 14. 1 பே. 1. 18–19. 1 யோவா. 2. 2; 4. 10. வெளி. 5. 6, 12.

(*c*) பாவத்தை விலக்குவதற்காய் அதனைச் சுமந்து தீர்ப்பது. யோவா. 1. 29. எபி. 9. 26. 1 பே. 2. 24.

(*d*) பாவிகளை நீதிமான்களாக்குவது. ரோ. 3. 24–26; 5. 8–9. கலா. 2. 16. etc.

(*e*) பாவத்தினின்று சுத்திகரிப்பது. 1 கொரி. 6. 11. எபி. 1. 3. 1 யோவா. 1. 7. வெளி. 1. 5–6; 7. 14.

(*f*) பாவ விமோசனத்தையும் பாவமன்னிப்பையும் விளைப்பது. மத். 26. 28. லூக். 24. 46–47. அப். 10. 43; 13. 38–39. எபே. 1. 6, 7. கொலோ. 1. 13–14. etc.

(*g*) இரட்சிப்பை யுண்டாக்குவது. மத். 1. 21. யோவா. 3. 16–17. அப். 4. 12. ரோ. 1. 16; 10. 9; 1 தெச. 5. 9–10. எபி. 5. 9; 7. 25. etc.

(*h*) சாத்தானிலும் இரண்டாம் மரணத்திலுமிருந்து இரட்சிப்பது. யோவா. 5. 24. கலா. 1. 4. கொலோ. 1. 13. எபி. 2. 15. 1 யோவா. 2. 2; 4. 10. வெளி. 5. 6. 12.

# III.

பிராயச்சித்தமென்பது ஆழ்ந்த அந்தரங்கமுடையது. பிராயச்சித்தத்தைப்பற்றிய மனிதருடைய கொள்கையின் ஏற்றத்தாழ்வை உத்தேசமாயப் புகுந்தாலும் எச்சரிக்கையோடும் தாழ்மையோடும் பக்தியோடுமே செய்யவேண்டும். இது மற்ற அந்தரங்கமான காரியங்களோடு அதிகமாய்ச் சார்ந்திருக்கிறது. அவையாவன:—திரித்துவஏகத்துவம், ஏகத்துவ திரித்துவம்; எம்பிரானது தெய்வீக மனுஷ சுபாவங்களை; திருஅவதாரம்; நீதியைப்பற்றிய நித்திய நியாயப்பிரமாணம்; பாவம், தண்டனை; மனஸ்தாபம், பாவமன்னிப்பு; பரிசுத்தஆவியின் பரிசுத்தமாக்கும் செயல்; பரிசுத்த சவிபயாகிய தம்முடைய சரீரத்தில் விளங்கும் கிறிஸ்துவின் ஜீவன் ஆகிய இவையே. பிராயச்சித்தத்தை நன்குணரவேண்டுமேயாயின் இவற்றையும் நன்குணரவேண்டும். ஆனால் இதைப்பற்றிய மனிதருடைய அறிவெல்லாம் பூரணமாகாத குறைவுற்ற அறிவே. குறைவான அறிவேயாயினும் பூரண அறிவு அடைதற்கு அதுவும் ஓர் ஏதுவாம். இவ்விஷயத்தில் இந்தியரும் புதிதான தமது அபிப்பிராயங்களை வெளியிட்டு உலகுக்குப் பயனளிப்பார் என நம்புகின்றோம்.

எனினும் பிராயச்சித்தத்தைப்பற்றிய எக்கொள்கைக்கும் ஆதாரமாயிருக்கிற அபிப்பிராயங்கள் சில உண்டு. இவை பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

அவையாவன:—

(1) பாவம் உண்மை, மனிதன் தன் பாவத்திற்கு உத்தரவாதி. தெய்வமே பாவத்துக்குக் காரணர், மனுஷன் சுயாதீன சித்தமுடையனல்லன், அவன் பாவத்துக்கும் உத்தரவாதியல்ல எனக் கூறும் இக்கொள்கைக்கு பாவத்தின் தண்டனையும் பாவமன்னிப்பும் இசைவின்பாடாகாது.

(2) மனுஷன் வேறு. தெய்வம் வேறு. மனுஷன் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறான்.



மனுஷனும் தெய்வமும் வெவ்வேறாய் இராவிடின் இவரை ஒன்றாக்குவதற்கான முயற்சிகள் வேண்டா; இவ்விருவரும் ஒன்றாயிருப்பின் பிராயச்சித்தத்திற்கு ஏதுவுமின்றாம்.

பிராயச்சித்தத்தைப்பற்றிப் பலபல ஞானவான்களும் பரிசுத்தவான்களும் பற்பல அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றைப் படிக்குமிடத்து நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய சிலகாரியங்களும் உண்டு. என்ன? அறிவுக்கரிய இவ்வந்தரங்கத்தை விளக்குதற்கு உலகத்திற்குரிய உவமான உருவகங்களும் அவசியம். இவ்வுவமானங்களை அதிகம் விரிக்குமிடத்து ஒரோர் வேளைகளில் தேவன் மனுஷனைக்குறித்த சில நித்திய உண்மைகளுக்கு மாறுபடுவதும் உண்டு. அல்லது அப்பிராயச்சித்தத்தைப்பற்றிய இரண்டொரு தன்மைகளைமாத்திரம் கவனித்து பிறவற்றை விட்டுவிடுவதும் உண்டு. நாம் பூர்வகாலத்து வியாக்கியானிகள் கூறுவன பயனற்றனவென அவற்றைத் தள்ளிவிடாமலும் தற்கால வியாக்கியானிகள் கூறுவன அசாதாரணமானவையென இகழ்ந்துவிடாமலும் ஒவ்வொருவர் கூறுவதிலும் பிரயோஜனமானவற்றை ஏற்றுக்கொள்ளுதல் நாம் ஞானமடைதற்கேதுவாம். மனதை ஒரு நிலைப்படுத்தி உண்மையறிதற்கேதுவாய் இரண்டொரு விஷயங்களைக் கூறுவோம்.

(1) பாவத்தின்மீதெழுந்த நீதியான தேவகோபத்தைத் திருப்தி செய்வதே பிராயச்சித்தம் என நினைவுரின் தேவன் பிதாவுடைவாக நம்மீதுகொண்ட அன்பே இப்பிராயச்சித்தமென நினைக்க. வேதத்தில் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் எனக் கூறியிருக்கிறதேயன்றி தேவன் நம்மோடு ஒப்புரவாக்கப்பட்டார் என்று கூறப்படவில்லை (2 கொரி. 5. 18–20. ரோ. 5. 10–11.). மேலும் பாவத்திற்கு விரோதமாய் தேவன்கொண்ட கோபமானது உண்டென்றாலென வெளிப்படுத்தப்பட்டிருப்பது மாத்திரமன்றி இயற்கையும் எனச்

சாக்ஷியுங்கூட அத்தாட்சிபகருகின்றன. அண்டபிண்டங்களை நீதியாய் ஆளும் ஆண்டவன் நீதிக்குமாறான பாவத்தால் துன்பம் விளையுமென்றும் மனிதன் தம்மினின்று பிரிவான் என்றும் ஏற்பட்ட பிரமாணத்தை நிலைப்படுத்தி ஸ்தாபிக்கவும் வேண்டும். கிறிஸ்துவின் சிலுவை அன்புக்கும் நீதிக்கும் உறைவிடம்.

(2) எம்பிரான், விசேஷமாய்ப் பாடுகளையனுபவித்த காலத்தில், நமக்குப் பதிலாகப் பாடுபட்டார் என நினைவுவரின் கிறிஸ்து நம்மோடு ஐக்யப்பட்டவரென நினைக்க. கிறிஸ்துவானவர் தனி மனுவாய்க் கடைசி ஆதாமாய் மனிதரோடு முழுதுமாய்த் தன்னை ஒன்றாக்கிக்கொண்டார். பாவத்தின தண்டனை தலையின்மீதும் மற்றும் அவயவங்கள்மீதும் சுமத்தப்படுகிறது. ஆனால் அவயவங்களால் தாங்கக்கூடாத பாரத்தை தலைதானே தாங்கிக்கொள்கிறது. பாவமன்னிப்படைதற்கு அவசியமான உத்தம மனஸ்தாபம் தலையும் அவயவங்களும் சேர்ந்தேபடுகின்றன. ஆனால் அவயவங்களினுடை குறைவான மனஸ்தாபத்தை, பாவத்துக்கான பாடுகளைத்தானே வலியப்பட்டு பூரணமனஸ்தாபப்பட்டுத் தலையே நிறைவாக்குகிறது.

(3) வெளியாக பிராயச்சித்தமானது மனிதனுக்கும் தேவனுக்கு மிடையேயுள்ள திரையை நீக்குகிற முற்றுப்பெற்ற ஓர் காரியமென நினைவுவரின் அது உள்ளாகப் பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் இன்னும் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிற ஓர் காரியமென நினைக்க. பாவம் மன்னிக்கப்படுவதற்கு ஏதுவான மனஸ்தாபத்தின் ஊற்றே எம்பிரானது சிலுவை. எம்பிரானது சரீரத்தையும் இரத்தத்தையும் புசித்துத் தான் நமது ஆத்துமா பாவத்தை மேற்கொள்ளும் பெலத்தையடைகிறது. நாம் தேவனோடும் தேவன் நம்மோடும் ஒன்றாகப்படுகிறதற்கு ஏதுவான பிராயச்சித்தம் இத்தகைய ஐக்கியத்தினால் பூரணப்படும். இது ஒவ்



வொரு மனிதனையும் தேவஆவியின் மூலமாய் கிறிஸ்துவின் சாயலுடையவனாக்கி அவரோடு ஐக்யப்படுத்துவது மாத்திரமல்ல எல்லோரையும் அன்பிலும் பரிசுத்தத்திலும் ஒன்றாக்கிக் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரே மனுஷனாகச் செய்கிறது.

பிராயச்சித்தம் வாதத்திற்கன்று வாழ்வுக்கு உரியது. அதனைத் தனக்குத் தனதெனக் கொள்வதினால் மாத்திரம் அதன் உண்மைத் திறம் விளங்கும். பாவத்தால் நொந்தவர் கிறிஸ்துவையே தங்களுக்குப் பிராயச்சித்தபலியாக விசுவாசித்து எக்காலத்திலும் சமாதானத்தையும், பாவம் நீங்கியதனால் சந்தோஷத்தையும், பாவத்தை மேற்கொள்ளும் பெலத்தையும் அடைந்திருக்கின்றனர். பிராயச்சித்தத்தைப்பற்றிய மாறான கொள்கைகள் உலகிலிருந்தகாலத்திலும் விசுவாசிகள் மேற்கூறிய மூன்றையும் அடைந்த துண்மை.

## அனுபந்தம் 4.

### தேவ அறிவைப்பற்றிய வேதாந்தக் கொள்கையும், யோவானுடைய கொள்கையும்.

மனிதன் தன்னுடைய மனமிறந்த பேரானந்த நிலையில் தேவனை உணர்வதே தேவஅறிவென உபநிஷத்துகள் கூறும். இந்நிலைமையில் மனிதன், தேவனையும், ஆன்மாவையும், பிறவற்றையும், வேறொன்றின்றித் தானேயாய் குணமுமின்றி அளவுமின்றி யிருக்கும் தெய்வத்தோடு ஒன்றாகக் காண்கிறான். இத்தகைய அறிவு மனிதனுக்கு எட்டாததெனக் கிறிஸ்து சமயம் சாதிக்கும். அறிவினுக்கு அடங்கா அவனைப் பலவிஷயங்களாலும் குறைவுடைய மனிதன் அறிதல் அசாத்தியம் (யோபு 11. 7, 8; 1 கொரி. 1. 21.). முடிவில்லாதாய அளவிலடங்காராய், நித்

தியாராய் விளங்கும் தெய்வத்திறனை யறியும் சக்தி நமக்கிலது. உலகப்பொருட்களையும் அவற்றின் தன்மைகளாலன்றி நம்மால் அறிய முடியாது. அங்ஙனமாகவும் நமக்கு வெளியாக்கப்பட்டிருக்கிற அவருடைய சுபாவங்கள், லக்ஷணங்கள் மூலமாயன்றி அவரை யறிதல் எங்ஙனம். சுருங்கச் சொல்லின் அவர் இத்தன்மையரென ஒருவாறு மனதில் நிதானிக்கலாமேயல்லாமல் முழுவதுமாய் அவரைப்பற்றி யுணர்தல் முடியாது.

ஆனால் தாம் அறிவிக்கக் கூறுகிற தெய்வத்திற்குரிய சகல லக்ஷணங்களையும் வேதாந்திகள் மறுப்பர். அவர்கள் அறியும் கடவுள் தன்மைகளிலில்லா நிர்குணர். உருவமில்லா நிராகரன். பேதாபேதங்களில்லா நிர்விசேஷன். குறையற்றவராகிய நிருபாதிகன். அத்தன்மையுள்ள தெய்வத்தை யுணர்தற்கு புலன்களைவெளியிற்செல்லவிடாது காத்து சிந்தையை யடக்கி, ஆன்மா உணர்வுகளின் நீங்கி இவ்விதமாய் அறியலாம் என்பர். அதாவது மனமானது அறிவின் நீங்கி மனோதீதமான நிலையிலிருக்கும்போது தெய்வம் அறியப்படுகின்றாராம். ஆனால் தெய்வத்தை அறியக்கூடிய பாக்கியசாலிகள் மிகச் சிலரே.

அத்தகைய அறிவு மனுஷருடைய பேச்சினால் கூறுதற் கியலாதது. மனுஷருடைய நினைவிற்கு இயலாதது. மனுஷஜீவியத்தில் காட்ட முடியாதது. ஏனெனில் பேச்சும், நினைவும், ஜீவியமுமாகிய இவையெல்லாம் மாயையின் காரியம். இம்மாயையில் தெய்வ அறிவு விளங்காது.

இனி, பரி. யோவான் அப்போஸ்தலனுடைய கொள்கையைப் பார்ப்போம். புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள் பலருக்கு இக்கொள்கை யுண்டெனினும், பரி. யோவானே இதை இனிது விளக்குகிறார். தேவனைப்பற்றிய அறிவானது தாமாகவே இருக்கும் தெய்வத்தைத் தானாகவிருக்கும் ஒவ்வொருவனும் அறிந்துகொள்வது. இத்தகைய அறிவை அதிசாதாரணமான விசுவாசியும் அடையக்கூடும். பிறஜீவிகளின் தன்மைகளை ஜீவியத்தில் வெளியாகக் காணப்படுகிற சாதாரண அறிவி

11 A 965 322



னாலும் அனுபவத்தாலும அறியக்கூடும். தேவஅறிவை இவ்வகையாகவும் இவற்றின்மேலாய் பிதாவானவரால் கிறிஸ்து இயேசுவான மனிதனில் வெளியாக்கப்பட்ட லக்ஷணங்களின் மூலமாய் அறியலாம்.

இவ்வறிவு, ஏனைய அறிவுகளைப்போலவே புலன்களின் உணர்ச்சியாலும், நினைவினாலும், சிந்தனையினாலும், அனுபவத்தினாலும் அறியப்படும். அன்றியும் அவ்வறிவானது மனிதனது மூன்று தத்துவங்களாகிய புத்தி, சித்தம், உணர்ச்சியென்னும் இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்வதால் அறியப்படும். தேவ அறிவு மூளையினால் அறியப்படுவது மாத்திரமன்று, இருதயத்தினாலும், மற்றும் ஜீவியத்தினாலும் அறியப்படும். அது செய்வதினால்மாத்திரம் ஒருவனுடைய ஜீவியத்தில் உண்டாகி வளரும் அன்பின் கிரியைகளாகிய அதன் கிரியைகள், தாமே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார் என வெளியாக்கப்பட்ட அவரின்மீதுள்ள விசுவாசத்தினால் உண்டாகும். மேலும் ஜெபத்தினாலும் புகழினாலும் காணப்பட்ட கிறிஸ்துவுக்குள் தேவனோடு ஐக்யப்படுவதில் சார்ந்திருக்கிறது.

வேதாந்திகள் பாவத்தின் உண்மையை மறுக்கவும், பரி. யோவான் கூறுகிற தேவனுடைய அறிவினால் ஒருவன் பாவத்திற்காக அதிகமதிகமாய் மனஸ்தாபப்பட்டு, அவ்வளவுக்குத் தக்கதாய்ப் பரிசுத்தத்தில் வளருகிறான். தேவனை அறிகிற மனுஷன் கடவுளுக்குள் வேறான ஆன்மா தனக்கு இலதெனக் கொண்டு, உலகத்தின் நீங்குவதற்குப் பதிலாகத் தன்னயத்தை அறவேயொழித்து, கடவுளோடு உடன் ஊழியனாய் மனிதருக்காக உழைத்து உலகத்தினுடைய காரியங்களை யொழித்துத் தன்னுடைய உண்மையான ஆன்மாவைக் கண்டுகொள்ளுகிறான்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1914.